ஸ்ரீகலா SRIKALA

ஸ்ரீகலா SRIKALA

என்னிலுறையும் உயிர் நீ

ENNILURAIYUM UYIR NEE

தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...

TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER

Download

ஸ்ரீகலாவின் “என்னிலுறையும் உயிர் நீ...!”

Contents

உயிர் : 1
உயிர் : 2
உயிர் : 3
உயிர் : 4
உயிர் : 5
உயிர் : 6
உயிர் : 7
உயிர் : 8
உயிர் : 9
உயிர் : 10
உயிர் : 11
உயிர் : 12
உயிர் : 13
உயிர் : 14
உயிர் : 15
உயிர் : 16
உயிர் : 17
உயிர் : 18
உயிர் : 19
உயிர் : 20
உயிர் : 21
உயிர் : 22

உயிர் : 23
உயிர் : 24
உயிர் : 25
உயிர் : 26
உயிர் : 27
உயிர் : 28
உயிர் : 29
உயிர் : 30

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

PDF தமிழ் .com

“புல்லாங்குழல் கொண்டு வருவான் – அழுது
பொங்கி ததும்பு நல் கீதம் படைப்பான்
கள்ளால் மயங்குவது போலே – அதை
கண்மூடி வாய்திறந்து கேட்டிருப்போம்
தீராத விளையாட்டுப் பிள்ளை – கண்ணன்
தெருவிலே பெண்களுக்கோயாத தொல்லை
தின்ன பழம் கொண்டு வருவான் – பாதி
தின்கிற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்பன் என்னையான் என்றால் – அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்”

பாரதியார் பாடலுக்கு அபிநயம் பிடித்துக் கொண்டிருந்த மகளின் நடனம் என்றும் போல் இன்றும் மனதை கவர... அப்போது தான் நடைப்பயிற்சி முடிந்து வீட்டிற்குள் நுழைந்த ராகவன் அவளைத் தொந்திரவு செய்யாமல் அறையின் வாயிலில் நின்றபடி நடனத்தை ரசித்துக் கொண்டிருந்தார்.

மயூரியின் அஞ்சனம் பூசிய விழிகள் பாடலின் அர்த்தத்திற்கு ஏற்ப பாவனைகளைக் கச்சிதமாய் வெளிப்படுத்தியது. அவளின் நீண்ட ஜடை அவள் ஆடும் போது அங்கும் மிங்கும் அலைப் பாய்ந்து அவளின் அழகுக்கு மேலும் அழகூட்டியது. அவள் கால்களில் சன்னமாய் அணிந்திருந்த கொலுசு அவள் பம்பரமாய்ச் சுழன்று ஆடியதற்குத் தக்க இன்னிசையாய்ச் சிணுங்கியது. அவள் நெற்றியில் பூத்திருந்த வியர்வை பூக்கள் கூட அவளுக்கு மேலும் வசீகரத்தை கொடுத்தது.

ராகவன் – சுமதி தம்பதியனரின் மூத்த மகள் மயூரிக்கு நடனம் என்றால் உயிர் மூச்சு. இப்போது தான் எம்சிஏ படித்து முடித்திருக்கிறாள். வயது இருபத்திநான்கு. ஒரே தங்கை மஞ்சரி... கல்லூரியில் மூன்றாமாண்டு இயற்பியல் படித்துக் கொண்டிருக்கிறாள். இருவருக்கும் மூன்று ஆண்டுகள் தான் வித்தியாசம். ராகவன் தனியார் தொழிற்சாலையில் ஜிஎம் ஆக இருக்கிறார். அவரின்

மனைவி சுமதி. சுமதியும் கல்லூரி ஒன்றில் விரிவுரையாளராய் இருக்கிறார்.

“வழக்கம் போல் இங்கே தான் இருக்கீங்களா?” என்றபடி அவரின் கையில் காபியை கொடுத்த மனைவி சுமதியை... வாயில் விரல் வைத்து அமைதியாக இருக்கும்படி கூற... இது தினப்படி நடக்கும் விசயம் ஆதலால் அவரும் சிரித்தபடி அமைதியானார். அதற்குள் மயூரியும் தன் நடனத்தை முடித்துவிட... இருவரும் அவளின் அறைக்குள் நுழைந்தனர்.

“மயூ... ரொம்ப நல்லா ஆடினம்மா...” மகளின் நடனத்திற்கு நற்சான்றிதழ் வழங்கியவாறு உள்ளே வந்த ராகவனை...

“அப்பா...” என்று செல்லமாய்ச் சிணுங்கியவள் ஓடி வந்து அவரை அணைத்து கொண்டாள் மயூரி.

“மயூம்மா... இன்னைக்கு இன்டர்வியூ இருக்குன்னு சொன்னியே... கிளம்பலையாடா?” சுமதி நியாபகப்படுத்த... அதுவரை மலர்ந்திருந்த அவள் முகம் சட்டென்று வாடி போனது.

“அம்மா... நான் கட்டாயம் வேலைக்குப் போயே ஆகணுமா? பேசாம வீட்டிலேயே இருக்கேன்னே?” அவள் கெஞ்சுதலாய் கேட்க,

“மயூ... இந்தக் காலத்துல பெண்கள் வேலைக்குப் போனா தான்டா நல்லது. பெண்கள் எப்பவும் யாரையும் எதிர்பார்க்காம அவங்க சொந்தக்காலில் நிக்கணும்மா. உன் பியூச்சர் நல்லா இருக்கணும்ன்னு தான் நாங்க சொல்றோம்டா. நாளைக்கு உனக்குக் கல்யாணமானாலும் உன் ஹஸ்பென்ட் கையை எதிர்பார்த்து இருக்க வேண்டிய அவசியம் இருக்காது பாரு” ராகவன் அவளின் தலையை ஆறுதலாய் வருடியபடி சொல்ல...

“நீங்க சொல்றது எல்லாம் சரி தான்ப்பா. ஆனா... எனக்கு வேலைக்குப் போகணும்ன்னாலேயே பயமாயிருக்கு. ஏன்ப்பா... பேசாம உங்களை மாதிரி ஒரு நல்லவனா பார்த்து எனக்குக் கல்யாணம் பண்ணி வச்சிடுங்களேன்.

PDF தமிழ் .com

உங்களை மாதிரி அவனும் என்னைப் பத்திரமா பார்த்துக்குவான். பிராப்ளம் சால்வ்ட்...” அப்பாவியாய் சொன்ன மகளை என்ன செய்வது? என்று தெரியாமல் இருவரும் விழித்தனர்.

மயூரி எல்லாவிதத்திலும் திறமையானவள் தான். அவளிடம் இருக்கும் ஒரே பாதகமான விசயம் பயம். அவள் பிறக்கும் போதே இந்தப் பயமும் அவளோடு ஒட்டி கொண்டு பிறந்து விட்டது போலும். அதனாலேயே கேம்பஸ் இன்டர்வியூவில் தேர்வாகி வேலைக்குச் சென்றிருக்க வேண்டிய அவள்... நேர்முகத் தேர்வு சரியாகச் செய்யாமல் சொதப்பிவிட... அந்த வேலை கிடைக்காமல் போய்விட்டது. இப்போது நேர்முகத் தேர்வுக்குப் போகும் கம்பெனிக்கும் ராகவன் தான் அவளின் பயோடேட்டாவை அனுப்பி வைத்தார்.

“என்ன மயூ? உனக்கு அடுத்து பிறந்தவ மஞ்சு... அவளைப் பார்த்தாவது நீ தைரியமா இருக்க வேண்டாமா?” ஆற்றாமையில் சுமதி புலம்ப...

“சுமி... பிள்ளைங்களைக் கம்பேர் பண்ண கூடாதுன்னு சொல்லியிருக்கேனா இல்லையா? ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதம். நாம தான் அவங்க திறமையைப் பார்த்து ஊக்குவிக்கணும்” ராகவன் மனைவியைக் கடிந்து கொள்ள...

“சாரிடாம்மா...” சுமதி மகளிடம் மன்னிப்பு வேண்ட...

“என்னம்மா இது? நீங்க போய் என் கிட்ட மன்னிப்பு எல்லாம் கேட்டுக்கிட்டு... நீங்க சொல்றதும் ஒருவிதத்தில் சரி தான். நான் மஞ்சு மாதிரி பிறந்திருந்தா... உங்களுக்குக் கவலை இருந்திருக்காதுல்ல...” மெய்யாய் வருத்தமாய்க் கூறியவளை கண்டு இருவரின் உள்ளமும் உருகி விட்டது.

“விடும்மா... நாங்க இருக்கிற வரை நீ எதுக்கும் பயப்படத் தேவையில்லை... சரியா? நீ இப்போ இன்டர்வியூவுக்குக் கிளம்பும்மா” ராகவன் மகளிடம் சொன்னவர் மனைவியை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தார்.

“என்னங்க... இப்படி எதுக்கு எடுத்தாலும் பயப்படுறாளே... இவ எப்படி வேலைக்குப் போய் எல்லாத்தையும் சமாளிக்கப் போறா?” தாய்க்கே உண்டான கவலையுடன் வந்தது சுமதியின் வார்த்தைகள்.

“அதுக்குத் தானே வேலைக்கு அனுப்பறோம்... பார்க்கலாம் இந்த வேலை அவளிடம் பெரிய மாற்றத்தை கொடுக்கும்ன்னு நான் நம்பறேன்” மனைவிக்கு ஆறுதல் கூறுவது போல் தனக்கும் அவர் ஆறுதல் கூறினாலும் அவரின் மனதுக்குள் மூத்த மகவை பற்றிய கவலை மெல்லியதாய் அரித்துக் கொண்டிருந்தது.

“மஞ்சு... மஞ்சு... ப்ளீஸ்டி...” கெஞ்சி கொண்டிருந்த மயூரியை கேள்வியாய் பார்த்தார் சுமதி.

“அம்மா... என்னை இன்டர்வியூக்கு ஸ்கூட்டியில் கொண்டு போய் விடச் சொல்றேன். இவ மாட்டேங்குறா...” கொஞ்சம் விட்டால் அழுது விடுபவள் போல் கூறிய மயூரியை கண்டு அவருக்குப் பாவமாய் இருந்தது.

“மஞ்சு நீ மயூவை கொண்டு போய் விட்டுட்டு வாடாம்மா...” பெரிய மகளுக்காக அவர் சின்ன மகளிடம் பரிந்துரை செய்ய...

“மயூ... ஸ்கூட்டி ஓட்டுறதுக்கே பயப்படுற நீ... எப்படி இந்த இன்டர்வியூவை ஒழுங்கா அட்டன்ட் பண்ண போற? இந்த வேலையாவது கிடைக்குமா? இல்லை வழக்கம் போல் சொதப்ப போறியா?” கேலியாய் கேட்ட தங்கையின் வார்த்தையில் மனம் அடிப்பட்டுப் போனவளாய் தேம்பி தேம்பி அழுதுவிட்டாள் மயூரி.

“நான் எதுக்குமே லாயக்கில்லை... என்னை வச்சு யாருக்கும் பிரயோஜனமில்லை” அவள் புலம்பி கொண்டே அழ...

“மயூ... சாரிடி... நான் சும்மா விளையாட்டுக்கு சொன்னேன்டி. இப்போ என்ன நான் ஸ்கூட்டி ஓட்டிட்டு வரணும் அவ்வளவு தானே. வர்றேன்... வந்து உன்

PDF தமிழ் .com

இன்டர்வியூ முடியும் வரை இருந்து திரும்ப வீட்டுக்கு கூட்டிட்டு வர்றேன்... போதும்மா?" மஞ்சு சொன்னதும் தான் மயூரி முகத்தில் சிரிப்பு வந்தது.

"பயப்படாம தைரியமா பதில் சொல்லணும்... யாராயிருந்தாலும் நேர் பார்வை பார்த்து பேசணும்" என்று பெற்றோர் கூறிய அறிவுரையுடன் நேர்முகத் தேர்வுக்குக் கிளம்பி போனாள் மயூரி.

****

"கிர்.... கிர்... கிர்..." காதுக்கருகில் அலறிய அலாரம் சத்தத்தில் தூக்கத்தில் இருந்து பதறி போய் விழித்த வருண்... சுற்றும் முற்றும் பார்த்தான். தன் அறையில் தனது படுக்கையில் பத்திரமாய் இருப்பதை உணர்ந்து அவனுள் ஒருவித நிம்மதி உணர்வு பரவியது.

கனவில் உடன் வேலை செய்யும் சுனிதாவிடம் காதலை சொல்லிவிட்டு அவளின் பதிலுக்காகக் காத்திருந்த நல்ல நேரத்தில் தான் இந்த அலாரம் அடித்து அவனை எழுப்பிவிட்டது. ம்ஹூம்... அது தானாக எழுப்பிவிடவில்லை... இந்த விருமாண்டி ஆரன் தான் அலாரம் வைத்து எழுப்பியிருக்கிறான். அவனை எழுப்பி விட்டதோடு மட்டும் அல்லாமல் முறைத்து வேறு பார்த்துக் கொண்டிருந்தான்.

"தோஸ்த் நான் உங்களுக்கு என்ன பாவம் பண்ணினேன்... இப்படிக் காலங்கார்த்தால எழுப்பி விட்டது இல்லாம முறைச்சு வேற பார்த்திட்டு இருக்கீங்க. இது உங்களுக்கே நியாயமா தோஸ்த்...?"

அவனின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் தன் கைக்கடிகாரத்தை அவன் கண் முன் காட்ட வந்தான் ஆரன். அதைத் தவறாகப் புரிந்து கொண்ட வருண்,

"தோஸ்த் எதுவா இருந்தாலும் பேசி தீர்த்துக்கலாம்... நோ வன்முறை... வேணாம் அழுதுருவேன்..." போலியாய்

அழுதுவிடுபவன் போல் கூற... ஆரன் தலையில் அடித்துக் கொண்டு கடிக்காரத்தைச் சுட்டி காட்டினான்.

“ஓ காட்... எட்டு மணியாச்சா? ஏன் தோஸ்த் சீக்கிரமா எழுப்பி விடல?” ஆரனை குறைப்பட்டுக் கொண்டு குளியலறையை நோக்கி ஓடினான்.

“இவனைத் திருத்த முடியாது...” முணுமுணுத்துக் கொண்டே... வருணின் படுக்கையை மடித்து வைத்தான் அவன்.

வருண் பெங்களூரை சேர்ந்தவன். அங்கு வேலை செய்தவனை இங்கே சென்னையில் இருக்கும் ஐடி கம்பெனிக்கு ஒரு வருடத்திற்கு முன் தான் மாற்றியிருந்தார்கள். அவன் இங்கு வேலைக்கு வரும் போது ஆரன் அங்கு ஏற்கெனவே வேலை செய்து கொண்டிருந்தான். ஏனோ ஆரனை பார்த்த கணம் அவனுக்குப் பிடித்துப் போய்விட அவனுடனே பசை போட்டது போல் இவன் ஒட்டி கொண்டான். வீடு இல்லாமல் தவித்த வருணை தான் தங்கியிருந்த கம்பெனி குவார்ட்டசில் தன்னுடன் தங்க வைத்துக் கொண்டான் ஆரன். ஆரனுக்கு முப்பத்திரெண்டு வயது. வருணுக்கு இருபத்தியேழு வயது. இருவருக்கு இடையில் ஐந்து வயது வித்தியாசம் இருந்தாலும்... இருவரையும் நட்பு என்ற சங்கிலி பிணைத்து இணைத்து வைத்திருந்தது.

இருவரும் நட்பு என்ற மெல்லிய நூலிழையில் இணைக்கப்பட்டு இருந்தாலும்... இருவருமே குணத்திலும், ரசனையிலும் இரு வேறு துருவங்கள். ஆரன் தேவைக்குத் தான் பேசுவான். ஆனால் வருண் காட்டாறு வெள்ளம் போல் ஓயாமல் பேசுவான். ஆரனுக்குப் பெண்களைக் கண்டாலே வெறுப்பாய் இருக்கும். வருணுக்கோ பெண்களைக் கண்டாலே விருப்பாய் இருக்கும். அவன் இருக்கும் இடத்தில் சுமார் ஐந்து பெண்களாவது அவனைச் சுற்றி இருப்பர். ஆரன் பெண்களைத் திட்டுவதற்கு மட்டுமே வாயை திறப்பான். வருண் பெண்களை ஜொள்ளுவதற்கு மட்டுமே வாயை திறப்பான்.

PDF தமிழ் .com

அவசரமாய்க் குளிக்கப் போன வருண் அதே அவசரத்தில் வெளியில் வந்தாலும்... தான் அணிய வேண்டிய உடைகளை மிக நிதானமாய்த் தேர்ந்தெடுத்தான்.

“வருண்... நேரமாச்சு... இன்னும் கிளம்பாம என்ன பண்ணிக்கிட்டு இருக்க?” வரவேற்பறையில் இருந்து ஆரன் கத்த...

“தோஸ்த்... இன்னைக்கு இன்டர்வியூ இருக்குல்ல... கலர் கலரா பொண்ணுங்க வருவாங்க... அதான் நல்ல ட்ரெஸ்சா தேடிட்டு இருக்கேன்” என்றவன் பதினைந்து நிமிடங்கள் கழித்தே கிளம்பி வந்தான்.

வருண் தனது உடையில் தெளித்திருந்த வாசனை திரவியம் அவனின் வருகையைக் கட்டியம் கூற... அவனைத் திரும்பி பார்த்த ஆரன்...

“ஏண்டா... ஒரு பாட்டில் சென்ட்டையும் அள்ளி பூசிக்கிட்டியா? நாத்தம் குடலை பொறட்டுது? எதுக்கும் என்னை விட்டுக் கொஞ்சம் தள்ளியே வா” சொல்லி கொண்டே வீட்டின் கதவை மூட...

“உங்களுக்குப் பொறாமை தோஸ்த்... இவ்வளவு அழகா இவன் இருந்தா... நம்மளை யாரும் பார்க்க மாட்டாங்கன்னு... உங்களுக்குப் பொறாமை”

“பொறமை... எனக்கு?” ஒருமாதிரி குரலில் வினவியபடி ஆரன், வருணை ஒரு பார்வை பார்த்து வைக்க... அதில் அவன் கப்பென்று வாயை மூடி கொண்டான். பின்னே வாட்டச்சாட்டமாய்ச் சிங்கம் போல் கம்பீரமாய் இருக்கும் ஆரனின் முன் சுண்டெலி போல் தோற்றமுடைய வருண் நிற்க முடியுமா என்ன!

இருவரும் தத்தம் இருசக்கர வாகனத்தில் ஏறி அலுவகத்தை நோக்கி பறந்தனர். அலுவகலகத்தில் தங்களது வாகனத்தை நிறுத்திவிட்டு உள்ளே நுழையும் போது வருண் அலறினான்.

“தோஸ்த் அந்தச் சுனிதா கிட்டே இருந்து என்னைக் காப்பாத்துங்க?” ஆரனின் பின் அவன் மறைந்து கொண்டான்..

அதற்குள் அவர்கள் அருகில் வந்த சுனிதா, “ஹாய் ஆரன்... குட்மார்னிங்...” அவளின் காலை வணக்கத்திற்கு எந்தவித பதிலும் சொல்லாமல் அவளையும் ஏறெடுத்தும் பார்க்காமல் அவன் செல்ல... அவனை உதட்டு சுழிப்புடன் பார்த்த சுனிதா, ஆரனின் பின்னேயே சென்ற வருணை பார்த்து,

“ஹாய் ரோமியோ... என்ன உங்க தோஸ்த் பின்னாடியே பம்மிட்டு போற?” அவள் பக்கம் திரும்பாமல் நல்ல பிள்ளையாய் சென்றவனை அவள் வேண்டுமென்றே வம்பிழுத்தாள். அவளை எங்குக் கண்டாலும் லிட்டர் லிட்டராய் ஜொள்ளு விடும் வருண் அவளைக் கண்டு கொள்ளாமல் சென்றால் அவளுக்கு ஆச்சிரியமாய் இருக்காதா?

“ஹி... ஹி... ஹாய் சுனிதா... குட்மார்னிங்...” என்று அவளிடம் வழிந்தவன் மேலும் அவள் வாய் திறக்கும் முன் அங்கிருந்து ஓடிவிட்டான்.

“உஷ்... அப்பாடா...” மின்தூக்கியில் உள்ளே நுழைந்த வருண் நிம்மதி பெருமூச்சு விட...

“என்னடா... எப்போ பார்த்தாலும் அவளைப் பார்த்தாலே கடலை போடுவ? இன்னைக்கு என்ன இப்படி ஓடி வர்ற?” ஆரன் சந்தேகமாய் வருணை பார்த்தான்.

“தோஸ்த்... சுனி கிட்ட நான் ஐ லவ் யூ சொன்னேன். பதிலுக்கு அவ என்னைத் திட்டிருவாளோன்னு பயத்துல தான் ஓடி வந்துட்டேன். ஆனா அவ ஒண்ணுமே சொல்லலியே தோஸ்த். அதான் எனக்கு ஆச்சிரியமாய் இருக்கு”

“இப்ப பேசுன ஒரு நிமிசத்துல... ஐ லவ் யூ சொல்லிட்டு வந்திட்டியா? உனக்கு ரொம்ப... தைரியம் தான்டா”

PDF தமிழ் .com

“அய்யோ... நான் இப்போ சொல்லல தோஸ்த்...”

“இப்போ சொல்லலன்னா... அப்போ எப்ப சொன்ன?”

“அதானே எப்போ சொன்னேன்?” என்று யோசித்த வருணை கொலைவெறியுடன் பார்த்தான் அவன்.

“அடக்கடவுளே...” அலறிய வருணை...

“என்னடா...?”

“கனவுல தான் சொல்லியிருக்கேன் தோஸ்த்...” ஆரனிடம் அசடு வழிந்தவன், தனக்குத் தானே, “டேய் வருண் வேஸ்ட்டுடா நீ... அவளா வலிய வந்து பேசினா... கிடைச்ச நல்ல சான்சையும் மிஸ் பண்ணிட்டியே”

“பொம்பளை கையால அடி வாங்குறதுக்கு என்னம்மா யோசிக்கிற? அதுக்குப் பதிலா வாங்குற சம்பளத்துக்கு எப்படி வேலை செய்யலாம்ன்னு யோசி? ஒழுங்கா வேலையை வந்து பாருடா...” அவனை இழுத்துக் கொண்டு மின்தூக்கியில் இருந்து வெளியில் வந்தான் ஆரன்.

“பட்டாம்பூச்சிகள் பறக்குது பறக்குது
கண்ணாமூச்சிகள் நடக்குது நடக்குது
பச்சை பசுமைகள் தெரியுது தெரியுது
அழகு கிளிகள் எனது விழியில் வலம் வருதே...” வருண் பாடி கொண்டே விசிலடிக்க... ஆரன் அவனைக் கோபமாய்ப் பார்த்தான்.

“டேய்... நீ அடங்கவே மாட்டியா? இப்போ எதுக்கு இந்தப் பாட்டு?” பற்களைக் கடித்தான் அவன்.

“தோஸ்த்... அங்கே பாருங்க இன்டர்வியூவுக்கு வந்த பொண்ணுங்க ஒவ்வொண்ணும் சூப்பரா இல்ல... எனக்கு அப்படியே பிருந்தாவன்ல கோபியர்களோடு இருந்த கிருஷ்ணன் மாதிரி பீல் வருது” குதூகலமாய்ச் சொல்லியவன்,

“எவ்வளவு ஜென்ட்ஸ் வந்திருக்காங்க... அவங்க எல்லாம் உன் கண்ணுக்கு தெரிலையா?”

ஆரன் சொன்னதைக் காதில் வாங்காதவனாய், “ஆனாலும் இந்தக் கம்பெனி ரொம்ப மோசம் தோஸ்த்” சோகமாய்ச் சொன்ன வருணை கேள்விக்குறியாய் பார்த்தான் ஆரன்.

“பின்னே என்ன தோஸ்த் வந்திருக்கிற அத்தனை பெண்களுக்கும் வேலை போட்டு கொடுக்கக் வேண்டியது தானே. இத்தனை பேரில் ஒருத்தருக்கு மட்டும் வேலைன்னா என்னோட பிஞ்சு மனசு நொந்து நூடில்ஸாகாதா தோஸ்த்?” வராத கண்ணீரை துடைத்துக் கொண்டு அவன் போலியாய் வருந்த...

“உன்னையெல்லாம் பெத்தாங்களா? இல்லை செஞ்சாங்களா?” வார்த்தைகளைக் கடித்துத் துப்பிய ஆரன் மேலே நடக்க... வருண் அவனைப் பின் தொடர்ந்தான்.

ஆரனின் கண்ணில்... அலைப்பேசியில் விளையாடி கொண்டிருந்த ஒரு பெண், தனது அலங்காரம் சரியாக இருக்கிறதா என்று கையில் வைத்திருந்த சிறிய கண்ணாடியில் தன்னைச் சரி பார்த்துக் கொண்ட மற்றொரு பெண், செய்தித்தாளில் சினிமா பக்கம் படித்துக் கொண்டிருந்த இன்னொரு பெண் என வேண்டாத காட்சிகளே பட... அவனின் இதழ்கள் இகழ்ச்சியாய் வளைந்தது.

அதே இகழ்ச்சியான பாவனையுடன் நிமிர்ந்தவன் கண்ணில் மயூரி தென்பட அவளையும் அலட்சியமாய்ப் பார்த்தபடி அங்கிருந்து நகர்ந்தான். அவனின் அலட்சியத்திலும், இகழ்ச்சியிலும் அவள் மனம் அனிச்சை மலராய் வாடியது. இதுநாள் வரை அவளை யாரும் இது போல் கேவலமாய்ப் பார்த்ததில்லை. ஏனோ அவனின் பார்வை அவள் மனதை ஊடுருவி சென்று உள்ளுக்குள் குளிரை ஏற்படுத்தியது. காந்தள் மலரை போன்ற அவளின் மெல்லிய கை விரல் பயத்தில் நடுங்க... அதன் நடுக்கத்தைப் போக்க அவள் கையிலிருந்த பைலை இறுக பற்றிக் கொண்டாள்.

தமிழ் நாவல்

“மயூ... இன்டர்வியூ எப்படிப் பண்ணினே? இந்த வேலையாவது கிடைக்குமா?” அலுவலகத்தின் வெளியில் தனக்காகக் காத்திருந்த தங்கை கேட்டதும் மயூரியின் தலை தானாகவே ஆம் என்பது போல் ஆடியது.

“உண்மையா தான் சொல்லுறியா?” என்ற மஞ்சு... அக்காவின் கையில் நறுக்கென்று கிள்ளினாள்.

“ஷ்... வலிக்குதுடி...” பாவமாய்ச் சொன்ன மயூரியை பார்த்து,

“என்னால இன்னமும் நம்ப முடியல மயூ...” வியந்த மஞ்சு, “அப்போ வேலை உனக்குக் கன்பார்ம்ன்னு சொல்லு” ஸ்கூட்டியை முடுக்கி விட்டபடி கேட்க... அவளின் பின்னே அமர்ந்த மயூரி தங்கையின் பதிலில் திடுக்கிட்டாள்.

“தெரியல... ஒரு வாரத்தில் பதில் சொல்றேன்னு சொல்லியிருக்காங்க” விட்டேத்தியாய் வந்தது மயூரியின் வார்த்தைகள். சாலையில் கவனமான மஞ்சரி அவளிடம் மேலும் ஏதும் கேட்கவில்லை.

வீட்டிற்குள் நுழைந்ததும் அவளின் அன்னையும் அதையே கேட்க... அவருக்கும் தங்கையிடம் கூறிய அதே பதிலை கூறியவள்... “அம்மா... எனக்குத் தலைவலியா இருக்கு... நான் போய்ப் படுக்கவா?”

“போம்மா... படுத்துக்கோ” அன்னை அனுமதி அளித்ததும் நேரே தன்னறைக்குச் சென்று படுக்கையில் விழுந்தாள். கண்களை மூடியவளின் விழிகளுக்குள் கூர்மையான பார்வையுடன் அவனே வந்தான். அவனின் பார்வையின் தீட்சண்யம் தாங்க முடியாமல் கண்களைப் பட்டென்று திறந்தாள்.

எல்லாத் தேர்வையும் ஓரளவு சரியாகச் செய்து முடித்தவள், குரூப் டிஸ்கசனில் சற்று பயந்து தான் போனாள். ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு அதையும் வெற்றிகரமாக

முடித்தவள்... மனதில் எழுந்த அசட்டு தைரியத்துடன் நேர்முகத் தேர்வு நடைபெறும் அறைக்குள் நுழைந்தாள். அங்கே தேர்வாளராக மூவர் அமர்ந்திருக்க... ஒவ்வொருத்தருக்கும் தனித் தனியாய் வணக்கம் சொன்னவள்... மூன்றாவதாய் அமர்ந்திருந்த அவனைக் கண்டதும் மனதுக்குள் அஞ்சி நடுங்கியவளாய் சகலமும் மறந்து போய் "ஞே" என்று விழித்தாள்.

மற்ற இருவரும் அவளை அமர சொன்னதும் அமர்ந்தவள் மறந்தும் அவன் பக்கம் திரும்பவில்லை. ஆனால் அவனிடமிருந்து தான் அவளை நோக்கி கேள்விகள் படையெடுத்தன. அம்பு போல் அடுத்தடுத்துப் புறப்பட்ட அவனின் கேள்வியில் அவள் பதில் சொல்ல முடியாமல் திணறி போனாள்.

"மிஸ்டர். ஆரன்... கொஞ்சம் பொறுமையாய் கேள்வி கேளுங்க... உங்க ஸ்பீடுக்கு அவங்களால பதில் சொல்ல முடியல பாருங்க. பாவம் புதுக் கேன்ட்டிடேன்ட்... பயந்துற போறாங்க" மற்ற இருவரும் சிரித்துக் கொண்டே ஆங்கிலத்தில் கூற... அதற்கு அவனோ சிறிதும் சிரிக்கவில்லை... இளக்கமும் காட்டவில்லை.

"கேள்விகளுக்குப் பதில் தெரியாதவங்க எல்லாம் எதுக்கு இன்டர்வியூவுக்கு வரணும்? பெண்கள் எல்லாம் அலங்காரம் பண்ணிக்கிட்டு மெழுகு பொம்மைகளாய் வலம் வர தான் லாயக்கு. அவங்களால திறமையா வேலை செய்ய முடியாது" அவனின் பதிலில் அவளின் மனம் அடிப்பட்டுப் போனது. அவள் கண்களில் கண்ணீர் முட்டி கொண்டு நின்றது.

"மிஸ்டர். ஆரன்... என்ன இது... கற்கால ஆண்கள் மாதிரி பேசறீங்க? ஐடி கம்பெனியில வேலை செய்றவர் போலில்லை உங்கள் பேச்சு..." மற்ற இருவரும் ஒருமித்த குரலில் அவனைக் கண்டிக்க... அதன் பின்னரே அவன் சற்றுத் தணிந்தான். ஆனாலும் அவளை உறுத்துப் பார்ப்பதை அவன் விடவில்லை.

தமிழ் நாவல்

அடுத்த வந்த மணித்துளிகளில் அவர்கள் என்ன கேள்வி கேட்டார்கள்? அவள் என்ன பதில் சொன்னாள்? என்று அவளுக்கே தெரியாது. ஏதோ முள் மேல் அமர்ந்திருப்பது போன்ற அவஸ்தையுடன் அமர்ந்திருந்தவளுக்கு அந்த அறையை விட்டு வெளியில் வந்தால் போதுமென்று தோன்றியது. நேர்முகத் தேர்வு முடிந்ததும்... அவனை நிமிர்ந்தும் பாராமல் விட்டால் போதும் என்று அவள் வெளியில் ஓடி வந்துவிட்டாள்.

‘என்ன மாதிரியான மனிதர் அவர்? அவருக்குப் பெண்களைக் கண்டாலே ஆகாதோ? ஏன்...? அவரின் அம்மாவும் ஒரு பெண் தானே? இப்படிப் பெண்களை இழிவாய் பேச அவர் நாக்கு கூசாதோ? அப்பப்பா... அவர் வார்த்தையை விட... அவரின் பார்வை எவ்வளவு கூர்மையாய் இருந்தது? பார்வையா அது? லேசர் லைட் மாதிரி துளைக்கும் பார்வை அது... இப்படிப்பட்ட ஒருவருடன் வேலை செய்ய வேண்டுமா? நாள் முழுவதும் அவரின் உதாசீன பேச்சை கேட்டுக் கொண்டு... ம்ஹூம்... முடியாது... முடியவே முடியாது. இந்த வேலை கிடைத்தாலும் எனக்கு வேண்டாம்’ அவளின் குழந்தை மனம் தொட்டார் சுருங்கியாய்ச் சுருங்கியது.

“மயூ...” தந்தையின் குரல் கேட்டு அவசரமாய் எழுந்தமர்ந்தாள்.

“தலைவலிக்குதுன்னு அம்மா கிட்ட சொன்னியாமே? இப்போ எப்படிடா இருக்கு?” அவளின் தலையை மென்மையாய் பிடித்துவிட்டபடி அவர் கேட்க... அவரின் கனிவில் அவளுக்குக் கண்கள் கரித்தது.

‘அப்பாவும் ஆண்மகன் தானே. ஆனாலும் பெண்களின் வலி வேதனைகளைப் புரிந்து கொண்டு... அதற்கேற்ப கனிவாய் நடந்து கொள்ள அப்பாவால் மட்டும் முடிகிறதே. ஏன் அவரால் மட்டும் அது முடியவில்லை?’ அவன் பேசிய பேச்சு இப்போது அவளுக்கு நியாபகம் வந்து கண்களில் கண்ணீரை வரவழைத்தது. தந்தையைக் கட்டி கொண்டு

ஓவென்று அழுதுவிட்டாள். அவரோ அவளின் அழுகையில் பதறிப் போய்விட்டார்.

“ரொம்பவும் வலிக்கிறதாம்மா...” அவர் பதட்டமாய்க் கேட்க... அவள் இல்லை என்பது போல் தலையாட்டினாள்.

“இன்டர்வியூ நல்லா பண்ணலையா?” அவளின் மனதை புரிந்து கொண்டவராய் அவர் கேட்க, அவள் மௌனமாய் அமைதி காத்தாள்.

“பரவாயில்லை மயூ... இந்த வேலை போனால் என்ன? உன்னோட டேலன்ட்டுக்கு இன்னொரு வேலை நிச்சயம் கிடைக்கும்” சமாதானமாகக் கூறியவர் அவளுக்கு நம்பிக்கையளிக்க...

“இல்லப்பா... இன்டர்வியூ எல்லாம் நல்லா தான் பண்ணியிருக்கேன். ஆனா... இந்த வேலை கிடைச்சாலும் எனக்குப் போக இஷ்டமில்லைப்பா...” மெல்லிய குரலில் அவள் கூற...

“ஏன்ம்மா போன இடத்தில் ஏதும் பிரச்சினையா?” மகளின் முகத்தை வைத்தே பிரச்சினையை ஊகித்துவிட்டார் அவர்.

“ம்...” என்று தலையாட்டியவள்... அங்கு நடந்ததைக் கூறினாள். “அப்பா... அவரைக் கண்டாலே எனக்குப் பயமா இருக்குப்பா. அதுவும் பெண்களைக் கண்டாலே அவருக்குப் பிடிக்காது போல. அவரோட பார்வை, பேச்சு எல்லாம் பெண்களை ரொம்பக் கேவலப்படுத்துவது போலிருக்கு. அப்படிப்பட்ட ஒருவர் வேலை செய்யும் இடத்தில் எனக்கு வேலை செய்ய யோசனையா இருக்கு?”

“மயூ கண்ணா... இன்னைக்கு உலகத்துல அவனை மாதிரி ஆள்கள் தான் அதிகம். பெண்களைக் கேவலமாய்... போகப் பொருளாய் பார்க்கும் ஆண்கள் தான் நிறைய இருக்காங்க. அவங்களுக்கு எல்லாம் பயந்திட்டு நாம வெளியில் போகாம இருக்க முடியமா? நாம தைரியமா இருந்தா தான் அவங்க தங்களோட பார்வையை மாத்திக்குவாங்க. இதுக்கு எல்லாமா பயப்படுறது? உனக்குச் சப்போர்ட் பண்ணின

தமிழ் நாவல்

மத்த ரெண்டு பேரும் ஆண்கள் தானே... அந்த மாதிரி நல்லவங்களும் அங்கே இருக்காங்க தானடா. அப்புறம் என்ன பயந்திட்டு... தைரியமா போடா... உனக்கு ஏதாவது ஒண்ணுன்னா இந்த அப்பா எதுக்கு இருக்கேன்? எதுவாயிருந்தாலும் நான் பார்த்துக்கிறேன் கண்ணா"

தான் அவ்வளவு தைரியம் கூறியும் மகள் முகம் தெளியாதது கண்டு, "நீ இவ்வளவு தூரம் பயப்படுறன்னா... அவன் என்ன சிங்கமா? இல்லை புலியா?" அவர் கேலியாய் வினவ,

அவர் நினைத்தது போல் மயூரியின் முகம் பூவாய் மலர்ந்தது. "சிங்கம் புலி எல்லாம் அவரிடம் பிச்சை வாங்கணும்ப்பா... அவர் அதையெல்லாம் விடப் பயங்கரமானவர்" என்று சொல்லிவிட்டு அவள் சிரிக்க...

"அவ்வளவு பயங்கரமானவரா?" போலியாய் நடுங்குவது போல் அவர் அஞ்ச...

"ம்... பத்து கால்... பத்துக் கை... இருபது தலை... அப்புறம்..." என்று சிரியாமல் சொன்ன அவள் மேலே யோசிக்க...

"போக்கிரி..." அவள் முன்னுச்சியில் சிலும்பி கொண்டிருந்த முடியை செல்லமாய்க் கலைத்து விட்டவர்... "இப்போ பயம் இல்லையே... இந்த வேலை கிடைச்சா போவ தானே?" தனக்காகத் தைரியம் சொல்லும் தந்தையைக் கண்டு அவளுக்குள் அன்பு பெருகியது.

"நீங்க இருக்கும் போது எனக்கு என்ன பயம்ப்பா... வேலை கிடைத்தால் கட்டாயம் போறேன்" அவரின் கையைப் பிடித்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டு அவள் சொல்ல... மகளின் வார்த்தையில் மகிழ்ச்சி அடைந்தவராய் அவளை அணைத்துக் கொண்டார்.

****

அடுத்து வந்த ஒரு வாரத்திற்குள் அவளின் வேலை உறுதி செய்யப்பட்டு விட... வீட்டில் இருந்தவர்கள் எல்லாம் சந்தோசமாய்... இவள் மட்டும் சோகமாய் இருந்தாள். அந்தக்

கடுவன் பூனையை மறுபடியும் சந்திக்கத் தான் வேண்டுமா? என்று அவளுக்கு ஆயாசமாய் இருந்தது.

“மயூ... இந்தச் சுடி போடு... உனக்கு அழகாய் இருக்கும்... இந்தா இந்தச் சிம்பிள் அக்ஸசரிஸ் போட்டுக்கோ... இப்படி முடியை பின்னி போட்டு போகாதே... கொஞ்ச முடியை எடுத்து கேட்சஸ் போட்டு அடக்கி... மீதியை இப்படி விரிச்சுவிடு... பார்த்தியா இப்போ ஷாம்பூ அட் ல வர்ற பொண்ணுமாதிரி அழகா இருக்க... இதுக்குத் தான் இந்த மஞ்சுவேணும்ங்கிறது ” நைட்டியில் இல்லாத காலரை தூக்கிவிட்டு கொண்டாள் மஞ் சரி.

கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தைப் பார்த்து, ‘தான்இவ் வளவு அழகா’ என்று ஒரு கணம் மயூரி பிரமித்துப்போனாள் . மறு கணம் ‘அலங்கார மெழுகு பொம்மைகள்’ அவனின் இகழ்ச்சியான பேச்சு நியாபகம் வர அவள் முகம்இருண்டது .

“மஞ்சு... இது எல்லாம் கொஞ்சம் ஓவரா இல்லையா? நான் எப்போதும் போல் சிம்பிளா போறேனே” கெஞ்சுதலாய்அவள் தங்கையைப் பார்க்க...

“என்னது... இது ஓவரா... அப்போ ஓவரா அலங்காரம்பண் ணிக்கிறதுக்குப் பேரு என்ன? இதுவே சிம்பிளான மேக்கப் தான். உன்ன பேச விட்டா பேசிட்டே இருப்ப... முதல்ல வேலைக்குக் கிளம்பு...” தங்கை அவளைத்துரிதப்படுத்த... அவள் தந்தையுடன் கிளம்பினாள்.

அலுவலகத்தில் அவளை இறக்கிவிட்ட ராகவன், “மயூ... ஆல் தி பெஸ்ட்...” மகளை வாழ்த்த...

“தேங்க்யூப்பா...” கன்னம் குழி விழ அழகாய் சிரித்த மகளை ரசித்தவர் கிளம்ப எத்தனிக்கும் போது, “அப்பா...” மயூரியின் பயக்குரல் கேட்க ... அவர் பதற்றமாய்த் திரும்பி பார்த்தார்.

“அப்பா...” என்று தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு அவரின் பின்னே அவள் மறைந்து கொள்ள... அவருக்கோ ஒன்றும் புரியவில்லை.

தமிழ் நாவல்

“என்னம்மா...?”

“அவர்... நேத்து சொன்னேனே...” திக்கியபடி அவள் சொல்ல... அவருக்குப் புரிந்து போனது.

“எங்கேம்மா?” கண்களால் தேடியபடி அவர் கேட்க,

“அதோ வையிட்ல ப்ளக் ஸ்ட்ரைப் போட்ட சர்ட்டும்... ப்ளக் பேண்ட்டும்... ஹைட்டா...” அவள் சுட்டி காட்டிய திசையை அவர் பார்க்க... அங்கே மாநிறத்தில் நல்ல உயரமாய், கம்பீரமாய், அழகாய் ஒரு இளைஞன் நின்று கொண்டிருப்பதைக் கண்டவர்,

“அவரைப் பார்த்தா மயூ பயப்படுற? பார்க்க பக்கா டிசென்ட்டா இருக்காரே? வா நானே அவர் கிட்ட பேசி உன்னை விட்டுட்டு வர்றேன்” என்றவர் அவன் பக்கம் நடக்க...

‘அவரா டிசென்ட்... அவர் பேசி நீங்க கேட்கலையே?’ மனதுக்குள் நினைத்து கொண்டிருந்தவளுக்குத் தந்தை கூறிய கடைசி வார்த்தை மெதுவாகத் தான் உறைத்தது. ‘அய்யோ அப்பா... அவரிடம் போய்ப் பேசி என்னைப் பத்திரமா விடப் போறீங்களா? போச்சு... இன்னைக்கு எல்லாம் என்னைக் குதறி எடுக்கப் போறாரு...’ உள்ளூர நடுங்கி கொண்டே தந்தையைப் பின் தொடர்ந்தாள்.

“ஹாய் ஐம் ராகவன்...” தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொண்டு கை குலுக்குவதற்கு ஏதுவாய் தன் கையை நீட்டிய பெரியவரை யோசனையாய் பார்த்தான் ஆரன்.

“ஹாய் சார்... ஐம் வருண்...” அவனை முந்தி கொண்டு வருண் பதிலளித்தபடி கை குலுக்கினான். அதனால் வேறுவழியின்றி ஆரனும், “ஹாய்...” என்றதோடு முடித்துக் கொண்டான்.

“இவ என் பொண்ணு மயூரி... இங்கே தான் புதுசா ஜாயின்ட் பண்றா” அவர் மயூரியை அறிமுகப்படுத்த...

“தெரியும்...” ஆரன் பதில் சொல்ல... அவனை அதிசயமாய்ப் பார்த்தாள் அவள். அத்தனை பேரில் அவன் தன்னை நியாபகம் வைத்திருப்பது அவளுக்கு ஆச்சிரியமாய் இருந்தது.

“அப்படியா சார்... ரொம்பச் சந்தோசம்... நான் அவங்களைப் பத்திரமா பார்த்துக்கிறேன். நீங்க கவலைப்படாம போயிட்டு வாங்க...” வருண் உற்சாகமாய் அவருக்கு உறுதியளிக்க... அதைக் கேட்டு சிரித்த ராகவன்,

“இனி பயமில்லையே மயூ... உனக்கு என்ன பிரச்சினைன்னாலும் இவங்க கிட்ட ஹெல்ப் கேட்டுக்கோ” என்று மகளிடம் சொன்னவர், அவர்களிடம்... “ரொம்ப நன்றி தம்பி... நான் வரட்டுமா” என்றவர் மகளிடமும் விடை பெற்று சென்றார்.

“இது என்ன ஸ்கூலா? அப்பா கொண்டு வந்து விட்டுட்டுப் போறதும்... பத்திரமா பார்த்துக்கோங்கன்னு சொல்லறதும்... நீ என்ன எல்கேஜி பாப்பாவா? உனக்கே இது சைல்டிஷா தெரியல...?” அவர் சென்றதும் படபடவெனப் பொரிந்தான் ஆரன்.

‘போச்சு... இன்னும் என்னவெல்லாம் பேச போறாரோ தெரியலியே?’ மனதுக்குள் நடுங்கியபடி அவள் நின்று கொண்டிருக்க...

“மயூரி நீங்க போங்க... தோஸ்த் எப்பவும் இப்படித்தான்... ஆனா ரொம்ப நல்லவர். நீங்க என்ன ஹெல்ப் வேணும்ன்னாலும் அவர் கிட்ட... இல்ல இல்ல... வேணாம் என்கிட்ட கேளுங்க” வருண் அவளுக்கு உதவிக்கரம் நீட்ட...

“தேங்க்ஸ் அண்ணா...” அவனிடம் சிரித்தபடி சொன்னவள் அலுவலகத்திற்குள் செல்ல... அவளின் அண்ணா என்றழைப்பில் வருண் நெஞ்சை பிடித்தபடி திகைப்புடன் அப்படியே நின்று விட்டான்.

அவனின் செயலில் ஆரனுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. அவன் அடக்க முடியாமல் வாய் விட்டு

தமிழ் நாவல்

சிரிக்க... அவனின் சிரிப்புச் சத்தத்தில் உள்ளே சென்று கொண்டிருந்த மயூரி திரும்பி பார்த்தாள். அவள் இரண்டொரு முறை தான் ஆரனை பார்த்திருக்கிறாள். அப்படிப் பார்த்த போதெல்லாம் கடுகடுவெனக் கல்லை போல் இறுகிய முகத்துடன் இருப்பவன்... இன்று அபூர்வமாய்ச் சிரிப்பது கண்டு ஆவென அதிசயமாய் அவனைப் பார்த்தாள். அவளைப் போலவே வருணும் தன் அதிர்ச்சியை மறந்து தனது தோஸ்தின் சிரிப்பை கண்கொட்டாமல் பார்த்திருந்தான்.

“தோஸ்த் நீங்களா சிரித்தது... நீங்களா சிரித்தது...?” அவன் பாட்டாகப் பாட... அதில் தன்னிலை உணர்ந்த ஆரன் சட்டென்று சிரிப்பை நிறுத்திவிட்டு அமைதியானான்.

“தோஸ்த்... நீங்க சிரிச்சா எவ்வளவு அழகாயிருக்கு தெரியுமா? ஏன் தோஸ்த் சிரிக்க மாட்டேங்கிறிங்க?” அன்று நல்ல மனநிலையில் இருந்ததாலோ என்னமோ வருணின் கேள்விக்குச் சிறு புன்னகையை அளித்த ஆரன் ஒன்றும் கூறாமல் சென்றுவிட்டான்.

மயூரியின் கெட்ட நேரமோ என்னவோ அவளை ஆரனின் டீமில் தான் போட்டிருந்தார்கள். அதைக் கேட்டதுமே அவளுக்கு மயக்கம் வராத குறையாய் இருந்தது. நேரே அவள் வருணிடம் தான் சென்றாள்.

“அண்ணா... எனக்கு அவங்களைக் கண்டாலே பயமாயிருக்கு. வேற எந்த டீமிலாவது சேர்த்துவிடுறீங்களா?” பாவம் போல் கேட்டவளை பார்த்து அவனுக்குமே பரிதாபமாய் இருந்தது.

“ரோமியோ உன்னையும் ஒருத்தி அண்ணான்னு சொல்லிட்டாளே... ஹா... ஹா...” வயிற்றைப் பிடித்துக் கொண்டு சுனிதா விழுந்து விழுந்து சிரித்தாள். அவர்கள் இருவருமே ஆரனின் டீமில் தான் இருந்தார்கள். சுனிதாவின் வார்த்தையில் வருணுக்கு மயூரியின் மேலிருந்த பரிதாபம் போய்க் கோபம் வந்தது.

“மிஸ். மயூரி... இங்கே இந்த அண்ணா... சார்... அப்படின்னு எல்லாம் கூப்பிட கூடாது... பேரை சொல்லி தான் கூப்பிடணும். என்ன உங்களுக்குப் புரிஞ்சதா?” அவன் கோபமாய்க் கூற... இருந்த ஒரே ஆதரவான அவனும் கோபப்படவும் அவளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. சரியென்பது போல் தலையாட்டினாள்.

“இங்கே பாருங்க மயூரி... நீங்க பயப்படுறது போலத் தோஸ்த் கோபக்காரர் இல்லை. நீங்க உங்க வொர்க்ல சின்சியரா இருந்தா... அவர் உங்களை எதுவும் சொல்ல மாட்டார்” அவன் சொன்னதற்குத் தலையைத் தலையை ஆட்டியவள் மேலே ஒன்றும் பேசவில்லை.

அன்று முழுவதும் ஒழுங்காக வேலை செல்ல... அவளுக்குப் பெருத்த நிம்மதியாய் இருந்தது. மணி ஐந்து அடிக்கவும் தன் வேலையை முடித்துக் கொண்டு ஆரனின் அறைக்குச் சென்றாள். கதவை தட்டிவிட்டு உள்ளே சென்றவள் அமைதியாய் நிற்க... தன் முன் மௌனமாய் நின்றவளை என்ன? என்பது போல் கேள்வியாய் பார்த்தான் அவன்.

“நான் வீட்டுக்கு போகலாமா?” மெல்ல கேட்டவளை... புரியாமல் பார்த்தவன்,

“உன் வேலையெல்லாம் முடிச்சிட்டீயா?” அவனின் ஏக வசனத்தில் அவள் திடுக்கிட்டவள், இல்லை என்பது போல் தலையசைத்தாள்.

“உன் வேலையெல்லாம் யார் செய்வா? அதுக்குத் தனியா வேற யாருக்காவது சம்பளம் போட்டு கொடுக்கலாமா?” நக்கலாய் வந்தது அவனின் வார்த்தைகள்.

அவள் தனியே செல்வதற்குப் பயந்து கொண்டு தன்னை அழைத்துச் செல்வதற்காக மஞ்சரியை ஐந்து மணிக்கு வர சொல்லியிருந்தாள். ஆரன் இப்படிக் கூறியதும் அவளுக்குப் பயத்தில் உடல் நடுங்கியது.

“டைம் பைவ்...” அவள் முடிக்கும் முன்னே அவனுக்குக் கோபம் வந்தது.

“இது ஒண்ணும் கவர்மெண்ட் ஆபிஸ் இல்லை. டான்னு ஐஞ்சு மணியானதும் வீட்டுக்கு கிளம்பி போறதுக்கு... இது ஐடி பீல்ட்... ராத்திரி பகல் பார்க்காம கண் முழிச்சு வேலை பார்க்கணும். அதுக்குத் தான் அதிகமா சம்பளம் தர்றாங்க” என்றவன், “உன் வேலையை முடிச்சிட்டு நீ கிளம்பலாம்... என் கிட்ட சொல்லிட்டு போகணும்ன்னு அவசியம் இல்லை. உன் வொர்க்கை மெயிலில் எனக்கு அனுப்பி வச்சிரு” என்றவன் அத்துடன் பேச்சு முடிந்தது என்பது போல் கணினியில் பார்வையைப் பதித்தான்.

‘வேலையெல்லாம் முடிச்சிட்டு போகணும்ன்னா ரொம்ப நேரம் ஆகுமே? இன்னைக்குத் தனியா தான் வீட்டுக்கு போகணுமா?’ அதை நினைக்கும் போதே அவளுக்குப் பகீரென்றது. எதற்கும் அவனிடம் பேசி பார்ப்போமே என்று அவள் அங்கேயே நிற்க அவனோ நிமிரும் வழியைக் காணோம்.

சிறிது நேரம் சென்று அவனுக்கு ஏதோ தோன்ற நிமிர்ந்து பார்த்தவன்... அங்கு இன்னமும் அவள் நின்று கொண்டிருப்பதைக் கண்டு துணுக்குற்றான்.

“ஏய் இன்னும் போகாம இங்கே என்ன பண்ணற? போ போய் வேலையைப் பாரு” அவனின் கடுகடுப்பில் அவளையும் அறியாமல் அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது. இதற்கும் மேலும் இங்கே நிற்பதில் மரியாதை இல்லை என்பதை உணர்ந்தவளாய்... கன்னங்களில் வழிந்த கண்ணீரோடு அவனைத் திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டே அவள் கதவை நோக்கி நடக்க...

“கொஞ்சம் நில்லு...” அவனின் குரல் அதிகாரமாய் ஒலித்தது. அதைக் கேட்டு அவளின் நடை சட்டென்று நின்றது.

“நீ இப்படியே அழுதுட்டு வெளியே போனா... பார்க்கிறவன் என்னைத் தான் தப்பா நினைப்பான். ஒழுங்கா கண்ணைத் துடைச்சிட்டு சிரிச்சபடி வெளியில் போ...” அவளின் அழுகை கண்டும் அவன் இரக்கமில்லாமல் கூற...

அவன் சொன்னதைச் செயல்படுத்துவதற்காய் மயூரி தன் இரு புறங்கையால் கன்னங்களில் வழிந்த கண்ணீரை துடைக்க... அதுவோ நிற்காமல் வழிந்து கொண்டே இருந்தது. 'ச்ச்சு...' என்று சலித்தபடி கண்ணீரை துடைத்தவள், முயன்று சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "இப்ப ஓகேவா சார்...?" அவனிடம் அவள் கேட்கும் போதே அவள் கண்களில் மீண்டும் கண்ணீர் வழிய... அதையும் துடைத்துக் கொண்டே அவனைப் பார்த்து வெள்ளேந்தியாய் சிரித்தாள் அவள்.

சிறுபிள்ளைத்தனமான அவளின் செய்கை அவனின் கல் மனதையும் கரைத்தது. அவளின் கள்ளங்கபடமற்ற சிரிப்பு அவனின் மனதை ஏதோ செய்தது. அது என்னவென்று தான் அவனுக்குப் புரியவில்லை? குமரி ஒன்று குழந்தையாய் உருமாறி நின்ற அதிசயத்தைக் கண்ணிமைக்காமல் பார்த்தான் அவன்.

“அப்புறம் என்னாச்சு மயூ?” மஞ்சரி தலையணையை மடியில் போட்டுக் கொண்டு ஆவலாய் கதை கேட்டாள்.

“அப்புறம் என்ன... இன்னைக்கு ஒருநாள் உனக்குப் பெர்மிசன் கொடுக்கிறேன். இனிமேல் இது போல் நடந்துக்கக் கூடாதுன்னு சொன்னார். நானும் சரின்னு தலையை ஆட்டிட்டு ஓடி வந்துட்டேன்” மயூரி படுத்துக் கொண்டே தங்கையிடம் கூறினாள்.

“ஆனாலும் மயூ... நீ அவர் முன்னால் அழுதது சரியில்லை. இப்படி எதுக்கு எடுத்தாலும் பயந்தாங்கொள்ளியா நீ இருக்கக் கூடாது. அவர் உன்னைப் பத்தி என்ன நினைச்சியிருப்பார்? சரியான அசட்டு பொண்ணுன்னு நினைச்சிருப்பார்... பொண்ணுன்னா கம்பீரமா... தைரியமா... தலையை நிமிர்ந்து... பாரதி கண்ட புதுமை பெண்ணாய் இருக்க வேண்டாமா? என்ன மயூ இது?” சலித்துக் கொண்டாள் மஞ்சரி. அவளுக்கு மயூரியின் இந்தக் கோழைத்தனம் பிடிக்கவே இல்லை.

“நான் என்னடி செய்யட்டும்? யாராவது கொஞ்சம் கோபமா பேசினாலோ இல்லை கேலி பேசினாலோ எனக்கு அழுகை தான் முதல்ல வருது” பாவமாய்ச் சொன்ன அக்காவை பார்க்கும் போது அவளுக்கும் பரிதாபமாயிருந்தது.

“நீ ஒண்ணும் செய்ய வேணாம். நாளையிலிருந்து இப்படி எதுக்கு எடுத்தாலும் அழுறதை முதல்ல நீ நிறுத்தணும். அடுத்து யாரை பார்த்தாலும் அவங்க கண் பார்த்துத் தைரியமா பேசணும்... என்ன நான் சொன்னது புரிஞ்சதா?” தங்கை சொன்னது புரிந்தது என்பது போல் அவளின் தலை தானாக ஆடியது.

“ம்... குட்... நாளையிலிருந்து நான் புது மயூவை பார்க்கணும்” என்ற மஞ்சு... மயூரிக்கு இரவு வணக்கம் கூறிவிட்டு படுத்துவிட்டாள்.

மயூரிக்கு தான் படுத்தாலும் தூக்கம் வரவில்லை. அவளின் மனம் முழுவதும் ஆரனின் கடுமையான முகமே ஆக்கிரமித்திருந்தது. அவனின் கண் பார்த்துத் தைரியமாக அவளால் பேச முடியுமா? நினைக்கும் போதே அவளுக்குப் பக்கென்றிருந்தது. தொண்டைகுழியில் பயப்பந்து ஒன்று அவஸ்தையாய் உருண்டு அவளுக்கு மூச்சு முட்டியது.

‘என்னிடம் நேருக்கு நேர் நின்று பேசுமளவுக்கு உனக்குத் தைரியம் இருக்கிறதா? எங்கே இப்போது பேசு பார்க்கலாம்?’ என்று கேட்டுக் கொண்டே ஆரனின் ஆறடி உயரம் அறுபதடியாய் உயர்ந்து அவள் கண் முன்னே நிற்பது போல் தோன்ற அவள் பயத்துடன் தன் முகத்தைத் தலையணையில் புதைத்து கொண்டாள்.

அதேசமயம் ஆரனும் அவளைத் தான் நினைத்துக் கொண்டிருந்தான். அவளின் கள்ளங்கபடமற்ற முகம், குழந்தைத்தனமான செயல் எல்லாம் அவன் மனதை அப்படியே புரட்டி போட்டது. அவனுக்குப் பெண்களிடத்தில் அவ்வளவு பெரிதாக மதிப்பு இருந்தில்லை. ஏனென்றால் பெண்கள் விசயத்தில் வாழ்க்கை அவனுக்கு மிகப்பெரிய பாடத்தைக் கற்றுக் கொடுத்திருக்கின்றது.

பெண் என்னும் பேய் அவனுக்குக் கொடுத்த மரண அடியை அவனால் அவன் ஆயுள் உள்ளவரை மறக்க முடியாது. அது அவனின் வாழ்க்கை பாதையை அடியோடு மாற்றியதை இப்போது நினைக்கும் போதும் அவனுக்கு ஆத்திரம் தான் வரும். அதனாலேயே அவனுக்குப் பெண்களிடத்தில் வெறுப்பு வளர்ந்தது. பார்க்கும் பெண்களிடம் எல்லாம் பகைமை பாராட்டினான்.

பெண்களைக் கண்டாலே வேப்பங்காயாய் கசந்தவனுக்கு ஏனோ இந்தப் பெண்ணைப் பார்க்கும் போது அப்படிக் கசக்கவில்லை. அவன் சந்தித்த பெண்களில் இவள் வேறு ரகம் என்பதை அவன் உள்மனம் கூவியது. தானும் ஒரு பெண்ணை நினைத்துக் கொண்டு இப்படி அர்த்த ராத்திரியில் விழித்திருப்போம் என்று அவன் கனவிலும்

நினைத்ததில்லை. அவளை ஏன்? எதற்காக? நினைத்துக் கொண்டிருக்கிறோம் என்று அவனுக்குப் புரியவும் இல்லை.

அடுத்தடுத்து வந்த நாட்கள் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நகர... மயூரிக்கு வேலை கொஞ்சம் கொஞ்சமாய்ப் பிடிபட ஆரம்பித்தது. ஆரனுக்குக் கூட அவளின் திறமை கண்டு அவளிடத்தில் சிறிது மதிப்பு வந்தது. அவளின் வேலையை எந்தளவுக்கு ஒழுங்காகச் செய்தாளோ அந்தளவுக்கு அவளின் தனிப்பட்ட ஒழுக்கமும் அவனைக் கவர்ந்தது. அது மற்ற பெண்களிடமிருந்து அவளைத் தனித்துக் காட்டியதால் என்னவோ அவனின் பார்வை அவள் மேல் விழுந்தது. நேர்த்தியாக அவள் உடை அணிந்து வந்த பாங்கு, எந்த ஆணிடத்திலும் அளவோடு அவள் பேசியது, பழகியது எல்லாம் அவனுக்குப் பிடித்திருந்தது.

“மயூ... உனக்குப் பிடித்த பீட்ரூட் கட்லெட்டும், ப்ளூபெர்ரி கேக்கும் வாங்கி வச்சிருக்கேன் நீ முதல்ல வா...” சுனிதா அலைப்பேசியில் அழைக்க...

“சுனிதா... ஒரு சின்ன வேலை முடிச்சிட்டு வந்திடறேன்...” அவள் சொல்லும் போதே...

“நம்ம டீம் லீடரே இங்கே வந்து மொக்கிட்டு இருக்கான். நீ என்ன அப்படிப் பெருசா வெட்டி முறிச்சிட்டு இருக்க... நீ இப்போ வரலைன்னா உனக்கு வாங்கினதை நான் சாப்பிட்டிருவேன்” சுனிதா மிரட்ட... மயூரி அவள் சொன்ன முன் பாதியை கவனிக்காமல்... பின் பாதியை கவனித்தவளாய்,

“அப்படி எல்லாம் செய்திடாதே... எனக்கு ரொம்பப் பசிக்குது... டூ மினிட்ஸ்ல வந்திடறேன்” என்றவள் சொன்ன மாதிரி அடுத்த இரண்டு நிமிடங்களில் அங்கே வந்து சேர்ந்தாள்.

“சுனிதா... எங்கே என் ப்ளூபெர்ரி கேக்...” என்றவள் சுனிதா முன்னிருந்த கேக்கை எடுத்துக் கொண்டு அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்து அதைச் சாப்பிட ஆரம்பித்தாள்.

முதலில் ஸ்பூனில் சாப்பிட்டவள்... “ச்ச்சு... இதை வைத்து சாப்பிட்டால் கொஞ்சமா தான் சாப்பிட முடியும்? அதெல்லாம் எனக்குப் பத்தாது சுனிதா” என்றவள் ஸ்பூனை தூக்கி போட்டுவிட்டு கையால் சாப்பிட்டவள்... சாப்பிட்டு முடிந்தும் தன் விரலில் இருந்த மீதத்தை நக்கி கொண்டே,

“சுனிதா...” என்று ஏதோ பேசுவதற்காக நிமிர்ந்தவள் அப்போது தான் கவனித்தாள் ஆரனும், வருணும் அங்கு அமர்ந்திருப்பதை. கையை வாயில் வைத்தபடி அப்படியே விழியகல எழுந்து நின்றாள்.

“சார்... நா... வந்து...” அவளின் வார்த்தைகள் தந்தியடித்தன.

“ஹப்பாடி... இப்பவாவது நாங்க இருக்கோம்ன்னு உனக்குத் தெரிஞ்சதே... விட்டா... உனக்கு இருக்கிற பசியில எங்களையும் முழுங்கி ஏப்பம் விட்டுருவியோன்னு பயந்து போயிட்டேன்” வருண் போலியான பயத்துடன் அவளைக் கிண்டலடிக்க... ஆரன் எதுவும் பேசாமல் அவளையே பார்த்திருந்தான். அவளோ அவன் என்ன சொல்வானோ என்ற பயத்தில் நின்று கொண்டிருந்தாள்.

“மயூ நீ உட்காரு...” அவளின் துப்பட்டாவை இழுத்துச் சுனிதா சொல்ல... அவளோ அமராமல் ஆரனையே பார்த்திருந்தாள்.

“அவன் ஒண்ணும் சொல்ல மாட்டான்... நீ உட்காரு...” சுனிதா மீண்டும் சொல்ல... அவள் அவன் முகத்தைப் பார்த்தாள். இதற்கு மேல் சும்மா இருந்தால் நன்றாக இருக்காது என்பதை உணர்ந்த ஆரன்,

‘உட்கார்...’ என்று சைகையில் சொல்ல... அவள் படக்கென்று அமர்ந்தாள். இன்னமும் அவள் சாப்பிடாமல் இருப்பதைக் கண்டு... அவள் முன் இருந்த கட்லெட்டை அவன் தன் கண்ணால் சுட்டி காண்பிக்க... அடுத்தக் கணம் அவன் சொன்னதைச் செய்து முடித்துவிட்டு நல்ல பிள்ளையாய் அவனைப் பார்த்தாள். அவளின் செய்கையில் அவன் இதழோரம் சிரிப்பில் துடித்தது. முயன்று தன்னை அடக்கி கொண்டான்.

“என்ன தோஸ்த் நடக்குது இங்கே? நீங்க சொன்னதுக்கு மறுபேச்சு பேசாம அப்படியே நீங்க சொன்னதை மயூ கேட்கிறா? நீங்களும் கண்ணாலே அவளுக்கு உத்தரவு போடுறீங்க? எனக்கு இப்பவே என்னன்னு தெரிஞ்சாகணும்?” வருண் ஆரனின் காதை கடிக்க...

“ஒண்ணும் நடக்கல... வேலையைப் பாருடா...” ஆரனின் வாய் சொன்னாலும்... அவனின் கண்ணசைவை கண்டு அவள் செயல்பட்டது ஏனோ அவனுக்குப் பிடித்துத் தான் இருந்தது. பெண்களையே பிடிக்காதவன் இந்தப் பெண்ணின் அறியாமையில் கொஞ்சம் கொஞ்சமாய்த் தன்னையும் அறியாமல் வீழ்ந்து கொண்டிருந்தான்.

“கண்டுப்பிடிக்கிறேன் தோஸ்த்... கண்டுப்பிடிக்கிறேன்...” கையை நம்பியார் போல் பிசைந்து கொண்டு அவன் சொல்ல... அதில் மயூரி பயந்து போனவளாய்,

“சுனிதா... நான் வர்றேன்...” ஏதோ பேயை கண்டது போல் அவள் ஓடியதை கண்டு புரியாமல் விழித்தான் வருண். சுனிதாவுக்கும் ஒன்றும் புரியவில்லை. ஆரனுக்கு அவளின் செய்கையின் அர்த்தம் புரிந்து மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

அன்று இரவு வேலை முடிந்து வருண் முன்னதாகச் சென்று விட ஆரன் அப்போது தான் வீட்டிற்குக் கிளம்ப எண்ணி வெளியில் வந்தவன் அங்கு வாசலில் தனியே நின்று கொண்டிருந்த மயூரியை கண்டான். தோளில் கிடந்த கைப்பையை இறுக பிடித்துக் கொண்டு வாயிலில் கண்பதித்து அவள் நின்றிருந்த விதம் அவனைக் கவர்ந்தது. அவளிடம் சென்று என்னவென்று கேட்கலாமா? என்று அவன் மனதுக்குள் யோசித்துக் கொண்டே அவளைப் பார்த்தான். அவள் முகத்திலிருந்த பயம்... உடலில் தென்பட்ட நடுக்கம் எல்லாம் அவன் கண்ணில் பட... தன் யோசனையைக் கைவிட்டு அவள் அருகில் சென்றான்.

“மயூரி...” அவன் அவளை மென்மையாகத் தான் அழைத்தான். அவளோ பதறி போய்த் திரும்பி பார்த்தாள். அவளின் பதற்றத்தை கண்டு,

“ரிலாக்ஸ்... நான் தான்...” ஆரன் சொல்லவும்... அவள் கண்களில் இன்னமும் அதிகமாய்ப் பயம் தெரிந்தது. முதன்முறையாய் ஒரு பெண் தன்னைக் கண்டு பயம் கொள்வதைக் கண்டு அவனுக்கு உள்ளம் வலித்தது. அவளின் மருண்ட பார்வையில் அவன் மனம் துடித்துப் போனது.

“என்னைப் பார்த்தா அவ்வளவு பயமாவா இருக்கு?” கண்ணைச் சுருக்கியபடி அவளை ஆழ்ந்து பார்த்துக் கொண்டு அவன் கேட்க... அவனின் விழி வீச்சு தாங்க முடியாமல் அவளின் பார்வை தாழ்ந்தது. அதைக் கண்டு அவன் முகம் மென்மையுற்றது. பேச்சை மாற்ற விரும்பியவனாய்,

“இங்கே என்ன நின்னுட்டு இருக்க? வீட்டுக்கு போகலையா?”

“அப்பா வர்றேன்னு சொல்லியிருக்கார்...” மெல்லியதாய் அவள் முணுமுணுக்க... அவன் ஆச்சிரியமாய் அவளைப் பார்த்தான்.

“என்னது அப்பா வர்றாரா? ஏன் நீ தனியே வண்டியில் போக வேண்டியது தானே? இல்லை நம்ம கேப்ஸ்சில் போக வேண்டியது தானே?”

“நியூஸ் பேப்பரில் வரும் நியூசை பார்த்துமா என்னைக் கேப்சில் போகச் சொல்றீங்க?” சொல்லும் போதே அவள் குரல் நடுங்கியது. அவள் சொல்ல வருவதன் அர்த்தம் அவனுக்கும் புரிய மௌனம் காத்தான்.

“சரி... நீ வண்டி ஓட்டுவதற்கு என்ன?” அவன் விடாமல் கேட்க...

“எனக்கு...” அவள் நிறுத்த... அவன் கேள்வியாய் அவளை நோக்கினான்.

“எனக்கு வண்டி ஓட்டுறதுன்னா பயம்?” சொல்லிவிட்டு வெட்கத்தில் சிவந்த முகத்தை அவனுக்குக் கட்டாமல் தலையைக் குனிந்து கொண்டாள். அவளின் பயம் கண்டு

அவனுக்குக் கோபம் வரவில்லை. மாறாக இந்தக் காலத்தில் இப்படியொரு பெண்ணா என்று மனதுக்குள் வியந்தான்.

“ஏன் பயம்?” அவனின் கேள்விக்கு அவளுக்குப் பதில் தெரியவில்லை.

‘எனக்கு எதைக் கண்டாலும் பயம்... இவ்வளவு ஏன்... இதோ இந்த ராத்திரி வேளையில் உன்னிடம் பேசி கொண்டிருக்கவும் எனக்குப் பயமாகத் தான் இருக்கிறது. ஆனால் நீ போகாமல் வம்பிழுத்து கொண்டிருக்கிறாயே? எனக்கு மேலதிகாரியான உன்னை நான் பகைத்துக் கொள்ள முடியுமா? அதானால் தான் உள்ளூர பயந்தாலும் உன்னிடம் பேசி கொண்டிருக்கிறேன்’ மனதில் நினைத்தாலும் அவள் ஒன்றும் சொல்லவில்லை.

ஏனோ அவனுக்கு அவளின் பயத்தைக் களைந்து ‘உனக்கு நானிருக்கிறேன்’ என்று சொல்ல வேண்டும் போல் தோன்றியது. ‘இது என்ன அபத்தமான எண்ணம்?’ தலையைக் குலுக்கி தன்னைச் சரி செய்து கொண்டான்.

“சரி... நான் வருகிறேன்...” என்றவன் தன் மோட்டார் சைக்கிளை எடுத்து வர சென்றான். அவன் சென்றதும் நிம்மதி பெருமூச்சு விட்டவள் வாயிலில் கண் பதித்தாள்.

ஆரன் தன் வாகனத்தை எடுத்துக் கொண்டு வரும் போதும் அவள் அங்கேயே நிற்பதை கண்டவன் அவள் அருகில் வந்து பைக்கை நிப்பாட்டினான்.

“இன்னும் உன் அப்பா வரலையா?”

“இல்ல?”

“ஃபோன் பண்ணி பார்த்தியா?”

“ம்... வர கொஞ்சம் நேரமாகும் சொன்னாங்க”

“ஓ...” என்றவன் ஒன்றும் பேசவில்லை. அவளை அப்படியே தனித்து விட்டு செல்லவும் அவனுக்கு மனம் வரவில்லை. அவளுக்குச் சற்று தள்ளி பைக்கை நிறுத்திவிட்டு,

அவளைப் பார்த்தபடி நின்றிருந்தான். தனக்காகத் தான் அவன் நிற்கிறான் என்று அவளுக்குப் புரிந்தாலும் அவனிடத்தில் போய்ப் பேச தைரியம் வரவில்லை.

அப்போது அந்தப் பக்கம் வந்த இருவர் ஏதோ அவளைப் பார்த்து அசிங்கமாய்ப் பேச... அவளுக்குக் கண்ணீர் முட்டி கொண்டு வந்தது. சற்று தள்ளி நின்று கொண்டிருந்த ஆரனுக்கு அவர்கள் பேசியது கேட்கவில்லை என்றாலும் ஏதோ வம்பிழுக்கிறார்கள் என்று மட்டும் புரிந்தது. அவள் அருகில் அவன் வேகமாய் வர, அவனைப் பார்த்ததும் அவர்கள் அவசரமாய் அங்கிருந்து நகர்ந்தனர்.

“என்ன சொன்னாங்க...?” அவன் கோபமாய்க் கேட்க...

“என்ன தனியா நிக்கிற...? உன்... உன்...” அவள் குரல் அழுகையில் உடைய,

“உன்...?” புருவங்களை நெரித்தபடி அவன் கேட்க,

“ரேட் என்னன்னு...?” மேலே சொல்ல முடியாமல் அவள் தேம்ப... அவனுக்கு அந்தப் பொறுக்கிகள் மேல் ஆத்திரமாய் வந்தது. அதுவும் படித்த ஐடி கம்பெனியில் வேலை செய்யும் அவர்களின் வாயிலிருந்து இந்த மாதிரி தரங்கெட்ட வார்த்தைகள் வந்ததை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

அவனுக்கும் பெண்களிடத்தில் பெரியதாய் மதிப்பில்லை என்றாலும் அவர்களிடத்தில் இது போல் அசிங்கமாய்ப் பேசியதில்லை. அவர்களை உயிரற்ற பொருளாய் பாவித்துக் கொண்டு சென்று விடுவான். அப்படிப்பட்ட அவனுக்குமே இது சற்று அதிர்ச்சியாகத் தான் இருந்தது. அதிலும் மயூரியை போன்ற மென்மையான பெண்ணைப் பார்த்து அவர்கள் அவ்வாறு பேசியதை அவனால் தாங்க முடியவில்லை. இருந்தாலும் அதை அவளிடம் காட்டி கொள்ளாமல்,

“அதையெல்லாம் நீ மைன்ட் பண்ணிக்காதே...” என்று அவளை ஆறுதல் படுத்தியவன் மேலே என்ன பேசுவது

என்று தெரியாமல் நின்றிருந்தான். அவள் மேலும் அழுது கொண்டே இருக்க...

“ப்ளீஸ் அழாதே...” அவள் கையைப் பிடித்து ஆதரவாய் சொல்ல... அவளோ அவனின் கையை இறுக பற்றிக் கொண்டாள். அவள் கை நடுங்குவதில் இருந்து அவளின் பயம் அவனுக்குப் புரிய... மற்றொரு கையால் அவளின் கையைத் தட்டி கொடுத்தான். அது அவளுக்கும் இதத்தைத் தந்தோ என்னமோ தன் கையை அவனுக்குக் கொடுத்தபடி அப்படியே நின்றிருந்தாள்.

அதற்குள் அவள் தந்தை வந்துவிட... “பை... குட்நைட்...” என்று அவன் விடை கொடுக்க... அவள் அவசரமாய் நகரும் போது தான் உணர்ந்தாள் தன் கை அவனின் கை பிடிக்குள் இருப்பதை. தன் கையை வேகமாய் ஊடுருவியவள், “பை....” அவன் முகம் பார்க்காமல் தெளிவில்லாமல் முணுமுணுத்துக் கொண்டு செல்ல...

அவள் போவதை பார்த்திருந்தவன் மனம் தெளிவாயிருந்தது. அவளைக் கண்டதும் தன் மனதில் நிகழும் மாற்றத்திற்கான விடையை இன்று அவன் கண்டு கொண்டான். அதை உணர்ந்ததும் அவன் மனம் லேசாக... உற்சாகமாக ஏதோ ஒரு பாடலை ஹம் செய்தபடி தன் பைக்கை உதைத்தான்.

வீட்டிற்கு வந்தவன் வருண் வாங்கி வைத்திருந்த உணவை உண்டு விட்டு தன்னறைக்குச் சென்றான். குளித்துவிட்டுப் படுக்கையில் விழுந்தவன் மனம் முழுவதும் மயூரியின் முகமே ஆக்கிரமித்திருந்தது. அவளின் பூ போன்ற கையின் ஸ்பரிசத்தை அவனின் கை இன்னமும் உணர்ந்தது. தன் கையை எடுத்து பார்த்தவன் கண்ணில் அவளின் முகமே தெரிய... தன் மனநிலையை எண்ணி தனக்குள் சிரித்துக் கொண்டான்.

தன் வாழ்வில் பெண்ணுக்கே இடமில்லை என்று அவர்களை ஒதுக்கி வைத்திருந்தவன் இன்று ஒரு பெண் தன் மனதை கவர்ந்திருக்கிறாள் என்றால் அவனாலேயே அவனை நம்ப முடியவில்லை. இரும்பாய் இறுகியிருந்த

தன் மனதை காந்தம் போல் அவள் ஈர்ப்பதை உணர்ந்தவனுக்கு ஏனோ அந்த நினைவே சுகமாய் இருந்தது. அவள் தனக்கு வேண்டும் தனக்கு மட்டுமே சொந்தமாக வேண்டும் என்று அவன் மனம் தீவிரமாய் எண்ணியது.

கண்களை மூடியவன் மனக்கண்ணில் அவளின் பயந்த பிம்பமே எழ... ஒரு முடிவுடன் எழுந்தவன் தன் மடிக்கணினியை உயிர்ப்பித்துத் தன் டீம்மில் உள்ளவர்களின் பயோடேட்டாவை அடங்கிய போல்டரை திறந்தவன்... அதிலிருந்து மயூரியின் பயோடேட்டாவை தனியே எடுத்தான். அதிலிருந்த அவளின் அலைப்பேசி எண்ணை தன் அலைப்பேசியில் பதிவு செய்துவிட்டு அவளுக்கு அழைத்தான்.

அப்போது தான் தூக்கம் கண்களைச் சுழட்ட கண்களை மூடிய மயூரி அலைப்பேசி சத்தத்தில் அதை எடுத்து பார்த்தாள். யார் இந்த நேரத்தில் அழைக்கிறார்கள் என்று பார்த்தால் அது தெரியாத எண்ணாக இருக்கப் பயந்து போய் எடுக்கவில்லை. அலைப்பேசி நின்று மீண்டும் அடிக்க... மெதுவே அதை உயிர்ப்பித்துக் காதில் வைக்க...

“மயூரி... ஆரன் பேசறேன்” ஆரனின் குரல் கேட்டதும் அவளின் தூக்கம் சொல்லாமல் கொள்ளாமல் விடை பெற்று போக எழுந்தமர்ந்தாள். பக்கத்துக் கட்டிலில் படுத்திருக்கும் தங்கை முழித்திருக்கிறாளா? என்று பார்க்க... மஞ்சரியோ ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க... அதைக் கண்டு நிம்மதியடைந்தாள்.

“சொல்லுங்க சார்?” தான் செய்த வேலையில் தவறு ஏதும் இருக்குமோ? தன்னைத் திட்ட தான் அழைத்திருக்கிறானோ என்று எண்ணும் போதே... கொஞ்ச நேரம் முன்பு அந்நியனான அவனின் கைக்குள் தன் கையை வைத்துக் கொண்டு அந்த உணர்வு சிறிதும் இல்லாமல் தான் நின்றது அப்பொழுது அவளுக்கு நியாபகம் வந்தது. ஒருவேளை தன்னைத் தவறாக நினைத்துக் கொண்டு

அழைத்திருப்பானோ என்று எண்ணியவளுக்குப் பயத்தில் அந்த ஏசி அறையிலும் அவளுக்கு வியர்த்து வழிந்தது.

“இந்தச் சார் வேணாமே... என்னைப் பேர் சொல்லி கூப்பிடேன்”, அவள் அஞ்சியது போல் அவன் பேசியது கண்டு அவளின் பயம் உறுதி செய்யப்பட்டது.

“என்ன பேச்சை காணோம்? என் பேரை சொல்லறது அவ்வளவு கஷ்டமாவா இருக்கு?”, ‘இதைச் சொல்ல தான் அர்த்த ராத்திரியில் அழைத்தாரோ?’ அவள் அலைப்பேசியைச் சந்தேகமாய்ப் பார்த்தாள்.

“அப்படியெல்லாம் இல்லை சார்... சாரி... சாரி... ஆ... ஆரன்” அவள் திக்கி திணற... அவளின் திணறல் கூட அவனுக்கு இனிமையாய் இருந்தது.

“தட்ஸ் குட்...” என்றவன்... “உன் கிட்ட ஸ்கூட்டி இருக்கா?”

‘இவர் எதுக்கு இதைக் கேக்கிறார்?’ என்று அவள் யோசித்தாலும், “ம்...” என்றது அவளின் உதடுகள்.

“ஓ... இருக்கா? இல்லைன்னா நான் வாங்கிக் கொடுக்கலாம்ன்னு நினைச்சேன்” அவனின் பதிலில் அவள் தலையைப் பிய்த்துக் கொள்ளாத குறையாகக் குழம்பி போனாள்.

“நாளையிலிருந்து நீ ஸ்கூட்டி ஓட்டி பழகுற... இல்ல நான் உனக்குக் கத்து தர்றேன். இனிமேல் நீ வேலைக்கு உன் வண்டியில் தான் வரணும். என்ன நான் சொல்றது புரிஞ்சதா?” அவன் அதிகாரமாய்ச் சொல்ல... அவனின் பேச்சை மறுக்க இயலாதவளாய் அவள் தலையை ஆட்டினாள்.

“என்ன பதிலை காணோம்?” மீண்டும் அவன் குரல் அதிகாரமாய் ஒலிக்க...

“நான் தலையை ஆட்டினேன்... நீங்க தான் கவனிக்கல?” என்றவள் நாக்கை கடித்துக் கொண்டாள். அவளின் பதிலில் வாய் விட்டு சிரித்தவன்...

“ஓகே ஓகே இனிமேல் நாம வீடியோ சாட்டிங்கில் பேசிக்கலாம். அப்போ நீ தலையாட்டுறது எனக்கு நல்லா தெரியும்” என்றவன், “குட்நைட்...” என்றபடி அழைப்பை துண்டிக்க... அவளோ அலைப்பேசியை அதிசயமாய்ப் பார்த்தாள். அவனுக்குக் காத்து, கருப்பு ஏதும் அடிச்சிருக்குமோ என்ற சந்தேகம் வேறு அவள் மனதில் ஓடியது. அவனைப் பிடித்திருப்பது காத்து, கருப்பு இல்லை அழகான மோகினி என்பதை அவளுக்கு அவன் எப்போது உணர்த்த போகிறான்?

நேற்றிரவு ஆரன் பேசியதை கேட்டு குழம்பி போயிருந்த மயூரிக்கு இன்று அதிகாலையில் அவனின் அழைப்பு வந்ததும் அவளுக்குக் கையும் ஓடவில்லை... காலும் ஓடவில்லை. அவனின் அழைப்பை எடுப்பதா? வேண்டாமா? என்று அவள் மனதுக்குள் நடந்த பட்டிமன்றம் ஒரு முடிவுக்கு வரும் முன் அவளின் அலைப்பேசி பலமுறை சிணுங்கிவிட்டது. வேறுவழியின்றி அவனின் அழைப்பை ஏற்று அலைப்பேசியைக் காதில் வைக்க,

“குட்மார்னிங் பேபி...” அவனின் குரல் குழைந்து கொண்டு ஒலிக்க... அவளோ அவனின் ‘பேபி’ என்றழைப்பில் திகைத்து போனாள்.

“பதிலுக்குக் குட்மார்னிங் சொல்ல மாட்டியா?” அவன் குரலிலிருந்த ஏதோ ஒன்று அவளைக் காலை வணக்கம் சொல்ல வைத்தது.

“குட்மார்னிங் சார்...”

“என்னது சாரா?” அவன் காரமாய் மிரட்ட, ‘ஹையோ ஆரன்னு பேர் சொல்லி கூப்பிடல்ல சொல்லியிருந்தாங்க... இப்படியா தூங்கி எந்திரிச்சதும் எல்லாம் மறந்து போறது... மட்டி... மட்டி...’ தன்னைத்தானே கடிந்து கொண்டவள்,

“குட்மார்னிங் ஆரன்...”

“இது நல்ல பிள்ளைக்கு அழகு...” அவளின் வார்த்தையில் மகிழ்ச்சியடைந்தவன்...

“இன்னைக்கு ஆபிஸ் வந்ததும் நீ செய்ற முதல் வேலை... என்னை வந்து பார்க்கிறது தான்...” அவனின் கட்டளையில் அவள் மௌனம் காக்க...

“என்ன புரிஞ்சதா?” அவன் அதட்ட... அவள் பயந்து போனவளாய்...

“ம்... சரி...” அதற்கு மேல் அவனுக்குப் பேச வாய்ப்புத் தராமல் அலைப்பேசியை அவள் துண்டித்தாள். மறுபடியும் அவன் அழைப்பானோ என்று அவள் சுமார் பத்து நிமிடங்கள் அலைப்பேசியைப் பார்த்துக் கொண்டிருக்க... நல்லவேளையாய் அவன் அவளை அழைக்கவில்லை.

“என்ன மயூ... இன்னைக்கு டான்ஸ் ப்ராக்டிஸ் பண்ணலையா?” வழக்கம் போல் நடைப்பயிற்சி முடித்துவிட்டு வந்த ராகவன் மகளைப் பார்த்து கேட்க...

“நேத்து லேட்டா வந்தது கொஞ்சம் டையர்டா இருக்குப்பா”

“மயூ... உனக்குப் பிடிக்கலைன்னா வேலைக்குப் போக வேண்டாம்டா. ஓவரா ஸ்ட்ரைன் பண்ணிக்காதே...” மகளின் அருகில் அமர்ந்து அவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டு அவர் கூற...

“இல்லப்பா... தினம் புதுவிதமான மனிதர்களைச் சந்திக்கிறது எனக்குப் பிடிச்சி தான்ப்பா இருக்கு” அவள் சிரிப்புடன் கூற... அதன் பின்னரே அவர் முகம் தெளிந்தது.

“சரிம்மா... நீ கிளம்பு... உன்னை ஆபிசில் கொண்டு விட்டுட்டு நான் வேலைக்குப் போறேன்”

“சரிப்பா...” என்றவள் அலுவலகத்துக்குக் கிளம்ப ஆயத்தமானாள்.

தந்தையிடம் விடைபெற்று அலுவலகத்திற்குள் நுழையும் போதே மயூரியின் மனம் படபடவென அடித்துக் கொண்டது. ‘அவர் வந்து பார்க்க சொன்னாரே... பார்க்க போகாவிட்டால் கோபித்துக் கொள்வாரோ? எதற்குக் கூப்பிட்டு இருப்பார்? நேற்றிலிருந்து அவரின் பேச்சே சரியில்லையே. என்ன பேச போகிறாரோ?’ மனதில் பலவித யோசனைகளுடன் அவள் உள்ளே செல்ல... அங்கே ஒரு சிலரே வந்திருந்தனர்.

தன்னால் தந்தைக்கு நேரமாகி விடக் கூடாது என்று அவள் நேரத்தோடு அலுவலகம் கிளம்பி வந்துவிட்டாள். தன்னிடத்தில் போய் அமர்ந்தவள் ஆரன் இன்னமும் வந்திருக்க மாட்டான் என்று எண்ணி கொண்டு தன்

கணினியை உயிர்பித்தாள். அந்நேரம் அவள் அலைப்பேசி அழைக்க எடுத்து பார்த்தாள். ஆரன் தான் அழைத்திருந்தான். சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே அவன் அழைப்பை அவள் எடுக்க...

“உன்னை என்ன சொன்னேன்... நீ என்ன செய்கிறாய்?” கோபமாய் வந்தது அவனின் வார்த்தைகள்.

“நீங்க வந்துட்டிங்களா?”

“ம்... வா...” சுருக்கமாய்ப் பேசிவிட்டு அவன் வைத்துவிட... அவளோ கலக்கமாய் அவனின் அறையின் முன் வந்து நின்றாள்.

அவனின் அனுமதிக்காக அவள் கதவை தட்டும் முன் அவனே கதவை திறந்தான். உதடுகளில் புன்னகை அரும்ப... முகத்தில் குறும்பு குத்தாட அவன் நின்றிருந்த தோற்றம் அவளுக்கு அதிசயமாக இருக்க... அவனை ஆச்சிரியமாய்ப் பார்த்தபடி உள்ளே நுழைந்தாள்.

“வா... வந்து உட்காரு...” அவள் அமருவதற்கு ஏதுவாய் அவன் நாற்காலியை இழுத்து போட்டு... அதில் அவளை அமர வைத்தான். அன்று அவன் அவளை நிற்க வைத்து கடுமையாய் பேசி அனுப்பியது அவளுக்கு நியாபகம் வர அவள் முகம் இருண்டது.

“என்ன பேபி? என்ன யோசனை?”

‘ஒண்ணுமில்லை’ என்பது போல் அவள் தலையசைக்க... அதில் அவள் காதில் அணிந்திருந்த ஜிமிக்கி இடமும் வலமுமாய் ஆடியது கண்டு அவனின் காதல் கொண்ட மனமும் ஒரு நிலையில் இல்லாமல் ஆடியது.

அடர் பச்சை நிற ஷிபான் சேலை அவள் மேனியை தழுவி நிற்க எளிமையான அலங்காரத்தில் அவன் கண்ணுக்கு அவள் தேவதை போல் தெரிந்தாள். அதற்கு மேல் அவனின் காதலை மறைத்து வைக்க அவனால் இயலவில்லை. மேஜையில் சாய்ந்து கொண்டு அவன் அவளைப் பார்த்துக்

கொண்டிருக்க... அவளோ தன் கைவிரல்களை ஆராய்ச்சி பண்ணி கொண்டிருந்தாள்.

“பத்து விரல் தானே இருக்கு... இல்ல எக்ஸ்ட்ரா ஐந்து விரல் ஏதும் இருக்கிறதா?” அவனின் குரலில் திடுக்கிட்டு போய் அவள் நிமிர்ந்து பார்க்க... அவன் முகத்தில் குறும்பு கூத்தாடியது.

“என்னை எதுக்கு வர சொன்னீங்க?” அவள் மெதுவாய் கேட்க...

“நேரே விசயத்துக்கு வாடான்னு சொல்ற?” ஒற்றைப் புருவம் தூக்கி அவன் கேட்டதில் அவள் பதறி தான் போனாள்.

“அய்யோ நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை...” அவள் கண்கள் கலங்கியது. ‘இவர் ஏன் தான் இப்படி அழைத்து வந்து இம்சை பண்ணுகிறாரோ?’ என்று அவள் மனம் தவித்தது.

“ரிலாக்ஸ் பேபி... ஜஸ்ட் பார் பன்...” பற்கள் பளிச்சிட அவன் சிரிக்க... அவனின் சிரிப்பில் அவள் மெய் மறந்து அவனைப் பார்த்தாள். அவன் சிரிக்கும் போது வயது குறைந்து போய் இளமையாக அழகாகத் தெரிவதை கண்டு... அவன் அடிக்கடி இப்படிச் சிரிக்கக் கூடாதா? என்று எண்ணினாள்.

“பேபி... நான் எப்படி இருக்கிறேன்?” அவன் விளம்பர மாடல் போல் பேண்ட் பாக்கெட்டில் கையை விட்டு ஸ்டைலாகப் போஸ் கொடுக்க... அவனின் அழகு கண்டு ஏனோ அவளின் இதயம் தடம் புரண்டது. அவள் தன் தந்தையைத் தவிர அந்நிய ஆண்களுடன் நின்று பேசியதில்லை. இது போல் அவர்களை உற்றுக் கவனித்தது இல்லை.

“ஏன் பதில் பேச மாட்டேங்கிற? நான் நல்லாயில்லையா?” அவன் தவிப்பாய் கேட்டது கண்டு அவள் மனம் தடுமாறியது.

“நீங்க நல்லா தான் இருக்கீங்க” மெதுவாய் அவள் முணுமுணுக்க... அவளின் பதிலில் அவன் கவலை

அகன்றவனாய் நிம்மதியாய் வாய்விட்டுச் சிரித்தான். அதே சிரிப்புடன் அவளின் கையைப் பற்றி,

“பேபி... ஐ லவ் யூ” அவள் முகம் நோக்கி குனிந்தவாறு அவன் சொல்ல... அவன் அருகில் நெருங்கி வந்தது அவளுக்கு அதிர்ச்சி என்றால்... அவன் அவளை நேசிப்பதாய்ச் சொன்னது அவளுக்குப் பேரதிர்ச்சியாய் இருந்தது.

‘பே’ என்று வாயை பிளந்து கொண்டு அவள் அவனைப் பார்க்க... அவனோ அவளின் தாடையில் கை வைத்து அவள் வாயை மூடியவன்,

“எதற்கு இந்த அதிர்ச்சி?” அவன் கனிவாய் அவளைப் பார்த்து கேட்க... அவளோ அச்சத்தில் நடு நடுங்கி போனாள்.

“நான் போகலாமா?” என்றவள் இருக்கையை விட்டு எழ முற்பட, அவள் தோள் பற்றி அவன் அவளை உட்கார வைக்க... அவளோ அவனின் செயலில் முகம் வெளுத்து போனவளாய் அவன் சொன்னதைச் செய்தாள்.

“நான் சொன்னதுக்குப் பதில் சொல்லவில்லையே?” அவன் கேள்வியாய் அவளை நோக்க...

“என்ன சொல்லணும்?” அஞ்சியபடி அவள் கேட்க...

“என்னைக் காதலிக்கிறாயா? இல்லையா? இதற்குப் பதில் சொல்?”

“இல்ல...” அவளின் மறுப்பில் அவனுக்கு ஆத்திரம் வந்தது.

“ஏன் என்னைப் பிடிக்கல? நான் அழகாயில்லையா? படிக்கவில்லையா? கை நிறையச் சம்பளம் வாங்கலையா? எதுக்காக என்னைப் பிடிக்கல?” அவன் கோபமாய்க் கர்ஜிக்க...

“அப்படிச் சொல்லல... எனக்கு இந்தக் காதல் எல்லாம் தெரியாது... எனக்குத் தெரிந்தது எல்லாம் என் குடும்பம் மட்டும் தான். அப்படி என் குடும்பத்துக்குத் தெரியாம நான்

காதலிக்கிறது தப்பில்லையா? ஒரு ஹையர் ஆபிசரா இருந்திட்டு நீங்க இப்படி ஒரு தப்பை செய்யச் சொல்றது தப்பில்லையா?" பட்டாம்பூச்சி போல் கண்ணிமைகளைப் படபடவென இமைத்துக் கொண்டு அவள் கேட்டதில்... அவளின் அறியாமையில் அவன் மனம் மேலும் மேலும் அவள் பால் சாய்ந்தது.

அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்த இயலாமல் அவள் முகத்தைத் தன் ஒற்றை விரலால் நிமிர்த்தியவன், "இது தான்டி... உன்னோட இந்த இன்னொசன்ட் தான்டி எனக்கு ரொம்பப் பிடிச்சது. பொதுவா எனக்குப் பொண்ணுங்களைப் பத்தி நல்ல அபிப்ராயம் கிடையாது. ஆனா என்னைக்கு உன்னைப் பார்த்தேனோ அன்னைக்கு என் மனசை நான் மாத்திக்கிட்டேன். உன்னை மாதிரி ஒரு பொண்ணைக் கை நழுவி விட நான் என்ன பைத்தியக்காரனா? நீ எனக்கு வேணும்... என் மனைவியாய்... என் தாயாய்... என் தோழியாய்... எனக்கு எல்லாமுமாய்... நீ வேணும். அதுக்கு உன் குடும்பம் என்ன... இந்த உலகமே எதிர்த்து வந்தாலும் எனக்குக் கவலையில்லை. உன்னைச் சிறையெடுத்தாவது என்னோடு கூட்டி செல்வேன்" காதலோடு அவன் சொன்னாலும் அதிலிருந்த தீவிரத்தில் அவள் பயந்து போனாள்.

"உங்களுக்குத் தான் பெண்களைக் கண்டாலே பிடிக்காதே. அப்புறம் எப்படிப் பெண்ணான என்னிடம் மட்டும் அன்பா...?" அவள் முடிக்காமல் நிறுத்தினாள். அன்று இகழ்ச்சியும், அலட்சியமும் நிறைந்த அவனின் பார்வை அவள் மனதுக்குள் தோன்றியது.

"நீ தான் பெண்ணே இல்லையே" வெகு சாதாரணமாய்க் கூறியவனை அவள் திகைத்துப் போய்ப் பார்க்க...

"நீ தேவதை பேபி... ஐ லவ் யூ மை ஏஞ்சல்" கண்களில் காதல் வழிய அவன் அவளின் நெற்றியில் மென்மையாய் முத்தமிட... அவனின் முத்தம் தந்த அதிர்ச்சியில் அவள் புலன்கள் செயலற்றுப் போனது. முதன்முறையாய் ஒரு

ஆணின் அருகாமை அவளை ஏதோ செய்தது. அவனிடமிருந்து வந்த கலவையான வாசனை அவளை மூச்சடைக்க வைத்தது. கண்ணிமைக்காமல் தன்னைப் பார்த்தவளை கனிவுடன் பார்த்தவன்,

“என்னிடம் உனக்குப் பிடிக்காதது எதுவும் இருந்தால் சொல்லு... நான் என்னை மாத்திக்கிறேன். ஆனா என்னைப் பிடிக்கலன்னு மட்டும் சொல்லிடாதே. நீ எனக்கு வேணும் பேபி” அவன் காதலோடு பிதற்ற... அவளோ என்ன சொல்வது? என்ன செய்வது? என்று தெரியாமல்,

“நான் போகவா?” மெல்ல எழுந்திரிக்க முயல, அவள் கரம் பற்றித் தூக்கி நிறுத்தியவன், “ம்... போ...” என்றவன், “இன்று முதல் நீ என் காதலி... அதை மறந்துவிடாதே...”

அவள் விட்டால் போதும் என்று அவனின் அறையை விட்டு ஓடிவந்துவிட்டாள். தன் இருக்கைக்கு வந்தமர்ந்தும் அவளின் படபடப்பு தீரவில்லை. அவனின் காதல் தீவிரம் கண்டு அவளுக்குச் சற்று பயமாய் இருந்தது. அவள் சினிமாவில், கதையில் தான் இப்படிப்பட்ட காதலை பார்த்திருக்கிறாள்... படித்திருக்கிறாள். நேரில் அவனின் அவள் மீதான காதலை கண்ட போது அவளுக்கு அச்சமாக இருந்தது.

‘நான் உண்டு... என் வேலை உண்டு என்றிருந்தவளை காதலிக்க வா என்று அழைக்கிறாரே... இவரை என்ன செய்ய? அப்படியே நான் காதலித்தாலும் என் தந்தை அதை ஏற்றுக் கொள்வாரா? ம்ஹூம் மாட்டவே மாட்டார்... என் தந்தையை எதிர்த்து எனக்கு இந்தக் காதல் கத்திரிக்காய் எல்லாம் தேவையா? தேவையே இல்லை... அவர் பாட்டுக்கு உளறிட்டு இருக்கட்டும்... நான் என் முடிவில் மாறப் போவதில்லை’ உறுதியாய் மனதுக்குள் முடிவெடுத்த பின்பு தான் அவளால் நிம்மதியாய் இருக்க முடிந்தது.

அன்று ஏனோ வெகுசீக்கிரம் வேலை முடிந்துவிட மயூரி வீட்டிற்குக் கிளம்ப ஆயத்தமானாள். அவள் கிளம்புவது தெரிந்ததும் ஆரன் அவளை நோக்கி வந்தான். அவன் அருகில் வந்து நிற்கவும் அவள் நிமிர்ந்து பார்க்க...

அவனோ யாருக்கும் தெரியாமல் அவளைப் பார்த்துக் கண்சிமிட்டினான். அவளோ விதிர்த்து போய் அக்கம் பக்கம் பார்க்க... நல்லவேளை யாரும் பார்க்கவில்லை.

அவளை இடிப்பது போல் வந்தவனைக் கண்டு பதறி போய் அவள் விலக... அவனோ சிரித்தபடி அவளைத் தாண்டி சுனிதாவிடம் சென்றான்.

“சுனிதா...” ஆரன் அழைக்கவும்... அதற்காவே காத்திருந்தார் போல் சுனிதா,

“என்ன ஆரன்...?” வெகு ஆர்வமாய் அவள் அவன் முகம் பார்க்க... அதை விட ஆர்வமாய் வருண் தன் தோஸ்தை பார்த்தான். ஆரன் இது போல் பெண்களிடம் பேசுபவன் அல்ல என்பது அவனுக்குத் தெரியும். ஆதலால் கண்களில் சுவாரஸ்யத்துடன் அவன் ஆரனை ஆராய்ந்தான்.

“நீ ஸ்கூட்டியில் தான் வந்திருக்கிறாயா?” அவன் கேள்வி அவளுக்குப் புரியவில்லை என்றாலும் ஆரன் தன்னிடம் வந்து வலிய பேசுவது அவளுக்குப் பெருமையாய் இருந்தது. இத்தனை நாள் கழுவுற மீனில் நழுவுற மீனாய் இருந்தவன் தானாக வந்து பேசியதில் அவள் மகிழ்ச்சியின் உச்சத்துக்கே சென்றுவிட்டாள்.

“எதுக்காகக் கேட்கிறாய் சொல்லு ஆரன்? உன்னோடு நான் பைக்கில் வர வேணுமா? ஸ்கூட்டியை இங்கேயே பூட்டிவிட்டு வருகிறேன்” விட்டால் அவன் மேல் விழுவது போல் பேசியவளை கண்டு மயூரி முகம் சுளித்தாள். அதை ஆரனின் கண்கள் படம் எடுத்துக் கொண்டன. அவளின் முகச் சுளிப்பு அவனுக்குக் களிப்பை தர, அவன் உற்சாகமாய்,

“இன்னைக்கு ஒருநாள் உன் ஸ்கூட்டியை எனக்குத் தர முடியுமா?” அவளோ மகிழ்ந்து போய்,

“உனக்கு இல்லாததா ஆரன்? இந்தா சாவி... நீயே வைத்துக் கொள்” அவனிடம் சாவியைத் தர... ஆரன் அவள் கையில் ஆயிரம் ரூபாயை திணித்து,

“இன்னைக்கும், நாளைக்கும் கால் டாக்சி பிடிக்க வச்சுக்கோ...” இருவரின் நாடகத்தை ஒருத்தி எரிச்சலுடன் பார்த்தாள் என்றால்... ஒருத்தன் யோசனையுடன் பார்த்தான்.

“பேபி... வா போகலாம்...” மயூரின் கையைப் பிடித்து ஆரன் இழுக்க,

“நான் வரல...” திடீரென்று அவன் கையைப் பற்றி இழுத்ததும் அவள் பயந்து போனவளாய் அவனுடன் வர மறுத்து அவன் கையை உதறினாள்.

அதில் கோபமடைந்தவன், “வீணாய் சீன் கிரியேட் பண்ணாமல் கிளம்பு...” அவளை உரிமையாய் அதட்டியபடி மீண்டும் அவளின் கையைப் பிடித்துக் கொண்டு அவன் நடக்க... அவனின் செயலில் அவள் மனம் முரண்டினாலும் அவனை எதிர்த்து பேச அஞ்சி மனமே இல்லாமல் அவனோடு சென்றாள்.

வேறொரு பெண்ணாய் இருந்திருந்தால்... ‘நீ யாரடா என் கையைப் பிடிப்பதற்கு?’ என்று அவன் கன்னத்தில் அறைந்திருப்பாள். ஆனால் மயூரிக்கு அவ்வாறு யாரையும் எதிர்த்து பேசி பழக்கமில்லை. அந்தளவுக்கு மன தைரியமும் அவளிடத்தில் இல்லை.

ஆரன் மயூரியின் கைப்பிடித்து இழுத்து செல்வதைக் கண்ட வருண்... கண்கள் இரண்டும் வெளியில் தெறித்துவிடுவது போல் அதிசயமாய்ப் பார்த்தான். கடைசியில் பூனை குட்டி வெளியில் வந்துவிட்டது. ஆரனுக்கு மயூரி மிகவும் பொருத்தமானவள் என்று அவன் உள்மனம் கூறியது. ஆரனின் அதிரடி சுபாவத்துக்கு... மயூரியின் மென்மையான சுபாவம் அழகாய் பொருந்தும் என்று மனதுக்குள் நினைத்தவன் இருவரையும் வாழ்த்தினான்.

“உன் தோஸ்தை பார் வருண்... என்னை இப்படிக் கழட்டி விட்டுட்டாரே...” வருணிடம் சுனிதா புகார் தெரிவிக்க...

“அவர் போனால் போகட்டும்... உனக்கு நான் இருக்கேன் செல்லம்...” அவன் இது தான் சாக்கு என்று மையலாய் கூற...

“போடா லூசு... நீ ஒண்ணும் எனக்கு வேணாம்...” கையிலிருந்த பைலால் அவன் தலையில் தட்ட...

“பிட்சாவே தான் வேணுமா? இந்தப் பர்கர்... பிரெஞ்ச் பிரைஸ் எல்லாம் வேணாமா?” கேலியாய் கேட்க...

“வேணாம் போடா...” பழிப்பு காட்டியவள் வீட்டிற்குக் கிளம்ப... வருணும் கிளம்பினான்.

“என்னை எங்கே கூட்டிட்டு போறீங்க?” மயூரியின் குரல் நலிந்து ஒலித்தது. வீட்டிற்குக் கிளம்பியவளை ஆரன் வலுக்கட்டாயமாகச் சுனிதாவின் ஸ்கூட்டியில் அவளை ஏற்றிக் கொண்டு சென்றால் அவள் பயப்படாமல் என்ன செய்வாள்?

“அங்கே போய்ப் பார்க்கும் போது நீயே தெரிஞ்சுக்குவ?” என்றவன் அதற்கு மேல் பேசவில்லை. அவளும் அதற்கு மேல் அவனிடம் கேட்க அஞ்சி வாயை மூடி கொண்டாள்.

அலுவலகத்துக்கு அருகில் இருந்த விளையாட்டு மைதானத்திற்குள் ஸ்கூட்டியை அவன் செலுத்தினான். அவள் புரியாமல் அவனைப் பார்க்க,

“உனக்கு ஸ்கூட்டி ஓட்ட தெரியாதுன்னு சொன்னியே? அதான் பழக்கி விடலாம்ன்னு” என்றவனைக் கண்கள் விரிய பார்த்தாள்.

“பார்த்து மெல்ல... மெல்ல... கண்ணு ரெண்டும் வெளியில் வந்திற போகுது” கிண்டலடித்தவன்,

“வா வந்து முன்னால் உட்காரு...” அவளிடம் சொல்ல...

“வேணாம்... நான் வண்டியை கீழே போட்டுருவேன். சுனிதா உங்களைத் தான் திட்ட போறா?” அவள் பயப்பட,

“உடைஞ்சா நான் பார்த்துக்கிறேன்... அதைப் பத்தி நீ கவலைப்படாதே...” என்றவன், அவள் இடுப்பில் கை கொடுத்து அவளை அலேக்காகத் தூக்கி வண்டியில் அமர வைத்தான்.

அவனின் செய்கையில் அவள் சிலையெனச் சமைந்தாள். அவனின் கைகள் அவளின் இடையைத் தீண்டிய தீண்டல் அவளின் உடலில் ஏதோ ஒருவித மாற்றத்தை ஏற்படுத்த, அவளின் இதயம் டொம்... டொமென்று மத்தளம் வாசித்தது. அவளின் கையை எடுத்து வண்டியின் கைப்பிடியில் வைத்தவன்... அவளின் பின்னால் அமர்ந்து அதை இயக்கினான்.

தன் கை மேல் அவன் கை படிந்திருக்க... அவனின் உடல் அவளின் மேல் லேசாக ஊராய அவள் இதயம் தாளம் தப்பியது. அவனுக்கு அது போல் எதுவும் இல்லை போலும். அவளுக்கு வண்டியை எப்படி ஓட்டுவது என்று சொல்லி கொடுப்பதில் மட்டும் தான் அவனின் கவனம் இருந்தது. அவள் அவஸ்தையாய் நெளிவது கண்டு,

“பேபி... என்னை உன் டீச்சரா நினைச்சுக்கோ... ஏன் தேவையில்லாமல் யோசிக்கிற?” அவன் கண்டிப்புடன் கூற... அவள் தன் எண்ணங்களைக் கைவிட்டு அவன் சொல்லி கொடுப்பதைக் கவனமாய்க் கேட்க ஆரம்பித்தாள்.

சிறிது நேரம் அவளுக்குச் சொல்லி கொடுத்தவன் தன் கைகளை விலக்கி விட்டு... அவளைத் தனியே ஓட்டும்படி பணித்தான். அவள் வண்டியை நேராகச் செலுத்தாமல் தடுமாற்றத்துடன் வளைந்து வளைந்து செலுத்த...

“இங்கே பார் பேபி... மனதை சஞ்சலப்படுத்தாமல் ஒரு நிலைப்படுத்திட்டு ஓட்டு... எல்லாம் சரியாகும்” கனிவாய் சொன்னவன் பொறுமையாய் அவளுக்குச் சொல்லி கொடுத்தான்.

“போ மயூ... இது கூட உனக்கு ஓட்ட தெரியல... நீயெல்லாம் கார் எப்படி ஓட்டுவ?” மஞ்சரி அவளுக்கு ஸ்கூட்டி ஓட்ட கத்துக் கொடுத்த போது அவள் ஸ்கூட்டியை கீழே

போட்டுவிட... மஞ்சரி அவளை நன்கு திட்டிவிட்டாள். அதிலிருந்து அவள் ஸ்கூட்டி பக்கமே போனது இல்லை.

அவளின் பயம் கண்டு தங்கை அவளைக் கேலி செய்திருக்கிறாள்... அன்னை அவளைக் கடிந்து இருக்கிறார்... ஆனால் எங்கிருந்தோ வந்த இவன் தன்னைக் கடிந்து பேசாமல்... அன்பாய் பொறுமையாய் சொல்லி கொடுப்பது கண்டு அவளுக்குக் கண்கள் கலங்கியது.

“தட்ஸ் குட் பேபி... இவ்வளவு தான்... இதுக்குப் போய்த் தான் நீ இவ்வளவு பயந்தியா? இப்போ பார்த்தியா எவ்வளவு சூப்பரா வண்டியை ஓட்டுற? நாளைக்கு ஆபிசுக்கு நீ ஸ்கூட்டியில் தான் வரணும்?” வண்டியிலிருந்து இறங்கியவன் உற்சாகமாய்ப் பேச... அவளிடமிருந்து பதில் வராமல் போகவும்... அவளைத் திரும்பி பார்த்தான்.

அவள் கண்கள் கலங்க... உதடுகள் துடிக்க உணர்ச்சி பொங்க, “தேங்க்ஸ்...” என்க...

“எங்கேயாவது உயிர் உடலுக்கு நன்றி சொல்லுமா?” அவள் கண்களோடு தன் கண்ணைக் கலந்தபடி அவன் சொல்ல... அவனின் பார்வை அவளின் கண்ணின் வழியாய் அவளின் இதயத்திற்குள் ஊடுருவி சென்றது.

“தெரியல... ஆனா எனக்குத் தேங்க்ஸ் சொல்லணும் போலத் தோணுது” பொங்கி வந்த அழுகையை அடக்கியபடி அவள் சொல்ல... அவன் அவளின் கையை ஆறுதலாக பற்றித் தன் கைகளுக்குள் பொத்தி வைத்துக் கொண்டான்.

‘உனக்கு எல்லாமுமாய் நானிருக்கிறேன்...’ என்பது போலிருந்தது அவனின் செய்கை.

“பெருமாளே... இன்னைக்கு ரோட்டுல போறவங்களை நீ தான் காப்பாத்தணும்ப்பா... அவங்களுக்கு ஒண்ணும் ஆகாம பார்த்துக்கோ கடவுளே...” மஞ்சரியின் கேலியில் மயூரியின் முகம் சுருங்கியது.

‘எல்லாம் அவரால் வந்தது... நான் ஆபிசுக்கு ஸ்கூட்டியில் வந்தால் என்ன? நடந்து வந்தால் என்ன? எதுக்கு இந்தத் தேவையில்லாத வேலை? என்னோட பயத்தைப் பத்தி அவருக்கு என்ன தெரியும்? இன்னைக்கு நான் எந்தவித சேதாரம் இல்லாமல்... அதே போல் மத்தவங்களுக்கும் எந்தவித சேதத்தை விளைவிக்காமல் பத்திரமாய் ஆபிஸ் போய்ச் சேரணும் பெருமாளே...’ மயூரியின் மனம் ஆரனை கடிந்து கொண்டு... கடவுளை வேண்டி கொண்டது.

“மயூ... எதுக்கும்மா இந்த வேண்டாத வேலை?” சுமதி வேறு தன் பங்கிற்கு அவளுக்கு நல்லது கூறுகிறேன் என்று அவரையும் அறியாமல் அவளின் மனதை நோகடிக்க...

‘நான் எதுக்கும்மா இந்த வேண்டாத வேலையெல்லாம் பார்க்க போறேன்... இன்னைக்கு நான் கட்டாயம் ஸ்கூட்டியில் தான் வரணும்ன்னு அவர் சொல்லியிருக்காரே... அவரின் பேச்சை கேட்காமல் நான் அங்கே போகவும் முடியாது... வேலை செய்யவும் முடியாது. நான் என்னம்மா செய்றது?’ மயூரியின் மனம் புலம்பியது.

“சுமதி... மஞ்சு... கொஞ்ச நேரம் பேசாமல் இருங்க...” ராகவன் மனைவியையும், சின்ன மகளையும் அதட்டியவர்,

“நீ தைரியமா போம்மா...” என்று அவளை ஊக்கப்படுத்தியவர்... “ஏம்மா... இப்போ நீ ஸ்கூட்டில தான் போகணும்ன்னு அவசியம் இல்லையே. நான் தான் உன்னைக் கொண்டு விட்டு... கூட்டிட்டு வர்றேனே... எதுக்குமா இந்த விச பரீட்சை?”

“அப்பா... நீங்களுமா?” தந்தையின் பேச்சில் மயூரியின் கண்கள் கலங்கியது.

“சரிம்மா... சரிம்மா... உன் இஷ்டம்” ராகவன் அத்துடன் பேச்சை முடித்துக் கொள்ள... மயூரி வெற்றிகரமாகத் தன் ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியில் வந்தாள்.

“ஹாய் பேபி...” அவளின் தெரு முனையில் நின்றிருந்த ஆரன் அவளைத் திடுமென வழிமறிக்க... அவள் திடுக்கிட்டு போனவளாய் தட்டு தடுமாறி கீழே விழ போக... அவன் அவளை ஸ்கூட்டியுடன் தாங்கி பிடித்தான்.

“நீங்க எங்கே இங்கே...?” சுற்றிலும் கண்களைச் சுழற்றியவாறு பயத்துடன் அவள் கேட்க...

“ஏன் நான் இங்கே வர கூடாதா?” கண்களில் சிரிப்புடன் கேட்டவனிடம் என்ன பதில் சொல்வது? என்று தெரியாமல் அவள் தலை குனிய...

“சரி வா போகலாம்...” என்றவன் அவனின் மோட்டார் சைக்கிளில் ஏறியபடி அவளிடம் சொல்ல... அவள் வியப்பாய் அவனைப் பார்த்தாள்.

தனது வாகனத்தை இயக்கி கொண்டு அவளருகில் வந்தவன், “உன் பயம் தெரிந்தும் உன்னை நான் தனியா விடுவேனா பேபி? உன்னைக் காதலிக்க ஆரம்பித்த அந்த நொடியில் இருந்து... இனிமேல் எப்பவும் நான் உன் கூடவே இருப்பேன்” என்று தன் வாகனத்திலிருந்து எக்கி அவள் காதுக்கருகில் சொன்னவன், “அப்படி நான் உன்னை விட்டு பிரியும் நிலை வந்தால் அன்று தான்...” என்று நிறுத்த... அவள் புரியாமல் அவன் முகம் பார்த்தாள்.

தன் முகம் அருகே அவன் முகம் தெரிய... அவன் விழிகளுக்குள் தன் விழிகளைக் கலந்தவள் ஏதோ மந்திரத்துக்குக் கட்டுப்பட்டது போல் இமைக்காது அவனைப் பார்த்திருந்தாள்.

“உன்னை விட்டு பிரிந்தால்... அன்று தான் நான் இந்த உலகில் வாழும் கடைசி நாள்” என்றவனின் வார்த்தை

அவளின் மனதை உலுக்க... அதிர்ச்சியாய் நின்றவளின் பாவனையில் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

“ஹேய் பேபி... என்ன ப்ரீஸ் ஆகிட்ட... நான் அவ்வளவு சீக்கிரம் உன்னை விட்டு போக மாட்டேன். வா போகலாம்...” என்றவன் தன் வண்டியை முடுக்க... அவளும் தன் வாகனத்தை இயக்கியவள் அவனுடன் இணைந்து கொண்டாள்.

அவளின் வேகத்திற்கு ஈடு கொடுத்தபடி அவன் தன் வாகனத்தை மெதுவாய்ச் செலுத்தியது கண்டு அவளுக்கு மனதுக்குள் சந்தோசமாயிருந்தது. அதிலும் போக்குவரத்து நெரிசலை கண்டு பயந்தவளை கண்களால் தைரியமூட்டி தன்னோடு அவன் அழைத்துச் சென்ற விதம்... அவள் மனதிலும் ஏதோ ஒரு மாயத்தை உண்டு பண்ணியது.

“ரொம்பத் தேங்க்ஸ்...” அலுவலகம் வந்தவர்கள் தங்கள் வாகனத்தை நிறுத்தும் போது அவள் அவனிடம் நன்றி கூற...

“இது என் கடமை பேபி” இடைவரை குனிந்து அவள் நன்றியை பெற்றுக் கொண்ட அவனைக் கண்டு அவள் மனம் கரைந்தது.

‘எனக்கு இவர் யார்? எனக்காக இந்தளவுக்கு யோசித்து யோசித்துச் செயல்படுகிறாரே... இவருக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?’ அவள் மனம் அவனுக்காய்ப் பரிதவித்தது.

“என்ன யோசனை பேபி...? ஆபிசுக்கு போகும் எண்ணம் இல்லையா?” கேலியாய் அவளைப் பார்த்து வினவியவன்... அவளின் கைப்பற்றி அழைத்தான்.

“ஆரன்...” அவளோ அவனோடு செல்லாமல் அவனை அழைக்க... அவளின் அழைப்பில் முகம் மலர அவன் அவளைத் திரும்பி பார்த்தான்.

“என்னம்மா சொல்லு?”

“நீங்க... நீங்க... இனிமேல் இது மாதிரி பேச கூடாது?”

“எது மாதிரி...?” அவன் ஒன்றும் புரியாமல் புருவத்தைச் சுருக்கினான்.

“என்னைப் பிரிஞ்சா... அன்னைக்குத் தான் உங்களுக்கு அது கடைசி நாள்ன்னு சொல்லாதீங்க. நான் இல்லைன்னா என்ன... என்னை விட அழகான, படித்த, புத்திசாலியான... இதையெல்லாம் விட என்னை விடத் தைரியமான பொண்ணு உங்களுக்குக் கிடைப்பா...”

அவனோ அவளுக்குப் பதிலளிக்காமல் அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டு... அவளை ஒரு ஓரமாய் இழுத்துக் கொண்டு சென்றான். அலுவலகத்தின் கீழ் பகுதில் இருந்த அந்த வாகனம் நிறுத்துமிடம் சற்று இருட்டாய் இருந்தது அவளுக்குச் சிறிது பயத்தைக் கொடுத்தது.

“என்ன பண்றீங்க?” அவள் பேசியது அவளுக்கே கேட்கவில்லை. அவனோ அவளுக்குப் பதில் சொல்லாமல் அவளையே உற்றுப் பார்த்தான். பின் அவள் முகத்தை இரு கைகளால் தாங்கி,

“எனக்கு... உன்னை விட அழகான, படித்த, புத்திசாலியான, தைரியமான பொண்ணு எல்லாம் வேணாம். எனக்கு நீ தான் வேணும்... நீ மட்டும் தான் வேணும்”

தன் கைகளில் தாங்கியிருந்த அவளின் கன்னங்களைத் தன் இரு கட்டை விரலால் மெதுவாய் வருடியபடி அவன் சொல்ல... அவனின் வருடலில் அவள் தேகம் பாகாய் உருகியது. கோழையாக... தைரியமில்லாதவளாக இருந்தாலும் அவளும் ஒரு பெண் தானே... அவனின் வருடலில் அவளின் உடல் நெருப்பாய்த் தகித்தது.

“ஏன் இப்படிப் பேசுறீங்க... எனக்குப் பயமாயிருக்கு?” மெல்லிய குரலில் சொல்லியவளை இரக்கத்துடன் பார்த்தான் அவன். அவளின் பயம் அவனுக்குமே தெரியுமாதலால் அவளின் முகத்தைத் தாங்கியிருந்த தன் கையைச் சட்டென்று எடுத்தவன்,

“நான் உன்னை ஏமாத்திடுவேன்னு பயப்படுறியா?” அவள் அவசரமாய்த் தலையை இடமும் வலமும் ஆட்டி அவனின் கூற்றை மறுத்தாள்.

“காதலை சொல்லிட்டு ஏமாத்திட்டு போற விடலை பையன் நான் இல்ல. நீ மட்டும் சரின்னு சொல்லு... அடுத்த நிமிசம் உன் அப்பா கிட்ட பெண் கேட்டு வர்றேன்...” அவன் உறுதியாய் கூற... அவள் முகம் கவிழ்ந்தாள்.

“இன்னும் என் மேல் நம்பிக்கை வரலையா?” அவன் ஏக்கத்துடன் கேட்க...

“உங்க மேல் நம்பிக்கை இல்லாமல் இல்லை... ஆனா எனக்கு இந்தக் காதல் மேல நம்பிக்கை இல்லை” சிறுபிள்ளையாய் சொன்னவளை கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

“என் மேல் நம்பிக்கையிருக்கு இல்ல... அப்புறமென்ன மத்தது எல்லாம் நான் பார்த்துக்கிறேன்” என்றவன் அவளின் கரத்திற்காகத் தன் கரத்தை நீட்ட... அவளோ தயங்க...

“பார்த்தியா... இன்னமும் நீ என்னை நம்பவில்லை” என்றவன் வலுக்கட்டாயமாய் அவளின் கரத்தை தன் கரத்தோடு கோர்த்துக் கொண்டு அலுவலகம் நோக்கி செல்ல... அவளோ அவனின் செய்கையை மறுக்க முடியாமல் உடன் நடந்தாள்.

****

“வாப்பா ஆரா... நீ வந்தாலே ஞாயிறு என்பதைச் சொல்லாமல் தெரிஞ்சுக்கலாம்” நல்லசிவம் ஆர்ப்பாட்டமாய் ஆரனை வரவேற்க...

“என்னங்கய்யா இது?” சங்கடத்துடன் அவரின் வரவேற்பை ஏற்றுக் கொண்டவன்... அவரிடம் ஒரு கவரை நீட்டினான்.

“எதுக்குப்பா மாதம் மாதம் ஒரு தொகை தந்திட்டு...?” அவர் அதை மறுக்க... அவனோ வலுக்கட்டாயமாய் அவரின்

கையில் கவரை திணித்தவன்,

“நீங்க இல்லைன்னா... நான் இன்னைக்கு ஒரு மனுசனா... நாலு பேர் மதிக்கும்படியா வந்திருக்க மாட்டேன். என்னைப் போல் இந்த உலகத்தில் எத்தனையோ பேர் இருக்காங்க. அவங்களுக்கு எல்லாம் நீங்க உதவுவதற்கு ஏதோ என்னால் முடிஞ்ச சிறு அன்பளிப்பு...” அவனின் தன்னடக்கம் கண்டு அவருக்குப் பெருமையாய் இருந்தது.

“அப்படிச் சொல்லாதே ஆரா... நான் எல்லோருக்கும் தான் உதவி செய்வது... அறிவுரை சொல்வது. ஆனால் உன்னைப் போல் என் பேச்சை கேட்டவர்கள் வெகு குறைவே. அதனால் உன் உழைப்புக்கு, விடாமுயற்சிக்கு கிடைத்த வெற்றியே இது” என்று அவனைப் பாராட்டியவர்,

“உன் சம்பளத்தில் முக்கால்வாசியை எங்களுக்கே தந்துட்டா... உனக்குன்னு என்னப்பா சேர்த்து வச்சிருக்க? நாளைக்கே உனக்குக் கல்யாணமாகி மனைவி, குழந்தைன்னு வந்துட்டா... பொறுப்புகள் அதிகமாகும் இல்ல. அதுக்கு இப்பவே சேர்த்து வச்சுக்கிட்டா தானே நல்லது ஆரா...” அவரின் பேச்சிற்குப் பதில் பேசாமல் அவன் மௌனமாய் இருந்ததைக் கண்டு அவர் ஆச்சிரியமாய்ப் பார்த்தார்.

எப்போதுமே திருமணம் பற்றிய பேச்சை எடுத்தாலே முகம் சுளிக்கும் ஆரன் இன்று அமைதியாய் இருப்பது கண்டு அவருக்கு அதிசயமாய் இருந்தது.

“என்ன ஆரா... உன் மனதையும் ஒரு பெண் கவர்ந்துவிட்டாளா? யாரந்த பெண்?” சிரிப்புடன் அவர் கேட்க,

“அய்யா...” அவன் வியந்து போய் அவரைப் பார்க்க...

“எனக்குத் தெரியாமல் நீ மறைக்க முடியுமா?” நரைத்த மீசையை அவர் நீவி கொண்டு கர்வமாய்க் கேட்க,

“ஆமாம் அய்யா... எங்க கம்பெனியிலே புதுசா வேலைக்குச் சேர்ந்திருக்கா... அவளைப் பார்த்த நிமிஷத்தில் இருந்து

நான் நானாக இல்லை” என்றவனை அவர் ஆரத்தழுவி கொண்டார்.

“ரொம்பச் சந்தோசமா இருக்கு ஆரா... நீ பெண்களை வெறுத்து... இப்படியே தனி மரமா ஆகிருவியோன்னு பயந்தேன். இப்ப தான் நிம்மதியா இருக்கு” என்றவர், “பொண்ணு பேர் என்ன?”

“மயூரி...” அவன் வெட்கத்துடன் சொல்ல...

“ஆஹா... ஆரனுக்கும் வெட்கம் வருமோ?” என்று சிரித்தவர், “பொண்ணு பேருக்கேத்த மாதிரி... மயில் போல் அழகா இருப்பாளா?” கண்சிமிட்டி அவர் கேட்க...

‘ஆம்...’ என்று தலையாட்டியவனைக் கண்டு அவர் பெருங்குரலெடுத்து நகைக்க, “போங்க அய்யா... நான் பசங்களுக்குக் கிளாஸ் எடுக்கப் போகிறேன்” என்று அவன் ஒரே ஓட்டமாய் ஓட... அவரின் சிரிப்பு அவனைத் தொடர்ந்தது.

****

“மஞ்சு... போதும்டி இன்னும் எவ்வளவு நேரம் தான் ஷாப்பிங் பண்ணுவ...?” மயூரி அலுத்துக் கொள்ள... மஞ்சரியோ அவளின் பேச்சை கவனிக்காதவளாய் கடைக்காரரிடம் பேரம் பேசி கொண்டிருந்தாள்.

“இவ்வளவு பெரிய ஷாப்பிங் மாலில்... மூணு மணி நேரத்தில் நீ வாங்கிய ஒரே ஒரு பொருள்... இந்த ஹேர் பான்ட் தான். இதுக்கு ஏண்டி இவ்வளவு நேரம் சுத்தணும்? இதுக்கு மேல என்னால ஒரு அடி எடுத்து வைக்க முடியாது. முதல்ல சாப்பிட போகலாம் வா...” மயூரியின் புலம்பலில்,

“உன்னோட பெருத்த ரோதனையாய் போச்சு? வா போகலாம்...” என்ற மஞ்சரி அக்காவை அழைத்துக் கொண்டு புட் கோர்ட்க்கு வந்தாள். மதிய உணவு நேரமாதலால் அங்கே மேஜைகள் நிரம்பி வழிந்தது.

“போச்சு... எல்லாம் உன்னால தான்டி... நேரத்தோட வந்திருந்தா... இது மாதிரி ஆகியிருக்காது” மயூரி மீண்டும் தன் புலம்பலை தொடர... மஞ்சரி பார்வையால் அவளை எரித்தாள்.

“நீ கொஞ்ச நேரம் சும்மாயிருக்க மாட்ட?” என்றவள் எங்கேயாவது மேஜை காலியாக இருக்கிறதா என்று கண்களால் அங்குமிங்கும் துளாவினாள்.

“ஹாய் மயூரி...” என்று ஒரு குரல் கேட்க... இருவரும் ஒரு சேர திரும்பி பார்த்தனர்.

குரல் வந்த திசையில் அங்கே ஆரனும், வருணும் அமர்ந்திருக்க... அவர்களுக்கு எதிரே இரு நாற்காலிகள் காலியாய் இருந்தது.

“மயூ... யார் அது?”

“என்னோட வேலை செய்றவங்க...”

“அவங்க எதுத்தாப்புல சேர் காலியா இருக்கு பாரு... வா அங்கே போய் உட்காரலாம்” மஞ்சரி அவள் கையைப் பிடித்து இழுக்க...

“வேணாம்... நான் அங்கே வரல” மயூரி மறுக்க...

“நீ இப்படிச் சொல்லிட்டே இருந்தே... இன்னைக்கு நாம லஞ்ச் சாப்பிட்ட மாதிரி தான். வா...” என்றவள் வலுக்கட்டாயமாய் அவளை இழுத்துக் கொண்டு போய் அவர்கள் முன் நின்றாள்.

ஆரன் தன் முன் நின்ற மயூரியை வைத்த கண் வாங்காமல் பார்க்க... அவளோ அவனைப் பார்க்க முடியாமல் தலை குனிந்தாள். வருணோ மஞ்சரியை கண்டு ஜொள்ளியவாறு,

“நான் தான் கூப்பிட்டேன் மயூ...” என்று வழிய, அவனின் பார்வையில் மஞ்சரி அவனை மேலும் கீழும் ஒரு மாதிரியாய் பார்த்து வைத்தாள். வேறு எங்கும் இடம்

இல்லாதலால் அவனின் வழிசலை சகித்துக் கொண்டு அங்கே அவள் அமர... மயூரியும் உடன் அமர்ந்தாள்.

பரஸ்பர அறிமுகத்திற்குப் பின் மஞ்சரி, “மயூ... நீ தான் கூட்டமாயிருந்தா பயப்படுவியே... அதனால நீ இங்கேயே இரு... நான் போய்ப் புட் வாங்கிட்டு வர்றேன்” என்றபடி அவள் எழ...

அதுவரை கண்ணிமைக்காமல் மயூரியை பார்த்துக் கொண்டிருந்த ஆரன் மஞ்சரியின் வார்த்தையில், “இப்படிச் சொல்லி சொல்லியே அவளைக் கோழையாய் ஆக்கிருவ போலிருக்கே...” என்று மஞ்சரியை கடிந்தவன்... மயூரியை பார்த்து, “நீ போய் வாங்கி வா” என்க,

“நானா...?” தயக்கமாய் அவனைப் பார்த்தவள், “அங்கே பசங்க கும்பலா நிக்கிறாங்க... எனக்குப் பயமாயிருக்கு”

“நீ தான் போய் வாங்கிட்டு வர்ற...” ஆரன் திட்டவட்டமாய்க் கூற... அவனின் வார்த்தையில் அவள் மறுபேச்சுப் பேசாமல் எழுந்து செல்ல... மஞ்சரி ‘இங்கே என்ன தான் நடக்குது?’ என்று யோசனையாய் இருவரையும் பார்த்தாள்.

இவர்கள் அமர்ந்திருப்பதைத் திரும்பி திரும்பி பார்த்தபடி சென்ற மயூரியை தன் கண்களால் தைரியம் சொன்ன ஆரனையும்... அதில் நிம்மதியடைந்தவளாய் சென்ற அக்காவையும் ஆச்சிரியமாய்ப் பார்த்தாள் மஞ்சரி.

“என்ன ராம் வேலைக்குப் போக மாட்டேன்னு சொல்றியாமே? இது உன் படிப்புக்கு ஏத்த ரொம்ப நல்ல வேலை... சம்பளமும் அதிகம்... அப்படி இருந்தும் போக விருப்பம் இல்லைன்னு சொல்றது சரியில்லையே ராம்?” எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த ராமின் அருகில் வந்து அமர்ந்த ஆரன் அவனுக்கு அறிவுரை கூற...

“எனக்கு வெளிவுலகத்தைப் பார்க்கவே வெறுப்பா இருக்குண்ணா...?” ராமின் கண்களில் தெரிந்த வலியை ஆரனால் உணர முடிந்தது. ஏனெனில் ஒரு காலத்தில் அவனும் இந்த மாதிரி ஒரு வலியை அனுபவித்தவன் ஆயிற்றே.

“ராம்... உன் உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அதற்காக நீ இப்படியே இங்கேயே இருந்துவிட முடியுமா? நமக்காகக் கஷ்டப்படும் அய்யாவை கொஞ்சம் யோசித்துப் பார்”

“நீங்க சொல்றது புரியுதுண்ணா... ஆனா இந்த உலகம் எனக்குச் செய்த நம்பிக்கை துரோகத்தை என்னால் மறக்க முடியவில்லையே”

துரோகம்... அதிலும் நம்பிக்கை துரோகம்... அதுவும் தன் மனதுக்கு நெருங்கியவர்களால் ஏற்படும் நம்பிக்கை துரோகம் நாம் சாகும் வரை நம்மால் மறக்க இயலாது. ராமை போலவே ஆரனும் அது மாதிரி நம்பிக்கை துரோகத்தால் பாதிக்கப்பட்டு இன்று வரை அதை மறக்க இயலாமல் மனதுக்குள் வைத்துக் கொண்டு புழுங்கி கொண்டிருக்கிறானே. இதில் அவன் எங்கே ராமுக்கு ஆறுதல் கூறுவது? ஆரன் ஒரு நிமிடம் கண்களை இறுக மூடி தன் வேதனையை விழுங்கி கொண்டவன் பின்பு ராமிடம் பேசலானான்.

“ராம்... என் கதை உனக்குத் தெரியும் தானே? உனக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்... அய்யா சொல்லாமல் இருக்க

மாட்டார். உதாரணம் காட்டுகிறேன் பேர்வழின்னு என்னைத் தான் ஏதோ ஹீரோ போல் உதாரணம் காட்டுவார்” நல்லசிவத்தின் அன்பில் அவன் முகம் மலர்ந்தது. அதைக் கேட்ட ராமின் முகத்திலும் புன்னகை அரும்பியது.

“அந்த மாதிரி நம்பிக்கை துரோகத்தைச் சந்தித்து வந்த நானே இந்தளவு இருக்கிறேன்னா... உனக்கு என்னடா ராம்?” ஆரனின் வேதனையை அவனின் குரல் அப்படியே பிரதிபலித்தது.

“அண்ணா...”

“நீ வேலைக்குப் போகணும் ராம்... நம்மை மாதிரி இருக்கும் மற்றவர்களுக்கு நீ ஹெல்ப் பண்ணனும். அய்யா ஒருத்தர் மட்டும் எல்லாச் சுமையையும் தாங்கி கொண்டிருக்க முடியுமா? அவரின் சுமையை நாம் ஏற்றுக் கொள்வதன் மூலம் தான் அவருக்கு நாம் பட்ட நன்றி கடனை திருப்பிச் செலுத்த முடியும். நமக்குத் துரோகம் செய்த இந்தச் சமுதாயத்தின் முன் நாம் தலை நிமிர்ந்து நிற்க வேணாமா? கொஞ்சம் யோசித்துப் பார் ராம்...” ஆரனின் வார்த்தைகள் சரியாய் வேலை செய்தது.

“நீங்கள் சொல்வது சரி தான்ண்ணா... நான் வேலைக்குப் போறேன்”

“இப்போது தான் நீ கம்பீரமான ஆண்மகன்...” ஆரன் அவனைக் கட்டி கொண்டான். தன்னைப் போல்... ராமை போல்... இருக்கும் பலரின் வாழ்க்கையில் வெளிச்சத்தை உண்டாக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுள் ஆழமாய் விழுந்தது.

****

“மிஸ். மயூரி... வெல்டன்... குட் ஜாப்... கீப் இட் அப்...” உயரதிகாரியின் பாராட்டில் மயூரியின் முகம் பூவாய் மலர்ந்தது.

“தேங்க்யூ சார்...” என்ற மயூரி அவரின் அறையை விட்டு வெளியில் வந்தாள். ஏதோ மேக கூட்டத்தின் மீது நடப்பது

போல் இருந்தது அவளுக்கு. அந்த அளவுக்கு மகிழ்ச்சியில் மிதந்தாள் அவள்.

அவள் வேலைக்குச் சேர்ந்து ஆறு மாதங்கள் ஆகிவிட்டது. முதன்முறையாய் அவளின் திறமைக்குப் பாராட்டுக் கிடைத்திருக்கிறது. இந்தப் பாராட்டுக்கு அவள் மட்டுமா சொந்தக்காரி... இல்லையே அவனும் அல்லவா... அதற்குச் சொந்தக்காரன்! எத்தனையோ முறை வேலை புரியாமல் அவள் விழித்த போது... அவன் தானே அவளுக்குத் தெளிவாய் புரியும் படி எடுத்துச் சொன்னான். அவளை மேலும் கணினி வகுப்பிற்குச் செல்ல வைத்தான். அவளின் திறமையை மட்டுமா அவன் வெளி கொணர்ந்தான்? அவளின் மனதினில் தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் விதைத்து அவளைப் புது மனுசியாய் அல்லவா வெளி கொணர்ந்திருக்கிறான். அன்றொரு நாள் அவள் வேலை புரியாமல் முழித்துக் கொண்டிருந்த போது... அவன் அவள் முகத்தை வைத்தே அவளின் பிரச்சினையைப் புரிந்து கொண்டு அவள் அருகில் வந்தான்.

“என்ன பேபி... திருவிழாவில் தொலைஞ்சு போன குழந்தை மாதிரி திருதிருன்னு முழிச்சிட்டு இருக்க?” அவளின் அருகே நாற்காலியை இழுத்து போட்டு சாவகாசமாய் அமர்ந்தவன் அவளைப் பார்த்து கேட்டான்.

அவனிடம் என்னவென்று சொல்வது? ‘எனக்கு வேலை தெரியவில்லை... புரியவில்லை’ என்று அவனிடம் எப்படிச் சொல்வது? என்று தெரியாமல் தலையைக் குனிந்திருந்தாள்.

“என்னடா... வேலை கஷ்டமாயிருக்கா?” அவளின் கைவிரல்களை ஒவ்வொன்றாய் பிடித்து விட்டபடி அவன் கேட்ட போது அவளுக்கு இதமாய்த் தான் இருந்தது.

அவளின் கணினியை தன் பக்கம் திருப்பியவனுக்கு என்ன பிரச்சினை? என்பதை ஒரு நொடியில் புரிந்துவிட்டது. ஆனாலும் அவன் அதைச் சரி பண்ணாமல் அவளுக்குப் புரியும்படி சொல்லி கொடுத்து... அவளை விட்டே அதைச்

சரி செய்தான். அவன் சொன்னதை வேதவாக்காய் எடுத்துக் கொண்டு அவளும் அதைக் கவனத்துடன் செய்ய... சில மணித்துளிகளில் வேலையை வெற்றிகரமாய் முடித்துவிட்டாள்.

“பார்த்தியா இவ்வளவு தான்... இதுக்குப் போய் நீ யோசித்துக் கொண்டு இருந்தாயே? உனக்காக இந்த வேலையை நானே முடித்திருப்பேன்... ஆனால் நீ இதைப் புரிந்து செய்ய வேணும்ன்னு தான் பேசாமல் இருந்தேன்” என்றவன், “பேபி உன்னிடம் உள்ள இந்தப் பயத்தை விட்டு விடு... அப்புறம் உன் திறமைகள் ஒவ்வொண்ணாய் தானாய் வெளிவரும்” என்றவனை நன்றியுடன் பார்த்தாள்.

இன்று அதை நினைத்து பார்த்தவளுக்கு ஏனோ அவனுக்கு நன்றி சொல்ல வேண்டும் போல் தோன்றியது. அவனின் அறை கதவை அனுமதிக்காக அவள் தட்ட... அவன் வர சொன்னதும் அவன் முன் போய் நின்றாள்.

“வா பேபி.... நீ வருவேன்னு எனக்குத் தெரியும்?” அவளுக்குக் கிடைத்த பாராட்டு பற்றி அவனுக்கு முன்னமே தெரியும். அதான் அவள் எப்படியும் தன்னைப் பார்க்க வருவாள் என்று அவன் ஊகித்திருந்தான். அதே போல் அவனின் நம்பிக்கையைப் பொய்க்காமல் தன்னவள் தன்னைத் தேடி வர அவனுக்குச் சந்தோசமாய் இருந்தது.

“தேங்க்ஸ்... நீங்க இல்லாம என்னால் இந்தளவுக்கு வந்திருக்க முடியாது ” தன் நன்றியை உண்மையாய் மனப்பூர்வமாய் அவள் சொல்ல... அவனோ எழுந்து அவள் அருகில் வந்தான். அவள் அச்சத்தோடு அறை கதவை நோக்க...

“என் அனுமதி இல்லாமல் யாரும் உள்ளே நுழைய முடியாது” அவளுக்குப் பதில் கூறியவன்...

“இவ்வளவு பெரியவளா வளர்ந்திருந்தும் தேங்க்ஸ் எப்படிச் சொல்லணும்ன்னு உனக்குத் தெரியலையே பேபி” அவளுக்கு நேரெதிரே வந்தவன் அவளின் இதழை பார்த்துக் கொண்டு பேச... அவளின் இதயம் தொண்டை

வழியாய் வெளியே வந்துவிடுவது போல் வேகமாய்த் துடித்தது.

அவனோ அவளின் அச்சத்தைக் கண்டு கொள்ளாமல் அவள் முகம் நோக்கி குனிய... அவளோ அடுத்து என்ன நடக்கக் கூடும் என்பதை ஊகித்தவளாய் பயத்தில் கண்களை மூடி கொள்ள... அதைக் கண்டு அவன் மனதுக்குள் நகைத்துக் கொண்டான். தன் ஆள்காட்டி விரல் கொண்டு அவள் முகத்தில் நெற்றியிலிருந்து நேர் கோடாய் கோலம் போட்டவன் கடைசியில் ரோஜா பூவிதழ் போல் மென்மையாய் இருந்த அவளின் மெல்லிய இதழில் வந்து தங்கியவன் அதை மெல்ல வருடி கொண்டே...

“தேங்க்ஸ் எப்படிச் சொல்றதுன்னு நம் கல்யாணத்துக்குப் பின் சொல்லி தர்றேன்... இப்போ வேணாம் பேபி...” அவன் மெதுவாய் கூற... அவள் வியப்புடன் கண்களைத் திறந்தாள்.

“சரி அதை விடு... உனக்கு நான் இவ்வளவு செய்திருக்கிறேனே... எனக்கு ஏதும் கிப்ட் கிடையாதா?”

“என்... என்ன வே... வேணும்?” அவனின் அருகாமையில்... தொண்டைக்குள் சிக்கிய மீன் முள்ளாய் அவளின் வார்த்தைகள் அவஸ்தையாய் தொண்டைக்குள் சிக்கி கொண்டு தவித்தது.

“என்ன கேட்டாலும் தருவாயா?” அவள் கண்ணுக்குள் தன் கண்ணைக் கலந்து கேட்டவன்,

“வேறு என்ன கேட்க போகிறேன்... நான் உன்னைக் காதலிப்பதாய் சொல்லி ஐந்து மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. நீ இன்னமும் எனக்குப் பதில் சொல்லல. எனக்கு உன் காதலை தவிர... இந்த உலகத்தில் வேறென்ன வேணும்?” அவன் அவளிடம் கேட்ட காதல் யாசகம் அவளின் மனதை பிழிந்தது. அன்று தான் முதன் முதலாய்ப் பார்ப்பது போல் தன் முன் நிற்கும் அவனின் முகத்தைப் பருகுவது போல் பார்த்தாள்.

‘இவனுக்கு என்ன குறை? என்னைப் போன்ற ஒரு பெண்ணின் பின்னால் ஏன் தொங்கி கொண்டு அலைகிறான்? அவனின் கடைக்கண் பார்வைக்காகப் பல பெண்கள் தவமிருக்க... இவன் என் பார்வைக்காகத் தவமிருப்பது ஏன்? என்னை இந்தளவுக்குக் காதலிக்கிறானா? தாய் பறவை தன் சேய் பறவையைப் பொத்தி பாதுகாப்பது போல் என்னைப் பாதுகாக்கும் இவனை விட வேறு யார் என்னைப் பாதுகாக்க முடியும்? என்னுள் நம்பிக்கை விதையை விதைத்து... தைரியத்தை ஊட்டி என்னை ஒரு மனுசியாய் ஆக்கிய இவனை விட வேறு யார் எனக்குத் தோழனாய் இருக்க முடியும்?’

‘இதையெல்லாம் விட... வேறு யாரை கண்டும் எழும்பாத என்னின் உள்ளத்து உணர்வுகளைத் தட்டி எழுப்பி என்னைப் பெண்ணாய் உணர செய்ய இவனால் மட்டுமே முடியும். வேறு யார் கணவனாய் வந்தாலும் இவனைப் போன்று என் உணர்வுகளை மதித்து நடப்பார்களா? என்னைப் புரிந்து கொண்ட... என் உணர்வுகளை மதித்து நடக்கும் இவனின் காதலை ஏற்பதில் இன்னமும் எனக்கு என்ன தடை?’ அவள் மனதில் யோசித்துக் கொண்டிருக்க...

அவனோ அவளின் முகத்தில் தோன்றிய பலவித உணர்வுகளைப் புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தான். “என்னம்மா... உனக்குக் குழப்பாய் இருக்கா? இன்னமும் டைம் வேணுமா? பரவாயில்லை... டேக் யுவர் ஓன் டைம்...” அவளுக்காக அவன் அப்படிக் கூறினாலும்... தன் காதலை அவள் ஏற்றுக் கொள்ளாததில் ஏற்பட்ட வலி அவனின் குரலில் தெரிந்தது.

தனக்காகப் பார்த்து பார்த்து செய்யும் அவன் வேதனை படுவதா? ம்ஹூம்... கூடவே கூடாது? அதற்கு மேல் அவளால் தன் மனதை மறைக்க முடியவில்லை.

“ஆரன்...” அவனை ஆரத்தழுவி கொண்டு அவன் நெஞ்சில் சாய்ந்தாள் அவள். அவனோ அவளின் செய்கை தந்த பிரமிப்பில் அப்படியே அசையாது நின்றான். பின் மெல்ல அவளின் முகத்தை ஒற்றை விரலால் நிமிர்த்தி,

“உண்மையாவா?” அவனுக்கு இன்னமும் நம்ப முடியவில்லை.

“ம்... ஐ லவ் யூ ஆரன்...” என்றவள் அவன் முகம் காண வெட்கி கண்களை மூடி கொண்டாள்.

அவனோ அவளின் வார்த்தையில் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பாலைவனத்தில் சுடுமணலில் தாகத்தில் தொண்டை வறள சுற்றி திரிந்தவனுக்குப் பாலைவன சோலையாய் அவனைக் குளிர்வித்தது அவளின் வார்த்தைகள். வாழ்க்கையை வெறுத்து போய் ஏதோ உயிரோடு இருக்கிறோம் என்று நடை பிணமாய் வாழ்ந்து கொண்டிருந்தவன் வாழ்க்கையில் அவனின் உயிர் மூச்சாய் வந்தவளை கண்டு அவனின் கண்களில் நீர் துளிர்த்தது.

அவனின் கண்ணீர் துளி அவளின் மூடிய இமையின் மேல் விழ... அவள் என்னவென்று கண் திறந்து பார்க்க... அங்கே அவன் கண்களில் கண்ணீர் துளிர்க்க நின்றிருந்ததைக் கண்டு பதறி போனாள். எப்போதும் கம்பீரமாய், எளிதில் தன் உள்ளத்து உணர்வுகளைப் பிரதிபலிக்காத, ஆண்மையின் இலக்கணத்திற்கு உதாரணமாய் இருக்கும் அவனைக் காதல் கோழையாக்குவதா? அதற்கு அவளும் காரணமாய் இருப்பதா? அவள் பதட்டத்துடன்,

“ஆரன்... என்ன இது? ம்ஹூம்... அழ கூடாது... நான் இருக்கிறேன் உங்களுக்கு...” அவனின் கண்ணீர் துளியை அவள் துடைக்க... அவளின் செயலில் மனம் நெகிழ்ந்து போனவனாய் அவளின் கையை இறுக பற்றிக் கொண்டான்.

இத்தனை வருடங்களாய் தனது மன மகிழ்ச்சியையோ, கோபத்தையோ அல்லது அழுகையையோ யாரிடமும் காட்ட முடியாமல் தனக்குள் வைத்துக் கொண்டு அவன் வெந்து செத்துக் கொண்டிருந்தான். ‘இல்லை இல்லை உனக்காய் நானிருக்கிறேன்...’ என்று இறந்தவனுக்கு அவள் உயிர் கொடுப்பதைக் கண்டு அவன் உள்ளம் உருகியது.

“போதும் பேபி... எனக்காக நீ இருக்கிறாய்ன்னு... நீ சொன்னதே எனக்குப் போதும். இந்த நொடி என் உயிர் போனால் கூட நான் நிம்மதியாய் செத்து போவேன்” உணர்ச்சி பெருக்கில் அவன் கூற... அவனின் வார்த்தையில் அவளுக்குக் கண்கள் கலங்கியது.

“இன்னமும் நாம வாழவே ஆரம்பிக்கல... அதற்குள் சாவை பத்தி ஏன் பேசுறீங்க?” விம்மினாள் அவள். அவள் சொன்ன பிறகே அவனுக்கு உறைத்தது... தான் அதிகப்படியாய் உணர்ச்சிவசப்பட்டு அவள் மனதை நோகடித்து விட்டோம் என்று.

“சாரி... சாரி... பேபி. ஏதேதோ நினைவுகள்... அதில் உன்னையும் சேர்த்துக் கஷ்டப்படுத்திட்டேன்” என்றவன் நொடிக்குள் தன் உணர்வுகளை மறைத்துக் கொண்டான். அவளையும் இயல்புக்குக் கொண்டு வரும் பொருட்டு,

“நம் காதலுக்கு அச்சாரமாய்...” அவன் குறும்பாய் நிறுத்த...

“அச்சாரமாய்...?” என்ன கேட்க போகிறானோ என்ற அச்சத்தில் அவள் கண்கள் பெரியதாய் விரிய,

“இங்கே ஒண்ணே ஒண்ணு கொடுக்கக் கூடாதா?” தன் கன்னத்தைக் காட்டி அவன் கேட்க... அதில் அவள் நிம்மதியடைந்தவளாய், அவனின் கையைப் பிடித்துப் புறங்கையில் தன் இதழை பதிக்க,

“இது சீட்டிங் பேபி...” அவன் செல்லமாய்ச் சிணுங்க... அவள் அவனை விட்டு தள்ளி நின்றவள்,

“அதெல்லாம் இதற்கு அப்புறம் தான்...” தன் கழுத்தில் கை வைத்து தாலி கட்டுவது போல் அவள் சைகை செய்ய... அதைக் கண்டவன் மனம் அடைந்த உவகைக்கு அளவே இல்லை.

“நிச்சயம் ஒரு நாள் இல்லை ஒரு நாள் நான் உனக்குத் தாலி கட்ட தான் போகிறேன். அப்போது வச்சிக்கிறேன் என் கச்சேரியை...” சிரித்தபடி அவன் கூற,

“அதை அன்னைக்குப் பார்ப்போம்...” என்றவள் பழிப்பு காட்டி விட்டு அறைக் கதவை நோக்கி செல்ல,

“பிள்ள பூச்சி மாதிரி இருந்த நீ... இப்போ இந்த வாய் அடிக்கிற? ஆரா... ஆழம் தெரியாமல் கால் வைச்சிட்டியோ?” அவளிடம் கேட்டவன்... பின் பாதியை தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

“அப்போ நான் வெறும் மயூரி...”

“இப்போ...” கேள்விக்கு விடை தெரிந்தாலும் அவள் வாயால் கேட்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

“இப்போ...” இழுத்தபடி நாணியவள், “மிசஸ். ஆரனாக்கும் நான்...” முகம் சிவக்க கூறியவள் கதவை திறந்து கொண்டு வெளியில் செல்ல...

அவளின் வார்த்தைகள் அவன் மனதில் முழுமையாய் இறங்கி அவன் மனதை இறகை போல் லேசாக்கியது. தன் இருக்கையில் அமர்ந்தவன் கண்களை மூடி கொண்டு பின்னால் சாய்ந்தான். அவள் கூறி சென்ற வார்த்தைகளை அவன் மனம் மெல்ல அசை போட்டது. அதுவே அவனுக்குச் சுகமாய் இருந்தது.

****

“சிறு சிட்டிகையாய் பாசம் பெரும் கடலாய் மாற
மணித்துளி எல்லாமே அரை நொடிக்குள் தீர
மழை தாரையாய் உள்ளம் பிசுபிசுப்பை பேண
எதற்கடி திண்டாட்டம் கதகதப்பை காண

நீ ராதை இனம் சொல்லாமல் சொன்னாயே
செங்கோதை மனம் உன் பேச்சில் தந்தாயே
உன்னாலே யோசிக்கிறேன் உன் விரலை பிடித்து
நடக்கும் நிமிடம் யாசிக்கிறேன்”

மயூரியின் மனக்கண்ணில் கல்யாண மேடையில் ஆரனின் கையைப் பிடித்துக் கொண்டு அக்னியை வலம் வரும் காட்சி வலம் வர... அந்நாள் இன்றே அமையாதோ...?

அப்படியே அவனின் கையைப் பிடித்துக் கொண்டு எங்கேயாவது சென்று விட மாட்டோமா? என்று அவள் மனம் அவனின் அருகாமைக்காக ஏங்கியது.

“உயிர் எதையோ தேடும் மனம் அதையே நாடும்
தனித் தனியே ரெண்டும் ஒரு வழியில் ஓடும்
எது எதற்கோ பொய்கள் எதிர் எதிராய் மெய்கள்
எது எதுவாய் ஆகும் விடை கடந்தே போகும்

கண்ணாடி முனை போல் எண்ணங்கள் கூராய்
முன் இல்லாததைப் போல் எல்லாமே வேறாய்
உன்னாலே பூரிக்கிறேன் உன் சிரிப்புச் சரத்தில்
மகிழ மரத்தில் பூ தைக்கிறேன்

கண்ணுக்குள் பொத்தி வைப்பேன் என் செல்ல கண்ணனே வா
தித்தித்ததை ஜதிக்குள் என்னோடு ஆட வா வா”

ஆரனின் காதலில் வீழ்ந்திருந்த மயூரியின் மனம் தனது பாவனைகளில் தன் மனதை மறைக்காது வெளிப்படுத்தியது. காதலில் கனிந்திருந்த மனம் அவளின் முகத்தைப் பூவாய் மலர செய்திருந்தது. அவளின் மனம் முழுவதும் அவனின் எண்ணங்களே ஆக்கிரமித்திருந்தது.

“வாவ் எக்ஸ்சலன்ட் மயூ...” மஞ்சரி அவளைக் கட்டி கொண்டாள்.

“உன் கண்கள் என்னமாய்க் காதலை வெளிப்படுத்துது...” என்று அக்காவின் நடனத்தைச் சிலாகித்தவள், “மயூ உன் மனதை கவர்ந்தவன் யாரு? அன்னைக்குப் புட் கோர்ட்ல பார்த்தோமே அந்த ஹேண்ட்சம் மேனா?” கண்சிமிட்டி கேட்ட தங்கையைக் கண்டு அவள் முகம் வெட்கத்தில் சிவந்து போனது.

“போடி... எதையாவது உளறாதே...” என்றவள் அறையை விட்டு வெளியேறினாள்.

“நீ சொல்லலைன்னா போ... நானே கண்டுபிடிக்கிறேன்...” மஞ்சரியின் வார்த்தைகள் அவளைத் துரத்தியது.

தங்கைக்குப் பதில் சொல்லாமல் மயூரி மொட்டை மாடிக்கு வந்தாள். அங்குக் காலை நேர காற்று இதமாய் வீசி அவளுக்கு இதத்தைக் கொடுத்தது. அவளின் மனம் போலவே அவளின் முகமும் பூரிப்பில் இருந்தது. காலை கதிரவனைப் பார்க்கும் போது அவளுக்கு ஏனோ ஆரனின் நினைவு வந்தது. அன்று இந்தச் சூரியனை போல் சுட்டெரிக்கும் பார்வையுடன் இருந்தவன்... இன்று காதலில் வீழ்ந்து அந்த நிலவை போல் அவன் குளிர்ந்து போனதை எண்ணி அவள் மனம் வியப்புற்றது. காதலுக்கு இவ்வளவு சக்தியா? அவள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே அவள் அலைப்பேசி அழைத்தது.

“இப்ப தான் உங்களை நினைச்சேன்... நீங்களே ஃபோன் பண்றீங்க. சொல்லுங்க ஆரன்...” அவளின் உற்சாகம் அவனையும் தொற்றிக் கொண்டது.

“நீயாவது இப்ப தான் நினைச்ச... ஆனா நான் உன்னை நினைக்காத நொடி இல்லை” ஏக்க குரலில் கூறியவன், “இன்னைக்கு உன்னை நான் பார்க்க முடியுமா?”

“இன்னைக்கு லீவ் நாளில் எப்படி? என்ன காரணம் சொல்லிட்டு நான் வெளியில் வர்றது?” அவள் தவிப்பாய் மறுக்க...

“ம்ஹூம்... அதெல்லாம் தெரியாது... ஈவ்னிங் பைவ் ஓ க்ளாக் நான் உன் வீட்டு தெரு முனையில் வெய்ட் பண்றேன். நீ கிளம்பி வா” என்றவன் அலைப்பேசியை அணைக்க...

‘எல்லாமே ஆர்டர் தான்... நான் சொல்வதைக் கொஞ்சம் காது கொடுத்து கேட்க கூடாதா?’ என்று போலியாய் அவள் சலித்துக் கொண்டாலும்... எப்போதடா மணி ஐந்து ஆகும்... எப்போது ஆரனை பார்க்கலாம் என்று அவளின் மனமும் அவனுக்காய் தவிக்கத் தான் செய்தது.

மாலையில் ஏதேதோ பொய் காரணங்களைக் கூறி அவள் வீட்டை விட்டு வெளியில் வருவதற்குப் போதும் போதுமென்று ஆகிவிட்டது. எங்கேயும் தனித்துச்

செல்லாதவள் இன்று தனியே செல்கிறேன் என்றால் அனைவருக்கும் சந்தேகம் வாராதா என்ன? ராகவன் தான் அவளைத் தைரியமாய் அனுப்பி வைத்தார். அவளின் குற்றமுள்ள நெஞ்சம் தந்தையின் நம்பிக்கையில் சிறிது குறுகுறுக்கத் தான் செய்தது. எல்லாம் அவனைப் பார்க்கும் வரையில் தான்... அவனைப் பார்த்த பின்போ அவனுக்காய் பொய் என்ன... எதையும் செய்யலாம் என்று அவளுக்குத் தோன்றியது.

“இங்கே உட்காரலாம்...” ஆரன் சொன்ன இடத்தில் மயூரி அமர, அவளுக்கு அருகில் அவன் அமர்ந்தான். இருவரும் கடற்கரைக்குத் தான் வந்திருந்தனர். தூரத்தில் அலையில் விளையாடி கொண்டிருந்தவர்களைப் பார்த்து கொண்டிருந்தவள் ஆரனின் மௌனத்தில் அவனைத் திரும்பி பார்த்தாள்.

“என்ன பேசாம இருக்கீங்க?”

“பேபி... உன்னைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்... அதே மாதிரி என்னைப் பத்தி உனக்கு...” அவன் முடிக்காமல் அவள் முகத்தைக் கேள்வியாய் பார்க்க...

“உங்களைப் பத்தி என்ன தெரியணும்? உங்க பேர் ஆரன்... ரொம்பத் திறமையானவர்... நல்லவர். அதிலும் எந்தப் பெண்ணையும் ஏறெடுத்து பார்க்காத உத்தம புத்திரன். இந்தச் சீதைக்கு ஏற்ற ராமன்...” என்றவள் பெருமையாய் அவன் கையைப் பிடித்துத் தன் கைக்குள் வைத்து கொண்டாள்.

அவளின் வார்த்தையில் அவன் அடைந்த சந்தோசத்திற்கு எல்லையே இல்லை. அவனின் நிம்மதியை சொல்ல வார்த்தைகள் கிடையாது. அவனுக்குத் தான் என்ன மாதிரியான நிம்மதியை கொடுத்திருக்கிறோம் என்பதை உணராமல் அவள் அவனைப் பார்த்து வெகுளியாய் சிரித்தாள்.

‘இன்று என்னை எனக்காய் விரும்பும் நீ... நாளை என்னைப் பற்றி முழு விவரமும் தெரிய வரும் போதும் இதே போல்

காதலிப்பாயா பேபி... அப்போதும் எனக்காய் நீ இருக்கிறாய் என்பதை உணர்த்துவாயா பேபி? இந்த உலகமே என்னை வெறுத்தாலும் கவலையில்லை... ஆனால் நீ என்னை வெறுத்து ஒற்றைப் பார்வை பார்த்தால்... அந்தக் கணம் நான் என்னாவேனோ பேபி... எனக்கே தெரியவில்லை?' அவன் மனம் ஊமையாய் புலம்பியது. அந்தக் காட்சியைக் கற்பனையில் கூட அவனால் காண முடியவில்லை. தலையைக் குலுக்கி தன்னைச் சமன் செய்தவன்,

'ம்ஹூம்... உன்னை யாருக்காகவும்... எதுக்காகவும் நான் விட்டு கொடுக்க மாட்டேன். நீயே என்னை வெறுத்து ஒதுக்கினாலும்... நான் உன்னை விட்டு போக மாட்டேன்... போகவே மாட்டேன்' மனதுக்குள் உறுதியாய் நினைத்தவன் அவளின் கையை இறுக பற்றிக் கொண்டான்.

“என்ன தோஸ்த்...? அலமாரியை திறந்து வச்சிட்டு என்ன யோசனை?” வருண் ஆரனிடம் கேட்டபடி அவனின் அறைக்குள் நுழைந்தான்.

வருணை கண்டதும் பட்டென்று அலமாரியை மூடிய ஆரன், “ஒண்ணுமில்லையே வருண்” தனது தடுமாற்றத்தை மறைத்துக் கொண்டு பேச,

“ஆங்... என் கிட்டேயே மறைக்கிறீங்களா? உண்மையைச் சொல்லுங்க... பார்ட்டிக்கு என்ன ட்ரெஸ் போடுறதுன்னு தானே யோசிக்கிறீங்க” வருண் பட்டென்று விசயத்தைப் போட்டு உடைத்து விட...

“அதெல்லாம் இல்லைடா...” அவன் சமாளித்தாலும் வருண் அவனை விடுவதாய் இல்லை.

“இப்போ புரியுதா தோஸ்த்... ஒரு பிகருக்கே நீங்க இவ்வளவு நேரம் என்ன ட்ரெஸ் போடுறதுன்னு யோசிக்கிறீங்களே... அப்படின்னா நான்... எனக்கு ஆயிரம் பிகர் இருக்கு தோஸ்த். நான் எவ்வளவு நேரம் யோசிக்கணும்? அன்னைக்கு என்னைச் சீக்கிரம் கிளம்பு... கிளம்புன்னு எப்படி நோகடிச்சீங்க? இப்போ தெரியுதா என்னை மாதிரி பசங்களோட வேதனை?” போலியான சோகத்துடன் அவன் சொல்ல...

“போடா... வேலையைப் பார்த்துட்டு...” ஆரன் அவனின் முதுகில் கை வைத்து அறைக்கு வெளியே தள்ளிவிட...

“ஆனாலும் தோஸ்த்... அண்ணிக்காக நீங்க இப்படி மாறி இருக்குறதை பார்க்கும் போது எனக்குச் சந்தோசமா இருக்கு” அவன் மனம் மகிழ்ந்து சொல்ல...

“வருண்...” ஆரன் அவனை அணைத்துக் கொண்டு நெகிழ... வருண் புரியாமல் அவனைப் பார்த்தான்.

“வொய் தோஸ்த் இந்தக் கட்டிப்புடி வைத்தியம்...?”

“என்னை உன் அண்ணனா நினைச்சியே... தேங்க்ஸ் டா...” உணர்ச்சிவசப்பட்டுக் கூறிய ஆரனை,

‘அய்யே...’ என்று அற்ப பதரை போல் ஒரு பார்வை பார்த்த வருண், “தோஸ்த்... நான் எப்போ உங்களை என் அண்ணன்னு சொன்னேன்?”

“இப்ப தானேடா... மயூவை அண்ணின்னு சொன்ன...!”

“அவங்கள தான் நான் அண்ணின்னு சொன்னேன். உங்கள நான் அண்ணன்னு சொன்னேனா? இல்லை சொன்னேனான்னு கேட்குறேன். நீங்க எப்பவும் எனக்குத் தோஸ்த் தான். இந்த அண்ணன், தம்பி செண்டிமெண்ட் எல்லாம் நமக்குள் ஒத்து வராது...” கூலாய் சொன்னவனைக் கொலைவெறியோடு பார்த்தான் ஆரன்.

“மயூ அண்ணின்னா... நான் உனக்கு அண்ணன் தானேடா. தயவுசெஞ்சு எங்க உறவு முறையை மாத்திடாதே...”

“இப்பவும் சொல்றேன் அவங்க என் அண்ணி தான்” என்றவனை முறைத்தான் ஆரன்.

“தோஸ்த் கூல்... கூல்” என்று அவனைச் சமாதானப்படுத்தியவன், “ஏன் அப்படிச் சொல்றேன்னா...” சட்டை நுனியை திருகி கொண்டு, கால் விரலால் தரையில் கோலம் போட்ட வருணை ஏதோ ஜந்துவை போல் விசித்திரமாய்ப் பார்த்து வைத்தான் ஆரன்.

“எனக்கு... எனக்கு...” அவன் இழுக்க...

“உனக்கு...?” ஆரன் சந்தேகமாய்ப் பார்க்க...

“எனக்கு அண்ணியோட தங்கச்சி மஞ்சரியை ரொம்பப் பிடிச்சியிருக்கு தோஸ்த்... கல்யாணம்ன்னு ஒண்ணு என் லைப்பில் நடந்தா அது அவ கூடத் தான். அதான் அவளோட அக்காவான மயூரியை அண்ணின்னு சொன்னேன். நான் என் டாலிக்காகத் தான் அப்படிச் சொன்னேன். உங்களுக்காக இல்லை”

“வருண்... காதல்...? அதுவும் நீ? ஜோக் அடிக்காதேடா” கேலியாய் ஆரன் கூற,

“தோஸ்த்... உண்மையா தான் சொல்றேன்... என் டாலி விசயத்தில் நான் விளையாடல” வருண் உறுதியாய் கூற... அவனை ஏதோ அதிசய பிறவியைப் போல் பார்த்து வைத்தான் ஆரன்.

“டேய்... பார்த்துடா வருண்... அவ மயூ மாதிரி கிடையாது. நீ தத்து பித்துன்னு எதையாவது சொல்லி... அவ கத்தியை எடுத்து சொருகிட போறா... ஜாக்கிரதைடா” ஆரன் எச்சரிக்க...

“நாங்க எல்லாம் சுனாமியிலேயே சுவிம்மிங் பண்ணினவங்க... என் வாழ்க்கையில் இந்த மாதிரி எத்தனை பொண்ணுங்களை நான் பார்த்திருக்கிறேன். இவ எல்லாம் எனக்கு ஜுஜுபி தோஸ்த்... அவளை என்னைக் காதலிக்க வச்சே தீருவேன்” அவன் தீர்மானமாய்ச் சொல்ல,

“அப்படின்னா அவ கிட்ட உனக்குக் கத்தி குத்துக் கன்பார்ம்... ஆல் த பெஸ்ட் வருண்” அவனின் கையைப் பிடித்துக் குலுக்கி வாழ்த்து சொன்ன ஆரன் மாலை கேளிக்கை விருந்திற்குச் செல்ல ஆயத்தமானான்.

****

“மயூ நானும் வர்றேன்டி... இந்த மாதிரி பார்ட்டிக்கு எல்லாம் நான் போனதே இல்லை. ப்ளீஸ்டி...” மஞ்சரி கெஞ்ச... மயூரியோ உறுதியாய் அவளை மறுத்தாள்.

“பார்ட்டி முடிய நேரமாகும் இல்லையா? நீ எப்படித் தனியா வருவ? நான் உனக்குத் துணையா வர்றேனே” அவளின் தைரியமின்மையைத் தனக்குச் சாதகமாக மஞ்சரி பயன்படுத்த நினைக்க...

மஞ்சரி துணை என்றதும் அவளின் கண் முன்னே ஆரனின் பிம்பம் எழுந்தது. அவனைப் பார்ப்பதற்காகத் தானே மஞ்சரி தன்னுடன் வருவதை அவள் மறுக்கிறாள்.

அவனுடன் கழிக்கப் போகும் இந்த இனிமையான மாலை நேரத்திற்கு இடைஞ்சலாக மஞ்சரி இருப்பாளே என்று தானே அவளைக் கழட்டிவிட்டு செல்ல எண்ணுகிறாள். ஆரனின் துணை இருக்கும் போது அவளுக்கு எதுக்கு மஞ்சரியின் துணை?

“வேணாம் மஞ்சு... அங்கே உனக்குத் தெரிந்தவர்கள் யாருமில்லை... சும்மா உட்கார்ந்துட்டு இருக்கிறது உனக்குப் போரிங்கா இருக்கும்” மழுப்பலாய் பதில் சொன்னவள் தங்கையை நேருக்கு நேராய் பார்ப்பதை தவிர்த்தாள்.

“மயூ... இப்போ எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகணும்?” இடுப்பில் இரு கைகளை ஊன்றியபடி அவள் முன் வந்து நின்றாள் மஞ்சரி.

“எ... என்ன... உண்மை?” தன்னைக் கண்டு கொள்வாளோ என்ற பயத்தில் திக்கி திணறினாள் அவள்.

“எங்கே போகணும்ன்னாலும் என்னைத் தான் துணைக்குக் கூப்பிடுவ? இப்போ என்ன புதுசா இப்படி நடந்துக்கிற?” சந்தேகமாய் அவளை மஞ்சரி பார்க்க... அவளோ மௌனித்தாள்.

“மயூ இப்போவெல்லாம் நீ ரொம்பத் தான் தைரியமாயிட்ட... எல்லாம் அந்த ஹீரோவோட ட்ரைனிங்கா?”

“யாரை சொல்ற?” ஒன்றும் தெரியாதவளாய் முகத்தை வைத்திருந்த மயூரியை முறைத்து பார்த்த மஞ்சரி,

“அதான் அன்னைக்குப் புட் கோர்ட்ல பார்த்தேனே... அவர் கண்ணாலே தைரியம் சொல்றதும்... நீ அப்படியே தலையாட்டி பொம்மை மாதிரி தலையைத் தலையை ஆட்டிட்டுப் போனதும்... பார்க்கவே கண் கொள்ளா காட்சியாய் இருந்ததே...” மஞ்சரி நீட்டி முழங்க... மயூரியின் முகம் சிவந்துவிட்டது.

அந்நேரம் பார்த்து அவளின் அலைப்பேசி ஒலிக்க... அவசரமாய் அதை எடுத்தவள் தங்கையை அருகில் இருப்பதை உணர்ந்து பேச தயங்கினாள்.

“யாரு...?” மயூரியின் அலைப்பேசியை எடுத்து பார்த்த மஞ்சரி... அதில் ஆரன் என்ற பெயரை பார்த்ததும் புருவத்தைச் சுருக்கி யோசித்தவளாய்...

“ஹேய்... இது அந்த ஹீரோ பேர் இல்லையா? ஆரன்ங்கிற இந்த வித்தியாசமான பேரை மறக்க முடியுமா? ஆமாம்... அவர் எதுக்கு இப்போ உன்னைக் கூப்பிடறாரு... சம்திங்... சம்திங்... ம்...” கண்ணைச் சிமிட்டி தங்கை கேட்டதில் மயூரியின் முகம் செம்பூவாய் மலர்ந்தது.

“அப்போ சம்திங்... சம்திங் இருக்கிறது உண்மை தானா?”

“மஞ்சு... போடி...” தங்கையின் வார்த்தையில் நாணியவள் ஆரனின் அழைப்பை துண்டித்து விட்டு... அவனுக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பி வைத்தாள். அதைப் பார்த்த மஞ்சரி,

“மயூ... அப்பாவி மாதிரி இருக்கிற உனக்குள்ள இப்படியொரு அமராவதி இருக்காங்கிற உண்மை எனக்குத் தெரியாம போச்சே. ஹ்ம்... என்னை மாதிரி வாயடிக்கிறவங்களைக் கூட நம்பிடலாம். ஆனால் உன்னை மாதிரி ஊமை கோட்டான்களை நம்பவே கூடாதும்மா” மஞ்சு கேலியாய் சொன்னதை உண்மை என்று நம்பி மயூரியின் கண்கள் கலங்கியது.

“மஞ்சு... நான் காதலிக்கிறது தப்பா?” தவிப்பாய் கேட்டாள் அவள்.

“ச்சே... ச்சே... என்ன மயூ இது கண் கலங்கிட்டு? காதலிக்கிறது தப்பே இல்லை மயூ. நம்ம அப்பா, அம்மா நிச்சயம் காதலுக்கு எதிரியில்லை. இவ்வளவு ஏன் நானே காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிறதா தான் முடிவு பண்ணியிருக்கேன். அதனால லவ் பண்றது ஒண்ணும் கொலை குத்தமில்லை. ஆனா உன்னோட ஆரன் ஆள் எப்படி? உனக்கு ஏத்தவர் தானா?”

“அவர் ரொம்ப நல்லவர்டி... நான் அவருக்கு ஏத்தவள் தானான்னு எனக்குத் தான் சந்தேகமாயிருக்கு”

“ஏன் உனக்கு என்ன குறை மயூ? உன்னைப் போல் ஒருத்தி கிடைக்க அவர் தான் கொடுத்து வைச்சிருக்கணும்” மயூரி தன்னைத் தானே தாழ்த்தி பேசியது மஞ்சரிக்கு பிடிக்கவில்லை.

“இல்லைடி... அவரைப் போல் ஒருவர் கிடைக்க நான் தான் கொடுத்து வச்சிருக்கணும்” என்றவள் ஆரம்பத்திலிருந்து அவள் மீதான ஆரனின் அனுசரணையை... அக்கறையைக் கூற,

“வாவ்... மாமா இஸ் அக் கிரேட் மேன் மயூ. இவ்வளவு கேர் எடுத்துக்கிற லவ்வர் கிடைச்சதுக்கு உண்மையில் நீ லக்கி தான்” மஞ்சரி ஆரனை ‘மாமா’ என்று விளித்ததிலேயே அவளின் சம்மதத்தைத் தந்துவிட்டாள். அதைக் கேட்டு மயூரியின் மனம் சந்தோசமடைந்தது.

“எல்லாம் சரி தான்... நீ எப்போ வீட்டில் உன் லவ்வை சொல்ல போற?”

“சொல்லணும்... ஆனா பயமாயிருக்கு?”

“மயூ... நான் தான் சொன்னேனே நம்ம வீட்டில் ஒண்ணும் சொல்ல மாட்டாங்கன்னு. அப்புறம் எதுக்குப் பயப்படற? வேணும்ன்னா நான் சொல்லவா?”

“ஐயோ... வேணாம்... நான் அவர் கிட்ட கேட்டுட்டு... அதுக்கப்புறம் சொல்லிக்கிறேன். நீ அவசரப்படாதே...”

“அடேங்கப்பா... அவர் சொன்னா தான் நீங்க செய்வீங்களோ? என்னவொரு தெய்வீக காதல்!” மஞ்சரி கிண்டலடிக்க...

“போடி சும்மா சும்மா கிண்டலடிச்சிட்டு... உன்னைப் பார்ட்டிக்கு கூட்டிட்டு போகலாம்ன்னு பார்த்தேன்... இப்போ இது தேவையான்னு யோசிக்கிறேன்”

“மயூ அப்படியெல்லாம் சொல்லிடாதேடி... நானும் உன் கூட வர்றேன்டி” என்ற மஞ்சரி அவசரமாய் அவளுடன் கிளம்பி சென்றாள்.

அவர்களின் கம்பெனிக்கு மேல்தளத்தில் தான் கேளிக்கை விருந்து நடைபெற்றது. மாலை வேளையில் மிதமான வெளிச்சத்தில் அந்த இடமே சொர்க்கமாகக் காணப்பட்டது. நண்பர்கள் குழாம் அங்காங்கே அமர்ந்து கொண்டு அரட்டை அடித்துக் கொண்டிருந்தது. மேற்கத்திய இசை மெலியதாய் காற்றோடு வழிந்து வந்தது. மயூரியை கண்டதும் நண்பர்களிடம் பேசி கொண்டிருந்த ஆரன் அப்படியே ஓடி வந்தான்.

“ஹாய் பேபி...” உற்சாகமாய் வரவேற்ற ஆரனின் முகத்தைப் பருகுவது போல் பார்த்தாள் மயூரி.

“என்ன பேபி... பார்வை எல்லாம் பலமாயிருக்கு? நான் என்ன அவ்வளவு அழகாவா இருக்கேன்?” அவள் காதுக்கருகில் குனிந்து அவன் கேட்க...

“ம்... எனக்கு நீங்க எப்பவுமே அழகு தான்” என்றவளின் கையைக் காதலோடு பற்றிக் கொண்டான் அவன்.

“மாமா... என்னை எல்லாம் கண்டுக்க மாட்டிங்களா?” மஞ்சரி அவன் முகம் பார்த்து கேட்க... அவனோ அவளைப் பார்த்து, ‘யார் இவள்?’ என்று யோசிக்க ஆரம்பித்தான்.

“பேபி... இது...?” அவன் இழுக்க...

“என் தங்கை மஞ்சரி... அன்னைக்குப் புட் கோர்ட்ல பார்த்தோமே” மயூரி அவனுக்கு நியாபகப்படுத்த... அவனோ தன் நியாபக அடுக்கில் தேடி தோற்று போனவனாய்,

“சாரி பேபி... நியாபகம் இல்லை...” என்று அவளிடம் மன்னிப்பு கேட்டவன், மஞ்சரியிடம்,

“வணக்கம்...” என்று கையைக் குவிக்க... அவள் ஆச்சிரியத்துடன் அவனைப் பார்த்தாள்.

மயூரியை காணும் போது அவன் கண்ணில் தோன்றும் காதல், முகத்தில் இருக்கும் கனிவு... இதெல்லாம் தன்னைப் பார்க்கும் போது இல்லாது போவதை ஒருவித

ஆச்சிரியத்துடன் பார்த்தாள் மஞ்சரி. ஒருவர் எப்போதுமே தன்னை நேசிப்பவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தான் செய்வர். அதற்காக அடுத்தவர்களிடம் கடுகடுவென்று இருக்க வேண்டிய அவசியம் என்ன? என்ற கேள்வி அவளின் தலையைக் குடைந்தது.

“ஹாய் மயூ... “ என்றபடி அங்கே வந்த வருண், “ஹாய்...” என்றான் மஞ்சரியை பார்த்து.

அவனின் வரவேற்பில் தன் மனதில் தோன்றிய கேள்வியைத் தள்ளி வைத்த மஞ்சரி அவனைப் பார்த்து சிரித்து வைத்தாள். அதுவே அவனுக்கு அவளுடன் பேசுவதற்குப் போதுமானதாய் இருந்தது.

“வா பேபி... நாம அங்கே போகலாம்” ஆரன் மயூரியை அழைக்க... அவளோ தங்கையைக் கண்டு தயங்கினாள்.

“நீ போ மயூ... அதான் சார் இருக்காரே...” மஞ்சரி காதலர்களுக்குத் தனிமை கொடுக்க எண்ணி அப்படிச் சொல்ல...

“நான் பார்த்துக்கிறேன் மயூ... நீங்க போங்க...” வருணும் தன் பங்கிற்குச் சொல்ல... மயூரி ஆரனுடன் நடந்தாள்.

“அப்புறம் மஞ்சு... உங்களைப் பத்தி சொல்லுங்க” வருண் பேச்சை ஆரம்பிக்க...

“என்னைப் பத்தி அதுவும் உங்க கிட்ட சொல்ல என்ன இருக்கு?” கேள்வியாய் புருவத்தை உயர்த்தினாள் மஞ்சரி.

‘எடுத்தவுடனே இவ்வளவு பெரிய நோஸ்கட் கொடுத்தா எப்படிச் செல்லம்? இப்ப பாரு மாமாவுக்கு எப்படி வலிக்குதுன்னு?’ அவளின் உதாசீனம் தாங்க முடியாமல் மனதுக்குள் புலம்பியவன்,

“என்னங்க இப்படிச் சொல்லிட்டீங்க? அவங்க வர்ற வரைக்கும் பொழுது போகணுமேன்னு தான் கேட்டேன். அதைப் போய் நீங்க தப்பா எடுத்துக்கிட்டீங்களே?” சோகமாய்ச் சொன்னவன், “என்ன இருந்தாலும் தோஸ்த்

அளவுக்கு நாம பெர்சனாலிட்டி இல்ல தான்... அவருக்கு எங்கேயோ மச்சம் இருக்கு" ஆரனை நினைத்து பெருமூச்சு விட்டான்.

அவன் புலம்பியது மஞ்சரியின் காதில் விழுந்துவிட்டது. எங்கேயோ பார்த்து கொண்டிருந்தவள் அவன் புறம் திரும்பினாள். ஆரன் அளவுக்கு இல்லையென்றாலும் வருணும் அழகாகத் தான் இருந்தான். ஆரனிடம் இல்லாத சிரிப்பு இவனிடத்தில் இருந்ததைக் கண்டாள். அதிலும் துருதுருவெனக் குறும்புக்கார குழந்தை போலிருந்த அவனின் தோற்றம் அவளின் மனதிற்கு நிறைவை தான் கொடுத்தது.

"மிஸ்டர். வருண்... நீங்களும் அழகு தான். உங்க தோஸ்தை விட நல்ல பெர்சனாலிட்டி உங்களுக்கு இருக்கு" திடுமென அவள் சொன்னதைக் கேட்டு அவன் முகம் மலர்ந்தது.

"இஸ் இட்?" என்றவன் அவளிடம் பேச்சை வளர்க்க... அவளும் அதற்குத் தகுந்தார் போல் பதிலளிக்க ஆரம்பித்தாள்.

"பேபி... உன் தங்கச்சி என்னை மாமான்னு கூப்பிடறா? அவளுக்கு நம்ம விசயம் தெரியுமா?" ஆரன் கேட்க...

"ம்..."

"அப்போ நல்லதா போச்சு. அவளே உங்க வீட்டில் சொல்லிடுவா என்ன... நமக்கு ஒரு வேலை மிச்சம்" சிரித்தபடி சொன்னவன்... மது கோப்பைகளைக் கையில் ஏந்தியபடி வந்த பேரரிடம் இருந்து ஒரு கோப்பையைத் தன் கையிலெடுத்தான்.

"நீங்க குடிப்பிங்களா?" ஆரனின் கையிலிருந்த மது கோப்பையைக் கண்டு மயூரி அச்சத்துடன் கேட்க...

"ம்... லேசா... இது மாதிரி பார்ட்டிக்கு வந்திட்டு குடிக்காம இருந்தா... ஒரு மாதிரி பார்ப்பாங்க அதான். அதுக்காக என்னை மொடா குடிக்காரன் ரேஞ்சுக்கு தின்க் பண்ணிடாதே" சிறு சிரிப்புடன் அவன் பதிலளித்தான்.

“ஒரு துளி விசம்ன்னாலும்... ஒரு பாட்டில் விசம்ன்னாலும்... அதோட வேலை உயிரை பறிக்கிறது தான். அது மாதிரி தான் குடிக்கிறது உடல் நலனை கெடுக்கும். அதுல கொஞ்சமாய்க் குடிச்சா என்ன... அதிகமாய்க் குடிச்சா என்ன? உடம்பு கெடுறது உறுதி” முகத்தைச் சுழித்துக் கொண்டு அவள் சொல்ல... அவன் ஒன்றும் பேசாமல் மீண்டும் அந்தப் பேரரை அழைத்துத் தன் மது கோப்பை கொடுத்து விட்டான்.

“இப்போ சந்தோசமா பேபி?” அவன் கேட்க... தன் வார்த்தைக்குக் கட்டுப்பட்ட அவனின் செயலில் ஆனந்தம் அடைந்தவளாய் தலையை ஆட்டினாள்.

“ஹாய் ஆரன்...” அவர்களுடன் வேலை செய்யும் சந்துரு அங்கே வந்தான். ஆரனின் அருகிலிருந்த மயூரியை கண்டவன், “ஹாய் மயூரி...” அவளிடம் அவன் பேச... அவளோ அவனுக்குப் பதில் பேசாமல் நத்தையாய் கூட்டுக்குள் சுருங்கினாள். அதைக் கண்டு சந்துருவின் முகம் கன்றியது.

“என்ன சந்துரு... எப்போ வந்தீங்க?” ஆரன் சகஜமாய்ப் பேசி அந்தச் சூழ்நிலையைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். சிறிது நேரம் பேசிவிட்டு சந்துரு போனதும் ஆரன்,

“என்ன பேபி... அவன் கேட்டதுக்குப் பதில் சொல்ல வேண்டியது தானே. ஏன் தயங்குற?”

“எனக்கு மத்தவங்க கிட்ட பேச பயமாயிருக்கு” தன் பயத்தைத் தயக்கத்தை அவள் சொல்ல...

“பேபி... பேபி... என் பேபி...” என்றபடி அவளின் தோளில் தன் கையை வைத்து ஆறுதலாய் அணைத்தவன், “எல்லார் கிட்டேயும் சகஜமா பேசுறதுக்கு என்ன பேபி? நம் மனசுல எந்தவித தப்பும் இல்லைங்கிறப்போ... பேசுறதுக்கு என்ன தயக்கம்? அதுவும் நான் உன் கூட இருக்கும் போது... உனக்கு என்ன பேபி பயம்?” அவள் காதுக்கருகில் அவன்

சொல்ல... அவனின் வார்த்தைகள் அவள் இதயத்தின் ஆழத்தை சென்றடைந்தது.

“ம்ஹூம்... நான் பயப்படவே மாட்டேன்... நீங்க என் கூட இருக்கும் போது நான் பயப்படவே மாட்டேன்” என்றவள் அவன் தோளின் மீது நிறைவோடு சாய்ந்து கொண்டாள். இன்னும் கொஞ்ச நாளில் இதே வார்த்தைகளைத் தான் மாற்றிப் பேச போகிறோம் என்பதை அறியாமல் அவள் சொன்னாள்.

****

“அய்யா... உங்களைப் பார்க்க மயூரியை நான் இங்கே அழைச்சிட்டு வரவா?” தன் முன் அனுமதி கேட்டு நின்ற ஆரனை யோசனையாய் பார்த்தார் நல்லசிவம்.

“இங்கே எதுக்கு ஆரா... வேணாமே?” அவர் மறுக்க...

“இங்கே என்ன குறைச்சல் அய்யா? ஏன் வேணாம்ன்னு சொல்றீங்க?”

“ஆரா... நான் கேட்கிறதுக்குப் பதில் சொல்லு... உன்னைப் பத்தின எல்லா உண்மையையும் அந்தப் பொண்ணு கிட்ட சொல்லிட்டியா?”

“இல்லை...” அவன் மறுப்பாய் தலையசைக்க...

“அப்புறம் எந்த நம்பிக்கையில் அவளை இங்கே கூட்டிக்கிட்டு வரணும்ன்னு நீ பிரியப்படுற? இங்கே வந்து பார்த்தால் உன்னைப் பத்தின எல்லா விவரமும் அவளுக்குத் தெரிஞ்சு போகும். அதுவே உங்க ரெண்டு பேருக்கும் இடையில் பெரிய விரிசலை உண்டாக்கிடும் ஆரா...”

“அய்யா... என் வாழ்க்கையில் முடிந்து போன அத்தியாயங்களை நான் புரட்டி பார்க்க விரும்பல. அது அவளுக்கும் தேவையில்லாத பகுதி. இப்போ இருக்கிற ஆரனை மட்டும் அவள் நேசித்தால் போதும். பழைய ஆரனின் வாழ்க்கை அவளுக்குத் தேவையற்றது. அப்படியே

அவளுக்குத் தெரிந்தாலும் அதைப் பத்தி பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டாள். என்னை எனக்காக விரும்புகிறவள் அவள்... இந்த ஒரு காரணத்துக்காக அவள் என்னை வெறுக்க மாட்டாள்" அவன் குரலிலிருந்த நம்பிக்கையைக் கண்டு அவருக்குச் சந்தோசமாயிருந்தது.

"அப்படியென்றால் எனக்கும் சந்தோசம் தான் ஆரா. இருந்தாலும் நீ அவளை இங்கே கூட்டி கொண்டு வர வேணாம். நானே உன் வீட்டுக்கு வந்து பார்க்கிறேன்" அவர் சொல்ல... அவனும் சம்மதமாய்த் தலையசைத்தான்.

இன்னும் சில நாட்களில் அவள் மீது தான் வைத்திருக்கும் நம்பிக்கை ஆட்டம் காண போவதை அப்போது அவன் அறிந்திருக்கவில்லை.

“வாம்மா... வா... வா...” ஆர்ப்பாட்டமாய் மயூரியை வரவேற்றார் நல்லசிவம். அவரின் உரத்த குரலும், முரட்டுத்தனமான தோற்றமும் கண்டு பயந்து போனவள் ஆரனின் முதுகிற்குப் பின் மறைந்து கொண்டாள்.

வருண் தன் பெற்றோரை பார்ப்பதற்காகப் பெங்களூர் சென்றிருந்தான். இது தான் நல்ல சமயம் என்றெண்ணிய ஆரன்... நல்லசிவத்திற்கு மயூரியை அறிமுகப்படுத்துவதற்காக இருவரையும் தன் வீட்டிற்கு அழைத்திருந்தான்.

“மயூ... முன்னாடி வா மயூ... இவர் எனக்கு அப்பா மாதிரி... இவரைப் பார்க்க தான் உன்னை அழைச்சிட்டு வந்தேன்” ஆரன் தன் பின்னால் கை விட்டு அவள் கையைப் பிடித்து முன்னால் இழுத்தான்.

“என்னம்மா... பயந்துட்டியா? என்ன செய்றது என் குரலே அப்படித்தான்... வா தாயி இங்கே வந்து உட்காரு...” தன் அருகிலிருந்த நாற்காலியை சுட்டி காட்டி அவர் சொல்ல...

அவரின் வார்த்தையிலிருந்த கனிவில் அவரை நிமிர்ந்து பார்த்தவள் சற்றுப் பயம் அகன்றவளாய் அவர் அருகில் சென்று அவர் காலில் விழுந்தாள். அவளின் செய்கையில் அவர் பதறி போனவராய் எழுந்தவர்,

“நீ ஏன்மா என் காலில் எல்லாம் விழுந்திட்டு.... முதல்ல எழுந்திரும்மா...” அதைச் சொல்லும் போதே அவர் குரல் தழுதழுத்தது.

“அவருக்கு அப்பா மாதிரின்னா எனக்கு நீங்க மாமனார் இல்லையா? அதிலும் வயசில் பெரியவர் நீங்க... உங்க காலில் விழுறது ஒண்ணும் தப்பில்லையே?” அவளின் பேச்சில் ஆரனின் மனமும் நெகிழ்ந்திருந்தது.

“இங்கே வாங்க...” ஆரனை அழைத்தவள் அவனோடு சேர்ந்து மீண்டும் அவரின் காலில் விழுந்து ஆசிர்வாதம்

வாங்கினாள்.

“நல்லாயிருங்க... இதே மாதிரி ஒத்துமையோட... மனமொத்த தம்பதியரா நீண்ட நாட்கள் வாழ... அந்த எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கிறேன்” அவர் அடிமனதிலிருந்து வார்த்தைகள் வெளிவந்தது.

“அப்புறம் சொல்லும்மா... இந்த அடாவடி பயலை பார்த்து நீ காதலில் தொபக்கடீர்ன்னு விழுந்த கதையைச் சொல்லு” ஆரனின் முதுகில் விளையாட்டாய் தட்டியபடி சிரித்தவரை கண்டு இப்போது அவளுக்குப் பயம் வரவில்லை. மாறாகச் சிரிப்பு வந்தது அவளுக்கு.

“அவங்க ஒண்ணும் அடாவடி இல்லை. ரொம்ப நல்லவங்க...” தன்னவனை விட்டுக் கொடுக்காமல் அவள் சொல்ல... அதைக் கேட்டு ஆரனின் முகத்தில் பெருமிதம் வந்தது.

“ஹா... ஹா... ரொம்ப நல்லவனா? அது எப்படிம்மா காதலில் விழுந்தவங்க எல்லோரும் ஒரே மாதிரியே பேசுறீங்க. ஆரா... ரொம்ப நல்ல அருமையான பெண்ணைத் தான் தேர்வு செஞ்சிருக்க” அவரின் வார்த்தையில் அவனின் மனம் நிறைந்தது.

அவன் காதலோடு அவளைப் பார்க்க... அவளோ அவனின் பார்வையில் முகம் சிவந்து தலை குனிய... இருவரின் பார்வை பரிமாற்றத்தை பார்த்து கொண்டிருந்தவருக்குப் பெரும் கவலை மனதை விட்டு அகன்றது. இனி ஆரனின் வாழ்க்கையில் வசந்தம் மட்டுமே என்ற நம்பிக்கை அவர் மனதில் எழுந்தது.

“அம்மாடி... எனக்குக் குடிக்கக் கொஞ்சம் தண்ணி கொண்டு வர்றியா?” அவர் அவளிடம் சொல்ல...

“நான் கொண்டு வர்றேன் அய்யா...” என்றபடி ஆரன் உள்ளே செல்ல எத்தனிக்க...

“நீ இரு ஆரா... மயூரி எடுத்திட்டு வரட்டும்” அவர் குரலிலிருந்த அழுத்தம் அவனை அப்படியே அமர செய்தது.

மயூரி உள்ளே சென்றதும்,

“ஆரா... முதன்முறையா மருமகளைக் கூட்டிட்டு வந்திருக்க... கொஞ்சம் ஸ்வீட்டும், பூவும் வாங்கிட்டு வா” அவளிடம் அவர் தனித்துப் பேச விரும்புகிறார் என்பதை உணர்ந்து கொண்ட ஆரன்,

“சரி அய்யா...” என்றவன், “மயூ கிட்ட சொல்லிட்டு போறேன்” என்க,

“ஏன் சொல்லாம போக மாட்டீங்களோ?” கேலியாய் கேட்டவர், “ம்... நடத்து நடத்து...” கையை ஆட்டி சொல்ல... அவன் வெட்கத்துடன் உள்ளே சென்றான்.

சமையலறையில் தம்பளரை கழுவி கொண்டிருந்த மயூரி அவனின் வருகை உணர்ந்து திரும்பினாள்.

“காபி குடிச்ச கிளாசை கூடக் கழுவி வைக்க மாட்டீங்களா?” இயல்பாக அவனைப் பார்த்து சொன்னவளின் அழகு அவனைத் தடுமாறச் செய்தது.

சேலை முந்தானையை இழுத்து சொருகி கொண்டு அவள் வேலை செய்த பாங்கு அவனின் மனதை கவர்ந்தது. தன் வீட்டில் தன் மனதுக்கினியவள் உரிமையோடு வேலை செய்தது அவனுக்கு இதமாய் இருந்தது. தான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்து கொண்டிருந்தவனை ஒற்றைப் புருவத்தை உயர்த்தி ‘என்ன?’ என்பது போல் அவள் பார்க்க... அவன் ஒன்றுமில்லை என்று தலையசைத்தான்.

“உங்களுக்கும் தண்ணி வேணுமா?” நீர் நிரம்பிய தம்பளரை அவன் முன் நீட்ட...

“வேணாம்... அய்யாவுக்குக் கொண்டு போய்க் குடு” என்றவன், “நான் கடைக்குப் போயிட்டு வந்திடறேன். நீ அய்யா கூடப் பேசிட்டு இருக்கியா?”

“ம்... சரி... நீங்க போயிட்டு வாங்க” சிறிதும் யோசிக்காமல் பதில் கூறியவளை நிம்மதியுடன் பார்த்தவன் வெளியில்

கிளம்பினான்.

“ஆரனை உனக்குப் பிடிச்சியிருக்கு தானே?” நல்லசிவத்தின் கேள்வியில் முகம் மலர்ந்தவள், “ரொம்பப் பிடிச்சியிருக்கு மாமா”

“அது போதும்மா... அப்புறம் உன் அப்பா, அம்மா என்ன பண்றாங்க?” என்று அவள் வீட்டை பத்தி கேட்டு தெரிந்து கொண்டவர், “ஆரனை பத்தி உனக்கு ஏதும் தெரியுமாம்மா? அதாவது அவன் குடும்பத்தைப் பத்தி?”

“அவரைப் பத்தி எனக்கு நல்லா தெரியும். ஆனா அவர் குடும்பத்தைப் பத்தி எனக்கு ஒண்ணும் தெரியாது. அவர் சொல்லவும் இல்லை. அவருக்கு என்னிடம் சொல்லணும்னு தோணியிருந்தா அவரே சொல்லியிருப்பாரு. அவர் தேவையில்லைன்னு நினைக்கிறப்போ... எனக்கும் அது தேவையில்லை” அமைதியாய் சொன்னவளின் பதில் அவருக்குப் பிடித்துப் போனது.

“ஆரன் ரொம்பக் கொடுத்து வச்சவன்... உன்னை மாதிரி நல்ல பெண் மனைவியாய் அமைவதற்கு...” அவரின் வார்த்தைகள் அவளின் முகத்தைச் செம்மையுற செய்தது.

“ஆரன் வாழ்க்கையில் ரொம்பவே அடிபட்டுட்டான்... கஷ்டப்பட்டுட்டான். நீ தான்ம்மா அவனின் வலிகளுக்கு மருந்தாய் இருக்கணும். அவனின் நொந்து போன இதயத்துக்கு ஆறுதலாய் இருக்கணும். அவனுக்குக் கொஞ்சம் முன் கோபம் அதிகம். அந்த மாதிரி நேரத்தில் நீ கொஞ்சம் அனுசரித்து நடந்துக்கோம்மா. அதே சமயம் அன்பானவனும் கூட. பலாப்பழம் மாதிரி அவன்... வெளியே கரடுமுரடா தெரிந்தாலும்... உள்ளே அவன் அந்தப் பலாச்சுளை மாதிரி இனிப்பானவன்” ஆரனை நினைத்து அவரின் முகத்தில் வேதனையின் சாயல் படிந்தது.

அவர் கூறியதை கேட்டுக் கொண்டிருந்த மயூரியின் உள்ளமும் ஆரனுக்காய் உருகியது. ‘பாவம் அவர்... என்ன மாதிரியான கஷ்டங்களை அவர் அனுபவித்தாரோ? என்ன மாதிரி வருந்தினாரோ? நொந்து போனாரோ? அவரின்

கடந்த கால வேதனைகளை என் அன்பால் துடைத்தெறிவேன். அவருக்கு எல்லாமுமாய் நான் இருப்பேன்' மனதுக்குள் உறுதி எடுத்து கொண்டவள் நல்லசிவத்திடம்,

"நீங்க கவலையே பட வேணாம். நான் அவரை நல்லா பார்த்துக்குவேன்" அவள் ஆறுதலாய் பதிலளிக்க... அதில் அவர் முகம் மலர்ந்தது.

"ரொம்பச் சந்தோசம்மா..." என்றவர், அவளைக் கூர்ந்து நோக்கி விட்டு, "உனக்குப் பரதநாட்டியம் தெரியுமா?"

"ம்... தெரியும்" 'இவருக்கு எப்படித் தெரியும்?' என்று வியப்பாய் அவரைப் பார்த்தாள்.

"அதான் உன் வாயை விட உன் கண்கள் அழகாய் பேசுதே" அவர் சொல்லி கொண்டிருக்கும் போதே ஆரன் உள்ளே நுழைந்தான்.

"வாப்பா ஆரா... மயூரிக்குப் பரதநாட்டியம் தெரியுமாமே... உனக்கு அது தெரியுமா?"

"தெரியாதே அய்யா..." அவரிடம் பதில் சொன்னவன் கண்கள், 'என்னிடம் மறைத்துவிட்டாயே' என்று அவளைக் குற்றம் சாட்டியது. அதில் அவள் உள்ளம் தவித்துப் போனது.

"கல்யாணத்துக்கு அப்புறம் அவளை வீட்டில் முடக்கி அவளின் திறமையை வீணடிச்சிறாதே ஆரா. அவளோட திறமையை நீ தான் ஊக்குவிக்கணும்"

"கண்டிப்பா அய்யா..." அவரிடம் பணிவாய் பதில் சொன்னவன், "எங்களுக்காக ஒரு டான்ஸ் ஆட கூடாதா மயூ" அவளிடம் இறைஞ்சுதலாய் கேட்க... திடீரென்று அவன் ஆட சொன்னதும் திகைத்து போனவளாய் தலையை இடமும் வலமும் அசைத்து மறுத்தாள்.

"வேணாமே..." கண்களில் கெஞ்சலுடன் சொல்ல...

"எனக்காக ஆட மாட்டியா?" அவனின் வார்த்தையில் சிறிது கோபம் எட்டி பார்த்ததோ...?

“ஆரா... பாவம் சின்னப் பெண்ணை இப்படிப் போட்டு மிரட்டாதே” நல்லசிவம் அவனை அமைதி படுத்தினார்.

“வேணும்ன்னா பாட்டு பாடவா?” அவனின் கோபம் அவளை மிகவும் பாதித்தது. அவள் கண்கள் ‘என்னைப் புரிந்து கொள்ளேன்’ என்று அவனிடத்தில் யாசித்தது.

“இல்லை நீ ஆடியே ஆகணும்...” அவன் விடாப்பிடியாய் தன் நிலையில் நிற்க, வேறுவழியின்றி அவள் சம்மதமாய்த் தலையசைத்தாள். கண்களை மூடி கொண்டு சிறிது நேரம் யோசித்தவள் பின் மெல்லிய குரலில் பாடியபடி ஆடினாள்.

“சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா
சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா செல்வக் களஞ்சியமே
என்னைக் கலி தீர்த்தே உலகில்
என்னைக் கலி தீர்த்தே உலகில் ஏற்றம் புரிய வந்தாய்

சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா சின்னஞ்சிறு கிளியே

பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா பேசும் பொற்சித்திரமே
பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா பேசும் பொற்சித்திரமே
அள்ளி அணைத்திடவே என் முன்னே
அள்ளி அணைத்திடவே என் முன்னே ஆடி வரும் தேனே

சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா சின்னஞ்சிறு கிளியே”

அவள் காட்டிய பாவத்தில், உருக்கத்தில் ஏதோ அதிசயத்தைக் கண்டவர் போல் பிரமித்துப் போய் அமர்ந்திருந்தார் நல்லசிவம். கண்களில் பயத்தைத் தேக்கியபடி நின்ற அந்தச் சிறு பெண்ணிடம் அவர் இத்தகைய திறமையை எதிர்பார்க்கவில்லை. ஆரனோ அவள் மீது வைத்த தன் கண்களை அங்குமிங்கும் திருப்பவில்லை.

“கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளந்தான் கள்வெறி கொள்ளுதடி
கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளந்தான் கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா உன்மத்தமாகுதடி

உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா உன்மத்தமாகுதடி”

பாடலின் வரிகளுக்கு அவள் கண்கள் காட்டிய பாவனையில் அவனுக்கு அவளின் கன்னத்தில் முத்தமிடும் வெறியை கிளப்பியது. அவளைத் தழுவாமலே அவள் அழகு கண்டு அவன் மனம் அவளிடத்தில் பித்தானது.

“உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி
உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி
என் கண்ணில் பாவையன்றோ கண்ணம்மா
என் கண்ணில் பாவையன்றோ கண்ணம்மா என்னுயிர் நின்னதன்றோ?”

பாரதியின் பாடலுக்கு உருகாதவர் யாரும் உண்டோ? இந்த வரிகளில் அவனின் நெஞ்சில் உண்மையிலேயே உதிரம் வடிந்தது. ஏனெனில் அவள் கண்களில் கண்ணீர் வழிந்தால் அதைத் தாங்கும் சக்தி அவனுக்குக் கிடையாது என்பதை அந்தக் கணம் அவன் உணர்ந்தான். ஆனால் இனி வரும் காலங்களில் அவளின் கண்ணில் வழியும் கண்ணீருக்கு தானே பொறுப்பாகப் போகிறோம் என்பதை அப்போது அவன் உணரவில்லை.

மயூரி ஆடி முடித்தவள் முதலில் அவனைத் தான் பார்த்தாள். அவளை விழுங்கி விடுவது போல் பார்த்த அவனின் பார்வையில் அவள் முகம் வெட்கத்தில் சிவக்க அவன் கண்களைச் சந்திக்க முடியாமல் தலையைக் குனிந்தாள்.

“ரொம்ப நல்லா ஆடறம்மா... அந்தத் தெய்வத்தோட அனுக்கிரகம் உனக்கு நிறைய இருக்கும்மா” நல்லசிவம் அவளைப் பாராட்டி கொண்டிருக்கும் போதே, அவரின் அலைப்பேசி அழைத்தது. எடுத்து பேசிவிட்டு வைத்தவர் பரபரப்புடன், “ஆரா... நம்ம தாமஸ் காலேஜ் அட்மிசன் விசயமா அந்தக் காலேஜ் சேர்மன் கிட்ட அப்பாயின்ட்மென்ட் கேட்டு இருந்தேன். அவர் என்னடான்னா இப்பவே வர சொல்றாரு”

“நல்ல விசயம் தானே அய்யா... நீங்க போயிட்டு வாங்க”

“அம்மாடி மயூரி... இன்னொரு நாள் சாவகாசமா உன்கிட்ட பேசுறேன். இப்போ நான் கிளம்பறேன்ம்மா...” மயூரியிடமும் அவர் விடைபெற்று கிளம்பினார்.

“பேபி... உனக்கு டான்ஸ் தெரியும்ன்னு சொல்லவே இல்ல” அவன் கேட்டுக் கொண்டே அவள் அருகில் வர,

“நீங்க கேட்கவே இல்லையே” அவனைப் போல் குறும்பாய் சொன்னவள் நிமிர்ந்து பார்க்க... அங்கே அவனின் பார்வையில் தெரிந்த வித்தியாசத்தில் திகைத்து போனவள் என்ன செய்வது? என்று தெரியாமல் தலையைக் குனிந்தாள்.

“உட்காரு...” என்று அவளை நாற்காலியில் அமர வைத்தவன் அவள் எதிர்பாராத நேரத்தில் அவள் காலடியில் அமர்ந்து அவளின் இரு கால்களையும் எடுத்துப் பாதத்தில் முத்தமிட்டான். அவனின் செய்கையில் பதறி போனவளாய் அவன் அருகில் கீழே அமர்ந்தவள் தன் காலை அவன் பிடியிலிருந்து விடுவிக்கப் போராட...

“ம்ப்ச்... எதுக்கு எடுக்கற? இவ்வளவு அழகா ஆடிய உன் கால்களுக்கு என்னால் கொடுக்க முடிந்த சிறு காணிக்கை” அவளின் கால் விரல்களை வருடியபடி அவன் சொல்ல... அவளோ அவனின் செயலில் கூச்சமடைந்தவளாய்,

“ப்ளீஸ் ஆரு... வேணாமே” அவள் சொன்னது அவளுக்கே கேட்டிருக்கவில்லை.

“ஹேய்... என்ன சொன்ன சொல்லு... சொல்லு...?” அவன் குதூகலத்துடன் கேட்க, அவள் புரியாமல் விழித்தாள்.

“ஆரு... ம்... ரொம்ப நல்லாயிருக்கு பேபி” அவன் கண்ணைச் சிமிட்டி சொல்லிய பாவனையில் அவள் முகம் செம்மையுற்றது.

“பேபி என்னை உனக்குப் பிடிச்சியிருக்கா?” காதலுடன் அவளைப் பார்த்தபடி அவன் கேட்க... அவனின் கேள்வியில்

அவள் களுக்கென்று சிரித்தாள். அவளின் சிரிப்பில் அவன் என்ன? என்பது போல் பார்க்க,

“இதை நம்ம கல்யாணத்துக்கு அப்புறம் இன்னமும் மெதுவா கேட்டிருக்கலாமே”

“கேட்டிருக்கலாம் தான்... ஆனா இப்போ இருக்கிற சுவாரஸ்யம் போயிடுமே” அவளுக்குப் பதிலளித்தவன், “முதல்ல நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு”

“இந்த உலகத்துலேயே உங்களைத் தான் ரொம்பப் பிடிக்கும். என் அப்பா, அம்மா, தங்கையை விட உங்களைத் தான் ரொம்ப... ரொம்ப... பிடிக்கும்” சொல்லியவளின் கண்ணில் காதல் வழிய, அதில் அவன் முற்றிலும் தன்னைத் தொலைத்தான்.

“பேபி... பேபி...” அவள் கையைப் பிடித்துக் கொண்டு உணர்ச்சிவசப்பட்டவன், “எனக்கு அப்பா, அம்மா கிடையாது. நான் யாருமில்லாத அநாதை. அப்படியிருந்தும் நீ என்னை விரும்புறியா பேபி?”

“ஆரு... நான் இருக்கும் போது நீங்க இப்படி அநாதை அது இதுன்னு எப்படிச் சொல்லலாம்? உங்களுக்கு எல்லாமுமாய் நானிருக்கேன் ஆரு” கண்கள் கலங்க சொல்லியவள் அவன் கையை இறுக பற்றிக் கொண்டாள்.

“எனக்கு எந்தவித சொத்தும் கிடையாது. சேமிப்புக் கிடையாது. இதோ நான் தங்கியிருக்கும் இந்த வீடு கூடக் கம்பெனி கொடுத்தது. இப்போதைக்கு என்னிடம் எதுவுமே கிடையாது. அப்படியிருந்தும் நீ என்னை விரும்புறியா பேபி?”

“ஆரு... ஆரு... என்னை நீங்க ரொம்ப இன்சல்ட் பண்றீங்க? எனக்கு உங்க சொத்துச் சுகம் வேணாம்... பணம் வேணாம்... எனக்கு நீங்க மட்டும் போதும் ஆரு” தன்னைப் புரிய வைத்திடும் நோக்குடன் தவிப்புடன் சொன்னவள் அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

“இது போதும் பேபி... நீ சொன்ன வார்த்தைகள் போதும் பேபி” அவன் உணர்ச்சிவசப்பட்டு இருக்கிறான் என்பது அவன் குரல் நடுக்கத்திலேயே தெரிந்தது. அவளின் தோள் சுற்றி தன் கையைப் போட்டு அவளை அணைத்துக் கொண்டான். அவன் அவளை ஆறுதல்படுத்தினானா? இல்லை அவளிடம் அவன் ஆறுதல் தேடினானா? அவனுக்கே அது தெரியவில்லை.

அப்போது தான் கவனித்தான் தான் வாங்கி வந்த பூவும், இனிப்பும் கேட்பாரற்று கிடைப்பதை. பூவை பிரித்து அவளிடம் அவன் கொடுக்க... அவளோ கண்ணிமைக்காமல் அவனைப் பார்த்தவள் பின்பு நாணத்துடன் அதை வாங்கித் தலையில் சூடி கொண்டாள். அவள் சூடிய பூவின் வாசம் அவனைக் காந்தமாய் இழுக்க, அவள் தலை நோக்கி குனிந்தவன் பூவை முகர்ந்தபடி,

“ஹப்பா... என்னவொரு ஸ்மெல்!” இழுத்து மூச்சு விட... அவனின் மூச்சு காற்று வெப்பத்தில் அவளின் உடல் மெழுகாய் உருகியது. அவனின் தொடுகை இல்லாமல் அவனின் மூச்சு காற்று கூடத் தன்னை இந்தளவுக்கு உருக்கி செயலிழக்க வைக்கும் என்பதை அந்த நொடி அவள் உணர்ந்தாள். அவனோ அவள் காதுக்கருகில் குனிந்து,

“பேபி... எனக்கே எனக்காக ஒரே ஒரு டான்ஸ் ஆடேன்” அவன் கெஞ்சுதலாய் கேட்க, உணர்ச்சியின் பிடியிலிருந்த அவளோ ஆடும் நிலையில் இல்லை.

“ப்ளீஸ் ஆரு... இப்போ என்னால் முடியுமான்னு தெரியல?” அவளின் பதிலில் அவன் முகம் விழுந்துவிட்டது. தன் மெல்லிய கரங்களால் அவனின் முகத்தை நிமிர்த்தியவள்... அவன் கண்களோடு தன் கண்களைக் கலந்தபடி,

“பாயுமொளி நீயெனக்கு, பார்க்கும் விழி நானுனக்கு
தோயுமது நீ எனக்கு, தும்பியடி நான் உனக்கு.
வாயுரைக்க வருகுதில்லை, வாழி நின்றன் மேன்மையெல்லாம்;
தூயசுடர் வானொளியே! சூறையமுதே! கண்ணம்மா!1

வீணையடி நீயெனக்கு, மேவும் விரல் நானுனக்கு;
பூணும் வடம் நீயெனக்கு, புது வயிர நானுனக்கு;
காணுமிடந் தோறு நின்றன் கண்ணி னொளி வீசுதடீ
மானுடைய பேரரசே! வாழ்வு நிலையே! கண்ணம்மா!”
அவள் பாட அவளுள் அவன் முற்றிலும் கரைந்தான். அவளின் விழி வீச்சு அவனை எங்கோ ஒரு சுழலுக்குள் இழுத்துக் கொண்டு போவதை போல் உணர்ந்தான்.

‘வீணையடி நீயெனக்கு, மேவும் விரல் நானுனக்கு’ என்ற வரிகளை அவள் பாடும் போதே அவனின் கண்கள் அவளின் அழகை அணு அணுவாய் ரசித்தது. அந்தப் பாடல் வரிகளின் அர்த்தம் உணர்ந்தவன் மேனி சூடானது. அவள் பாடி முடிக்கும் வரை பொறுமையாய் இருந்தவன் அவள் பாடி முடித்ததும் அவள் கைப்பற்றி எழுப்பியபடி,

“போகலாம் வா...” என்க, அவளோ எழும்பாமல் ஒன்றும் புரியாமல் முழித்தாள்.

“கொஞ்ச நேரம் இருந்துவிட்டு போகலாமே ஆரு” அவனின் தவிப்பு, தாபம் தெரியாமல் அவள் பேச,

“இதுக்கு மேல் என்னால் என்னை ரெசிஸ்ட் பண்ண முடியல பேபி. இனியும் இங்கேயிருந்தா உன்னோட கற்புக்கு நான் உத்திரவாதம் கொடுக்க முடியாது” முதலில் அவன் என்ன சொல்கிறான்? என்று தெரியாமல் விழித்தவள்... பின் அவனின் வார்த்தைகளின் அர்த்தம் புரிந்து முகம் செவ்வானமாய் மாறச் சட்டென்று எழுந்தாள்.

“வாங்க... போகலாம்” அவன் முகம் பாராமல் வேறு எங்கோ பார்த்துக் கொண்டு அவள் கூற...

“ம்... போகலாம்” என்றவன் அவளை அழைத்துக் கொண்டு வாயிலை நோக்கி செல்லும் போது அவனின் இதயத்தைப் பிழிவது போல் ஒரு சோகம் அவனைத் தாக்கியது.

அவளின் வீட்டிற்குத் தான் அவளை அழைத்துச் செல்கிறான். இது ஒன்றும் நிரந்தரப் பிரிவு அல்ல... தற்காலிக பிரிவு தான். நாளை காலை அவளை

அலுவகத்தில் சந்திக்கத் தான் போகிறான். ஆனாலும் ஏதோ ஒன்று அவன் மனதை இரும்பு குண்டாய் கனக்க செய்தது. அவளைப் பிரிந்திருப்பது இந்தளவுக்கு வலியை தரும் என்பதை அந்தக் கணம் உணர்ந்தான். இனியும் அவளை ஒரு நொடி கூடப் பிரிந்திருக்க முடியாது என்பதைத் தெள்ளத்தெளிவாக அவன் புரிந்து கொண்டான்.

“பேபி...” அவள் கைப்பற்றி நிறுத்தியவன், “நாம கல்யாணம் பண்ணிக்கலாமா? இனியும் உன்னை விட்டுப் பிரிஞ்சிருக்க என்னால் முடியாது பேபி. நீ எனக்கு வேணும் பேபி” அவள் தோள் பற்றிக் காதலோடு புலம்ப அவனின் காதலில் அவள் சுகமாய்க் கரைந்தாள்.

“ம்... பண்ணிக்கலாம் ஆரு” அவனுக்குச் சற்றும் குறையாத காதலோடு அவள் சொல்ல...

“அப்போ நாளைக்கே உங்க வீட்டில் வந்து பேசவா?” அவன் கேட்டதற்கு அவள் சம்மதமாய்த் தலையசைக்க... அவள் கையோடு தன் கையைக் கோர்த்துக் கொண்டு வீட்டில் இருந்து வெளியேறியவன் மனம் நிம்மதியாய் இருந்தது. காதல் வயப்பட்டிருந்த இருவரின் மனமும் மகிழ்ச்சியில் நிறைந்திருந்தது.

மயூரி தன் ஒப்பனையை முடித்துவிட்டு எல்லாம் சரியாக இருக்கிறதா? என்று கண்ணாடியில் தன்னை அழகு பார்த்தாள். அவளின் பால் வண்ணத்தை மேலும் அழகூட்டுவது போல் இருந்தது அவள் அணிந்திருந்த அடர் பச்சை நிற சேலை. அந்தச் சேலையைப் பார்க்கும் போது... அன்று ஆரன் அவளிடம் காதல் சொன்ன தினம் தான் நியாபகத்தில் வந்தது. அன்று அவளை விழுங்கி விடுவது போல் பார்த்த அவனின் பார்வையை இப்போது நினைத்தாலும் அவளின் தேகம் சிலிர்த்தது. ஏனோ அவனே நேரில் நின்று பார்ப்பது போல் அவளது மனம் தடுமாறியது.

ஆரன் அவளின் பெற்றோரிடம் பேசுவதற்காக இன்று வருவதாகக் கூறியிருந்தான். அதனால் தான் அவனுக்குப் பிடிக்குமே என்று இன்றும் அதே புடவையை உடுத்தி இருந்தாள். கடிகாரத்தில் இருந்த குயில் பத்து முறை கூவவும் தான் தன் நினைவில் இருந்து கலைந்தவள், 'அவர் வரும் நேரமாயிற்றே' என்று நினைத்தபடி வாயிலை நோக்கி சென்றாள். அவளின் நினைவை பொய்க்காமல் ஆரன் அவள் வீட்டின் முன் தன் பைக்கை நிறுத்தி கொண்டிருந்தான்.

ஸ்டைலாகப் பைக்கில் இருந்து இறங்கியவன் சற்று குனிந்து முன் பக்கம் இருந்த கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தபடி முடியை அழுந்த கோதி கொண்டான். அவனின் ஒவ்வொரு செய்கையும் அவளின் மனதை பறிக்கக் கண்ணிமைக்காமல் அவனைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள். ஏதோ மனதில் உந்த நிமிர்ந்தவன் வாயிலில் நின்றிருந்த அவளைக் கண்டு வசீகரமாகப் புன்னகைத்தான். பின் நிதான நடையில் அவளை நோக்கி வந்தவன்,

"வாவ்... சூப்பர்... பேபி" அவளை மேலும் கீழும் பார்த்தபடி கண்ணில் மயக்கத்துடன் சொல்லியவன் அவளின்

கையைப் பற்றித் தன் கைக்குள் பொத்தி வைத்துக் கொண்டான். அதில் அவளின் மயக்கம் கலைய,

“அய்யோ... என்ன இது... அப்பா உள்ளே இருக்கார்” பதட்டத்துடன் உள்ளே திரும்பி பார்த்தபடி கூறியவள் அவனின் பிடியிலிருந்து தன் கையை உருவ முயன்றாள்.

“உன்னைக் கைப்பிடிக்கச் சம்மதம் கேட்க தான் நானே இங்கே வந்திருக்கேன். நீ என்னடான்னா கையை விடுடான்னு சொல்ற?” கண்ணைச் சிமிட்டி கேட்டவன் பற்றிய அவள் கையை விடுவதாய் இல்லை.

“உங்களுக்குப் பயமாவே இல்லையா?” கேட்டவளின் முகம் அச்சத்தில் வியர்த்திருந்தது.

“எதுக்குப் பயப்படணும்?” அவனோ கூலாகக் கேட்டான்.

“அப்பா... ஏதாவது சொல்லி மறுத்துட்டா... எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு ஆரு...” அதைக் கேட்டு அவன் முகம் இறுகியது.

“அப்படி உன் அப்பா என்னை வேணாம்ன்னு சொன்னா... நீ என்னைக் கைவிட்டுடுவியா?” அவளுக்கு அவனும் வேண்டும்... தந்தையும் வேண்டும்... இதில் யாரின் பேச்சை கேட்பது? அவனின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது? என்று தெரியாமல் குழப்பத்துடன் அவள் விழித்துக் கொண்டிருக்கும் போதே...

“மயூ கண்ணா யார் கூடப் பேசிட்டிருக்கே?” என்றபடி அங்கே வந்தார் ராகவன்.

அங்கே ஆரன் நின்றிருப்பதைக் கண்டதும் உடனடியாக அவனை அவரால் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. ‘இவன் எங்கே இங்கே?’ அவர் யோசிக்கும் போதே... கோர்த்திருந்த இருவரின் கைகள் அவருக்கு எதையோ உணர்த்தியது. தன் மகளா இப்படி? என்று உள்ளுக்குள் அவர் அதிர்ந்து தான் போனார். ஆனாலும் பக்குவப்பட்ட அவரின் மனம் சட்டென்று அநாகரீகமாக நடக்க முயலவில்லை.

தந்தையைக் கண்டதும் தன் கையை அவன் பிடியிலிருந்து மீண்டும் அவள் உருவ முயல... அவனோ பிடிவாதத்துடன் அவள் கையை விடவில்லை. 'உன் தந்தையே நம் காதலை எதிர்த்தாலும் சரி... நீ எனக்கு மட்டும் தான் சொந்தம்' என்பது போலிருந்தது அவனின் செய்கை. அவளோ சங்கடமாய்த் தந்தையைப் பார்க்க... அவரோ மகளை உறுத்து விழித்தாலும் அவனிடம் அதை வெளிக்காட்டி கொள்ளவில்லை.

"உள்ளே வாங்க..." அவனை உள்ளே அழைத்துச் சென்று அமர வைத்தவர் மேற்கொண்டு எதுவும் பேசாமல் அமைதி காத்தார்.

அவர் சொன்னதும் உள்ளே வந்த ஆரன் அப்போதும் அவள் கையை விடாமல் அவளைத் தன்னருகில் அமரும்படி சொல்ல,

"நான் அம்மாவை கூட்டிட்டு வர்றேன்" அவனுக்குப் பதில் சொன்னவள் 'ப்ளீஸ்' என்று பார்வையால் அவனைக் கெஞ்ச... அவளின் கெஞ்சலில் அவன் தன் பிடியை தளர்த்தினான். அவனுக்குக் கண்ணாலேயே நன்றி கூறியவள் உள்ளே சென்றாள். அவள் செல்வதையே அவன் பார்த்துக் கொண்டிருக்க,

"க்கும்..." என்று தொண்டையைக் கனைத்தார் ராகவன். அவரின் செருமலில் அவர் புறம் அவன் திரும்ப... "அப்புறம் என்ன விசயமா வந்தீங்க?"

அவன் பதில் சொல்ல முயலும் போது மயூரி கையில் காபி கோப்பையுடன் சுமதி மற்றும் மஞ்சரியுடன் அங்கே வந்தாள். அவள் தந்தையைப் பார்க்க அவர் 'கொடு' என்பது போல் கண்ணால் சைகை செய்ய மகிழ்ச்சியுடன் அவள் காபியை அவனிடம் கொடுத்தாள். அவன் காபி பருகி முடிக்கும் வரை ஊசி விழுந்தால் கூடச் சத்தம் கேட்கும் அளவுக்கு அனைவரும் அமைதி காத்தனர். அந்த அமைதியை பொறுக்க முடியாமல் மஞ்சரி,

“மயூ... உன் ஆள் என்னடி இப்படித் தெனாவெட்டா உட்கார்ந்திருக்கிறார். ஆமாம் அவர் எதுக்கு இப்போ வந்திருக்கிறார்?” அவள் ஆராய்ச்சியுடன் அக்காவிடம் கேட்க... மயூரியோ பதில் சொல்லும் நிலையில் இல்லை. அவள் பார்வை முழுவதும் ஆரனிடமே இருந்தது.

“சார்... நான் நேரடியாவே விசயத்துக்கு வர்றேன்... நானும் உங்க பொண்ணு மயூரியும் கொஞ்ச நாளா லவ் பண்றோம். அவளைக் கல்யாணம் பண்ணிக்க உங்க சம்மதத்தை வேண்டி தான் நான் இங்கே வந்திருக்கிறேன்” எந்த வெளிப்பூச்சும் இல்லாமல் அவன் சிதறு தேங்காய் போல் விசயத்தைப் பட்டென்று போட்டு உடைக்க... மயூரி திகைப்புடன் அவனைப் பார்த்திருந்தாள். அவனின் தைரியத்தை எண்ணி மனதுக்குள் அரண்டு தான் போனாள். இதற்குத் தந்தை என்ன சொல்ல போகிறாரோ? என்று தவிப்புடன் அவள் ராகவனைப் பார்க்க... அவரோ யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

“என்னடி மயூ இது? நீயா இப்படி? என்னால நம்ப முடியலையே?” ஆதங்கத்துடன் கேட்ட சுமதியை பார்த்து, “அம்மா ப்ளீஸ்ம்மா... இதுக்காக என்னை வெறுத்துடாதீங்க. என்னையும் அறியாமல் அவர் என் மனசுல சிம்மாசனம் போட்டு உட்கார்ந்திட்டாரு. நான் அவரை உயிருக்கு உயிராய்க் காதலிக்கிறேன்” கண்களில் கண்ணீருடன் அவர் தோளில் ஆறுதலுக்காக அவள் சாய்ந்தாள்.

சுமதிக்கோ என்ன சொல்வது என்று தெரியவில்லை. ஜாதி, அந்தஸ்து என்று பிரித்துப் பார்க்கும் ரகம் அவரில்லை. ‘பையன் பார்க்க நல்லா தான் இருக்கான். அதே மாதிரி நல்ல குணமா, குடும்பமா இருந்துட்டா... எனக்குச் சம்மதம் தான்’ மனதுக்குள் நினைத்தவர் கணவரின் பதிலுக்காக அவரைப் பார்த்தார்.

ராகவனுக்கும் சுமதியை போன்றே எண்ணம் ஓடியது. அவர் ஒன்றும் காதலை எதிர்ப்பவர் அல்ல. பெற்றோருக்குத் தெரியாமல் ஓடி போய்த் திருமணம் செய்யும் அவசர காதலை தான் அவர் வெறுத்தார். அவருக்குத் தன் மகள்

அதுவும் மூத்த மகள் காதலித்தாள் என்பதைத் தான் இன்னமும் நம்ப முடியவில்லை. அதை ஜீரணிக்கத் தான் அவருக்குச் சற்று நேரம் பிடித்தது.

அவரைப் பொறுத்த வரையில் ஆரனை பிடித்துத் தான் இருந்தது. தோற்றத்திலோ இல்லை வேலையிலோ எந்தக் குறையும் அவனைச் சொல்ல முடியாது. அதிலும் அவன் பெண் கேட்டு வந்த தைரியத்தை மனதுக்குள் மெச்ச தான் செய்தார். தன்னைக் கண்டும் தன் பெண்ணின் கையை அவன் விடாமல் பற்றியிருந்த விதத்திலேயே அவனின் மனதை அவர் கண்டு கொண்டார். எந்தச் சூழ்நிலையிலும் அவன் தன் மகளைக் கைவிட மாட்டான் என்று. அதில் அவருக்குப் பெருத்த நிம்மதி தான். இருந்தாலும் அவனின் பின் புலம் தெரியாமல் பேச கூடாதே என்று,

“உங்க வீட்டில் பெரியவங்க இல்லையா? அதாவது உங்க அப்பா, அம்மா இவங்களைக் கூட்டிட்டு வாங்க. நாம மேற்கொண்டு பேசலாம்” ராகவன் ஆம் என்றும் சொல்லவில்லை... இல்லை என்று மறுக்கவும் இல்லை. ஆனால் அவரின் பதிலில் அவனின் முகம் கறுத்துப் போனது.

“மன்னிக்கணும்... எனக்குன்னு யாருமில்லை... நான் ஒரு அநாதை” சொல்லிவிட்டு அவன் மயூரியை பார்த்தான். அதைச் சொல்லும் போது அவன் கண்ணில் தெரிந்த வலியை அவள் கண்டு கொண்டாள். ‘நானிருக்கேன் உனக்கு’ என்பது போல் அவள் ஆறுதலாய் அவனைப் பார்க்க... அதில் அவன் முகம் பூவாய் மலர்ந்தது.

“ஓ... அப்போ எங்கே வளர்ந்தீங்க...? படிச்சீங்க...? அதாவது எந்த ஆசிரமம்?” ராகவன் விடாமல் கேட்க... அதில் அவன் முகம் மீண்டும் இறுகியது.

“அது எதற்கு உங்களுக்கு? என்னை மட்டும் பாருங்க... நான் நல்ல வேலையில் இருக்கேன்... கை நிறையச் சம்பாதிக்கிறேன். உங்க பொண்ணைக் கண் கலங்காமல் பார்த்துக்குவேன். இதை விட உங்களுக்கு என்ன வேணும்?”

படபடவென அவன் பேசியதை அவர் மனதில் குறித்துக் கொண்டதை அவன் அறியவில்லை.

“தம்பி கோபப்படாதீங்க... நாளைக்கு உங்களுக்கு ஒரு பொண்ணு பிறந்து... அவ இப்படிக் காதல்ன்னு ஒருத்தனை கூட்டிட்டு வந்தா... நீங்க விசாரிக்க மாட்டீங்களா? அப்படியே சட்டுன்னு பொண்ணைத் தூக்கி அவன் கையில் கொடுத்திருவீங்களா? அதே மாதிரி தான் நான் விசாரிக்கிறேன். நீங்க காதலிக்கிறேன்னு சொன்னதும் நான் என் பொண்ணை அப்படியே தூக்கி கொடுத்திட முடியுமா?” அவரின் கேள்வியில் இருந்த நியாயத்தில் அவன் அமைதி காத்தான்.

“மயூ அவரு யாரும் இல்லாத அனா...” சுமதி சொல்லும் போதே... அவர் வாய் மூடி தடுத்த மயூரி, “அவருக்காக நான் இருக்கும் போது நீங்க இப்படிச் சொல்றது எனக்கு வலிக்குதும்மா...” நெஞ்சில் கை வைத்தபடி... முகத்தில் வலியை சுமந்தபடி கூறியவளை ஆச்சிரியத்துடன் பார்த்தனர் சுமதியும், மஞ்சரியும்.

“கவலைப்படாதே மயூ” ஆதரவாய் அவளை அணைத்துக் கொண்டார் சுமதி. மகளின் மனம் நன்கு புரிந்தது அந்தத் தாய்க்கு. அவர்களின் காதல் எந்தவித எதிர்ப்புக்கும் கட்டுப்படாது என்பதை அவர் நன்கு உணர்ந்து கொண்டார்.

ஆரன் ஒரு பேப்பரை எடுத்து ஏதோ எழுதியவன், “இவர் பேர் நல்லசிவம்... என்னைப் பற்றி ஏதும் தெரியணும்ன்னா இவர் கிட்ட விசாரிச்சுக்கோங்க. அப்புறம் எங்க எம்டி கிட்டேயும் என்னைப் பத்தி விசாரிச்சுக்கோங்க. எம்டி அப்பாயின்ட்மென்ட் வேணும்ன்னா நானே ஏற்பாடு பண்ணி தர்றேன்” என்றபடி எழுந்தவன், “நல்ல முடிவா சொல்வீங்கன்னு நம்பறேன். நான் வர்றேன்” இரு கை கூப்பிக் கம்பீரமாய் அவன் விடை பெற... அவனின் கம்பீரம் ராகவனைக் கவர... அவரையும் அறியாமல் எழுந்து விடை கொடுத்தார்.

ஆரன் நேரே மயூரியிடம் வந்து, “யார் சம்மதித்தாலும்... சம்மதிக்கலைன்னாலும் சரி... நம்ம கல்யாணம் நடந்தே

தீரும். நீ கவலைப்படாதே” அவள் கன்னம் தட்டி கூறியவன் அடுத்த நொடி அங்கிருந்து வெளியேறினான். அவனின் செய்கையை எல்லோரும் திகைத்துப் போய்ப் பார்த்திருந்தனர்.

“எத்தனை நாளாய் நடக்குது மயூ” ராகவன் தான் முதலில் தன்னைச் சுதாரித்துக் கொண்டு மகளிடம் பேசினார்.

“இப்போ கொஞ்ச நாளா தான்...” திக்கி திணறி கூறியவளை அவர் கூர்ந்து பார்க்க... அவரின் கண்ணைச் சந்திக்க முடியாமல் அவள் தலை குனிந்தாள்.

“பையன் ஆள் சரியில்லை போலவே... கொஞ்சம் கூட மரியாதை தெரிய மாட்டேங்குது. இப்படிப்பட்டவன் உனக்கு எப்படிச் சரி வருவான்?” ராகவன் மகளின் மனதை ஆழம் பார்க்க அதில் அவள் பதறி தான் போனாள்.

“அவர் பேச்சு தான் அப்படி இருக்கும்ப்பா. மத்தபடி அவர் குணம் தங்கம். ரொம்ப நல்லவர்... என்னை நல்லா பார்த்துக்குவார்” அவரின் கூற்றை அவள் அவசரமாய் மறுக்க,

“அதை நான் விசாரிச்சிட்டு சொல்றேன்” என்றவர் மேற்கொண்டு எதுவும் பேசாமல் அங்கிருந்து நகன்றார்.

“அம்மா... நீங்களாவது அப்பா கிட்ட சொல்லுங்களேன்” தாயிடம் அவள் மன்றாட,

“நல்ல பையனா இருக்கும் போது... நீ ஏன் பயப்படுற மயூ? நான் பார்த்துக்கிறேன்” மகளுக்கு ஆறுதல் அளித்த சுமதி கணவனை நாடி சென்றார்.

“என்னங்க ஏன் ரொம்ப யோசிக்கிறீங்க? மயூ காதலிச்சது தப்புன்னு நினைக்கிறீங்களா?” சுமதி கேட்கவும் ராகவன் அவரைத் திரும்பி பார்த்தார்.

“அவ காதலிச்சது தப்பில்ல சுமி... ஆனா காதலிச்சவன் தப்பானவனா? இல்லையான்னு நாம தானே விசாரிக்கணும். அதிலும் மயூ ரொம்ப வெகுளியான

பொண்ணு. அவளுக்கு ஒரு ஏமாற்றம்ன்னா அதை என்னால் தாங்க முடியாது. அதான் உடனே என்னால் சம்மதம் சொல்ல முடியல. மத்தபடி நான் காதலுக்கு எதிரானவன் கிடையாது சுமி. பையனை பத்தி விசாரிக்கிறேன்... நல்ல பையனா இருந்தா எனக்கு ஒண்ணும் அப்ஜெக்சன் இல்லை" அவரின் வார்த்தைகள் சுமதிக்கு நிம்மதியை தந்தது.

"நீங்க சொல்றதும் சரி தான்..." என்றவர் சமையலறைக்குச் செல்ல... ராகவன் எதையோ யோசித்தபடி அமர்ந்திருந்தார்.

"அப்பா..." அங்கு வந்த மயூரி அவரின் காலடியில் அமர்ந்து அவரின் மடியில் தலை சாய்த்தாள்.

"என்னடாம்மா..." மகளின் தலையைப் பரிவுடன் தடவியபடி அவர் கேட்க,

"அப்பா... அவர் ரொம்ப நல்லவர்ப்பா... எங்களைப் பிரிச்சுடாதீங்க" அவள் முதுகு குலுங்கியதில் இருந்து அவள் அழுகிறாள் என்பதைப் புரிந்து கொண்டவர்,

"மயூ... அழாதே... இங்கே பாரு..." என்று அவளின் முகத்தை நிமிர்த்தி அவளின் கண்ணீரை துடைத்தவர்... "நீ சொல்வது போல் அவர் நல்லவராய் இருக்கணும்ன்னு தான் நானும் விரும்பறேன்ம்மா. எந்தக் காரணம் கொண்டும் நான் உங்களைப் பிரிக்க மாட்டேன். இந்த அப்பாவை நம்பும்மா" அவரின் வார்த்தைகள் அவள் முகத்தில் நம்பிக்கை ஒளி ஏற்ற அவள் லேசாகப் புன்னகைத்தாள். அதில் மனம் நிறைந்தவராய் அவளின் தலையை வாஞ்சையுடன் தடவி கொடுத்தார் ராகவன்.

****

"தோஸ்த் எனக்கு ஒரு சந்தேகம்?" வருண் கேள்வி கேட்டபடி ஆரனின் அறைக்கு வர... மடிகணினியில் கண்ணைப் பதித்திருந்த ஆரன் அவனை என்ன? என்பது போல் பார்த்தான்.

“உங்களுக்குப் பெண்கள்ன்னாலே பிடிக்காது. அப்படி இருக்கும் போது நீங்க எப்படி அண்ணியை லவ் பண்ணினீங்க? எனக்கு ரொம்ப நாளா இந்த டவுட் இருக்கு தோஸ்த்” தீவிரமாய் யோசித்துக் கொண்டே அவன் கேட்க...

“நீ எப்படி மஞ்சுவை பிடிக்குதுன்னு சொன்ன? அதே மாதிரி தான் இதுவும்” வருணின் கேள்விக்குப் பதிலளிக்காமல் மழுப்பலாய் ஆரன் பதில் சொன்னான்.

“என்னையும் உங்களையும் கம்பேர் பண்ணாதீங்க. இந்த விசயத்தில் நீங்க சாமியார் மாதிரி...” என்றவன் உடனே வாயை பொத்தி கொண்டான். “இந்தக் காலத்துல சாமியார் தான் தோஸ்த் ஆக மோசம்... அவங்க வேணாம்... யாரை சொல்றதுன்னே தெரியல. இந்த விசயத்துல எல்லா ஆம்பிளையும் வீக்கா தான் இருக்கான்” நொந்து கொண்டான் அவன்.

அவனின் பதிலில் வாய் விட்டு சிரித்த ஆரன், “போடா அரட்டை... உனக்கு வேற வேலையே இல்லையா? ஆமா உன் கிட்ட அந்த வொர்க்கை முடிக்கச் சொன்னேனே முடிச்சிட்டியா?” பேச்சை மாற்ற...

“அய்யோ... சாரி தோஸ்த்... எஃப்பில அந்த வர்ஷா கூடக் கடலை போட்டதுல மறந்தே போயிட்டேன். இதோ இப்பவே போய் முடிச்சிர்றேன்” என்றவன் ஆரன் திட்டுவதற்கு முன் அங்கிருந்து ஓடி விட்டான்.

அவன் சென்றதை பார்த்துக் கொண்டிருந்த ஆரனின் மனதிலும் வருண் கேட்ட கேள்வியே வியாபித்திருந்தது. ‘எந்தப் பெண்ணையும் ஏறெடுத்து பார்க்காத நான் எப்படி மயூவிடம் காதலில் விழுந்தேன்?’ மனதுக்குள் கேள்வி கேட்டவன் அதற்கான விடையைத் தேடினான்.

‘முதன் முதலில் பார்த்த போது சிறுபிள்ளை போல் அழுதாளே அப்போதா? இல்லை அன்று கேன்டினில் என்னைக் கண்டதும் அட்டேன்சனில் எழுந்து நின்ற அவளின் அறியாமையிலா? எதைக் கண்டு அவளிடம் வீழ்ந்தேன்? எந்தப் பெண்ணிடமும் இல்லாதது அப்படி

அவளிடம் என்ன இருக்கிறது? என்று அவளிடம் மயங்கினேன்’ என்ன யோசித்தும் அவள் மீதான தனது காதலுக்கான மயக்கத்திற்கான விடையை அவனால் காண முடியவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்... பெண்களைக் கண்டாலே வெறுத்த அவனைத் தன் அறியாமையால்... குழந்தைத்தனத்தால்... அவள் தன் பக்கம் ஈர்த்ததை அவன் உணர்ந்தே இருந்தான். ஏனோ அவனுக்கு அவளிடம் பேச வேண்டும் போல் தோன்ற, அலைப்பேசியை எடுத்து அவளுக்கு அழைத்தான்.

“பேபி...” ஆரனின் அழைப்பில் மறுப்பக்கம் இருந்த மயூரியின் உள்ளம் உருகியது.

“ஆரு...” ஒற்றை வார்த்தையில் தன் ஒட்டு மொத்த அன்பையும் தேக்கியபடி அவள் கூப்பிட... அதில் அவன் முற்றிலும் தன் வசம் இழந்தான்.

“ப்ச்... ப்ச்... ப்ச்...” தன் முத்த மழையை அலைப்பேசி மூலமாக அவன் அனுப்ப... அதைக் கண்மூடி ஏற்றுக் கொண்டவள் அதில் சுகமாய் நனைந்தாள்.

“என்னைய எப்படிப் பேபி மயக்கின? எந்தப் பெண்ணைக் கண்டும் மயங்காத நான் ஏன் உன்னைப் பார்த்து மயங்கினேன்” காதலுடன் அவன் கேட்க... அதைக் கேட்டு அவள் உள்ளம் சிலிர்த்தது. காதலன் காதலிக்கு கொடுக்கும் மிகப்பெரிய அங்கீகாரம் அவனின் வார்த்தைகள். சிங்கத்தைத் தன் கண் பார்வையில் அடக்கி வைத்திருக்கும் புள்ளி மானின் கர்வம் அவள் மனதிலும் எழுந்தது.

“அதை நீங்க தான் சொல்லணும் ஆரு...” மயக்கமாய் வந்தது அவளின் வார்த்தைகள்.

“அதான் எனக்குத் தெரியலைன்னு உன் கிட்ட கேட்கிறேன். எந்தப் புள்ளியில் நான் உன்னை விரும்பினேன்னு எனக்கே தெரியல பேபி?”

“எப்படியிருந்தா என்ன காதலிச்சிட்டீங்கல்ல... அது போதும் எனக்கு?”

“எனக்கு அது போதாதே? இப்பவே நீ இங்கே... என் பக்கத்துல இருக்கணும்... நான் உன்னை...” அவன் முடிக்கும் முன்...

“ப்ளீஸ் வேணாம் ஆரு... என்னால முடியல” அவனின் தாப வார்த்தையில் அவளின் உடல் மெல்லியதாய் நடுங்கியது.

“ஹேய் பேபி... ஓகே ஓகே வேணாம்ன்னா விட்டுரு” என்றவன், “உன் அப்பா என்ன சொன்னார்? நம் காதலுக்குச் சம்மதம் தானா? இல்லை?”

“இன்னமும் அவர் பதில் சொல்லல. இன்னும் ரெண்டு நாள் அவகாசம் கேட்டிருக்கார்” அவளின் பதிலில் அவன் முகத்தில் யோசனை வந்தது.

“பேபி நான் ஒண்ணு கேட்பேன்... நீ உண்மையா பதில் சொல்லணும்”

“ஆரு... உங்க விசயத்துல நான் எப்பவும் உண்மையா தான் இருப்பேன்” அவளின் பேச்சில் நெகிழ்ந்து போனவன்,

“தேங்க்ஸ் பேபி” என்று மனமாறச் சொல்லியவன், “உன் அப்பா சம்மதிக்கலைன்னா என்னை நீ மறந்திருவியா?”

“ச்சு... என்ன பேச்சு ஆரு? அப்படியெல்லாம் நடக்காது. அப்பா நம்ம காதலை ஏத்துக்குவாரு. நீங்க கவலைப்படாதீங்க”

“இல்லை அப்படி ஒண்ணு நடந்தா நீ என்ன பண்ணுவ?” அவளின் உறுதியான பதிலுக்காக அவன் பிடிவாதம் பிடித்தான்.

“அவர் ஒத்துக்கலைன்னாலும் நான் உங்களைக் கைவிட மாட்டேன் ஆரு” உடனடியாய் அவள் பதிலளிக்க... சற்று நேரம் ஆரனிடம் இருந்து பதிலில்லை.

“ஆரு... ஆரு...” அவள் மறுமுனையில் படபடக்க,

“ஐ லவ் யூ பேபி” அலைப்பேசியில் எண்ணிலடங்கா முத்தங்களை அனுப்பி அவள் கன்னத்தைச் சிவக்க வைத்தான். அதன் பின் அவர்கள் பேசிவிட்டு அலைப்பேசியை அணைக்கும் போது சூரியன் கிழக்குத் திசையில் எட்டி பார்க்க ஆரம்பித்திருந்தான்.

****

“மயூ இங்கே வா...” ராகவன் சொன்ன மாதிரி இரண்டு நாள் கழித்து அவளை அழைக்க... அவள் யோசனையுடன் அவர் முன் வந்து நின்றாள். அவளுக்கு முன்னரே சுமதியும், மஞ்சரியும் அங்கே நின்றிருந்தனர். மூவரின் முகமும் கலக்கமாய் இருப்பது போல் அவளுக்குத் தோன்றியது.

“என்னப்பா...?” ஏனோ அவளுக்கும் உள்ளுக்குள் கலக்கமாய் இருந்தது.

“அந்தப் பையன் வேணாம்மா...” ராகவன் எங்கோ பார்த்துக் கொண்டு சொல்ல... அதில் அவள் மனம் கலங்கி போனாள்.

“ஏன்ப்பா... அவர் வேணாம்... அவர் யாருமில்லாத அநாதைங்கிறதாலயா? இல்லை அவருக்குன்னு சொத்துச் சுகம் ஏதுமில்லைங்கிறதாலா? ஏன் அவரை வேணாம்ன்னு சொல்றீங்க?” அவளின் ஆவேசம் கண்டு மூவருமே திகைத்து தான் போயினர். பூ போலிருந்த அவளுக்குள் இத்தகைய பூகம்பத்தை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

“என்னை ஒண்ணும் கேட்காதே... அவன் வேணாம்ன்னா வேணாம். அவ்வளவு தான் நான் சொல்வேன்” ராகவன் திட்டவட்டமாய்ச் சொல்ல...

“நீங்களும் சராசரியான அப்பா தான்னு ப்ரூவ் பண்ணிட்டீங்கல்ல” அவள் பேசும் போதே...

“மயூ வார்த்தையை அளந்து பேசு. அப்பாவை எதிர்த்து பேசாதே” சுமதி மகளை அதட்டினார்.

“ஏம்மா காதலிக்கிறது தப்பாம்மா? அவர் எப்படியிருந்தாலும் நான் அவரைத் தான் கல்யாணம் பண்ணிக்குவேன். நீங்க

என்ன சொன்னாலும் நான் கேட்பதாய் இல்லை” அவள் தீர்மானமாய்ச் சொல்ல... அவ்வளவு தான் சுமதி ஆவேசம் வந்தவர் போல்,

“போ... போடி போய் அவனைக் கல்யாணம் பண்ணிக்கோ. என் புருசன் ஜெயிலில் பத்து வருசத்துக்கும் மேல இருந்தவன்னு நெஞ்சை நிமிர்த்திக் கர்வமாய் எல்லார் கிட்டேயும் போய்ச் சொல்லு. எல்லாரும் உன்னைப் பெருமையாய் பார்ப்பாங்க. இன்னமும் ஏண்டி இங்கே நிக்கிற? போடி...” ஆத்திரத்துடன் கத்தியவர் அவளைத் தரதரவென வாசலுக்கு இழுத்து சென்றார்.

அன்னையின் வார்த்தையில் அதிர்ந்து போய் நின்றவளுக்கு அடுத்து அவர் பேசியதோ... அவரின் செய்கையோ எதுவும் அவளால் உணர முடியவில்லை.

‘என் ஆரு சிறைக்குச் சென்றவரா? ஏன்? எதுக்கு?’ அவளின் மூளை அதிலேயே நின்றது.

“சுமி... என்ன காரியம் பண்ற?” ராகவன் மனைவியின் கையைப் பிடித்துத் தடுத்தவர்... மகளின் அருகில் வந்து,

“மயூ கண்ணா... அப்பா உன் நல்லதுக்குத் தான் சொல்வேன். நான் காதலுக்கு எதிரியில்லை. ஆனால் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிற பையன் நல்லவனா இருக்கணும்ன்னு தான் நாங்க விரும்பறோம். இந்தப் பையன் கரெக்டர் சரியில்லைடா. அவன் உனக்கு வேணாம். அப்பா உனக்கு வேற நல்ல பையனா பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன். நீ எதைப் பத்தியும் கவலைப்படாதே... யோசிக்காதே” தந்தை சொன்ன வார்த்தைகள் கூட அவள் மனதில் ஏறவில்லை.

அப்படியே நிலை குத்தின பார்வையுடன் அங்கேயே அசையாது அவள் நின்றிருந்தாள். “மயூ...” மூவரும் சேர்ந்து அவளை உலுக்கிய போதும் அவள் அப்படியே தான் பிரம்மை பிடித்தவள் போலிருந்தாள். அந்நேரம் பார்த்து அவளின் அலைப்பேசி அழைக்க...

“ஏனோ இன்று ஏனோ
நான் உந்தன் நானோ
நீயோ இல்லை நானோ
நாம் என்னும் நாமோ”

அவனின் அழைப்புக்கு என்று பிரத்யேகமாக அவள் வைத்திருந்த அந்தப் பாடலின் ஒலியில் சுயநினைவு அடைந்தவள் நடுங்கும் கரங்களால் எடுத்தவள் அதைத் திகிலுடன் பார்த்தாள்.

வெகுநேரம் மயூரியின் அலைப்பேசிக்கு முயன்று தோற்ற ஆரனின் மனதில், ‘ஏதோ சரியில்லை’ என்று அபாய மணி அடிக்க ஆரம்பித்தது.

“உன் தாரா உன் தாரா நானே உன் தாரா
என் வானம் பூத்ததே சீரா
கண்பூரா கண்பூரா நீயே தான் தீரா
என் பார்வை ஆனதே கூரா”

மயூரியின் அலைப்பேசி மீண்டும் மீண்டும் அழைக்க... எரிச்சலுடன் அதை எடுத்து பார்த்த சுமதி அதில் மின்னிய ஆரனின் பேரை கண்டதும் மனதில் மூண்ட ஆத்திரத்துடன் வேகமாய் அதை அணைத்து மஞ்சரியின் கையில் திணித்தார்.

“அப்பா... நீங்க சொல்றது எல்லாம் உண்மையாப்பா?” கண்களில் நிராசையுடன் கேட்ட மகளை என்ன சொல்லி தேற்றுவது? என்று தெரியாமல் முழித்தனர் அந்த அன்பு பெற்றோர்.

“மயூ... நீ முதல்ல உட்காரு...” அவளின் உடல் நடுங்குவதைக் கண்டு மஞ்சரி அவள் தோள் பற்றிச் சோபாவில் அமர வைத்தவள் ஆறுதலாய் அவள் அருகிலேயே தானும் அமர்ந்தாள்.

“அப்பா சொல்லுங்கப்பா... அவரைப் பிடிக்காம தவிர்ப்பதற்காகத் தான் நீங்க இப்படிச் சொல்றீங்களா?” கேட்கும் போதே அவள் கண்களில் கண்ணீர் பொங்கியது. அதைத் துடைக்கும் எண்ணம் கூட இல்லாமல் தந்தையின் பதிலுக்காகப் பதைபதைக்கும் நெஞ்சோடு காத்திருந்தாள். இன்னமும் ஆரனை பற்றி அவர் சொன்ன செய்தியை அவளால் நம்ப முடியவில்லை.

“மயூ என்ன பேச்சு பேசுற? அப்பாவை நீ நம்பலையா?” மகளைக் கண்டித்தார் சுமதி.

“விடு சுமி... நமக்கே இது இவ்வளவு பெரிய அதிர்ச்சியா இருக்கும் போது... அவனைக் காதலித்த அவளுக்கு இந்தச் செய்தி மிகப் பெரிய அதிர்ச்சியா தான் இருக்கும்”

கோபப்பட்ட மனைவியைச் சமாதானப்படுத்தியவர், மயூரியின் அருகில் அமர்ந்து,

“மயூம்மா... நான் உன் கிட்ட இந்த ரெண்டு நாள் அவகாசம் கேட்டது எதுக்குன்னு நினைக்கிற? அந்த ஆரனை பத்தி முழுத் தகவலையும் திரட்ட தான் இந்த ரெண்டு நாள் அவகாசம்” என்றவர் சிறிது நேரம் அமைதி காத்தார். பின் மெல்ல மகளின் தோளை ஆறுதலாய் அணைத்தபடி,

“நான் சொல்லப் போற விசயம் உனக்கு அதிர்ச்சியா தான் இருக்கும். எனக்கு வேறுவழியில்லை... அவனைப் பத்தி நீ முழுசா புரிஞ்சிக்க நான் இதைச் சொல்லித்தான் ஆகணும். அவன் கொடுத்த அட்ரஸில் இருந்த அந்த நல்லசிவத்தை அன்னைக்குச் சாயந்திரமே பார்க்க போனேன். அங்கே போய்ப் பார்த்ததுக்கு அப்புறம் தான் தெரிஞ்சது அவர் நடத்துறது அநாதை ஆசிரமம் இல்லை மறுவாழ்வு மையம்ன்னு. ஜெயிலுக்குப் போய்த் தண்டனை அனுபவிச்சவங்க, ஜெயிலில் தண்டனை அனுபவிக்கும் கைதிகளோட குழந்தைகள்... இப்படிச் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டவங்க தான் அங்கே இருக்காங்க. நல்லசிவம் செய்ற காரியம் ரொம்ப நல்ல விசயம் தான். இல்லைன்னு சொல்லல. ஆனா அங்கே இருந்து வந்த ஒருவனை நீ காதலிக்கிறதை தான் என்னால் ஏத்துக் கொள்ள முடியல. இந்தச் சமுதாயத்தில் நமக்குன்னு ஒரு கௌரவம் இருக்கு. ஜெயிலில் இருந்த அக்யூஸ்ட் ஒருத்தன் என் மருமகன்னு சொல்றதை நாங்க விரும்பல. நாங்கன்னு இல்ல எந்தப் பெற்றோரும் விரும்ப மாட்டாங்க. உனக்குமே இது பெருமையான விசயமா நீயே சொல்லு?” எதுவும் பேசாமல் தந்தை சொல்வதை அமைதியுடன் கேட்டு கொண்டிருந்தாள் அவள். அவள் கண்களில் கண்ணீர் மட்டும் நிற்காமல் வழிந்து கொண்டிருந்தது.

“அந்த நல்லசிவத்து கிட்ட போய்... ஆரன் அவரைப் பத்தி உங்க கிட்ட விசாரிக்கச் சொன்னாரு. ஆனா இங்கே வந்து பார்த்தா... இந்தச் சூழ்நிலையே வித்தியாசமா இருக்கு. ஆரனும் இந்த மாதிரி பாதிக்கப்பட்டவர் தானான்னு கேட்டேன். மனுஷன் வாயையே திறக்கலையே. அவர்

அவ்வளவு சீக்கிரம் அவனைப் பத்தின தகவலை என் கிட்ட சொல்லல. ரெண்டு நாள் நடையா அலைஞ்சேன். அப்பவும் அவர் ரொம்ப யோசிச்சாரு... நான் தான் என்னோட பெண்ணோட வாழ்க்கை நீங்க சொல்ற பதிலில் தான் இருக்குன்னு கெஞ்சி கூத்தாடி அவரிடம் விசயத்தை வாங்கினேன். அது தான் அவன் ஜெயிலில் பத்து, பதினைந்து வருசம் மேலே இருந்தான்ங்கிறது. ஆனா ஏன்? எதுக்குன்னு? சொல்ல மறுத்துட்டாரு. அவனோட குடும்பத்தைப் பத்தியும் சொல்ல மாட்டேன்னு சொல்லிட்டாரு" என்றபடி பெருமூச்சு விட்டவர்,

"மயூ கண்ணா... நாங்க உனக்கு நல்லது தான் பண்ணுவோம். அதை மட்டும் எப்பவும் உன் மனசுல வச்சுக்கோ. இந்த விசயம் நமக்குக் கல்யாணத்துக்கு அப்புறம் தெரிஞ்சிருந்தா என்ன செய்திருப்போமோ? தெரியல. நல்லவேளை இது முன்னாடியே நமக்குத் தெரிஞ்சதை நினைச்சு சந்தோசப்பட்டுக்க. பேசாம அவனை மறந்திட்டு நாங்க பார்க்கிற பையனை கல்யாணம் பண்ணிக்கோ" அவர் முடிவாய் முடித்த போது அவளின் அழுகை இன்னமும் கூடியது.

"அவர் பக்கம் ஏதாவது நியாயம் இருக்கலாம் இல்லையாப்பா?" காதல் கொண்ட அவள் நெஞ்சம் தன்னவனுக்குச் சாதகமாய் யோசித்தது.

"இருக்கலாம்... இல்லாமலும் போகலாம்? வேற ஏதாவது கிரிமினல் வேலை செஞ்சிட்டு ஜெயிலுக்குப் போயிட்டு வந்தவனா இருந்தா... நீ என்ன பண்ணுவ? இப்போ உடனே எனக்குப் பதில் சொல்லு? அவன் கெட்டவனா இருந்தா உன் முடிவு என்ன?" ராகவன் அழுத்தமாய்க் கேட்க... அவள் விடை தெரியாமல் விழித்தாள்.

சிறு குழந்தை போல் திருதிருவென முழித்த மகளைக் கண்டதும் ராகவனின் உள்ளம் அப்படியே உருகி விட்டது. "மயூ... இப்போ அவசரப்பட்டு எதுவும் சொல்ல வேணாம். நீ ரொம்ப டையர்டா இருக்கிற மாதிரி இருக்கு. போய் ரெஸ்ட் எடுத்திட்டு நல்ல பதிலா சொல்லு. எங்களுக்காக நீ முடிவு

எடுக்க வேணாம். உன் வாழ்க்கைக்காக நீ நல்ல முடிவு எடு. அது போதும்...” என்றவர் அவளை ஓய்வு எடுக்கச் சொல்ல... அதை மறுக்காமல் ஏற்று அவளும் தன் அறைக்கு வந்தாள். அவளுக்குமே யோசிக்கச் சற்றுத் தனிமை தேவைப்பட்டது.

கதவை தாள் போட்டுக் கொண்டு கட்டிலில் பொத்தென்று விழுந்தவள் அதற்கு மேல் தாங்க முடியாமல் ஓவென்று வாய்விட்டு கதறியழுதாள். தனது துக்கத்தை எல்லாம் அழுகையில் கரைத்தவள் வெகுநேரம் தேம்பி கொண்டு படுத்திருந்தாள். அவள் மனதில் ஆரனுடன் அவள் கழித்த பொக்கிசமான அந்தப் பொன்னான நேரங்களே படமாய் ஓடியது. அவனின் காதல் பார்வைகள், பேச்சுக்கள், அவனின் ஸ்பரிசம் என்று ஒவ்வொன்றும் அவனையே அவளுக்கு நியாபகப்படுத்தியது. அவன் இல்லாத ஒரு வாழ்க்கையை அவளால் நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை.

அவன் சிறை சென்றவன் என்பதையும் அவளால் ஜீரணிக்கவும் முடியவில்லை. இன்னமும் அவன் குற்றவாளி என்பதை அவளால் நம்பவும் முடியவில்லை. ஊரை பொறுத்த வரையில் அவன் குற்றவாளியாக இருக்கலாம். ஆனால் அவளைப் பொறுத்த வரையில் அவன் அவளின் உயிர் காதலன் அல்லவா?

அவன் கெட்டவனாவோ, பொம்பளை பொறுக்கியாவோ, குடிகாரனாவோ இல்லை போதை பொருளுக்கு அடிமையானவனாவோ இருந்தால் கூட அவளால் அவனைத் திருத்தி அதிலிருந்து அவனை வெளி கொண்டு வர முடியும். ஆனால் அவன் தாங்கிய குற்றவாளி என்ற பட்டதை அவளால் மறைக்கவோ ஒழிக்கவோ முடியாதே. காலம் முழுவதும் அந்த வார்த்தை அவர்களைத் துரத்துமே. அவர்களை மட்டுமா துரத்தும்? அவர்களின் வாரிசுகளையும் அல்லவா துரத்தும்.

அதேசமயம் அவனை அடியோடு வெறுத்து வேறு ஒருவனை அவளால் திருமணம் செய்யவும் முடியாது. அவனின் நினைவில் இருந்து அவளால் மீள முடியுமா?

நிச்சயம் அவளால் முடியவே முடியாது. அவள் உடம்பில் உயிர் இருக்கும் வரை அவனின் நினைவுகள் அவள் கூடவே இருக்கும். அவளின் உயிர் மூச்சே அவன் தான். அவனைப் பிரியும் நேரம் அது அவளின் மரணிக்கும் தருணமாகத் தான் இருக்கும்.

அடுத்து என்ன செய்வது? என்ன முடிவு எடுப்பது? என்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தாள். என்ன தான் யோசித்தாலும் விடை என்னவோ பூஜ்யமாகத் தான் இருந்தது.

****

ஆரனுக்கு வந்த ஆத்திரத்தில் தன் கையிலிருந்த அலைப்பேசியைத் தூக்கி தூர எறிந்தான். நல்லவேளை அது சோபாவின் குஷன் பகுதியில் போய்ச் சமத்தாய் விழுந்தது. மயூரி அவனின் அழைப்பை எடுக்காததால் அவனின் கோபம் எல்லாம் அவளின் மேலிருந்தது. முதலில் அவனின் அழைப்பை அவள் எடுக்காததைத் தற்செயலாக நடந்தது என்று நினைத்தவன்... அடுத்தடுத்து அவனின் அழைப்புகளை அவள் புறக்கணித்ததோடு மட்டுமில்லாமல் அவள் அலைப்பேசியை வேறு அணைந்திருந்தது அவனுக்கு மிகுந்த ஆத்திரத்தை அளித்தது. அவள் திட்டமிட்டே தான் தன் அழைப்பை எடுக்கவில்லை என்றே அவன் எண்ணினான்.

அவளின் இந்தச் செயலிலேயே அவன் விசயத்தை ஒருவாறு ஊகித்துவிட்டான். தன்னைப் பற்றிய செய்தி அவள் வீட்டினருக்குத் தெரிந்துவிட்டது என்பதை உணர்ந்து கொண்டான். அதற்காக அவள் அவனின் அழைப்பை ஏற்காமல் இருந்தது அவனின் காதலுக்கு விழுந்த பெருத்த அடியாகவே நினைத்தான். அவனைப் பற்றி யார் என்ன சொன்னாலும்... அவள் அதை அப்படியே நம்பலாமா? அவன் பக்கம் இருக்கும் நியாயத்தை அவனிடம் அல்லவா அவள் கேட்டிருக்க வேணும்? இல்லை நேரில் வந்து, ‘என்னை ஏமாற்றி விட்டாயே பாவியே’ என்று அவன் சட்டையைப் பிடித்து அவள் சண்டை போட்டிருந்தால் கூட அவன்

சந்தோசப்பட்டிருப்பான். ஆனால் இப்படி அவனுடன் பேச பிடிக்காமல் அவள் ஒளிந்து கொண்டிருப்பதை அவனால் ஏற்று முடியவில்லை. அவளின் செயல் அவனின் மனதுக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்தது.

‘கடைசியில் நீயும் எல்லாப் பெண்களைப் போல் பொய்த்து போனாயடி... விட மாட்டேன்... உன்னை விட மாட்டேன்டி. நீ பேசாம இருந்தா... அப்படியே உன்னை விட்டுட்டு போய்டுவேன்னு நினைச்சியா? நான் ஆரன்டி... நினைச்சதை நடத்தியே பழக்கப்பட்டவன். உன்னை என்னுடையவள் ஆக்காமல் நான் விட மாட்டேன்டி’ மனதுக்குள் கோபமாய்ச் சூளுரைத்தவன் கண்கள் தீக்கங்காய் ஜொலித்தது.

அவளின் வீட்டிற்குச் செல்ல அவன் ஆயத்தமாகும் போது அவனின் அலைப்பேசி அழைக்க அதை எடுத்துப் பார்த்தான். அதில் நல்லசிவத்தின் அழைப்பை பார்த்ததும் அவன் புருவங்கள் ரெண்டும் முடிச்சிட்டது. யோசனையுடன் அவன் அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைக்க,

“ஆரா... உடனே என்னை வந்து பார்க்க முடியுமா?” எப்போதுமே அவரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டே பழகியவன் இப்போதும் அவரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டான்.

“வர்றேன் அய்யா...” என்றவன் அடுத்த அரை மணி நேரத்தில் அவர் முன் நின்றான்.

நல்லசிவம் தன் முன்னால் அமர்ந்திருந்த ஆரனின் முகத்தை உற்று பார்த்தார். அவனின் தோற்றமே அவனின் காதல் கை கூடவில்லை என்பதை அவருக்குத் தெளிவாக அறிவித்தது. முகம் களையிழந்து எதையோ பறி கொடுத்தார் போலிருந்த அவனின் தோற்றம் அவரைக் கொல்லாமல் கொன்றது. அவனின் இந்த நிலைக்கு அவரும் ஒரு காரணம் அல்லவா?

“ஆரா... என்னை மன்னித்துவிடு...” அவனின் கையைப் பிடித்துக் கொண்டு அவர் மன்னிப்பு கேட்டதும் அவனுக்கு

எல்லாம் புரிந்து விட்டது.

“விடுங்க அய்யா... நீங்க என்ன பொய்யா சொன்னீங்க? உண்மையைத் தானே சொன்னீங்க” அலட்சியம் போல் அவன் காட்டி கொண்டாலும் அவனின் வார்த்தையிலிருந்த வலியை அவரால் உணர முடிந்தது.

“பெண்ணைப் பெற்றவர் கெஞ்சி கேட்கும் போது என்னால் சொல்லாமல் இருக்க முடியல ஆரா. நான் என்ன தான் செய்வது? நீ ஏன் என்னைப் பத்தி அவங்க கிட்ட சொன்ன? நீ சொல்லாமல் இருந்திருந்தால் அவர் வந்து என்னைப் பார்த்திருக்க மாட்டார்... உனக்கும் இந்த நிலைமை வந்திருக்காது”

“அப்படி நீங்க சொன்னதால் தான் பச்சோந்தி போல் நிறம் மாறும் மனிதர்களை என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது” அவளைப் பற்றிக் கசப்பாய் நினைத்தவன் விரக்தியாய் புன்னகைத்தான்.

“அதுக்காக அந்தப் பெண்ணை நீ வெறுத்துடாதே ஆரா. உன்னைப் பத்தி சொல்லி அவளுக்குப் புரிய வைக்கப் பாரு”

“எதைன்னு சொல்லி அவளுக்குப் புரிய வைக்க” என்றவன் பின் நினைவுக்கு வந்தவனாய், “என்னைப் பத்தி எல்லாத்தையும் சொல்லிட்டீங்களா?” அவரிடம் தவிப்பாய் கேட்டான்.

“இல்லை ஆரா... நீ சிறைக்குச் சென்றதை மட்டும் தான் சொன்னேன். அதன் பின்னணியைப் பத்தி மூச்சு விடவில்லை” அவரின் வார்த்தையில் அவன் பெருமூச்சு விட்டான்.

“ஒரு பெண்ணால் வாழ வேண்டிய வயதில் வாழ முடியாமல் ஜெயிலுக்குப் போனேன். இப்போ அதெல்லாம் மறந்து வாழ நினைக்கும் போது மீண்டும் அதே பெண் குலத்தால் என் வாழ்க்கையைத் தொலைச்சிட்டு நிற்கிறேன். என் நிலையைப் பார்த்தீங்களா அய்யா. என் வாழ்க்கையில்

நல்லதே நடக்காதா? நான் அப்படி என்ன பாவம் பண்ணினேன்? எல்லோரையும் போல் சந்தோசமா வாழணும்ன்னு நான் நினைக்கிறது தப்பா அய்யா?" ஏக்கத்துடன் கேட்டவனின் முகத்திலிருந்த வேதனை, கண்ணிலிருந்த வலி எல்லாவற்றையும் நல்லசிவத்தால் உணர முடிந்தது.

"ஆரா... மனசொடிந்து போயிடாதேப்பா. இவள் ஒருத்தி தான் பெண்ணா? உலகத்தில் வேறு பெண்கள் இல்லையா? உனக்கு ஏத்த பெண் எங்கேயாவது இருப்பா. நேரம் காலம் வரும் போது அவள் நிச்சயம் உன்னைத் தேடி வருவா. நீ கவலைப்படாதே" அவர் ஆறுதல் சொல்ல...

"அய்யா... மயூரியை பார்த்துமா நீங்க இப்படிச் சொல்றீங்க? அவளை மாதிரி ஒரு பெண் எங்கேயாவது இருக்காளா? சொல்லுங்க. அவளை மாதிரி ஒரு பெண்ணை உங்களால காட்ட முடியுமா?" அவருக்குமே மயூரியை பற்றித் தெரியுமாதலால் அமைதியாக இருந்தார்.

"மனசு ஒண்ணும் நாம போட்டிருக்கிற சட்டை இல்லை... நினைச்சப்போ மாத்துறதுக்கு. அவளை நான் மனசாரக் காதலிச்சேன். எனக்கு வேறு யாரும் வேணாம்... எனக்கு அவள் தான் வேணும். நான் எந்தக் காரணத்தைக் கொண்டு அவளை நழுவ விட்டுட மாட்டேன். அவ எனக்கு மட்டும் தான் சொந்தமானவள். வேறு யாருக்கும் அவளைச் சொந்தமாக நான் விட மாட்டேன். அவள் என் மனைவி. அவள் மீதான என் உரிமையை நான் எந்த நிலையிலும் விட்டு கொடுக்க மாட்டேன்" சிங்கம் போல் கர்ஜித்தவனைப் பதட்டத்துடன் பார்த்தவர்,

"வேணாம் ஆரா... எதையாவது செய்து அந்தப் பெண்ணின் நிம்மதியை குலைத்து விடாதே"

"அவள் என் உயிர் அய்யா. என் உயிருக்கு நான் தீங்கு செய்வேனா? நிச்சயம் மாட்டேன். அதேசமயம் அவளை விட்டு விடவும் மாட்டேன்" என்றவன், "நான் கிளம்பறேன் அய்யா..." அவரிடம் விடை பெற,

“ஆரா... பாவம்ப்பா அந்தப் பெண்... ரொம்பப் பயந்த சுபாவம் உள்ளவள். பார்த்துப்பா” அவளுக்காய் அவர் இரக்கப்பட... அதைக் கண்டு அவன் சிரித்தான்.

“அய்யா... நான் அவ கூட வாழத்தான் நினைக்கிறேன். அவளைத் துன்புறுத்த நினைக்கல. அவளுக்கு ஒரு கஷ்டம்ன்னா முதலில் அது என்னைத் தான் பாதிக்கும். நீங்க கவலைப்படாதீங்க. அவளைப் பூ போல் நான் பார்த்துக்கிறேன்” அவனின் வார்த்தையில் அவர் நிம்மதியடைய... அங்கிருந்து வெளியேறிய அவன் மனமோ நிம்மதியில்லாமல் தவித்தது.

****

மயூரியின் வீட்டினுள் புயல் போல் நுழைந்த ஆரனை சற்றும் எதிர் பார்க்கவில்லை ராகவன். “எங்கே உங்க பொண்ணு?” அவனின் வார்த்தைகள் ஆத்திரத்துடன் வந்தது.

“என் பொண்ணு எதுக்கு உனக்கு? அவ உன் கூட எல்லாம் பேச மாட்டா?” அவர் தன் இருகைகளால் அவனை வழி மறிக்க... அவரின் கையைத் தூசு போல் சுலபமாய்த் தட்டி விட்டவன்,

“அதை உங்க பொண்ணைச் சொல்ல சொல்லுங்க. அவளுக்குப் பதில் நீங்க பேச வேணாம். நான் காதலிச்சது அவளைத் தான். உங்களை இல்லை” கிண்டலாய் கூறியவன் சுற்றும் முற்றும் தன் கண்களைச் சுழற்றினான்.

அவனின் குரல் கேட்டோ இல்லை எதேச்சையாகவோ தன் அறையில் இருந்து வெளியில் வந்த மயூரி அங்கே ஆரனை கண்டதும் திகைப்பில் விழிகள் விரிய அப்படியே அசையாது நின்றிருந்தாள். அவளைக் கண்டதும் அவ்வளவு நேரம் அவன் மனதில் இருந்த எரிச்சல் பட்டென்று விலகி போவதை அவன் உணர்ந்தான்.

“என்ன பேபி... என்னோட ஃபோனை அட்டென்ட் பண்ணவே மாட்டேங்கிற? என்ன ஆச்சுடா செல்லம்?” கேட்டுக்

கொண்டே அவளருகில் வந்தவன் யாரும் எதிர்பாராத விதமாக அவளை அறைக்குள் தள்ளி கதவை தாளிட்டான்.

“டேய் அவளை என்னடா பண்ற?” ராகவன் கதவை ஓங்கி தட்ட... அந்தச் சத்தம் கேட்டு சுமதியும் மஞ்சரியும் ஓடி வந்தனர்.

“அந்த ஆரன் உள்ளே இருக்கான்” ராகவன் சொல்ல... அவர்கள் இருவரும் பதறி போய்க் கதவை தட்டினர்.

“கொஞ்சம் நேரம் அமைதியா இருந்தீங்கன்னா... நான் என் பேபி கிட்ட பேசிட்டு போயிருவேன். இல்லை கத்தி கூச்சல் போட்டு ஊரை கூட்டியே தீருவேன்னா... நல்லா சத்தம் போடுங்க. அப்புறம் கூடிய ஊர் மக்களே எங்க கல்யாணத்தை நடத்தி வச்சிருவாங்க” அவன் கேலியில் அவர்கள் மூவரும் அப்படியே அமைதியாயினர்.

“அப்புறம் பேபி... எப்படி இருக்க?” நக்கலாய் கேட்டவன் அவளை மேலும் கீழும் பார்த்தான். அழுதழுது முகம் வீங்கி போய்க் காய்ச்சலில் வீழ்ந்தவள் போலிருந்தவளை கண்டு அவன் உள்ளம் உருகி தான் போனது.

“பேபி நான் இருக்கும் போது நீ ஏன் அழற?” என்றவன் அவளருகில் வர முயல, அவளோ அச்சத்துடன் அவனைப் பார்த்துக் கொண்டே பின்னால் நகர்ந்தாள். அவளின் செயலில் அவன் மனம் சொல்லொண்ணா வேதனையடைந்தது.

“நான் உன் ஆரு பேபி. என்னைப் பார்த்து நீ பயப்படலாமா? இங்கே வா பேபி” கனிவுடன் கை நீட்டி அவளை அழைக்க, அவளோ பின்னாடியே போக... ஒரே எட்டில் அவளை எட்டி பிடித்தான்.

“பேபி... பேபி...” அவன் பிதற்றியபடி அவளை அணைக்க முயல... அவளோ அவன் பிடியிலிருந்து விடுபடத் திமிறினாள்.

“உங்களைப் பார்த்தா எனக்குப் பயமாயிருக்கு” மெல்லிய குரலில் சொன்னவளை சட்டென்று விடுவித்தவன் அவள்

கண்களுக்குள் உற்று நோக்கினான்.

காதல் மொழி பேசிய அவளின் வாயிலிருந்து இப்படியொரு வார்த்தையை அவன் சத்தியமாய் எதிர் பார்க்கவில்லை. அவனைக் கண்டதும் நாணி கவிழும் அவளது முகம் இன்று அச்சத்தில் வெளுத்து போய் இருந்ததைக் கண்டு அவனால் சகிக்க முடியவில்லை. அதேசமயம் அவள் மீது அவனின் கோபமும் அதிகரித்தது.

“அதான் ஏன்னு கேட்கிறேன்?” அவள் தோள் பட்டையைப் பற்றிப் பலமாய் உலுக்கினான். அவனுக்குப் பதில் சொல்ல முடியாமல் அவள் தேம்பினாள். அவளின் அழுகையில் அவன் கோபம் சற்று மட்டுப்பட்டது.

“என் பக்கம் நியாயம் இருக்கும்ன்னு உனக்குத் தோணவே இல்லையா? என் கிட்ட ஒரு வார்த்தை கேட்கணும்ன்னு நீ நினைக்கவே இல்லையா? நீ செய்றது... நடந்துக்கிறது எல்லாம் எனக்கு ரொம்ப வலிக்குது பேபி” நெஞ்சில் கை வைத்தபடி வலியுடன் கூறியவனைக் கண்டு அவளுக்கும் வலித்தது. ஆனாலும் அவனுக்கு ஆறுதல் சொல்ல முடியாமல் அச்சம் அவளைத் தடுத்தது.

அவ்வளவு தூரம் அவன் பேசியும் அவள் மௌனம் காத்தது அவனுக்குள் வெறியை கிளப்பியது. “ஏண்டி இப்படி ஊமை கோட்டான் மாதிரி முழிக்கிற? எதையாவது பேசுடி?” இதுவரை இப்படிப் பேசியிராத அவனின் பேச்சில் அவள் அரண்டு தான் போனாள்.

“எனக்குத் தெரியும்டி... என்னைப் பத்தி தெரிஞ்சதும் என்னைக் கழட்டி விடலாம்ன்னு நீ ப்ளான் பண்ணிட்ட... அப்படித்தானே?” அவன் கேட்டதில் அவள் உயிரே போய்விட்டது.

‘நானா அப்படி நினைத்தேன்? நீங்க தான் என் உயிர். உங்களைப் போய்க் கழட்டி விடணும்ன்னு நான் நினைப்பேனா? எனக்கு என்ன செய்றதுன்னு குழப்பமா இருக்கு ஆரு. எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு ஆரு. நான் என்ன தான் பண்றது?’ மனதுக்குள் அவள் புலம்பியது

பாவம் அவனுக்குக் கேட்கவில்லை. அவன் கொஞ்சமும் ஆத்திரம் தனியாதவனாய் அவளை உறுத்து விழித்தான்.

“என்னடி... உன் மனசுல உள்ளதை அப்படியே சொல்றானேன்னு திகைச்சுப் போய்ப் பார்க்கிறியா? உங்களை மாதிரி பொண்ணுங்க வேற எப்படி நினைப்பீங்க? ஆனா நான் உன்னை விட மாட்டேன்டி” அவனின் வார்த்தையில் அவள் மனம் அமைதியடைந்ததை அவன் அறியவில்லை. அவனோ அவளை உணராமல் பேசி கொண்டே போனான்.

“ஆமாம்டி... நான் ஜெயிலுக்குப் போனவன் தான். அதுவும் சாதாரணக் கொள்ளை, ஆள்மாறாட்டம், பிராத்தல் கேசுக்கு உள்ளே போனவன் இல்லை. கொலை அதுவும் ரெட்டை கொலை பண்ணிட்டு உள்ளே போனவன். இப்போ அதுக்கு என்னங்கிற? நீ மட்டும் என்னைக் கல்யாணம் பண்ணிக்க மறுத்து எடக்கு மடக்கா நடந்துக்கிட்டேன்னு வச்சுக்கோ... மூணாவதா உன்னையும் போட்டு தள்ளிட்டு ஜெயிலுக்குப் போயிட்டே இருப்பேன். ஜெயில் ஒண்ணும் எனக்குப் புதுசு இல்லை” அவளின் அமைதியை கண்டு பொறுக்க மாட்டாமல் ஆக்ரோசமாய் அவன் கத்த... அதைக் கேட்டு அவள் சிலையாய் சமைந்து நின்றாள்.

“ஏண்டி... இப்படி வாயை திறக்காம என்னை இம்சை பண்ற? என்னை யார் வேணாலும் எது வேணாலும் சொல்லிட்டு போகட்டும். மத்தவங்களைப் பொறுத்தவரையில் நான் கொலைக்காரனாவே இருந்துட்டு போறேன். ஆனா உனக்கு நான் அன்பு காதலன் இல்லையா? நான் உன் உயிர் மூச்சு இல்லையா? இங்கே பாருடி... என்னைப் பார்த்து பேசுடி” மயூரியின் முகத்தைத் தன் கைகளில் ஏந்தி கொண்டு கோபமாய்க் கேட்ட ஆரன் அவள் கண்களில் தெரிந்த கலக்கத்தில் என்ன கண்டானோ? அவன் முகத்தில் பழையபடி கனிவு வந்தது... இரக்கம் வந்தது.

“நான் உன் ஆரு பேபி... என்னைப் பார்த்ததும் உன் கண்ணில் தெரியும் காதல் இப்போ எங்கே போச்சு? யாருமில்லாத அநாதையான எனக்கு இருக்கிற ஒரே சொந்தம் நீ தான். நீயே என்னை வெறுத்து ஒதுக்கினா எப்படிப் பேபி நான் தாங்குவேன்?” அவன் அவ்வளவு தூரம் உருகி உருகி பேசிய வார்த்தைகள் எதுவும் கல்லாய் சமைந்தவளை உயிர்பிக்கவில்லை.

எப்போதும் அவன் அநாதை என்றால் ‘நான் இருக்கிறேன் உனக்கு’ என்று காதலோடு பார்க்கும் அவளின் ஒற்றைப் பார்வைக்காக அவன் தவமிருக்க... அவளோ அவனின் மனநிலையைக் கூட உணர முடியாத நிலையில் பிரம்மை பிடித்தது போல் நின்றிருந்தாள். அவளிடம் காதலை எதிர்பார்த்திருந்த அவனோ அவளின் வெறித்த பார்வையில் முற்றிலும் மனம் வெறுத்து தான் போனான்.

“என்னைப் பத்தி தெரிஞ்சதும் உன் காதல் முடிஞ்சு போச்சு இல்ல. அவ்வளவு தான் உன் காதலா? நீ இந்தளவுக்குச் சுயநலமா இருப்பேன்னு நான் நினைக்கல. ச்சீ...” என்று அவளை ஆத்திரத்துடன் தள்ளி விட்டவன் அறை கதவை திறந்து கொண்டு வெளியேறினான்.

நல்லவேளை அவன் தள்ளி விட்டதில் அவள் அப்படியே படுக்கையில் தான் விழுந்தாள். விழுந்தவள் எழும்

எண்ணம் கூட இல்லாமல்... கோபமாய்ப் போகும் அவனைத் தடுத்து நிறுத்தும் எண்ணம் கூட இல்லாமல் தனக்குள் மூழ்கி போயிருந்தாள்.

அவன் வெளியேறியதை கண்டதும் அவசரமாய் ராகவன், சுமதி, மஞ்சரி மூவரும் மயூரியை நோக்கி வந்தனர்.

“மயூ... அவன் என்னம்மா செஞ்சான்?” மகளைத் தலை முதல் பாதம் வரை ஆராய்ச்சி செய்தார் சுமதி.

“மயூம்மா...” ராகவன் அவள் அருகில் அமர்ந்து தலையைக் கோதி கொடுக்க... அவளோ எதையும் உணராமல் தன் உணர்வின் பிடியில் சிக்கியிருந்தாள்.

“மயூ... இங்கே பாரடி” சுமதி அவளைப் பிடித்து உலுக்க... அதில் கொஞ்சம் உணர்வு அடைந்தவள், “ஆங்... என்னம்மா?” அன்னையை நோக்கி மலங்க மலங்க விழித்தாள்.

“என்னடி நடந்தது?” அன்னையின் கேள்விக்கு ‘ஒன்றுமில்லை’ என்பது போல் தலையசைத்தவள் தலையணையில் முகம் புதைத்து கொண்டாள்.

“அப்பா... அவளைத் தொந்திரவு பண்ண வேணாம்... தனியா விடுங்க” மஞ்சரி சொல்லவும் அதை ஆமோதித்த அவர்கள் அந்த அறையை விட்டு வெளியேறினர்.

‘ஆரு...’ மனதில் அவன் பெயரை விடாமல் உச்சரித்துக் கொண்டே அழுது கொண்டிருந்தாள் மயூரி. அவன் தன்னைக் கொலைக்காரன் என்று சொன்னதுமே அவளின் புலன்கள் அனைத்தும் செயலிழந்தது போலாயிற்று. சாதரணமாக ஒரு துளி ரத்தத்தைக் கண்டாலே மயக்கம் போட்டு விழுபவள் அவள். அவனிடம் போய் ‘நான் ரெண்டு கொலை பண்ணியவன்’ என்று அவன் கூறினால் அதை அவள் என்ன மாதிரியாக எடுத்து கொள்வாள்?

ஒருமுறை அவள் சிறுமியாக இருக்கும் போது உணவுக்காகக் கோழியை உயிரோடு வாங்கி வந்து வெட்டும் போது தற்செயலாய் அவள் அதைப்

பார்த்துவிட்டாள். உயிர் துடிக்கத் துடிக்க ரத்தம் பீறிட்டு வழிய அந்தக் கோழி இறந்ததைக் கண்டவள் மூன்று நாட்கள் காய்ச்சலில் விழுந்துவிட்டாள். அந்தளவுக்கு மென்மையான, பயந்த சுபாவம் உடையவள் அவள்.

“ஏண்டி... சிக்கன்னா நல்லா வெட்டுவ. ஆனா கோழியை வெட்டுனா மட்டும் பயப்படுற? கோழி சாகாம உனக்குச் சிக்கன் எங்கிருந்து கிடைக்கும்? கொன்னா பாவம்... தின்னா போச்சு” சுமதி கூட அவளை விளையாட்டாய் கிண்டல் பண்ணினார். அன்றிலிருந்து அவள் அசைவ உணவை உண்ணுவதை நிறுத்திவிட்டாள்.

அப்படிப்பட்ட மென்மையான மனம் படைத்தவளிடம் போய் மனித உயிரை காவு வாங்கிய விசயத்தை அவன் அசால்ட்டாய்க் கூறினால் அவள் பயப்படாமல் என்ன செய்வாள்? ‘ஏன் ஆரு... இப்படிப் பண்ணீங்க?’ மனதுக்குள் புலம்பியவளுக்கு ஒன்று மட்டும் தெரியவில்லை. சாந்த சொரூபியாய் காட்சியளிக்கும் தெய்வங்கள் கூடத் தீமை செய்யும் அரக்கர்களை அழிப்பதற்காக ஆக்ரோஷமாய் மாறி அவர்களை வதம் செய்தது அந்தக் கணம் அவள் நியாபகத்தில் வரவில்லை.

தெய்வங்களே தீமையை அழிக்க ஆயுதத்தைக் கையில் எடுக்கும் போது... சாதாரண மனிதன் தன் கண்ணெதிரே நடக்கும் தீமையை அழிக்க ஆயுதத்தைக் கையில் எடுக்காமல் என்ன செய்வான்? தனக்கு இழைக்கப்படும் துரோகத்தைக் கண்டும் காணாமல் சகித்துக் கொண்டு வாழ்பவன் சாதாரண மனிதன். அதைப் பொறுக்க மாட்டாமல் பொங்கி எழுந்து அவர்களை எதிர்க்க நினைப்பவன் அசாதாரண மனிதன். ஆரன் அசாதாரண மனிதன் என்பதை அவள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை. புரியும் போது காலம் கடந்து இருக்குமா?

****

“மயூ... டான்ஸ் ப்ராக்டிஸ் பண்ணலையா?” மறுநாள் காலையில் மயூரியின் அறைக்கு வந்த ராகவன் இயல்பு போல் கேட்க,

“இல்லைப்பா... மனசு சரியில்ல...” எங்கோ வெறித்துக் கொண்டு சொன்ன மகளைக் கண்டு அவருக்குப் பாவமாய் இருந்தது. காதல் இந்தளவுக்கு ஒருவரை படுத்துமா? என்று மனதுக்குள் எண்ணியவர் மனைவியை நாடி சென்றார்.

“சுமி... மயூவை இப்படியே விட்டா சரிப்பட மாட்டா. ஊரிலிருக்கும் உன் அண்ணனுக்கு ஃபோன் பண்ணி மயூவை அவர் பையனுக்குக் கொடுக்கச் சம்மதம்ன்னு சொல்லிடு. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ரிஷிக்கும் அவளுக்கு நிச்சயம் பண்ண ஏற்பாடு பண்ணு” கணவனின் கூற்றில் இருந்த உண்மையை உணர்ந்தவராய் சுமதி சரியென்பது போல் தலையாட்டினார்.

****

“சுனிதா போதும்ப்பா... இன்னமும் என்ன வாங்க போற?” கை நிறையப் பைகளைச் சுமந்தபடி சுனிதாவின் பின் சென்று கொண்டிருந்த வருண் அலுத்துக் கொண்டான்.

“இன்னும் ஒரே ஒரு கடை தான் வருண். ப்ளீஸ்டா...” அவள் கெஞ்ச, பெண்கள் கெஞ்சினால் நம்ம மன்மதனுக்குத் தான் பொறுக்காதே.

“இதுக்குப் போய்க் கெஞ்சணுமா ஸ்வீட்டி? நீ இன்னும் பத்து கடைக்குக் கூட்டிட்டு போனாலும் நான் உன் கூட வருவேன். இதை விட எனக்கு வேறு வேலை என்ன இருக்கு?” என்றபடி ஈ என்று இளித்தான் அவன்.

“அதான் எனக்கு நல்லா தெரியுமே” கிண்டலாய் சொன்னவள் உடைகளைத் தேர்வு செய்ய...

வருண் என்ன செய்வது என்று தெரியாமல் நாலாப்புறமும் தன் பார்வையைச் சுழல விட்டான். அந்த ஷாப்பிங் மாலின் மறுகோடியில் இருந்து வந்து கொண்டிருந்த மஞ்சரியை கண்டதும் அவன் கண்கள் மகிழ்ச்சியில் விரிந்தது.

‘ஆஹா... நம்ம டாலி தனியா வர்ற மாதிரியிருக்கே... டேய் வருண்... நல்ல சான்சை மிஸ் பண்ணிடாதேடா’ மனதுக்குள்

சொல்லி கொண்டவன், “சுனிதா... இந்தா உன் பேக் எல்லாத்தையும் பிடி” தான் வைத்திருந்த பைகளை அவள் கையில் வலுக்கட்டாயமாக அவன் திணிக்க...

“லூசு வருண்... உனக்கு என்னடா ஆச்சு?” வாங்கும் போது கையிலிருந்து கீழே விழுந்த பையை எடுத்தபடி சுனிதா அவனைத் திட்ட...

“சாரி ஸ்வீட்டி... என் டாலி வந்திருக்கா... அவளை நான் பார்க்க போறேன். பை...” என்று அவளிடம் விடைபெற... அவளோ அவன் கையைப் பிடித்துத் தடுத்தவள்,

“யார்டா உன் டாலி? அவளை எங்க கிட்டேயும் கொஞ்சம் காட்டுறது” சுற்றும் முற்றும் பார்த்தபடி அவள் கேட்க...

“அ... அஸ்க்கு புஸ்க்கு... சொந்த காசில் சூன்யம் வைக்க நான் என்ன கேனையா? அதெல்லாம் காட்ட முடியாது” என்றவன் அவள் மீண்டும் கேள்வி கேட்கும் முன் அங்கிருந்து ஓடிவிட்டான்.

“ரோமியோங்கிற பேரு உனக்கு ரொம்பப் பொருத்தம் தான்டா” தனக்குள் சிரித்துக் கொண்டவள் தன் வேலையைத் தொடர்ந்தாள்.

“ஹாய் டாலி...” தன் முன் மூச்சிரைக்க வந்து நின்றவனை எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் பார்த்தாள் மஞ்சரி.

‘என்னடா இது? எதுக்கு இந்த முழி முழிக்கிறா? இவளுக்கு என்னை அடையாளம் தெரியலையா?’ என்று யோசித்த வருண்,

“என்னைத் தெரியலையா?”

“ஏன் தெரியாம... அதான் பனை மரத்துல பாதி வளர்ந்த மாதிரி என் கண் முன்னாடி நின்னுட்டு இருக்கீங்களே? உங்களைப் போய்த் தெரியலன்னு சொல்ல முடியுமா?” நக்கலாய் கேட்டவள் அவனைக் கண்டு கொள்ளாமல் அங்கிருந்து நகர முற்பட்டாள்.

“அப்புறம் ஏன் தெரியாத மாதிரி ரியாக்சன் கொடுக்கிற?” அவளின் செய்கை அவனுக்குப் புரியவில்லை.

“நடந்தது எதுவும் உங்களுக்குத் தெரியாது?” ஆரன் அவள் அக்காவின் வாழ்க்கையில் கிளப்பிய புயலை மனதில் வைத்துக் கொண்டு அவள் அவனிடத்தில் கோபப்பட்டாள்.

‘அய்யோ... நான் சுனிதா கூட வந்ததைப் பார்த்திட்டு தான் இப்படிக் கேட்கிறாளோ? இப்ப நான் என்ன பண்ணுவேன்?’ அவனோ வேறு ஒன்றை நினைத்தான்.

“இங்கே பாரு டாலி... நான் கொஞ்சம் இரக்கம் சுபாவம் உள்ளவன். யாராவது ஹெல்ப் கேட்டா முதல்ல அதைச் செஞ்சிட்டு தான் மறுவேலை பார்ப்பேன். அதுவும் ஒரு பெண் ஹெல்ப் கேட்டா நான் முடியாதுன்னு சொல்லவே மாட்டேன். சுனிதா ஷாப்பிங் போறேன் நீ துணைக்கு வர்றியான்னு கேட்டா... அதை நான் மறுக்க முடியுமா சொல்லு? காலம் ரொம்பக் கெட்டு கிடக்கு. ஒரு பொண்ணைத் தனியா வெளியில் அனுப்ப முடியுமா? அதான் நான் அவ கூட வந்தேன்” ‘எங்கப்பன் குதிருக்குள் இல்லை’ என்பது போல் அவனே தன்னைப் பத்தி சொல்லி அவளிடம் மாட்டி கொண்டான்.

‘இது வேறயா?’ என்று நினைத்தபடி அவனை முறைத்தவள், “உண்மையில் உங்களுக்கு ஒண்ணுமே தெரியாதா?”

அவள் பேச்சிலேயே விசயம் வேறு என்பதைப் புரிந்து கொண்டவன், “என்ன சொல்ல வர்ற... கொஞ்சம் புரியும் படியா தான் சொல்லேன்”

“அதான் உங்க தோஸ்த் பண்ணி வச்சியிருக்கிற வேலையைத் தான் சொல்றேன்” அழகாய் நொடித்தவளை கண்டு அவன் மனதுக்குள் ரசித்தாலும்... ‘தோஸ்த்’ என்ற வார்த்தையில் சட்டென்று சீரியசானான்.

“தோஸ்த் என்ன பண்ணினார்? அவர் ரொம்ப நல்லவராச்சே” அவன் ஆரனுக்கு வக்காலத்து வாங்க... அவ்வளவு தான் மஞ்சரி அப்படியே கொதித்துப் போனாள்.

“அவருக்குச் சப்போர்ட் பண்ணி நீங்க பேசாதீங்க. அன்னைக்குப் பார்ட்டியில் அவர் நடந்து கொண்ட விதத்திலேயே அவர் மேல் எனக்குச் சந்தேகம் வந்துச்சு. இப்போ அது சரியா போச்சு” படபடவென அவள் பொரிய,

“மிஸ். மஞ்சரி... என் தோஸ்தை தேவையில்லாமல் பேசுற வேலையை வச்சுக்காதீங்க” அவ்வளவு நேரம் அவன் குரலிலிருந்த விளையாட்டுத்தனம், குறும்புத்தனம் மாறி அவன் குரல் எந்தவொரு உணர்ச்சியும் இல்லாமல் இறுகி போய் ஒலித்ததை அவள் கண்டு கொண்டாள். அந்த அந்நியத் தன்மையில் அவள் மனம் சட்டென்று சுருங்கியது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு,

“தேவையில்லாமல் நான் பேசுறேனா? அவர் தான் தேவையில்லாமல் என் அக்காவின் வாழ்க்கையில் குறுக்கே வர்றாரு” என்றவள் ஆரனை பற்றிய எல்லா விசயங்களையும் ஒன்றும் விடாமல் கூறி முடிக்க... அதைக் கேட்ட வருணின் முகம் இறுகி போயிருந்தது.

“இப்போ சொல்லுங்க... உங்க தோஸ்தோட யோக்கியதை பத்தி...” அவள் எக்காளமாய்க் கேட்டாள்.

அவனுக்குமே ஆரனின் மறுபக்கம் சற்று அதிர்ச்சியைத் தந்தது தான். ஆனாலும் ஆரனின் பக்கம் நியாயம் இருக்கும் என்று இவ்வளவு நாள் அவனுடன் பழகிய பழக்கத்தில் வருணின் மனம் திடமாக நம்பியது.

“போதும் இதுக்கு மேலே நீங்க ஒண்ணும் சொல்ல வேணாம். என்னோட தோஸ்தை பத்தி எனக்கு நல்லா தெரியும். நீங்க ஒண்ணும் அவருக்குச் சர்ட்டிபிகேட் தர வேணாம்” என்றவன், “இனிமேல் நாம எங்கே சந்திச்சாலும் தெரிஞ்சவங்க மாதிரி காட்டிக்க வேணாம். பை மிஸ் மஞ்சரி...” கம்பீரமாய் விடை பெற்று அவன் செல்ல... ஏனோ அவனின் செயலில் அவளுக்குள் சுருக்கென்று வலித்தது.

“ஆமாம்... பெரிய கிருஷ்ணர் – குசேலர் பிரெண்ட்ஷிப். போடா நீயும் உன் பிரெண்டும்...” நக்கலாய் வாய் விட்டு கூறியவள் அந்த இடத்தை விட்டு நகன்றாள். ஆரனின்

மேலுள்ள கோபத்தில் வருணின் செயலை கண்டு கொள்ளாமல் காற்றில் பறக்கவிட்டாள் அவள்.

****

“தோஸ்த்... தோஸ்த்...” கத்தி கொண்டே வீட்டினுள் நுழைந்தான் வருண். அவன் அழைத்தது கூடக் காதில் விழாமல் மயூரியின் நினைவில் மூழ்கி இருந்தான் ஆரன்.

“தோஸ்த்.....” ஆரன் முன் வந்து நின்று அவன் கத்த...

“இப்போ எதுக்குடா கத்துற?” சலித்துக் கொண்ட ஆரன் அவனை நிமிர்ந்து பார்த்தான்.

“நீங்க என்னை உங்க பிரெண்ட்டா நினைக்கிறீங்களா? இல்லையா? நான் கூப்பிடற தோஸ்த்ங்கிற வார்த்தைக்கு நான் மதிப்புக் கொடுக்கிறேன். இது வரைக்கும் அப்படித்தான் நடந்து இருக்கேன். ஆனா நீங்க...?” அவன் முடிக்காமல் நிறுத்தினான்.

“ஆனா... என்னடா...?” வருணின் பேச்சுப் புரியாமல் கேட்டான் ஆரன்.

இதுக்கு மேல் ஆரனிடம் எப்படிக் கேட்பது? என்று தெரியாமல் வருண், “இப்போ நான் மஞ்சரியை பார்த்துட்டு தான் வர்றேன்” அவன் சொன்னதிலேயே அவனுக்கு விசயம் தெரிந்து விட்டது என்பதை உணர்ந்து கொண்ட ஆரன் அவன் முகத்தைப் பார்க்க முடியாமல் வேறு பக்கம் பார்த்தான்.

“ஏன் தோஸ்த் உங்களைப் பத்தி என் கிட்ட சொல்லல? நான் உங்களைத் தப்பா நினைச்சிருவேன்னா... அது எப்படித் தோஸ்த் நான் உங்களைத் தப்பா நினைப்பேன்? நீங்க எதைச் செஞ்சாலும் அதில் ஒரு நியாயம் இருக்கும்... சரியான காரணம் இருக்கும். நான் உங்களை நம்பறேன் தோஸ்த்...” உணர்ச்சிகரமாகப் பேசியவனை,

“வருண்....” மனம் நெகிழ்ந்த ஆரன் அவனை ஆரத்தழுவி கொண்டான். தன்னையும் புரிந்து கொள்ள ஒரு ஜீவன்

இருக்கிறது என்ற நினைப்பே அவனுக்குப் பெருத்த ஆறுதலை தந்தது. உயிருக்கு உயிராய் காதலித்தவள் கூட அவனை நம்பாத போது... நண்பன் அவன் தன்னை நம்பியது கண்டு அவன் உள்ளம் எல்லையில்லா உவகை அடைந்தது.

“மறைக்கணும்ன்னு இல்ல வருண்... அதை நானே மறக்கணும்ன்னு நினைக்கிற விசயம். அதை எப்படிச் சொல்றதுன்னு...” ஆரன் வார்த்தைகள் வராமல் தடுமாற...

“வேணாம் தோஸ்த்... நீங்க எதுவும் சொல்ல வேணாம்” அவனின் வலியை உணர்ந்தவனாய் சொன்ன வருண், “அதை விடுங்க தோஸ்த்... அண்ணி இப்போ என்ன சொல்றாங்க?”

“என்னத்த சொல்லுவா? வாயவே திறக்க மாட்டேங்கிறா?” எரிச்சலுடன் ஆரன் சொன்னான்.

“அதுக்காக இதை இப்படியே விடப் போறீங்களா?”

“அதெப்படி விட முடியும் வருண்... அவள் என்னவள்... எனக்கானவள். அவள் மீதான என் உரிமையை நான் எந்தக் காரணம் கொண்டும் விட்டு கொடுக்க மாட்டேன். இனி தான் என் அதிரடி ஆட்டம் இருக்கு...” வெறி பிடித்தவன் போல் கூறியவன் கண்கள் பளபளத்தது.

“தோஸ்த்...” வருண் கவலையாய் அவனின் தோளில் கை வைக்க...

“ஹேய்... நீ பயப்படுற மாதிரி எதுவும் பண்ண மாட்டேன்” என்றவன், “எனக்கு ஒரே ஒரு ஹெல்ப் மட்டும் பண்ணு” என்றவன் தன் திட்டத்தை விவரிக்க... அதில் வருண் மிகுந்த சந்தோசமடைந்தான்.

“எப்படியோ தோஸ்த்... நீங்களும் அண்ணியும் சந்தோசமாயிருந்தா... அதுவே எனக்குப் போதும். இதுக்கு வேண்டிய ஹெல்ப்பை நான் உங்களுக்குக் கட்டாயம் பண்ணுவேன்” என்று உறுதியாய் கூறியவன், “தோஸ்த் உங்களுக்கு ஹெல்ப் பண்ண போய் நாளைக்கு என் ஆளு

என்னை முறைக்காம இருந்தா சரி. அப்படி எதுவும் நடந்தா... நீங்க தான் தோஸ்த் என் காதலுக்கு ஹெல்ப் பண்ணனும்”

“நிச்சயமா உனக்கு நான் ஹெல்ப் பண்ணுவேன் வருண்” முழுமனதுடன் கூறிய ஆரனை பார்த்து,

“நன்றி... நன்றி... தோஸ்த்” அவன் மேலை நாட்டு பாணியில் குனிந்து நிமிர... அவனின் செயலில் வாய்விட்டு சிரித்த ஆரன் அவனை அன்போடு அணைத்துக் கொண்டான்.

****

“நாளை மறுநாள் உனக்கும் ரிஷிக்கும் நிச்சயதார்த்தம் மயூ” தந்தையின் வார்த்தையில் அதிர்ந்து போய் அவரைப் பார்த்தாள் மயூரி.

“அப்பா...” கண்ணில் வலியுடன் பார்த்த மகளைப் பரிவுடன் பார்த்தவர்,

“அப்பா உன் நல்லதுக்குத் தான்ம்மா சொல்றேன்”

“அப்பா எனக்குக் கல்யாணமே வேணாம். நான் இப்படியே இருந்திட்டு போறேன்” மனம் வெறுத்தவளாய் அவள் கூறிய வார்த்தைகள் அவரைக் காயப்படுத்தியது. காலம் முழுவதும் கன்னியாய் இருப்பதற்காகவா அவளைப் பாராட்டி சீராட்டி வளர்த்தது.

“இப்படியே தனி மரமா எத்தனை நாளைக்கு இருப்ப? எங்க காலத்துக்கு அப்புறம் உன்னோட நிலமை? கொஞ்சம் யோசிச்சு பாருடா” என்றவர், “உன்னால அவனை மறக்க முடியலையாம்மா? உன்னை மாதிரி ஒருத்தியின் காதல் கிடைப்பதற்கு அவனுக்குத் தகுதியில்லைம்மா. அவனை மறக்கிறது தான் உனக்கு நல்லது” சிறுபிள்ளைக்கு எடுத்து சொல்வது போல் அவளுக்கு எடுத்து சொன்னார்.

“அவர் எப்படிப்பட்டவரா இருந்தாலும் நான் அவர் மேல் வைத்த காதல் பொய்யில்லையே? அவரை மறந்துட்டு இன்னொரு கல்யாணம்... ம்ஹூம்... அது இந்த

ஜென்மத்தில் நடக்காது. அவரை என்னால் மறக்க முடியாதுப்பா” அவள் தன் நிலையிலேயே புலம்ப...

மருந்து உட்கொள்வதற்குக் கசப்பாக இருந்தாலும்... அதை உட்கொண்டால் தான் நோய் நிவாரணம் அடையும். அதே போல் மயூரிக்கு தான் சொல்வது கசப்பாக இருந்தாலும் பின் நாளில் அது அவளுக்குப் பெருத்த நன்மையையே தரும் என்பதை உணர்ந்தவராய்,

“நீ என்ன சொன்னாலும் சரி மயூ... உனக்கும் ரிஷிக்கும் கல்யாணம் நடந்தே தீரும்” உறுதியாய் கூறியவர், “முடிந்தால் அவனை மறக்கிற வழியைப் பாரு” கண்டிப்புடன் கூறிவிட்டு அவள் அறையை விட்டு வெளியேறினார்.

சொந்த மாமா மகன் தான் இந்த ரிஷி. சிறு வயது முதல் அவளோடு ஓடியாடி விளையாடியவன் தான். ஆனாலும் அவள் மனது அவனை ஏற்றுக் கொள்ள மறுத்தது. எங்கிருந்தோ வந்த வெறும் ஆறு மாத பழக்கத்தில் அவளின் உயிரில் நிறைந்த ஆரனையே அவள் உள்ளம் நாடியது. ஆரனை நினைத்த மனதால் வேறொருவனை நினைப்பதற்கு அவள் உள்ளம் கூசியது. இவ்வளவு நேரம் அவன் மீதான பயம் மட்டுமே ஆக்கிரமித்திருந்த அவளது உள்ளத்தில்... ரிஷியுடனான திருமணப் பேச்சு அவளின் உள்ளத்து காதலை தட்டி எழுப்பி வெளி கொண்டு வந்தது.

‘ஆரு... சாரி ஆரு... என்னை மன்னிச்சிருங்க. இப்போ என் மனசை நான் முழுதாய் உணர்ந்து கொண்டேன். நீங்க இல்லாத வாழ்கையை என்னால் நினைச்சு கூடப் பார்க்க முடியல. நீங்க எங்கே இருக்கீங்க? சீக்கிரம் என்னை வந்து அழைச்சிட்டு போங்க. யாருமில்லாத உலகத்தில் நீங்களும் நானும் மட்டுமாய்த் தனியாய் வாழுவோம். உங்களைப் பழிக்கும் இந்த உலகம் எனக்கு வேண்டாம். உறவுகள் வேண்டாம். எனக்கு நீங்க மட்டும் போதும் ஆரு’ ஊமையாய் அவள் நெஞ்சம் அழுது புலம்பியது.

அவனுக்காக அவள் உருகி தவித்த அதேசமயம் பெற்றோரை எதிர்த்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியில்

செல்லவும் பயந்தாள். கண்ணுக்குள் பொத்தி வைத்து வளர்த்த பெற்றோரை கதற விடுவதில் அவளுக்கு விருப்பமும் இல்லை... தைரியமும் இல்லை. பலவிதங்களில் யோசித்துப் பார்த்தவள் அந்த விபரீத முடிவை தேர்ந்தெடுத்தாள்.

மறுநாள் காலையில் வழக்கம் போல் எழுந்த மயூரி அன்னையிடம், “அம்மா கோவிலுக்குப் போயிட்டு வந்திர்றேன்”

“இப்போ எதுக்கும்மா கோவிலுக்கு?” வியப்பாய் மகளைப் பார்த்தார் சுமதி.

“மனசு சரியில்லைம்மா” அவள் வார்த்தையில் இருந்த பற்றற்ற தன்மையை உணர்ந்த அவர் சம்மதமாய்த் தலையசைத்தார்.

வீட்டிற்கு அருகில் இருந்த கோவிலுக்கு வந்தவள் கடவுள் சன்னிதானத்தில் கண் மூடி பிரார்த்தித்தாள். அவள் என்ன தான் கடவுளிடம் வேண்டினாலும் அவள் மனம் முழுவதும் ஆரனே நிறைந்திருந்தான்.

‘என்னை மாதிரி கோழைக்கு எல்லாம் காதல் வந்திருக்கவே கூடாது கடவுளே. அப்பா, அம்மாவை எதிர்த்து அவரோட வாழ போகவும் தைரியமில்லை. அதேசமயம் அவரை மறந்திட்டு வேறொருத்தனை கல்யாணம் பண்ணிக்கவும் மனசில்லை. நான் என்ன தான் செய்றது கடவுளே? எனக்கு வேற வழி தெரியல... நான் உயிரோட இருந்தா தானே பிரச்சினை? நான் செத்து போயிட்டா யாருக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை’

மனம் உருக கடவுளிடம் பேசி கொண்டிருந்தவள் ஏதோ உள்ளுணர்வு உந்த கண்ணைத் திறந்து பார்த்தவள்... அங்கே தன் முன் நின்றிருந்த ஆரனை சற்றும் எதிர் பார்க்கவில்லை. எதிர்பாரா விதமாக அங்கே அவனைக் கண்டவள் பேச்சற்றவளாய் திகைத்து போய் நின்றிருந்தாள்.

அவள் கண் திறப்பதற்காகவே காத்திருந்தவன் போல அவனின் கைகள் அவள் கழுத்தில் தாலியை கட்டியது. அவனின் செயலில் அவள் உச்சபட்ச அதிர்ச்சியில் உறைந்து போனாள்.

“மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னை
கைத்தலம் பற்ற கனா கண்டேன் தோழி நான்”

‘ஆரு... என் ஆரு... வந்துட்டீங்களா?’ ஏதோ அடுத்த நொடி ஆரன் தன் கண்ணிலிருந்து மறைந்து விடுவானோ என்பது போல் அவனைப் பருகுவது போல் கண்ணிமைக்காமல் பார்த்தாள் மயூரி. அவன் தனக்குத் தாலி கட்டியது அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தாலும்... அவனை நேரில் பார்த்தது அவளுக்கு மிகவும் மகிழ்ச்சியாகவே இருந்தது. அவனின் மனைவியாவது கனவில் கூட நடக்காது என்று நினைத்திருந்தவளுக்கு அதை நனவாக்கி காண்பித்த அவன் அவள் கண்களுக்கு தெய்வமாகவே தெரிந்தான்.

‘போதும் ஆரு... எனக்கு உங்க மனைவிங்கிற பேர் போதும். இந்த நொடி நான் செத்தா கூடச் சந்தோசமா சாவேன்’ மனதுக்குள் அவனுடன் உருகி உருகி பேசி கொண்டிருந்தவள் அதை வாய் விட்டு சொல்லவில்லை. அப்படி அவள் சொல்லியிருந்தால் அவன் அவள் மனதை நன்கு புரிந்திருப்பான்.

அந்நேரம் தீபாராதனை தட்டை ஏந்தியபடி வந்த அர்ச்சகர் ஆரனின் செயலில் அதிர்ந்து போய் ஆவென்று வாயை பிளந்தபடி நின்றுவிட்டார். அவர் கையிலிருந்த தட்டிலிருந்து குங்குமத்தை எடுத்து அவன் அவளுக்குத் தாலியாகக் கட்டிய மஞ்சளின் மீது வைத்து விட்டவன் பின் அவளின் உச்சி வகிட்டில் வைத்தான். காதலித்தவனைக் கைப்பிடித்த தன் பாக்கியத்தை எண்ணி அவள் கண்ணில் ஆனந்த கண்ணீர் பெருகியது. கண் மூடி அந்தப் பொன்னான தருணத்தை மனதில் பொக்கிஷமாய்ப் புதைத்து வைத்து கொண்டாள்.

“இப்போ எதுக்கு இந்தக் கண்ணீர்? நான் உனக்குத் தாலி தானே கட்டியிருக்கேன். தூக்கு கயிறு கட்டலையே? சந்தோசமா இருக்க வேண்டிய நேரத்தில் சும்மா சும்மா அழாதே. முதல்ல கண்ணைத் துடை...” அவளின் காதுக்கருகில் அடிக்குரலில் உறுமிய ஆரனின் வார்த்தைகள் அவளைப் பட்டென்று கண்ணைத் திறக்க

செய்தது. அவனின் இறுகிய கோப முகம் அவளுக்குக் குளிரை கொடுத்தது.

“வா போகலாம்...” அவளின் கைப்பிடித்து அவன் இழுக்க... அவ்வளவு நேரம் இருந்த மோன நிலை அவளுக்குச் சட்டென்று கலைந்தது.

‘அய்யோ... அப்பா, அம்மா இந்தக் கல்யாணத்தை எப்படி எடுத்துக்குவாங்க? அவங்க சம்மதம் இல்லாமல் இப்படி நான் செஞ்சது சரியா? காலையில் கோவிலுக்குப் போறேன்னு சொன்னப்போ கூட அம்மா கேட்டாங்களே... ‘இப்போ எதுக்குக் கோவிலுக்குன்னு?’ நான் ஏதோ ப்ளான் பண்ணி கல்யாணம் பண்ணிக்கிட்ட மாதிரி தானே நினைப்பாங்க. அவங்களை என்ன சொல்லி சமாதானம் செய்றது? என்னை மன்னிப்பாங்களா? ஆருவை மருமகனா ஏத்துக்குவாங்களா?’ அவள் மனம் ஏதேதோ நினைத்தது.

“என்ன யோசனை? இப்படியே ஓடிறலாம்ன்னா?” அவன் குரலில் ஏகத்துக்கும் நக்கல் இருந்தது. அவன் விட்டால் ஓடும் நிலையில் தான் அவள் இருந்தாள். அவனுடனான இந்தத் திருமணம் அவளுக்குச் சந்தோசத்தைத் தந்தாலும்... பெற்றோரை நினைத்து அவள் மனம் கலங்கியது. அவர்கள் விருப்பமில்லாமல் திருமணம் செய்தது அவள் மனதுக்குள் உறுத்தலாய் தான் இருந்தது.

“அப்பா...” மெல்லிய குரலில் அவள் சொன்னது அவளுக்கே கேட்டிருக்காது.

“ம்... அப்பாவா? உன்னை உன் அப்பா கிட்ட விட்டுட்டு நான் காதல் தியாகியா வாழணுமா? உன் அப்பாவே ஆனாலும் நான் உன்னை விட்டு கொடுக்க மாட்டேன்டி. உன் அப்பா நம்ம கல்யாணத்துக்குச் சம்மதிப்பாருன்னு எனக்கு நம்பிக்கை இல்லை. அதனால இந்த அப்பா, அம்மா ஆட்டுக்குட்டி கதையெல்லாம் மறந்துட்டு என்னோடு வரும் வழியைப் பாரு. இனிமேல் உனக்கு அப்பா, அம்மா, தங்கை எல்லாம் நான் தான். இப்போ நீ அவர் மகள் இல்லை. நீ என் மனைவி. நான் இருக்கும் இடத்தில் தான் நீ இருக்கணும். என்ன புரிஞ்சதா?” கோபமாய்க் கூறியவன் அவளின்

மனதை புரிந்து கொள்ளாமல் வலுக்கட்டாயமாக அவளின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு கோவிலுக்கு வெளியில் வந்தான்.

அவளோ அவனின் கோபத்தில் வாயடைத்து போனாள். பெற்றோருக்குத் தெரியாமல் அவளுக்கு நடந்த திருமணம் அவளைக் குற்றவுணர்வில் தள்ளியது. அந்தக் குற்றவுணர்வு அவளின் வாழ்நாள் முழுவதும் அவளை வாட்டி வதைக்கப் போகிறது என்பதை அவன் அந்த நேரம் அறிந்திருக்கவில்லை. தன் மனதை பற்றி மட்டுமே யோசித்தவன் அவளின் மனதை பற்றி யோசிக்க மறந்து போனான். யோசித்து இருந்தால் பின்னால் ஏற்படும் பல விபரீதங்களைத் தவிர்த்திருக்கலாம்.

கோவிலுக்கு முன் புறம் நின்று கொண்டிருந்த ஆட்டோ ஒன்றில் ஏறி அவன் நேரே சென்ற இடம் நல்லசிவம் இருக்கும் மறுவாழ்வு மையம்.

“இறங்கு...” அவனின் அதிகார குரலில் அவன் சொன்னதைச் செய்தாள். இறங்கியவள் அந்த இடத்தை ஒருவித அச்சத்துடன் பார்த்தாள். ஏனெனில் அவள் தந்தை அந்த மையத்தைப் பற்றி ஏற்கெனவே அவளிடம் சொல்லியிருந்தார்.

“என்ன அப்படிப் பயமா பார்க்கிற? இங்கே இருக்கிறவங்களும் மனுசங்க தான். சொல்ல போனா இங்கே இருக்கிறவங்க தான் மனுசங்க... வெளியில் இருக்கிற உங்களை மாதிரி உள்ளவங்க தான் நல்லவங்க போர்வையின் பின்னே மறைந்திருக்கும் குற்றவாளிகள்” கோபத்தில் அவன் படபடவெனப் பேச, அவளின் பயம் இன்னமும் கூடி கொண்டே போனது.

அவனிடம் வாய் திறந்து பேச அவள் பயப்பட்டாள். ஆரனை பற்றி அவளுக்கு நன்கு தெரிந்தாலும் இந்த இடைப்பட்ட காலத்தில் நல்ல காதலனாய் அவன் நடந்து கொண்டதில் அவனின் பழைய குணத்தை அவள் ஏறக்குறைய மறந்திருந்தாள். இன்று அவன் அதை வெளிப்படுத்தியதும்

அவள் மனம் மீண்டும் நத்தையாய் ஓட்டுக்குள் சுருண்டு கொண்டது.

அவளை அழைத்துக் கொண்டு நல்லசிவத்தின் முன் நின்றவன், “அய்யா... கொஞ்சம் எழுந்துக்கோங்க...” என்க,

“எதுக்கு ஆரா...?” அவர் புரியாமல் விழித்தாலும் எழுந்து நின்றார். படாரென்று அவர் காலில் அவன் விழ... அவனின் செய்கை உணர்ந்து அவளும் உடன் விழுந்தாள்.

“என்னப்பா இது? நல்லாயிருங்க... நல்லாயிருங்க” என்றவர் அவர்களை எழுப்ப... அப்போது தான் அவர் கவனித்தார் மயூரியின் கழுத்திலிருந்த மஞ்சள் கயிறை.

“ஆரா...” அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தார்.

“எனக்கு வேறு வழி தெரியல” என்றவன் தலையைக் குனிந்தான்.

“அதுக்காக மயூரியோட பெத்தவங்க உயிரோட இருக்கும் போது... நீ இப்படிச் செஞ்சது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கல ஆரா”

“அவங்க எங்க கல்யாணத்துக்குச் சம்மதம் தெரிவிப்பாங்கன்னு எனக்கு நம்பிக்கை இல்லை. மயூ விசயத்தில் நான் யார் பேச்சையும் கேட்பதாய் இல்லை” அவன் உறுதியாய் கூற... அவர் அதற்கு மேல் ஒன்றும் கூறவில்லை.

“இப்போ என்ன செய்யப் போற?”

“அது சஸ்பென்ஸ் அய்யா... நான் உங்க கிட்ட சொல்லி... மயூவோட அப்பா வந்து கண்ணீர் விட்டா... நீங்க மனம் தாங்காம அவரிடம் சொல்லி... எதுக்கு வீண் பிரச்சினை? நான் அவளைக் கூட்டிட்டு ரொம்பத் தூரம் தள்ளி போகப் போறேன். எங்களைப் பற்றி முன்னே பின்னே தெரியாதவர்கள் இடையே எங்கள் வாழ்க்கையை ஆரம்பிக்கப் போறோம். நான் மயூ கூட ரொம்ப வருசம் சந்தோசமா வாழணும் அய்யா” கண்கள் கனவில் மிதக்க

அவன் கூறியதை கேட்டு நல்லசிவம் பிரமித்தார் என்றால்... மயூரியோ மகிழ்ந்தாள். தன்னைப் போலவே அவனும் யோசித்ததில் ஒத்த மனமுடைய தங்கள் மன பொருத்தத்தை எண்ணி அவள் மனம் எல்லையில்லா உவகையடைந்தது.

“நாங்க வர்றோம் அய்யா... நான் எப்போதும் போல் இங்கே உள்ளவர்களுக்கு உதவுவேன். நான் உங்களை எல்லாம் மறக்க மாட்டேன் அய்யா” சொல்லும் போதே அவன் குரல் உடைந்ததோ? கண்கள் கலங்கியதோ? அதை யாரிடமும் காட்டிக் கொள்ள விரும்பாமல் அவன் அங்கிருந்து வேகமாய் வெளியேறினான்.

“அம்மாடி மயூ... அவன் செஞ்சது தப்பு தான்னாலும் அதுக்குப் பின்னே இருக்கும் உன் மீதான அவன் காதலை நீ மறக்க கூடாது. அவனை நல்லா பார்த்துக்கோம்மா” அவளிடம் அவர் கூற...

“பார்த்துக்கிறேன் மாமா” என்றவள் வெளியில் வந்தாள். அங்கே மரத்தடியில் நின்று கொண்டிருந்த அவனை நோக்கி நடந்தாள். அவன் அருகில் வந்து நின்றவள்,

“என்னோட வீட்டுக்கு...” மெல்ல தான் சொன்னாள்... அதைக் கேட்டதும் எங்கிருந்து தான் அவனுக்கு வேகம் வந்ததோ,

“மறுபடியும் மறுபடியும் நீ இதையே பேசாதே... நான் ஒரு தடவை சொன்னா... அதுக்கு எதிர் பேச்சு நீ பேச கூடாது” அவனின் கோபத்தில் அவள் மீண்டும் மௌனியானாள்.

‘அவர் மட்டும் அவர் தகப்பனை போன்று வளர்த்தவரிடம் ஆசிர்வாதம் வாங்கலாம். ஆனால் நான் மட்டும் என் தகப்பனை, தாயை மறந்திட்டு இவர் பின்னாடி போகணுமா? நான் என்ன ஆடா? மாடா? எனக்குன்னு உணர்வுகள் இல்லையா?’ மனதில் புலம்பியவள் வாய் திறந்து அவனிடம் ஒரு வார்த்தை சொல்லவில்லை. கண்களில் பொங்கிய கண்ணீரை துடைத்தபடி அவனைப் பின் தொடர்ந்தாள். ஆட்டை போல் மாட்டைப் போல் வாய்

பேச முடியாமல் அவன் பின்னே தான் சென்று கொண்டிருந்ததை அவள் உணரவில்லை.

அடுத்து ஒரு நொடி கூட அவன் சென்னையில் இருக்க விரும்பவில்லை. நேரே பேருந்து நிலையத்திற்கு வந்தவன் பெங்களூரு செல்லும் பேருந்தில் அவளுடன் ஏறியமர்ந்தான். பேருந்து கிளம்பும் வரை அவன் மனம் ஒரு நிலையில் இல்லை. பேருந்து கிளம்பியதும் தான் ஆசுவாசமாய்ப் பெருமூச்சு விட்டவன் அவளின் கையை நிம்மதியுடன் பற்றிக் கொண்டான். ஆனால் அவளின் நிம்மதி பறி போய்க் கொண்டிருப்பதை அவன் உணரவில்லை.

****

“என்னங்க கோவிலுக்குப் போனவளை இன்னமும் காணோம்ங்க?” சுமதியின் படபடப்பில் ராகவனுக்கு ஒண்ணுமே புரியல.

“யார் கோவிலுக்குப் போனா? யாரை காணல?” அவர் நிதானமாகக் கேட்க...

“நம்ம மயூ தான்ங்க...” மனைவியின் வார்த்தையில் அவர் அதிர்ந்து போனார்.

“அவ கோவிலுக்குப் போய் எவ்வளவு நேரமாச்சு?”

“ஒரு மணி நேரத்துக்கும் மேலாச்சு”

“இவ்வளவு நேரம் சொல்லாம என்ன பண்ணிட்டு இருந்த?” மனைவியை அவர் கடிந்தவர் உள்ளே சென்று சட்டையை அணிந்தபடி வெளியில் வந்தார்.

“மனசு சரியில்லைன்னு சொன்னாங்க... அதான் கொஞ்ச நேரம் உட்கார்ந்துட்டு வருவான்னு நினைச்சேன்”

“நல்லா நினைச்ச...” எரிச்சலுடன் அவர் சொல்லும் போதே,

“இருங்கப்பா... மயூக்கு ஃபோன் போட்டுப் பார்க்கிறேன்” என்ற மஞ்சரி... மயூரியின் அலைப்பேசிக்கு முயன்றாள்.

அதுவோ அவளின் அறையிலிருந்து ஒலித்தது. அருகிலிருக்கும் கோவில் என்பதால் அவள் அலைப்பேசியை எடுத்துக் கொண்டு போகவில்லை.

“நானே போய்ப் பார்க்கிறேன்...” என்றவர் கோவிலுக்குச் சென்றார்.

அங்குக் கோவிலிலும் அவள் இல்லை. பிரகாரம் எல்லாவற்றையும் சுற்றி பார்த்து தேடியவர் கண்ணில் அவர் மகள் மட்டும் விழவே இல்லை. வீட்டிற்கு அருகிலிருந்த கோவிலாய் இருந்தாலும் நிறையப் பேர் வந்து போவதால் தனித்து அவளைப் பற்றி விசாரிக்க முடியாமல் சோர்ந்து போனவராய் வீட்டிற்குத் திரும்பினார்.

“சுமி... அங்கேயும் அவள் இல்லை. எனக்கென்னவோ அந்தப் பையன் மேலே தான் சந்தேகமா இருக்கு? எதுக்கும் அவங்க ஆபிசில் போய் விசாரிச்சிட்டு வர்றேன்” சுமதியிடம் சொன்னவர் நேரே அவர்கள் வேலை செய்த கம்பெனிக்கு வந்தார்.

அங்கே சென்று விசாரிக்கும் போது தான் தெரிந்தது. ஆரன் தன் வேலையை ராஜினாமா பண்ணிவிட்டு, கம்பெனி அவனுக்குக் கொடுத்த குவார்ட்டசையும் காலி செய்துவிட்டுச் சென்றது. அதற்கு மேல் அவர்களுக்கும் தெரியவில்லை. ஆரன் நேரடியாக மேலிடத்தில் தொடர்பு கொள்ளக் கூடியவனாக இருந்ததால் யாருக்கும் அவனைப் பற்றிய விவரங்கள் தெரியவில்லை. சுவற்றில் அடித்த பந்தாய் அவர் திரும்பி வந்தார்.

“ஆபிசில் கேட்டும் பிரயோஜனம் இல்லை சுமி. அவன் வேலையை விட்டு போன தகவலை தவிர வேறு எதுவும் அவங்களுக்குத் தெரியல. ஆனா எனக்குத் தெரியும்... அவன் தான் என் பொண்ணைக் கடத்திட்டு போயிருப்பான். என் பொண்ணு என் பேச்சை மீறுகிறவள் இல்லை” அவர் புலம்ப...

“நாளைக்கு நிச்சயத்தை வச்சிட்டு நாம எங்கே போய்த் தேட...?” அவருக்கு மேல் புலம்பிய சுமதி, “ ஏங்க எதுக்கும்

போலீசில் கம்ப்ளைன்ட் கொடுத்து பார்க்கலாம்ங்களா?” மெதுவே சொல்ல...

“வயசு பொண்ணு விவகாரத்தைப் போலீஸ் வரைக்கும் யாராவது கொண்டு போவாங்களா? அது நமக்கே எதிரா தான் முடியும். அங்கே இவனை விடப் பொறுக்கிகள் தான் அதிகம். சமீபத்தில் பெங்களூரில் நடந்த நிகழ்ச்சியை நீ மறந்திட்டியா?” ராகவன் கோபத்துடன் சொல்லவும் தான்... சமீபத்தில் தொலைக்கட்சியில் கண்ட அந்தச் செய்தி சுமதிக்கு நியாபகம் வந்தது.

இதே போல் தான் பெண்ணைப் பெற்றவர்கள் தங்கள் பெண்ணைக் காணவில்லை என்று காவல் நிலையத்தில் புகார் அளிக்க... காவல்துறை அதிகாரி சொன்ன மாதிரி காதலுடன் ஓடி போன அந்தப் பெண்ணைக் கண்டு பிடித்துக் கொடுத்தார். அதன் பின் அவள் கருக்கலைப்பு செய்த மருத்துவமனை சான்றிதழ், காவல்நிலையத்தில் போடப்பட்ட எப்ஐஆர் காப்பி இதை வைத்து அவளை மிரட்டி உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பல தடவை அந்தப் பெண்ணை அவர் துன்புறுத்தி இருக்கிறார். ஒரு கட்டத்தில் பொறுக்க முடியாத அந்தப் பெண் மகளிர் அமைப்பிடம் சொல்லி அவனைக் கையும் களவுமாகப் பிடித்துக் காவல் துறையினரிடமே ஒப்புடைத்தாள். அதைக் கண்டதிலிருந்து சுமதிக்குமே காவல்துறை என்றால் சிறிது பயம் இருக்கத் தான் செய்தது.

“அய்யோ... வேண்டவே வேண்டாங்க” அலறியே விட்டார் சுமதி. அடுத்து என்ன செய்வது? என்று தெரியாமல் ஆளுக்கொரு மூலையில் முடங்கினர்.

****

“வெல்கம் டு பெங்களூரு...” பேருந்து நிலையத்தில் சிரித்த முகமாய் அவர்கள் இருவரையும் வரவேற்றான் வருண்.

“தோஸ்த்... கல்யாணம் எல்லாம் நல்லபடியா முடிஞ்சதா?” என்று ஆரனிடம் கேட்டவனைப் பார்த்து...

“அண்ணா... நீங்களுமா?” தனக்குத் தெரிந்த ஒருவனைக் கண்டதும் அவ்வளவு நேரம் அடக்கி வைத்திருந்த அழுகை பீறிட்டு வந்தது மயூரிக்கு. அதற்கு மேல் தாங்க இயலாதவளாய் அவனைப் பார்த்து தேம்பினாள்.

“அய்யோ அண்ணாவா?” என்று அலறினான் வருண். அவனுக்கு அவன் கவலை. “நான் உங்களுக்கு அண்ணா இல்லை அண்ணி... உங்களுக்கு...” என்று யோசித்தவன், “ஆங்... கொழுந்தன் ஓகேவா?” என்றான் அதான் முக்கியம் என்பது போல். அவன் சொன்னதைக் கூட உணர முடியாமல் அவள் அழுது கொண்டிருக்க, அதைக் கண்டு ஆரனுக்குச் சற்று எரிச்சலாக வந்தது.

“அண்ணி... நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க... தோஸ்த் உங்களை நல்லா பார்த்துக்குவாரு. நீங்க அழாதீங்க...” அவளின் அழுகையை அப்போது தான் உணர்ந்த வருண் ஆறுதல் கூறினான்.

“டேய்... போதும்டா உங்க பாசமலர். நீ நினைக்கிற மாதிரி சாவகாசமாய்க் கல்யாணம் பண்ண நேரம் இல்லாம கோவிலுக்கு வந்தவளை அப்படியே அமுக்கி அங்கேயே வைத்து திடீர் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். அவளுக்கே அது தெரியாது... அந்தப் பயத்தில் இருக்கிறவள் கிட்ட போய் நான் நல்லா பார்த்துக்குவேன்னு சொல்றியே? இப்போ நான் அவளுக்கு வில்லன்... ஹீரோ இல்லை” ஆரன் சொன்னதைக் கேட்டு வருண் ஆவென்று வாயை பிளந்தான்.

அவனும் ஆரனும் போட்ட திட்டமே வேறு. ஆரன் எப்படியாவது மயூரியிடம் பேசி அவளை வெளியில் வரவழைத்து வந்து அவளைத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைக்க வேண்டும். ஆனால் இப்படி அவளுக்கே தெரியாமல் அவன் திருமணம் செய்து கொண்டு வந்திருப்பான் என்று சத்தியமாய் வருணும் நினைக்கவில்லை.

“இப்படியே இங்கேயே எங்களை அனுப்பிவிடுவதாய் உத்தேசமா?” ஆரன் கேட்கவும் தான் வருண் தெளிந்தான்.

“வாங்க வீட்டுக்குப் போகலாம்” என்றவன் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். பெங்களூரை விட்டு சற்று தள்ளி இருந்த அந்தக் குடியிருப்பு மிக அழகாக இருந்தது. வீட்டின் கதவை திறந்த வருண் இருவரையும் உள்ளே அழைக்க... அங்கே யாருமில்லாததைக் கண்டு ஆரன் கேள்வியாய் புருவம் உயர்த்தினான்.

“அப்பா, அம்மா தங்கச்சியோட டெலிவரிக்கு லண்டன் போயிருக்காங்க... அவங்க வர இன்னும் ரெண்டு மாசம் ஆகும்” என்றவன், “தோஸ்த் நீங்களும் அண்ணியும் ரெஸ்ட் எடுங்க... நான் சாப்பிட ஏதாவது வாங்கிட்டு வந்திர்றேன்” அவன் சென்றதும் கதவை பூட்டிவிட்டு வந்த ஆரன் மயூரியின் அருகில் அமர்ந்தான்.

“பேபி... இன்னைக்குத் தான் நான் ரொம்பச் சந்தோசமாய் இருக்கேன்” என்றவன் அவள் தோளில் கை போட்டு அரவணைப்பாய் அணைக்க... அவளோ அதை உணராது,

“இப்பவாவது நான் எங்க வீட்டுக்கு ஃபோன் பேசலாமா?” பரிதாபமாய் அவனைப் பார்த்து கேட்டாள்.

“எதுக்கு...?” அவ்வளவு நேரம் அவன் முகத்தில் இருந்த இளக்கம் மறைந்து கடுமை பரவியது.

இப்படிக் கேள்வி கேட்பவனிடம் என்னவென்று அவள் சொல்வாள்? “அவங்க என்னைக் காணாம தேடுவாங்க. ரொம்பப் பயந்திருப்பாங்க” பயத்தில் மெதுவாய் அவள் கூற அவள் சொன்னதில் இருந்த நியாயம் அவனுக்குப் புரிய... பேசாமல் அலைப்பேசியை அவளிடம் கொடுத்தான்.

“என்னன்னு சொல்ல போற? இந்த வில்லன் என்னைக் கல்யாணம் பண்ணி கடத்திட்டு வந்துட்டான். என்னை வந்து காப்பாத்தி கூட்டிட்டு போங்கன்னா” ஒற்றைப் புருவத்தை உயர்த்திக் கேலியாய் அவன் கேட்க... அவனை இமைக்காமல் பார்த்தாள் அவள்.

‘நீங்க எனக்கு வில்லனா? நீங்க என்னைக்கும் என்னோட ஹீரோ தான். ஆமாம் நான் அப்படியே பச்ச புள்ள...

கையைக் காலை கட்டி என்னைக் கடத்திட்டு வந்துட்டாரு. பேசுறதை பாரு... அப்படி நான் உங்களை வில்லனா நினைச்சிருந்தா தாலி கட்டிய அடுத்த நிமிசம் கத்தி ஊரை கூட்டி உங்க கிட்ட இருந்து தப்பிச்சி போயிருப்பேனே. வாழ்க்கையை வெறுத்து சாக முடிவெடுத்தவளுக்குத் தாலி கட்டி மறுவாழ்வு கொடுத்து இருக்கீங்க. நான் மனம் விரும்பி தான் உங்க கூட வந்திருக்கேன். அதை நீங்க தான் புரிஞ்சிக்க மாட்டேங்கிறிங்க. என்ன ஒண்ணு எங்க அப்பா, அம்மா கிட்டேயும் ஆசிர்வாதம் வாங்கிட்டு வந்திருக்கலாம். அது ஒண்ணு தான் என் மனசை உறுத்துது' அவனைப் பார்த்துக் கொண்டே மனதில் நினைத்து கொண்டிருந்தவளை, சொடக்கு போட்டு அழைத்தவன்,

"என்ன பேசலாம்ன்னு ஒத்திகை பார்த்திட்டு இருக்கியா? ஸ்பீக்கரில் போட்டு பேசு" என்றவனை ஒரு பார்வை பார்த்தவள் ஒன்றும் பேசாமல் அலைப்பேசியில் தந்தையின் எண்ணை அழுத்திவிட்டு... ஸ்பீக்கர் மோடில் போட்டாள். மறுபக்கம் தந்தையின் குரலை கேட்பதற்காக உயிரை கையில் பிடித்துக் கொண்டிருந்தாள் அவள்.

"ஹலோ..." நலிந்து ஒலித்த தந்தையின் குரலில் அவள் கண்ணில் கண்ணீர் வழிந்தது.

"அப்பா..." அதற்கு மேல் பேச முடியாமல் அவளுக்கு அழுகை முட்டி கொண்டு வந்தது.

"மயூம்மா... மயூம்மா... நீ தானடா... எங்கே இருக்கம்மா?" அவர் குரல் பதட்டமாய் ஒலித்தது. அதைக் கண்டு அவள் உள்ளம் பதறியது.

"அப்பா நான் நல்லாயிருக்கேன். நீங்க என்னைப் பத்தி கவலைப்படாதீங்க" முதலில் தான் நலமாக இருப்பதை அவள் கூற... ஆரன் அவளை ஆச்சிரியமாய்ப் பார்த்தான்.

"எங்கேம்மா போன?"

"நா... நான்..." எப்படிக் கூறுவது என்று தெரியாமல் அருகில் அமர்ந்திருந்த கணவனைப் பார்க்க... அவனோ அவளை

ஆழ்ந்து பார்த்தான்.

“எனக்கும் அவருக்கும் கல்யாணம் நடந்திருச்சுப்பா” சொல்லும் போதே அவள் கண்ணில் கண்ணீர் ஆறாய் வழிந்தது. அதைக் கண்டு அவன் மனம் துணுக்குற்றது.

‘என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறது அவளுக்கு அவ்வளவு துன்பமா இருக்குதாமா?’ அவனுக்கு எரிச்சலாய் வந்தது.

“மயூ... என்னம்மா சொல்ற?” அவரின் குரல் அப்படியே உடைந்து விட்டது.

“உண்மையா தான் சொல்றேன்ப்பா” அவளுக்குமே நா தழுதழுத்தது.

“அவன் உன்னை மிரட்டி தாலி கட்டினானா மயூம்மா? அப்படி அவன் செஞ்சியிருந்தா அந்தத் தாலியை கழட்டி போட்டுட்டு இங்கே உடனே வந்துடும்மா” அவரின் பேச்சில் அதிர்ந்தவளின் கை அவளையும் அறியாமல் அவள் கழுத்தில் கிடந்த தாலியை பற்றியது.

அது வெறும் மஞ்சள் துண்டு தான்... ஆனால் அது அவள் உயிர் அல்லவா? அது அவள் கழுத்தில் இருந்து இறங்கும் அடுத்த நொடி அவள் உயிரும் அவள் உடலிலிருந்து விடை பெற்று விடுமே. அதை ஏன் அவள் தந்தை உணரவில்லை? ஆரனோ அவளின் பதிலுக்காகத் திக்திக்கென்ற மனதுடன் காத்திருந்தான்.

“இல்லைப்பா... அவர் என்னை மிரட்ட எல்லாம் இல்லை. நானே தான் விரும்பி அவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்” அவனுக்கு மனைவியாய் தந்தையிடம் கூட அவனை விட்டு கொடுக்க முடியாமல் அவள் பதில் கூறினாள்.

“பேபி...” கண்களில் காதல் வழிய ஆரன் அவளை அழைத்தான். அதுவரை அவள் மேலிருந்த கோபம் எல்லாம் போய் அவன் மனதில் அவள் மேலிருந்த காதல் பீறிட்டுக் கொண்டு வெளியில் வந்தது.

மகளின் பேச்சும், ஆரனின் அழைப்பும் ராகவனுக்குக் காதில் அமிலத்தை ஊற்றியது போலிருந்தது. வெறுப்புடன் அலைப்பேசியைப் பார்த்தவர், “அப்போ திட்டம் போட்டே தான் கோவிலுக்குப் போயிருக்க அப்படித்தானே... திட்டம் போட்டே அவன் கையால் தாலி வாங்கிக்கிட்ட... ச்சீ... நீ இப்படி ஒரு நம்பிக்கை துரோகம் பண்ணுவ நான் நினைச்சு கூடப் பார்க்கல. உன்னைப் பயந்தவன்னு பொத்தி பொத்தி நாங்க வளர்த்தோம் பாரு... அதுக்கு நீ நல்ல கைம்மாறு பண்ணிட்ட. நாளைக்கு ரிஷி கூட நிச்சயம் வச்சிட்டு இன்னைக்கு நீ இப்படிப் பண்ணியிருக்கியே. உன்னை என்ன செய்றது?” இதைக் கேட்டதும் ஆரனின் முகம் பழையபடி கோபத்தைப் பூசி கொண்டது. அவளைக் கொலை செய்துவிடும் அளவுக்கு அவனுக்கு வெறி கிளம்பியது.

“சொந்தக்காரங்க மத்தியில என்னைத் தலை குனிய வச்சிட்ட இல்ல. இனிமேல் நீ எனக்கு மகளே இல்லை. நான் செத்தா கூட என் முகத்துல முழிக்காதே” ஆத்திரத்தில் கத்தியவர் அலைப்பேசியை அணைக்க... அவரின் பேச்சு கேட்டு சுமதியும், மஞ்சரியும் மயூரியை நினைத்து ஓவென்று அழுதனர்.

தந்தையின் பேச்சில் அதுவரை மனதில் அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தை எல்லாம் மயூரி ஆரனின் மீது திருப்பினாள்.

“போதுமா? உங்களுக்கு இப்போ சந்தோசம் தானே? என்னோட பெத்தவங்க என்னை முழுசா தலை முழுகிட்டாங்க. இதைத் தானே நீங்க எதிர் பார்த்தீங்க? எல்லாத்துலேயும் அவசரம்... காதலை சொல்றதுல... கல்யாணம் பண்ணிக்கிறதுல” ஆத்திரத்தில் அவள் பேசி கொண்டே போக...

“ஏய் போதும் நிறுத்துடி...” அவளை விட ஆத்திரமாய் அவன் உறுமினான்.

“அப்போ அவசரப்படாம அந்த ரிஷி வந்து உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு போறதை பார்த்து ரசிக்கச்

சொல்றியா? என்னைக் காதலிச்சிட்டு அவனைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதம் சொன்ன உன்னை எல்லாம்...” அவள் அருகில் வந்து தன் இரு கையையும் அவள் கழுத்தருகே கொண்டு போனவன்,

“கொன்னா கூடத் தப்பில்லை” அவனின் பேச்சில் அவள் மிரண்டு போய் அவனைப் பார்த்தாள். தந்தையின் புறக்கணிப்பில் அவன் மேல் ஆத்திரம் கொண்ட அவள் மனது பழையபடி அவனிடத்தில் பயம் கொள்ள ஆரம்பித்தது.

“நான் பாட்டுக்கு நான் உண்டு என் வேலை உண்டுன்னு இருந்தேன்டி. ஏண்டி என் கண் முன்னால வந்த? வந்தவப் பேசாம இருந்துக்க வேண்டியது தானே. ஏன் என் மனதை சலனப்படுத்தின?” என்னமோ அவள் வலிய வந்து அவன் மனதை கெடுத்தது போல் அவன் பேச... அதில் அவள் மனம் காயப்பட்டுப் போனது.

“நான் உயிரோட இருக்கிற வரை நீ என் பொண்டாட்டி தான். நான் செத்ததுக்கு அப்புறம் வேணும்ன்னா நான் கட்டிய தாலியை கழட்டி தூக்கி எறிஞ்சிட்டு அந்த ரிஷியை கல்யாணம் பண்ணிக்கோ. செத்ததுக்கு அப்புறம் இந்தக் கண்றாவி எல்லாம் என் கண்ணுக்குத் தெரியாது பாரு” மிதமிஞ்சிய வெறுப்பில் அவன் பேச...

அவனில்லாத ஒரு வாழ்க்கையை அவளால் நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை. அதுவும் அவன் போன பின் அவளுக்கும் தான் வாழ்வு ஏது? அதைக் கூட உணராமல் அவன் பேசியது அவளுக்கு வலித்தது.

“ஆரு...” வேகமாய் அவனின் வாயை பொத்தியது அவளது கரம். வெகுநாட்களுக்குப் பின் அவள் அழைத்த ‘ஆரு’ என்றழைப்பில் அவன் கோபம் குறைந்து அவளுக்காய் உருகி போனான். அவளின் கரத்தின் மேல் மென்மையாய் முத்தமிட்டவன்,

“உன் ஆரு தான் பேபி...” என்று சொல்லியவன் அவளைக் காற்று கூட இடையில் புகாதபடி இறுக அணைத்துக்

கொண்டான். கோபத்துக்குக் காரணமானவளிடமே அந்தக் கோபத்திற்கான ஆறுதலை தேடி அவள் கழுத்தில் ஆழமாய் முகம் புதைத்துக் கொண்டான் அவன். தந்தையின் பேச்சிலும், அவனின் பேச்சிலும் புண்பட்டிருந்த அவளோ அவனின் அணைப்பில் ஆறுதல் தேட எண்ணி அவனுக்குள்ளேயே புதைந்துவிடுவது போல் அவன் கைகளுக்குள் ஒடுங்கி போனாள்.

“சில நேரம் மாயம் செய்தாய்
சில நேரம் காயம் செய்தாய்
மடி மீது தூங்க வைத்தாய்
மறுநாளில் ஏங்க வைத்தாய்
வெயிலா... மழையா? வலியா... சுகமா? எது நீ?”

“பேபி... பேபி... இத்தனை நாளா இந்த ‘ஆரு’ங்கிற அழைப்பு எங்கே போயிருந்தது பேபி?” தன்னவளிடம் கேட்டுக் கொண்டே அவளுள் மேலும் மேலும் புதைந்த ஆரனுக்கு அதுவரை மனதில் கொதித்துக் கொண்டிருந்த கோபம் எல்லாம் பொங்கிய பாலில் நீர் தெளித்துப் போல் அப்படியே அடங்கிப் போனது. இப்போது அவனின் கோபம் மறைந்து அவனின் மனக்காயத்திற்கான மருந்தை அவளிடம் தேடியது.

அவளின் அருகாமை அவனுக்கு எந்த மாதிரியான நிம்மதியை தருகிறது என்பதை அவனால் வார்த்தைகளில் வடிக்க முடியவில்லை. அந்தளவுக்கு அவளின் அணைப்பு அவனுக்கு எல்லையில்லா அமைதியை தந்தது. மனைவியான காதலியிடம் அவன் தாய்மையை உணர்ந்தான். அவனது அனைத்து உறவுகளின் மொத்த உருவாய் அவள் இருந்ததை அவன் அந்தக் கணம் உணர்ந்தான். அந்த நொடி அவன் மனதில் இவ்வளவு நாள் அழுத்தி கொண்டிருந்த, ‘நான் ஒரு அநாதை... எனக்கென்று யாருமில்லை’ என்ற பாரமான உணர்வு கலைந்த மேகம் போல் விலகி ஓடியதை கண்டு மகிழ்ந்து போனான்.

மயூரியோ அவள் மனதை காயப்படுத்திய அவனிடமே அந்தக் காயத்திற்கான மருந்தை தேடி அவனுள் அமிழ்ந்து போனாள். ‘ஏன் ஆரு... அப்படிப் பேசினீங்க? அதுவும் உங்களை விட்டுட்டு நான் அந்த ரிஷியை கல்யாணம் பண்ணிக்குவேன்னு நீங்க எப்படி நினைக்கலாம்? உங்களை மறக்க முடியாம அவனைக் கல்யாணம் பண்ணிக்க இயலாம தான் நான் தற்கொலை பண்ணலாம்ங்கிற முடிவுக்கே போனேன். அப்படிப்பட்ட என்னைப் பார்த்து இப்படிக் கேட்டுட்டீங்களே? நீங்க இல்லைன்னா நான் மட்டும் சந்தோசமா உயிர் வாழ்வேன்னு நினைக்கிறீங்களா? அடுத்த நொடி நானும் என் உயிரை மாய்த்து கொள்வேன்னு உங்களுக்கு ஏன் புரியல?’ எமதர்மனிடம் இருந்து தன் கணவன் உயிரை

காப்பாற்றிய அந்தச் சாவித்திரியை போல... என்னவோ அடுத்த நிமிடமே அவன் தன்னுயிரை மாய்த்துக் கொள்வது போல் அவனின் சட்டையைப் பிடித்து இழுத்து அவனைத் தன்னுடன் இறுக்கி கொண்டாள்.

இருவரும் வெவ்வேறு உணர்வுகளின் தாக்கத்தில் மூழ்கி இருக்கும் போது பூஜை வேளை கரடியாக அழைப்புமணி ஒலித்தது. அதில் இருவருமே தத்தம் நினைவுகளின் தாக்கத்திலிருந்து மீண்டனர். அவளுக்கோ அவனின் முகம் காண வெட்கமாய் இருந்தது. அவளின் செயலை அவன் என்ன மாதிரி எடுத்து கொள்வானோ? என்று நாணியவள் அவன் முகம் பாராது இருக்க எண்ணி மீண்டும் அவனின் நெஞ்சிலே தன் முகத்தைப் புதைத்து கொண்டாள்.

அவனோ அவளை விடுவிக்க மனம் இல்லாதவனாய் விடுவித்தவன், அவளின் உச்சந்தலையில் அழுத்தமாய்த் தன் இதழ்களைப் பதித்து, “தேங்க்ஸ் பேபி” என்று நிமிர்ந்தவன் கண்ணில்... உணர்ச்சியில் உடல் நடுங்க, உதடு துடிக்க இருந்தவள் தென்பட... தன் பின்னந்தலையில் தானே தட்டி கொண்டவன்,

“தேங்க்ஸ் இப்படிச் சொல்ல கூடாது இல்லையா பேபி?” அவள் முகம் நிமிர்த்திச் சொன்னவனைக் கண்டு புரியாமல் அவள் விழிக்க... அவள் முகம் நோக்கி குனிந்தவன் மென்மையாய் அவள் இதழில் தன் இதழை பதித்தான். அவனுக்குமே பெண்ணின் அருகாமை புதிது. அந்த விசுவாமித்திரரை விட மேலாய் வாழ்க்கையைத் தவம் போல் வாழ்ந்தவன் அவன். அப்படிப்பட்ட அவன் முதன் முதலாய் அவளிடம் தடுமாறி நின்றான்.

கணவனின் முதல் இதழொற்றல் அவளை எங்கோ ஒரு புது உலகத்துக்கு அழைத்துச் சென்றது. அதில் அவள் மூழ்கி திளைக்கும் முன்னே அவன் அவளை விடுவித்தான். அவளோ உணர்வின் தாக்கத்தில் இன்னமும் கண் மூடி இருக்க அவளைக் கண்டு தனக்குள் சிரித்துக் கொண்டவன்,

“வருணா தான் இருக்கும். கதவை திறந்துட்டு வர்றேன்...” அவளின் கன்னத்தைத் தட்டி சொல்ல... அதில் விழிப்புற்றவள் அவனின் சிரிப்பை ஆச்சிரியமாய்ப் பார்த்தாள். கொஞ்ச நேரம் முன்பு சூறாவளி காற்றாய் அவளைச் சுழற்றி அடித்தவன்... இப்போது தென்றலாய் மாறி அவள் மனதை வருடி சென்றதை கண்டு அவளுக்கு அதிசயமாய் இருந்தது.

“என்ன தோஸ்த்... கதவை திறக்க இவ்வளவு நேரமா?” ஆரன் கதவை திறந்ததும் அலுத்தபடி உள்ளே நுழைந்த வருண் அப்போது தான் ஆரனின் முகத்தைப் பார்த்தான். அவனின் முகத்திலிருந்த சிவப்பும், சிரிப்பும் என்ன நடந்திற்கும் என்பதை வருணுக்குச் சொல்லாமல் சொல்லியது. உள்ளத்து மகிழ்ச்சியில் சற்று வயது குறைந்தார் போல் காணப்பட்ட ஆரனை பார்த்து வாஞ்சையுடன் புன்னகைத்தவன்,

“என்ன தோஸ்த் நல்ல நேரத்தில் கரடி மாதிரி வந்திட்டேனோ?”

“அதான் வந்திட்டியே? அப்புறம் என்ன? உள்ளே வாடா?” அவனின் தோளில் விளையாட்டாய் தட்டியவன் வருணை அழைத்துச் சென்றான்.

“தோஸ்த் அண்ணியையும் கூட்டிட்டு வாங்க... சாப்பிடலாம்” என்றவன் நேரே சமையலறைக்குச் செல்ல... ஆரன் மயூரியிடம் வந்தான்.

“வா சாப்பிடலாம்...” அவனின் பேச்சிற்கு மறுபேச்சுப் பேசாமல் அவள் எழ... அவளின் கையைப் பிடித்துக் கொண்டு உணவு மேஜைக்கு வந்தான்.

“அண்ணி... உட்காருங்க...” என்றபடி வருண் தட்டை எடுத்து வைக்க...

“நீங்க உட்காருங்க அ...” என்றவள் நிறுத்தி, “வருண்... நான் எடுத்து வைக்கிறேன்” என்று முடித்தாள்.

“ஹப்பாடி ஒரு நிமிசம் பயந்தே போயிட்டேன்” அவள் அண்ணா என்று சொல்லிவிடுவாளோ என்று பயந்தவனாய் வருண் பெருமூச்சு விட்டான்.

அவள் மேலே ஒன்றும் பேசாமல் பரிமாற... ஆரனும் வருணும் அமைதியாய் உண்டனர். ஆரனின் தட்டில் உணவு பதார்த்தங்கள் குறைவதை கண்டு பார்த்து பார்த்து அவள் பரிமாற அன்னையைப் போல் அன்னமிட்ட அவளின் செய்கையில் அவன் கண்கள் கலங்கியது. சட்டென்று யாருக்கும் தெரியாமல் அதை மறைத்துக் கொண்டான்.

“பேபி... நீயும் சாப்பிடு” என்றவன் அவளுக்கு உணவு எடுத்து வைத்துவிட்டே எழுந்தான்.

“வருண்...” ஆரன் அழைக்க... வருண் அவனை நோக்கி வந்தான். இருவரும் சேர்ந்து முன்பக்கம் செல்ல அவள் அவர்கள் போவதை பார்த்துக் கொண்டே உணவை உட்கொண்டாள்.

“வருண் எல்லா ஏற்பாடும் செஞ்சிட்டியா? ஏதும் பிரச்சினை இல்லையே?”

“இல்லை தோஸ்த்... எல்லாம் பக்கா...” கட்டை விரல் உயர்த்திச் சொன்னவன், “அங்கே இருக்கிற என் மாமா கிட்ட எல்லாம் சொல்லிட்டேன்... அவர் பார்த்துக்குவார் தோஸ்த். டோன்ட் வொர்ரி”

“நான் தனியான்னா கவலைப்பட மாட்டேன். கூட மயூவையும் கூட்டிட்டு போறதால தான் யோசிக்கிறேன்” கவலையுடன் கூறியவன், “எல்லாம் சரியாகும்ன்னு நம்பிக்கை இருக்கு” என்று பெருமூச்சை விட்டான்.

“எதைப் பத்தியும் யோசிக்காதிங்க தோஸ்த். போய்க் கொஞ்சம் நேரம் ரெஸ்ட் எடுங்க... நைட் ட்ரைன்ல கிளம்பணும்” என்றவன், “அந்த ரைட் சைட்ல இருக்கிற ரூமை யூஸ் பண்ணிக்கோங்க தோஸ்த்”

“அதுக்கு முன்னாடி மயூவுக்குச் சில திங்க்ஸ் வாங்கணும்... ஈவினிங் ஷாப்பிங் போலாமா?”

“ஓகே தோஸ்த்...” வருண் சொல்ல... ஆரன் உள்ளே வந்தான். அங்கே வரவேற்பறையில் தனந்தனியாய் அமர்ந்திருந்த மயூரியை கண்டதும் அவனுக்குள் இரக்கம் சுரந்தது.

“வா...” அவன் அவளை அழைக்க...

“எங்கே...?” என்று தெரியாமல் அவள் முழித்தாள்.

“என்னுடன் குடும்பம் நடத்த...” கண்ணைச் சிமிட்டி அவன் சொல்ல... அதைக் கேட்டு அவளது தேகத்தில் நடுக்கம் ஏற்பட்டது.

“குடும்பம் நடத்த யாராவது இப்படி நடுங்குவாங்களா? நான் கூப்பிட்டவுடன் அத்தான்னு நீ ஓடி வர வேணாமா பேபி? இந்தக் காலத்து பொண்ணு மாதிரியே நீ இல்லை. வேஸ்டுடி நீ” என்றவனை நிமிர்ந்து பார்த்தவள் ஒன்றும் பேசவில்லை. அவனின் பேச்சில் அவளின் கண்கள் லேசாகக் கலங்கி விட்டது.

அதைக் கண்ட அவன் அவளை அழைத்துக் கொண்டு அறைக்குச் சென்றான். உள்ளே நுழைந்தவன் கதவை தாளிட்டுவிட்டு அவளைத் திரும்பி பார்த்தான். அவளோ அங்கிருந்த ஜன்னல் வழியே வெளியில் பார்த்து கொண்டிருந்தாள். அவள் அருகே வந்து பின்னாலிருந்து அணைத்தவன்,

“வேஸ்ட்ன்னாலும் என்னோட பெஸ்ட் நீ தான் பேபி” அவள் காதுக்கருகில் குனிந்து சொல்ல... அவனின் வார்த்தையில் அத்தனை நேரம் வாடியிருந்த அவள் மனம் மலர்ந்தது. அவள் கண்களை மலர்த்தி அவனைப் பார்க்க, “சத்தியமா பேபி...” அவன் தலையில் கை வைத்து சொன்னவனைக் கண்டு அவள் உள்ளம் நெகிழ்ந்து போனது.

“பேபி... இங்கே வந்து உட்காரு...” என்று அவளைக் கட்டிலில் அமர்த்தியவன், “ரொம்ப நாளைக்கு அப்புறம் நான் இன்னைக்குத் தான் நல்லா சாப்பிட்டேன் பேபி... எனக்குத் தாயாய் இருந்து நீ பார்த்து பார்த்து பரிமாறியது எனக்கு

எவ்வளவு சந்தோசமா இருந்தது தெரியுமா? கடைசி வரைக்கும் அம்மாவா இருந்து என்னைக் கவனிப்பியா? என்னை விட்டுட்டு போயிட மாட்டியே” பரிதவிப்புடன் கேட்டவன் அவள் மடியில் படுத்து இடையோடு அவளை அணைத்துக் கொண்டான்.

அவளுக்குமே அவனின் நிலை அறிந்து பாவமாக இருந்தது. அவளின் கைகள் அவனின் தலையை ஆறுதலாய் தடவி கொடுத்தது. திடீரென்று அவனின் முதுகு குலுங்கியதில் இருந்து அவன் அழுகிறான் என்பதைப் புரிந்து கொண்டவளுக்கு அவனை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று தெரியவில்லை.

“ஆரு... ப்ளீஸ்...” அவளுக்குமே அழுகை வரும் போலிருந்தது. அவளின் குரலிலிருந்த கலக்கத்தை உணர்ந்தவனாய், “ஒண்ணுமில்லை பேபி... ஏதோ பழைய நினைவுகள். நான் அழல...” என்றவன் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு அவளைப் பார்த்து, “பேபி உன் மடியில் நான் படுத்து தூங்கவா?” அவளின் சம்மதம் வேண்டி அவன் கேட்க... யாருமற்ற சிறுவனாய் அவன் இருந்த தோற்றம் அவள் மனதை பிழிய...

“ம்...” என்று தலையசைத்து அவனை மடியில் படுக்க வைத்தவள் அவனின் மன துயரை துடைக்க எண்ணி மெல்லிய குரலில் தாலாட்டு பாடலானாள்.

“ஆராரோ ஆரிராரோ அம்புலிக்கு நேர் இவரோ..
தாயான தாய் இவரோ தங்க ரதத் தேர் இவரோ ..
மூச்சுப்பட்டா நோகுமுன்னு மூச்சடக்கி முத்தமிட்டேன்
நிழலுபட்டா நோகுமுன்னு நிலவடங்க முத்தமிட்டேன்
தூங்காமணி விளக்கே தூங்காம தூங்கு கண்ணா..
ஆச அகல் விளக்கே அசையாமல் தூங்கு கண்ணா..
ஆராரோ ஆரிரரோ.. ஆரிரோ ஆரிரரோ..
ஆராரோ ஆரிரரோ.. ஆரிரோ ஆரிரரோ..

சாலை வழியுறங்க
சமுத்திரத்தில் மீனுறங்க
நாடெல்லாம் தூங்க

நடுக்கழனி நெல் தூங்க
பாலில் பழந்தூங்க
பாதி நிலா தான்தூங்க
உன்னுறக்கம் நீ கொள்ள
உத்தமியா(ள்) தாலாட்ட
பொற்கொடியா(ள்)தாலாட்ட
என்னவனே நித்திரை செய்
நான் உன்னைத் தாலாட்ட
மகராசா நித்திரை செய்!
கண்ணா என் கண்ணாளனே
கற்பகமே நித்திரை செய்
நித்திரையும் போவாயாம்
தாயான தாரம் என் மடியிலே!”

அவளின் குரலிலிருந்த இனிமையில் அவனையும் அறியாமல் அவன் உறங்கி போனான். அவள் வெகு நேரம் அவன் தலையைக் கோதி கொண்டு அப்படியே அமர்ந்திருந்தாள்.

****

மாலையில் கடைவீதிக்குச் சென்ற போது அவ்வளவு நாள் அவர்கள் இருவரிடையே இருந்த மன கசப்பு போய் ஒரு இணக்க நிலை ஏற்பட்டிருந்தது. இனி ஆரன் மட்டும் தான் வாழ்க்கை என ஒருவழியாய் தன் மனதை அவள் திடப்படுத்திக் கொண்டாள்.

“பேபி இந்த ட்ரெஸ் மட்டும் போதுமா? இன்னமும் கொஞ்சம் வாங்கிக்கோ” அவள் எடுத்து வைத்திருந்த உடைகளைப் பார்த்துவிட்டு உதட்டை பிதுக்கியவாறு கூறியவனைக் கண்டு சிரித்தவள்,

“எனக்குப் போதும்... உங்களுக்கு...? நீங்களும் உடுத்திய உடையோடு தானே வந்திருக்கீங்க” அவள் அவன் மேல் கொண்ட அக்கறை அவனுக்குத் தேனாய்த் தித்தித்தது.

“உன் அக்கறைக்குத் தேங்க்ஸ் பேபி...” என்றவன் திடீரென்று நியாபகம் வந்தவனாய், “தேங்க்ஸ் இப்படிச்

சொல்ல கூடாது இல்லையா? வீட்டிற்கு வா... நான் தேங்க்ஸ் சொல்றேன்" அவன் நன்றி சொல்லும் விதத்தை நினைத்து பார்த்தவளுக்குக் கன்னம் சிவந்தது. அவன் கண் பார்க்க முடியாமல் கண்களை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

"என்னோட திங்க்ஸ் எல்லாம் வருண் எடுத்துட்டு வந்திட்டான். எனக்கு ஒண்ணும் தேவையில்லை. உனக்கு வேண்டியதை நீ வாங்கு"

"இல்லை போதும்..." அவனின் கையிருப்பு பற்றிய கவலையில் அவசரமாய் மறுத்தவள் அத்துடன் முடித்துக் கொண்டு அனைத்தையும் பில் போட அனுப்பினாள். வருண் அவர்களைத் தொந்திரவு செய்யாமல் வெளியில் நின்று கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

அடுத்து அவர்கள் நேரே சென்ற இடம் நகைக்கடை. அவள் புரியாமல் அவனைப் பார்க்க... "உன் அப்பா போட்டிருந்த நகைகளை வருணிடம் கொடுத்து அனுப்பிவிடு. நான் வாங்கிக் கொடுக்கும் நகைகளை நீ போட்டால் போதும்" முகம் இறுக அவன் கூற... அவள் ஒன்றும் பேசாமல் நகைகளைப் பார்வையிட்டாள்.

"என்ன பிடிச்சியிருக்கோ அதை எடு?" அவன் சொல்ல...

"நீங்களே செலெக்ட் பண்ணுங்களேன்" முதன் முதலாய் அவன் வாங்கிக் கொடுக்கும் நகை அவனின் விருப்பமாய் இருக்க வேண்டும் என்று அவள் பிரியப்பட்டாள். மெல்லியதாய் கழுத்து சங்கிலி, வளையல், தோடு என்று அழகாக அவன் தேர்வு செய்ததை மனதுக்குள் மெச்சி கொண்டவள்... அங்கேயே தன் தந்தை போட்டிருந்த நகைகளைக் கழட்டிவிட்டு அவன் வாங்கித் தந்ததை அவன் கண் முன்னேயே அணிந்து காண்பிக்க... அதில் அவன் முகம் புன்னகையில் மலர்ந்தது.

"சூப்பரா இருக்கு" ஆள் காட்டி விரலையும், கட்டை விரலையும் சேர்த்து வைத்து சொன்னவனைக் கண்டு அவளுக்கும் சிரிப்பு வந்தது.

“போலாமா?” என்று கேட்டவளை, “கொஞ்சம் இரு பேபி” என்றவன் கடை சிப்பந்தியிடம் தமிழ்நாட்டு மக்கள் அணிவிக்கும் தாலியை காண்பிக்கச் சொன்னான்.

“அவசரத்தில் மஞ்சளை தாலியாய் காட்ட வேண்டியதாய் போச்சு... அதான் இப்போ மாத்திறலாம்ன்னு” அவனுக்குமே தான் செய்தது தவறு என்று புரிந்ததோ என்னமோ அவனின் குரலில் ஜீவனில்லை. அதை உணர்ந்தவளாய் அவள் அவன் கை மேல் தன் கை வைத்து ஆறுதல் படுத்தினாள்.

அதற்குள் வித விதமான தாலிகள் அவர்கள் முன் பரப்பப்பட்டது. எதை எடுப்பது என்று தெரியாமல் இருவருமே குழம்பி போயினர்.

“உங்க குல வழக்கபடி எந்தத் தாலி கட்டுவீங்க?” கடைசிப்பந்தி கேட்க இருவருமே ஒன்றும் தெரியாமல் முழித்தனர்.

“ஆரு... உங்க குல வழக்கபடி உங்க குடும்பத்துல என்ன தாலி போடுவாங்க?” அவள் அவனிடம் கேட்க...

“எனக்குத் தெரியலையே” அவன் புருவம் சுருக்கி யோசிக்க...

“உங்க அம்மா போட்டிருப்பாங்க தானே ஆரு... கொஞ்சம் யோசிச்சு பாருங்க” சொல்லியபடி அங்கிருந்த தாலியை அவள் பார்வையிட்டாள். அவனிடமிருந்து எந்தவொரு பதிலும் வராததால் அவனைத் திரும்பி பார்த்தவள் திகைத்து போனாள். அங்கே கண்கள் தீக்கங்கு போல் ஜொலிக்க ரூத்திரமூர்த்தியாய் அவன் அமர்ந்திருந்த விதம் அவளைக் கிலி கொள்ளச் செய்தது.

ஒரு ஆண் கேலியாய் சிரித்தபடி ஒரு பெண்ணின் கழுத்திலிருந்த தாலியை அறுத்துக் குப்பை தொட்டியில் போட்டு விட்டு... தன் கையால் வேறொரு தாலியை அந்தப் பெண்ணின் கழுத்தில் கட்டிய காட்சி அவன் மனக்கண்ணில் மங்கலாய்த் தெரிந்தது. என்றுமில்லாத

வண்ணமாக அவளின் வார்த்தையில் அவன் மறக்க நினைத்த அவனின் பழைய நினைவுகள் நீர் குமிழ் போல் மேலெழும்ப ஆரம்பித்தது.

“நான் ஆபிசுக்கு போயிட்டு வர்றேன்... ஏதாவது வேணும்ன்னா பக்கத்துக்குப் போர்ஷன்ல தான் வருணின் மாமா இருக்காங்க. அங்க ஹெல்ப் கேட்டுக்கோ” என்ற ஆரன் மயூரி பதில் சொல்வதற்குள் வெளியில் சென்று விட்டான்.

அவனின் செயலில் கொஞ்ச நேரம் அப்படியே நின்றிருந்தவள் பின் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு வாயிற் கதவை சாத்தி தாள் போட்டுவிட்டு வந்தாள். ஒரு மணி நேரத்திற்கு முன்பு தான் அவர்கள் கொல்கத்தாவிற்கு வந்து சேர்ந்திருந்தனர். வந்ததும் வருணின் மாமா வீட்டில் காலை உணவு முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் அவன் குளித்து முடித்து உடனே அலுவலகத்திற்குச் சென்றுவிட்டான். அவர்கள் வாழ போகும் அந்த வீட்டை கூட அவன் சுற்றி காண்பிக்கவில்லை. அவள் வந்ததிலிருந்து அமர்ந்திருந்த சோபாவில் அப்படியே அமர்ந்திருக்க... அவன் பாட்டுக்கு கிளம்பி போய்விட்டான்.

‘இவரை எந்தவிதத்தில் சேர்ப்பது?’ மனதுக்குள் குழம்பியவள் மெதுவே அந்த வீட்டை சுற்றி பார்த்தாள்.

ஒற்றைப் படுக்கையறை கொண்ட அந்த அடுக்குமாடி குடியிருப்பு வீடு கச்சிதமாக அழகாக இருந்தது. சின்ன ஹால், அதையொட்டி படுக்கையறை, ஹாலிலிருந்து சமையலறைக்கு ஒரு வழி சென்றது. மற்றொரு வழி பால்கனிக்குச் சென்றது. பால்கனி வழியே கீழே எட்டி பார்த்தாள்... நெருக்கமான கொல்கத்தா வீதிகளைத் தொலைக்காட்சியில் தான் பார்த்திருக்கிறாள். இன்று தான் அதை நேரில் பார்க்கிறாள். அவர்களின் உடை, மொழி, கலாச்சாரம் எல்லாமே அவளுக்குப் புதியதாய் இருந்தது. கொஞ்ச நேரம் நின்று ரசித்துப் பார்த்தவள்... மீண்டும் உள்ளே வந்தவள் நேரே சென்ற இடம் சமையலறை.

சமையலுக்குத் தேவையான சாமான்கள் அங்கே இருந்தன. குளிர்சாதன பெட்டியில் தேவையான காய்கள் வாங்கி

வைக்கப்பட்டு இருந்தது. அந்த வீடு புஃல்லி பர்னிஷ்டு வீடு என்பார்களே அந்த வகையைச் சார்ந்தது. அதனால் எல்லாமே அங்கே இருந்தது. சமையலறை ஒட்டிய சிறிய அலமாரியை பூஜையறையாக மாற்றி இருந்தார்கள். எல்லாவற்றையும் பார்த்தவளுக்கு மனதில் திருப்தி எழ... குளிக்கச் சென்றாள். குளித்து முடித்துப் பூஜையறையில் விளக்கேற்றி வைத்து கும்பிட்டவளுக்கு அடுத்து என்ன செய்வது? என்று தெரியவில்லை.

அங்கே இருந்த சோபாவில் அமர்ந்தவளுக்கு ஆரனின் நினைவுகள் தான் அதிகமாக இருந்தது. அவனின் ஒவ்வொரு நடவடிக்கையும் அவளுக்குப் புரியாத புதிராக இருந்தது. அவனைப் பற்றிய குழப்பத்தில் அவளுக்குப் பெற்றோர், தங்கை நியாபகம் கூடப் பின்னுக்குத் தள்ளப்பட்டது.

அன்று நகை கடையில் கோபமாய் இருந்தவனைக் கண்டு அவளுக்குப் பயம் தான் பிடித்துக் கொண்டது. எவ்வளவு இனிமையாகத் தொடங்கிய மாலை பொழுது இப்படியாகி விட்டதே என்று மனதுக்குள் நொந்து போனாள். அவன் என்ன சொல்ல போகிறானோ? என்று அவனின் வாயையே பார்த்திருந்தாள் அவள்.

“என் அம்மாவை பத்தி பேச்சு எதுக்கு? உன் அம்மா போடுவது போல் வாங்கு... இல்லை உனக்குப் பிடிச்சதாய் எதையாவது வாங்கு” என்று எரிச்சலுடன் மொழிந்தவன் அங்கிருந்து நகர்ந்துவிட்டான்.

அவனின் படபடப் பேச்சில் அவள் வெலவெலத்து போனவளாய் அவசரமாய் ஒன்றை தேர்வை செய்துவிட்டு வெளியில் வந்துவிட்டாள். அப்போது இறுகிய அவனின் முகம் அதன் பின் தெளியவே இல்லை. அவளிடமும் முகம் கொடுத்து அவன் பேசவில்லை. எந்நேரம் ஏதோ சிந்தனையிலேயே அவன் இருந்தான். அவனின் சிரிப்பிற்காக, பேபி என்றழைப்பிற்காக அவன் முகம் பார்த்து அவள் ஏங்கி நிற்க... அவனோ அவளையே உணராது இருந்தான்.

ரயிலில் வரும் போதும் இயந்திரத்தனமாய் அவளின் தேவைகளைக் கவனித்தானே தவிர அதில் எள்ளளவும் அன்பில்லை. இதோ இப்போதும் வந்தவுடன் அவளைத் தனியே விட்டுவிட்டு போய்விட்டான். இனி வாழ்க்கை எப்படிப் போகப் போகிறதோ? என்று அவளுக்கு அச்சமாக இருந்தது. அந்த அச்சத்தின் விளைவில் அவள் மனம் பெற்றோரின் அன்பிற்காக ஏங்கியது.

‘அப்பா... இவருடன் நான் எப்படி வாழ போகிறேனோ என்று எனக்குப் பயமாயிருக்கு...? அவரை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. சில நேரம் குளிர் நிலவாய் குளிர்விக்கிறவர்... பல நேரம் அந்தச் சூரியனை போல் நெருப்பாய் சுட்டெரிக்கிறார். என்ன செய்றதுன்னு எனக்குத் தெரியல?’ அவளையும் அறியாமல் அவள் கண்ணில் கண்ணீர் வழிந்தது.

அந்நேரம் அழைப்பு மணி அடிக்கக் கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்தவள் கதவை திறந்தாள். அங்கே வருணின் அத்தை மைதிலி நின்றிருந்தாள்.

“வாங்கம்மா...”

“தூங்கிட்டு இருந்தியா மயூரி? நான் டிஸ்டர்ப் பண்ணிட்டேன்னா?” அவளிடம் கேட்டுக் கொண்டே உள்ளே வந்தவர் கண்ணில் அவளின் அழுத விழிகள் பட்டது.

“அழுதியா மயூரி? அம்மா, அப்பா நியாபகம் வந்துடுச்சா?” வாஞ்சையுடன் அவர் கேட்க...

“ம்...” என்று அவள் தலையசைத்தாள்.

“பெண்ணா பிறந்தாலே இப்படித் தான். கல்யாணம்ங்கிற பேருல எல்லாத்தையும் விட்டுட்டு இவங்க பின்னாடி வந்திறணும். ஆனா இந்த ஆம்பிளைங்க இருக்காங்க பாரு... எல்லா விசயத்திலேயும் யோகக்காரங்க தான். அவங்களுக்கு மட்டும் எதுவும் மாறுவது இல்லை. தனியா இருக்கோம்ன்னு நீ ஏன் கவலைப்படுற? உனக்கு அம்மாவா நான் இருக்கேன். நீ எதுக்கும் கவலைப்படாதே? என்ன

புரிஞ்சதா?” அவரின் பேச்சு அவள் மனதுக்குச் சற்றுத் தேம்பாயிருந்தது. சரியென்பது போல் தலையாட்டியவள் சிரித்தாள்.

“இப்போ தான் நீ சமத்து பொண்ணு...” என்றவர் தான் கொண்டு வந்திருந்த பாத்திரங்களை உணவு மேஜையில் வைத்தார்.

“உனக்கும்... தம்பிக்கும் சேர்த்து தான் சாப்பாடு இருக்கு. ரெண்டு மூணு நாளைக்கு நீ சமைக்க வேணாம். நீ நல்லா ரெஸ்ட் எடு”

“அய்யோ அதெல்லாம் வேணாங்க... அதான் சமையலுக்குத் தேவையான எல்லாச் சாமானும் இருக்கே. நைட்டுக்கு நான் பார்த்துக்கிறேன்” அவள் மறுக்க...

“என்னை உன் அம்மா மாதிரி நினைச்சுக்கோ... எதுக்கு இவ்வளவு தயக்கம்?” என்றவர், “ம்... எனக்குப் புரியுது... உன் கையால உன் ஆத்துக்காரருக்கு சமைச்சு போடணும்ன்னு பிரியப்படுற... ஓகே ஓகே... நீயே செஞ்சுக்கோ... ஆனா நான் வந்து உனக்கு ஹெல்ப் பண்ணியே தீருவேன். ஈவினிங் வர்றேன் மயூரி” என்றவர் தன் வீட்டிற்குச் செல்ல... கதவை மூடி கொண்டு வந்தவளுக்கு மீண்டும் தனிமை துயர் வந்துவிட்டது.

சோபாவில் அமர்ந்தவள் பிரயாண களைப்பில் தூக்கம் கண்களைச் சுழட்ட அங்கேயே உறங்கிவிட்டாள். ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவளுக்கு எங்கேயோ தொலைப்பேசி ஒலிக்கும் ஒலி கேட்டது. மிகுந்த சிரமப்பட்டுக் கண்களைத் திறந்தவளுக்கு அவள் முன்னிருந்த டீப்பாயின் மேலிருந்த தொலைப்பேசி அலறிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவசரமாய் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தவள் அதை எடுத்துக் காதில் வைத்தாள். மறுமுனையில் அவளின் கணவன் தான் காத்திருந்தான்.

“எனக்கு எதுவும் செய்ய வேணாம். நான் சாப்பிட வர மாட்டேன்”

“நீங்க...” ‘சாப்பிட்டீங்களா?’ அவள் முடிக்கும் முன் அவன் அந்தப் பக்கம் வைத்திருந்தான். அவள் உண்டாளா? என்று கேட்பதற்குக் கூட அவனுக்கு நேரமில்லை.

அதை நினைத்து அவளுக்கு மனம் கசந்தது. ஏன் இப்படி இருக்கிறான்? என்ற கேள்வியும் அவள் மனதில் எழுந்தது. முகத்தைக் கழுவி கொண்டு உணவு உண்பதற்காக அமர்ந்தவளுக்கு அவன் உண்டானா இல்லையா? என்ற கவலையில் உணவு உட்கொள்ள முடியவில்லை. அப்படியே எல்லாவற்றையும் மூடி வைத்தவள் வெறும் தண்ணீரை மட்டும் குடித்தாள்.

மீண்டும் அவள் மனம் அவனிடத்திலேயே வந்து நின்றது. ‘அவர் வாழ்க்கையில் அப்படி என்ன நடந்திருக்கும்? இந்தளவுக்குக் கோபம் வருமளவுக்கு? இந்தக் கோபம் தான் அன்று இரண்டு கொலைகள் செய்யக் கூடிய அளவுக்கு அவரைக் கொண்டு சென்றிருக்குமோ? கொலைகள் செய்யக் கூடியளவுக்கு என்றால்... அந்தச் சம்பவம் அவர் மனதில் என்ன மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்க வேணும்’ அவள் மனம் அவனுக்குச் சார்பாய் தான் யோசித்தது.

அவன் தவறு செய்திருக்க மாட்டான் என்று அவள் காதல் நெஞ்சம் இப்போது நம்பியது. அவன் அப்படிச் செய்ததற்குச் சரியான காரணம் இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவள் மனதில் வலுத்தது. அப்படியே அவன் சிறை சென்றிருந்தாலும் அவன் விடுதலையான பின் அவனை இன்னமும் குற்றவாளியாய்ப் பார்ப்பது தவறு என்று அவளுக்குத் தோன்றியது. ஏதேதோ எண்ணங்களில் மூழ்கி இருந்தவளை மீண்டும் வீட்டின் அழைப்பு மணி மீட்டெடுத்தது.

“மயூரி நான் கோவிலுக்குப் போறேன்... வர்றியாம்மா?” மைதிலி தான் நின்றிருந்தார்.

“இல்லைம்மா... அவர் வந்துட்டா... சமைக்க வேற செய்யணும்?” அவள் தயங்க...

“இதோ பக்கத்துல இருக்கிற கோவிலுக்குப் போக ஒரு அரைமணி நேரமாகுமா? போயிட்டு வந்து வேலையைப் பார்க்கலாம்” என்றவரிடம் மறுக்க மனமில்லாமல் அவருடன் கிளம்பி சென்றாள்.

‘அம்மா... உங்க ஊரை நம்பி வந்த எங்களை நல்லபடியா வாழ வைங்க’ கோவிலிலிருந்த துர்க்கையிடம் மனமார வேண்டி கொண்டாள்.

“நைட்டுக்கு என்ன செய்யலாம்ன்னு இருக்க?” வீட்டிற்கு வந்ததும் மைதிலி அவளிடம் கேட்க.

“சிம்பிளா சப்பாத்தி செய்யலாம்ன்னு இருக்கேன்”

“அப்போ சரி நான் வந்து காயெல்லாம் வெட்டி தர்றேன்” என்றவர் மயூரி தடுக்கத் தடுக்க அவளுக்கு உதவி செய்துவிட்டே கிளம்பினார்.

எல்லாவற்றையும் அவள் உணவு மேஜையில் எடுத்து வைக்கும் போது ஆரன் அலுவலகத்திலிருந்து வந்துவிட்டான். வந்தவன் அவள் முகம் கூடப் பார்க்காமல் நேரே குளியலறைக்குள் நுழைந்து கதவை சாத்தி கொண்டான். அவனின் செய்கை அவளுக்கு முகத்தில் அடித்தார் போலிருந்தது. ‘பொறு மனமே... இன்னுமும் கொஞ்ச நேரத்தில் பேபி என்று குழைய தான் போகிறார்’ என்று அவனின் செய்கையில் வாடிய தன் மனதை தானே தேற்றி கொண்டாள்.

அவளின் எண்ணத்தைப் பொய்யாக்குவது போலிருந்தது அவனின் அடுத்தடுத்த செய்கைகள். நேரே வந்தவன் சாப்பிட அமர... அவன் சொல்லாமலேயே அவள் அவனுக்குப் பரிமாறினாள். முதல் முதலாய் அவனுக்காகத் தான் சமைத்திருந்ததை உண்டுவிட்டு அவன் பாராட்ட போகிறான் என்று அவன் முகத்தை அவள் ஆர்வமாய்ப் பார்க்க... அவனோ குனிந்த தலை நிமிராமல் உண்பதிலேயே கவனமாய் இருந்தான். அதிலேயே அவள் முகம் விழுந்துவிட்டது.

உண்டு முடிந்ததும் கையைக் கழுவி கொண்டு வந்தவன் தொலைக்காட்சியை உயிர்பித்துவிட்டு அதில் மூழ்கி போனான். அவளைச் சாப்பிட்டாயா? என்று கேட்கவில்லை. சாப்பிடு என்றும் சொல்லவில்லை. இரு நாட்களுக்கு முன் வருணின் வீட்டில் அவன் அக்கறையாய் உணவு எடுத்து வைத்தது ஏனோ அவள் நியாபகத்து வந்து கண்ணைக் கரித்தது. அதற்கு மேல் உண்ண மனம் இல்லாவிட்டாலும் மதியம் உண்ணாத வயிறு 'எனக்கு ஏதாவது கொடேன்' என்று கெஞ்ச வேண்டா வெறுப்பாய் ஒரு சப்பாத்தியை பியித்து உண்டவளுக்கு அது தொண்டையிலிருந்து இறங்குவேனா என்று அடம் பிடித்தது. தண்ணீரை குடித்து அதைக் கஷ்டப்பட்டு விழுங்கியவள் அதோடு தன் கண்ணீரையும் சேர்த்து விழுங்கினாள்.

எல்லாவற்றையும் அவள் ஒதுங்க வைத்துவிட்டு வரும் போது அங்கே ஹாலில் அவன் இல்லை. படுக்கையறையில் வெளிச்சம் வந்தது. அவன் இருக்கும் மனநிலையில் தான் அங்கே செல்வது அவ்வளவு நல்லதாகப் படவில்லை அவளுக்கு. ஏனோ அவனின் கோப முகம் அவளுக்கு அச்சத்தை உண்டு பண்ணியது. நான்கடி எடுத்து வைத்தால் வந்துவிடும் அவர்கள் அறைக்குச் செல்ல அவளுக்குத் தயக்கமாய் இருந்தது. வேறுவழியில்லை இது தான் வாழ்க்கை என்று முடிவு பண்ணி வந்தாகி விட்டது வாழ்ந்து தானாக வேண்டும் என்று மனதை திடப்படுத்திக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

கண்களை வலது கரத்தால் மூடியபடி படுத்திருந்தவன் தூங்கவில்லை என்பது அவளுக்குப் புரிந்தது. அவனுக்கு மறுபக்கம் வந்தவள் ஒன்று பேசாமல் அவனுக்கு முதுகு காட்டி படுக்கையில் படுத்தாள். கொஞ்ச நேரம் சென்றதும் அவன் அவளருகே வருவது அவளுக்குப் புரிந்தது. அவனின் கை அவளின் இடையைத் தழுவ, அவனின் வெப்ப மூச்சுக் காற்றை அவளின் காதோரம் உணர்ந்தது.

'இவ்வளவு நேரம் நான் உயிரோட இருக்கேன்னா இல்லையான்னு இவர் கண்ணுக்கு தெரியல. நான்

சாப்பிட்டேன்னா சாப்பிடலையான்னு ஒரு வார்த்தை கேட்க முடியலை. ஆனா உடல் தேவைக்கு மட்டும் நான் வேணுமா? எனக்குன்னு உணர்ச்சிகள் இல்லையா? நான் என்ன ஜடமா?' அவள் மனதுக்குள் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போதே அவனின் கைகள் அவள் மேனியில் எல்லை மீற ஆரம்பித்தது.

"இதுக்கு மட்டும் தான் நான் வேணுமா ஆரு?" அவள் தாங்க மாட்டாமல் வெடித்துவிட்டாள்.

"வேறு எதுக்கு உங்க பெண்ணினம் லாயக்கு? இது ஒண்ணை வச்சிட்டு தானே எங்க ஆண் குலத்தையே ஆட்டி படைக்கிறீங்க" கிண்டலாய் கேட்ட இந்த ஆரனின் முகம் அவளுக்குப் புதிது.

"ஆரு..." அவளால் திகைப்பில் இருந்து வெளியில் வர முடியவில்லை.

"ஆரு தான் அதுக்கு என்ன இப்போ? நல்ல மூடை இப்படிக் கத்தி ஸ்பாயில் பண்ணாதே" என்றவன் அவளை வலுக்கட்டாயமாக இழுத்து தன் இளமையின் தேவையை அவளிடம் தேட ஆரம்பித்தான்.

"ஆரு... ஏன் இப்படிப் பண்றீங்க? உங்களுக்கு என்ன தான் பிரச்சினை? இவ்வளவு நாள் இருந்த உங்க காதல் எங்கே போனது? என் மேல் உங்களுக்குக் காதலே இல்லையா? என்னை இப்படிக் கஷ்டப்படுத்த தானா என்னைக் காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க?" அவள் புலம்பியது எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காய்ப் போனது. அவனோ தன் காரியத்தில் கண்ணாய் இருந்தான்.

"ப்ளீஸ் ஆரு... என... எனக்கு வலிக்குது ஆரு..." திக்கியவள் அவனின் முரட்டுத்தனம் தாங்க முடியாமல் அழுதுவிட்டாள். அவளின் முகத்தில் வேகமாய் முத்தமிட்ட அவனின் முரட்டு உதடுகள் அவளின் கண்ணீரை உணர... அடுத்த நொடி தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை

உணர்ந்தவனாய்... தீச்சுட்டார் போல் பதறி போய் அவளிடமிருந்து விலகினான்.

“சாரி பேபி... சாரி பேபி...” அவளை மென்மையாய் அணைத்தவன் அவள் முகம் முழுவதும் முத்தமிட்டு அவளை ஆறுதல் படுத்தினான்.

‘அடிக்கிற கை தான் அணைக்கும்’ என்றோ படித்தது அவளுக்கு நியாபகம் வந்தது. ஆனாலும் இந்தளவுக்கு வலிக்க வலிக்க அடிக்கவும் வேண்டாம்... இப்படி அணைக்கவும் வேண்டாம் என்று தான் அந்த நொடி அவளுக்குத் தோன்றியது. ‘நீ எனக்கு வேண்டாம்’ என்பது போல் அவனின் கையை விலக்கி விட்டு தள்ளி படுத்து கொண்டாள்.

“அதான் சாரி சொல்றேனே பேபி... இனிமேல் இது மாதிரி நடக்காது. ப்ராமிஸ் பேபி” அவளைத் தன் பக்கம் திருப்பியபடி அவன் சொல்ல... அவளோ அவன் முகம் காண மறுத்தாள்.

“ப்ளீஸ் பேபி... நீயும் என்னை வெறுத்தா நான் எங்கே போவேன். நான் வாழ்க்கையில் ரொம்ப அடிப்பட்டுட்டேன் பேபி. என்னையும் அறியாமல் நான் உன்னைக் காயப்படுத்தினா எனக்குச் சொல்லி புரிய வை பேபி. தயவுசெய்து என்னைத் தண்டிச்சிறாதே பேபி. என்னால் தாங்க முடியாது” அவளை அணைத்துக் கொண்டு அவன் கதற... அவனின் செயலில் அவளுக்குமே அழுகை வந்தது.

“ஏன் ஆரு இப்படிப் பண்ணினீங்க? நான் என்ன தப்பு செய்தேன்?” அவள் அழுது கொண்டே அவன் நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்.

“நீ ஒரு தப்பும் பண்ணல பேபி. எல்லாத் தப்பும் என் மேல் தான்” என்றவன் அவளை மெதுவே தட்டி கொடுத்து தூங்க வைத்தான். அவனின் அணைப்பு தந்த ஆறுதலில் அவள் மெல்ல அழுகை அடங்கி உறங்கிவிட்டாள்.

குழந்தை போல் தன் கையில் சுருண்டு படுத்திருந்தவளை காணும் போது அவனுக்குமே வேதனையாய் இருந்தது. அவள் முகத்தில் கண்ணீர் கறையைக் கண்டவன் இதயம் அவளை விடப் பல மடங்கு வலியை சுமந்தது.

‘ஏண்டி இந்த முரடன் கண்ணில் விழுந்த? பெண்களைப் பத்தி கேவலமா நினைத்திருந்த என் மனதில்... இல்லை இல்லை அதே பெண்ணினத்தில் தான் நானும் பிறந்திருக்கிறேன் என்று என் கண் முன்னால் தேவதையாய் நீ வந்து நின்ன போது... எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? என்னை ரட்சிக்க வந்த அந்தக் கடவுளா தான் உன்னை நான் பார்த்தேன். உன்னால் மட்டுமே என் வாழ்க்கை சொர்க்கமாக்க முடியும் என்று நம்பினேன்’

‘இப்பவும் உன் மேல் எனக்கு அந்த நம்பிக்கையிருக்கு. எல்லாவற்றையும் மறந்திட்டு நல்லபடியா உன் கூட நான் வாழணும்னு நினைக்கிறப்போ ஏண்டி என் பழைய வாழ்க்கையை நியாபகப்படுத்தற மாதிரி பேசின? இப்போ யாரு வாழவும் முடியாம? சாகவும் முடியாம துடிக்கிறது? என்னை நானே துன்புறுத்துவது மட்டுமில்லாம உன்னையும் சேர்த்து இந்தத் துன்பத்தில் இழுத்து விட்டுட்டேனோன்னு எனக்குக் கவலையா இருக்கு’

‘வேற எந்தப் பெண்ணாவது என்னை ஏமாத்தியிருந்தா கூடப் பரவாயில்லை... நான் என்னைத் தேத்திக்கிட்டு வாழ்ந்திருப்பேன். ஆனா என்னை ஏமாத்தியது என் அம்மாடி. தன் உதிரத்தை பாலாக்கி உயிருக்கு உயிராய் வளர்த்த என் அம்மா என் அப்பாவுக்குப் பண்ணிய நம்பிக்கை துரோகம் என் நெஞ்சில் மாறாத வடுவாய் இருந்திட்டு என்னைக் கொல்லாமல் கொல்லுது. பெண் என்ற சொல்லுக்கே இழுக்கானவள் என் அம்மா. அம்மா என்ற வார்த்தைக்கே அருகதை இல்லாதவள். அப்படிப்பட்ட பாவி வயிற்றில் பிறந்த நான் ஒரு அசிங்கம். அந்த அசிங்கத்தை உன்னிடம் நான் எப்படிச் சொல்வேன்? இப்போ சொல்லு என்னால் எப்படி ஒரு பொண்ணை நம்ப முடியும்? அதுக்காக நான் உன்னை நம்பாம இல்லை... இந்த

உலகத்திலேயே உன்னை மட்டும் தான் நான் நம்பறேன் பேபி. ஆனா என்னையும் அறியாமல் என் பழைய நினைவின் தாக்கத்தில் நான் உன்னைக் காயப்படுத்திட்டால்...? அது தான் பேபி எனக்குப் பயமாயிருக்கு'

'என்னை மாதிரி ஒரு பாவிக்குக் காதல் ஒரு கேடா? அதிலும் உன்னைப் போல் பூ போன்ற மென்மையான மனம் படைத்தவளை காதலிச்சிருக்கணுமா? நான் உன்னைக் காதலிச்சிருக்கக் கூடாது... கல்யாணம் பண்ணியிருக்கக் கூடாது. நீ வேற யாரையாவது கல்யாணம் பண்ணிக்கிட்டு நல்லா இருந்திருக்கணும். நான் தப்புப் பண்ணிட்டேன் பேபி... தப்புப் பண்ணிட்டேன் பேபி' மனதுக்குள் புலம்பியவன் தூங்கி கொண்டிருந்த அவளை இறுக்கமாய் அணைத்துக் கொண்டான். அவனின் துன்பம் அனைத்திற்குமான மருந்து அவளின் அருகாமை தான் என்பது போலிருந்தது அவனின் அணைப்பு.

“பேபி... பேபி...” காலையில் அலறிய கணவனின் குரலில் மயூரிக்கு சலிப்பாக வந்தது. தக்காளியை வெட்டி கொண்டிருந்த அவளின் கைகள் ஒரு நொடி தாமதித்து மீண்டும் செவ்வெனத் தன் வேலையைத் தொடர்ந்தது.

‘நேத்து வரைக்கும் போடி... போடின்னு துரத்திட்டு இன்னைக்கு மட்டும் என்ன பேபி... பேபி? நீ எனக்கு வேணாம் போடா...’ நேற்றைய அவனின் செயலில் கோபமாய் இருந்த அவள் மனது ஏகத்துக்கும் முறுக்கி கொண்டது.

நேற்றிரவு அவன் நடந்து கொண்ட முறையும், பேசிய பேச்சும் அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவன் எத்தனை முறை மன்னிப்புக் கேட்டாலும் அவன் நடந்து கொண்டதை அவளால் ஜீரணிக்க முயலவில்லை. அதுவும் அவனின் அந்த ஏளன குரல் அவளின் செவியிலே இன்னமும் ஒலித்துக் கொண்டிருந்தது.

‘வேறு எதுக்கு உங்க பெண்ணினம் லாயக்கு? இது ஒண்ணை வச்சிட்டு தானே எங்க ஆண் குலத்தையே ஆட்டி படைக்கிறீங்க’... இதன் அர்த்தம் என்ன? அவனுக்குப் பெண்கள் என்றாலே பிடிக்காது என்பது அவளுக்கு நன்கு தெரியும். அவ்வளவு ஏன் அவனே அவளிடம் பலமுறை கூறியுள்ளான். அப்போது அதைப் பெரியதாக எடுத்து கொள்ளாத அவள் மனது இப்போது என்னவெல்லாமோ நினைத்து குழம்பியது.

‘ஒருவேளை எனக்கு முன் அவர் வேற எந்தப் பெண்ணையாவது காதலித்து... அவள் இவருக்கு நம்பிக்கை துரோகம் செய்து... அதனால் தான் அவருக்குப் பெண்களைப் பிடிக்காமல் போய் விட்டதோ?’ அதை நினைக்கும் போதே அவள் நெஞ்சில் பாரமேறிய ஒரு உணர்வு.

“பேபி... பேபி...” மீண்டும் ஒலித்த அவனின் காட்டுக் கத்தல் அவளின் தறிக்கெட்டு அலைப்பாய்ந்து கொண்டிருந்த

கற்பனையைக் குதிரையைக் கடிவாளமிட்டு நிறுத்தியது.

“இவருக்குத் தேவையென்றால் பேபி... இல்லைன்னா மயூ என்றழைப்புக்கு கூடப் பஞ்சமாகி போய்டும்” வாய் விட்டு முணுமுணுத்தாலும் இயல்பான அவளின் தாய் மனது அவனுக்காகக் காபியை கலந்து கொண்டு அவன் முன் போய் நின்றது.

கட்டிலின் அருகிலிருந்த மேஜையின் மீது காபி கோப்பையை வைத்தவள், “க்கும்...” தான் வந்து விட்டதை அவனுக்கு உணர்த்தும் பொருட்டுத் தொண்டனையைச் செருமினாள். அதில் அவளை உணர்ந்தவன் மெதுவே கண் விழித்தான்.

டிசம்பர் பூவின் நிறத்தில் சுடிதார் அணிந்து அந்தப் பூவை போல் புத்துணர்ச்சியுடன் நின்றிருந்தவளின் அழகு அவனின் சித்தத்தைச் சிறை செய்து அவள் மேல் பித்தனாக்கியது. அவளின் அழகை கண்களில் நிரப்பிக் கொண்டே எழுந்தவன்... அவள் அருகில் வந்து, “பேபி... நீ எவ்வளவு அழகாயிருக்கத் தெரியுமா?” என்றபடி அவளின் முன் நெற்றியில் இதழ் பதித்தான்.

அவன் முத்தமிட்ட தன் நெற்றியை அழுந்த துடைத்தவள், “பல் கூடத் தேய்க்காம என்ன இது? முதல்ல போய்க் குளிச்சிட்டு வாங்க...”

அவளின் வார்த்தைகள் சிணுங்கலுடன் ஒலித்திருந்தால் அந்தக் காதல் கணவன் பூரித்துப் போயிருப்பான். ஆனால் எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் அவள் கூறியது அவன் மனதை வருத்த தான் செய்தது. நேற்று அவன் நடந்து கொண்ட விதத்தின் எதிரொலி என்பது அவனுக்குப் புரிய தான் செய்தது. தான் பேசியதும் தவறு தான் என்பதை உணர்ந்து கொண்டவன், அவளின் மனதை மாற்ற எண்ணினான்.

“குளிச்சிட்டு வாங்கன்னு சொன்னா போதுமா? குளிக்க வைக்கிறது யாரு?” கண் சிமிட்டியபடி கேட்டவனின் தலையில் நாலு போடு போட்டால் என்ன? என்று தான்

அவளுக்குத் தோன்றியது. அதை வெளிக்காட்டி கொள்ளாமல் மௌனமாய்க் கலைந்திருந்த படுக்கையை அவள் சரி பண்ண ஆரம்பித்தாள்.

“என்னடி பொண்டாட்டி... பதில் பேசாம இருந்தா நான் விட்டுருவேனா என்ன?” என்றவன் குனிந்திருந்த அவளின் இடுப்பில் கை கொடுத்து அவளை அலேக்காகத் தூக்கி படுக்கையில் கிடத்தினான்.

“ஹையோ என்ன இது? முதல்ல போய்க் குளிங்க” அவன் பிடியிலிருந்து விடுபடப் போராடி கொண்டே அவள் கூற,

“எனக்குத் தனியா குளிக்கப் பயமாயிருக்கு பேபி... அதான் எனக்குத் துணையா உன்னை வரவழைக்கலாமேன்னு...” என்றவன் அவனின் இதழ் ஊர்வலத்தை அவளின் மேனியில் ஆரம்பித்தான்.

அவளின் வெண்ணைப் போன்ற மேனியில் அவனின் இதழ் ஊர்வலம் தங்கு தடையின்றி முன்னேறியது. அவளோ அவனின் செய்கையில் உருகி குழைய முடியாமல் அவனின் செய்கையை எதிர்க்க எண்ணியவளாய் திமிறினாள். அவளின் எதிர்ப்பை தன் கைகளால் இலகுவாய் அடக்கியவன் தன் காரியத்தில் கண்ணாயிருக்க... அவளுக்குக் கண்ணீர் முட்டி கொண்டு வந்தது.

“ப்ளீஸ் வேணாமே...” நேற்று போலவே அவளின் கண்ணீர் அவனை அசைக்க அவளை விட்டு விலகி படுத்தான்.

அவளோ அவனிடமிருந்து விடுபட்டதும் விம்மியபடி அவனைத் திரும்பியும் பாராது அறையை விட்டு வெளியேறினாள். அவள் போவதை பார்த்துக் கொண்டிருந்த அவனின் உள்ளம் தன்னைத் தானே நொந்து கொண்டது. அவளை எப்படிச் சமாதானப்படுத்துவது? என்று யோசிக்க ஆரம்பித்தான்.

அவன் தன் அன்னை செய்த துரோகத்திற்கு அன்றே தண்டனை கொடுத்த பின் அது முடிந்து போன

அத்தியாயமாகவே கருதினான். அதன் வலி அவனின் ஆழ்மனதில் இருந்தாலும் இதுவரை அதை அவன் பெரியதாய் எடுத்துக் கொண்டது இல்லை. பெண்களிடம் மட்டும் இடைவெளி கொடுத்து தனித்து நின்றானே தவிர அதற்காக அவர்களிடம் அவன் தவறாகவோ அல்லது தகாத வார்த்தைகளோ ஒரு போதும் பேசியதும் இல்லை... நடந்து கொண்டதும் இல்லை. அப்படிப்பட்டவன் மயூரியிடம் ஏன் அப்படிப் பேசினான்? நடந்து கொண்டான்? என்று அவனுக்கே விளங்கவில்லை.

எப்படி அவளைச் சமாதானப்படுத்துவது? என்று தெரியாமல் வெகுநேரம் யோசித்தவன் ஒரு முடிவுடன் எழுந்து சமையலறைக்குச் சென்றான். அங்கே அடுப்பில் எதையோ வதக்கி கொண்டிருந்த மயூரியின் பின்பக்கமாய்ப் போய் நின்று கொண்டு தன் கையை முன்னால் நீட்டி அடுப்பை அணைத்தான். அவனின் செயலில் திடுக்கிட்டு திரும்பியவள் அவனைக் கண்டதும் ஆசுவாசமானாள்.

“என்னைத் தவிர வேற எவன்டி உன் பக்கத்தில் வர முடியும்? எதுக்குத் தேவையில்லாம பயப்படுற?” அவளின் நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையைத் தன் கைகளால் அவன் துடைத்து விட...

‘இப்போவெல்லாம் உங்களைக் கண்டால் தான் பயமாயிருக்கு’ என்று நினைத்தவளோ ஒன்றும் பேசாது அவனையே பார்த்திருந்தாள்.

“வா...” அவள் கைப்பிடித்து அவன் அழைக்க... ‘எங்கே?’ என்பது போல் அவள் பார்த்தாள். ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அவள் மௌனமாய் இருந்தது அவன் மனதை குத்தி கிழிக்கத் தான் செய்தது. ஆனாலும் அதை வெளிக்காட்டி கொள்ளாமல்,

“என்னை அம்மா மாதிரி கவனிச்சிக்கணும்ன்னு சொன்னேனா இல்லையா? வா வந்து குளிப்பாட்டி விடு...” மறந்தும் அவன் ‘என் அம்மா’ மாதிரி என்று சொல்லவில்லை. அதை அவளும் கவனிக்கவில்லை.

தாயன்பே இல்லாமல் வளர்ந்த அவன் அவளிடத்தில் அதை எதிர்பார்த்தான்.

அவளின் பதிலை எதிர்பாராமல் அறைக்கு அழைத்துச் சென்றவன், “ம்... சீக்கிரம் நான் குளிக்கிறதுக்குத் தேவையானதை எடுத்து வை” சொன்னவன் சட்டமாய்க் கட்டிலில் அமர்ந்து கொண்டான்.

அவனின் சொல்லை தட்ட முடியாமல் துண்டை எடுத்துக் குளியலறையில் வைத்தவள் அடுத்து என்ன செய்வது? என்று யோசித்தபடி அங்கேயே நிற்க... “என்ன பேபி... இப்படியே முழிச்சிட்டு இருந்தா... நான் எப்போ ஆபிசுக்கு போறது?” கேட்டுக் கொண்டே அவளருகில் வந்தவன், “வந்து குளிக்க வை” அவளையும் அழைத்துக் கொண்டு குளியலறைக்குள் நுழைந்தான்.

‘ஹெய்யோ... இவரு இம்சை தாங்க முடியலியே?’ அடுத்து என்ன செய்யச் சொல்ல போகிறானோ? என்ற பயத்தில் கண்ணை இறுக மூடி கொண்டாள்.

அவள் கண்மூடி கதவின் மேல் சாய்ந்திருந்த தோற்றம் அவனின் மனதை கவர, அவளின் இருபக்கமும் கையை ஊன்றியபடி அவன் அவளைப் பார்க்க... அவனின் மூச்சு காற்றின் ஸ்பரிசத்தில் அவனின் அருகாமையை உணர்ந்தவள் திகைப்புடன் பட்டென்று கண்ணைத் திறந்தாள்.

“என்ன...? என்ன வேணும்?” அவளின் வார்த்தைகள் தந்தியடித்தது.

‘நீ தான்டி வேணும்’ என்று சொல்ல வேண்டும் போலிருந்தது அவனுக்கு. அவள் தானாகக் கனிந்து அவனிடம் வர வேண்டும்... நேற்று போல் அடித்துக் கனிய வைக்கக் கூடாது என்று முடிவெடுத்தவன் அமைதியாய் அவளைப் பார்த்தான்.

“என்ன வேணும்ன்னு கேட்டா என்ன அர்த்தம்? குளிக்க வைக்கத் தானே வந்திருக்க... அதை விட்டுட்டுக் கண்ணை

மூடிக்கிட்டு நின்னுட்டிருந்தா எப்படி?” கிண்டலாய் அவன் கேட்ட தொனியில் அவளுக்கு முகம் ரத்த நிறம் கொண்டது.

“நா... நான் எப்படி?” அவளின் வெட்கத்தில் என்ன கண்டானோ, “சரி போ...” என்க, விட்டால் போதுமென்று அவள் கதவை திறந்து கொண்டு செல்ல... அவனின் சிரிப்புச் சத்தம் அவளைத் துரத்தியது.

‘கொஞ்ச நேரத்தில் என்னமாய்ப் பயமுறுத்திட்டீங்க... ஆனாலும் நீங்க ரொம்ப மோசம்ப்பா’ மனதுக்குள் செல்லமாய் அவனைக் கோபித்துக் கொண்டபடி அங்கிருந்து நகர முற்பட்டவளுக்கு அவன் சொன்னது நியாபகம் வர... அவனுக்குத் தேவையான உடையை எடுத்து வைத்துவிட்டே சமையலறைக்குச் சென்றாள்.

நேற்று மைதிலியம்மா கொடுத்திருந்த மாவில் தோசை ஊற்றியவள், மறுபக்க அடுப்பில் இருந்த டோக்ளா வெந்து விட்டதா? என்று கத்தியை எடுத்து குத்தி பார்த்தாள். கத்தியின் ஓரத்தில் ஒட்டாமல் அது வரவும் வெந்துவிட்டதை உணர்ந்து அடுப்பை அணைத்தாள். இதுவும் மைதிலியம்மாவின் உபயம் தான். அவர் சொல்லி கொடுத்திருந்த செய்முறை படி டோக்ளாவை செய்திருந்தாள். டோக்ளாவிற்குத் தேவையான தாளிதத்தைச் செய்தவள் அதன் மீது ஊற்றி.. துருவி வைத்திருந்த தேங்காய் துருவலை அதன் மீது அலங்காரமாய்த் தூவி விட்டு அதைத் திருப்தியுடன் நின்று ரசித்தவள் பின் உணவு மேஜையின் மீது கொண்டு வைத்தாள்.

“பேபி...” மீண்டும் அவன் அழைக்கும் சத்தம் கேட்க... ‘இப்போ இவருக்கு என்ன வேணுமாம்?’ என்று நினைத்தவள் வேகமாய் அடுப்பை அணைத்து விட்டு அவனிடம் விரைந்தாள்.

“இந்தப் பட்டன் எல்லாம் யார் போட்டு விடுறது?” தன் சட்டையைக் காண்பித்தவன், “தலை சீவி விடுறது யாரு?” கலைந்து கிடந்த தலை முடியை மேலும் கலைத்து விட்டபடி குறும்பாய் அவன் கேட்க... அவள் தயக்கமாய் அறையின்

வாயிலேயே நின்றிருந்தாள். அன்யோன்யமாய் வாழும் தம்பதியர் என்றால் அவளின் தயக்கம் நியாயமற்றது. என்ன தான் திருமணம் என்ற ஒன்று முடிந்துவிட்ட போதும் அவனின் அருகாமை அவளுக்குப் புதிது என்பதால் அவன் அருகே செல்லவே அவளுக்குத் தயக்கமாய் இருந்தது.

“வா பேபி... நீ இப்படி ஸ்லோவா இருந்தேன்னா நான் இன்னைக்கு ஈவினிங் தான் ஆபிஸ்க்கு போக முடியும்... சீக்கிரம்” அவனின் வார்த்தையில் உள்ளே வந்தவள் அவன் முகம் பாராமல் அவன் சொன்னதைச் செய்து முடித்தாள். அவனை ஏறிட்டு பார்க்க அவளுக்கு வெட்கம் பிடுங்கி தின்றது.

“இப்போ நான் போகவா?” அவனை நிமிர்ந்து பாராமல் அவள் கேட்க... அவனிடமிருந்து எந்தவித பதிலும் இல்லாமல் போக... அவள் தன் தயக்கத்தை விட்டொழித்து அவனை ஏறிட்டு பார்த்தவள் அவனின் முகத்தில் இருந்த உணர்வுக்கு என்ன அர்த்தம்? என்று தெரியாமல் குழம்பி போனாள்.

அவனோ அவளின் ஒவ்வொரு செய்கையும் ரசித்து அனுபவித்துக் கொண்டிருந்தான். தந்தையின் அரவணைப்பில் வளர்ந்த அவனுக்குத் தாயன்பு என்றால் என்னவென்று தெரியாது. இன்று அந்தத் தாயாய் அவள் மாறி அவனுக்குச் செய்த பணிவிடையில் அவன் அவளின் சேயாய் மாறிப் போனான். அவளின் செய்கையில் அவன் மனம் நெகிழ அப்படியே நின்றிருந்தான்.

“ஆரு...” அவனின் கண் முன் அவள் தன் கையை ஆட்ட... அவளின் அழைப்பில் அவனின் கண்கள் பளிச்சிட்டது.

“தேங்க்ஸ் பேபி...” என்றவன் அவளின் உச்சந்தலையில் இதழ் பதித்தவன் அவளை அணைத்துக் கொண்டான். அதில் காமம் இல்லை... காதல் இல்லை... அதிலிருந்தது எல்லாம் அன்னையின் அரவணைப்பில் உற்சாகமாகி அவள் கன்னத்தில் முத்தமிடும் குழந்தையின் கள்ளமில்லா அன்பே இருந்தது. எவ்வளவு நேரம் சென்றதோ தெரியாது... அவள் தான் சுதாரித்தாள்.

“சாப்பிடலாம் வாங்க” மெதுவே அவள் அழைக்க...

“ம்...” என்றவன் விடவே மனமில்லாமல் அவளை விடுவித்தான்.

அவள் அமைதியாய் பரிமாற அவனோ உண்ணாமல் அவளைப் பார்த்தான். அவள் அவன் பார்வை புரியாது குழப்பமாய்ப் பார்க்க... “யார் ஊட்டி விடுவா?” அவன் சொல்லிய தொனியே ‘நீ தான் செய்ய வேண்டும்’ என்பது போலிருந்தது.

‘இன்னைக்கு இவருக்கு என்னாச்சு? எதுவுமே சரியில்லையே?’ மனதுக்குள் புலம்பியவள் அவனுக்கு ஊட்டிவிட அவனோ மகிழ்ச்சியாய் வாயை திறந்தான்.

அதே போல் அவளுக்கு ஊட்டிவிட எண்ணியவன் கண்ணில் அங்கிருந்த ரசகுல்லா பட... அவன் அதை எடுத்து அவள் வாயில் திணிக்க... அவனின் திடீர் செய்கையில் ரசகுல்லாவை மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அவள் முழித்தாள். அவளின் கடைவாயில் ஒழுகிய சீனிப்பாகில் அவன் மனம் இனிமையாய் மூழ்கி திளைத்தது.

‘என்னையும் ருசி பாரேன்’ என்று சீனிப்பாகோடு போட்டி போட்டு கேட்டது அவளின் தித்திப்பான இதழ்கள். அதற்கு மேல் தாங்க மாட்டாதவனாய் அவளின் தோள் பற்றி அவளைத் தன் அருகில் இழுத்து அவளின் இதழ்களின் தித்திப்பை ருசித்தவன் வெகு நேரம் கழித்து அவளை விடும் போது அவள் வாயிலிருந்த ரசகுல்லா அவன் வாயிற்கு இடம் பெயர்ந்திருந்தது.

“என் வாழ்க்கையில் இது மாதிரி ஒரு ரசகுல்லாவை சாப்பிட்டதே இல்லை” கண்சிமிட்டி சொல்லியவன், “பை பேபி...” என்று அவள் கன்னத்தில் காதல் கணவனாய் முத்தமிட்டவன் அலுவலகத்திற்குக் கிளம்பி செல்ல... அவனின் செய்கை கொடுத்த இனிய அதிர்ச்சியில் இருந்து அவள் வெளிவர வெகு நேரமாகியது.

“இடைவிடாத நெருக்கங்கள் தொடருமா உயிரே
மொழியில்லாமல் தவிக்கிறேன் மௌனமாய் இங்கே
இது போதும் ஓ... எப்போதும் ஓ...”

அலுவலகத்திற்கு வந்த ஆரனுக்கோ என்றுமில்லாத வண்ணமாக இன்று வாழ்க்கையே வண்ணமயமாகக் காட்சியளித்தது. அவனின் மனம் சந்தோசத்தில் தத்தளித்தது. அதே மகிழ்ச்சியுடன் கணினியின் மீது தன் பார்வையைப் பதித்தான். அந்நேரம் அவன் அலைப்பேசி அழைக்க அதில் அவனின் எம்டி பெயர் ஒளிர்ந்தது.

“குட்மார்னிங் சார்...” அவனின் குரல் பயபக்தியுடன் ஒலித்தது.

“வேலையெல்லாம் எப்படியிருக்கு மிஸ்டர். ஆரன்?”

“நல்லாயிருக்கு சார்”

“அப்புறம் உங்க மனைவிக்கும் சேர்த்து வேலை கேட்டிருந்தீங்கல்ல... இன்னும் ஒன் மன்த் பொறுத்துக்கோங்க... நல்ல வேலை ஒண்ணு காலியாகுது. அதுக்கு உங்க வைப்பை போட்டுறலாம்”

“ரொம்ப ரொம்பத் தேங்க்ஸ் சார்” மனமார அவருக்குத் தன் நன்றியை கூறினான்.

“எதுக்கு ஆரன் நன்றி எல்லாம்... வேற எந்த உதவி தேவைப்பட்டாலும் எனக்குக் கால் பண்ணுங்க. ரொம்பவும் யோசிக்க வேணாம்”

“இல்லை சார்... இதுவரை நீங்க செஞ்ச உதவியே பெரிசு. இதுக்கே என் நன்றி கடனை நான் எப்படிச் செலுத்த போறேன்னு தெரியல” அவன் குரல் நெகிழ்ச்சியுடன் ஒலித்தது.

“என்ன ஆரன் இது நன்றி கடன் அது இதுன்னு? உங்களுக்குத் திறமை இருக்கு. சாதிக்கும் வேகம் இருக்கு. அதுக்குத் தான் நான் வேலை கொடுத்தது. நல்லா வேலை செஞ்சு பல பதவி உயர்வுகளை நீங்க அடையணும். அது

தான் என் அன்பு வேண்டுகோள் மற்றும் பிரார்த்தனையும் கூட” அவரின் அன்பில் மீண்டும் மனம் நெகிழ்ந்தவன் அவருக்கு நன்றியை கூறி விட்டு அலைப்பேசியை வைத்தான்.

அவனின் காதில் எம்டியின் வார்த்தைகளே திரும்பத் திரும்ப ஒலித்தது. அவர் மட்டுமில்லை என்றால் அவன் என்னவாகப் போயிருப்பானோ... அது அந்தக் கடவுளுக்கே வெளிச்சம்? அன்று அவனின் வேண்டுகோளுக்கு அவர் செவி சாய்த்தது மட்டுமல்லாமல் அவனுக்குப் பிரத்யேக கணினி பயிற்சியும் கொடுத்து தன் கம்பெனியிலேயே ஒரு வேலையும் போட்டு கொடுத்தார்.

இப்போதும் கூட அவனின் வேண்டுக்கோளுக்கிணங்க சென்னை கிளையிலிருந்து அவனை ராஜினாமா செய்வது போல் செய்ய வைத்து இப்போது கொல்கத்தா கிளையில் அதே வேலையை அவனுக்கு அளித்துள்ளார். அவனின் நன்மையை மட்டுமே கருத்தில் கொண்டு அவர் செயலாற்றியது அவன் மனதில் நன்றியுணர்ச்சியைப் பெருக்கியது.

அவனின் சிறைக்குச் சென்ற கதை அவருக்குத் தெரியும். ஆனால் அதன் பின்னணி பற்றி அவருக்கு முழுவதுமாய்த் தெரியாது. அவனின் பின்னணியைப் பற்றி அவர் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. அவனின் திறமையை மட்டுமே அவர் கண்டு கொண்டு ஊக்குவித்தார். இருவருக்கிடையில் பாலமாகச் செயல்பட்டது நல்லசிவம் அய்யா தான் என்றால் மிகையில்லை. நல்லசிவத்தின் நியாபகம் வந்ததும் அவனின் கைகள் அவரின் எண்ணை அழுத்தியது.

****

வெகுநேரமாகியும் மயூரி வராததால் படுக்கையில் படுத்திருந்த ஆரன் வெளியில் வந்து எட்டி பார்த்தான். வீட்டின் அனைத்து விளக்கும் அணைக்கப்பட்டு ஹாலில் விடிவிளக்கு மட்டும் எரிந்து கொண்டிருக்க... அவள் எங்கே? என்று அவன் கண்கள் துளாவியது. ஹாலில் இருந்த

நாற்காலியில் முழங்காலை கட்டி கொண்டு அதில் முகம் புதைத்து அமர்ந்திருந்த மனைவியைக் கண்டதும் அருகில் வந்தான்.

“ஹேய்... நேத்து தான் பர்ஸ்ட் நைட்டை வேஸ்ட் பண்ணிட்டோம். இன்னைக்குச் செகண்ட் நைட்டாவது ஒழுங்கா கொண்டாட வேணாமா? நீ இங்கே வந்து உட்கார்ந்தா எப்படிப் பேபி?” என்றவன் அவளை இரு கைகளால் தூக்க முயல... அவளோ பிடிவாதமாய் அவனின் கைகளை விலக்கி விட்டாள்.

அவளின் செயலில் அவனின் முகத்தில் யோசனை வந்தது. அவள் அருகில் அமர்ந்து அவளை அணைத்து தன் தோளில் சாய்க்க அவன் முயல... அவளோ அவன் பிடிக்குள் அடங்காமல் அவனைப் பார்த்தவாறு அமர்ந்தவள் அவனின் முகத்தைத் தீர்க்கமாய் ஏறிட்டாள். அவள் முகத்தில் தெரிந்த ஏதோ ஒன்றில் அவனின் முகம் குழப்பத்தைத் தத்தெடுத்தது.

“என்ன பேபி... எதுவும் பேசணுமா?” அவளின் மனதை புரிந்து கொண்டவனாய் அவனே கேட்டான்.

“ம்...” ஆம் என்பது போல் அவள் தலையை மேலும் கீழும் வேகமாய் ஆட்டினாள். அவள் தலையாட்டிய விதத்தில் அவனுக்கு லேசாகச் சிரிப்பு வந்தது.

“சொல்லு பேபி?”

“எனக்கு ஒரு... ஒரு...” அவள் முடிக்காமல் நிறுத்த...

“உனக்கு என்ன? சொல்லுடா...” அவன் அவளை ஊக்குவிக்க...

“எனக்கு ஒரு விசயம் தெரியணும்...” என்று நிறுத்தியவள் அவனைப் பார்க்க... அவனோ மேலே சொல் என்பது போல் அவளை இமைக்காமல் பார்த்தான்.

“நீங்க நேத்து ஏன் அப்படிச் சொன்னீங்க?” அவனோ பதில் கூறாமல் அவள் முகத்தை வேதனையுடன் பார்த்தான்.

அதில் அவனின் மன வேதனை பிரதிபலிக்கவில்லை. மாறாக அவளைக் காயப்படுத்தி விட்டோமே என்ற வேதனை தான் அதிகமாய் இருந்தது.

“அது வந்து...” அதற்கான காரணத்தை அவளிடம் எப்படிக் கூறுவது என்று தெரியாமல் விழித்தான்.

“நான் உங்களைத் தப்பா நினைச்சு கேட்கல. உங்க மனசுல ஏதோவொரு கஷ்டம் அழுத்திட்டு இருக்குங்கிறது எனக்குப் புரியுது. அதை என்னிடம் சொன்னா உங்க கஷ்டம் குறையும்ன்னா என் கிட்ட சொல்லுங்க...” தன்னை அவன் தவறாக எண்ணி விடக் கூடாதே என்ற தவிப்பில் தன் மனதில் உள்ளதை அவனிடம் மறைக்காமல் கேட்டுவிட்டாள்.

அவன் அதற்குப் பதில் பேசாமல் எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க... அவன் கண்களில் காணப்பட்ட வலியில் அவள் மனம் தான் துடித்துப் போனது. காலையில் தான் நினைத்த காரணத்தோடு அவனின் வலியை ஒப்பிட்டவளுக்கு இதயம் ஒரு முறை நின்று துடித்தது. இன்று என்னவானாலும் சரி அவன் மனதை தான் அறிந்து கொண்டே ஆக வேண்டும் என்ற உத்வேகம் அவள் மனதில் எழ... அவன் கையைப் பற்றி, “ஆரு...” என்றழைத்தாள். அவளின் அழைப்பில் அவன் அவளை மௌனமாய் ஏறிட்டான்.

“நீ... நீங்க...” தவிப்பாய் ஆரம்பித்தவள் எப்படி அவனிடம் கேட்பது என்று தெரியாமல் தலையைக் குனிந்தாள். அவள் என்னவோ தைரியமாகத் தான் ஆரம்பித்தாள். ஆனால் அதை அவனிடம் எப்படிக் கேட்பது என்று தெரியாமல் தான் விழித்துக் கொண்டிருந்தாள். அவனோ அவள் கேட்க போகும் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்வது என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

“நீங்க யாரையாவது காதலிச்சு... அவங்க உங்களை விட்டுட்டு போனதால... நீங்க...?” அவள் முடிக்க முடியாமல் திணறினாள்.

“வாட்...?” கண்கள் இரண்டும் வெளியில் தெறித்து விடுவது போல் அவளைப் பார்த்தவன், அடுத்த நொடி அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

“லூசுடி... சரியான லூசுடி நீ...” மனதில் எழுந்த ஆனந்தத்தில் அவள் முகம் முழுவதும் முத்தமிட்டபடி, “என் வாழ்க்கையில் வேறொரு பெண்ணா? உன்னைத் தவிர வேறெந்த பெண்ணையும் ஏறிட்டு பார்க்க மாட்டான் இந்த ஆரன். என் வாழ்க்கையில் நுழைந்த முதல் பெண், கடைசிப் பெண்... எல்லாமே நீ தான். நீ மட்டும் தான் பேபி” காதலோடு அவள் காதருகில் சொன்னவன் அவளுள் மேலும் மேலும் மூழ்க துவங்கினான.

“அப்போ நேத்து ஏன் அப்படிப் பேசனீங்க? உங்க குரலில் இருந்த கோபம் பொய்யில்லையே? வேற எதுவும் உங்க மனதை போட்டு குழப்புதா?” அவள் மெதுவாய் தான் கேட்டாள். அவளின் வார்த்தையில் அவன் தீச்சுட்டார் போல் அவளை விட்டு விலகி அமர்ந்தான்.

“எதுவா இருந்தாலும் சொல்லுங்க... நான் தப்பா நினைக்க மாட்டேன்” அவனின் பதிலுக்காக அவன் முகத்தையே பார்த்திருந்தாள்.

“நான் கொலைக்காரன்னு தெரிஞ்சும் இதுவரை அதைப் பத்தி எதுவும் கேட்காமல் என் கூட இருக்கிற உன்னைப் பார்த்து நான் தப்பா நினைப்பேனா?” அவளின் கையை ஆதுரத்துடன் பற்றிக் கொண்டான்.

“அய்யோ அதைப் பத்தி நான் பேச வரல. நீங்க அதிலிருந்து விடுதலையாகி வந்த பின் அதைப் பத்தி கேட்டு உங்க மனசை காயப்படுத்த நான் விரும்பல. நீங்க ஏன் பெண்களைக் கேவலமா பேசினீங்க? அதைத் தான் கேட்கிறேன். ரெண்டு பேரும் மனசளவில் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிக்காம உடலளவில் தெரிஞ்சுக்கிட்டு வாழ்றது எனக்குப் பிடிக்கல. உங்க மனசுல அழுத்திட்டு இருக்கிற வேதனையை என்னோட பகிர்ந்துகிட்டா உங்க துக்கம் குறையுமேன்னு தான் நான் சொல்றேன். தயவுசெஞ்சு சொல்லுங்க... ப்ளீஸ்...”

‘எதையடி சொல்ல சொல்கிறாய் பெண்ணே...! நீ கேட்க விரும்பாத விசயமும்... கேட்க விரும்பும் விசயமும் ஒன்று தான் என்பதை உனக்கு எப்படிச் சொல்வேன்? எதைச் சொல்வேன்... எப்படிச் சொல்வேன் இந்த அசிங்கத்தை? என் கண்ணே...!’ அவன் மனம் ஊமையாய் ஓலமிட்டது அந்தப் பேதை பெண்ணின் காதில் விழவில்லை.

அவளின் கெஞ்சலில் மனதிலுள்ள துயரத்தை எல்லாம் கொட்டிவிட அவன் மனம் துடித்தது. ஆனால் அதை என்னவென்று அவளிடம் சொல்வான். அவளிடம் சொல்லிவிட எண்ணி ஒரு நொடி இளகிய அவன் மனது, மறு நொடி பாறை போல் இறுகியது.

“இங்கே பாரு பேபி... என் மனசில் எந்த வேதனையும் இல்லை. நீயா ஏதாவது கற்பனை பண்ணிக்காதே. நம்மிடையே இந்தப் புரிதலே போதுமானதுன்னு நான் நினைக்கிறேன். இதுக்கு மேலேயும் என் கிட்டே பதில் கேட்டேன்னா என்னோட பதில் மௌனம் தான். நேத்து நான் பேசியது தப்பு தான். சாரி பேபி... இனி இது போல் நடக்காது” என்றவன் எழுந்து கொண்டு அவளை நோக்கி கை நீட்டி, “வா போகலாம்” அவளோ நீட்டிய அவன் கையைப் பற்றாமல்... கண்ணிமைக்காமல் அவனைப் பார்த்துக் கொண்டிருக்க, “அப்போ நீ வர மாட்ட” என்றவன் அவளை அப்படியே தன் இரு கைகளில் அள்ளி கொண்டான்.

“நான் வரல என்னை விடுங்க...” அவள் திமிற...

“ஷ்... உனக்குப் பிடிக்காதது எதுவும் நடக்காது. பேசாம இரு” வார்த்தையால் அவளை அடக்கியவன் படுக்கையில் அவளைக் கிடத்தினான். அவளோ அச்சத்துடன் அவனைப் பார்க்க...

“இப்ப எதுக்கு இந்த லுக்...? நான் ஒண்ணும் உன்னைய கடிச்சு தின்ற மாட்டேன்” அவளை அணைத்துக் கொண்டு படுத்தவன் சிறிது நேரத்தில் உறங்கிவிட்டான். அவளோ அவனின் அணைப்பில் இருந்தாலும் ஏதோ தனிமை படுத்தப்பட்ட உணர்வில் நிம்மதியில்லாமல் தவித்தாள்.

“என்ன மாமா இப்படிப் பண்ணிட்டீங்க? மயிலு சொன்னதை வச்சு அவளைத் தலை முழுகிட்டேன்னு சொல்றீங்களே... இது உங்களுக்கே நியாயமா இருக்கா? அவளே பயந்த சுபாவமுள்ள பொண்ணு. அவன் அவளை மிரட்டி அந்த மாதிரி பேச வச்சிருந்தா... அவ என்ன இக்கட்டுல மாட்டிட்டு தவிக்காளோ தெரியல. அவ கோவிலுக்குப் போனது தற்செயலா நடந்திருக்கும். அவன் அவ வெளியில் வருவதற்காகக் காத்திருந்து அவளைக் கல்யாணம் பண்ணியிருக்கணும். இதையெல்லாம் யோசிக்காம நீங்க இப்படி அவளைத் தேவையில்லாம பேசிட்டீங்களே” ரிஷியின் பேச்சில் இருந்த உண்மை மெதுவே ராகவன் மூளையில் உறைத்த போது அவருக்கு ‘அய்யோ’ என்றிருந்தது.

நிச்சயம் நின்று போனதில் ராகவன் – சுமதி தம்பதியினர் மீது ரிஷியின் பெற்றோருக்குக் கொஞ்சம் கோபம் தான். அதிலும் மயூரி செய்த செயல் தங்களை அவமானப்படுத்தி விட்டதாக எண்ணியவர்கள் மேற்கொண்டு ராகவன் குடும்பத்தினருடன் எந்தவித பேச்சு வார்த்தையும் வைத்து கொள்ளவில்லை. ஆனால் ரிஷி தான் மனம் கேட்காமல் அத்தை குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதற்காக அவர்களின் வீட்டிற்கு வந்துவிட்டான். இந்த நான்கு நாட்களாக அவன் இங்கு இருந்து அவர்களைத் தேற்ற தான் முயற்சிக்கிறான். ஆனால் பலன் என்னமோ பூஜ்யமாகத் தான் இருந்தது. அதில் அவனுக்குச் சற்றுக் கோபம் வந்து பேசியது தான் மேலே உள்ள வார்த்தைகள்.

“அப்படியும் இருக்குமோ ரிஷி? ஐயோ நானே என் பொண்ணைத் தப்பா பேசிட்டேனே” அவனிடம் கேட்ட ராகவன் தனக்குள் மருகி போனார்.

“மாமா முடிஞ்சு போனதை நினைச்சு கவலைப்படாதீங்க. இனி என்ன செய்யலாம்ன்னு யோசிக்கலாம்” அவருக்கு ஆறுதல் கூறியவன், “மஞ்சு எல்லோருக்கும் சாப்பாடு

எடுத்து வை...” மஞ்சரியை விரட்டியவன்... அவர்கள் மூவரையும் வலுக்கட்டாயமாக உணவருந்த செய்தான்.

“மஞ்சு இதையே சாக்கு வச்சுக் காலேஜ் கட் அடிக்கலாம்ன்னு பார்க்கிறியா? முதல்ல காலேஜுக்கு கிளம்பும் வழியைப் பார். ஓடு... ஓடு” அவனின் பேச்சில் மஞ்சரிக்கு லேசாகச் சிரிப்பு வந்தது. அவள் கல்லூரி கிளம்புவதற்காக எழுந்து உள்ளே சென்றாள்.

“அத்தே, மாமா நாளையிலிருந்து நீங்களும் வேலைக்குப் போகணும்... இப்படி உட்கார்ந்திருந்தா வேலைக்காகாது”

“ரிஷி... இந்த மாதிரி சமயத்துல நீ இங்கே வந்தது ரொம்ப ஆறுதலா இருக்குப்பா” சுமதியின் குரல் தழுதழுத்தது.

“அத்தே... உங்களுக்கு ஒரு கஷ்டம்ன்னா அது எனக்குச் சேர்த்து தான். நீங்க கவலைப்படாதீங்க. உங்க கூட மயிலை சேர்த்து வைக்க வேண்டியது என் பொறுப்பு” அவன் அவருக்கு ஆதரவாய் பேச... அதில் பெரியவர்கள் இருவரின் மனமும் மலர்ந்தது.

“அம்மா, அப்பா, மாமா பை...” அதற்குள் அங்கு வந்த மஞ்சரி கல்லூரிக்கு செல்வதற்காக விடை பெற அவர்களின் கவனம் அவள் மீது சென்றது. அவளுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு வந்த ரிஷி இருவரிடமும்,

“நீங்க போய் ரெஸ்ட் எடுங்க” அவர்களை ஓய்வெடுக்க அனுப்பி வைத்தவன் ஹாலில் யோசனையுடன் அமர்ந்தான்.

சிறு வயது முதல் மயூரி உனக்குத் தான் என்று சொல்லி வளர்த்ததாலோ என்னவோ அவனுக்கு அவளை ரொம்பப் பிடிக்கும். அவளின் அழகு, அமைதி, பயந்த சுபாவம் எல்லாமே அவனுக்குப் பிடிக்கும். அவளை அவன் செல்லமாய் ‘மயிலு’ என்று தான் அழைப்பான். மயிலை போல அழகுடையவளுக்கு அந்தப் பெயர் பொருத்தம் தானே.

திடீரென்று சுமதி அவர்களைப் பெண் கேட்டு வர சொன்னதும் அவன் சந்தோசத்தில் திக்குமுக்காடி விட்டான். மயூரிக்கும் அவனுக்கும் நடக்கப் போகும் நிச்சயத்தை அவன் வெகு ஆசையாய் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த நேரத்தில் இப்படி ஒரு அசம்பாவிதம் நடந்து இரு குடும்பத்துக்கும் இடையே தீராத பகையை உண்டு பண்ணி விட்டது.

‘மயிலு... நீயா ஒருத்தனை காதலிச்ச? என்னால் இன்னமும் நம்ப முடியலையே? குனிந்த தலைநிமிராமல் இருக்கும் நீயா இப்படிச் செஞ்சது? வெளி ஆண்களிடத்தில் பேச, பழகப் பயப்படும் நீ எப்படி ஒரு கொலைக்காரனை லவ் பண்ணின? ம்ஹூம்... என் மயிலு அப்படிப்பட்டவள் கிடையாது. அவன் தான் உன்னை மிரட்டி கூட்டிட்டு போயிருக்கணும். பாவம் அங்கே நீ என்ன மாதிரி கஷ்டப்படுறியோ?’ அவளுக்காய்த் தவித்தது அவனின் காதல் உள்ளம்.

‘வர்றேன் மயிலு உன்னைத் தேடி நானே வர்றேன்... நீ உலகத்துல எந்த மூலையில் இருந்தாலும் உன்னைத் தேடி கண்டுபிடிச்சு அந்த நரகத்தில் இருந்து உன்னை மீட்டு எடுக்கிறேன். உன் குடும்பத்தோடு உன்னைச் சேர்த்து வைக்கிறேன் மயிலு’ அவன் மனசுக்குள் சொல்லி கொண்டிருக்கும் போதே... ‘குடும்பத்துக்காக மட்டும் தானா? உனக்காக இல்லையா?’ அவனின் மனசாட்சி கேலியாய் கேட்டது.

‘எனக்காகவும் தான்... அவனிடமிருந்து அவளைக் காப்பாத்தி அவளை நான் கல்யாணம் செஞ்சு அவளை நல்லபடியா வச்சுக்கணும். இப்போ அவன் கிட்டே என்ன பாடுபடுறாளோ? அவளோட கஷ்டத்தை எல்லாம் துடைச்சு வாழ்க்கையில் வசந்தம்ன்னா என்னன்னு அவளுக்கு நான் காண்பிக்க வேணாமா? அது என்னால் மட்டும் தான் முடியும்’ நினைத்தவன் அவள் எங்கே சென்றிருப்பாள் என்பதைப் பற்றி நூலளவாவது தடயம் கிடைக்குமா? என்று அவள் அறையில் தேடி பார்த்தான். நேரம் தான் சென்றது

ஒழிய எந்தவொரு தடயமும் கிடைக்கவில்லை. அவன் அப்படியே சோர்ந்து போய் அமர்ந்துவிட்டான்.

கல்லூரி முடிந்து வீட்டிற்குக் கிளம்பி கொண்டிருந்த மஞ்சரியின் அலைப்பேசி அழைத்தது. ஏதோ தெரியாத எண்ணில் இருந்து அழைப்பு வந்திருக்கவும் யோசனையுடன் அதை எடுத்துக் காதில் வைத்தாள்.

“ஹலோ...” அவளின் குரலுக்கு அந்தப் பக்கம் இருந்து எந்தவித பிரதிபலிப்பும் இல்லை. எரிச்சலுடன் வைக்கப் போனவள் மனதில் ஒருவேளை மயூரியாக இருக்குமோ என்ற எண்ணம் தோன்ற, “ஹலோ...” என்றாள் ஆர்வத்துடன். அப்போதும் அந்தப் பக்கம் பதில்லை.

“ஹலோ யார் பேசுறது?” பொறுமையின்றி மஞ்சரி கத்திவிட்டாள். வருண் தான் அவளுக்கு அழைத்து விட்டு விளையாட்டு காட்டி கொண்டிருந்தான். வெகுநாட்கள் கழித்துக் கேட்கும் அவளின் குரலில் தன்னை மறந்து அவன் நின்றிருந்தான்.

‘யாரது ஃபோன் பண்ணிட்டுப் பேசாமல் இருப்பது?’ மனதுக்குள் கோபமாய் நினைத்தவள் அலைப்பேசியை அணைக்க நினைத்தாள். அவளின் நினைப்பு அவனுக்கு டெலிபதி மூலம் தெரிந்துவிட்டதோ என்னமோ வருண் தன் திருவாய்த் திறந்தான்.

“இது மிஸ். மஞ்சரி தானே?” அவன் வேண்டுமென்றே தெரியாதவன் போல் அவளைக் கேட்க,

‘இப்போ இந்த ஆளு கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லியே ஆகுணுமா?’ என்று அவள் யோசிக்கும் போதே,

“நீங்க பதில் பேசாமல் இருக்கும் போதே தெரியுது... நீங்க தான் மஞ்சரின்னு” கிண்டல் குரலில் கூறியவன், “நான் வருண் பேசறேன்...”

அவன் பேரை கேட்டதும் மகிழ்ந்தவள் பேச வாய் திறக்கும் முன், “உங்க அக்கா பத்தி பேசணும்” என்றவன் ஒரு காபி ஷாப்பின் பேரை சொல்லி அவளை வர சொல்ல... அவன்

குரலில் தெரிந்த அந்நியத் தன்மையில் அவள் மனம் சுருண்டாலும், மயூரியை பற்றி அவன் பேசியது கேட்டு அவள் மூளை சுறுசுறுப்பானது.

“மயூக்கு என்ன?” அவளின் குரல் பதற்றத்துடன் ஒலித்தது.

“அதை நேரில் சொல்றேன்... இன்னும் அரை மணி நேரத்தில் நீங்க வரணும். இல்ல நான் பாட்டுக்கு கிளம்பி போயிட்டே இருப்பேன்” என்றவன் அவள் மேலே பேசுவதற்கு இடம் கொடுக்காமல் அலைப்பேசியை அணைத்து விட... அவளுக்கு அப்படியே பற்றிக் கொண்டு வந்தது. ஆனாலும் விசயம் மயூரியை பற்றியது என்பதால் தன் ஆத்திரத்தை அடக்கி கொண்டு அவன் வர சொன்ன காபி ஷாப்புக்கு கிளம்பி சென்றாள்.

வருண் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே அங்குச் சென்றமர்ந்த மஞ்சரியின் கண்கள் அவனைத் தேடி நாலாப்புறமும் சுழன்றது. அதை ஒளிந்து நின்று பார்த்துக் கொண்டிருந்த வருண் சிரித்தபடி அவளின் நடவடிக்கையை ரசித்துக் கொண்டிருந்தான். ஜீன்ஸ், குர்தியில் மாடர்ன் தேவதையாய் இருந்தவளின் அழகில் சொக்கி போய் அவன் நின்றிருந்தான். அவன் வேண்டுமென்றே தான் சொன்ன நேரம் கடந்து பத்து நிமிடங்கள் சென்ற பின்னரே அவள் முன் வந்து நின்றான்.

வெகுநாட்களுக்குப் பின் அவனைப் பார்த்ததில் அவள் மனம் சந்தோசத்தில் துள்ளினாலும் மயூரியின் நினைவு அந்தச் சந்தோசத்தைக் கட்டுப்படுத்த அவனைக் கேள்வியாய் ஏறிட்டாள்.

“நீங்க தான் மஞ்சரியா?” கேள்வி கேட்டவனை, ‘லூசாப்பா நீ...’ என்பது போல் அவள் பார்த்தாள்.

“ஹலோ மிஸ்... நீங்க தான் மஞ்சரியா?” அவன் விடாமல் மீண்டும் கேட்க...

“ஆமாம்...” பல்லை கடித்துக் கொண்டு வேறுவழியின்றி அவள் பதில் சொல்ல...

“உங்க அக்கா இதைக் கொடுக்கக் சொன்னாங்க...” என்றவன் அவளிடம் சிறிய கவரை கொடுத்துவிட்டு ஒன்றும் பேசாமல் திரும்பி செல்ல... அதை யோசனையுடன் திறந்து பார்த்தவள் அதிலிலிருந்த மயூரியின் நகைகளைக் கண்டு திகைத்தாள். பின் அவசரமாய் அதை மூடியவள் அவனின் பின்னே வேகமாய்ச் சென்று அவன் முன் நின்று இரு கை கொண்டு வழி மறித்தவள், “மயூவை பார்த்திங்களா? இப்போ அவ எங்கே இருக்கா? எப்படியிருக்கா?” படபடவெனக் கேள்விகள் கேட்க...

அவளின் கண்களைக் கூர்மையாய் பார்த்தவன் இரு தோள்களையும் அலட்சியமாய்க் குலுக்கி கொண்டு, “எனக்குத் தெரியாது” என்றபடி அவளை விலக்கி விட்டு செல்ல முயல... எங்கிருந்து தான் அவளுக்குத் தைரியம் வந்தோ அவனின் சட்டை காலரை எட்டி பிடித்தவள், “டேய்... ஒழுங்கு மரியாதையா சொல்ல போறியா இல்லையா? மயூ எங்கே இருக்கான்னு சொல்லு?” வெறிப்பிடித்தவள் போல் கத்தினாள்.

“ஹலோ மிஸ்... உங்களை யாருன்னே எனக்குத் தெரியாது? எதுக்கு இப்படி இன்டீசன்ட்டா நடந்துக்கிறீங்க? உங்க கிட்ட கொடுக்கச் சொன்னதை நான் கொடுத்துட்டேன். அதோட என் வேலை முடிஞ்சது. தேவையில்லாம சட்டையைப் பிடிக்கிற வேலையெல்லாம் வச்சுக்காதீங்க” அவளை அறியாதவனாய் காட்டி கொண்டவன் அவளின் கையை உதறினான்.

அவனின் வார்த்தையில் அவளின் மனம் அடிபட்டுப் போனது. அவனை விடுவித்தவள், “நான் யார்ன்னு உங்களுக்குத் தெரியாது?” கண்களில் நிராசையுடன் கேட்டவளை அப்படியே அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது அவனுக்கு. இருந்தாலும் அதை வெளிக்காட்டி கொள்ளாமல்,

“ம்ஹூம்...” உதட்டை பிதுக்கியவன் தன் சட்டை காலரை சரி செய்து கொண்டு அவளைச் சிறிதும் கண்டும்

கொள்ளாமல் அங்கிருந்து நகன்றான். அவனின் செய்கை கண்டு அவளின் கண்கள் கலங்கியது.

சிறிது தூரம் சென்றவன் திரும்பி அவளைப் பார்க்க... அவளோ எங்கோ வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள். அவளின் கலங்கிய கண்கள் எதையோ அவனுக்குப் பறைசாற்ற அவனின் உதட்டில் விசம புன்னகை பூத்தது.

****

அலுவலகத்தில் இருந்து வந்த ஆரன் வீட்டில் மயூரியை காணாது திகைத்தான். தன் கையிலிருந்த சாவியைக் கொண்டு கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். 'எங்கே போயிருப்பா?' அவன் மனதில் கேள்வி எழுந்தது. வருணின் மாமா வீட்டில் போய் விசாரிக்கலாம் என்று நினைத்தவன் குளித்து விட்டுப் போகலாம் என்றெண்ணி குளியலறைக்குச் சென்றான்.

"நான் சொன்னேன்ல்ல அம்மா... அவர் வந்திடுவார்ன்னு... பாருங்க இப்ப வந்திட்டார். என்ன சொல்ல போறாரோ?" வீட்டின் வெளியே ஆரனின் செருப்பைக் கண்டதும் மயூரி மைதிலியிடம் புலம்ப ஆரம்பித்தாள்.

"நான் வேண்ணா தம்பிட்ட சொல்லிட்டு போகட்டுமா மயூரி" அவர் கேட்க...

"இல்லைம்மா நான் சமாளிச்சுக்கிறேன்"

"அப்படின்னா சரி..." என்றவர், "முதல்ல ட்ரெஸ் மாத்திரு... ஈர உடையோட இருந்தா சளி பிடிக்கப் போகுது" மழையில் நனைந்த அவளின் உடையைப் பார்த்து அவர் சொல்ல...

"சரி..." என்று அவருக்குப் பதிளித்தவள் பயத்துடன் வீட்டிற்குள் நுழைந்தாள்.

அவன் குளிக்கும் சத்தம் கேட்டு அறைக்குள் நுழைந்தாள். அவன் வரும் வரை உடையைக் கூட மாற்றாமல் அங்கேயே நின்றிருந்தாள். குளித்து முடித்து வெளியில் வந்தவன் அவள் நின்றிருப்பதைக் கண்டு, "எங்கே பேபி போன? நான்

எப்படிப் பயந்து போயிட்டேன் தெரியுமா? வெளியில் போறதா இருந்தா எனக்கு ஃபோன் பண்ணி சொல்லியிருக்கலாமே" அவன் என்னமோ இயல்பாய் தான் அவளிடம் கேட்டான். அவளோ அவன் கோபப்பட்டதாய் நினைத்துக் கொண்டு,

"நீங்க வர்ற நேரம் வீட்டில் இருக்கணும்ன்னு நான் வரலன்னு எவ்வளவோ சொன்னேன் மைதிலியம்மா தான் கேட்கல. இங்கே இருக்கிற கோவிலுக்குத் தானேன்னு கூட்டிட்டு போய்ட்டாங்க" அவள் கண்களில் கண்ணீர் எட்டி பார்த்தது.

"ஹேய் பேபி... என்னதிது?" ஒரே எட்டில் அவளருகே வந்தவன் அவளின் கண்ணீரை துடைத்து விட...

"உங்களுக்கு என் மேல் கோபமில்லையா?" முகம் சுருங்க, உதடுகள் துடிக்க அவள் கேட்க...

"உன் மேலே எனக்குக் கோபம் வருமா பேபி?" என்றவன் கண்ணில் அவளின் துடிக்கும் இதழ்கள் பட்டு அவன் மனதில் மோகத் தீயை பற்ற வைத்தது. மெதுவே அவள் முகம் நோக்கி குனிந்தவன் நடுங்கும் அவளின் இதழின் நடுக்கத்தைக் குறைக்க எண்ணி தன் இதழால் ஆறுதலாய் அவளின் இதழை அணைத்தான்.

ஏற்கெனவே மழையில் நனைந்திருந்ததால் ஏற்பட்ட குளிரில் உடல் நடுங்கி கொண்டிருந்தவள் அவனின் இதழ் முற்றுகையில் இன்னமும் நடுங்கி கதகதப்பிற்காக அப்படியே அவனிடம் ஒடுங்கினாள். அவளின் செய்கையைச் சம்மதமாய் எடுத்துக் கொண்டு அவன் மேலும் மேலும் அவளுள் புதைய... அவளும் அவனின் செயலுக்கு வளைந்து கொடுத்து அவனின் தேகத்தில் காதல் தீமூட்டினாள்.

அவன் அவளை அப்படியே அள்ளியெடுத்துப் படுக்கையில் கிடத்த... அவளோ பதறி போய் எழுந்தவள், "அய்யோ பெட் எல்லாம் ஈரமாகிடும்" தன் நனைந்த உடையைப் பரிதாபமாய்ப் பார்த்தாள்.

“அதெல்லாம் நனையாது... நீ வா பேபி” என்றவனின் கைகள் அவளின் ஆடையை அகற்றும் பணியில் தீவிரமாய் ஈடுபட, ‘இதற்குத் தான் அப்படிச் சொன்னாரோ?’ வெட்கத்தில் அவள் விழிகளை மூடி கொண்டாள்.

“பேபி...” தாபத்துடன் ஒலித்த அவனின் குரலில் மெதுவே தன் சிப்பி இமைகளை மலர்த்தியவள், என்னவென்பது போல் அவனைப் பார்க்க...

“உனக்குச் சம்மதமா?” என்று கேட்க...

‘இருவர் இருக்கும் நிலைமையைக் கண்டும் கேட்கிறார் பாரு இப்படியொரு கேள்வி?’ அவள் கன்னம் ரெண்டும் சிவப்பேறியது.

“நமக்குள் மனசு ஒத்து போகலன்னு இன்னமும் நீ நினைச்சிட்டிருக்க... அது இன்னமும் அப்படியே தான் இருக்கு. அப்படி இருக்கும் போது இது தேவையா?” அவளின் அங்கங்களை ரசனையுடன் பார்த்தபடி கண்சிமிட்டி சொன்னவனைக் கண்டு அவளுக்கு வெட்கம் பிடுங்கி தின்றது.

“ப்ளீஸ் ஆரு...” அவன் கழுத்தில் தன் கைகளை மாலையாகப் போட்டு அவன் முகத்தைத் தன் முகம் அருகில் அவள் வேகமாய் இழுக்க,

“இவ்வளவு ஆசையை மனசுல வச்சிட்டு ஏண்டி இவ்வளவு நாள் தள்ளியிருந்த?” மையலுடன் கேட்டபடி அவள் கழுத்தில் அவன் முகம் புதைக்க...

“சாரி...” அவன் காதுக்கருகில் அவள் முணுமுணுக்க...

“சாரி இப்படிச் சொல்ல கூடாதே” என்றவன் அவளுக்குச் சொல்லும் விதத்தைப் பயிற்றுவிக்க... அவளோ அதைச் செய்ய மறுக்க... அந்த விடா கண்டானோ சொன்னதை நிறைவேற்றி விட்டு தான் மறுவேலை பார்த்தான்.

“ஹப்பா முத்தமே இப்படித் தலை சுத்த வைக்குதுன்னா... மத்தது எல்லாம் எப்படி இருக்கும்?” தாபமாய்ச்

சொன்னவனின் முகம் பார்க்க முடியாமல் அவன் நெஞ்சில் அவள் முகம் புதைக்க... அதில் மனம் மயங்கியவன் அவளை அப்படியே அள்ளி அணைத்து தாம்பத்தியத்தின் அடுத்தக் கட்டத்திற்கு அவளை அழைத்துச் சென்றான். இதுநாள் வரை அவர்களிடம் நிலவி வந்த மனகசப்பு எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டிருந்தது.

“பூங்காற்றும் போர்வை கேட்கும் நேரம் நேரம்
தீயாய் மாறும் தேகம் தேகம்
உன் கைகள் என்னைத் தொட்டு போடும் கோலம்
வாழ்வின் எல்லை தேடும் தேடும்”

****

“ப்ளீஸ் ஆரு... சமையல் வேலையெல்லாம் யாரு செய்வா? நீங்க பண்றது கொஞ்சமும் நல்லாயில்ல”
சிணுங்கியவளை இரு கைகளில் தூக்கியவன்,

“நீ பண்றதும் கொஞ்சமும் நல்லாயில்ல” அவளைப் போல் சொல்லி காட்டியவன் அவளைத் தூக்கி கொண்டு அறைக்குச் சென்றான்.

“இப்போ சாப்பாடா முக்கியம்? மனுசன் அவஸ்தையைக் கொஞ்சமும் புரிஞ்சிக்க மாட்டியா?” வார்த்தை தான் எரிச்சலுடன் பேசுவது போலிருந்தது. ஆனால் அவன் முகம் காதலாய் அவள் பார்த்திருந்தது.

“அப்போ எது முக்கியமாம்?” தெரியாதவள் போல் கேட்டவளின் காதில் அவன் தனக்கு எது முக்கியம் என்று கூற...

“ச்சீ... நீங்க ரொம்ப மோசப்பா...” என்று அவள் நாணினாலும் அவன் கேட்டதை விருப்பத்துடன் கொடுக்கத் தான் செய்தாள். அதில் அவனோ கள் உண்ட வண்டாய் அவளுள் மூழ்கி போனான்.

“கல்யாண வாழ்க்கை இவ்வளவு சந்தோசமா இருக்கும்ன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கல பேபி.

எல்லாத்துக்கும் உனக்குத் தான் நான் தேங்க்ஸ் சொல்லணும்” அவனின் குரல் ஆத்மார்த்தமாய் ஒலித்தது.

“நானும் தான் ஆரு...” என்றவள் நியாபகம் வந்தவளாய், “ஆரு...” என்று அவனை அழைக்க...

“என்னடா...” அவள் கன்னத்தில் தன் விரலால் கோலம் போட்டுக் கொண்டே அவன் கேட்க,

“தேங்க்ஸ் இப்படிச் சொல்ல கூடாதே...” அவனைப் போல் கண் சிமிட்டி, உதட்டை நாவால் ஈரப்படுத்திக் கொண்டே அவள் சொல்ல...

“ஹேய் பேபி...” அவளின் செய்கையில் ஈர்க்கப்பட்டு முற்றிலும் தன் வசம் இழந்தவன் ஆக்ரோஷமாய் அவளின் இதழில் முற்றுகையிட்டான். அவனின் இடைவிடாத முற்றுகையில் அவள் தான் சோர்ந்து போனாள்.

“ஆரு...” அவள் மெதுவே அவனை அழைக்க... அவள் அள்ளி அளித்த இன்பத்தை அவன் கண் மூடி சுகமாய் நினைத்து கொண்டிருந்தவன், “சொல்லு பேபி...”

“நான் என் அப்பா கிட்ட பேசவா?” அவளின் வார்த்தையில் அவனின் இன்ப கனவுகள் பட்டென்று கலைந்தது.

“எதுக்கு?” கோபமாய் அவனின் புருவங்கள் நெறிந்தது.

“எதுக்குன்னு கேட்டா நான் என்னன்னு சொல்வேன்?” அவள் குரல் பரிதாபமாய் ஒலித்தது. அதற்கு அவன் பதில் பேசாமல் மௌனம் காத்தான்.

“ஏன் ஆரு... அவங்க கூடப் பேச வேணாம்ன்னு சொல்றீங்க?” அவளை ஆழ்ந்து ஒரு முறை பார்த்தவன்,

“அன்னைக்கு மாதிரி உங்க அப்பா தாலியை கழட்டிட்டு வான்னு கூப்பிட்டா நீ போயிடுவியா பேபி?” அவன் தவிப்பை அடக்கி கொண்டு அவளைப் பார்த்து கேட்டான்.

“என்ன ஆரு... நான் உங்களை விட்டுட்டு போயிடுவேனா? எப்படி நீங்க அப்படிச் சொல்லலாம்? செத்தா கூட உங்க

மடியில் தான் சாகணும்ன்னு நினைக்கிறவ நான்... அப்படிப்பட்ட நான் உங்களை விட்டு பிரிஞ்சி போவதாவது. என் அப்பா என்ன... வேற யார் என்ன சொன்னாலும் நான் உங்களை விட்டு போக மாட்டேன்" என்றவள் அவன் நெஞ்சில் தலை வைத்து படுத்து கொண்டாள்.

அவள் பேசியது அவன் மனதை நெகிழ்த்த தான் செய்தது. ஆனாலும் அவன் அடி மனதில் ஏதோவொரு அச்சம் அவனை உறுத்திக் கொண்டிருந்தது. அது என்னவென்று தான் அவனுக்குப் புலப்படவில்லை.

"சரி பேபி... பேசு" அவன் சம்மதம் சொன்னதும்,

"தேங்க்ஸ் ஆரு..." அவன் முகம் முழுவதும் முத்தமிட்டு அவள் தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்க... அதில் அவன் மன உறுத்தல் மறைந்து அவளின் செயலை தனதாக்கி கொண்டான்.

****

"அப்பா..." தொலைப்பேசியில் மறுமுனையில் ஒலித்த மயூரியின் குரலை கேட்ட ராகவனால் அதை நம்ப முடியவில்லை.

"மயூ கண்ணா... நீயாடா" அவர் நம்ப முடியாமல் கேட்க... அவரின் வார்த்தையில் அங்கிருந்த ரிஷியின் கண்கள் பளிச்சிட்டது.

"ம்... நானே தான்ப்பா... என் மேல் இன்னமும் கோபம் இருக்காப்பா" அவள் கேட்கும் போது, ரிஷி அவரிடம் சைகையில் தன்மையாய் அவளிடம் பேச சொன்னான். அதைப் புரிந்து கொண்ட அவரும்,

"அப்பாக்கு உன் மேல் எதுக்குக் கோபம் வருது? அன்னைக்கு ஏதோ அதிர்ச்சியில் தெரியாம கோபப்பட்டுட்டேன் மயூ. இப்போ அப்பாவுக்கு உன் நியாபகமாகவே இருக்கும்மா"

“எனக்கும் தான்ப்பா... நீங்க நல்லாயிருக்கீங்களா? அம்மா, மஞ்சு எப்படி இருக்காங்க?”

“எல்லாரும் நல்லாயிருக்கோம்” என்றவரிடம் ரிஷி அலைப்பேசியைத் தன்னிடம் தருமாறு சொல்ல... “மயூ ரிஷி பேசணுமாம்... பேசுறியா?”

“அவர் கிட்டேயா? நான் எப்படிப்பா?” அவள் கேட்கும் போதே...

“எப்படின்னா வாயால் தான் மயிலு” மறுபக்கம் ரிஷியின் குரல் கேலியாய் ஒலித்தது. சிறிது நேரம் என்ன பேசுவது என்று தெரியாமல் அவள் மௌனம் காத்தாள்.

“சாரி மாமா...” தான் செய்த தவறுக்கு அவனிடம் மன்னிப்பு கேட்டாள்.

“நீ எதுக்கு மயிலு சாரியெல்லாம் கேட்கிற. சாரி கேட்கிற அளவுக்கு என்ன நடந்து போச்சு? நான் அதைப் பெரிசா எடுத்துக்கல. எல்லாம் சரி... நீ எப்படியிருக்க? மாப்பிள்ளை சந்தோசமா வச்சியிருக்காரா?” அவன் கேட்டதும் அவள் மனம் ஆரனிடம் சென்றது.

“மயிலு லைன்ல தான் இருக்கியா?” அவளிடமிருந்து பதில் வராததால் ரிஷி படபடத்தான்.

“இருக்கேன்... நான் சந்தோசமா தான் இருக்கேன்” நிமிட தாமதத்தில் வந்த அவளின் வார்த்தைகள் ரிஷியின் மனதில் பல சந்தேகங்களை எழுப்பியது.

“சந்தோசமா இருந்தா சரி...” என்றவன், “இப்போ நீ எங்கே இருக்க?”

ஆரனிடம் கேட்காமல் அவனிடம் எப்படிச் சொல்வது என்று விழித்த மயூரி பேச்சை மாற்றிவிட்டாள். “மாமா, அத்தை எல்லாம் என் மேல கோபமா இருக்காங்களா?”

அவள் பேச்சை மாற்றியதை அவன் புரிந்து கொண்டாலும் தெரியாத மாதிரி அவளிடம் பேசினான். அவள் மேலும் தன் அன்னை, தங்கை மஞ்சரியிடம் பேசிவிட்டு வைத்தாள். ரிஷி

அவள் அழைத்திருந்த எண்ணை காலர் ஐடியில் பார்க்க... அது கொல்கத்தாவின் கோட் நம்பருடன் இருக்க... அவன் மகிழ்ச்சியில் மெல்லியதாய் விசிலடித்தான்.

அவள் தன் வீட்டிற்குப் பேசிய பின் அடுத்த மூன்றாம் நாள் காலையில் மயூரியின் வீட்டு அழைப்பு மணி ஒலித்தது. அவள் யாராயிருக்கும்? என்ற யோசனையுடன் கதவை திறக்க... கை நிறையச் சிவப்பு ரோஜா பூங்கொத்துடன் வசீகரப் புன்னகையுடன் ரிஷி அங்கே நின்றிருந்தான்.

ரிஷி தன் வசீகரப் புன்னகை கொஞ்சமும் வாடாமல் மயூரியை பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான். அவளோ எதிர்பாராமல் அவனை இங்கே கண்டதில் அதிர்ச்சியில் விழிகள் இரண்டும் சாசர் போல் அகல திறந்தபடி இருக்க... அவனை வரவேற்கும் மார்க்கம் கூட அற்றவளாகச் சிலையாய் நின்றிருந்தாள்.

“என்ன மயிலு... மாமனை இப்படியே வாசலில் வச்சே அனுப்பிடலாம்ன்னு ஐடியா பண்றியா? அப்படியொரு நினைப்பிருந்தா அதை இப்பவே மறந்திடு? இன்னைக்குப் பூரா நான் உன் கூடத் தான் இருக்கப் போறேன்” கலகலவெனப் பேசியவனின் பேச்சில் தன்னிலை அடைந்தவள்,

“அய்யோ அப்படியெல்லாம் இல்லை மாமா... உள்ளே வாங்க மாமா...” அவசரமாய் அவனை வரவேற்றபடி அவன் உள்ளே வருவதற்கு ஏதுவாக விலகி நின்றாள். ஆனாலும் அவளின் மனதுக்குள், ‘இவன் எங்கே இங்கே? எப்படி நான் இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்தான்?’ என்ற கேள்விகள் அடுக்கடுக்காய் எழுந்தது.

“என் அழகான மயிலின் கல்யாணத்துக்கு என்னோட வாழ்த்துக்கள்” என்றபடி தன் கையிலிருந்த பூங்கொத்தை ஆங்கில பாணியில் தலையைக் குனிந்து கொடுக்க அவள் சிரித்தபடி அதை வாங்கிக் கொண்டாள்.

அலுவலகத்திற்குக் கிளம்பி கொண்டிருந்த ஆரன் வீட்டின் அழைப்பு மணி சத்தத்தில் யாராக இருக்கும்? என்று யோசித்தபடி அறையிலிருந்து வெளியில் எட்டி பார்த்தான். மயூரிக்குச் சிவப்பு ரோஜாக்கள் கொடுக்கும் ரிஷியை கண்டதும் அவனுக்குக் கொலைவெறியே வந்துவிட்டது.

“யாருடா நீ? என் வீட்டுக்குள்ளே வந்து என் பொண்டாட்டிக்கு ரோஸ் கொடுக்க உனக்கு என்ன துணிச்சல் இருக்கணும்? அதுவும் ரெட் ரோஸா? மவனே என்ன தைரியம் உனக்கு?’ மனதுக்குள் அவனை வைதபடி வேகமாய் வெளியில்

வந்தான். அங்கே அவன் கண்ட காட்சியை அவனால் நம்ப முடியவில்லை. அவன் மனைவி மயூரி அதைச் சிரித்த முகத்துடன் வாங்கியதை கண்டு அவனுக்கு ஆத்திரம் தலைக்கேறியது.

ஆரனின் வரவை உணர்ந்து திரும்பி பார்த்த மயூரி அவனை வரவேற்கும் விதமாய் அவனைப் பார்த்து புன்னகைத்தாள். அதில் அவன் கோபம் பன்மடங்கு அதிகரித்தது.

“மயிலு... சார் தான் உன் கணவரா?” ரிஷி அவளைப் பார்த்து கேட்க...

“ம்... அவர் பெயர் ஆரன்...” என்றவள் ரிஷியை சங்கடத்துடன் பார்த்தாள். அவனுடனான நிச்சயத்தைப் புறக்கணித்து விட்டு ஆரனை அவள் திருமணம் செய்தது அவள் மனதில் ஒருவித குற்றவுணர்ச்சியை எழுப்பியது.

அவள் முகத்தில் தெரிந்த உணர்வில் ஆரனின் மனம் அடிபட்டுப் போனது. ‘யார் இவன்? என்னைப் பத்தி எதுக்காகக் கேட்கிறான்? அதுக்கு எதுக்கு இவள் இப்படி முகம் சுருங்குகிறாள்? என்னை அவள் கணவன்னு சொல்ல அவளுக்குப் பிடிக்கலையா? இல்லை எனக்கு அந்தத் தகுதியில்லையா?’ மிகச் சரியாய் அவளை மனதை தவறாய் கணித்தான்.

நேற்று வரை அவள் காதலோடு அவனுடன் இருந்தது அவனுக்கு நியாபகம் வரவில்லை. இவ்வளவு ஏன் இன்று காலையில் கூட அவனின் விருப்பத்திற்கு இணைந்து இசைந்து கொடுத்த அவளின் காதல் அவனுக்குத் துளியும் நியாபகம் வரவில்லை. அவன் தன் போக்கில் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

“சாரி மாமா... அப்பா ஏத்துக்காததால அவசரமாய்க் கல்யாணம் செஞ்சிக்க வேண்டியதாய் போச்சு” ரிஷியிடம் அவள் மனதார மன்னிப்பு கேட்டு கொண்டாள்.

‘என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுக்கு இவனிடம் எதுக்கு இவள் மன்னிப்பு கேட்கிறா?’ என்று யோசித்தவன் காதில் அவளின் ‘மாமா’ என்றழைப்பு மிகத் தாமதமாய் விழுந்தது.

‘அப்படின்னா... இவன்...?’ அவன் யோசிக்கும் போதே...

“ஆரு... இவங்க தான் என்னோட ரிஷி மாமா” மயூரி ரிஷியை அவனுக்கு அறிமுகப்படுத்த... அவனுக்கு ரிஷி யாரென்று நியாபகம் வந்துவிட்டது.

‘இவனைக் கல்யாணம் பண்ணிக்கத் தானே... என்னை நீ அவாய்ட் பண்ணின? நான் மட்டும் உனக்குக் கட்டாயத் தாலி கட்டலன்னா இப்போ நீ இவன் மனைவி ஆகிருப்ப... எப்படி டி என்னைக் காதலிச்சிட்டு அவனைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்ச...?’ அவனாக மனதில் நினைத்துக் கொண்டு வெளியில் அவளைப் பார்த்து முறைத்தான்.

அவனின் பார்வையில் அவள் திடுக்கிட்டு தான் போனாள். இந்த மூன்று நாட்களாய் அவனின் காதலில் திளைத்திருந்த அவளுக்கு அவனின் இந்தக் கோபப் பார்வை குளிரை ஏற்படுத்தியது. ஆரனின் கோபப் பார்வையும், அதற்கு மயூரியின் பயமும் ரிஷியின் கண்ணில் இருந்து தப்பவில்லை.

பூ போன்ற பெண்ணை இப்படிப் பயமுறுத்துகிறானே என்று ஆரன் மேல் அவனுக்குக் கோபம் கோபமாய் வந்தது. அவனின் சட்டையைப் பிடித்துக் கேள்வி கேட்க வேண்டும் என்று அவனுக்கு ஆத்திரம் எழுந்தது. காரியம் பெரியதா? இல்லை வீரியம் பெரியதா? என்று நினைத்தவன் மனது காரியம் பெரிது என்றெண்ணி அதன் பக்கம் சாய... தன் ஆத்திரத்தை மூட்டை கட்டி பரணில் தூக்கி போட்டவன், ஆரனை பார்த்து...

“ஹலோ ஆரன்...” அவனிடம் கை குலுக்க எண்ணி கை நீட்ட... அதை வெறுப்பாய் பார்த்த ஆரன் தன் கையைப் பேண்ட் பாக்கெட்டில் விட்டுக் கொண்டு ஸ்டைலாக நின்றவன் அவனை அலட்சியமாய்ப் பார்த்தான். அடிப்படை

நாகரீகம் கூட இல்லாமல் நடந்து கொள்ளும் கணவனின் செயல் அவளின் மனதை வெகுவாய்ப் பாதித்தது.

அதை ரிஷி கண்டு கொள்ளாமல், “உட்காருங்க ஆரன்... ரொம்ப நேரம் நிற்கிறது எனக்குக் கால் வலிக்குது” அவனிடம் கூறிக் கொண்டே அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தவன், மயூரியிடம்,

“மயிலு... மாமாவுக்குக் காபி கொடுக்கணும்ன்னு ஐடியா இருக்கா? இல்லையா?” இயல்பாய் கேட்பது போல் கேட்டவன் ஆரனை ஆழ்ந்து பார்த்தான். ‘நீ எப்படி வேணும்ன்னாலும் நடந்து கொள்... எனக்கென்ன வந்தது? எனக்கு என் அத்தை மகள்... என்னோட மயிலு தான் முக்கியம்’ என்பது போலிருந்தது அவனின் செயல்.

‘என் வீட்டில் உட்கார்ந்துட்டு என்னையே உபசரிக்கிறாயடா?’ காட்டமாய் நினைத்த ஆரன்... வேண்டுமென்றே கால் மேல் கால் போட்டு அமர்ந்து கொண்டு ரிஷியை எடை போடுவது போல் பார்த்தான். சினிமாவில் வரும் கதாநாயகனை போல் அழகாய் அம்சமாய் இருந்த ரிஷியின் அழகு ஆரனின் மனதில் தாழ்வு மனப்பான்மையைக் கிளப்பியது.

‘ஹீரோ மாதிரி இருக்கான்ல அதான்... இவ அவனைக் கல்யாணம் பண்ணிக்கச் சரின்னு சொல்லியிருக்கா... ஹீரோ மாதிரி இவனிருக்க என்னை மாதிரி காட்டனை பார்த்து அவளுக்குக் காதல் வருமா என்ன?’ ஆரனின் மனது தன்னவளை சந்தேகப்பட்டது.

‘ரிஷி அவளின் மாமன் மகன்... அவனைச் சிறு வயது முதல் தெரியும்... அவள் நினைத்திருந்தால் அவனைக் காதலித்திருக்கலாம்... அதை விட்டு விட்டு அவள் ஏன் தன்னைக் காதலித்தாள்?’ என்பதை எல்லாம் அவன் அந்த நொடி ஏனோ மறந்து போனான். ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பதை இவனைப் பார்த்து தான் சொல்லியிருப்பார்களோ?

‘பார்க்க பக்கா வில்லன் மாதிரி இருக்கான்... இவன் கிட்ட அப்படி என்ன இருக்குன்னு என் அத்தை பொண்ணு

காதலிச்சா? ஒருவேளை அவளை மிரட்டி கல்யாணம் பண்ணிய மாதிரி மிரட்டி காதலிக்க வச்சிருப்பானோ? இருக்கும் இருக்கும்... பார்வையாலேயே அவளை என்னமாய்ப் பயமுறுத்துறான்... முதல்ல இவன் கிட்டே இருந்து மயிலை காப்பாத்தியாகணும்' நினைத்த ரிஷியின் மனது அதற்கான வழியை யோசித்தது.

அதற்குள் மயூரி காபி கொண்டு வர, இருவரும் தத்தம் நினைவிலிருந்து மீண்டனர். அவள் கையிலிருந்த காபியை ஆர்வத்துடன் வாங்கிய ரிஷி, அதை ஒரு வாய் பருகியவன் கண்ணை மூடி ரசித்தபடி, "வாவ்... காபின்னா என் அத்தை பொண்ணு மயிலு போடுற காபி தான் பெஸ்ட்... பேஷ் பேஷ் ரொம்ப நன்னாயிருக்கு" அவளைச் சிலாகித்தபடி அவன் கூற... ஆரன் தன் பொறுமையைக் கைவிட்டவனாய்,

"எனக்கு ஆபிசுக்கு லேட்டாகிருச்சு..." என்றபடி எழுந்தவன் அறைக்குள் செல்ல...

"சாப்பிட்டு போங்க ஆரு..." மயூரி அவன் பின்னே சென்றாள். தன் பின்னே அவள் வந்தது அவன் மனதுக்குச் சற்று இதமாய் இருந்தது. அறைக்குள் நுழைந்தவன் தன் பின்னேயே உள்ளே வந்த மனைவியைத் திரும்பி பார்த்தான்.

"நாம இங்கே இருக்கிறது இவனுக்கு எப்படித் தெரியும்? நீ ஏதும் உங்க வீட்டுல சொன்னியா?" அவளைச் சந்தேகமாய்ப் பார்க்க...

"இல்லைங்க உங்க கிட்ட கேட்காம சொல்ல கூடாதுன்னு நான் எதுவும் சொல்லல. ஆனா அன்னைக்கு நான் ஃபோன் பண்ணினப்போ மாமாவும் பேசினாங்க. அவங்க கிட்டேயும் நான் எதுவும் சொல்லல. எப்படிக் கண்டு பிடிச்சாங்கன்னு எனக்குத் தெரியல?" கையைப் பிசைந்து கொண்டு அவன் முகத்தைப் பயத்துடன் பார்த்தபடி சொன்னவளை யோசனையாய் பார்த்தானே ஒழிய பதில் பேசவில்லை.

அலைப்பேசியை எடுத்துச் சட்டை பையில் போட்டவன், மடிகணினி பையைத் தன் தோளில் மாட்டி கொண்டு

அறையை விட்டு வெளியில் வர... அவனின் அமைதியில் அவள் தான் மனம் கலங்கி போனாள். அவன் பின்னேயே வந்தவள்,

“சாப்பிட வாங்க...” என்க, அதற்கும் அவன் பதில் பேசாமல் உணவு மேஜையை நோக்கி நடந்தான். அவன் உணவு அருந்த செல்வதைக் கண்டவளுக்கு நிம்மதி எழுந்தது. அப்போது தான் ஹாலில் தனியே அமர்ந்திருந்த ரிஷியை கவனித்தாள்.

“மாமா நீங்களும் சாப்பிட வாங்களேன்...”

“நீ எப்போடா கூப்பிடுவேன்னு இருந்தேன். பயங்கரப் பசி...” அவள் அழைப்பதற்காகக் காத்திருந்தவன் போல எழுந்தவன் அவள் பின்னே சென்றான்.

கணவனுக்கும், ரிஷிக்கும் தட்டை எடுத்து வைத்தவள் முதலில் ரிஷிக்கு பரிமாற... அதைக் கண்டு ஆரனுக்கு எரிச்சலாக வந்தது.

‘என்னை விட அவளுக்கு அவன் தான் உசத்தியா போய்ட்டானா? எப்பவும் எனக்குத் தானே முதலில் பரிமாறுவா? இன்னைக்கு என்ன வந்தது? பரிமாறுவது மட்டுமா ஊட்டுவதும் அவள் வேலை தானே... இன்று அதையும் மறந்துட்டாளே...’ வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தாளிகளை முதலில் கவனிப்பது தான் அந்த வீட்டினரின் தலையாயக் கடமை. அதைத் தான் அவள் செய்து கொண்டிருந்தாள். கோபத்திலிருந்த அவனுக்கு அதைக் கூடப் புரிந்து கொள்ள முடியவில்லை.

தனது தட்டில் பூரியை எடுத்து கோபமாய் வைத்தவன் ஏதோ கசப்பான மருந்தை உண்பது போல் முகத்தை அஷ்டகோணலாய் வைத்துக் கொண்டு உண்ண... அதை மயூரி கவனித்தாளோ இல்லையோ ரிஷி கவனித்து விட்டான்.

‘நான் இங்கே சாப்பிடுவது இவனுக்குப் பிடிக்கவில்லையாக்கும். இது அவனுக்கு மட்டும் தானா

வீடு? இது என் அத்தை மகளின் வீடு... நான் சாப்பிடுவேன்... தங்குவேன்... இதைக் கேட்க நீ யாரடா?' ஆரனை மேலும் கீழும் அலட்சியமாய்ப் பார்த்துக் கொண்டு ரிஷி உண்டான்.

இருவருக்கும் இடையில் நடக்கும் அக்க போரை பாவம் மயூரி கவனிக்கவில்லை. அவள் பரிமாறுவதில் கவனமாய் இருந்தாள்.

"அப்புறம் மாமா... அப்பா, அம்மா, மஞ்சு எல்லாரும் நல்லாயிருக்காங்க?" கேட்கும் போதே அவள் குரல் கம்மியது.

"எப்படி நல்லாயிருப்பாங்க? சாதா சர்வ காலமும் உன்னையே நினைச்சிட்டு வேலைக்குப் போகாம, சாப்பிடாம ரொம்பக் கஷ்டப்பட்டுட்டு இருக்காங்க..." அவன் குரலில் அவள் மீதான குற்றச்சாற்றுத் தெரிந்தது.

"எல்லாத்துக்கும் நான் தான் காரணம்..." என்றவளின் விழிகளில் கண்ணீர் வழிந்தது. தலையில் கை வைத்தபடி அப்படியே அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்து விட்டாள். அவளின் கண்ணீர் ஆரனின் மனதை உறுத்தியது.

'அப்படின்னா என்னோட இவ சந்தோசமா இல்லையா? என் கூட இருப்பது இவளுக்கு என்ன அப்படி வருத்தமாவா இருக்கு?' அவன் குழம்பிய மனம் கண்டபடி யோசித்தது.

"மயிலு... எதுக்கு இப்போ அழற...? நடந்தது நடந்து போச்சு... இனிமே யோசிச்சு எந்தப் பலனும் இல்லை. மேற்கொண்டு ஆக வேண்டியதை பாரு"

ரிஷியின் 'மயிலு' என்றழைப்பை அப்போது தான் கவனித்த ஆரன் ஆத்திரத்தின் உச்சிக்கே போய்விட்டான். 'மயிலாம்ல மயிலு... ஏண்டா எனக்கும் அவளுக்கும் நடந்த கல்யாணத்தை ஏதோ துக்கம் விசாரிக்கிறது போல விசாரிக்கிற... அறிவுக் கெட்டவனே...' அதற்கு மேல் தாங்க முடியாமல் எழுந்தவன் கையைக் கழுவி கொண்டு வாயிலை நோக்கி நடக்க... அவன் புறப்படுவதைக் கூட

உணராமல் மயூரி தன் குடும்பத்தினரின் நினைவில் மூழ்கியிருந்தாள்.

ஆரன் ஷூவை மாட்டி கொண்டே அவள் வரவிற்காகக் காத்திருக்க... அவளோ அவனை வழியனுப்ப வருவதற்கான வழியைக் காணவில்லை. அவனுக்கு எழுந்த ஆத்திரத்தில் வாயிற்கதவை பட்டென்று அறைந்து சாத்தி விட்டு செல்ல... அதில் உணர்வு பெற்ற மயூரி,

“அவங்க கிளம்பிட்டாங்களா?” என்று பதறியவாறு வாசலுக்குச் சென்றவள் வெளியில் எட்டி பார்க்க... அங்கே ஆரன் மின்தூக்கியின் உள்ளே சென்று கொண்டிருப்பதைக் கண்டாள். எப்போதும் அவன் அலுவலகம் கிளம்பும் முன் அவளுக்குக் கொடுத்துச் செல்லும் அழுத்தமான இதழ் முத்தத்திற்கு அவள் மனம் ஏங்கியது. எப்போதும் அவன் கண்ணிலிருந்து மறையும் வரை ஒரு தாயின் வாஞ்சனையுடன் அவனுக்குக் கையாட்டி விடை கொடுக்கும் அவள் இன்று அது செய்யாததில் மனதில் ஏதோ ஒரு வெற்றிடம் தோன்றி அவளை அழுத்துவதை உணர்ந்தாள்.

“மயிலு...” ரிஷியின் குரலில் உள்ளே வந்தவள், “என்ன மாமா...?”

“கொஞ்சம் தண்ணி கொடும்மா...” காலியான தம்பளரை அவளிடம் நீட்ட...

“சாரி மாமா...” என்றவள் உள்ளே செல்ல... ரிஷி மனம் யோசனையில் ஆழ்ந்தது.

‘மயிலு என்னமோ அவனைப் பார்த்து பார்த்து நல்லா தான் கவனிக்கிறா... ஆனா அவன் ஏன் எப்போதும் இஞ்சி தின்ன குரங்கு மாதிரியே உம்ன்னு இருக்கான். அதிலும் டிரில் மாஸ்டர் போல எப்போதுமே விறைப்பா இருக்கான். இவங்களைப் பார்த்தா புதுசா கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க மாதிரியில்லையே’ தான் தான் அவனின் மன மாற்றத்திற்குக் காரணம் என்பதை

அறியாமல் ரிஷி அவன் பாட்டுக்கு யோசித்துக் கொண்டிருந்தான்.

“மாமா... இந்தாங்க...” மயூரியின் அழைப்பில் அவள் புறம் திரும்பியவன் தண்ணீர் அடங்கிய தம்பளரை அவளிடமிருந்து வாங்கினான்.

“மாமா... நான் இங்கே இருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?” அவனிடம் ஒப்புக்காக அவள் வாய்க் கேட்டாலும் அவள் கண்களில் இருந்த ஏதோ சோகம் அவனைப் பிழிய தான் செய்தது.

“எனக்குத் தான் மேஜிக் தெரியுமே மயிலு... அதை வச்சு மாமா உன் முன்னால வந்துட்டேன்” நகைச்சுவையாய் அவன் கூற... அதில் லேசாக அவள் சிரித்தாள்.

“விளையாடாம சொல்லுங்க”

“நீ பண்ணிய நம்பரை காலர் ஐடியில் பார்த்தேன். பார்த்தவுடனே அது கொல்கத்தா நம்பர்ன்னு தெரிஞ்சு போச்சு... அதான் விசாரிச்சி இங்கே ஓடி வந்திட்டேன்” சிரியாமல் அவன் சொன்னாலும் அவன் கண்ணிலிருந்த சிரிப்பில் ஏதோ மறைக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

“மாமா... உண்மையைச் சொல்லுங்க...” அவள் மிரட்டலாய் கேட்க...

“அட... என் அத்தை பொண்ணுக்கு மிரட்ட கூடத் தெரியுமா?” என்று வாய் விட்டு சிரித்தவன், “சரி சொல்றேன்... சொல்றேன்... நான் ஆறு மாசமா இங்கே தான் வேலை பார்க்கிறேன். உனக்கு முன்னாடியே எனக்குக் கொல்கத்தா நல்ல பழக்கம்”

“ஓ... எனக்கு இது தெரியாதே...”

“ஆறேழு மாசமா நீ தான் நீயாய் இல்லையே...” அவனின் குற்றம் சாட்டும் குரலில் அவள் தலை குனிந்தாள்.

“சாரி மாமா... நான் வேணும்ன்னே உங்களை எல்லாம் அவமானப் படுத்தணும்ன்னு நினைக்கல...”

“விடு மயிலு... இதுக்குப் போய் இத்தனை தடவை நீ மன்னிப்பு கேட்க வேண்டியது இல்லை” என்றவன் பேச்சை மாற்ற எண்ணி அவர்களின் சிறு குழந்தை பிராயத்து குறும்புகளைக் கூற... அவன் நினைத்தது போல் அதில் அவள் கவனம் திசை திரும்பியது. இருவரும் பேசி சிரித்துக் கொண்டிருக்கும் போது,

“மயூரி... மயூரி...” அழைத்துக் கொண்டே அங்கு வந்தார் மைதிலி.

“வாங்கம்மா...” அவள் அவரை வரவேற்க...

“என்னைக்கும் இல்லாத திருநாளா உன் சிரிப்புச் சத்தம் கேட்குதே... என்னன்னு பார்த்திட்டு போகலாம்ன்னு வந்தேன்” என்றவர், அங்கே அமர்ந்திருந்த ரிஷியை கண்டு, “தம்பி யாரு?” அவளிடம் கேட்டார்.

“என்னோட மாமா மகன்... ஊரிலிருந்து வந்திருக்கிறார். இங்கே தான் வேலை பார்க்கிறார்” அவருக்கு ரிஷியை அறிமுகப்படுத்த,

“ஓ...” என்றவர்... “பிறந்த வீட்டுக்காரங்களைப் பார்த்ததும் உனக்குச் சிரிப்பு பொத்துகிட்டு வந்திடுச்சு என்ன... நான் கூட நினைச்சேன் உன் ஆத்துக்காரர் தான் உன்னைச் சிரிக்க வைக்கிறாரோன்னு... அவரே சிரிக்க மாட்டார்... இதில் அவர் எங்கே உன்னைச் சிரிக்க வைக்க?” அவர் அவளிடம் அங்கலாய்க்க... ரிஷி அவரின் பேச்சை நன்கு கவனித்துக் கொண்டிருந்தான். அதைக் கேட்டு அவன் கண்கள் ஒரு நிமிடம் சுருங்கி விரிந்தது.

‘ஆக மொத்தம் மயிலு இந்தக் கொலைக்காரனை கல்யாணம் பண்ணிட்டு வந்து நிம்மதியா இல்ல...’ அவன் மனம் அவளுக்காய் வருத்தப்பட்டது.

மைதிலி சென்றதும் ரிஷி அவளிடம்... “மயிலு... சும்மா தானே இருக்க... வா ஊரை சுத்தி பார்த்துட்டு வரலாம்...”

“அவர் என்ன சொல்வாரோ?” தயக்கமாய் அவனைப் பார்த்தாள்.

“என் கூட வர்றதுக்கு அவர் என்ன சொல்ல போறார்... அதெல்லாம் ஒண்ணும் சொல்ல மாட்டார். நீ வா” அவன் வற்புறுத்த... மைதிலியிடம் சொல்லி கொண்டு அவள் அவனுடன் புறப்பட்டுச் சென்றாள்.

கொல்கத்தாவின் முக்கிய இடங்களான ஹவுரா பாலம், இந்தியன் மியூசியம், பூங்கா, காளி கோவில், மார்பில் ப்ளேசஸ், சயின்ஸ் சிட்டி, பிர்லா இண்டஸ்ட்ரியல் அன்ட் டெக்னாலஜிகல் மியூசியம் என்று ஒவ்வொரு இடமாக அழைத்துச் செல்ல... வீட்டில் அடைந்து கிடந்த மயூரிக்கு அது மிகுந்த உற்சாகத்தைத் தந்தது. எல்லாவற்றையும் சிறு குழந்தையின் உற்சாகத்துடன் ஆர்வத்துடன் சுற்றி பார்த்தவளை கண்டு ரிஷியின் மனம் கனிந்தது.

இருவரும் ஊர் சுற்றிவிட்டு வீடு வரும் போது மாலையாகி இருந்தது. அவளின் கெட்ட நேரமோ என்னமோ அன்று அலுவலகத்தில் இருந்து ஆரன் நேரத்தோடு வீடு வந்திருந்தான்.

“என்னங்க சீக்கிரம் வந்திட்டீங்க? டீ போட்டு எடுத்திட்டு வரவா?” அவனின் வரவை உணர்ந்து வேகமாய் உள்ளே வந்தவள் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த ஆரனிடம் கேட்டுக் கொண்டே அருகில் சென்றாள்.

அவளை நிமிர்ந்து பார்த்தவனின் கண்ணில் அவள் பின்னே நின்று கொண்டிருந்த ரிஷி அவன் கண்ணில் பட, “டீ வேணாம்... ஒரே தலைவலியா இருக்கு... காபி போட்டு கொடு” என்றான் ரிஷியை முறைத்துக் கொண்டே.

“அச்சச்சோ சாரி... ஒரு நிமிசம் இருங்க...” என்றபடி அவள் உள்ளே செல்ல...

“தலைவலின்னு என்னைத் தானே சொன்னீங்க ஆரன்...” கேட்டபடி வந்த ரிஷி அவனுக்கருகில் இருந்த நாற்காலியில் அமர...

“புரிஞ்சா சரி...” என்ற ஆரன் தொலைக்காட்சியில் கவனத்தைச் செலுத்தினான்.

“இன்னைக்குச் சாதாரணத் தலைவலியா இருக்கிற நான்... ஒரு நாள் பெருந்தலைவலியா மாறி... உங்க தலையெழுத்தையே மாத்த போறேன்” புரியாத புதிர் போட்டவனைப் புரியாமல் பார்த்தான் ஆரன்.

“என்ன புரியலையா ஆரன்... ஒருநாள் நான் மயிலை தூக்கிட்டு பறந்து போகப் போறேன்” கையைப் பறப்பது போல் சைகை செய்தான்.

“ஏய்...” ஆள் காட்டி விரல் நீட்டி ஆரன் எச்சரிக்கும் போதே... மயூரி அங்கு வந்து விட... ஆரன் தன் மன கொதிப்பை முயன்று அடக்கி கொண்டான்.

‘எவ்வளவு தைரியம் இருந்தா என் கிட்ட வந்து என் பொண்டாட்டியை தூக்கிட்டு போறதை பத்தி பெருமையாய் சொல்வான்... ராஸ்கல்...’ ரிஷியை திட்டியவன் முகம் கடுமையைக் காட்ட... அதைத் தவறாகப் புரிந்து கொண்ட மயூரி,

“ரொம்பத் தலைவலிக்குதா ஆரு?” கவலையுடன் ஆரனிடம் கேட்டவள், இருவரிடமும் காபி கோப்பையை நீட்டினாள்.

‘அதான் தலைவலியோட மொத்த உருவமா உன் சொந்தக்காரன் உட்கார்ந்திருக்கிறானே... அவனை முதல்ல போகச் சொல்லு. என் தலைவலி தானா காணாம போயிரும்’ மனதுக்குள் நினைத்த ஆரன் வாய் விட்டு அவளிடம் சொல்லவில்லை. அவள் கொடுத்த காபியை அவன் மௌனமாய்ப் பருக... அவளோ கவலையுடன் அவனைப் பார்த்திருந்தாள்.

காபியை பருகி முடித்த ரிஷி, “அப்புறம் மயிலு... நைட்டுக்கு என்ன டிபன்...?” இரவு உணவு முடித்துவிட்டு தான் கிளம்புவேன் என்று ஆரனுக்கு அவன் குறிப்பாய் உணர்த்த... அதைக் கேட்டு அவன் கடுப்பானான்.

“என்ன செய்யலாம் நீங்களே சொல்லுங்களேன் மாமா...” ரிஷியிடம் கேட்க... ஆரனோ அவளை எரிச்சலுடன் பார்த்தான்.

“மயிலு... மாமாவுக்குப் பிடிச்ச ரவை கிச்சடி பண்ணிடு...” ரிஷி சொல்ல...

“எனக்கு ரவை பிடிக்காது...” ஆரன் அதற்கு மறுப்பு தெரிவிக்க...

“ரெண்டு பேருக்கும் பிடிச்சதை பண்றேன்... ஓகேவா?” என்றவள் அங்கிருந்து உள்ளே செல்ல...

“ஏன் ஆரன் ஜெயிலில் களி சாப்பிட்ட உங்களுக்கு ரவை பிடிக்காதா? ஆச்சிரியமாய் இருக்கு...” மூக்கில் விரல் வைத்து போலியாய் ஆச்சிரியப்பட்ட ரிஷி, “ஆனா பாருங்க ஆரன்... களியை விட ரவை நல்லா தான் இருக்கும்” நக்கலாய் சொல்ல... அவ்வளவு தான் ஆரனுக்கு அதுவரை காத்து வந்த பொறுமை காற்றில் பறந்தது.

“டேய்... நான் உன்னை ஏதும் செய்றதுக்கு முந்தி இடத்தைக் காலி பண்ணிடு...” என்று எச்சரிக்க...

“உன்னால என்னடா பண்ண முடியும்?” ஆரனிடம் பதிலுக்குச் சவால் விட்ட ரிஷி, “அப்படியே என்னை நீ எதுவும் பண்ணினா என் அத்தை பொண்ணு உன்னைச் சும்மா விடுவான்னு நினைக்கிறியா? அதுக்கப்புறமும் உன் கூடச் சேர்ந்து வாழுவான்னு நினைக்கிற? நெவர்... உன்னைத் தலை முழுகிட்டு என் கூட வந்திடுவா... ஒண்ணும் செய்யாமல் சிம்பதி ஓட்டு வாங்கி நான் ஜெய்ச்சிட்டு போயிட்டே இருப்பேன்” அலட்சியமாய்ச் சொன்னவன் மேலும் ஆரன் பேசும் முன் அங்கிருந்து நகர்ந்தான்.

ரிஷியிடம் தன் கோபத்தைக் காண்பிக்க முடியாத ஆரனின் கோபம் மயூரியின் மேல் திரும்பியது. ‘எல்லாம் அவளால் வந்தது...’ மனதில் கறுவி கொண்டிருந்தவன் அவளிடம் தனிமையில் பேசுவதற்காகக் காத்திருந்தான்.

ரிஷி செல்லும் வரை பொறுமை காத்திருந்த ஆரன் மயூரியிடம், “உன் கூடப் பேசணும் வா...” என்றபடி படுக்கையறைக்குச் செல்ல... அவளும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

“நீ அவன் கூட எங்கே போயிருந்த?” அவன் இயல்பாய் கேட்பது போல் அவளுக்குத் தோன்ற, அவள் உற்சாகமாய்...

“கொல்கத்தாவில் உள்ள எல்லா இடத்துக்கும் மாமா கூட்டிட்டு போனாங்க... அப்புறம் மாமா பானி பூரி, ஜல் முரி, பாவ் பாஜி எல்லாம் வாங்கிக் கொடுத்தாங்க...” அவள் மூச்சுக்கு முன்னூறு முறை ரிஷியை மாமா என்று விளித்துப் பேச... அதைக் கேட்டு அவன் கடுப்பானான்.

“ஆமாம்... உனக்கு மத்த ஆண்களோட பேசி பழகுறதே பயமாயிருக்குன்னு சொல்லுவ. இவன் கூட மட்டும் பேசுறதுக்குப் பழகுறதுக்கு உனக்குப் பயமாயில்ல” சம்பந்தமே இல்லாமல் ஆரன் பேசியது கேட்டு அவள் புரியாமல்,

“என்ன ஆரு சொல்றீங்க?” அவள் முடிக்கும் முன்... அவள் தோளை கோபமாய்ப் பற்றியவன், “அவன் உனக்கு மாமா... தாலி கட்டிய புருசன் நான் உனக்கு ஆருவா? என்னையும் மாமான்னு கூப்பிடு டி” பலமாய் அவள் தோள் இரண்டையும் பற்றி உலுக்க... அது கழண்டு விடுவது போல் அவளுக்கு வலித்தது.

“இனி அவன் இங்கே வந்தான்... நீ அவன் கூட வெளியில் போனேன்னு எனக்குத் தெரிஞ்சது... நீ தொலைஞ்ச...” ஆக்ரோசமாய் அவன் உறுமியதில் அவளுக்குப் பயத்தில் காய்ச்சல் வந்துவிடும் போலிருந்தது.

அவளிடம் ஆங்காரமாய்க் கத்திய ஆரன் அவளைக் கண்டு கொள்ளாமல் கோபமாய்ப் படுக்கையில் சென்று விழ... அவள் செய்வதறியாது திகைத்து போய் அங்கேயே நின்றிருந்தாள். அன்று அவள் சந்துருவிடம் பேச பயந்து கொண்டு இருந்தற்காக அவளிடம் ஆரன் சொன்ன வார்த்தைகள் இன்று அவள் காதில் ஒலித்தது.

“எல்லார் கிட்டேயும் சகஜமா பேசுறதுக்கு என்ன பேபி? நம் மனசுல எந்தவித தப்பும் இல்லைங்கிறப்போ... பேசுறதுக்கு என்ன தயக்கம்? அதுவும் நான் உன் கூட இருக்கும் போது... உனக்கு என்ன பேபி பயம்?”

‘யாரோ ஒருவனிடம் நான் பயத்தில் பேசாமல் இருந்தற்குத் தைரியம் சொன்ன ஆரு... இன்று என் சொந்த மாமன் மகனிடம் நான் பேசியதற்கு ஏன் தவறு கண்டுபிடிக்கிறார்? அப்படியே அது தவறு என்றாலும் அடுத்தவர்களும் ரிஷியும் ஒன்றில்லையே’ ஆரனின் நடவடிக்கை அவளுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை.

காதலனாய் இருந்த ஆரனுக்கும் கணவனாய் மாறியிருந்த ஆரனுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருப்பதை அந்தக் கணம் அவள் மனம் உணர்ந்தது. ஆனால் ஒன்று மட்டும் உண்மை கணவனின் இந்தப் பேச்சு அவளுக்கு ரசிக்கவில்லை என்பது அவளின் சுளித்த முகத்திலிருந்தே தெரிந்தது.

ரிஷியின் பேச்சுக்கள் இன்னமும் ஆரனின் காதில் ஒலித்துக் கொண்டிருக்க அவனின் மனம் உலைக்களமாய்க் கொதித்தது. ‘எவ்வளவு திமிர் இருந்தா என் கிட்டேயே வந்து என் மனைவியைத் தூக்கிட்டு போயிருவேன்னு சொல்வான். நீ தூக்கிட்டு போற வரைக்கும் என் கை என்ன பூவா பறிச்சிட்டு இருக்கும் ராஸ்கல்... முதல்ல என் மனைவி மேல கை வச்சு பாருடா... அதுக்கப்புறம் தெரியும் இந்த ஆரன் யாருன்னு? அடுத்தவன் பொண்டாட்டி மேல ஆசைப்படுற உன்னைக் கொன்னு... உன் குடலை உருவி மாலையா போட்டா தான்டா என் ஆத்திரம் அடங்கும்’ ரிஷியின் மேல் வந்த அதே அளவு ஆத்திரம் அவனுக்குத் தன் மனைவி மேலும் வந்தது.

‘அவன் அந்தளவுக்குத் தெனாவெட்டா பேசுறான்னா... அதுக்கு இவ கொடுக்கும் இடம் தான் காரணம். இவ மாமா... மாமான்னு கொஞ்சுறதும்... அவன் மயிலு... மயிலு...

கொஞ்சுறதும் பார்க்க சகிக்கல. என்ன தான் மாமன் மகனா இருந்தாலும் இப்படியா? இதுல இந்த உலகத்துலேயே நான் தான் பயந்த பொண்ணுன்னு ஒண்ணும் தெரியாத மாதிரி ஒரு ஆக்டிங் வேற. ஒரு மனுசனோட பார்வையை வச்சு அவன் மனசுல என்ன இருக்குன்னு தெரிய வேணாம். அது கூடத் தெரிஞ்சிக்காத இவளை வச்சிட்டு...?' அதற்கு மேல் யோசிக்க முடியாமல் அவன் பல்லை கடித்தான்.

படுத்திருந்த ஆரனின் முதுகை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த மயூரியின் மனது கணவனின் கோபத்தில் அதிர்ந்து போயிருந்தது. 'ஏன் இவ்வளவு கோபம்? எதற்கு இந்த ஆங்காரம்? இன்று தான் முதன் முறையாய் ரிஷியை பார்க்கிறார்... அதற்குள் அவன் மேல் இவ்வளவு கோபம் கொள்ளும் அளவுக்கு இப்போது என்ன நடந்து விட்டது? அவன் மேல் ஏன் இந்தக் காழ்ப்புணர்ச்சி?'

வெகுநேரம் யோசித்துப் பார்த்ததில் ஒன்று மட்டும் புலப்பட்டது. ஆரனுக்குத் தன் மேல் மனைவி என்ற நினைவில் இயல்பாக எழுந்திருக்கும் உரிமை போராட்டம் தான் கோபமாக வெடித்திருக்கிறதோ என்று அவளுக்குச் சந்தேகமாக இருந்தது. ஆங்கிலத்தில் சொல்வார்களே பொசசிவ்னெஸ் என்று அது மாதிரி தான் அவனுக்கு மட்டுமே சொந்தம் என்று எண்ணுகிறானோ?

'அவன் உனக்கு மாமா... தாலி கட்டிய புருசன் நான் உனக்கு ஆருவா? என்னையும் மாமான்னு கூப்பிடு டி', 'இனி அவன் இங்கே வந்தான்... நீ அவன் கூட வெளியில் போனேன்னு எனக்குத் தெரிஞ்சது... நீ தொலைஞ்ச...' அவன் பேசியதை நினைத்து பார்த்தவளுக்கு ஒன்று மட்டும் தெள்ளத் தெளிவாகப் புரிந்தது. அது அவள் தனக்கு மட்டுமே உரிமை என்ற எண்ணத்தில் தான் அவன் அவ்வாறு பேசினான் என்பது. அவன் நினைப்பதிலும் தவறு இல்லையே என்று அவனுக்குச் சாதகமாய் யோசித்தவள் தன் மனதை தேற்றி கொண்டாள்.

அவனின் எண்ணம் பற்றி அவளுக்கு ஒரு தெளிவு வந்ததும் அவள் மனதிலிருந்த வருத்தம் இருந்த இடம் தெரியாமல்

காணாமல் போனது. கணவனின் கோபம் ஒன்றும் அவளுக்குப் புதிது அல்ல. அவனை முதன் முதலில் பார்த்ததிலிருந்து இன்று வரை அவனின் சிரித்த முகத்தை விட அவனின் கோப முகத்தைத் தான் அவள் அதிகம் கண்டிருக்கிறாள். அதேசமயம் இடைப்பட்ட காலத்தில் காதலில் உருகும் அவனின் நேச முகத்தையும் அவள் உணர்ந்திருக்கிறாள்... அனுபவித்திருக்கிறாள்.

ஆனால் இப்போது அவன் கொண்டிருக்கும் கோபம் அவளுக்குச் சற்று வித்தியாசமாக இருந்ததால் சிறிது நேரம் அதிர்ந்து போய் நின்றுவிட்டாள் அவ்வளவே. யோசித்துப் பார்த்ததில் கணவனின் கோபத்தை இப்படியே வளர விடுவது சரியில்லை என்பது மட்டும் அவளின் சிற்றறிவுக்கு எட்டியது. அவனைச் சமாதானப்படுத்த வேண்டும் என்று அவள் முடிவெடுத்த பின் அதைச் செயலாற்றுவதில் அவள் அதிகக் காலத் தாமதம் செய்யவில்லை.

கட்டிலின் மறுபக்கம் அதாவது அவனது பக்கம் வந்து நின்றவள் அவனைப் பார்த்தாள். கண் மூடி படித்திருந்தாலும் அவன் தூங்கவில்லை என்பது அவளுக்குப் புரிந்தது. “ஆரு...” என்று மெல்ல அழைத்தாள். அவளுக்குத் தெரியும்... அவளின் இந்த ஒற்றை அழைப்பு அவனின் எப்படிப்பட்ட கோபத்தையும் குறைத்து விடுமென்று.

அவளின் அழைப்பில் வெடுக்கென்று கண்ணைத் திறந்தவன், “என்ன சொன்ன?” என்று உறுமியவனின் கோபத்தில் அவள் தன்னிச்சையாய் இரண்டடி பின்னால் நகர்ந்தாள். அவனின் கண்கள் தீக்கங்கு போல் ஆத்திரத்தில் பளபளவென ஜொலித்ததில் அவள் பயந்து தான் போனாள்.

“இப்ப தானே சொன்னேன்... என்னை மாமான்னு கூப்பிடணும்ன்னு... அவனை மட்டும் மாமா மாமான்னு கொஞ்சி கூப்பிடுறதுக்கு உனக்கு இனிக்குது. ஆனா என்னை மாமான்னு சொல்ல மட்டும் கசக்குதோ?”

கத்தியவன் அவள் முகத்தைப் பார்க்க பிடிக்காதது போல் மறபடியும் கண்களை மூடி கொண்டான்.

அவனின் மனதில் ஏதோ ஒரு வலி இன்னமும் ஆறாத வடுவாய் இருக்கும் போது தானும் அவனுக்கு மேலும் வலியை, வேதனையைத் தர அவள் காதல் மனம் விரும்பவில்லை. அவனின் வார்த்தைகள் குத்தீட்டியாய் குத்தி அவள் மனதை ரணமாய் வலிக்கச் செய்த போதும் முயன்று தன் வலியை மறைத்துக் கொண்டு அவன் அருகில் மண்டியிட்டு அமர்ந்தவள்,

“மாமா...” அவனை அழைத்தவள் அவனின் கை மேல் தன் கையை வைத்தாள். அவளின் அழைப்பில் கண் திறந்து பார்த்தவன், ஒன்றும் பேசாமல் அவளையே பார்க்க...

“நீங்க சொல்ற மாதிரி நான் கேட்கிறேன். இனிமேல் ரிஷி மாமாவோட வெளியில் போகல. நான் அவரோட வெளியில் போனது தப்பு தான்... அதுவும் உங்க கிட்ட கேட்காமல் போனது ரொம்பப் பெரிய தப்பு தான்...” மன்னிப்பு கேட்டவள் அவனின் மனம் போல் தழைந்து போனாள்.

சாதாரண ஆண் மகனாய் இருந்திருந்தால் மனைவியின் இந்தப் பேச்சில் அகமும், முகமும் மலர்ந்து அவளை அப்படியே அள்ளி அணைத்திருப்பான். இவனோ அடிப்பட்ட வேங்கை... மன்னிப்பு கேட்ட மங்கையவள் மனதை அவனால் சரியாகக் கணிக்க முடியாமல் வார்த்தையால் குத்தி கிழித்தான்.

“சொல்லாதே... முதலில் அதைச் செயலில் காட்டு... அப்போ நான் நம்பறேன்... அவன் கூட நீ வெளியில் போறதை மட்டும் நிறுத்தி பிரயோஜனம் இல்லை. அவன் இங்கே வராமல் இருக்கணும். அதையும் உன் அருமை மாமன் மகனிடம் சொல்லிடு. உனக்கும், எனக்கும் இடையில் யாரும் வருவதை நான் விரும்பல. அது இந்த ரிஷியாக இருந்தாலும் சரி... உன் பெற்றோராக இருந்தாலும் சரி” அவனின் பேச்சில் அவள் கண்ணில் கண்ணீர் வழிந்தது. அவன் தன்னை நம்பவில்லை என்ற தன்னிரக்கத்தில்

வழிந்த அவளின் கண்ணீரை கூட அவன் தவறாக நினைத்துக் கொண்டான்.

“அவனைப் பார்க்காம... பேசாம இருக்கிறது உனக்கு அவ்வளவு கஷ்டமாவா இருக்கு? அந்தளவுக்கு அவனை உனக்குப் பிடிக்குமோ?” கேட்டவனின் பார்வை அவளின் முகத்தைக் கூர்மையாய் ஆராய்ந்தது. அவனின் உரிமை போராட்டத்தை அவளின் மனது கண்டு கொண்டதால் அழுத தன் விழிகளை அழுந்த துடைத்து கொண்டவள்,

“என... எனக்கு உங்களைத் தான் ரொம்பப் பிடிக்கும்...” அவன் கண்களைப் பார்த்துத் தீர்க்கமாய்ச் சொன்னவள் எழுந்து அவனின் மறுப்பக்கம் வந்து படுத்து கொண்டாள். நியாயமாய் அவளின் வார்த்தையில் அவனுக்கு மனதில் தென்றல் வீசியிருக்க வேண்டும்.

ஆனால் அவன் தலையைத் திருப்பிச் சந்தேகமாய் அவளைப் பார்த்தான். அவளும் படுத்துக் கொண்டே அவனைத் தான் பார்த்திருந்தாள். அவளின் விழியின் வீச்சை தாங்க முடியாமல் அவன் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டான். அவனால் இந்தப் பெண்களின் மனதை சரியாய் கணிக்க முடியவில்லை. அவனின் அன்னையும் இதே போல் தான் அவனின் தந்தையை ஏமாற்றினாள்.

“நீங்க என்னைச் சந்தேகப்படுறீங்களா அத்தான்? இதோ நம் மகன் மீது சத்தியமா எனக்கும் அவருக்கும் எந்த உறவும் இல்லை. அவர் உறவு முறையில் முறைப் பையன்னாலும் எனக்கு அவர் உடன் பிறக்காத அண்ணன். அண்ணன், தம்பி கூடப்பிறக்காத எனக்கு அவர் ஒரு சகோதரன் போல. அப்படிப்பட்ட எங்க உறவை நீங்க கொச்சைப் படுத்திட்டீங்களே? இந்த உலகத்திலேயே உங்களைத் தான் எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஆனா நீங்க எந்தப் புருசனும் பொஞ்சாதியை பார்த்து கேட்க கூடாத வார்த்தையை என்னைப் பார்த்து கேட்டுட்டீங்களே...!”

அன்று அவன் அன்னை ஒப்பாரி வைத்து தன் தந்தையிடம் பொய் சத்தியம் பண்ணியது மட்டுமில்லாமல்... அவள் தன்

புகுந்த வீடு, பிறந்த வீடு என எல்லோரிடமும் பஞ்சாயத்து வைத்தது சிறுவனான அவன் மனதில் ஆழ பதிந்து விட்டது. அப்படிப் பேசி பேசியே பிறந்த வீடு, புகுந்த வீடு, ஊரார் எல்லோரையும் நம்ப வைத்த அவன் அன்னை கடைசியில் அவன் தந்தையையும் நம்ப வைத்து யாருக்கும் சந்தேகம் வராத வண்ணம் தன் எண்ணத்தை ஈடேற்றி கொண்டாள்.

அந்தத் தாக்கத்தின் விளைவே அவன் தன் மனைவியின் வார்த்தைகளை நம்பாமல் இருப்பதற்கான முக்கியக் காரணம். பெண் இனத்தில் தன் மனைவி மயூரி மட்டுமே நல்லவள்... நம்பத் தகுந்தவள் என்று எண்ணியிருந்த அவன் மனதில் ரிஷி பேசிய வேண்டாத வார்த்தைகள் விசத்தைக் கலக்கி விட்டது. இனி அவன் மனதிலிருக்கும் இந்த விசம் அவனின் வாய் வார்த்தை வழியே அவளை நித்தமும் கொல்லாமல் கொல்ல போகிறது.

“ஆ...” அவனை ஆரு என்றழைக்க வந்தவள் தன் தவறு உணர்ந்து நாக்கை கடித்தவள், “மாமா...” என்றவள் அவன் அருகில் வந்து அவன் கைவளைவில் தலை வைத்து படுக்க... எப்போதும் போல் அவன் கை அவளைப் பிடித்து இழுத்து அணைக்கவில்லை. அவன் மரக்கட்டை போல் அப்படியே படுத்திருந்தான்.

“சாரி மாமா...” அவன் நெஞ்சில் தலை வைத்து அவன் முகம் பார்த்து சொல்ல... அவனோ கண்களை வேறு புறம் திருப்பிக் கொண்டான்.

“என்னைப் பாருங்க...” வலுக்கட்டாயமாய் அவன் முகத்தைத் திருப்பியவள், “உங்களை நம்பி தானே நான் வந்திருக்கேன்... நீங்க இப்படிக் கோபப்பட்டா நான் எங்கே போவேன்? எனக்கு உங்களை விட்டா யாரிருக்கா?” கேட்டவளின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் அவனின் நெஞ்சை நனைத்தது. ஆனால் அந்தக் கண்ணீர் கூட அவனின் வறண்ட இதயத்தைக் கொஞ்சமும் குளிர்விக்கவில்லை.

“ஏன் யாருமில்லை...? அதான் உன் மாமன் மகன் இருக்கானே... அவன் கூடப் போறது?” அவள் அந்த

ரிஷியை திருமணம் செய்யச் சம்மதித்தவள் தானே என்ற எரிச்சலில் அவனின் வார்த்தைகள் காரமாய் வெளிவந்தது.

“அவரா என் கணவர்...? நீங்க தானே என் கணவர். அப்போ நான் உங்க கூடத் தானே இருக்கணும்” அவன் என்ன பேசினாலும் அவள் தன்மானத்தை விட்டு அவனிடம் மறுபடியும் மறுபடியும் வலிய பேசினாள். எப்படியும் தன் மனதை அவனுக்குப் புரிய வைத்துவிட வேண்டும் என்ற எண்ணமே அவள் மனம் முழுவதும் வியாபித்திருந்தது.

“அது உனக்கு ரொம்பக் குறையா இருக்கு போலிருக்கு?” கேலியாய் வினவியவன் பேச்சு அவள் மனதை பெரிதும் காயப்படுத்தியது.

இதற்கு மேல் கணவனிடம் பேசி பிரயோஜனம் இல்லை என்று உணர்ந்தவள் அவனிடமிருந்து விலகி தள்ளி படுத்தாள். அவனும் அவள் தள்ளி படுத்ததைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை... அவளைச் சமாதானப்படுத்தவும் முயலவில்லை. பதிலுக்கு அவனும் அவளுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டான். அவனின் செயலில் அவளின் கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருகியது. எப்படி அவனின் மனதை மாற்றுவது? என்று அவளுக்குச் சத்தியமாய்த் தெரியவில்லை. விடியும் வரை அவள் வடித்த கண்ணீரில் அந்தத் தலையணை தான் முற்றிலும் நனைந்தது. விடிந்த பின்னும் அவள் கணவன் மனமோ கொஞ்சமும் இறங்கவில்லை.

****

“அப்புறம் என்னாச்சு ரிஷி தம்பி?” ஆர்வமாய்க் கதை கேட்டார் மைதிலியம்மா.

“அப்புறம் என்ன ஆச்சா? சரியா கேட்டீங்க போங்க... மயிலு கொள்ளிவாய் பிசாசுன்னு நினைச்சு அலறுனதுல எங்க தெருவில் உள்ளவங்க எல்லாம் எங்க வீட்டு முன்னாடி கூடிட்டாங்கன்னா பார்த்துக்கோங்களேன்” அவரை விட ஆர்வமாய்க் கதை சொன்னான் ரிஷி.

“அப்படியா...” முகவாயில் கை வைத்து ஆச்சிரியப்பட்டார் மைதிலி.

இவர்கள் இருவரையும் ஆர்வமில்லாமல் பார்த்து கொண்டிருந்தாள் மயூரி. அவளின் கண்கள் வாசல் பக்கம் அடிக்கடி அலைப்பாய்ந்து கொண்டிருந்தது. ஆரன் அலுவலகத்தில் இருந்து வரும் நேரமாததால் அவளின் மனம் திக்திகென்று அடித்துக் கொண்டது. அவன் ரிஷியை கண்டால் என்ன சொல்வானோ என்ற அச்சத்தில் இருந்தவளுக்கு அவர்கள் பேசியது எதுவும் காதில் விழவில்லை.

“கடைசியில் பார்த்தா... எங்க தோப்பில் காவல் செய்யும் மாடசாமி வாயில் சுருட்டுடன் வந்திருக்கிறான். அவனை இருட்டில் பார்த்த நம்ம மயிலு கத்தி கூப்பாடு போட்டு ஊரை கூட்டிட்டா...” வாய் விட்டு சிரித்த ரிஷி, “என்ன மயிலு இப்பவும் நீ அப்படித்தானே...” அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் சிரித்துச் சமாளித்தாள்.

“ஏண்டிம்மா மயூரி இவ்வளவு பயந்த பொண்ணு... நீ எப்படி ஆரன் தம்பியை கல்யாணம் பண்ணிக்கிட்ட... எனக்கே உன் வீட்டுக்காரரை பார்த்தா பயமாயிருக்கு. மனுசன் மருந்துக்குக் கூடச் சிரிக்க மாட்டான் போலிருக்கே” தன் வெகுநாள் ஆதங்கத்தை அவளிடம் கேட்டு விட்டார் மைதிலி. ரிஷியின் கண்கள் அவளின் பதிலுக்காக அவளையே ஆராய்ச்சியுடன் பார்த்தது.

“எப்படியிருந்தாலும் அவர் ரொம்ப நல்லவர்ம்மா...” என்று மட்டுமே பதில் சொன்ன மயூரி வாசலை தவிப்புடன் பார்த்தாள். அவளின் பதிலை எந்த மாதிரி எடுத்துக் கொள்வது என்று ரிஷிக்கு தெரியவில்லை.

அந்நேரம் உள்ளே நுழைந்த ஆரனை கண்டதும் மைதிலி எழுந்து தங்கள் வீட்டிற்குச் செல்ல... மயூரி படபடக்கும் நெஞ்சுடன் அவன் அருகில் வேகமாய்ச் சென்றாள். வந்தவனோ ரிஷியை தான் நெருப்பாய் உறுத்துப் பார்த்தான். பின்னர்த் தன் மனைவியை முறைத்து

பார்த்தவன் அங்கிருந்த அறைக்குள் சென்று கதவை சாத்தினான்.

“மாமா நீங்க டிவி பாருங்க... ஒரு நிமிசம்...” என்றவள் ரிஷியின் பதிலை எதிர்பாராமல் அறைக்குள் செல்ல... அங்கு ரிஷி மட்டுமே தனித்து விடப்பட்டான். ஏனோ அந்த நொடி அவனுக்குமே அங்கிருப்பது மனதுக்குள் நெருடலாய் தோன்றியது. பின்பு மயூரியை நினைத்து பார்த்தவன் தன் நெருடலை ஒதுக்கி வைத்து விட்டு தொலைக்காட்சியை உயிர்ப்பித்து அதில் கவனம் செலுத்தினான்.

“நான் அவ்வளவு சொல்லியும் நீ கேட்கல இல்ல... அவன் எதுக்குத் திரும்ப இங்கே வந்திருக்கான்? உன்னைப் பார்த்திட்டான்ல ஊரை பார்த்திட்டு போக வேண்டியது தானே” ஆரனின் வார்த்தையில் அடக்கப்பட்ட கோபம் இருந்தது.

“அவரை நான் கூப்பிடல. அவரா தான் வேலை முடிஞ்சதும் நம்ம வீட்டுக்கு வந்திருக்கிறாரு” தவிப்புடன் சொன்னவளை ஆழ்ந்து பார்த்தவன்,

“ஓ... உனக்காக இங்கேயே வேலை வாங்கிட்டு வந்திட்டானா?” அவன் வார்த்தையில் ஏகப்பட்ட நக்கல் கலந்திருந்தது.

“அய்யோ இல்லைங்க... அவர் இங்கே தான் ஆறு மாசமா வேலை பார்க்கிறாராம்”

“ம்... அது உங்க ரெண்டு பேருக்கும் ரொம்ப வசதியா போச்சு... இல்ல” என்றவன், “முதல்ல அவனை வெளியே போகச் சொல்லு... இல்ல நடக்கிறதே வேற...” ஆள் காட்டி விரலை ஆட்டி கர்ஜித்தவனைக் கண்டு அச்சப்பட்டவள் சுவரோடு ஒன்றி நின்றாள்.

“என்ன பதிலை காணோம்? இப்ப அவனைக் கிளம்பி போகச் சொல்றியா இல்லையா?” அவன் மீண்டும் கர்ஜிக்க...

“வீட்டுக்கு வந்தவங்களை எப்படி வெளியில் போகச் சொல்றது? அது சரியில்லைங்க” நாகரீகம் கருதி அவள் யோசிக்க...

“எப்படி அவனைப் போகச் சொல்றதுன்னு உனக்குத் தெரியல அவ்வளவு தானே... நானே சொல்லிக்கிறேன்” அவன் கதவை திறக்க போக...

“வேண்டாங்க... அப்படி எதுவும் சொல்லிடாதீங்க... அது அவரை அவமரியாதை செஞ்சது போலாகாதா?” அவன் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்ச...

“இன்னைக்கு அவன் மரியாதைக்காக நான் பார்த்தா... நாளைக்கு என் மரியாதை காத்தில் பறந்து போயிரும். அது உனக்குப் பரவாயில்லையா?” அவளிடம் கேட்டவன் அவள் கையை உதறிவிட்டு கதவை திறந்து கொண்டு வெளியில் சென்றான். பேதை பெண்ணுக்கு அப்போதும் அவனின் வார்த்தையின் அர்த்தம் புரியவில்லை.

“டேய் எழுந்திருடா...” ரிஷியின் அருகில் வேகமாய் வந்த ஆரன் அவனைப் பார்த்து ஆங்காரமாய்க் கத்தினான். ரிஷி அவனின் அந்த உறுமலில் அதிர்ந்து போனவனாய் தானாக எழுந்து நின்றான்.

“என்னங்க...” பரிதவிப்புடன் அவன் கையை அவள் பற்ற... ஆரனோ அதைக் கவனிக்கும் மனநிலையில் இல்லை.

“இனிமேல் இங்கே நீ வந்த தொலைச்சிருவேன் தொலைச்சு...” என்றவன் ரிஷி கொஞ்சமும் எதிர்பாராத தருணத்தில் அவனின் கழுத்தை பிடித்து இழுத்தவன் வாசலுக்கு வெளியே அவனைத் தள்ளி விட்டு முகத்தில் அடித்தார் போல் கதவை சாத்தினான். ஆரனின் செயலில் அவமானம் அடைந்த ரிஷி முகம் கறுத்து போய் வேகமாய் அங்கிருந்து வெளியேறினான். மயூரியோ கணவனின் இந்தக் காட்டுமிராண்டி செயலில் விக்கித்துப் போய் அப்படியே நின்றிருந்தாள்.

“என்னடி ‘பே’ன்னு முழிச்சிட்டு இருக்க...?” கேட்டபடி அவளின் அருகில் வந்தவன் அவள் தோளை பற்றி உலுக்க... அதில் சுயவுணர்வு பெற்றவள்...

“ஏன் இப்படிப் பண்ணினீங்க? கொஞ்சம் தன்மையாய் சொல்லியிருக்கலாமே... வீட்டுக்கு வந்தவங்களை இப்படிக் கேவலப்படுத்தலாமா?”

“நான் அவ்வளவு தூரம் சொல்றேன்... நீ அவனைப் பத்தியே பேசிட்டு இருக்க... இப்ப நீ நிறுத்த போறியா இல்லையா?” கோபமாய் இரைந்தவனைப் பார்த்து,

“உங்களுக்கு என்ன தாங்க பிரச்சினை? ரிஷியை ஏன் உங்களுக்குப் பிடிக்கல? அவர் என் சொந்தக்காரரா இருக்கிறதாலா? அப்படியே அவர் என்னைப் பார்க்க வந்தா தான் என்ன தப்பு? எனக்கு என்னமோ நீங்க அவரையும், என்னையும் தப்பா நினைக்கிறீங்களோன்னு தோணுது” அவனின் மனதை இப்போது தான் சரியாகக் கணித்தாள் அவனின் மனைவி.

“நீங்க ரெண்டு பேரும் தான் எனக்குப் பிரச்சினை... ஆமாம் டி... நான் உன்னையும் அவனையும் சேர்த்து சந்தேகப்படுறேன்... போதுமா உனக்கு?” அவன் கத்த...

“ஆரு...” திகைத்து போய் அவனைப் பார்க்க...

“ஆருன்னு சொன்ன பல்லை பேத்துருவேன்... மாமான்னு சொல்லுடி...” அதற்கும் அவன் கோபம் காட்டினான்.

“என்னைப் போய்ச் சந்தேகப்படுறீங்களே? இது நியாயமா மாமா?” கண்களில் கண்ணீர் வழிய அவள் கேட்க,

“அது என்ன உன்னைப் போய்... உன்னை மட்டும் தான்டி என்னால சந்தேகப்பட முடியும். பெரிய இவ மாதிரி பேசுற... அன்னைக்கு நீ அந்த ரிஷியை கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சவ தானே... நான் மட்டும் உன்னை அதிரடியா கல்யாணம் பண்ணிக்கலைன்னா... இந்நேரம் அவன் கையால் தாலி வாங்கி அவன் மனைவியாகி இருப்ப... நான் சொல்றது உண்மை தானே உன் மனசாட்சி தொட்டு

சொல்லு. இப்ப அவன் எதுக்கு இங்கே வர்றான் முடிஞ்சி போன உறவை புதுப்பிக்கவா?” அவன் பேச பேச அவள் காதுகளைப் பொத்தி கொண்டாள்.

அன்றொரு நாள் இதே போல் அவன் பேசினான் தான்... அன்று அவனின் பேச்சில் கோபத்தில் ஒரு நியாயம் இருந்ததால் அவள் அதைப் பொறுத்து கொண்டாள். ஆனால் இன்று அவனின் மனைவியாய் ஓர் உயிர் ஈருடலாய் வாழ்ந்த பின்பு அவன் பேசும் பேச்சுக்களை அவளால் தாங்கி கொள்ள முடியவில்லை. அதன் அர்த்தத்தை அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

“போதும்... போதும்... நீங்க பேசிய வரைக்கும் போதும்...” அப்படியே மடங்கி அமர்ந்துவிட்டாள்.

“நான் பேசுவதை நிறுத்தணும்ன்னா... அது நீ நடந்துக்கிறதை பொறுத்து இருக்கு” ஆத்திரமாய் இரைந்தவன் அங்கிருந்து நகர்ந்தான். அவளை ஆறுதல் படுத்த வேண்டும் என்ற நினைவு கூட இல்லாமல் அவன் செல்ல... அவளோ தன் கணவனின் செயலை, பேச்சை ஜீரணிக்க முடியாமல் அழுது கொண்டே இருந்தாள். எவ்வளவு நேரம் அழுது கொண்டிருந்தாளோ தெரியாது.

“சாப்பிடலாம் வா...” பேசுவது எல்லாம் பேசிவிட்டு இப்போ எதற்கு உணவு உண்ண அழைக்கிறான்? என்று அவளுக்குக் கோபம் வந்தது. அவள் பயந்த சுபாவம் கொண்ட பெண் தான் இல்லை என்பதற்கில்லை... அதற்காக அவள் ஒன்றும் முதுகெலும்பு இல்லாத கோழையல்லவே...!

“எனக்குப் பசிக்கல...” அவன் முகம் பாராமல் சொன்னவள் அறைக்குள் சென்று படுத்துவிட்டாள்.

சிறிது நேரம் கழித்து உள்ளே வந்தவன் அவள் அருகில் படுத்து நேற்று போல் அவளாக வருகிறாளா என்று அவளைப் பார்த்தான். அவள் அவன் அருகில் வரவும் இல்லை... அவன் வரவை கண்டு கொள்ளவும் இல்லை.

அதுவே அவனின் கோபத்தைக் கிளப்பி விடப் போதுமானதாய் இருந்தது.

“அவனைச் சொன்னா உனக்கு ஏண்டி இவ்வளவு கோபம் வருது?” கேட்டுக் கொண்டே அவள் மேல் கை போட்டு அவளை வலுக்கட்டாயமாய்த் தன் பக்கம் திருப்பினான்.

“அவரைன்னு இல்லை வேறு யாரையும் நீங்க இந்த மாதிரி நடத்தினா எனக்குக் கோபம் வர தான் செய்யும்” அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டே அவன் மேலிருந்த எரிச்சலில் அவள் பதிலளிக்க...

“வாடி வா... என் பயந்தாங்கொள்ளி பொண்டாட்டி... இத்தனை நாள் இந்தத் தைரியத்தை எங்கே ஒளிச்சு வச்சிருந்த? இப்போ மட்டும் உன் மாமன் மகனுக்காக உன் தைரியம் பொத்துக்கிட்டு வெளியில் வருது. அது எப்படி டி?” நக்கலாய் கூறியவன்... அவளின் பிடரியில் கை விட்டு அவள் தலைமுடியை கொத்தாய் பிடித்து இழுத்து அவள் முகத்தைத் தன் முகம் அருகில் கொண்டு வந்தவன்,

“கடைசியில் என் கிட்ட பொய்யாய் நடிச்சிருக்க இல்லை... இப்போ காண்பிக்கிற பாரு... இது தான் உன் உண்மையான குணம். நானும் இவள் பெண் குலத்தில் தப்பிப் பிறந்த தேவதைன்னு தப்பா புரிஞ்சிட்டு உன்னைப் போய்க் காதலிச்சேன் பாரு. என்னைச் சொல்லணும்...” என்றவன், “ஆம்பிளைங்க எப்பவும் ஏமாளியா இருக்கிறது இல்ல. பெண்கள் நீங்க சொல்றதை எல்லாம் உண்மைன்னு நம்புறதுக்கு. இன்னமும் நான் உன்னை நம்பறதா இல்லை. இனி தான் இந்த ஆரன் யாருன்னு தெரிஞ்சிக்கப் போற... அதன் தொடக்கம் இந்தக் கட்டிலில் இருந்து ஆரம்பிக்கட்டும்” என்றவன் தன் முரட்டு இதழால் அவளின் மென்மையான இதழை ஆக்ரோஷமாய்ப் பற்றி இழுத்து சுவைக்க ஆரம்பித்தான்.

அவள் இதழில் ஆரம்பித்த அவனின் முரட்டுத்தனம் மெதுவே அவளின் மேனியில் முன்னேற ஆரம்பித்தது. அவள் வலி தாங்க முடியாமல் அவனின் அணைப்பில்

இருந்து விலக நினைக்க... அவனின் பிடியோ உடும்பு போல் அவளை இறுக பற்றியிருந்தது.

“ஆரு... சாரி மாமா... ப்ளீஸ் வலிக்குது... விட்டுருங்க...” கண்ணீருடன் அவள் அவனைக் கெஞ்ச... அவளின் கெஞ்சல் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காய்ப் போனது. அன்று அவளின் கண்ணீரை பார்த்து பதறி விலகியவன் இன்று அவளின் கண்ணீரை பார்த்துக் கோபம் கொண்டான்.

“அவனாய் இருந்தா நீ இப்படிச் சொல்வியாடி... உருகி குழைஞ்சி ஒத்துழைச்சிருக்க மாட்ட...” தீயாய் வார்த்தைகளால் அவளைச் சுட்டான். அவன் கூறிய வார்த்தைகள் சம்மட்டியாய் அவள் நெஞ்சை தாக்கியது.

அந்தக் கணம் அவள் உள்ளுக்குள் ஏதோ ஒன்று நொறுங்கி போவதை அவள் உணர்ந்தாள். அதற்குப் பின் அவனின் செயலை அவள் எதிர்க்கவில்லை. கண்களில் வழிந்த கண்ணீர் கூட வற்றி விட... உணர்விருந்தும் பிணமாய் அவள் மாறி போனாள். அதை அவன் கொஞ்சமும் உணராமல் தன் காரியத்தில் கண்ணாயிருந்தான். அவளோ புயலில் சிக்கிய பூங்கொடியாய்... குரங்கு கையில் கிடைத்த பூமாலையாய் உருக்குழைந்து போனாள். அதிகாலையில் விடியலின் துவக்கத்தில் அவன் அவளை விடுவித்த போது அவள் தன் சுயவுணர்வை கொஞ்சம் கொஞ்சமாய் இழக்க ஆரம்பித்திருந்தாள்.

அலாரம் கிணுகிணுத்த ஒலியில் தூக்கம் கலைந்த ஆரன் அதை அமர்த்தி விட்டு புரண்டு படுத்து எப்போதும் போல் அருகில் படுத்திருந்த மனைவியை அணைத்துக் கொண்டு திரும்பவும் உறங்க முயன்றான். நேற்றைய இரவின் தூக்கமின்மையால் அவனின் கண்கள் தூக்கத்திற்காகக் கெஞ்சியது. நேற்றைய இரவு ஏன் தூக்கமில்லை? என்பது சட்டென்று அவனுக்கு நியாபகம் வர அதுவரை சுகமாய் அணைத்திருந்த மனைவியை நொடி பொழுதில் உதறித் தள்ளினான்.

அவன் உதறியதில் ஒருவித மயக்க நிலையில் இருந்த மயூரிக்கு நினைவு மெல்ல திரும்பலானது. கண்களைத் திறக்க முடியாமல் கனத்த இமைகளைப் பெரும் முயற்சி கொண்டு அவள் திறக்க... உடலெல்லாம் அடித்துப் போட்டது போன்று வலியை ஏற்படுத்த, “அம்மா...” என்று மெதுவே முனங்கினாள்.

அவளின் அம்மா என்றழைப்பில் அவனின் ஆத்திரம் இன்னமும் அதிகமானது. அது ஏன் என்று அவனுக்கும் தெரியவில்லை. அவனை அழைக்காமல் அவள் தன் அம்மாவை அழைக்கின்றாள் என்ற கோபமா? இல்லை அவளின் அம்மா என்றழைப்பு அவனின் அன்னையின் நியாபகத்தைக் கிளப்பிவிட்டதால் வந்த கோபமா? எதுவென்று தெரியாமலேயே அவள் மேல் அவனுக்குக் கோபம் வந்தது.

“ஏய் எழுந்திரு... எனக்கு ஆபிசுக்கு டைம் ஆச்சு...” என்று சொன்னவன் அவள் எழுந்தாளா இல்லையா என்று கூடக் கவனிக்காமல் குளியலறைக்குள் சென்று கதவை அடைத்துக் கொண்டான்.

அவனின் கோப குரலில் அவளின் உடல் பயத்தில் தூக்கி வாரி போட்டது. நேற்று அவன் நடந்து கொண்ட முறை அப்படி அவளைப் பயம் கொள்ளச் செய்தது. மெல்ல எழுந்தவள் தலையெல்லாம் பாரமாய்க் கனக்க அப்படியே

தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள். குளியலறையில் தண்ணீர் சத்தம் கேட்டு அவசரமாய் எழுந்து உடையை மாற்றியவள் நடக்கச் சிரமப்பட்ட கால்களை மிகுந்த பிரயாசைப்பட்டு நகர்த்தி அறையை விட்டு வெளியில் வந்தாள். பால்கனி ஓரமாக இருந்த மற்றொரு குளியலறைக்குச் சென்று முகத்தில் தண்ணீர் அடித்துக் கழுவியதும் அவளுக்குச் சிறிது தெம்பு வந்தது.

அதன் பின் அவள் சிந்திக்கக் கூட நேரம் இல்லாமல் வேலை அவளை இழுத்துக் கொள்ள... ஆரனுக்குத் தேவையானவற்றைத் தாயார் செய்து உணவு மேஜையில் வைத்தாள். அந்நேரம் ஆரனும் மிகச் சரியாக அங்கே வர மௌனமாய் அவனுக்குப் பரிமாறினாள். அவனோ உண்ணாமல் அவள் முகத்தைப் பார்க்க... அவளோ குனிந்த தலை நிமிராமல் நின்றிருந்தாள். அவன் முகத்தைப் பார்ப்பதற்கு அவளுக்கு அச்சமாக இருந்தது.

“நடைமுறை பழக்க வழக்கம் எல்லாம் உன் மாமன் மகனை கண்டதும் காற்றில் பறக்க விட்டாச்சா?” அவன் அடிக்குரலில் உறுமியதும் அவனை நிமிர்ந்து பார்த்தவள் முகம் எல்லையில்லா வேதனையைச் சுமந்திருக்கக் கண்களில் கண்ணீர் தேங்கி நின்றது. அவனோ அவள் முகம் பார்ப்பது கூடப் பாவம் என்பது போல் தன் முன் இருந்த தட்டை வெறித்துக் கொண்டிருந்தான்.

மெல்ல தோசையைப் பிய்த்துச் சட்டினியில் தோய்த்து அவன் வாயின் அருகில் கொண்டு போனவளின் கைகள் நடுங்கியது. அதைக் கண்டதும் அவனின் பொறுமை காற்றில் பறந்தது.

“இவ்வளவு வேண்டா வெறுப்பாய் நீ எனக்கு ஊட்ட வேணாம். முதலில் இங்கிருந்து போடி...” அவன் கத்தியதில் பயந்து போனவள் கையைக் கழுவும் எண்ணம் கூட இல்லாமல் சமையலைறைக்குள் சென்று நின்று கொண்டாள்.

சுவற்றில் சாய்ந்து நின்றவளுக்கு அடக்க மாட்டாமல் அழுகை பொங்கியது. கால்கள் நிற்க மாட்டாமல் துவள...

அப்படியே சரிந்து அமர்ந்தவள் முழங்காலை கட்டி கொண்டு தேம்பி தேம்பி அழுதாள். சிறிது நேரத்தில் கதவு அறைந்து சாத்திய சத்தத்தில் இருந்து அவன் கிளம்பி போய்விட்டதை உணர்ந்தாலும் அவளால் எழுந்து வெளியில் செல்ல முயலவில்லை. அவள் நேற்றைய நினைவின் தாக்கத்தில் இருந்தாள். அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும், செய்கையும் அவள் நியாபகத்தில் எழுந்து அவள் மனதை துடிக்கக் செய்தது.

‘என்ன வார்த்தை சொல்லிட்டீங்க ஆரு? நான் என்ன அப்படிப்பட்ட பொண்ணா? ஒருத்தனை மனசில் நினைச்சிட்டு அடுத்தவன் கூடப் படுப்பதற்கு நான் என்ன வேசியா ஆரு? ஆமாம்... நீங்க சொன்ன வார்த்தையின் அர்த்தமும் அது தானே? உங்களை மட்டுமே நேசித்த நான் தவறான பெண்ணா ஆரு? ரிஷியை திருமணம் செய்ய நான் விரும்பினேனா? அவனைத் திருமணம் செய்ய முடியாமல் தானே தற்கொலைக்கு முயன்றேன்... அது உங்களுக்குத் தெரியுமா? தெரிஞ்சிருந்தா இப்படியெல்லாம் பேசியிருப்பீங்களா? ஏன் ஆரு இப்படியெல்லாம் பேசறீங்க? என் உள்ளத்து உணர்வுகள் உங்களைக் கண்டால் மட்டுமே பொங்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா? உங்களின் பார்வை மட்டுமே என் மனதின் காதலை தட்டி எழுப்பும்ன்னு உங்களுக்குத் தெரியாதா ஆரு? என்னை உங்க உயிர்ன்னு சொல்வீங்களே... இப்படித்தான் உங்க உயிரை உயிரோடு கொல்வீங்களா?’ வெகுநேரம் மனதுக்குள் கணவனை நினைத்து உழட்டி கொண்டிருந்தவள் காய்ச்சலை வரவழைத்து கொண்டாள்.

****

ரிஷிக்கு இரவெல்லாம் உறக்கம் வரவில்லை. எப்போதடா விடியும் மயூரியை காண்போம் என்று அவன் உள்ளம் தவித்தது. நேற்று ஆரன் தன்னை அப்படி வெளியில் தள்ளி கதவை சாத்தியதும் தான் ரோஷப்பட்டு வந்திருக்கக் கூடாது என்று அதையே எண்ணி எண்ணி மாய்ந்து போனான். உள்ளே இருந்த மயூரியை பற்றிக் கூடக்

கவலையில்லாமல் தான் வந்ததை எண்ணி இப்போது துடித்துப் போனான்.

அவள் அந்த முரடனிடம் சிக்கி கொண்டு என்ன பாடுபடுகிறாளோ? என்ற நினைவே அவனின் தூக்கத்தை விரட்டி துக்கத்தைக் கொடுத்தது. பத்து மணி வரை பொறுத்து பார்த்தவன் அலுவலகத்துக்கு விடுமுறை எடுத்துக் கொண்டு மயூரியின் வீடு நோக்கி சென்றான். ஆரன் அலுவலகத்திற்குச் சென்றிருப்பான் என்று எண்ணியே அவன் இந்த நேரம் சென்றது. அப்படியே அவன் இருந்தாலும் பரவாயில்லை... இனிமேலும் அவளை அவனிடம் கஷ்டப்பட விடக் கூடாது என்று அவன் எடுத்த தீர்மானத்தின் படி அங்கே சென்றான்.

மயூரியின் வீட்டின் முன் நின்று அழைப்பு மணியை அவன் அழுத்த உள்ளிருந்து ஒரு சத்தமும் வரவில்லை. மீண்டும் மீண்டும் அவன் அழைப்பு மணியை அழுத்த எந்தவொரு பதிலும் இல்லாததால் பயந்து போனவனாய் கதவை தட்ட கதவின் மேல் கை வைத்தான். லேசாகச் சாத்தியிருந்த கதவு அவன் கை வைத்ததும் தானாகத் திறந்து கொண்டது.

“மயிலு... மயிலு...” ஆள் அரவம் இல்லாமல் வெறிச்சோடியிருந்த வீட்டில் அவனின் குரல் மட்டும் தனித்து ஒலிக்க அதைக் கேட்டு அவனுக்கு மனதில் இனம் புரியாத பயம் ஏற்பட்டது. அவனின் குரல் கேட்டு யாரும் வராததில் அவன் குழம்பி போனவனாய் ஹாலில் நின்றிருந்தான்.

பின்பு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு திறந்திருந்த அறை பக்கம் போக நினைத்தவன் நாகரீகம் என்று கருதி பால்கனி பக்கம் போனான் அங்கே யாருமில்லை. பின்பு சமையலறைக்குச் சென்று எட்டி பார்த்தான். அங்கே முழங்காலை கட்டி கொண்டு அமர்ந்திருந்த மயூரியை கண்டதும் தான் அவனுக்கு நிம்மதியாய் இருந்தது.

“மயிலு...” அவன் அழைத்தும் அவள் நிமிர்ந்து பார்க்காததில் அவன் பயந்து தான் போனான். வேகமாய் அவள் அருகில் சென்று கையைத் தொட, “ம்...”

முனங்கலாய் அவளிடமிருந்து பதில் வந்தது. அவள் நெற்றியில் அவன் கை வைத்து பார்க்க அது நெருப்பாய்க் கொதித்தது. அவளோ அவன் வந்ததைக் கூட அறிந்து கொள்ள முடியாத வண்ணம் பிரக்ஞையற்று கிடந்தாள். அவளை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று அவன் அறிவுக்கு எட்டினாலும் பதற்றத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் அவன் மைதிலியம்மாவின் வீடு நோக்கி ஓடினான்.

“மயூரி... அம்மாடி மயூரி...” செய்தி கேட்டு பதறி ஓடி வந்த மைதிலி அவளை எழுப்பியும் அவள் அசைவதாய் இல்லை.

“ரிஷி... காய்ச்சல் இப்படிக் கொதிக்குதே... பேசாம ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டு போயிடலாமா?” மைதிலி சொன்ன பின் ரிஷி சிறிதும் தாமதிக்கவில்லை. இருவரும் சேர்ந்து அருகிலிருந்த மருத்துவமனைக்கு அவளை அழைத்துச் சென்றனர்.

ரிஷி மருத்துவரின் அறையின் வெளியே நின்று கொள்ள... மைதிலி மயூரியை கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார். மயூரியின் உடல்நிலையைப் பரிசோதித்த அந்தப் பெண் மருத்துவரின் கண்ணில் அவளின் மேல் மார்பு மேலிருந்த பல் தடம் கண்ணில் பட அவருக்குப் பெருத்த சந்தேகம் வந்துவிட்டது. உடனே அவர் மைதிலியை வெளியில் இருக்கும் படி பணித்தவர் அவளின் உடலை நன்கு பரிசோதித்தார். அவளின் உடலில் காணப்பட்ட காயங்களைக் கண்டு பெண்ணான அந்த மருத்துவருக்குக் கண்கள் கலங்கி விட்டது. அவளுக்கு வந்த காய்ச்சலின் மூலக்காரணம் என்ன என்பது அவருக்குப் புரிந்து போனது.

வெளியில் நின்ற மைதிலியை அவர் அழைக்கவும் அவருடன் ரிஷியும் உள்ளே வந்தான். அவர்கள் இருவரையும் கண்டவர் ஆங்கிலத்தில் பொரிந்து தள்ளிவிட்டார். அதில் அவர் அதிகமாய்த் தாக்கியது ரிஷியை தான். அவனை அவள் கணவன் என்று அவர் நினைத்துவிட்டார் போலும். இப்படியும் ஒரு கணவன்...

ஆண் மகன் இருப்பானா? என்று அருவருத்து போனவரின் பார்வை அவனைக் குற்றம் சாற்றுவது போல் பார்த்தது.

“நீங்க எல்லாம் மனுசங்களா? இல்லை மிருகங்களா? ஒரு சின்னப் பெண்ணைப் போய் இப்படிப் படுத்த உங்களுக்கு எப்படி மனசு வந்தது? நான் இப்பவே போலீசுக்கு இன்பார்ம் பண்ண போறேன்” என்று அவர் கோபத்தில் அலைப்பேசியைக் கையில் எடுக்க... அவர் பேசிய ஆங்கிலம் அரையும் குறையுமாய் மைதிலிக்கு புரிய, மருத்துவரின் கைப்பற்றி அவரைத் தடுத்தார்.

“நீங்க நினைப்பது போல் இது அவள் கணவன் இல்லை. இவர் அவளோட ரிலேசன். நான் அவள் பக்கத்து வீட்டில் குடியிருப்பவள்” பெங்காலியில் தங்களை மைதிலி அறிமுகப்படுத்திக் கொள்ளவும் தான் அந்த மருத்துவர் கொஞ்சம் தணிந்தார்.

“ஓ... சாரி... அவளின் நிலை பார்த்து எனக்குக் கோபம் வந்துவிட்டது” என்று ரிஷியிடம் மன்னிப்பு கேட்டார். ரிஷியோ அவரின் மன்னிப்பை கேட்கும் நிலையில் இல்லை. அவன் திருமணமாகாதவனாக இருந்தாலும் அந்த மருத்துவர் கூறியதின் சாராம்சம் அவனுக்குத் தெளிவாய் புரிந்து அவனை வேதனையடையச் செய்தது.

“முதலில் அவளின் கணவனை அழைத்து வாருங்கள்... நான் அவனிடம் பேச வேணும்... பெண்கள்ன்னா அவனுக்கு அவ்வளவு இளக்காரமா போயிருச்சா?” என்று அவர் கத்த... ரிஷி தான் அவரைச் சமாதானம் செய்து மயூரியை வீட்டிற்கு அழைத்து வந்தான்.

கண் விழிக்காமல் படுத்து கிடந்த மயூரியை கண்டதும் மைதிலிக்குப் பயமாயிருந்தது. “ரிஷி... எதுக்கும் ஆரன் தம்பிக்கு ஃபோன் போட்டு சொல்லிடுவோம்” அவர் சொல்ல...

“உங்க இஷ்டம்...” என்ற ரிஷிக்கு ஆரன் மேல் வெறுப்பாய் இருந்தது.

ஆரனின் அலைப்பேசி எண்ணை கண்டுப்பிடித்து அவர் அவனிடம் விசயத்தைச் சொல்ல... அந்தச் செய்தி கேட்ட அவனுக்கோ அதிர்ச்சியாய் தான் இருந்தது. இருந்தாலும் மனதில் இருந்த வீம்பு அவனைப் போக விடாமல் தடுத்தது. அலுவலகத்தில் முக்கியக் கூட்டம் இருப்பதால் தன்னால் இப்போது வர முடியாது என்று கூறி அவன் அழைப்பை துண்டிக்க... மைதிலி அவனின் செய்கையில் அதிர்ந்து விட்டார்.

“ச்சே... என்ன மனுசன்... பொண்டாட்டிக்கு உடம்பு சரியில்லைன்னு சொல்லியும் வர முடியாதுன்னு சொல்றானே... இவனுக்கு மனசுன்னு ஒண்ணு இருக்கா? இல்லையா? எங்கே இருக்கப் போகுது... அதான் அவளைக் கிழிந்த நாராய் படுக்கக் வைச்சுட்டானே படுபாவி. இப்படிப்பட்டவனுக்கு அந்தக் கடங்காரன் வருண் வேற சப்போர்ட்டு... அவன் ஃபோன் பண்ணட்டும் நாக்கை பிடுங்கிற மாதிரி நாலு கேள்வி கேட்கிறேன்” ஆரனுடன் சேர்த்து வருணுக்கும் திட்டு விழுந்தது. ஹாலில் அமர்ந்திருந்த ரிஷிக்கு அவர் பேசியது நன்கு காதில் விழுந்தது.

மைதிலி புலம்பி கொண்டே மயூரிக்கு காலை உணவு கொடுத்து மருந்தை உட்கொள்ளச் செய்து அவளை ஓய்வு எடுக்கச் சொல்லி விட்டு ரிஷியிடம் வந்தார்.

“ரிஷி... அவன் வர மாட்டேன்னு சொல்லிட்டான். எனக்கும் வீட்டில் வேலை இருக்கு. நீ ஆரன் வர்ற வரைக்கும் கொஞ்சம் பார்த்துக்கிறியா? நான் உங்க ரெண்டு பேருக்கும் சமைச்சுக் கொண்டு வர்றேன்” அவர் சொல்லவும் அவன் சம்மதமாய்த் தலையாட்டினான். அவனும் ஆரன் வரும் வரை இருந்து அவனிடம் பேசிவிட்டு தான் போக வேண்டும் என்று மனதில் உறுதி எடுத்திருந்தான்.

மதியம் உணவை மைதிலி கொண்டு வந்து கொடுத்தவுடன் அவன் மயூரியை எழுப்பி உண்ண செய்தான். இப்போது

அவளுக்குக் காய்ச்சல் கொஞ்சம் விட்டிருந்தது. கொஞ்சம் தெம்பாய் இருப்பது போல் உணர்ந்தாள்.

“இப்போ எப்படியிருக்கு மயிலு? பெட்டரா ஃபீல் பண்றியா?” அவன் கேட்டதற்குச் சிறு புன்னகையுடன் தலையசைத்தாள்.

“நீங்க எப்போ மாமா வந்தீங்க?”

“நேத்து உன்னை அப்படியே விட்டுட்டுப் போனது மனசு கேட்கல... அதான் காலையில் உன்னைப் பார்க்க வந்தேன்... வந்து பார்த்தா...?” அவன் முடிக்காமல் நிறத்திவிட்டு அவள் முகத்தை ஆழ்ந்து பார்த்தான்.

“நீ... நீ... சந்தோசமாயிருக்கியா மயிலு?”

“எனக்கு என்ன மாமா நல்லாயிருக்கேன்...” வலிய வரவழைத்த புன்னகையுடன் சொன்னாள். கணவன், மனைவி உட்பூசலை மூன்றாம் மனிதனான அவனிடம் கூற அவள் விரும்பவில்லை. அவளுக்குத் தெரியாது... அவள் அரை மயக்க நிலையில் இருக்கும் போது மருத்துவர் அவனிடம் விசயத்தைப் போட்டு உடைத்துவிட்டார் என்று.

“பொய் சொல்லாதே மயிலு... உன்னைச் செக்கப் பண்ணின டாக்டர் உன் நிலைமையைப் பார்த்து கன்னாபின்னான்னு சத்தம் போட்டாங்க... அதிலும் என்னை உன் கணவன்னு நினச்சிட்டு போலீஸ்க்கு சொல்ல போயிட்டாங்க” என்றவன் அழுத்தமாய் அவளைப் பார்த்தான்.

என்ன தான் மாமன் மகன் என்றாலும் அந்நிய ஆண் மகனின் முன் தன் அந்தரங்கம் அலச பட்டதை நினைத்து அவள் முகம் கறுத்து சுருங்கி போனது. அவமானத்தில் அவன் முகம் பார்க்க முடியாமல் அவள் தலை தானாகக் குனிந்தது. அவளின் மௌனத்தை அவன் வேறு மாதிரியாக நினைத்துக் கொண்டான்.

“இப்படி ஒரு ராட்சசன் கூட... கொலைக்காரன் கூட நீ கஷ்டப்பட்டு வாழணுமா? உங்க அம்மா, அப்பா இதுக்கா

உன்னை அப்படிச் செல்லமா வளர்த்தாங்க... அவன் உன்னை ப்ளாக்மெயில் பண்ணி கல்யாணம் பண்ணிக்கிட்டானா...? எதுவாயிருந்தாலும் சொல்லு மயிலு... இல்ல பேசாம என் கூட வந்திடு. நான் உன் அப்பா, அம்மா கிட்ட கொண்டு போய் விட்டுர்றேன்...” அவன் மூச்சு விடாமல் பேசி கொண்டு போக... என்ன தான் இருந்தாலும் கணவனை அவன் குறை கூறுவது அவளுக்குப் பிடிக்கவில்லை.

“அவர் கஷ்டப்படுத்தியதா நான் எப்போ சொன்னேன் மாமா... நான் அவரை விரும்பி காதலிச்சு தான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். அவர் என்னை நல்லா தான் பார்த்துக்கிட்டார். நீங்க இங்கே வருவதற்கு முன்னாடி வரை நாங்க சந்தோசமா தான் இருந்தோம். ஆனா நீங்க வந்த பின்னாடி தான் அவர் இப்படி நடந்துக்கிறாரு... அதான் எனக்கும் ஏன்னு புரியல?” அவள் ஆரனை விரும்பியதாய் சொன்னதுமே அவன் மனதில் பெரிய பிரளயமே வெடித்தது. அந்தக் கணம் அவனின் காதல் கோட்டை சத்தமில்லாமல் சரிந்து விழுவதைக் கையாலாகாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கு ஒன்றும் மட்டும் புரிந்தது தான் தான் தேவையில்லாமல் எதை எதையோ நினைத்துக் கொண்டு அவர்கள் வாழ்வில் குறுக்கிட்டு விட்டோமோ என்று. ஒருவேளை தான் பேசிய வார்த்தைகள் தான் ஆரனை உசுப்பேத்தி விட்டிருக்குமோ என்று அவனுக்குத் தோன்றியது. அந்த எண்ணம் அவனுக்கு வந்ததுமே குற்றவுணர்வில் அவன் நெஞ்சம் குறுகுறுத்தது.

“அவரை இன்னொரு முறை கொலைக்காரன்னு சொல்லாதீங்க... எந்தச் சூழ்நிலையில் அவர் அதை எப்படிச் செய்தாரோ? அதுக்கான தண்டனையை அவர் அனுபவிச்சதுக்கு அப்புறமும் நாம அதையே பேசி அவரைப் புண்படுத்துவது நியாயம் இல்லை. அதனால ஏற்பட்ட காயம்... அந்தக் காயத்தோட வலி அவரோட அடிமனதில் இன்னமும் இருந்திட்டு இருக்கு. அதைப் புரிஞ்சுக்காம நாம அவரை நோகடிக்கிறதுல எந்தவொரு நியாயமும் இல்லை”

ஆரனை கொஞ்சமும் விட்டுக் கொடுக்காமல் அவள் பேசினாள்.

நேற்று ஆரன் நியாயமற்ற முறையில் நடந்து கொண்டும் கூட அவனுக்காகப் பரிந்து கொண்டு சப்பை கட்டு கட்டும் மயூரி ரிஷியின் கண்களுக்குப் புதிதாய் தெரிந்தாள்.

“ஒண்ணும் மட்டும் நல்லா தெரியுது மயிலு... கல்யாணத்துக்கு அப்புறம் நல்லா பேச கத்துக்கிட்ட... அது எப்படி... இந்த ஆண்கள் எவ்வளவு கொடுமைப் படுத்தினாலும் பெண்கள் நீங்க அவங்களுக்கு அடங்கிப் போறீங்க?” அவன் நக்கலாய் கேட்பது போல் கேட்டாலும் அதில் அவனின் காதலித்த மனதின் வலி நன்கு வெளிப்பட்டது. அதை அவள் கொஞ்சமும் உணரவில்லை.

“உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமா? நம்ம காவ்யா இருக்கால்ல...” காவ்யா அவனின் பெரியத்தைப் பெண். மயூரியின் பெரியம்மாவின் பெண்.

“ம்... அவளுக்கு என்ன?”

“அவ இப்படித்தான் ஒரு தடவை மாமா கூடக் கோபிச்சுக்கிட்டு பெரியம்மா வீட்டுக்கு வந்துட்டா” அது அவனுக்கும் தெரியும். அதனால் அமைதி காத்தான்.

“அப்போ எங்க அம்மா அவ கிட்ட பேசினாங்க. அதில் உள்ள கருத்து என்னை ரொம்பவும் கவர்ந்தது. இந்த ஒரு தடவை தான் உன் புருசன் கையை நீட்டி அடிச்சாரா? இல்லை தினமும் அடிப்பாரான்னு கேட்டாங்க. இந்த ஒரு தடவை தான்னு காவ்யா சொன்னா... அதுக்கு அம்மா... இப்படி எடுத்தோம் கவுத்தோம்ன்னு ஆ ஊன்னு பிறந்து வீட்டுக்கு வர கூடாது. அவர் இத்தனை நாள் சந்தோசமா வச்சிருந்தார்ன்னு நீயே சொல்ற. அப்படிப்பட்டவர் அடிச்சார்ன்னா எங்கே தவறுன்னு யோசிச்சு பாரு. உனக்கே அது புரியும்”

“அவரோட சந்தோசமா இருந்தப்போ அவர் கூட இருந்திட்டு... இன்னைக்கு ஒரு கோபம் வந்ததும் அவரை

விட்டு வந்துட்டியே... அவரும் உன்னை அடிச்சிட்டு உன் அளவுக்கு மனசுல கஷ்டப்பட்டுட்டு தான் இருப்பாரு. போய்த் தப்பு யார் மேலன்னு யோசிச்சு பாரு... அது அவர் மேல இருந்தாலும் பொறுமையா எடுத்து சொல்லு. நிச்சயம் அவர் தன் தவறை உணர்ந்து கொள்வார். உன் கிட்ட மன்னிப்பும் கேட்பாரு. அம்மா சொன்ன மாதிரி தான் காவ்யா வாழ்க்கையிலும் நடந்தது. அதைத் தான் நானும் இப்ப செய்றேன்"

"அவரோட வாழ்ந்த இந்த மூணு நாள் வாழ்க்கையும் முன்னூறு நாள் வாழ்ந்த சந்தோசத்தை எனக்குக் கொடுத்திருக்கு. அப்படிப்பட்டவர் நேத்து கோபப்பட்டாருன்னா அதுக்கு ஏதாவது காரணம் இருக்கும்ன்னு எனக்குத் தோணுது. இத்தனை நாள் அவர் காட்டிய அன்பு பொய்யில்லை மாமா. அவர் கண்ணில் தெரிஞ்ச காதல் பொய்யில்லை. எனக்கு ஏதாவது ஒண்ணுன்னா அதுக்கு அவர் துடிச்ச துடிப்பு பொய்யில்லை... அவர் மனசுல என் மீதான காதலிருக்கு... அதேசமயம் அவர் மனதில் கடந்த காலக் காயமும் இருக்கு" அவள் முடிக்கும் முன்பே,

"என்னை மன்னிச்சிரும்மா..." வேதனை நிரம்பிய குரலில் ரிஷி பேசியது கேட்டு அவள் புரியாமல் அவனைப் பார்த்தாள்.

"நேத்து ஆரன் கோபப்பட்டதுக்கு நான் தான் காரணம்... நான் பேசிய வார்த்தைகள் தான் காரணம்" என்றவன் நேற்று ஆரனை தான் வம்பிழுத்ததைக் கூறினான். அதைக் கேட்டு அவள் திகைத்து போய்விட்டாள்.

"ஏன் மாமா அப்படிப் பேசினீங்க? அவர் சும்மாவே நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சவ தானேன்னு என்னைத் தேளாய் கொட்டிட்டு இருக்காரு. இதில் உங்க வார்த்தைகள் அவரை எந்தளவுக்கு வெறியேத்தி இருக்கும்ன்னு நீங்க கொஞ்சமும் யோசிச்சு பார்க்கலையா? உங்களுக்கு ஒண்ணு தெரியுமா? அப்பா உங்களைக் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு

சொன்னப்போ... நான் அவரை மறக்க முடியாமல் தற்கொலை செய்ய முடிவெடுத்தேன். அப்போ தான் அவர் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டார். அவர் என்னை ரட்சிக்க வந்த கடவுளா தான் நான் பார்க்கிறேன். நீங்க என்னடான்னா ஏதேதோ நினைச்சிட்டு அவரை இப்படிக் காயப்படுத்திட்டீங்களே?" அவள் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனின் இதயத்தில் குத்தீட்டியாய் குத்தி கிழித்தது.

தான் மனதார காதலிக்கும் பெண்ணின் வாயிலிருந்து 'உன்னைக் கல்யாணம் பண்ணுவது எனக்கு இறப்பதற்குச் சமம்' என்று கூறுவதைக் கேட்டும் தான் இன்னமும் உயிரோடு தான் இருக்கிறோமா? என்று அவன் மனம் கழிவிரக்கத்தில் ஊமையாய் அழுதது. இப்போது அவனுக்கு அவளின் கணவன் மீதான காதல் நன்கு புரிந்தது.

"ஓகே மயி... சாரி இனி அப்படிக் கூப்பிடறதுல அர்த்தம் இல்லை... ஓகே மயூரி... என்னால் பிளவுப்பட்ட உன் வாழ்க்கையை நானே சரி பண்ணிட்டு போறேன். ஆரன் வரட்டும் நானே அவன் கிட்ட மன்னிப்பு கேட்டுட்டு போறேன்" அவன் மனதார தன் தவறை உணர்ந்து சொல்ல...

"வேணாம் மாமா... அவங்க கோபக்காரங்க... உங்க கிட்ட தப்பா எதுவும் நடந்துக்கிட்டா...? நான் அவரைச் சமாளிச்சிக்கிறேன். நீங்க கிளம்புங்க"

"இல்லை மயூரி... அவன் வந்ததும் பேசிட்டு போறேன்... அப்ப தான் எனக்கும் நிம்மதியா இருக்கும்" என்றவன் ஆரனுக்காகக் காத்திருக்கலானான். அவனுடன் சேர்ந்து ஆரனுக்காகக் காத்திருந்த மயூரி சிறிது நேரத்திற்கு மேல் உட்கார முடியாமல் உடல் அசதியில் தூக்கம் கண்களைச் சுழட்ட படுக்கச் சென்றுவிட்டாள்.

என்ன தான் வீம்பு பிடிப்பது போல் மைதிலியிடம் பேசினாலும் ஆரனால் வெகுநேரம் அலுவலகத்தில் வேலை செய்ய முடியவில்லை. பொறுத்து பொறுத்து பார்த்தவன்

பின்பு மனம் கேட்காமல் வீட்டிற்குக் கிளம்பி சென்றான். படபடக்கும் மனதுடன் வீட்டின் கதவை திறந்தவன் அங்கு ஹாலில் அமர்ந்திருந்த ரிஷியை கண்டதும் அவ்வளவு நேரம் அவன் மனதிலிருந்த இரக்கம் போய்ப் பழையபடி குரூரம் குடியேறியது.

“டேய்... உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தா மறுபடியும் என் வீட்டில் காலடி எடுத்து வைப்ப. அவ்வளவு தூரம் நான் உன்னை வெளியில் தள்ளி கதவை சாத்தியும் உனக்குக் கொஞ்சம் கூட மான ரோசம் வரல. போடா வெளியே...” கத்தி கொண்டே ரிஷியின் அருகில் வந்தவன் அவனின் சட்டையில் கை வைக்கப் போக... அதற்குள் சோபாவில் இருந்து எழுந்த ரிஷி அவனை ஆழ்ந்து பார்த்தான்.

“என் வீட்டுக்குள்ளேயே வந்து என்னையே திமிரா பார்ப்ப... உன்னை...?” ஆரனின் கர்ஜனையில்... மருந்தின் வீரியத்தில் உறங்கி கொண்டிருந்த மயூரி எழுந்து வந்தாள்.

அங்கு நின்றிருந்த கணவனின் கோபத்தில் அவள் மனம் அதிர்ந்தாலும் நேற்று போல் ஏதும் அசம்பாவிதம் நடந்து விடக் கூடாது என்று எண்ணி அவனை நோக்கி வேகமாய் வந்தாள். அவளின் மனதின் வேகத்திற்கு அவளின் உடல் ஒத்துழைக்க வில்லை. கால்கள் தொய்ந்து துவள தடுமாறி கீழே விழ போனவளை இருவரும் ஒரே நேரத்தில் கண்டு கொண்டனர்.

ரிஷி அவள் அருகில் வந்து அவளைத் தாங்க முயல... அவள் தன்னியல்பாய் ரிஷியின் கையை விலக்கி விட்டு கணவனின் அருகில் வந்து அவனின் தோளில் சாய்ந்து கொண்டாள். அவளின் இந்தச் செய்கை ஆரனின் மனதிற்கு இதத்தை அளித்தாலும் அவன் அவளைத் தாங்க முன்வரவில்லை. அவள் தான் அவனைப் பற்றுகோலாய் பற்றியிருந்தாள்.

அவ்வளவு நேரம் ரிஷியுடன் பேசியதாலோ இல்லை மருந்தின் வீரியத்தினாலோ கண்கள் சொருக ஆரனின் மேல் சாய்ந்திருந்தவளின் நிலையைக் காண சகிக்காதவனாய் ரிஷி,

“உன்னை நம்பி வந்திருக்கும் பெண்ணை இப்படித்தான் கொடுமைப்படுத்துவாயா? இப்படிப்பட்ட உனக்காக அவள் தற்கொலை பண்ணும் அளவுக்குப் போயிருக்காளே... அப்படி அவள் உயிரை கொடுத்து காதலிக்கும் அளவுக்கு அப்படி என்ன தான்டா உன் கிட்ட இருக்கு? ஆட்டையும் மாட்டையும் போல் பெண்ணை நடத்தும் உன்னை எல்லாம் போய் ஒருத்தி உயிருக்கு உயிராய் காதலிக்கிறாளே அவளைச் சொல்லணும்” கோபமாய் அவன் இரைந்தான்.

ரிஷியின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஆரனின் மனதில் பனி மழைச் சாரலாய் விழுந்து அவனைச் சுகமாய் நனைத்தது. அவனின் கைகள் தானாய் தன்னவளின் இடையை அணைத்துப் பிடித்தது. அவனின் இறுகிய பிடியில் ‘இவள் எனக்கு மட்டுமே சொந்தமானவள்’ என்ற செய்தி இருந்தது.

‘என்னது எனக்காக என் பேபி உயிரையும் விடத் துணிந்தாளா? அந்தளவுக்கு என் மேல் காதலா?’ ஆரன் மயூரியின் முகத்தைக் கனிவுடன் பார்க்க... அவளோ அவன் தோள் வளைவில் முகம் புதைத்திருந்தாள். அவளின் அந்த உரிமையான செய்கை அவனுக்குப் பெருமையாயிருக்க அவன் ரிஷியை கர்வத்துடன் பார்த்தான்.

“என் மனைவி மனசுல நான் தான் இருக்கேன்... அவ என்னைத் தான் காதலிக்கிறாள்ன்னு இப்பவாவது உனக்குப் புரிஞ்சதா ரொம்பச் சந்தோசம்... முதல்ல நடையைக் கட்டு...” அவனிடம் சொன்ன ஆரன் தன் கையை வாசற் பக்கம் காட்டினான்.

“என்னங்க...” ஹீனமாய் முனங்கிய மயூரியை கண்டவன் சட்டென்று அவளை நாற்காலியில் அமர வைத்தான்.

“என்ன உனக்கு நான் சொன்னது புரியலையா? கிளம்பு நீ...” ஆரனுக்கு மனைவி மேலிருந்த கோபம் குறைந்தாலும்... ரிஷியின் மேலிருந்த ஆத்திரம் சற்றும் குறையவில்லை. அவன் மனைவியை அவனிடமிருந்து பிரிக்க நினைத்தவனாயிற்றே இந்த ரிஷி... பின்னே கோபம் இல்லாமல் இருக்குமா?

“நான் கிளம்பத் தான் போறேன்... நீ சொன்னாலும் நான் இங்கே இருக்கப் போவதில்லை” என்ற ரிஷி, “நான் பேசியது தவறு தான் ஆரன்... என்னை மன்னித்துவிடு...” மனம் உருக அவன் கேட்ட மன்னிப்பு ஆரனின் மனதை சிறிதும் அசைக்கவில்லை.

“எப்படிடா உன்னை மன்னிக்க முடியும்? அடுத்தவன் மனைவின்னு தெரிந்தும் அவளைத் தூக்கிட்டு பறந்து போயிருவேன்னு சொல்றது... மயிலு... மயிலுன்னு என் கண் முன்னால நீ அவளைக் கொஞ்சுறது. இதையெல்லாம் பார்த்தும் நான் உன்னை மன்னிக்கணுமா? எந்த முகத்தைக் கொண்டு மன்னிப்பு கேட்கிற? கட்டிய கணவன்

முன்னாலேயே இப்படி நடந்துக்கிற உன்னை எல்லாம்...?” கோபத்தில் பல்லை கடித்தவன் ரிஷியை முறைத்தான்.

ரிஷி ஆரனை நிதானமாய்ப் பார்த்தவன், “ஆறு மாசமா லவ் பண்ணின உனக்கே அவள் மேல் இத்தனை உரிமை இருக்கும் போது... சின்ன வயசில் இருந்து அவளை லவ் பண்ற எனக்கு... நீ அவளைக் கல்யாணம் பண்ணினது எவ்வளவு அதிர்ச்சியா இருந்திருக்கும்” ரிஷி சொல்லும் போது அவனை வியப்பாய் பார்த்தாள் மயூரி. ரிஷியின் காதல் பற்றி அவளுக்கு எதுவும் தெரியாது.

“பதினைந்து வருசம் நான் அவளை உயிருக்கு உயிராய்க் காதலித்தேன். காத்திருந்தவன் பொண்டாட்டியை நேத்து வந்தவன் தூக்கிட்டு போன மாதிரி இடையில் வந்து அவ மனசை கலைச்சு தூக்கிட்டுப் போனது நீ தான்... நானில்லை. தாலிங்கிற பேரில் மஞ்சள் கயிறை நீங்க கட்டின உடனே நாங்க பழசை எல்லாம் மறந்துட்டு எங்கிருந்தாலும் வாழ்கன்னு வாழ்த்திட்டு போயிறணுமா? நினைச்சப்போ நிறத்தை மாத்திக்க மனசு ஒண்ணும் பச்சோந்தி இல்லை...”

“நான் பண்ணின ஒரே தப்பு மயூரி மனசை புரிஞ்சிக்காம உன் கிட்ட பேசியது தான். அதுக்கு நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன். நாம நேசிச்சவங்க சந்தோசமா இருக்கிறதுக்காக விலகி போறது தான் நல்ல காதலுக்கு அடையாளம். அதே மாதிரி நான் மயி... சாரி... மயூரி சந்தோசத்துக்காக நான் விலகி போறேன். இனியாவது அவள் மனதை புரிந்து கொண்டு அவளைச் சந்தோசமா வச்சுக்கோ...” ரிஷியின் வார்த்தைகள் அவனைச் சாந்தப்படுத்துவதற்குப் பதில் அவனின் கோபத்தை அதிகப்படுத்தியது. மயிலு மயூரியாய் மாறிப் போனது கூட அவனின் காதில் விழவில்லை.

“உங்க அட்வைசுக்கு ரொம்ப நன்றி... என் மனைவியைப் பார்த்துக்க எனக்குத் தெரியும். நீ ஒண்ணும் சொல்ல தேவையில்லை...” நக்கலாய் சொன்னவன் மீண்டும் வாயிற் பக்கம் கையைக் காட்டினான்.

“நீ என்னை எவ்வளவு அவமரியாதை செய்தாலும் நான் அதைப் பற்றிப் பெரிதாக அலட்டிக்க மாட்டேன்... கவலைப்பட மாட்டேன்” அலட்சியமாய்த் தோளை குலுக்கி சொன்ன ரிஷி, “ஏன்னா எங்க வீட்டு பொண்ணு இங்கே இருக்கா... அவளுக்காக நான் இங்கே வருவேன்... அவளைப் பார்ப்பேன். இனியும் இந்த மாதிரி அவளைத் துன்புறுத்தினா... ஏன்னு தட்டி கேட்க அவளோட பிறந்த வீட்டு சார்பா நானிருக்கேன். அதை உன்னால தடுத்து நிறுத்த முடியாது” ஆரனிடம் சொன்னவன் மயூரியிடம் திரும்பி,

“இப்போ நான் போயிட்டு வர்றேன்... உனக்கு எந்த நேரத்தில் என்ன ஹெல்ப் வேணும்னாலும் என் கிட்ட கேட்கலாம்” என்றவன் ஆரனை திரும்பியும் பார்க்காமல் வெளியேறினான்.

“ஆமாம்... இப்போ இவன் எதுக்கு இங்கே வந்தான்? எதுக்கு இப்படிக் கத்திட்டு போறான்?” அவனின் கோபம் மயூரியின் பக்கம் திரும்பியது.

“அவர் தான் என்னை ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டு போனாரு...” அவன் முகம் பார்க்காமல் தலையைக் குனிந்தபடி சொன்னவள்... அறைக்குச் செல்ல எண்ணி எழுந்தவள் உடல் பலகீனத்தில் நடுங்கியது. அவளின் உடல் நடுக்கத்தைக் கண்டவன் அவளைத் தூக்கி கொண்டு உள்ளே சென்று படுக்கையில் படுக்க வைத்தான். அவள் உடலை சுருட்டி கொண்டு படுத்ததைக் கண்டவன் அவளை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

‘ச்சே... அவன் ஹாஸ்பிட்டல் கூட்டிட்டு போகிற வரைக்கும் நான் வேடிக்கை பார்த்திட்டு இருந்திருக்கேனே...’ தன் முன்நெற்றியில் அறைந்து கொண்டான். அவன் அப்போதும் உணரவில்லை தன் செயலால் தான் அவளுக்குக் காய்ச்சல் வந்தது என்பதை. அவளுக்குப் போர்த்திவிட்டு அறையை விட்டு வந்தவன் இரவு உணவு வாங்குவதற்காக வெளியில் சென்றான்.

அடித்துப் போட்டார் போன்று உறங்கி கொண்டிருந்தவளை எழுப்பியவன் அவளுக்குப் பிரெட்டை பாலில் தோய்த்துப் புகட்டினான். அவனின் செயலில் அவளின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. நேற்று அவளை உடலளவிலும், மனதளவிலும் காயப்படுத்தி விட்டு இன்று அன்னையாய் அரவணைக்கும் அவனின் செயல் அவளுக்குப் புரியாத புதிராய் இருந்தது.

“காய்ச்சலோட ஏன் அழற?” என்று அவளைக் கடிந்தவன் அவளின் கண்ணீரை துடைத்து விட்டான்.

“சாரி...” தன் கன்னங்களைத் துடைத்த அவனின் கையைப் பற்றிக் கொண்டு அவள் மன்னிப்பு வேண்ட... அவன் ஏன்? என்பது போல் அவளைப் பார்த்தான். அப்போதும் அவனுக்குத் தான் நேற்று செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தோன்றவில்லை. தோன்றவில்லையா? இல்லை அவன் செயலை அவன் தவறு என்று உணரவில்லையா?

“ரிஷி மாமா மனசுல இப்படியொரு எண்ணம் இருக்கும்ன்னு எனக்குத் தெரியாது”

“தெரிஞ்சிருந்தா... அவனைக் காதலிச்சு இருப்பியா?” அவளைப் பார்த்து கூர்மையாய் கேட்டான். அவளோ அவனின் வார்த்தையில் கோபப்படாமல்,

“இல்லை...” மறுப்பாய் தலையசைத்தவள், “அவர் கிட்ட எனக்குக் காதல்ங்கிற உணர்வு எப்போதும் தோன்றியது இல்லை. எனக்குக் காதல் வந்தது உங்க கிட்ட தான்... உங்களைப் பார்த்து மட்டும் தான்” அவளின் வார்த்தையில் அவன் முகம் மலர்ந்தது.

“உனக்கு என்னை மட்டும் தான் பிடிக்குமா பேபி?” தவிப்பாய் அவன் கேட்டதும்,

“உங்களை மட்டும் தான் பிடிக்கும்... ரிஷியை கல்யாணம் பண்ணிக்க முடியாம... உங்களுக்காக என் உயிரை விடக் கூடத் துணிந்தேனே அதிலிருந்தே தெரியலையா உங்க

மேலான என் காதல்” நிதானமாய் அதேசமயம் ஒவ்வொரு வார்த்தையும் அவள் அழுத்தி சொல்ல... ரிஷியை புறக்கணித்து விட்டுத் தன்னை மணந்த அவளின் காதல் மனம் அவனுக்குத் தெரிந்ததும் அதுவரை அவனின் மனதில் அழுத்தி கொண்டிருந்த பாரம் சூரியனை கண்ட பனிமூட்டம் போல் விலகி ஓடியது.

“எனக்காக உன் உயிரையும் விடுவியா? அந்தளவுக்கு என் மேல் உனக்குக் காதலா? என்னை விட்டு நீ போயிருவியோன்னு நான் பயந்தே போயிட்டேன் பேபி” அவன் குரலில் இருந்த வேதனையை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

“நான் தான் ஏற்கெனெவே சொல்லியிருக்கேனே உங்களை விட்டு நான் போக மாட்டேன்... அப்படி நான் உங்களை விட்டுப் போனால் அது எனது இறந்த நாளாகத் தான் இருக்கும்ன்னு” என்று சொன்னவள் அவன் தோளில் தலை சாய்த்து கொண்டாள். அவனும் அவளை அணைத்துக் கொண்டான். நேற்று இருந்த மனக்கசப்பு அவன் மனதிலிருந்து முற்றிலும் அகற்றப்பட்டது.

“நீங்க சாப்பிட்டீங்களா?” திடீரென்று அவன் முகம் பார்த்து அவள் வினவ,

“இல்லை பேபி...” தலையை வலமும் இடமுமாய் அசைத்தவனைப் பார்த்து,

“இருங்க நான் எடுத்திட்டு வர்றேன்” அவள் எழும்ப முயல...

“வேணாம்... உனக்கு உடம்பு முடியல... நானே எடுத்திட்டு வர்றேன்” என்றவன் சமையலறைக்குச் சென்று தன் உணவை அங்கே எடுத்து வந்தான். அவனின் கையிலிருந்து உணவை வாங்கி அவள் அவனுக்கு ஊட்டி விட அதில் மனம் நெகிழ்ந்தவன் சந்தோசமாய் உணவிற்காக வாய்த் திறந்தான். உணவு உண்டு முடித்ததும்,

“நீ கொஞ்ச நேரம் சாய்ஞ்சு உட்காரு...” கட்டிலின் தலைப்பக்கம் தலையணையைச் சாய்வாகப் போட்டவன் அவளைச் சாய்ந்து அமர செய்தான். “நான் போய்க் கிச்சனை ஒழுங்கு படுத்திட்டு வர்றேன்” என்றவன் கையிலிருந்த பாத்திரங்களுடன் அறையை விட்டு வெளியேற... அவனின் முதுகையே வெறித்துப் பார்த்து கொண்டிருந்தவள் முகத்தில் மலர்ச்சி இல்லை மாறாக வெறுமை தான் இருந்தது.

“ப்ளீஸ் பேபி... நீயும் என்னை வெறுத்தா நான் எங்கே போவேன்? நான் வாழ்க்கையில் ரொம்ப அடிப்பட்டுட்டேன் பேபி. என்னையும் அறியாமல் நான் உன்னைக் காயப்படுத்தினா எனக்குச் சொல்லி புரிய வை பேபி. தயவுசெய்து என்னைத் தண்டிச்சிறாதே பேபி. என்னால் தாங்க முடியாது” அவனின் வார்த்தைகள் அவள் காதில் இன்னமும் ஒலித்துக் கொண்டிருந்தது.

‘ஆரு... உங்க வார்த்தைக்கு... உங்க காதலுக்கு... நான் நியாயம் செய்துட்டேன். ரிஷி கிட்டேயும் உங்களை நான் விட்டு கொடுக்கல... உங்களுக்கும் என் மனசை நான் தெளிவா புரிய வச்சுட்டேன்... ஆனா... ஏன் ஆரு நேத்து அப்படி நடந்துக்கிட்டீங்க? நேத்து ஒரு நாள் இரவில் என் காதலை சாக அடிச்சிட்டீங்களே... என் உடலை மட்டுமா காயப்படுத்தினீங்க... மனசையும் சேர்த்து அல்லவா காயப்படுத்துனீங்க. அது எப்படி ஆரு உங்களால முடிந்தது? என்னைப் பத்தி தப்பா எப்படிப் பேச முடிந்தது? உங்க இந்தக் கோபம் இன்றுடன் முடிந்து விடுமா? இல்லை நம் வாழ்க்கை முழுவதும் தொடருமா?’ அவளின் கேள்விகளுக்கு விடை தான் தெரியவில்லை. அவள் கண்ணில் இருந்து வழிந்த கண்ணீர் தலையணையை நனைத்தது.

“பேபி படுக்கலாமா...?” ஆரன் உள்ளே வர அவள் தன் கண்ணீரை அவனுக்குத் தெரியாமல் மறைத்து கொண்டாள்.

“நீங்க படுங்க...” என்றவள் மருத்துவர் கொடுத்த மருந்துகளை ஆராய்ந்தாள்.

“டேப்லெட் எதுவும் கொடுத்துருக்காங்களா?” அவள் கையிலிருந்து வாங்கிப் பார்த்தவன் இரவு போடுவதற்கான மாத்திரையை எடுத்து அவளிடம் கொடுத்தான். அதை அவள் போட்டுக் கொண்டதும் அங்கிருந்த ஆயின்மேன்ட்டை பார்த்து, “இது எதுக்கு?” புரியாமல் அவளைப் பார்த்தான். அதைப் பார்த்தும் அவள் தன்னுள் பொங்கிய துக்க உணர்வை உதட்டை கடித்து அடக்கி கொண்டாள்.

“காயத்துக்குப் போட சொல்லி கொடுத்தாங்க” அவன் முகம் பார்க்காமல் தன் கையைப் பார்த்துக் கொண்டு அவள் சொல்ல...

“காயமா? உனக்குக் காய்ச்சல் தானே இருக்கு?” அப்போதும் அவனுக்குப் புரியவில்லை.

‘அந்தக் காய்ச்சலே இந்தக் காயத்தினால் வந்தது தானே...’ என்று மனதுக்குள் நினைத்தவள், “உங்களுக்குச் சொன்னா புரியாது... நானே போட்டுக்கிறேன்” என்றவள் அவன் கையிலிருந்து ஆயின்மேன்ட்டை வாங்கிக் கொண்டு குளியலறைக்குள் செல்ல முயல... ஒரே எட்டில் அவள் அருகில் வந்தவன்,

“எனக்கு என்ன புரியாது? இப்போ உண்மையைச் சொல்ல போறீயா இல்லையா?” என்றபடி அவள் கையைப் பிடித்துத் தடுத்தான்.

“வேணாம் ஆரு விடுங்க...” அவன் பிடியிலிருந்து தன் கைகளை அவள் விடுவிக்க நினைக்க... அவனின் பிடியோ இரும்பு போல் உடும்பு பிடியாய் இருந்தது.

“என்ன விடுங்க... முதல்ல சொல்லு...” அவன் தன் நிலையில் நிற்க...

“சொல்றேன்... சொல்றது என்ன காட்டவே செய்றேன்...” என்றவள் தன் சுடிதாரின் முன் பக்க பட்டனை கழட்டி கழுத்துக்குக் கீழிருந்த பகுதியை லேசாகக் காட்டினாள். அங்கே ரத்தம் கன்றி போய் இருந்த காயங்கள் அனைத்தும்

முந்தையை இரவு அவன் அவளிடம் காட்டிய வெறித்தனத்தை அப்பட்டமாய் அவனுக்கு முகத்தில் அறைவது போல் எடுத்துரைத்தது.

அது தந்த அதிர்வில் அவன் அவளிடமிருந்து தன்னிச்சையாய் இரண்டடி பின்னால் நகர்ந்தான். அவளுக்கு வந்த காய்ச்சல் எதனால் என்று இப்போது அவனுக்கு நன்கு புரிந்தது. தான் இந்தளவுக்கு வெறித்தனமாய் நடந்து கொண்டோம் என்பதை அவனால் இன்னமும் நம்ப முடியவில்லை. ஆனாலும் கண்ணுக்கு எதிரில் சாட்சியாக இருக்கும் மனைவியின் காயங்கள் அவன் மனதை அப்படியே குத்தி கொன்றது. இரவின் இருட்டில் அவன் செய்த பாவங்கள் விளக்கின் வெளிச்சத்தில் அவனால் கண் கொண்டு பார்க்க முடியாமல் கண்களையும், மனதையும் கூச செய்தது.

“இது கொஞ்சம் தான்... இன்னமும் உடலில் இது போல் நிறைய இருக்கு” என்றவள் பட்டனை போட்டுக் கொண்டு குளியலறைக்குள் செல்ல முயல... அவனோ அவளை நகர முடியாதபடி பின்னாலிருந்து கட்டி பிடித்திருந்தான்.

“சாரி பேபி...” அவளின் தோள்வளைவில் முகம் புதைத்தவனின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் அவளின் தோளை நனைத்தது. அவள் ஒன்றும் பேசாமல் அவனின் அணைப்பில் அப்படியே நின்றிருந்தாள். செய்வதெல்லாம் செய்து விட்டு அவன் கண்ணீர் வடித்தால் மட்டும் அவளின் மனக்காயங்கள் ஆறி விடுமா என்ன? காலம் தான் பதில் சொல்லணும்.

“நான் மனுசனே இல்லை பேபி... மிருகம்... எனக்குள் இப்படியொரு மிருகம் இருந்திருக்குன்னு எனக்குத் தெரியாம போச்சு பேபி. என்னை மன்னிச்சிரு பேபி” என்றவன் அவளைத் தன் புறம் திருப்பி, “என்னை மன்னிப்பியா பேபி?” கண்களில் உயிரை தேக்கி வைத்துக் கொண்டு கேட்டான். தன் செயலால் அவள் தன்னை வெறுத்துவிடக் கூடாது என்று அவன் மனம் துடியாய்த் துடித்தது.

“நமக்குள் மன்னிப்பு எல்லாம் எதுக்கு? நான் உங்களை மன்னிக்காமலா உங்க கூடப் பேசிட்டு இருக்கேன்... தன்னிலை விளக்கம் கொடுத்திட்டு இருக்கேன். நீங்க என்ன செஞ்சாலும் எனக்கு உங்க மேல் கோபம் வரல ஆரு” பேச்சுவாக்கில் ஆரு என்று சொல்லிவிட்டு தன் நாக்கை கடித்துக் கொண்டாள். “சாரி... மாமா...”

“இல்லை நீ ஆருன்னே சொல்லு...” அவள் முகம் பார்க்க முடியாமல் சொன்னவனின் மனம் அவளின் பெருந்தன்மையான குணத்தில் குற்றவுணர்ச்சியில் குறுகுறுத்தது.

“நானே உனக்கு மருந்து போட்டு விடறேன் வா...”

“நீங்களா...?” வியப்பில் கண்கள் விரிய கேட்டவளை பார்த்து, “என்ன நானா? நான் உனக்கு மருந்து போட்டு விடக் கூடாதா? நான் உன்னை அந்த மாதிரி பார்ப்பது எனக்கு என்ன புதுசா?” அவனின் அந்தரங்க பேச்சில் அவள் முகம் சிவந்து விட்டது.

“ம்...” சம்மதம் சொன்னவளை கைத்தாங்கலாய் அழைத்து வந்தவன் அவளைப் படுக்க வைத்து மருந்து போட ஏதுவாய் அவள் அருகில் அமர்ந்தான்.

அவள் தன் ஆடையைக் களைந்து அவள் காட்டிய இடங்கள் எல்லாம் பார்த்தவனின் கண்ணில் மீண்டும் கண்ணீர் ஊற்று பெருகி வழிந்தது. காயங்களைப் பார்த்த தனக்கு இத்தனை வலி என்றால் அதை அனுபவித்த அவளுக்கு எத்தனை வலி எடுத்திருக்கும்.

“நான் பாவி பேபி... பாவி பேபி...” என்று கதறியபடி ஒவ்வொரு காயத்திற்கும் கண்ணீராலும், உதட்டாலும் அவன் மருந்திட... அவனின் தொடுகையில் எப்போதும் உடல் கூசி சிலிர்த்து உருகும் அவளுக்கு இன்று ஏனோ உடல் கூசி சிலிர்க்கவும் இல்லை... உருகவும் இல்லை. மரக்கட்டை போல் உணர்ச்சியில்லாமல் அவனின் செய்கையைப் பார்த்து கொண்டிருந்தாள். அவளுள் ஏதோ

ஒன்று செத்துப் போயிருந்தது. அது என்ன என்று யோசித்தவளுக்கு விடை கிடைத்தது.

“அவனாய் இருந்தா நீ இப்படிச் சொல்வியாடி... உருகி குழைஞ்சி ஒத்துழைச்சிருக்க மாட்ட...” நேற்று ஆரன் சொன்ன வார்த்தையில் அவளின் ஒட்டு மொத்த காதல் உணர்வும் நொடி பொழுதில் மரித்துப் போனது அவளுக்குப் புரிந்தது.

ஆனாலும் கண்களை மூடி அவனின் தொடுகையை மனதில் பதிய வைக்க முயலுகிறாள் அவளால் அது முடியவில்லை. அவனுக்காக... அவனின் காதலுக்காக அவளின் காதல் உணர்வுகளை அவளும் புதுப்பிக்கத் தான் நினைக்கிறாள். ஆனால் அவளால் அதைப் புதுப்பிக்க இயலவில்லை. முயற்சி செய்து செய்து தோற்று போனவளாய் களைத்துக் கண்களை மூடி கொண்டாள்.

‘கடவுளே... எனக்காக உருகும் இவருக்கு என்னால் இனி காதலை கொடுக்கக் முடியாதா? என் காதல் இல்லாவிட்டால் இவர் துடித்துப் போயிருவாரே... செத்து போயிருவாரே’ எவன் அவள் காதலை சாக அடித்தானோ அவனுக்காய் அவள் மனதுக்குள் உருகினாள். அவனுக்காக அவள் உருகுவதும் காதல் தான் என்பதை அவள் உணரவில்லை. அவன் மீதான அவள் காதல் சாகவில்லை... அவளின் மனதுக்குள் தான் ஒளிந்திருக்கிறது என்பதை அவள் எப்போது உணர போகிறாள்?

****

“அய்யோ என்ன ஆரு இது... சின்னப்பிள்ளை மாதிரி?” ஆரனை கடிந்த மயூரி அவனை அமர வைத்து அவனின் ஈரம் சொட்டிய தலையைத் துவட்டிவிட்டாள்.

“அதுக்குத் தான் நீ இருக்கியே பேபி?” அவளிடம் சுகமாய்த் தலையைக் கொடுத்துக் கொண்டு அமர்ந்தவனின் கைகள் அவளின் இடையில் சுதந்திரமாய் அலைந்தது.

“பேபி... நான் போடுற அதே சோப் தானே நீயும் போடுற... ஆனா உன் கிட்ட மட்டும் அப்படியே ஆளை தூக்குற மாதிரி வாசம் அடிக்குது?” அவளின் கழுத்து வளைவில் முகம் பதித்து அவளின் வாசனையை அவன் நுகர... அவளோ ஒன்றும் பேசாமல் தன் காரியத்தில் கண்ணாயிருந்தாள்.

முன்பு எல்லாம் அவனின் தொடுகையில் குழைந்து நெளிபவள் இன்று அமைதியாய் இருப்பது கண்டு அவன் முகம் யோசனையில் ஆழ்ந்தது. அதே யோசனையுடன் அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தான்.

“பேபி...” அவனின் அழைப்பில் அவள் துவட்டுவதை விட்டு விட்டு அவன் முகத்தைக் கேள்வியாய் நோக்கினாள்.

“நீ என்னை மன்னிச்சிட்டியா?” அவனின் கேள்விக்குப் பதிலளிக்காமல்,

“ஏன் ஆரு... இப்படியொரு சந்தேகம்?” அவனையே கேள்வி கேட்டாள்.

“முன்னை மாதிரி நீ இல்லையே...”

“நான் எப்போதும் போலத் தான் இருக்கேன்... நீங்களா ஏதேதோ யோசிச்சிட்டு பேசாதீங்க” என்றவள், “சாப்பிட வாங்க...” சொல்லிவிட்டு வெளியேற... அவனின் முகம் யோசனையில் ஆழ்ந்தது.

****

“பேபி... பேபி... எங்கே இருக்க?” அலுவலகத்தில் இருந்து வந்த ஆரன் ஆரவாரமாய்க் கத்தி கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான்.

“என்ன விசயம் ஆரு...?” கேட்டுக் கொண்டே சமையலறையில் இருந்து வெளிப்பட்டாள் மயூரி.

“பேபி... உனக்கு வேலை கிடைச்சிடுச்சு...” மகிழ்ச்சியுடன் அவளைத் தூக்கி தட்டாமாலை சுற்றியபடி சொல்ல...

“அப்படியா...?” என்றாள் சுவாரஸ்யமற்று.

“ஆமாம் பேபி... நான் வேலை பார்க்கும் அதே ஆபிசில் கிடைத்திருக்கு. நானும் நீயும் ஒரே இடத்தில் வேலை பார்க்கலாம். தனியா வேலைக்குப் போணும்ன்னு நீயும் கவலைப்பட வேண்டியது இல்லை” அவன் பேசி கொண்டே போக... அவன் முகத்தை எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் பார்த்தவள்...

“முதல்ல குளிச்சிட்டு சாப்பிட வாங்க...” அமைதியாய் கூற... அவனோ மறுத்துப் பேசாமல் அவள் சொல் கேட்டு உள்ளே சென்றான். அவளோ எதையோ யோசித்துக் கொண்டு இலக்கற்று வெறித்துக் கொண்டிருந்தாள்.

இரவு உணவு முடிந்து அறைக்குள் நுழைந்தவளை அப்படியே அள்ளி கொண்டான் அவன். “எத்தனை நாள் ஆச்சு பேபி? ப்ளீஸ் பேபி...” கெஞ்சலாய் அவள் காதோரம் அவன் அழைப்பு விடுக்க...

“நான் உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்” பள்ளியறையில் பேச்சு வார்த்தைக்கும் கூப்பிடும் அவளை அவன் தாபத்தோடு பார்த்தான்.

“இப்பவே பேசணுமா?” கேட்டுக் கொண்டே அவனின் இதழ்கள் அவளின் முகத்தை முற்றுகையிட...

“எனக்கு வேலைக்குப் போக விருப்பமில்லை ஆரு...” அவளின் வார்த்தையில் அவனின் உணர்வுகள் எல்லாம் வற்றி விட அவளைப் புரியாமல் பார்த்தான்.

“ஏன்...?”

“நான் வீட்டிலேயே இருக்கேனே” கெஞ்சுதலாய் அவனைப் பார்த்தாள்.

“வீட்டில் சும்மா இருப்பதுக்கா எம்சிஏ படிச்ச... கிறுக்குத்தனமா உளராம வேலைக்கு வா...” அவன் கண்டிப்புடன் கூற... பதில் ஏதும் கூறாமல் அவன் முகத்தையே பார்த்தாள். அவளின் இதழ்கள் எதையோ சொல்ல வருவது போல் துடித்தது.

“என்ன பேபி...? வேலைக்குப் போவதில் உனக்கு என்ன கஷ்டம்...? எதுவாயிருந்தாலும் சொல்லு பேபி” அவளின் தவிப்பை பார்த்து அவளை அவன் தன்னோடு அணைத்துக் கொண்டான். அவளுக்கும் அவனின் அணைப்பு தேவையாயிருந்ததோ என்னமோ அவனின் நெஞ்சில் தன் முகத்தைப் புதைத்து கொண்டாள். வெகுநேரமாகியும் அவளிடமிருந்து பதில் வராததால் அவள் முகத்தை நிமிர்த்தியவன்,

“சொல்லு பேபி? என்ன தான் உன் பிரச்சினை?” கேட்டவனின் கண்ணுக்குள் எதையோ தேடுவது போல் ஊடுருவி பார்த்தவள்,

“என்னால் இன்னொரு முறை தீக்குளிக்க முடியாது ஆரு...” மெல்லிய குரலில் என்றாலும் அழுத்தமான குரலில் அவள் சொன்னாள். எத்தனை சத்தியமான வார்த்தைகள் அவளது... அவளின் ஒவ்வொரு வார்த்தையும் ஆரனின் நெஞ்சில் சம்மட்டியால் அடித்தது போல் ஆழமாய் இறங்கி அவனுக்கு வலிக்கச் செய்தது.

“நீ என்ன சொல்றன்னு அர்த்தம் புரிஞ்சு தான் பேசுறியா?” மயூரியின் வார்த்தையின் அர்த்தம் புரிந்து ஆரனின் வார்த்தைகள் அழுத்தமாய் வெளிவந்தது.

“ம்...” என்று தலையசைத்தவள் அவனின் அணைப்பில் இருந்து விலகி எழுந்தமர்ந்தாள்.

“அப்போ நான் உன்னைச் சந்தேகப்பட்டேன்னு நீ சொல்ற... அப்படித்தானே...?” அவனின் கேள்விக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை. உதட்டை கடித்துக் கொண்டு அமைதி காத்தாள்.

“ச்சு... முதல்ல என்னை நிமிர்ந்து பாரு...” வலுக்கட்டாயமாக அவள் முகத்தை நிமிர்த்தியவன், “பதில் பேசுடி...”

“வேணாம் ஆரு... இப்பத்தான் ஒரு பிரச்சினை முடிந்திருக்கு... அதுக்குள்ள அடுத்ததா? இன்னொரு பிரச்சினையைத் தாங்குவதற்கு என் மனதிலும், உடலிலும் தெம்பில்லை. இத்தோடு இதை விட்டுருங்க ப்ளீஸ்...” அவள் கெஞ்சல் எல்லாம் அவனிடம் செல்லுபடி ஆகவில்லை.

“நீ ஏன் இப்படிப் பேசினேன்னு எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும்?” அவளோ அவனிடம் எப்படிச் சொல்வது? என்று தெரியாமல் விழித்தாள்.

“நீ சொல்ல மாட்ட என்ன? ஓகே நானே சொல்றேன்... அன்னைக்கு நான் நடந்துக்கிட்டதைத் தானே நீ சொல்ற?” அவள் மௌனமாய் இருப்பதைக் கண்டவனுக்கு அது தான் பதில் என்பது புரிந்து போனது.

“சரி நான் உன்னைச் சந்தேகப்பட்டேன்னே வச்சுக்குவோம்... அப்படி நான் உன்னைச் சந்தேகப்பட்டிருந்தா... அவன் வீட்டிற்கு வந்தவுடனே கழுத்தை பிடிச்சி வெளியில் தள்ளியிருப்பேனே... அப்படி நான் செய்தேனா? அப்புறம் எப்படி உன்னை அவன் கூடத் தனியா வீட்டில் விட்டுட்டு வேலைக்குப் போனேன்? நீ அவன் கூட வெளியில்

போயிட்டு வந்தப்பவும் நான் அமைதியா தானே இருந்தேன். அவன் முன்னாடி உன் கூடச் சண்டை போட்டேனா? இல்லை உன்னைச் சந்தேகப்பட்டு அடிச்சேனா? இல்லை அவன் கூடச் சண்டை போட்டேனா? இதில் எதுவுமே நான் பண்ணலையே? அப்புறம் எப்படி நான் உன்னைச் சந்தேகப்பட்டேன்னு நீ நினைக்கலாம்”

“அன்னைக்கு நான் உன்னிடம் நடந்து கொண்ட முறை தப்பு தான். எந்தக் கணவனும் மனைவியிடம் நடந்து கொள்ளாத ஒரு கேவலமான செயல் தான். அந்த உறுத்தல் இன்னமும் என் மனசுல இருக்கத் தான் செய்யுது. ஆனா நான் அப்படி நடந்துக்கிட்டதுக்குக் காரணம் யாரு? அந்த ரிஷி தானே... அவன் பேசிய வார்த்தைகள் தானே... நீயோ அவனைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சிருக்க... அவனோ உன்னைத் தூக்கிட்டு பறந்து போயிருவேன்னு சொல்றான். ஒரு புருசனா என்னோட பீலிங்க்சை கொஞ்சம் நினைச்சு பாரு. அவன் பேசிய பேச்சுக்குக் கோபம் வராம இருந்தா தான் அதிசயம். அதனால தான் நான் அப்படி நடந்துக்கிட்டேன். அதைச் சரின்னு நான் இப்பவும் சொல்ல. அதுக்காக நான் உன்னைச் சந்தேகப்பட்டேன்னு நீ எப்படிச் சொல்லலாம் பேபி?” அவள் முகத்தைக் கையில் தாங்கியபடி கண்ணுக்குள் உற்று பார்த்து கேட்டவனின் கண்கள் சிறிது கலங்கி இருந்ததோ?

“எனக்குத் தெரியுமா பேபி... நீ அவனைக் கல்யாணம் பண்ணிக்காம இருக்கிறதுக்காக... எனக்காக... நீ தற்கொலை வரைக்கும் போனவள்ன்னு எனக்குத் தெரியாதே பேபி. தெரிஞ்சு இருந்தா... அந்நேரமே அவன் பேசிய பேச்சுக்கு நான் பதிலடி கொடுத்திருப்பேனே. எனக்குள் இருந்த தாழ்வு மனப்பான்மை, மனதில் ஏற்பட்டிருந்த காயம்... எல்லாம் சேர்ந்து என்னை மிருகமா மாத்திருச்சு. சரி நீ சொன்னபடியே வச்சுக்குவோம்... நான் உன்னைச் சந்தேகப்பட்டேன்னே வச்சுக்குவோம். நான் செய்த தப்பை மறக்கணும்ன்னு சொல்ல... என்னை மன்னிக்கக் கூடாதா? எனக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கக்

கூடாதா பேபி? உன் ஆருவை பார்த்தால் பாவமாய் இல்லையா?”

அவனது கெஞ்சலில், மன்னிப்பு வேண்டலில் அவள் உள்ளம் உருகியது. அவன் இரு கரத்தையும் பற்றிக் கொண்டு அவள் அழுதுவிட்டாள். “ப்ளீஸ் ஆரு... இப்படியெல்லாம் பேசாதீங்க... எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு”

“ஓகே நான் பேசல...” அவளின் கண்ணீரை துடைத்து விட்டவன், “இப்போ உன் மனசுல எந்தச் சந்தேகமும் இல்லையே...”

“ம்ஹூம்...” அவள் தலையசைக்க...

“என்னை மன்னிச்சிட்டியா?”

“நமக்குள்ள இந்த மன்னிப்பு எல்லாம் வேணாம் ஆரு ப்ளீஸ்...” அவள் கெஞ்சலில் அவளைத் தன்னோடு அவன் அணைத்துக் கொண்டான். சிறிது நேரம் மௌனமாய்க் கழிய...

“பேபி வேலைக்கு வர்ற தானே?” அவன் மெதுவாய் அவள் காதுக்கருகில் குனிந்து கேட்க... அவள் பயத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவளின் பார்வையில் அவன் என்ன? என்பது போல் கேள்வியாய் பார்த்தான்.

“நான் வேலைக்கு வரல ஆரு... வீட்டிலேயே இருக்கேனே? உங்க வருமானம் நம்ம ரெண்டு பேருக்கும் போதாதா?” அவளின் வார்த்தையில் அவனுக்குக் கோபம் புசுபுசுவென ஏறியது.

“அப்போ நீ இன்னமும் என்னை... என் வார்த்தையை நம்பல அப்படித்தானே...?”

“அப்படியில்லை ஆரு...” அவள் விளக்கம் அளிக்கும் முன் அவளை விட்டு விலகியவன்,

“போதும் நீ எந்த விளக்கமும் அளிக்க வேணாம். நீ சொன்ன மாதிரி மனம் ஒத்துப் போகாமல்... உடலளவில் வாழ்ந்தா

இப்படித்தான் இருக்கும்” அவனின் பேச்சில் அவள் அதிர்ந்து போனாள்.

“ஆரு... என்ன சொல்றீங்க?” அதிர்ந்து போய் ஒலித்தது அவள் குரல்.

“நானா தான் உன்னை அதிரடியாய்க் காதலித்தேன்... அதே மாதிரி உன்னைக் காதலிக்க வச்சேன். நானா தான் உன்னை அதிரடியாய் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்... உன்னையும் தேவையில்லாமல் இந்த வாழ்க்கைக்கு இழுத்துட்டு வந்திருக்கேன். நீ சொன்ன மாதிரி மனமொத்து வாழ்ந்திருந்தா இந்தப் பிரச்சினைகள் வந்திருக்காது. முதல் கோணல் முற்றிலும் கோணல் மாதிரி... நம் வாழ்க்கை இப்படியாகி போச்சு. வேணாம்... இனி நமக்குள் எதுவும் வேணாம். எப்ப உன் மனசில் என்னைப் பத்தி இப்படியொரு அபிப்பிராயம் வந்ததோ... அதுக்கப்புறம் நாம சேர்ந்து வாழ்வதில் அர்த்தம் இல்லை” உணர்ச்சியில்லாத குரலில் அவன் பேசியது கண்டு அவள் இதயம் சில்லிட்டது.

“ஆரு... ஏன் இப்படியெல்லாம் பேசுறீங்க? நான் அப்படியெல்லாம் நினைக்கல” அவனின் பேச்சில் அவளுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

“நான் உன்னைச் சந்தேகப்பட்டேன்னு சொல்றியே... நீ வருணுடன் பேசும் போது நான் சந்தேகப்பட்டேனா? இல்லை நம்ம ஆபிசில் உள்ளவங்க கூடப் பழகும் போது சந்தேகப்பட்டேனா? அப்போ உன்னை ஏதாவது ஒரு வார்த்தை நான் தேவையில்லாமல் பேசியிருப்பேனா? இப்போ நான் பேசினேனா அதுக்குக் காரணம் யாரு... உன் மாமன் மகன் தானே... அவன் பேசிய பேச்சுக்கள் தானே... போதும் பேபி எல்லாம் போதும். ஏற்கெனவே ஒரு பெண்ணால் ஏற்பட்ட அடியே மரண அடியாய் என் வாழ்க்கை முழுமைக்கும் மறக்க முடியாத அடியாய் மனதில் ரணமாய் வலிக்கிறது. இதில் நீ வேறு எதையாவது சொல்லி என்னை உயிருடன் கொன்று விடாதே... அதைத் தாங்கும் சக்தி எனக்கில்லை” என்றவன் அறையை விட்டு வேகமாய் வெளியேறினான். அவனைத் தடுக்கும் உணர்வு

கூட இல்லாமல் அவள் அவனின் வார்த்தையில் உழன்று கொண்டிருந்தாள்.

ஹாலில் வந்தமர்ந்தவன் மனமோ ஒரு நிலையில்லாமல் தவித்தது. 'பாவி... பாவி... என்ன வார்த்தை சொல்லிவிட்டாய்? 'என்னால் இன்னொரு முறை தீக்குளிக்க முடியாது' இதற்கு என்ன அர்த்தம்? அந்த ராமன் சீதையைச் சந்தேகப்பட்டுத் தீக்குளிக்கச் சொன்னது போல் நான் அவளைச் சொன்னேன் என்றல்லவா பொருள். நான் அப்படியா செய்தேன்?' அவன் தனக்குள் மறுகும் போதே... 'அப்போ நீ நடந்து கொண்டதுக்கு என்ன பொருள்? படுக்கையில் வீரத்தை காட்டி அவளை வீழ்த்திய கோழையல்லவா நீ?' அவனின் மனசாட்சி இடித்துரைத்தது.

வெகுநேரம் யோசித்தும் அவனின் மனதின் வெறுமையைப் போக்க முடியவில்லை. மெல்ல எழுந்து அறைக்குள் சென்றான். அவனின் வருகையை உணர்ந்து அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவளின் பார்வையை அவன் உணர்ந்தாலும் அவளைப் பார்க்காமல் தன்னிடத்தில் வந்து படுத்தான்.

"கடைசியில் என்னையே குற்றவாளியாக்கி... என்னைக் குற்றவுணர்வில் தவிக்க விட்டுட்டீங்களே ஆரு... நீங்க செஞ்சதுக்கு நான் தான் உங்க கிட்ட கோபப்படணும். ஆனா நீங்க கோபப்படுறீங்க?" ஆற்றாமையில் தன் மனதில் நினைத்தை கூறியவள் அழுகையில் விம்மினாள்.

"அப்படி நீ கோபப்பட்டிருந்தா நீ நல்ல பொண்டாட்டி... ஆனா நீ உன் பக்கத்து நியாயத்தை மட்டும் கிளியர் பண்ணிட்டு நீ நல்லவள்ன்னு ப்ரூவ் பண்ணிட்ட. ஆனா நீ என் பக்கத்து நியாயத்தைக் கேட்டியா? நீ கேட்கலையே..." படுத்தவாக்கில் அவள் பக்கம் திரும்பி சொன்னவன் மேலும் அவளையே குற்றம் சாட்டினான்.

"நீங்க தானே சொல்லணும் ஆரு... அதுக்கும் என்னையே குறை சொன்னா எப்படி?"

“இதுக்குத் தான் சொன்னேன்... எனக்குப் பெண்களைப் பற்றித் தெரியாது... அவர்களின் மனவுணர்வுகள் எனக்குத் தெரியாது... இவ்வளவு ஏன் நீ என்னைப் பத்தி என்ன நினைக்கிறேன்னு தெரியாம உன் கூட நான் வாழ்ந்திருக்கேனே... நான் ஒரு முட்டாள் தானே? வேணாம் எனக்கு எந்த விளக்கமும் வேணாம். நான் இப்படியே இருந்திட்டு போறேன். இந்தச் சந்தேகப்படுறவன் கூட நீ வாழ வேணாம்...” என்றவன் அவளுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டான்.

வெகுநேரம் அவள் அழும் ஓசை அவனுக்குக் கேட்டாலும் அவளைச் சமாதானப்படுத்த அவன் எண்ணவில்லை. அவன் தன் போக்கில் யோசித்துக் கொண்டிருந்தான். அதிலும் அவள் தன்னைப் பார்த்துச் சந்தேகப்படுகிறான் என்றதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. அன்று அவன் அவளிடம் நடந்து கொண்டதற்குக் காரணம் ரிஷி பேசிய வார்த்தைகள் என்று மட்டுமே எண்ணினான். ரிஷி இது போல் பேசுவதற்கு அவள் கொடுத்த இடம் தானே என்று நினைத்தான்... அந்த நினைவில் தான் அவள் மேல் கோபம் கொண்டு அவன் அப்படி நடந்து கொண்டான். இதில் சந்தேகம் எங்கிருந்து வந்தது என்று அவனுக்குப் புரியவில்லை.

‘அன்று நடந்ததும் பேசியதும் சந்தேகக் குணம் இல்லாமல் என்னவாம்? பண்றது எல்லாம் பண்ணிட்டுத் தப்பை எல்லாம் என் மேல் திணிச்சா என்ன அர்த்தம் ஆரு? கடைசி வரை நீங்க என்னைப் புரிஞ்சிக்கவே மாட்டீங்களா?’ அவள் தன் போக்கில் எண்ணி கொண்டு அழுது கொண்டு படுத்திருந்தாள். இருவரின் மனமும் ஒன்றையே நினைத்தாலும் வேறு வேறாய்ச் சிந்தித்தது.

****

மறுநாள் காலையில் ஆரன் எழும் போதே மயூரி காபி கோப்பையுடன் காத்திருந்தாள். அவன் ஒன்றும் பேசாமல் பல் துலக்கி விட்டு வந்து அவளை ஏறிட்டுப் பாராமல் அவள் கையிலிருந்ததை வாங்கியவன் ஹாலை நோக்கி

நடந்தான். வழக்கம் போல் அவன் செய்யும் குறும்புகள் இல்லாதது கண்டு அவளுக்கு என்னவோ போலிருந்தது. அவன் பின்னேயே ஹாலுக்கு வந்தவளிடம் காலி கோப்பையைக் கொடுத்தவன் அங்கிருந்த செய்தித்தாளில் மூழ்கி போனான்.

“ஆரு...” அவள் தயங்கி தயங்கி அவனை அழைக்க... அவனோ பதில் பேசாமல் என்னவென்பது போல் அவளைப் பார்த்தான்.

“என் மேல் கோபமா ஆரு?” அவள் கேட்டதற்கு மறுப்பாய் தலையசைத்தவன் செய்தித்தாளில் முகம் புதைத்துக் கொண்டான். அவனின் செயலில் அவளுக்குக் கண்ணீர் அரும்பியது. அவனின் கோபத்தைத் தாங்க முடிந்தவளால் அவனின் இந்த மௌனத்தைத் தாங்க முடியவில்லை.

அதன் பின் அவன் குளிக்கப் போன போது கூடவே உதவி செய்ய வந்தவளை ஒரு கையால் தடுத்து நிறுத்துவது போல் பாவனைச் செய்தவன் குளியலறை உள்ளே சென்று அவள் முகத்தில் அடித்தார் போல் கதவை சாத்தி கொண்டான். அவனின் செயலில் அவள் தான் தவித்துப் போனாள்.

“உங்களுக்குப் பிடித்த சட்னி செஞ்சிருக்கேன்” உணவு உண்ண வந்தவனுக்கு அவள் ஊட்ட போக... அவனோ அவள் கை பிடித்துத் தடுத்தவன்... தானே உண்ண ஆரம்பிக்க அவள் கண்ணில் கண்ணீர் அரும்பியது.

அந்நேரம் அழைப்புமணி ஓசை கேட்க... மயூரி போய்க் கதவை திறந்தாள். அங்கே ரிஷி நின்று கொண்டிருப்பதைக் கண்டு அவளுக்கு உள்ளுக்குள் பயப்பந்து உருண்டது.

“ஹாய் மயூரி எப்படி இருக்க? இப்ப உடம்புக்கு பரவாயில்லையா? ஆபிசில் ஹெவி வொர்க் அதான் இடையில் வர முடியல” என்றபடி உள்ளே வந்த ரிஷி அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

கையைக் கழுவி விட்டுத் துண்டில் கையைத் துடைத்தபடி அங்கே வந்த ஆரனை கண்டதும் மயூரி பயத்தில் உறைந்தாள் என்றால்... ரிஷி தானாக நாற்காலியில் இருந்து எழுந்து நின்றான். அவனின் முகத்திலிருந்த புன்னகை அப்படியே உறைந்தது. அதையெல்லாம் கண்டு கொள்ளாமல் ஆரன் ரிஷியிடம்,

“வாங்க ரிஷி... என்ன ஆளையே காணோம்?” சகஜமாய் அவனை வரவேற்க... இருவரும் அதிசயமாய் ஆரனை பார்த்தனர்.

“உட்காருங்க ரிஷி...” என்று அவனிடம் சொல்லியவன், மயூரியிடம்... “ரிஷிக்கு காபி கொண்டு வா...” என்க...

“இதோ ஒரு நிமிசம்...” அவள் உள்ளே விரைந்தாள்.

“அப்புறம் ரிஷி சொல்லுங்க...” புன்னகையுடன் பேச ஆரம்பித்த ஆரனை பார்த்து ரிஷி உள்ளுக்குள் வியந்தாலும்... வெளியில் அதைக் காட்டி கொள்ளாமல் அவனிடம் பேசினான்.

ரிஷி காபி குடித்து முடிக்கும் வரை பொறுமையாய் இருந்த ஆரன், “எனக்கு வேலையிருக்கு... நான் ஆபிசுக்கு கிளம்பறேன்... நீங்க இருந்து பேசிட்டு போங்க...” என்றவன் அறைக்குள் செல்ல அவனை நம்ப முடியாத பார்வையைப் பார்த்தான் ரிஷி. அன்று கழுத்தை பிடித்து வெளியில் தள்ளிய ஆரனா இவன்? என்று அவன் ஆச்சிரியப்பட்டுப் போனான்.

ஆரனை பின் தொடர்ந்து உள்ளே வந்த மயூரி, “தேங்க்ஸ் ஆரு...” என்க, ‘எதுக்கு?’ என்பது போல் அவளைப் பார்த்தான் அவன். “ரிஷி மாமா கிட்ட நல்லவிதமா நடந்துக்கிட்டதுக்கு...” பதில் சொன்னவளை புரியாத பார்வை பார்த்தவன் ஒன்றும் பேசாமல் அலுவலகத்திற்குக் கிளம்பினான். அவனின் மௌனம் அவளைக் கொல்லாமல் கொன்றது. அவனின் மௌனத்தைக் கலைக்கும் வழி தான் அவளுக்குப் புலப்படவில்லை.

“என்ன மயூரி... உன் வீட்டுக்காரர் அதிர்ச்சி மேல் அதிர்ச்சியா தர்றாரு...” நெஞ்சில் கையை வைத்தபடி விளையாட்டாய் கூறிய ரிஷியை ஆழ்ந்து பார்த்தவள்,

“நான் தான் சொன்னேனே அவர் ரொம்ப நல்லவர்ன்னு. நம்ம தப்பை நாம எடுத்துச் சொன்னதும் அவரும் அவரோட தவறை புரிந்து கொண்டார்”

“எப்படியோ நீ சந்தோசமா இருந்தா சரி...” என்றவன், “வீட்டுக்கு பேசினியா?”

“இல்லை...”

“நான் போட்டு தர்றேன்... நீ பேசு...” என்றவன் ராகவனுக்கு அழைத்து அலைப்பேசியை அவளிடம் கொடுத்தான்.

“அப்பா...” மகளின் வார்த்தையில் ராகவனுக்குக் கண்கள் கலங்கியது.

“எப்படிம்மா இருக்க?” அவரின் கேள்விக்கு, “நல்லாயிருக்கேன்...” என்று அவள் பதிலளிக்க...

“மயூ கண்ணு... எங்களை எல்லாம் மறந்துட்டியாம்மா? எங்களைப் பார்க்கணும்ன்னு உனக்குத் தோணல...” தந்தையின் வார்த்தையில் அவளுக்குக் கண்ணீர் வழிந்தது.

“ம்... பார்க்கணும்ன்னு இருக்குப்பா... நீங்க இங்கே வாங்களேன்...”

“என் பெண்ணை என்னிடம் இருந்து பிரிச்சு கூட்டிட்டு போன அவன் வீட்டுக்கு நாங்க வர விருப்பம் இல்லை. அவன் முகத்தில் முழிக்கவே எனக்குப் பிடிக்கல. அந்தக் கேடுகெட்டவன் நம் குடும்பத்தில் நுழைந்து குழப்பம் பண்ணாமல் இருந்திருந்தா... இந்நேரம் எத்தனை நிம்மதியா நாம இருந்திருப்போம்” அவரின் கூற்றில் இருந்த உண்மை அவளைச் சுட... அவள் அமைதி காத்தாள். இருந்தாலும் தன்னவனைப் பற்றித் தவறாகப் பேசியது அவளால் தாங்க முடியவில்லை.

“இல்லைப்பா... நீங்க நினைக்கிற மாதிரி அவர் இல்லை...” அவர் பேசியதை அவள் மறுக்க...

“நீ என்ன சொன்னாலும் அவன் செஞ்சதை என்னால் ஜீரணிக்க முடியாதும்மா. ஆயிரம் தான் இருந்தாலும் நீ என் பொண்ணு. உன் தப்பை என்னால் மன்னிக்க முடியும். ஆனால் அவனை என்னால் மன்னிக்க முடியாதும்மா” அவர் தன் நிலையில் நிற்க... மேற்கொண்டு அவளும் வாதாடாமல் மற்றவர்களிடம் பேசிவிட்டு அலைப்பேசியை வைத்தாள்.

“என்ன மாமா எதுவும் சொன்னாங்களா?” அவளின் முகம் வாடியிருப்பதை உணர்ந்து ரிஷி கேட்க... அவர் பேசியதை அவள் ஒன்று விடாமல் கூற...

“சரி விடு... நான் உணர்ந்ததைப் போல் அவரும் உன்னவரை உணர்ந்து கொள்வார்...” அவனின் பேச்சில் அவள் முகம் சட்டென்று மலர்ந்தது.

“உண்மையாவா?” அவளின் முக மலர்ச்சியைக் கனிவோடு பார்த்தவன்,

“உண்மையா தான்... இதுக்கெல்லாம் நீ கவலைப்படக் கூடாது. சந்தோசமா இருக்கணும்” என்றவன், “சரி மயூரி நான் கிளம்பறேன்... உனக்கு எதுவும் தேவையிருந்தால் ஒரு ஃபோன் பண்ணு... அடுத்தச் செகண்ட் நான் உன் முன்னாடி இருப்பேன்... இனி உனக்கு இந்த மாமா உதவி தேவைப்படாது... இருந்தாலும் சொல்வது என் கடமை” என்றபடி அவன் எழும்ப...

“மாமா உங்க மனதில் இந்த மாதிரி எண்ணம் இருக்கும்ன்னு நான் நினைக்கவே இல்லை” மெய்யாய் வருந்தி சொன்னவளை பார்த்து கசப்புடன் புன்னகைத்தவன்,

“என் மனதில் உள்ளது நானா சொல்லாமல் உனக்கு எப்படித் தெரியும்? நானா என் மனசில் ஆசையை வளர்த்துக்கிட்டதுக்கு நீ என்ன செய்வ? எல்லார் காதலும்

கல்யாணத்தில் முடிவதில்லை. என்னோட காதல் முடிந்து போன கதை. உன் மனதில் ஆரனுக்குத் தான் இடமிருக்குன்னு தெரிஞ்சதுக்கு அப்புறமும் அந்த எண்ணத்தைத் தூக்கி சுமப்பது நான் உனக்குச் செய்ற துரோகம். இப்போ என் மனம் நிர்மலமா இருக்கு. அதுக்காக நான் இப்படியே இருக்க மாட்டேன். நானும் நிச்சயமாய் என் மனசுக்கு பிடிச்ச பெண்ணாய் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்குவேன். எனக்காக நீ குற்றவுணர்வில் தவிக்க வேணாம்" அவன் பேச பேச அவளுக்குள் அவனை நினைத்து எழுந்த குற்றவுணர்வு முற்றிலும் மறைந்து போனது.

"தேங்க்ஸ் மாமா..." சிரித்தபடி சொன்னவளை பார்த்து,

"இப்படித்தான் சிரித்த முகமாய் இருக்க வேணும்..." என்றவன் கிளம்பி செல்ல... அவன் சென்றதும் அவளின் நினைவுகளைக் கணவனின் எண்ணங்கள் ஆக்கிரமிக்கத் துவங்கின. அவனை எப்படிச் சமாதானப்படுத்த என்று அவளுக்குத் தெரியவில்லை.

அலுவலகத்தில் இருந்து வந்த ஆரன் வழக்கம் போல் மௌனத்தின் பிடியில் தன்னை மறைத்துக் கொண்டு அமைதியாய் இருக்க... அவள் தான் அவனின் பேச்சை கேட்காமல் தவித்துப் போனாள். படுக்கையிலும் அதே மௌனத்தைக் கடைப்பிடித்து அவன் அவளுக்கு முதுகு காட்டி படுக்க... அவள் அவன் முதுகையே வெறித்துப் பார்த்தாள். நேற்றிரவு எவ்வளவு ஆசையாய் அவன் அவள் அருகில் வந்தது அவள் நினைவில் வந்து போனது.

அன்று அவன் செயலில்... சொல்லில்... அவளின் காதல் செத்து விட்டதாய் எண்ணியவள்... இன்று அந்தக் காதலே இல்லாவிட்டாலும் பரவாயில்லை... அவனின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் நேரம் ஆக... ஆக... அவளுக்கு வலுக்கத் துவங்கியது. மெல்ல அவள் அவன் தோளை தொட... அவனோ அவள் கையைத் தட்டிவிட்டான். அவன் கையைத் தட்டி விட்டது அவளுக்கு ஒரு மாதிரியாக

இருந்தாலும் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவனின் கோபத்தைக் குறைக்க எண்ணினாள்.

அவனின் முதுகு புறமாய் அணைத்தவள் அவன் புறங்கழுத்தில் அழுத்தமாய் முத்தமிட... அவ்வளவு தான் அவன் வேகமாய் அவளை உதறித் தள்ளினான்.

“உன் மனசில் என்ன நினைச்சிட்டு இருக்க... நான் ஏதாவது பேசினா... உன்னைச் சந்தேகப்படுறேன்னு சொல்ற... உன்னால தீக்குளிக்க முடியாதுன்னு சொல்ற... அப்புறம் எப்படி என் பக்கத்துல வந்து கட்டிப்பிடிக்குற? அப்படியே நான் வந்தாலும் என்ன சொல்ல போற... நீ தொடுறது எனக்கு நெருப்பைத் தொடுற மாதிரி இருக்கு... எரியுதுன்னு சொல்ல போற. என் உணர்வுகளோட விளையாடுறது உனக்கு அவ்வளவு ஈசியா போச்சு என்ன? என்னை நம்பாத உன் கூட நான் வாழறதா இல்லை. மனசு ஒத்துப் போகாம உடல் ரெண்டும் சேர்ந்து என்ன பண்ண? நமக்குள் எதுவும் வேணாம்ன்னு நான் தான் சொன்னேன்ல... உன்னோட பேச்சுக்கு நான் ஆள் இல்லை” என்று கத்தியவன் அறையை விட்டு வெளியேறி ஹாலில் படுத்துக் கொண்டான்.

அவள் தான் அவனின் பேச்சில் விக்கித்துப் போய் வெகுநேரம் அமர்ந்திருந்தாள். கடிகாரம் பன்னிரெண்டு அடித்ததுக்கான ஒலியில் தன்னுணர்வு பெற்றவள் அப்படியே படுக்கையில் சாய்ந்தாள். அவனின் வார்த்தையில் அவளுக்குமே கொஞ்சமே கொஞ்சம் ரோசம் வந்தது.

‘வீம்பாய் இருந்தால் இருந்துக்கோ எனக்கென்ன? தப்பு செஞ்ச நீயே இப்படிக் கோபப்படும் போது... ஒண்ணுமே செய்யாத நான் ஏன் கவலைப்படணும்? நியாயப்படி பார்த்தா... நான் தான் நீ நடந்துக்கிட்டதுக்கு உன் மேல் கோபப்படணும்... மிருகம் மாதிரி நடந்தது மட்டுமில்லாமல்... ஒற்றை வார்த்தையில் என் காதலையும் கொன்ன உன் மேல் நான் தான் ஆத்திரப்படணும்... அப்படி இருந்தும் நான் கோபப்படாம உன் பின்னாடியே நாய் குட்டி போலச் சுத்தி

வர்றேன்ல... அதான் நீ என்னைத் துரத்தி துரத்தி விடுற... போ... எப்படியும் போ... எனக்கென்ன வந்தது...' கோபமாய் நினைத்தவள் வெகுநேரம் தூங்காமல் முழித்துக் கொண்டிருந்தாள்.

“க்கும்...” மயூரியின் தொண்டை செருமலில் அலமாரியில் தன் உடையைத் தேடி கொண்டிருந்த ஆரன் அவளைத் திரும்பி பார்த்தான். அமைதியாய் அவனைப் பார்த்தவள், அவனாகப் பேசுவான் என்று அவள் காத்திருக்க... அவனோ என்ன என்று கண்களால் கேள்வி கேட்டவன் மௌனமாய் அவளைப் பார்த்தான். அவன் பேச போவதில்லை என்று உணர்ந்தவளாய் அவளே வாயை திறந்தாள்.

“நான் டான்ஸ் சொல்லி கொடுக்கலாம்ன்னு இருக்கேன்...” அவளின் வார்த்தையில் அவன் ஒற்றைப் புருவத்தைக் கேள்வியாய்த் தூக்கினான்.

“இங்கே அக்கம் பக்கத்துத் தமிழ் குழந்தைகளுக்கு டான்ஸ் சொல்லி கொடுக்கலாம்ன்னு இருக்கேன். மைதிலியம்மா தான் இந்த ஐடியா கொடுத்தாங்க. ரிஷி மாமாவும் அவங்க ஆபிசில் வேலை செய்றவங்க கிட்ட கேட்டு சொல்றேன்னு சொல்லியிருக்காங்க” அவளின் நடனத் திறமை அவனுக்கும் தெரியுமாதலால் அவனால் அவளின் பேச்சை மறுக்க முடியவில்லை.

“உன் இஷ்டம்...” இத்தனை நாட்களில் முதன் முறையாக வாயை திறந்து பேசியவனைக் கண்டு அவளுக்குச் சந்தோசமாய் இருந்தது.

அன்று அவன் நடந்து கொண்டது அவளுக்குக் கோபத்தைக் கொடுக்க... அதன் பின் அவன் இருக்கும் இடத்தில் அவள் நிற்பதில்லை. அவன் அறையில் இருந்தால் அவள் சமையலைறையில் இருப்பாள்... அவன் உணவு உண்ண வந்தால்... அவள் பால்கனியில் நின்று கொண்டு வேடிக்கை பார்த்து கொண்டிருப்பாள். இப்படியே ஒரு வாரம் இந்தக் கண்ணாம்மூச்சி ஆட்டம் இருவருக்கும் இடையில் நடைபெற்றது.

அவன் அவளின் ஒதுக்கத்தை உணரவும் இல்லை... கண்டு கொள்ளவும் இல்லை. அதனால் அவன் சிறிதும் பாதிக்கப்பட்டதாய் தெரியவில்லை. எப்போதும் போல்

அலுவலகம் போவதும் வருவதுமாய் இருந்தான். அவள் தான் அவனின் செயலில் தவித்துப் போனாள். இனிமேலும் இந்தக் கோபத்தை இழுத்து பிடிக்க வேண்டுமா? என்று சில நேரங்களில் அவளுக்கே அவள் மேல் சலிப்பு ஏற்பட்டது. அவன் கோபமாயிருந்தாலும் அவளாவது அவனிடம் ஓரிரெண்டு வார்த்தைகள் பேசி கொண்டிருந்தாள். இப்போதும் அதற்கு வழியில்லாமல் அவளின் பாழாய் போன கோபம் இடையில் வந்து தடுத்துவிட்டது. இப்படியாக அவன் தான் அவளை ஏங்க வைத்தானே தவிர அவன் அவளைக் கொஞ்சமும் எண்ணி பார்த்ததாய் தெரியவில்லை.

“ஆக மொத்தம்... நீ வேலைக்கு வருவதாய் இல்லை...” அவன் பேசியது நினைத்து மகிழ்ச்சி வானில் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தவள் அவனின் இந்த வார்த்தைகளில் நிமிட நேரத்தில் சிறகொடிந்து தொபக்கடீர் என்று கீழே விழுந்தாள்.

‘நீயாவது மாறுவதாவது...’ மனதுக்குள் நினைத்தவள் அழுத்தமாய் அவனைப் பார்த்தாள். அவன் அதை விட ஆழமாய் அவளைக் கூர்ந்து பார்த்தவன் ஒன்றும் பேசாமல் உடையை மாற்ற துவங்கினான். அதற்கு மேல் அங்கே நிற்க பிடிக்காமல் வெளியில் வந்தவள் வழக்கம் போல் பால்கனியில் தஞ்சம் புகுந்தாள்.

‘என்ன மனிசன் இவன்...? பொண்டாட்டி கோபமா இருக்காளே... அவளைச் சமாதானப்படுத்துவோம்ன்னு நினைக்கிறாரா பாரு... பதிலுக்கு அதுவும் மூஞ்சியை ஒன்றரை முழத்துக்குத் தூக்கி வச்சிட்டு அலையுது. எல்லார் வீட்டிலும் பொண்டாட்டி கோபமா இருந்தா புருசன்காரன் உருகி குழைஞ்சு ஐஸ் வைக்கிறான். இங்கே என்னடான்னா நான் தான் வலிய வலிய போய்ப் பேசணும்... கெஞ்சணும்... கொஞ்சணும்... ம்ஹூம்... மயூ... நீ வாங்கி வந்த வரம் அப்படி... எல்லாம் என் நேரம்’

தனக்குள் பொருமி கொண்டிருந்தவள் காதில் ஆரனின் காலடி சத்தம் கேட்டது. அவளை நோக்கி தான் வந்து

கொண்டிருக்கிறான் என்பது போல் அவளுக்கு வெகு அருகில் காலடி சத்தம் ஒலித்தது. அதைக் கேட்டு அவள் மனம் கும்மாளமிட்டது.

‘இதோ வர போகிறான்... வந்து சாரி சொல்லி கட்டி பிடிக்கப் போகிறான்... சாரி சொன்னா உடனே நான் பேசிறணுமா? இரு... இரு... நானும் என் வீம்பை கொஞ்ச நேரம் இழுத்து பிடிச்சிட்டு அப்புறம் தான் உன் கூடப் பேசுவேன்’ தனக்குள் பேசி கொண்டிருந்தவள் தன் முன் நின்றிருந்த அவனின் கால்களைக் கண்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

“சாப்பாடு போடும் எண்ணமிருக்கா? இல்லையா?” அவன் வழக்கம் போல் விறைத்துக் கொண்டு கேட்க... அவளுக்குச் சப்பென்று ஆகிவிட்டது. இவ்வளவு நேரம் அவள் கற்பனையில் கட்டி வைத்த அவளின் காதல் கோட்டை ஒரு நொடியில் இடிந்து தரைமட்டமானது. அவனின் கேள்வியில் அவளுக்கு ‘என்னடா வாழ்க்கை... ச்சீ...’ என்று போய்விட்டது.

“எனக்கு உடம்பு சரியில்லை... சமைக்கல...” கோபத்தில் அவன் முகம் பார்க்காமல் அவள் தலையைக் குனிந்து கொண்டு பதிலளிக்க... அவன் ஒரு நொடி அவளின் குனிந்த தலையை வெறித்துப் பார்த்தவன் ஒன்றும் பேசாமல் போய்விட்டான். அவனின் காலடி தேய்ந்து போகும் வரை அமைதியாய் இருந்தவள் பின்பு வீட்டினுள் சென்றாள். அவனின் செயலில் அவளுக்குக் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.

****

“மிட்டு அரைமண்டி இப்படிப் போட கூடாது... இங்கே என்னைப் பார்...” மயூரி தன்னிடம் நடனம் பயில வந்திருந்த சிறு பெண் குழந்தைகளில் ஒருத்தியான மித்ராவுக்கு அரைமண்டி எப்படிப் போடுவது என்று சொல்லி கொடுத்தாள். அவள் செய்த மாதிரி மித்ராவும் தன் பிஞ்சு கால்களை வளைத்து முயன்று அரைமண்டி போட... அவள் கைத்தட்டி மித்ராவை உற்சாகப்படுத்தினாள்.

இந்த இரு மாத காலமாக இந்தக் குழந்தைகளுக்கு நடன வகுப்பு எடுத்து வருகிறாள். எல்லாமே பத்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் தான். அவர்களுக்கு நடனம் சொல்லி கொடுப்பதில், அவர்களுடன் பேசி பழகுவதில் அவளுக்கு மனதில் இருந்த கோபம், வருத்தம் எல்லாம் போய் மனது அமைதியாய், நிம்மதியாய் இருந்தது. அவளுக்குப் பிடித்த நடனத்தில் கவனம் செலுத்துவதால் மனதுக்கும் மகிழ்ச்சியாய் இருந்தது. அது சில நேரம் ஆரனின் பாராமுகம் பற்றிய கவலையையும் பின்னுக்குத் தள்ளியது.

அவள் நடனம் சொல்லி கொடுத்துக் கொண்டிருக்கும் போது ஆரன் வீட்டிற்குள் நுழைந்தான். எப்போதும் சிறிது தாமதமாக வருபவன்... இன்று சற்றுச் சீக்கிரமாக வந்துவிட்டான். அவள் நடனம் சொல்லி கொடுக்கும் அழகை ஓரக் கண்ணால் பார்த்தபடி அறைக்குள் சென்றான். அவன் வந்துவிட்டதை உணர்ந்தவள் அன்றையை வகுப்பை அத்துடன் முடித்துக் கொண்டாள்.

அவனுக்குக் காபியை கலந்து கொண்டு அறைக்குள் சென்றவள் ஒன்றும் பேசாமல் அங்கிருந்த மேஜையில் வைத்துவிட்டு நகர... “ஒரு நிமிசம்...” என்றவன் அவள் அருகில் வந்து, “இனிமேல் டான்ஸ் சொல்லி கொடுக்கும் போது சுடிதார் போட்டுக்கிட்டு சொல்லி கொடு” அவளிடம் பேசினாலும் அவனின் கண்கள் அவளின் வழவழப்பான வெண்ணிற இடையில் பதிந்து மீண்டது.

அவனின் பார்வையின் அர்த்தம் உணர்ந்தவளாய் தன்னிச்சையாய் அவளது கரங்கள் புடவையால் இடையை மறைக்க... அதைக் கண்டு அவனது உதடுகள் புன்னகையால் சிறிதளவு வளைந்தது. கணவனே ஆனாலும் அவனிடம் கூடக் கண்ணியம் காக்கும் அவளது செயல் அவனுக்குப் பிடித்துத் தான் இருந்தது.

‘இதெல்லாம் வக்கணையா சொல்லு...’ மனதில் நினைத்தவள் அவனை நினைத்து மனதுக்குள் பொருமி கொண்டே திரும்ப... சட்டென்று உடல் தள்ளாட, முகமெல்லாம் வியர்த்து வடிய கண்ணை இருட்டி கொண்டு

வந்தது அவளுக்கு. “ஆரு...” என்றபடி அருகில் நின்றிருந்த அவனின் மேல் அவள் சாய... அவளின் கண்கள் சொருகிய நிலையைக் கண்டு மனம் பதறியவனாய் அவளைக் கட்டிலில் அமர வைத்தான். அவளின் உடல்நலமின்மையில் அவனின் கோபம் பின்னுக்குத் தள்ளப்பட்டது.

“பேபி... பேபி... என்ன பண்ணுது?” அந்த நிலையிலும் அவனின் ‘பேபி’ என்றழைப்பு அவளுக்குச் சங்கீதமாய் ஒலித்து... அவளின் மனதை நிறைத்தது. அவன் அருகிலிருந்த தண்ணீர் ஜக்கில் இருந்து நீரை எடுத்து அவள் முகத்தில் தெளிக்க... அதில் அவளுக்குச் சற்றுச் சுரணை வந்தது. கொஞ்சம் தண்ணியை அவள் வாயில் அவன் புகட்ட... அதில் அவள் நன்றாகத் தெளிந்து அமர்ந்தாள்.

“என்ன செய்து பேபி?” அவனின் பதட்டமான குரலில் அவனை நிமிர்ந்து பார்த்தவள் அவனை விழியெடுக்காமல் அவனையே பார்த்து கொண்டிருந்தாள்.

“பேபி... நான் பேசுறது கேட்குதா? என்னாச்சு உனக்கு?” அவள் கண் முன் கையை ஆட்டியவன் அவள் முகத்தைக் கவலையுடன் பார்த்தான்.

“ஆரு...” நின்று கொண்டிருந்த அவனின் இடுப்பை கட்டி கொண்டு அவன் வயிற்றில் முகம் புதைத்து அவள் அழ ஆரம்பிக்க... அவனோ என்ன செய்வது என்று தெரியாமல் அவளின் தலையை ஆறுதலாய் தடவி கொடுத்தான். அவனின் மனமோ அவளுக்கு என்னவானது என்று கவலையில் தவித்தது.

“என்னைப் பேபின்னு கூப்பிட உங்களுக்கு இத்தனை நாளாச்சா ஆரு...” சொல்லி கொண்டே மேலும் மேலும் அவனுள் புதைந்தவள் சத்தமாய் அழ ஆரம்பிக்க... அவன் இன்னமும் பரிதவித்துப் போனான்.

“ச்சு... அதை விடு... நாம டாக்டர் கிட்ட போகலாம் வா...” அவளின் உடல்நலனை குறித்து அவனுக்குள் அச்சம் எழுந்தது.

அவன் மருத்துவரிடம் போகலாம் என்றதும் தான் அவளுக்குத் தன் உடல்நிலையைக் குறித்து நியாபகம் வந்தது. கொஞ்ச நாட்களாக அவள் மனதில் அந்தச் சந்தேகம் இருந்து கொண்டே இருக்கிறது. ஒருவேளை அதுவாக இருக்குமோ என்று நினைக்கும் போதே அவளது முகம் வெட்கத்தில் சிவந்தது. தன்னவனுடன் அவள் வாழ்ந்த காதல் வாழ்க்கைக்குச் சாட்சியாக அவளின் மணி வயிற்றில் மொட்டொன்று அரும்பியதற்கான அறிகுறி தான் இந்தத் தலைசுற்றல் என்பது அவளுக்குத் தெள்ளத் தெளிவாக விளங்கியது. தான் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் தனக்குள் யோசித்துக் கொண்டிருக்கும் மனைவியை விசித்திரமாய்ப் பார்த்தவன்,

“என்ன பேபி...?” அவள் முகத்தைப் பரிவுடன் வருடினான். வெகுநாட்களுக்குப் பின் கணவனின் இந்தப் பாசமான வருடலில் அவளுக்குக் கண்ணைக் கரித்துக் கொண்டு வர அப்படியே அவன் கையில் முகத்தைப் புதைத்து கொண்டாள். அவளின் கண்களின் நீரை அவனின் கை உணர்ந்தது.

“என்ன செய்யுது... எதாச்சும் வலிக்குதா?” அவனின் கேள்வியில் அவளுக்கு இன்னமும் அழுகை வந்தது. ‘நீ மனதில் அடித்த வலியை விடவா? உடம்பு வலி பெரிதாக இருக்கப் போகுது?’ மனதில் நினைத்தவள் ஒன்றும் பேசவில்லை. அவனின் அருகாமையை மட்டுமே அவள் மனம் ரசித்தது.

“இங்கே பாரு...” அவள் முகத்தை நிமிர்த்தியவன், “நான் கேட்டுட்டே இருக்கேன்... பதில் சொல்லாமல் இருந்தால் எப்படி? ஹாஸ்பிட்டல் போவோமா?”

“இல்லை வேணாம்... நாளைக்குப் போகலாம்...” அவனின் முகம் பார்க்காமல் தன் முகத்தைத் தாங்கியிருந்த அவனின் கையைப் பார்த்துக் கொண்டு அவள் பதிலளித்தாள்.

“அப்போ எதுக்கு உனக்கு மயக்கம் வந்தது?” அவன் விடாப்பிடியாய் கேட்க... அவளோ என்ன பதில் சொல்வது என்று தெரியாமல்... அவனின் கையைப் பிடித்துத் தன்

வயிற்றின் மேல் வைத்தாள். அவளின் செய்கையில் ஒரு நொடி புரியாமல் விழித்தவன்... மறுநொடி அவனின் முகம் புன்னகையில் மலர்ந்தது.

“என்ன சொல்ற நீ? உண்மையாவா?” அவன் குரலில் மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது.

“ம்...” என்றவள் முகம் மீண்டும் வெட்கத்தில் சிவந்தது.

“எனக்கு என்ன சொல்றதுனே தெரியல... நான் ரொம்ப ரொம்பச் சந்தோசமா இருக்கேன்... தேங்க்ஸ் பேபி...” என்றவனின் கை அவளின் புடவையைத் தலைப்பை விலக்கி விட்டு அவளின் வெற்று வயிற்றில் ஊர்ந்தது. அவனின் கை தொடுகை அவளின் உள்ளத்தை உருக செய்ய... அவன் கை மீது தன் கையை வைத்தவள்,

“தேங்க்ஸ் இப்படிச் சொல்ல கூடாதே ஆரு...” என்றவள் அவனின் இதழில் தன் மென்மையான இதழை அழுத்தமாய்ப் பதித்தாள்.

முதல் முறையாய் அவளே தானாக வந்து கொடுத்த இதழ் ஒற்றலில் அவனும் தன் மனஸ்தாபத்தை மறந்து அவளுடன் ஒன்றினான். உயிர் வரை தீண்டிய அவளின் முத்தம் அவனின் அடக்கப்பட்ட உணர்வுகளைத் தட்டி எழுப்பியது. அவளுடன் தான் கூடிய கூடல் எல்லாம் அவன் கண் முன் வலம் வந்து அவனின் தாபத்தை அதிகப்படுத்தியது. அவனின் கைகள் அடுத்தக் கட்டத்திற்கு முன்னேற அவனின் முகமோ அவளின் கழுத்தில் ஆழமாய்ப் புதைந்து அவளின் வாசனையை நுகர்ந்தது.

அதுவரை அவனின் முத்தத்தில் உருகி கரைந்தவள்... அவனின் கைகளின் முன்னேற்றத்தில் அப்படியே உடல் விறைத்து போனாள். அவள் கண் முன்னே அன்று அவன் ஆடிய வெறியாட்டம் நினைவுக்கு வந்து அவளின் புலன்களைச் செயலிழக்க செய்தது. அப்படியே உணர்ச்சியற்றவளாய் தன் கைகளில் கிடந்தவளை அவனும் உணர்ந்து கொண்டு அவளைக் கேள்வியாய் நோக்கினான்.

“பேபி உனக்குப் பிடிக்கலையா?” அவனின் உருக்கமான கேள்வியில் அவள் தன் உணர்வுகளை எல்லாம் மூட்டை கட்டி பரணில் போட்டவள்,

“பிடிக்கலைன்னு யார் சொன்னா ஆரு...” அவனின் காதில் கிசுகிசுத்தவள் அவன் முகத்தைத் தன் நெஞ்சோடு அணைத்து கொண்டாள். அதையே சம்மதமாக எடுத்துக் கொண்டு முன்னேறியவனை அவள் தடுக்கவில்லை.

அவனே இப்போது தான் தன் கோபத்திலிருந்து விடுபட்டு வெளியில் வந்திருக்கிறான். இப்போது போய்த் தேவையில்லாமல் பேசி அவன் மனதை காயப்படுத்த வேண்டாம் என்று அவள் தன் உள்ளத்து உணர்வுகளை அவனுக்குத் தெரியாமல் மறைத்தாள். தன் மனதை விட அவனின் மனதை பெரியதாய் நினைத்த அவளின் காதல் மனதை அவன் என்று தான் உணர போகிறான்?

வெகுநாட்களுக்குப் பின் இருவரின் மனமும் நிறைந்திருந்தது. ‘என்னை நீ சந்தேகப்பட்டாயே?’ என்ற அவனின் உள்ளத்து குமுறலும்... ‘என் உள்ளத்து காதலை கொன்றுவிட்டானே...’ என்ற அவளின் ஆதங்கமும் அந்தச் சின்னச்சிறு சிசுவின் வரவால் மறைந்து போனது.

“பேபி எனக்கு உன்னைப் போல் அழகான பெண் குழந்தை வேணும்” அவளின் நெற்றியில் முத்தமிட்டு அவன் தன் ஆசையைச் சொன்ன போது அவளுக்கு இந்த உலகத்தை வென்று விட்டது போல் கர்வமாய் இருந்தது.

“நான் உங்களைச் சந்தேகப்பட்டவ ஆரு... அப்படிப்பட்ட என்னை மாதிரி உங்களுக்குப் பெண் குழந்தை வேணுமா? நல்லா யோசிச்சு சொல்லுங்க ஆரு...” கண்ணைச் சிமிட்டி சொல்லியவளின் அழகில் மெய்மறந்தவனாய் அவளைக் கண்ணிமைக்காமல் பார்த்தான் அவன். இத்தனை நாளாய் அவனின் பாராமுகத்தால் வாடியிருந்த அவளின் அழகு முகம் இன்று அழகாய் மலர்ந்திருப்பது கண்டு அவனுக்குமே சந்தோசமாயிருந்தது.

“ஏய் கொழுப்பா...” அடிப்பது போல் தன் கையை உயர்த்தியவன் அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான். “சந்தேகப்பட்டுக்கோ... நல்லா சந்தேகப்பட்டுக்கோ... நான் என் பொண்ணு வர போற சந்தோசத்தில் இருக்கேன். அதனால நீ தப்பிச்ச...”

“அப்போ என் மேல் கோபமில்லையே...” அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு அவள் தயங்கி தயங்கி கேட்க...

“இப்போ கோபமில்லை போதுமா?” புது வரவின் உறவால் பழைய எண்ணங்களை மறக்க எண்ணினான். “ஆமாம்... நீ என்னமோ புதுசா கோபப்படுற... அவ்வளவு கோபம் வருதா உனக்கு?” அவளின் மூக்கை ஆட்டியபடி அவன் கேட்க...

“ம்... கொஞ்சம் கோபம் தான்...” அவள் வருத்ததுடன் சொல்ல... அவளின் வருத்தம் அவனையும் தாக்கியதோ இல்லை அவனின் வாரிசு அவள் வயிற்றில் இருப்பதால் அவளின் வருத்தம் அவனைப் பாதித்ததா... எது என்று தெரியவில்லை.

“சாரி பேபி... நான் அப்படி நடந்திருக்கக் கூடாது... அப்படிப் பேசியிருக்கக் கூடாது...” அவளை அணைத்து அவள் முகம் முழுவதும் முத்தத்தால் அர்ச்சித்தவன் அவளிடம் மன்னிப்பை வேண்டினான்.

“ஏன் ஆரு... அப்படி என்னைக் கொடுமை படுத்த உங்களுக்கு எப்படி மனசு வந்துச்சு...? ரிஷி மாமா என்ன பேசியிருந்தாலும் நீங்க என்னிடம் விளக்கம் கேட்டிருக்கலாமே... நானும் என் நிலையை நல்லா தெளிவுப்படுத்தி இருப்பேனே... அதை விட்டு ஏன் அன்னைக்கு அப்படி நடந்துக்கிட்டீங்க? எனக்கு எப்படி வலிச்சது தெரியுமா?” அவனின் முத்தத்தில் பாதி உருகியவள்... அவனின் மன்னிப்பில் முழுதாய் உருகி... தன் உள்ளத்து குமுறலை அவனிடம் கொட்டினாள்.

“எங்கே வலிச்சது பேபி... இங்கேயா...?” அவன் கேட்டுக் கொண்டே அவளின் மேனியில் தன் முத்திரையைப் பதிக்க...

“அங்கே எல்லாம் இல்லை... இங்கே வலிச்சது...” தன் நெஞ்சின் இடது பக்கத்தைச் சுட்டி காட்டியவள் கண்களில் கண்ணீர் கோர்க்க... “ரொம்ப... ரொம்ப வலிச்சது தெரியுமா?” அவள் காட்டிய இடத்தைக் கண்டு அவன் அதிர்ந்து போனான். உடலில் வலியிருந்தால் முத்தமிட்டு அதை ஆற்றலாம்... ஆனால் அவளின் மனதின் வலியை அவன் எவ்வாறு போக்குவான்? அவனுக்கு விடை தான் தெரியவில்லை.

“சாரி பேபி... நான் பேசியது தவறு தான்... இனிமேல் அப்படி நடந்துக்க மாட்டேன்...” அவளின் கையைப் பிடித்துக் கொண்டு ஒவ்வொரு விரலால் முத்தமிட்டு சொன்னவனுக்கு அடுத்து என்ன செய்வது? என்று புரியவில்லை.

“என் நிலையில் இருந்து பாருங்க ஆரு... ரிஷி மாமாவை என்னோட சேர்த்து நீங்க பேசும் போது நான் என்னன்னு நினைப்பேன்? நீங்க என்னைச் சந்தேகப்பட்டதா தானே எனக்கு நினைக்கத் தோணும்? அதான் நான் அன்னைக்கு அந்த வார்த்தைகளைச் சொல்லிட்டேன்... என்னையும் அறியாமல் வெளிவந்து விட்ட அந்த வார்த்தைகளை நீங்க மன்னிக்க மாட்டீங்களா? நான் உங்களைச் சந்தேகப்படல ஆரு... ப்ளீஸ் என்னைப் புரிஞ்சுக்கோங்க” அவள் சொல்ல சொல்ல... அவள் பக்கம் நியாயம் அவனுக்குப் புரிந்தது.

அவள் பேசிய வார்த்தைகள் தனக்கு எந்தளவுக்கு வலியை கொடுத்ததோ அதை விட அதிக வலியை தன் சொல்லும், செயலும் அவளுக்குத் தந்திருப்பதை அவனும் உணர்ந்து கொண்டான். “வேணாம் பேபி... பழைசை எல்லாம் நாம மறந்திருவோம்... இப்போ புதுசாய் வாழ்க்கையை வாழ ஆரம்பிப்போம். நடந்து முடிந்ததை நீயோ இல்லை நானோ எப்பவும் பேச வேணாம். நான் உன் கிட்ட கேட்டுக்கிறது ஒண்ணே ஒண்ணு தான்... என்னை மன்னிச்சிரு... அன்பு, பாசம், காதல் இதெல்லாம் தெரியாமல் வளர்ந்த முரடன் நான். என்னையும் அறியாமல் நான் ஏதாவது தப்பு செஞ்சிருந்தா என்னை மன்னிச்சிரு...” மனமுவந்து அவன் மன்னிப்பு வேண்ட...

“நமக்குள் சாரி எல்லாம் வேணாமே ஆரு...” அவன் மன்னிப்பு கேட்டது அந்தப் பேதை மனதுக்கு நிம்மதியை அளித்தது. எல்லையற்ற காதலுடன் அவன் நெஞ்சில் ஒன்றி கொண்டாள் அவள்.

“அப்போ என்ன வேணுமாம் என் பேபிக்கு...?” கண்ணைச் சிமிட்டி கேட்டவன் அவளின் உதட்டை ஆசையாய் பார்த்தான். அவளோ அவனின் விருப்பம் அறிந்து அவனின் முகத்தைத் தன் முகத்தின் அருகில் இழுத்தவள் அவனின் கண்களைச் சந்திக்க முடியாமல் தன் கண்களை மூடி கொண்டாள். அவள் கண் மூடியிருந்த நிலையும்... அவளின் நடுங்கும் இதழ்களையும் கண்டவன் அதற்கு மேல் தாமதிக்காமல் அவள் முகம் நோக்கி குனிந்தான்.

****

“என்ன பேபி இங்கே நிற்கிற... இந்த மாதிரி நேரத்தில் நீ ரெஸ்ட் எடுக்காம... இங்கே வந்து கால் வலிக்க நிற்கலாமா?” அவர்களது தளத்தின் மின்தூக்கியின் அருகிலேயே நின்று கொண்டிருந்த மயூரியை கடிந்தவன் அவளைக் கைத்தாங்கலாய் அணைத்துப் பிடித்துக் கொண்டான்.

“ஆரு...” கண்களில் தவிப்புடன் நின்றிருந்தவளை கண்டவன்,

“என்னடா...?” அவளின் முன்நெற்றியில் முத்தமிட்டு அவன் கேட்க... அந்த ஆறுதலில் அவன் தோளில் தலை சாய்ந்தவள் மீண்டும், “ஆரு...” என்க...

“உன் ஆரு தான் யாரு இல்லைன்னா... என்ன விசயம் சொல்லுடா...?” மீண்டும் அவன் கேட்க,

“ஊரிலிருந்து அப்பா, அம்மா வந்திருக்காங்க...” அவளின் பதிலில் அவனின் முகம் ஒரு நொடி யோசனையில் சுருங்கியது. மறுநொடி அவன் முகம் முன்பு போல் புன்னகையைச் சுமந்திருந்தது.

“அதுக்கென்ன பேபி... கன்சீவா இருக்கிற பொண்ணைப் பார்க்க வந்திருக்காங்க... சந்தோசமான விசயம் தானே? அதுக்குப் போய் நீ ஏன் கலவரமாகுற?” என்றவன், “இப்போவாவது வீட்டுக்கு போகலாமா?” அவளின் தலையை முட்டியபடி அவன் கேட்க...

“உங்களுக்கு அவங்க வந்ததில் எந்த வருத்தமும் இல்லையே?” அவனுக்குத் தன் தந்தையின் மேலிருக்கும் கோபம் அவளுக்குமே தெரியும் ஆதலால் அவள் மனம் பயத்தில் படபடவென அடித்துக் கொண்டது. அவளின் படபடப்பை அவளின் முகத்தில் வழிந்த வியர்வை அவனுக்குக் காட்டி கொடுக்க...

“நான் எதுக்கு அவங்க மேல வருத்தப்படப் போறேன்... நீ தேவையில்லாமல் கவலைப்படாதே” தன் சட்டைப் பையில் இருந்து கைக்குட்டையை எடுத்தவன் அவளின் வியர்வையைத் துடைத்து விட்டான்.

“எதையும் யோசிக்காமல் வா... நான் உன் அப்பா, அம்மாவை எதுவும் சொல்ல மாட்டேன்... அவங்க எவ்வளவு நாள் இருக்கணுமோ அவ்வளவு நாள் இருந்திட்டு போகட்டும். ஓகேவா?” அவனின் பதிலில் அவளின் குழம்பிய மனம் தெளிவுற அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

அவளின் புன்னகையில் மனம் நிறைந்தவன் அவளைக் கைத்தாங்கலாய் வீட்டிற்கு நடத்தி சென்றான். என்ன தான் அவளுக்காக அவன் வெளியில் ஒன்றும் காட்டி கொள்ளாமல் இருந்தாலும்... அவனின் உள்மனதில் ஏனோ ஒரு தவிப்பு எழுந்தது. அவளை அவனிடமிருந்து யாரோ பிரித்துக் கொண்டு போவது போல்... யாருமே இல்லாமல் அவன் தனிமையில் தவிப்பது போல்... அவன் மனம் சொல்ல முடியாத ஒருவித உணர்வலையில் சிக்கி தவித்தது. அந்த உணர்வில் இருந்து தப்புவிப்பதற்காக அவளை அவன் இறுக அணைத்துக் கொண்டான்.

“வாங்க...” மாமனாரையும், மாமியாரையும் பார்த்து பொதுவாய் வரவேற்றவன்... மேற்கொண்டு என்ன

பேசுவது? என்று தெரியாமல் தன் அறைக்குச் செல்ல எத்தனிக்கும் போது... மயூரியின் கை அவனைப் பிடித்துத் தடுத்து நிறுத்தியது.

“அப்பா கிட்ட பேசிட்டிருங்க...” அவன் மட்டும் கேட்கும் குரலில் அவள் மெதுவே முணுமுணுக்க... அவளின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அவன் அங்கே அமர்ந்தான்.

“மாப்பிள்ளைக்குக் காபி கொடுக்கலையா மயூ?” என்றபடி சுமதி எழுந்திருக்க... மயூரியும் அவர் பின்னே சென்றாள்.

மகள் குழந்தை உண்டாகி இருக்கிற விசயம் தெரிந்ததும் சுமதியின் மனதிலிருந்த வருத்தம் எல்லாம் காணாமல் போய்விட்டது. அடுத்தத் தலைமுறையைப் பார்க்கும் சந்தோசத்தில் மஞ்சரியை வேலை செய்யும் பாட்டியின் வசம் ஒப்புடைத்து விட்டு மயூரியை காண அவர் ஓடி வந்துவிட்டார். முதலில் இங்கு வர மறுத்த ராகவன் பின் மனைவியின் தொல்லை தாங்காமல் கிளம்பி வந்துவிட்டார். அவரின் மனதிலிருந்த மகள் மீதான பாசமும் அவரை இங்கே இழுத்து வந்துவிட்டது. ஆனால் அவருக்கு இன்னமும் ஆரன் மேலிருக்கும் கோபம் கொஞ்சமும் குறையவில்லை.

பெண்கள் இருவரும் சமையலறையில் உள்ளே சென்றதும் ஆண்கள் இருவரும் என்ன பேசுவது? என்று தெரியாமல் அமர்ந்திருந்தனர். அமைதியாய் அமர்ந்திருந்தாலும் ராகவனின் உள்ளம் உள்ளே குமுறிக் கொண்டிருந்தது.

“என் மகளை என்னிடம் இருந்து பிரிச்சிட்ட இல்ல. உனக்கு இப்போ சந்தோசமா?” அவரின் வார்த்தையில் இருந்த குரோதத்தில் திடுக்கிட்டவன் அவரை நிமிர்ந்து பார்த்தான்.

“நீ ப்ளான் பண்ணி என் மகளை என்னிடமிருந்து பிரிச்ச மாதிரி... அவளை உன்னிடம் இருந்து நான் பிரிக்கல... என் பேரு ராகவன் இல்லடா...” அவனிடம் சூளுரைத்தவர்,

“பாவி கொலைக்கார பாவி... உன்னை மாதிரி ஒரு கொலைக்காரனுக்கு என் பொண்ணு மாதிரி அழகான

குடும்பப் பாங்கான பொண்ணு கேட்குதோ? உனக்கு ஏத்த மாதிரி ரோட்டில் அலையற ஒருத்தி எவளையாவது கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே... எதுக்கு என் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட... அப்பா, அம்மா இல்லாத அநாதை பயல் உனக்கு என் பொண்ணு கேட்குதா? வசதியில்லாத வெறும்பயல் உனக்கு என் பொண்ணு கேட்குதா? நீ மட்டும் என் பொண்ணு வாழ்வில் குறுக்கே வராமல் இருந்திருந்தா... ராஜா மாதிரி மாப்பிள்ளை பார்த்து அவளுக்குக் கட்டி வச்சிருப்பேன். நீ குறுக்கே வந்ததால் எல்லாம் நாசமா போச்சு... ஆனா நான் இதை இப்படியே விட மாட்டேன்”

“ஒரு கொலைக்காரன் எனக்கு மருமகனா? அது ஒரு போதும் நடக்காது... இப்பவும் நான் எதுக்குத் தெரியுமா வந்திருக்கேன்... என் பொண்ணைக் கையோடு கூட்டிக்கிட்டு போய் அவ வயித்துல வளர்ற உன் குழந்தையை அழிச்சிட்டு... உன்னை விட வேறொரு நல்ல மாப்பிள்ளையாய் பார்த்து நான் அவளுக்குக் கட்டி வைக்கப் போறேன். நீ எனக்குச் செஞ்ச துரோகத்துக்கு நான் உன்னைப் பழிக்கு பழி வாங்காமல் போக மாட்டேன் பாரு. என் பொண்ணு நான் என்ன சொன்னாலும் கேட்பா... அவளை எப்படி மடக்கணும் எனக்குத் தெரியும்...”

அவர் பேசி கொண்டிருக்கும் போதே பெண்கள் இருவரும் வந்துவிட... அவர் அமைதியானார். அவரின் வார்த்தையில் அவன் மனம் அதிர்ந்து போயிருந்தது. கடைசியில் அவன் பயந்த மாதிரியே ஆகிவிட்டது.

“ஆரு... காபி எடுத்துக்கோங்க” மயூரி அவனிடம் காபி கோப்பையை நீட்ட... அவனோ அமைதியாய் அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவளோ என்ன என்பது போல் கண்களால் வினவினாள். அவளின் தந்தையின் பேச்சில் காயமுற்று இருந்த அவனின் மனம் அவளது ரகசிய விசாரிப்பில் அமைதியடைந்தது.

‘ஒண்ணுமில்லை’ என்பது போல் மறுப்பாய் தலையசைத்தவன் அவள் கொடுத்த காபியை ருசி கூடப்

பார்க்காமல் விழுங்கினான். அதோடு சேர்த்து அவர் கூறிய வார்த்தைகளையும் விழுங்கி கொண்டான். முன்பிருந்த ஆரனாய் இருந்தால் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று அவரிடம் எதிர்த்து வாயாடி இருப்பான். ஆனால் இப்போது இருப்பவனோ புதிய ஆரன்... மயூரின் மேல் எல்லையற்ற காதல் வைத்திருக்கும் அன்பு கணவன்.

அன்று அவள் தன் நெஞ்சில் கை வைத்து வலிக்கிறது என்று கூறிய போதே அவனின் முரட்டுத்தனம், முசுட்டுக் கோபம் எல்லாம் இருந்த இடம் இல்லாமல் அழிந்து மாயமாய் மறைந்து போனது. இன்றும் அவளுக்காக அவளின் தந்தையின் வார்த்தையைப் பொறுத்துக் கொண்டான்.

“பேபி குளிச்சிட்டு வர்றேன்...” அவளிடம் கூறிவிட்டு அவன் அறைக்குள் செல்ல... அவள் அவனைப் பின் தொடர்ந்தாள்.

“ஆரு... ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?” அவனின் முக மாறுதலை அவளும் கண்டு கொண்டாள். முதலில் இருந்தவனாய் இருந்திருந்தால் வார்த்தையால் அவளைக் காயப்படுத்தி இருப்பான். இன்றோ அவனால் பார்வையால் கூட அவளைக் காயப்படுத்த முடியவில்லை.

“ஒண்ணுமில்லை பேபி... கொஞ்சம் தலைவலி...” என்றவன் துண்டை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் செல்ல...

“தலைவலியோட குளிக்கணுமா?” அவள் கவலையுடன் கேட்க...

“கசகசன்னு வியர்வையாய் இருக்கு... அதான்” அவனின் பதிலில் அவளும் சரியென்று தலையசைத்தவள் பெற்றோரை கவனிக்கச் சென்றாள். கணினி கம்பெனியில் ஏசியின் குளுமையில் இருந்துவிட்டு வந்தவனுக்கு எங்கிருந்து வியர்வை வந்தது என்று அவளுக்குச் சந்தேகம் தோன்றாததால் அவன் தப்பித்தான்.

குளியலறையில் ஷவரை திறந்து விட்டு அதன் அடியில் நின்றவனின் மனதின் வெம்மையை அந்தக் குளிர்ந்த

நீரால் கூடக் குளிர்விக்க முடியவில்லை. ராகவனின் வார்த்தைகள் அவனின் காதில் திரும்பத் திரும்ப ஒலித்தது. அதன் அர்த்தம் புரிந்தவன் கண்களில் கண்ணீர் வழிந்தது. தான் ஒரு ஆண்மகன் என்பதையும் மறந்தவனாய் அவன் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தான். தன்னவளை அடைவதற்கு வேண்டிய நல்ல குடும்பப் பின்னணி இல்லாத தன் நிலையை எண்ணி தனக்குத் தானே சபித்துக் கொண்டான்.

‘நான் அனாதையா...? வசதியில்லாத வெறும்பயலா?’ என்று மனம் குமுறியவன் கண் முன்னே அரண்மனை போல் கம்பீரமாய் இருந்த அந்த வெண்ணிற மாளிகை வலம் வந்தது. அந்தக் காட்சியைக் காண பிடிக்காதவனாய் வேதனையுடன் கண்களை இறுக மூடி கொண்டான் அவன்.

“மாப்பிள்ள... இன்னொரு சப்பாத்தி வச்சுக்கோங்க... சுமி அந்தக் குருமா கிண்ணத்தை நகர்த்து...” இரவு உணவுக்கு அமர்ந்திருந்த ஆரனின் தட்டில் மேலும் ஒரு சப்பாத்தியை வைத்த ராகவன்... மனைவியிடம் இருந்து குருமா கிண்ணத்தை வாங்கித் தானே அவனுக்குப் பரிமாற... அவரின் இந்த அன்பு முகம் அவனுக்கு மகிழ்ச்சி அளிப்பதற்குப் பதிலாகத் திகைப்பையே அளித்தது.

கொஞ்ச நேரம் முன்பு தகாத வார்த்தைகள் பேசிய மனிதரா இவர்? என்பது போலிருந்தது அவரது நடவடிக்கை. நேரத்திற்கு நேரம் நிறம் மாறும் பச்சோந்தி மனிதரான அவரைக் கண்டு அவன் மனம் கசந்தது. மெல்ல நிமிர்ந்து மயூரியை பார்த்தான். அவளோ தந்தை தன் கணவனுக்குப் பரிமாறும் அழகை மனநிறைவுடன் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் தெரிந்த சந்தோசத்தைக் குலைக்க மனமில்லாமல் அவன் ஒன்றும் பேசாது சாப்பிட்டு எழுந்தான்.

அதற்கு மேல் ஹாலில் அமர்ந்து ராகவனின் வம்பிற்கு ஆளாவதை விட அறையில் போய் முடங்குவது மேல் என்று அவனுக்குத் தோன்ற, “நான் ரூமிற்குப் போறேன்...” பொதுவாகக் கூறிவிட்டு அவன் செல்ல... அவன் பின்னோடு வந்த மயூரி, “இன்னும் தலைவலி சரியாகவில்லையா...?” அவளின் குரலில் கவலை நிரம்பி வழிந்தது. அவளின் கவலை அவனையும் தாக்கியதோ என்னவோ? அவளின் கன்னம் தட்டி,

“நீ கவலைப்படும் படி இல்லை... லேசா தான் இருக்கு. நான் மேனேஜ் பண்ணிக்குவேன். நீ போய்ச் சாப்பிட்டு விட்டு வா...” அவனின் பேச்சில் கவலையகன்றவளாய், “சரி...” என்று அவள் புன்னகைக்க... அவளின் புன்னகையை விழியகலாது பார்த்து மனதில் பதித்தவன் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

மருமகனின் நேசத்தை அவனின் கண்களின் வழியே கண்ட சுமதி மனம் நிம்மதியுற்றவராய் கணவரிடம், “நானும் மாப்பிள்ளையை என்னமோன்னு நினைச்சேன்... பரவாயில்லை மயூ மேல உயிரையே வைச்சிருக்கிறார்...” ஆரனை பற்றிச் சிலாகித்துப் பேசிய மனைவியை முறைக்கவும் முடியாமல், அதேசமயம் அவரின் பாராட்டை ஏற்கவும் முடியாமல், “ம்... ம்...” என்ற முணுமுணுப்போடு ராகவன் செல்ல... அவரை வினோதமாய்ப் பார்த்த சுமதி மகளை உணவு உண்ண அழைத்தார்.

சுமார் இரண்டு மணி நேரம் கழித்து அறைக்குள் நுழைந்த மயூரியை கண்டு மடிகணினியில் மூழ்கியிருந்த ஆரன் நிமிர்ந்து பார்த்துப் புன்னகைத்தான். “தலைவலியோட கம்ப்யூட்டர் பார்த்துக் கொண்டிருந்தா கூடக் கொஞ்சம் தலைவலி வராதா?” என்றபடி அவன் கையிலிருந்த மடிகணினியை அவள் மூடி வைக்க எத்தனிக்க...

“ஹேய் பேபி... வொர்க் எல்லாம் சேவ் பண்ணல.... வெய்ட்...” என்றவன்... தான் செய்திருந்த வேலையைக் கணினியில் சேமித்து விட்டு மூடி வைத்தான். “உன் அப்...”, ‘உன் அப்பா, அம்மா’ என்று சொல்ல வந்தவன் அதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு, “மாமா, அத்தை எங்கே?”

“மகளுக்கும், மருமகனுக்கும் ப்ரைவசி கொடுக்க நினைச்சு ரிஷி மாமா வீட்டுக்கு போயிட்டாங்க...” படுக்கையில் தலையணையை ஒழுங்குப்படுத்திக் கொண்டு அவள் பதில் சொல்ல... அதற்கு ஒன்றும் பேசாமல் தன் யோசனையில் மூழ்கியிருந்தவனைக் கண்டு அவள் வேறொன்றை நினைத்து கொண்டாள்.

“ஆரு... நான் சும்மா சொன்னேன்... நம்ம வீட்டில் தங்க விருப்பமில்லாமல் அவங்க அங்கே போகல... இங்கே இருக்கிறது ஒரு ரூம்... அதுவும் நமக்கு வேணும்... அங்கே ரிஷி மாமா தனியா தான் இருக்காங்க... அதான் அங்கே போயிருக்காங்க” அவள் விளக்கம் கொடுக்க... அவளைப் புரியாத பார்வை பார்த்தவன்...

“அதனால் என்ன பேபி? நான் ஒண்ணும் சொல்லலையே?”

“ஓ... நீங்க யோசனையாய் இருந்தீங்களா? ஒருவேளை அப்பா, அம்மா தங்காததாலோ என்று நினைத்தேன்...” என்றவள் அவன் அருகில் வந்து அவன் தோளில் சாய்ந்து அமர்ந்தவள், “ஆரு... அப்பா என்னை ஊருக்கு கூப்பிடுறார்... அம்மாவுக்கும் மாசமாய் இருக்கும் மகளைச் சீராட்ட வேணும்ன்னு ஆசையா இருக்காம். நான் அவங்களோட போயிட்டு வரவா?”

புலி வருது... புலி வருது என்று பயந்து கடைசியில் புலி வந்தே விட்டது. ராகவன் தங்களைப் பிரிக்க ஏதும் அஸ்திரத்தை பயன்படுத்துவார் என்று அவன் எதிர்பார்த்தது தான்... ஆனால் அது இவ்வளவு சீக்கிரம் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. குழந்தை உண்டாகி இருக்கும் இந்த நிலையில் அவளாக ஆசைப்பட்டுக் கேட்கும் முதல் விசயம் இது. அவளைப் போகாதே என்று சொல்ல அவனுக்கும் மனம் வரவில்லை. அதேசமயம் இந்தப் பிரிவு அவர்களிடையே நிரந்தரப் பிரிவை உண்டாக்கி விடுமோ என்ற பயமும் அவன் மனதை அலைக்கழித்தது.

“உன் இஷ்டம் பேபி...” அவளின் கன்னத்தை வருடியபடி அவளுக்காய் சொன்னவனின் கையைக் கன்னத்தோடு பிடித்துக் கொண்டு அவனை நிமிர்ந்து பார்த்தவள், “தேங்க்ஸ் ஆரு...” என்க... அவனுக்கிருந்த மனநிலையில் நன்றியை தெரிவிக்கும் முறையை அவளுக்குக் கற்று தர மறந்திருந்தான்.

“பேபி... உன் மடியில் படுத்துக் கொள்ளவா?” அவனின் கேள்வியில், “என்ன ஆரு இது? இதுக்கெல்லாமா பெர்மிசன் கேட்பாங்க...?” என்றவள் அவனை மடியில் படுக்க வைத்து அவனின் முடியை கோதி கொடுத்தாள். அவனோ அவள் தன்னை விட்டு பிரிந்து விடுவாளோ என்ற பயத்தில் அவளை இறுக அணைத்துக் கொண்டு படுத்திருந்தான்.

****

‘இந்நேரம் சென்னைக்குப் போய்ச் சேர்ந்திருப்பாள்... அவள் வீட்டு மனிதர்களுடன் ஐக்கியமாகி என்னை மறந்திருப்பாளோ? கடைசி நொடி கூடக் கேட்டாளே... நான் போகவா? வேணாமா? என்று... வேண்டாம் என்று தடுத்திருக்கலாமோ... ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் என்னை விட்டுப் போயிருக்க மாட்டாளே... தப்பு செய்துவிட்டேனோ? அவளின் அப்பாவின் பேச்சை கேட்டும் அவளை அங்கே அனுப்பியிருக்கக் கூடாதோ? அப்படி அவளை அனுப்பாமல் இருப்பதற்கு வேறென்ன காரணம் நான் சொல்லியிருக்க முடியும்? அவள் அப்பாவிற்கும் எனக்கும் நடக்கும் இந்தப் பனிப்போரை பற்றி நான் அவளிடம் சொன்னால்... அவள் என்னை நம்புவாளா? இல்லை அவள் அப்பாவை நம்புவாளா? அப்படி அவள் என்னை நம்பாமல்... அதுவே எங்களின் நிரந்தரப் பிரிவிற்குக் காரணமாகி விட்டால்...?’

அலுவலகத்தில் அமர்ந்து கொண்டு எதை எதையோ நினைத்துக் கொண்டிருந்தான் ஆரன். இரவு வெகுநேரம் சென்ற போதும் அவனுக்கு வீட்டிற்குச் செல்ல மனம் வரவில்லை. அப்படி அவன் சென்றாலும் அவனை வரவேற்க அவன் மனைவியா அங்கே இருக்கிறாள்? ஆம்... மயூரியை அவள் பெற்றோருடன் செல்ல அவன் அனுமதியளித்ததோடு மட்டுமில்லாமல்... அவளை ரயிலில் அனுப்ப மனமில்லாமல்... மூவருக்கும் விமானத்தில் செல்வதற்காகப் பயணச்சீட்டையும் வாங்கிக் கொடுத்து விட்டான். இன்று காலையில் தான் அவள் சென்னை செல்வதாக இருந்தது. அவளைப் பிரியும் சக்தி அவனுக்கில்லாததால் அலுவலகத்தில் முக்கியக் கூட்டம் இருக்கிறது என்று அவர்களை ரிஷியின் வசம் ஒப்புடைத்துவிட்டு... அவன் அலுவலகம் வந்துவிட்டான்.

காலையில் இருந்து இதயத்தின் ஒரு மூலையில் ஏற்பட்ட வலியானது இப்போது இதயம் முழுவதும் பரவி அவனை வலியில் துடிக்கச் செய்தது. தலையை அழுந்த கோதி கொண்டு கைகளில் தலையைத் தாங்கி கொண்டு குனிந்தவன் கண்ணில் அவன் சட்டை பையின் ஓரம்

படிந்திருந்த அவளது கண்ணீர் கறை தென்பட்டது. காலையில் அவள் தன்னை விட்டு செல்ல போகிறாள் என்ற பிரிவு துயரில் அவன் அவளை இறுக அணைத்து முத்த மழை பொழிந்த போது அவனின் காதல் கண்டு அவளின் கண்கள் கண்ணீரை சுரந்தது. இருந்தாலும் அவனைச் சமாதானம் படுத்தும் விதமாக,

“மிஞ்சி போனால் பத்து நாள்... அதுக்கப்புறம் நான் வந்துவிடுவேன்... இதுக்குப் போய் இப்படி வருத்தப்படலாமா?” தன் கண்ணீரை துடைத்துக் கொண்டு அவள் அவனைத் தேற்றினாள். தன்னைப் பிரிந்து செல்வது அவளுக்குமே வருத்தம் என்பதை உணர்ந்தவனுக்குச் சற்று இதமாக இருந்தது. அவள் அப்பா என்ன... யார் வந்தாலும் தங்களைப் பிரிக்க முடியாது என்ற எண்ணம் அப்போது தான் அவனுக்குள் வலுப்பெற்றது. இருந்தாலும் இருபத்துநான்கு வயது வரை வளர்த்த தந்தையா...? இல்லை ஆறேழு மாதம் பழகிய கணவனா? என்றால்... தந்தையின் வார்த்தையைத் தானே அவளுக்கு நம்பத் தோன்றும். அப்படியும் இப்படியுமாய் நினைத்து அவன் மனம் குழம்பத் தான் செய்தது.

இதற்கு மேல் அலுவலகத்தில் இருந்தால் வேலைக்காகாது என்றெண்ணியவன் வீட்டிற்குப் பயணமானான். தன்னிடம் இருந்த சாவியைக் கொண்டு கதவை திறந்தவனுக்கு அவளில்லாத வீடு வெறிச்சென்று அவனைத் தாக்கியது. அவளில்லாத படுக்கையறைக்குச் செல்ல கூட விருப்பம் இல்லாதவனாய் ஹாலில் இருந்த சோபாவில் அசதியில் அப்படியே முடங்கிவிட்டான்.

“ஆரு...” அவனின் தலை கோதி நெற்றியில் முத்தமிட்டு அவள் எழுப்புவது போல் அவனுக்குத் தோன்ற... அந்தக் கனவை அவனுக்குக் கலைக்க விருப்பமில்லை. கண்களை மூடி கொண்டு கனவிலாவது தன்னவளின் ஸ்பரிசத்தை ரசித்துக் கொண்டிருந்தான்.

“ஆரு எந்திருங்க...” அவன் தோளை உலுக்கியவளின் கையைத் தன் நெஞ்சோடு சேர்த்து இறுக்கியவன், “பேபி...

என்னை விட்டு போக உனக்கு எப்படி மனசு வந்தது? எனக்கு முடியல பேபி... நீயில்லாமல் என்னால் ஒரு நிமிசம் கூட இருக்க முடியல பேபி... பத்து நாள் எல்லாம் என்னால் தாங்க முடியாது. ஒரே நாளில் திரும்பி வந்துவிடு பேபி... ஐ ரியலி மிஸ் யூ பேபி" தூக்கத்தில் அவன் புலம்ப...

"ஆரு..." என்று கூவியவளின் கரங்கள் அவனை இறுக்கமாய் அணைத்துக் கொள்ள... அவன் நெஞ்சில் முகம் புதைத்தவளின் அருகாமை அவனுக்கு எதையோ உணர்த்த அவன் சட்டென்று கண்களைத் திறந்தான். அதேநேரம் அவளும் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"ஹேய் பேபி... அப்போ... நீ... நீ... ஊருக்கு போகலையா?" சந்தோசத்தில் அவனுக்கு வார்த்தைகள் திக்கி திணறியது. எதிர்பாராமல் தன்னவளை இங்கே கண்டதும் அவனுக்கு மகிழ்ச்சியில் என்ன செய்வது என்று தெரியாமல் தன்னோடு அவளை இறுக்கி அணைத்து முத்தமழை பொழிந்தான்.

"உங்களை விட்டுட்டு போக மனசு வரல ஆரு? அதான் போகல..." அவனின் சட்டை பொத்தானை திருகியபடி கூறியவளை கண்டு அவனுக்கு உள்ளுக்குள் ஆனந்தம் பொங்கியது.

"ஏண்டா...?" அவளின் தலை முடியை கோதி கொண்டு மனநிறைவுடன் அவன் கேட்க...

"என்ன தான் எனக்காக... என் அம்மா, அப்பாக்காக நீங்க என்னைப் போகச் சொன்னாலும் உங்க மனசு அலைபாய்ஞ்சிட்டு இருந்தது எனக்குப் புரிஞ்சது. எனக்குமே உங்களை விட்டுட்டு அங்கே போய் நிம்மதியாய் இருக்க முடியும்ன்னு தோணல. நம்ம ரெண்டு பேரையும் கஷ்டப்படுத்துற இந்தப் பிரிவு தேவை தானான்னு யோசிச்சேன். வேணாம்ன்னு தோணியது... போகாம இருந்திட்டேன்" அவள் தன்னிலை விளக்கம் கூற...

"உங்க அப்பா ஒண்ணும் சொல்லலையே?" அவளின் தந்தையின் மனம் பற்றி அவனுக்குத் தெரிய

வேண்டியிருந்தது.

“அவருக்குக் கொஞ்சம் வருத்தம் தான்... இருந்தாலும் என் விருப்பத்திற்கு எதிரா அவராலும் ஒண்ணும் பேச முடியல. உனக்கு எப்போ விருப்பமோ அப்போ வான்னு சொல்லிட்டாரு” அவளின் பதிலில் அவனுக்கு வேண்டிய பதில் இருக்க எல்லையற்ற நிம்மதி அவன் மனதை வியாப்பித்தது. அவளை மீறி அவள் தந்தையால் அவர்களை ஒன்றும் செய்ய முடியாது என்பது தெள்ளத்தெளிவாக அவனுக்குப் புரிந்தது.

“சாரி ஆரு...” அவள் மிகுந்த வருத்தத்துடன் சொல்ல... அவன் புரியாமல் அவளைப் பார்த்தான்.

“என்னால டிக்கெட் ஃபேர் வெஸ்ட்டா போச்சு... சாரி ஆரு...”

“எனக்காக நீ இங்கே இருந்ததே பெரிசு... உன்னை விட எனக்கு டிக்கெட் காசு முக்கியமில்லை...” அவன் கூறவும் தான் அவளுக்கு நிம்மதியாய் இருந்தது.

“அப்போ நைட்டெல்லாம் ரூமில் தான் இருந்தியா பேபி?”

“இது என்ன கேள்வி ஆரு... நான் அங்கே தான் இருந்தேன்... உங்களை எதிர்பார்த்திட்டு இருந்தா நீங்க இங்கேயே படுத்து தூங்கிட்டீங்க” அவள் மனத்தாங்கலுடன் சொல்ல...

“நான் ஒரு மடையன்... நீ எதிர்பார்ப்பேன்னு தெரியாம ஒரு நைட்டை வேஸ்ட் பண்ணிட்டேனே... தெரிஞ்சிருந்தா...” சொல்லி கொண்டே அவள் முகத்தை அவன் ஆர்வமாய்ப் பார்க்க...

“தெரிஞ்சிருந்தா என்ன செஞ்சிருப்பீங்க?” பதில் தெரிந்தும் அவன் வாயால் கேட்க வேண்டும் என விரும்பி அவள் அவனைக் கேள்வியாய் பார்த்தாள்.

“ம்... தெரிஞ்சிருந்தா என்ன செஞ்சிருப்பேனா?” கூறிக் கொண்டே அவள் கழுத்தில் அவன் முகம் புதைக்க... அவளோ அவனின் ஸ்பரிசத்தில் தன்வசம் இழந்தாள்.

****

“ஆன்ட்டி... ஆன்ட்டி...” காலங்கார்த்தால தன் வீட்டின் முன் நிற்கும் ஆரனை கண்டு மைதிலிக்கு ஆச்சிரியமாக இருந்தது. இவ்வளவு நாளில் அவன் ஒருநாள் கூட அவர் வீட்டிற்கு வந்தது இல்லை. அவரிடம் முகம் கொடுத்து பேசியதில்லை. அப்படிப்பட்டவன் இன்று அவர் வீட்டின் முன் வந்து நிற்கிறான் என்றால்...? ஒருவேளை மயூரிக்கு ஏதும்... நினைத்தவுடன் அவருக்குப் பதற்றமாகிவிட்டது.

“என்னப்பா... மயூரிக்கு ஏதும் பிரச்சினையா?” அவசரமாய்க் கேட்டுக் கொண்டு வெளியில் வர,

“இல்லை ஆன்ட்டி... அவள் தூங்கிட்டு இருக்கா...” அவன் கூறவும் தான் அவருக்கு நிம்மதியாய் இருந்தது. இனி விசயத்தை அவனே கூறட்டும் என்று அவர் அமைதி காத்தார்.

“நீங்க அன்னைக்குச் செஞ்சு கொடுத்தீங்களே புளிக்காய்ச்சல்... அது எப்படிச் செய்யணும்ன்னு சொல்லி தர்றீங்களா?” கொஞ்சம் தயக்கம் இருந்தாலும் தன்னவளுக்காக அவன் தயங்காமல் கேட்டான். அவன் கூறியதை கேட்டு அவர் அதிசயமாய் அவனை ஆவென்று பார்த்தார்.

“இல்ல... புளிக்காய்ச்சல் இருந்தா... அவள் கூடக் கொஞ்சம் ஒரு வாய் சாப்பிடுவா... அது தான் கேட்டேன்”

“அதுக்கென்ன தம்பி... நானே செஞ்சு அவளுக்குக் கொடுக்கிறேன்” அவரின் பேச்சை மறுத்தவன்,

“நீங்க ரெசிப்பி மட்டும் சொல்லுங்க நான் செஞ்சிக்கிறேன்” அவன் பிடிவாதமாய்க் கேட்க... வேறுவழியின்றி அவர் அதன் செய்முறையை அவனுக்கு விளக்கமாய்க் கூற ஆரம்பித்தார். அவனும் தேர்வுக்குச் செல்லும் மாணவன் போல் வெகுசிரத்தையுடன் கேட்டு கற்றுக் கொண்டான்.

“தேங்க்ஸ் ஆன்ட்டி...” என்றவன் தன் வீட்டிற்குச் செல்ல... அவரால் அவனின் இந்த மாற்றத்தை... அதிசயத்தை... இன்னமும் நம்ப முடியாமல் அப்படியே நின்றிருந்தார்.

“பேபி...” மென்மையான குரலில் அவன் அவளை எழுப்ப... என்ன தான் அவன் மென்மையாய் எழுப்பினாலும் அவன் குரல் கேட்டதும் அவள் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தமர்ந்தாள்.

“உனக்கு எத்தனை முறை சொல்லியிருக்கேன்... இப்படி அவசரப்பட்டு எழும்பக் கூடாதுன்னு...” அவளைக் கடிந்தவன் மெல்ல அவள் தோள் பற்றிக் கட்டில் இருந்து கீழே இறக்கினான்.

“சாரி ஆரு... இன்னைக்கும் அசந்து தூங்கிட்டேன்...” தவறு செய்த சிறுபிள்ளை போல் அவள் தலை கவிழ்ந்து சொல்ல... அவனின் பார்வையோ மேடிட்டிருந்த அவளின் வயிற்றின் மேல் நிலைத்தது. ஆறு மாதம் முடிந்து இப்போது ஏழாம் மாதம் நடக்கிறது.

“நீ நல்லா தூங்கி ரெஸ்ட் எடுத்தா தான் குழந்தை ஆரோக்கியமா இருக்கும்” என்று அவள் வயிற்றில் அவன் முத்தமிட...

“போங்க ஆரு... டாக்டர் என்ன சொன்னார்... இனிமேல் நல்லா வேலை செய்யணும்.. அப்படின்னா தான் நார்மல் டெலிவரி ஆகும்ன்னு சொன்னாரா இல்லையா?”

“ஆமாம் அதுகென்ன...?” அவளைக் குளியலறைக்குக் கூட்டி சென்றவன் அவளுக்குப் பற்பசை எடுத்து கொடுத்து அவள் பல் துலக்கி முடிக்கும் வரை கூடவே இருந்தான்.

“இப்படிச் சின்னச் சின்ன வேலைகள் கூட நீங்க செஞ்சா எப்படி ஆரு...?” அவள் செல்லமாய்ச் சிணுங்க... அவள் கையில் சத்துமாவு கஞ்சியைத் திணித்தவன்,

“அந்த டாக்டர் கிடக்கிறா... என் பொண்டாட்டிக்கு நான் செய்றேன்...” படுக்கையைச் சுத்தப்படுத்திக் கொண்டே பேசியவன், “மைதிலி ஆன்ட்டி கிட்ட கேட்டு மதியத்துக்குப் புளிக்காய்ச்சல் பண்ணியிருக்கேன்... சாப்பிட்டு பார்த்து எப்படி இருக்குன்னு சொல்லு? எல்லா வேலையும் முடிச்சிட்டேன்... நீ எதுவும் செய்ய வேணாம். சாப்பிட்ட

பாத்திரத்தை அப்படியே போட்டு வை... நான் வந்து கழுவிக்கிறேன்”

சமையலறை பக்கம் எதற்காகவும் எட்டி பார்க்காதவன்... இன்று தனக்காக எல்லாவற்றையும் இழுத்து போட்டுச் செய்வதில் இருந்தே அவனின் காதல் அவளுக்குப் புரிய, அது என்றும் போல் அவள் மனதை கவர,

“ஏன் ஆரு... கிட்சன் பக்கமே எட்டி பார்க்காத நீங்க... இப்போ இந்த வேலையெல்லாம் செய்றீங்கன்னா... அது உங்க குழந்தைக்காகத் தானே” வேண்டுமென்றே அவள் அவனை வம்பிழுக்க...

“குழந்தைக்காக இல்லையடி... அதைச் சுமந்திருக்கும் என் பேபிக்காக...” அவள் கன்னத்தைத் தன் இருகைகளில் தாங்கியவன், “எத்தனை குழந்தை வந்தாலும் என் முதல் குழந்தை நீ தான் பேபி...” காதலோடு சொன்னவன் அதே காதலோடு அவள் நெற்றியில் முத்தமிட... அவளோ கண்களை மூடி கொண்டு தன் இதழை குவித்துக் காண்பித்தாள். அவளின் செயலில் கவரப்பட்டவன் சிரித்துக் கொண்டே அவள் இதழ் நோக்கி குனிந்தான்.

****

“ஆரு... ஆரு...” சத்தமிட்டுக் கொண்டு வந்தவளை திரும்பி பார்த்தவன், அவள் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியில் அவனின் முகமும் மலர்ந்தது.

“குழந்தை எங்கே அசைகிறது?” அவன் ஆவலுடன் அவள் வயிற்றில் கை வைத்தபடி கேட்டான். அவள் எப்போதும் இப்படித்தான்... குழந்தையின் ஒவ்வொரு அசைவையும் அவனிடம் ஒப்புவிக்காவிட்டால் அவளுக்குத் தூக்கம் வராது. அதை எண்ணியவனாய் அவன் கேட்க... அவளோ மறுப்பாய் தலையசைத்தாள்.

“இது அது இல்லை ஆரு?” என்றவள், “அம்மா ஃபோன் பண்ணினாங்க” அவள் சொன்னதும் அவன் முகம்

இருண்டது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு, “என்ன விசயமாம்?”

“ஏழாம் மாதம் வளைக்காப்புச் செய்ய வேணுமாம். அதைப் பத்தி பேசினாங்க... வர்ற வெள்ளிக்கிழமை நாள் நல்லாயிருக்காம்... அன்னைக்குச் செய்யலாமான்னு உங்க கிட்ட கேட்க சொன்னாங்க?” அவளின் பேச்சில், கண்களில் தெரிந்த ஆர்வத்தில் அவன் வாய் மூடி ஊமையானான்.

“பெரியவங்க விருப்பம் பேபி... அவங்களுக்கு என்ன தோணுதோ அதைச் செய்யச் சொல்லு”

“சரிங்க... நான் இப்பவே அம்மா கிட்ட சொல்லிர்றேன்...” அவன் சம்மதித்ததில் அவள் அகமகிழ்ந்து போனாள்.

“ஒரு நிமிசம் பேபி...” அவளைத் தடுத்து நிறுத்தியவன், “டெலிவரிக்கு உங்க வீட்டில் கூப்பிட்டா போய்விடுவியா?” அவளின் பதிலுக்காகத் தடதடக்கும் நெஞ்சோடு அவன் காத்திருந்தான்.

“இல்லை ஆரு... உங்களை விட்டுட்டு நான் போக மாட்டேன். டெலிவரி இங்கேயே வச்சுக்கலாம்ன்னு நான் அப்பா, அம்மா கிட்ட சொல்லிருவேன். உங்களைப் பிரிஞ்சி நான் ஒரு நிமிசம் கூட இருக்க மாட்டேன்” கண்கள் கலங்க அவன் அருகில் வந்தவள் அவன் நெஞ்சில் ஆறுதலாய் சாய்ந்து கொண்டாள். அவளின் சொல்லில், செயலில் அவன் மனம் எல்லையற்ற ஆனந்தம் கொண்டது.

சொன்னபடி வளைக்காப்பை வெள்ளிக்கிழமையன்று நடத்தினர் ராகவன் தம்பதியினர். மகளுக்குத் தங்கத்தில் வளையல்கள் செய்து அதை அவள் கையில் மாட்டி அழகு பார்த்த ராகவன் ஆரனை கர்வமாய்ப் பார்த்தார். அவனுக்கு இதெல்லாம் தெரியாத காரணத்தால் அவளுக்கென்று அவன் ஒன்றும் வாங்கி வைக்கவில்லை. அவரின் கர்வப்பார்வை அவனின் இதயத்தைக் குத்தி கிழித்தது. ஆனாலும் முயன்று தன் உள்ளத்து உணர்வுகளை அடக்கி கொண்டவன், தன்னவளின் பக்கம் தன் பார்வையைச் செலுத்தினான்.

கன்னத்தில் சந்தனம் பூசியிருக்க, நெற்றியில் குங்குமம் துலங்க, கைகளில் கண்ணாடி வளையல்களும், தங்க வளையல்களும் போட்டி போட்டு குலுங்க... தாய்மையின் பூரிப்போடு அமர்ந்திருந்தவளை கண்டதும் அவனின் மனவலி பஞ்சாய் பறந்து போய்விட அவளை இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனின் பார்வை உணர்ந்தோ என்னமோ அவளின் பார்வை அவன் புறம் திரும்பியது. கண்களில் ஏக்கத்தோடும், காதலோடும் பார்த்த அவனின் பார்வையில் அவள் என்ன கண்டாளோ... கண்களை மூடி திறந்து அவனைப் பார்த்து அவள் புன்னகைக்க அவளின் செயலில் அந்தப் புன்னகையில் அவனின் மனம் அவளின் காலடியில் வீழ்ந்தது. அந்த ஒற்றைப் புன்னகை அவனின் மனவலியை மறக்க செய்தது.

அவளருகே வந்தவன் அவள் புறம் குனிந்து, “பேபி எனக்கு என்ன செய்யணும்ன்னு தெரியாது... உனக்குன்னு நான் ஒண்ணுமே வாங்கி வைக்கல...” என்றவன், அவளின் கையைப் பற்றி அவளின் புறங்கையில் தன் முத்தத்தை அழுந்த பதித்தான். அவனின் செயலில் அங்கிருந்தவர்கள் வாய் விட்டு சிரிக்க... அவனோ ராகவனைக் கூர்மையாய் பார்த்தான். ‘இதை என்னைத் தவிர வேறு யார் அவளுக்குக் கொடுக்க முடியும்?’ என்ற கர்வமே அவன் பார்வையிலிருந்தது.

“இன்னும் இரண்டு நாளில் நாங்க மயூவை எங்களுடன் அழைத்துச் செல்ல போகிறோம். ப்ளைட் டிக்கெட் எல்லாம் புக் பண்ணியாச்சு...” வளைக்காப்பு முடிந்ததும் ராகவன் தன் முடிவை அறிவிப்பு போல் வெளியிட... அவரின் பேச்சில் ஆரனும், மயூரியும் அதிர்ந்து தான் போயினர். அவனின் கண்கள் மயூரியை பார்த்து யாசிக்க... அவளோ கண்களால் அவனை அமைதியாய் இருக்கும்படி சொல்லிவிட்டு...

“அப்பா... இங்கேயே டெலிவரி பார்த்து கொள்ளலாமே?” தயங்கி கொண்டே தான் சொன்னாள்.

“கல்யாணம் தான் எங்க பேச்சை கேட்காமல் உங்க இஷ்டத்துக்குப் பண்ணிக்கிட்டீங்க... மத்த விசயங்களுக்காவது பெரியவங்க பேச்சுக்குக் கொஞ்சம் மதிப்பு கொடுங்க. மயூ எப்ப இருந்து என்னை எதிர்த்து பேச பழகின?” தன் கருத்தை வலியுறுத்தியது மட்டுமில்லாமல் மகளின் வாய்க்கும் பெரிய திண்டுக்கல் பூட்டை போட்டு பூட்டினார்.

“என்னங்க இது...? மாசமா இருக்கும் பெண் கிட்ட இப்படியா பேசுவீங்க?” கணவரை கடிந்த சுமதி, ஆரனிடம்... “மாப்பிள்ள... பிரசவம்ங்கிறது பெண்ணுக்கு மறுஜென்மம் மாதிரி. இந்த மாதிரி நேரத்தில் பெரியவங்க துணை கட்டாயம் தேவைப்படும். நான் இங்கே வந்து இருக்கலாம்ன்னா அங்கே மஞ்சுவை தனியே விட்டுட்டு வர என்னால் இயலாது. அதே மாதிரி மயூவையும் இந்த நிலையில் இங்கே விட்டுட்டு போகவும் முடியாது. டெலிவரி வேணும்ன்னா டாக்டர் ஈசியா பார்த்துக்கலாம். ஆனால் அதுக்கப்புறம் சின்னக் குழந்தையைப் பார்த்துக்கிறது என்பது அவ்வளவு எளிதான காரியமில்லை. மயூவுக்கும் பக்குவம் பார்க்கணும், குழந்தைக்கும் பக்குவம் பார்க்கணும். அதுக்கு உங்க ரெண்டு பேருக்கும் வயசும் பத்தாது... அனுபவமும் பத்தாது. நீங்க மயூவை என்னை நம்பி அனுப்புங்க... நான் அவளைப் பத்திரமா பார்த்துக்குவேன்” மாமியாரின் பேச்சை எதைக் கவனித்தானோ இல்லையோ ‘பிரசவம்ங்கிறது பெண்ணுக்கு மறுஜென்மம் மாதிரி’ அது மட்டும் அவன் காதில் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தது.

அதன் பின் அவன் ஒரு நொடி கூடத் தாமதிக்கவில்லை. அவளை அவளின் பெற்றோருடன் அனுப்ப ஒத்துக் கொண்டான். அவளின் சில நாள் பிரிவையே தாங்கி கொள்ள முடியாதவன் அவன்... அப்படிப்பட்டவன் அவளுக்கு ஏதேனும் ஒன்று என்றால் சும்மா இருப்பானா? மயூரி கூட அவனை விட்டு போக மாட்டேன் என்று அழுது புலம்ப,

“எனக்கு மட்டும் உன்னைப் பிரிந்திருக்க முடியும்ன்னு நீ நினைக்கிறியா பேபி?” பரிதவிப்புடன் கேட்டவன் தன் இறுகிய அணைப்பின் மூலம் அது இயலாத காரியம் என்பதை அவளுக்கு உணர்த்தினான்.

“அப்படியிருந்தும் நான் ஏன் இப்படிச் சொல்றேன்னு கொஞ்சம் யோசிச்சு பாரு. எனக்கோ, உனக்கோ இதில் எந்த ஒரு முன் அனுபவமும் கிடையாது. அப்படி இருக்கும் போது நாம் இந்த விசயத்தில் வீம்பு பிடித்து உனக்கு ஏதேனும் ஒன்று என்றால்...” அவன் வார்த்தையை முடிக்காமல் அதன் தாக்கத்தைத் தன் அணைப்பில் கூறினான்.

“அதற்கு இந்த இடைக்காலப் பிரிவு ஒன்றுமே இல்லாதது இல்லையா?” அவன் அவள் முகம் பார்க்க... அவள் முகம் தெளிவில்லாமல் இருப்பதைக் கண்டவன், “இப்போ இப்படித்தான் இருப்ப... குழந்தை பிறந்ததும் பார்... என் முகம் கூட உனக்கு நியாபகம் வராது...” அவன் விளையாட்டு போல் கூறி அவள் மனதை மாற்ற முயல...

“அப்படியெல்லாம் இல்லை... எனக்கு எப்பவுமே நீங்க தான் முக்கியம்” அவன் பேச்சில் அவள் சிணுங்க...

“அப்போ உன் பெற்றோருடன் ஊருக்குக் கிளம்புகிறாய் தானே?” தன் பேச்சில் அவன் விடாப்பிடியாய் நிற்க...

“ம்... ஆனால் நீங்கள் லீவு கிடைக்கும் போதெல்லாம் என்னைப் பார்க்க வர வேணும். அப்புறம் தினமும் ஒரு பத்து தடவை... இல்லையில்லை ஐம்பது தடவையாவது ஃபோன் பண்ணனும். இதை நீங்க செய்வீங்களா? ப்ராமிஸ்...” வலக்கையை அவன் முன் நீட்டியவள் கண்களில் எதிர்பார்ப்புடன் கேட்க...

“லூசு... லூசு...” அவள் மூக்கை பிடித்துச் செல்லமாய் ஆட்டியவன், “இதுக்குப் போய் யாராவது சத்தியம் செய்வார்களா? நேரம் கிடைக்கும் போது என்ன... உன்னைப் பார்ப்பதற்காகவே நேரத்தை ஒதுக்கி வைத்துக் கொண்டு வந்துவிட மாட்டேன்... அப்புறம் ஐம்பது தடவை

ஃபோன் பண்ணனுமா? ஐம்பது தடவை இல்லையடி பெண்ணே... ஒரு லட்சம் தடவை நான் ஃபோன் பண்றேன் போதுமா?" அவன் காதலாய் கசிந்துருக... அவனின் பதிலில் நிம்மதியுற்றவளாய் அவள் தலையசைக்க... அதில் அவன் மனமும் நிம்மதியுற்றது.

****

"எல்லாவற்றையும் எடுத்து வச்சிட்டியா பேபி... எதையும் மறந்துடலையே... அப்புறம் நேரத்துக்கு நேரம் ஜூஸ் குடிக்கணும்... நல்லா சாப்பிடணும்... வேற..." அவன் யோசிக்கும் போதே...

"நான் கட்டாயம் போகணுமா ஆரு?" அவளின் கேள்வியில் அவனுக்கு என்ன பதில் சொல்வது? என்று தெரியவில்லை. அவளைத் தன் தோளில் சாய்த்து ஆறுதலாய் அவளின் தலையை வருடினான். பேச்சற்ற அந்த மௌனம் கூட அவர்களுக்கு ஆயிரம் வார்த்தையைப் பேசுவது போலிருந்தது.

"மயூம்மா... ப்ளைட்டுக்கு நேரமாச்சு..." சுமதியின் குரலில் இருவரும் தங்களது மோனநிலையைக் கலைத்தனர்.

"வா பேபி..." அவள் தோள் பற்றி அவன் அழைத்துச் செல்ல முற்பட... அவள் அவனைக் கையமர்த்தித் தடுத்தவள், அவனைத் தன் புறம் திருப்பி அவன் முகத்தைத் தன் முகம் நோக்கி இழுத்து அதில் கணக்கில்லா முத்தத்தை அழுத்தமாய்ப் பதிக்க ஆரம்பித்தாள். அவனைப் பிரிந்திருக்கும் துயர் அவளை அளவுக்கு அதிகமாய்த் தாக்கியதோ என்னமோ அவளின் கண்கள் கண்ணீரை சுரக்க... அவளின் முத்தத்தின் ஈரத்தாலும், கண்ணீரின் ஈரத்தாலும் அவன் முகம் முழுவதும் நனைந்தது. அவளின் இந்த எதிர்பாராத செயலில் அவன் திக்குமுக்காடி போனான்.

"பேபி அழாதேடா... உன் நல்லதுக்குத் தானே சொல்றேன்... நீ இப்படி அழுதா எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு பேபி" அவனின் குரலில் தெரிந்த கவலையில் அவள் தன்

அழுகையை நிறுத்தினாள். கண்களை அழுந்த துடைத்து கொண்டவள்,

“இல்ல நான் அழல... வாங்க போகலாம்” என்று கூற...

“ஒரு நிமிசம்...” என்றவன் அவளை இறுக அணைத்து அவள் முன்னுச்சியில் முத்தம் பதித்து விலகினான். வெளியில் வந்த இருவரின் முகமும் கலங்கியிருப்பதைப் பார்த்த சுமதி, “கொஞ்ச நாள் தான் அதுக்கப்புறம் நானே உங்க மனைவியைக் கண்டு வந்து விட்டுர்றேன்” மருமகனை ஆறுதல் படுத்த... ராகவனோ மனதில் எழுந்த நிம்மதியுடன் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

விமான நிலையத்தில் சுமதியையும், மயூரியையும் முதலில் செல்ல பணித்த ராகவன் ஆரனுடன் பின் தங்கினார். அவரின் செயலில் தன்னிடம் அவர் ஏதோ தனித்துப் பேச விரும்புகிறார் என்பதை உணர்ந்து கொண்ட அவனும் அவருடன் அங்கேயே தேங்கினான்.

“ஹலோ மிஸ்டர். ஆரன்... இது தான் என் திட்டத்தோட முதல் படி... உன் குழந்தையைப் பெத்ததும் உன் கையில் கொடுத்துவிட்டு... என் மகளுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வைக்கத் தான் போகிறேன்” அலட்சியமாய் அதேசமயம் ஆங்காரமாய் அவர் கூற...

“கருவிலேயே குழந்தையை அழிக்க நினைத்தவர் தானே நீங்க... அதையே உங்களால் செய்ய முடியவில்லை. இதோ இப்போ அது ஏழு மாத குழந்தையாய் உங்கள் மகள் வயிற்றில் உள்ளது. இனியும் நீங்கள் நினைப்பது ஒரு போதும் நடக்காது. நீங்களே நினைத்தாலும் உங்கள் மகள் என்னைப் பிரிய சம்மதிக்க மாட்டாள். நீங்க எங்களைப் பிரிக்கவும் முடியாது” தன்னவளின் மேல் கொண்ட நம்பிக்கையில் ஆரனின் வார்த்தைகள் வேகமாய் வெளிவந்தது.

“நான் தான் சொன்னேனே... என் மகளுக்குப் புரியும் விதத்தில் எடுத்துக் கூறினால்... புரிந்து கொள்வாள் என்று. இனி தான் உன்னைப் பார்க்காமல் கிட்டத்தட்ட ஆறு மாதம்

எங்களுடன் இருக்கப் போகிறாளே... கண்ணில் படாத உன்னை அவளின் கருத்தில் இருந்து அகல செய்வது எனக்கு ஒன்றும் பெரிய விசயமில்லை. அதைச் செய்யாமல் நான் ஓயப் போவதுமில்லை”

“அதெப்படி உங்களால் முடியும் மாமா?” ‘மாமா’வில் அழுத்தம் கொடுத்தவன், “நான் தான் அவளை அடிக்கடி பார்க்க வருவேனே... ஃபோன் செய்து பேசுவேனே... அப்புறம் எப்படி நீங்கள் என்னை மறக்க செய்ய முடியும்?” நக்கலாய் பதிலளித்தவன் கேலியாய் அவரை நோக்கினான். அவனின் கேலி அவரின் தன்மானத்தை உசுப்பேத்தி விடுவதாய் இருக்க...

“நீ ஒரு நல்ல ஆண்மகனாய் இருந்தால்... உனக்குச் சூடு சொரணை இருந்தால்... என் வீட்டில் நீ காலடி எடுத்து வைக்கக் கூடாது. என் பெண் வேண்டுமானால் உன் மனைவியாக இருக்கலாம். ஆனால் அது என் வீடு... உன் வீடல்ல. கண்டவனும் வந்து போவதற்கு அது ஒன்றும் சத்திரம் அல்ல...” அவரின் இந்தப் பதிலில் அவன் முகம் கறுத்து இறுகியது. அதைக் கண்டு அவர் மனம் திருப்தியுற்றது.

“அப்புறம் ஒரு விசயம்... என் மகளுக்கு நீ ஃபோன் செய்து பேச கூடாது. அவள் பேசினாலும் நீ பேச கூடாது. உனக்கு உன் காதல் மேல் நம்பிக்கையிருந்தால் நான் சொல்வதைப் போல் நடந்து காட்டு. இந்த இடைப்பட்ட காலக் கட்டத்தில் அவளின் மனம் மாறாது இருந்து அவள் உன்னிடம் வந்தால் அவளுடன் குடித்தனம் நடத்து. அப்படி ஒண்ணு நடந்தா உங்க தெய்வீக காதலை நானே ஏத்துக் கொண்டு அவளை உன்னிடம் அனுப்பி வைக்கிறேன். ஒருவேளை அவள் உன்னை மறந்து வேறு வாழ்க்கைக்குத் தயாரானால்... அவளின் வாழ்வின் குறுக்கே வீணே நீ வராதே... இது நமக்குள் இருக்கும் விசயம். இதை அவளிடம் சொன்னே... நான் மனுசனா இருக்க மாட்டேன். என்ன சவாலுக்குத் தயாரா?” அவனின் தன்மானத்தைச் சீண்டி விட்டு அவர் சவால் விட...

‘போடா நீயும் உன் சவாலும்?’ என்று அவரின் பேச்சை தூக்கி தூர எறிந்து விட்டு மயூரியை தன்னுடன் அழைத்துச் சென்று விடலாமா? என்று கூட அவனுக்கு ஒரு கணம் தோன்றியது. ஆனால் தன்னவளின் உயிருக்காக... அவளின் உடல்நலத்தைக் கருத்தில் கொண்டு, அவன் தன்னையே... தன் காதலையே பணயம் வைக்க முன் வந்தான்.

“நீங்க சொல்றதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவள் மேல்... அவள் என் மேல் வைத்திருக்கும் காதல் மேல்... எனக்கு முழு நம்பிக்கை இருக்கு. இன்னைக்கு இல்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள் அது அவளை என்னிடம் கொண்டு வந்து சேர்க்கும். அதற்கு இடையில் நாங்கள் சந்திக்காமல் இருப்பதோ, ஃபோன் பேசாமல் இருப்பதோ எங்களுக்கு ஒன்றும் பெரிய விசயமில்லை. அப்படி அவள் என்னைத் தேடி வரும் போது குறுக்கே நந்தி போல் நிற்காமல் நீங்கள் விலகியிருந்தால் அதுவே எனக்குப் புண்ணியமாய்ப் போகும்” கிண்டலாய் பதிலளித்தவன் அவரின் முகம் அவமானத்தில் கறுப்பதை நன்றாக ரசித்துவிட்டு விமான நிலையத்திற்குள் நுழைந்தான்.

பார்மாலிட்டீஸ் முடிந்து உள்ளே செல்ல இருந்த மயூரி அவனைத் திரும்பி பார்த்து கையால் ஃபோன் பேச வேண்டும் என்பது போல் சைகை செய்ய... அதைக் கண்டு அவன் மனம் உள்ளுக்குள் மருகியது. ‘பண்ணுகிறேன்...’ என்பது போல் அவன் ஆமோதிப்பாய் தலையசைக்க... அதில் அவள் முகம் மலர்ந்து உள்ளே செல்ல... அவளின் பிம்பம் கண்ணில் இருந்து மறையும் வரை இமைக்காது பார்த்திருந்தவன் தன் மனதில் அவளின் உருவத்தை ஆழப்பதித்துக் கொண்டான்.

மயூரியிடம் இருந்து அலைப்பேசியில் விடாது வந்த அழைப்புகளை விழியகலாது பார்த்துக் கொண்டிருந்தான் ஆரன். அலைப்பேசியில் தெரிந்த நேரத்தை கவனித்தவன் இப்போது தான் விமானம் சென்னையைச் சென்றடைந்திருக்கும் என்பதை அவனால் கணிக்க முடிந்தது. அவளால் தன்னை விட்டு ஒரு நொடி கூடப் பிரிந்திருக்க முடியாது என்பதை உணர்ந்தவன் முகத்தில் புன்னகை உதித்தது. அந்த நினைவு ஒரு கணம் மட்டுமே அவன் மனதை ஆக்கிரமித்திருக்க... அடுத்தக் கணம் அவன் மனதை பெரும் சோகம் வியாபித்திருந்தது.

இன்று ஒரு நாளிற்கே இப்படியென்றால் இன்னும் ஐந்தாறு மாதத்திற்கு அவளைப் பிரிந்து எப்படி இருக்கப் போகிறோம்? என்ற கழிவிரக்கம் மனதை தாக்க... அப்படியே கண்களை இறுக மூடி தன் மனச்சுமையைக் குறைக்க முயன்றான். எங்கே அவள் நினைவுகளை மறக்க முடிந்தால் தானே... அவனின் கவலையை அவனால் குறைக்க முடியும். அவனின் உயிரோடு... உணர்வோடு கலந்துவிட்டவளின் நினைவுகளை அவனால் மறக்க தான் இயலுமா? அவன் மனதிலிருந்த சோகம் அவனின் பழைய ஆறாத வடுவாய் இருக்கும் மனக்காயங்களை இன்னமும் குத்தி கிளறி விடுவது போலிருந்தது.

‘அப்பா... ஏன்ப்பா என்னை இந்த உலகிற்குக் கொண்டு வந்தீங்க? இப்படி நான் யாருமில்லாத அநாதையாய் சீரழிவதற்காகவா என்னைப் பெத்தீங்க? ஏன்ப்பா எனக்கு மட்டும் அன்பு என்ற வார்த்தையே ஆகாமல் போய்விட்டது. என் மேல் அன்பு வைத்தவர்கள் எல்லோரும் என்னை விட்டு ஏன் பிரிந்து போறாங்க? முதலில் அம்மா... தாயை நேசிக்காத பிள்ளையும் உண்டா? அதே போல் தானே நானும் என் அம்மாவை என் உயிர் போல் நேசித்தேன்... ஆனால் பெத்த பிள்ளையை நேசிக்காத தாயும் உலகில் இருப்பாள் என்று எனக்கு அந்நேரம் தெரியாதே? நான் அதிக அன்பு வைத்த முதல் ஜீவன் அம்மா... அதே போல்

இந்த உலகில் நான் அதிகம் வெறுத்த ஒரே ஜீவன் அம்மா தான். அதற்கு அடுத்து நான் உயிராய் நினைத்த நீங்களாவது எனக்குத் துணை இருப்பீர்கள் என்று நினைத்தேன்... ஆனால் அந்தக் கயவர்கள் செய்த சதியால் நீங்களும் என்னை விட்டு பிரிந்தீர்கள்... இப்போது என் பேபி... என்னால் முடியவில்லை அப்பா... மனதுக்கு ரொம்பவும் வலிக்கிறது அப்பா...'

என்றோ உயிர் நீத்த தந்தையிடம் மானசீகமாய்ப் புலம்பியவன் புலம்பல் சேலம் நகரின் மையத்திலிருந்த அந்த அலவலகத்தில் தன் கையிலிருந்த கோப்பில் மூழ்கியிருந்த வனஜாவின் மனதில் ஏதோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. திடீரென்று நெஞ்சில் சுருக்கென்று தைப்பது போன்ற வலி ஏற்பட நெஞ்சை பிடித்துக் கொண்டு கண்களை மூடியபடி இருக்கையில் சாய்ந்தார். அவரின் நிலையைக் கண்ட அவரின் உதவியாளர் ரமா,

"மேடம்... என்ன பண்ணுது?" என்றபடி அருகிலிருந்த தண்ணீர் தம்பளரை எடுத்து அவர் புறம் நீட்ட... அதை வாங்கிக் குடித்தவர்,

"நத்திங் ரமா..." என்றபடி கையிலிருந்த கோப்பில் பார்வையைப் பதித்தார்.

"மேடம்... எதுக்கும் டாக்டர் கிட்ட போயிட்டு வந்துருவோமா...?" அவள் பயத்துடன் கூற...

"என் ஹெல்த்தை பத்தி எனக்குத் தெரியாதா? வீணே கவலைப்படாதே ரமா..." அத்துடன் பேச்சை முடித்துக் கொண்டவர் அவளுக்கு வேறு வேலை கொடுத்து வெளியில் அனுப்பினார்.

அவள் சென்றதும் சுழல் நாற்காலியில் சாய்ந்தமர்ந்தவர் கண்ணில் அவருக்கு நேரெதிரே மாட்டியிருந்த கணவனின் புகைப்படம் தென்பட்டது. புகைப்படத்திலும் மாறாத புன்னகையுடன் கம்பீரமாய்க் காட்சியளித்த கண்ணனின் தோற்றம் என்றும் போல் இன்றும் அவர் மனதில் அந்தக் கேள்வியை எழுப்பியது.

‘பணம், படிப்பு, அந்தஸ்து, அழகு இதையெல்லாம் விடக் குணம் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கிய கண்ணனை கணவனாக அடைந்த நான்... எதைக் கண்டு அந்த ராமனிடம் மயங்கினேன். மகுடிக்குக் கட்டுப்படும் பாம்பு போல் அவன் சொன்ன சொல்லை தட்ட முடியாமல் எல்லாப் பாவத்தையும் நான் ஏன் செய்தேன்? நான் பண்ணிய பாவத்திற்குச் சாட்சிகள் என்று யாருமில்லை... அதனால் என்னைக் குற்றவாளியாய்ப் பார்ப்பவர்கள் யாருமில்லை... ஆனாலும் என் மனசாட்சி...’ என்று அவர் என்னும் போதே...

‘ஏன் இல்லை? நீ பெற்ற அருமை மகன் இருக்கிறானே... அவனை மறந்துவிட்டாயா? இல்லை அவன் சிறைக்குச் சென்றதோடு அவனைத் தலை முழுகி விட்டாயா?’ அவரின் மனசாட்சி கேள்வி கேட்க...

‘இல்லை இல்லை... நான் அவனை மறக்கவில்லை... தலை முழுகவில்லை. அவனை நினைத்து நினைத்து நான் மறுகாத நாளில்லை. இப்போது எழுந்த நெஞ்சின் வலி கூட அவனை நினைத்து தான். என்று அவனைப் பிரிந்தேனோ அன்றிலிருந்து இந்த வலி என்னுள் எழுந்து கொண்டே இருக்கிறது. ராஜா மாதிரி இந்தச் சொத்துக்களை ஆள வேண்டியவன்... எங்கோ அநாதையாய் யாரிடமோ வேலை செய்கிறானே என்ற எண்ணமே என்னைக் கொல்லாமல் கொல்கிறது. நான் இந்தச் சொத்துக்களைக் கட்டி காப்பது எதற்கு என்றால்... என்றாவது ஒரு நாள் அவன் வருவான்... இதை அவன் வசம் ஒப்புடைக்க வேண்டும் என்பதால் தான். அதன் பின் அவனிடம் பாவமன்னிப்பு கேட்டு விட்டு உயிரை விட வேண்டும். போதும் இந்த ஜென்மத்தில் நான் செய்த பாவம் போதும்... அடுத்த ஜென்மத்திலாவது நல்ல மனைவியாய்... நல்ல அன்னையாய் நடந்து கொள்ள வேண்டும். கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம்... ம்ஹூம்...’ பெருமூச்சு விட்டவர் மனம் முழுவதும் மகனின் எண்ணங்களே!

தன் மேஜையின் இழுப்பறையில் இருந்து ஒரு புகைப்படத்தைக் கையில் எடுத்தார். அதில் கம்பீரமாகச் சிரித்துக் கொண்டிருந்தான் ஆரன். ‘ஆரா...’ மெதுவே

அவனின் பெயரை உச்சரித்தபடி அவரின் கைகள் அவனின் பிம்பத்தைத் தடவி கொடுத்தது.

‘ஆரா... என்னை மன்னித்து விடுடா... இளமையின் வேகத்தில் நான் செய்த தவறு உன்னை இந்தளவுக்குப் பாதிக்கும் என்று நான் நினைக்கவில்லை. என்னைப் பற்றி மட்டுமே யோசித்த நான் உன்னைப் பற்றி யோசிக்காமல் போய்விட்டேன். என் தவறு யாருக்கும் தெரியாது என்று இறுமார்ந்து இருந்த வேளையில் உனக்கு அது தெரிந்து விட்டதை எண்ணி நான் எப்படித் துடித்துப் போனேன் தெரியுமா? அன்று மாறியவள் இன்று வரை உன் அன்னையாக... உனக்காகத் தான் நான் ஏங்குகிறேன். இப்போது எங்கே இருக்கிறாய்? உனக்கு மணமானது குறித்து எனக்குச் சந்தோசம் தான். ஆனால் ஏன் இந்தத் தலைமறைவு வாழ்க்கை ஆரா?’

அவரது மனதில் பல கேள்விகள்... ஆனால் விடை தான் அவருக்குத் தெரியவில்லை. ஆரன் சிறைவாசம் செய்த போது கூட அவரின் உதவியையோ... அவர் தன்னை நாடி வருவதையோ அவன் கொஞ்சமும் விரும்பவில்லை. அதனால் தான் எளிதில் கொலை வழக்கில் இருந்து தப்பிக்க வழியிருந்த போதும் அவன் அதை விரும்பாமல் தண்டனையை அனுபவித்து விட்டு வெளியில் வந்தான். அந்தளவுக்கு அன்னையை வெறுத்தான்... அன்னை என்ற சொல்லை வெறுத்தான்.

அவன் விடுதலையான பின் அவர் சந்திக்க விரும்பிய போது கூட மறுத்துவிட்டான். அதனாலேயே அவனைக் கண்காணிக்க என்று சென்னையில் ஒரு ஆளை நியமித்திருந்தார் அவர். அந்த ஆளின் மூலமாகத் தான் அவன் நல்லசிவத்தின் உதவியுடன் மேலும் படித்து நல்ல வேலைக்குச் செல்லுகிறான் என்பதை அறிந்த போது அவருக்குப் பெருத்த நிம்மதியாய் இருந்தது. எங்கே சிறை வாழ்வு அவனின் வாழ்க்கையைத் தகாத வழியில் இட்டு சென்று விடுமோ என்று அவருக்குப் பயமாகக் கூட இருந்தது. ஆனால் அது போல் எல்லாம் நடக்கவில்லை.

ஆனாலும் அவனின் இன்றைய நிலமைக்குத் தானும் ஒரு காரணம் என்ற எண்ணமே அவரை உருக்குழைத்து விட்டது.

இடையில் காதல் என்று ஒரு பெண்ணின் பின்னால் சுற்றிய மகன் திடீரென்று அவளைக் கல்யாணம் பண்ணி கொண்டு மாயமாகி போனதை கேட்டு அவர் அதிர்ச்சி அடைய தான் செய்தார். என்றாவது ஒருநாள் அவன் வசம் இந்தச் சொத்துக்களை ஒப்புடைக்க வேண்டும் என்று அவர் எண்ணியிருக்க... அவனோ அதைப் பற்றிய எண்ணம் சிறிதும் இல்லாமல் எங்கோ இருக்கிறானே என்ற வேதனை எழுந்தது அவருக்கு. அவன் எங்கிருந்தாலும் சரி... அவனிடம் இதை ஒப்புடைக்காமல் தான் நிம்மதியாய் கண் மூடுவதில்லை என்று மனதில் உறுதி எடுத்தார். மகனுக்காய் உருகி கொண்டிருக்கும் அவருக்குத் தன் பேரக் குழந்தையின் வரவு தெரிந்தால்...?

அதற்கு மேல் வேலை செய்யத் தோன்றாமல் எழுந்தவர் வீடு நோக்கி பயணமானார். ஆளில்லாத அந்த வீடு அவருக்கு வெறுமையை அளிக்க... தன் அறைக்குள் சென்று முடங்கினார். தன் கையில் கிட்டிய சொர்க்கத்தைத் தான் எவ்வாறு எட்டி உதைத்தது என்ற காட்சிகள் அவர் கண்முன் வலம் வந்தது. தாயும் மகனும் ஒரே சமயத்தில் தங்களது கடந்த காலத்தில் மூழ்கினர்.

பாலையூர் அது தான் வனஜாவின் சொந்த ஊர். கிராமமும் இல்லாமல் நகரமும் இல்லாமல் இருந்தது அந்த ஊர். வனஜாவிற்குத் தந்தை கிடையாது. தாய் காமாட்சி மட்டுமே. அவரும் அன்றாடம் வேலைக்குச் சென்று தான் மகளுக்குப் படிப்பையும், உணவையும் வழங்கினார். அவர்கள் குடியிருந்த குச்சி வீட்டை தவிர அவர்களுக்கு என்று பெரிதாகச் சொத்து இல்லை. அந்த ஏழ்மை நிலையிலும் மகளைக் கல்லூரிக்குப் பிஏ படிக்க அனுப்பி வைத்தார் காமாட்சி.

வனஜாவும் தாயின் கஷ்டம் உணர்ந்து நன்கு படித்தாள். பிஏ முடித்து விட்டு ஆசிரியர் பயிற்சிக்கு படிக்க வேண்டும் என்பது அவளது பெரிய கனவாக இருந்தது. தான்

ஆசிரியராகித் தாயை உள்ளங்கையில் வைத்து தாங்க வேண்டும் என்று அவளுக்கு நீண்ட நாள் விருப்பம்... இவ்வளவு ஏன் கனவு என்று கூடச் சொல்லலாம்.

இப்படி ஏகப்பட்ட கனவுகளுடன் இருந்த வனஜா முதல் வருட படிப்பு முடிக்கும் போது, அவளது அன்னை கண்ணனின் புகைப்படத்தைக் காண்பித்து 'இவர் தான் உனக்குக் கணவனாக வர போகிறவர்' என்று சொல்ல அவள் அதிர்ந்து போனாள்.

"அம்மா... எனக்குப் பதினெட்டு வயசு தான் முடிஞ்சிருக்கு... இப்போ கல்யாணத்துக்கு என்னம்மா அவசரம்? நான் படிக்கணுமே?" அவள் மெதுவே இழுக்க...

"உன் வயசுல நான் உன்னைய பெத்துட்டேன்... பதினெட்டு வயசு கல்யாணத்துக்குச் சரியான வயசு தான். மாப்பிள்ள வீட்டுல பெரிய பணக்காரங்க... அவங்க வசதிக்கு பெரிய வீட்டில் பொண்ணு எடுத்து இருக்கணும். உன் அதிர்ஷ்டம் அவங்க அம்மா கண்ணுல நீ பட்டு... உன் அழகை பார்த்து என் மகனுக்குக் கட்டுன்னா இந்தப் பொண்ணைத் தான் கட்டுவேன்னு... நம்ம மேலத்தெரு அண்ணன் மூலமா சொல்லி அனுப்பி இருக்காங்க. நாம கனவுலேயும் இந்த மாதிரி ஒரு நல்ல சம்பந்தத்தை நினைச்சு கூடப் பார்க்க முடியாது. அதிலும் மாப்பிள்ளை பாரின் போய்ப் பெரிய படிப்பு எல்லாம் படிச்சவராம். ஆனாலும் அவர் அம்மா பேச்சை மீற மாட்டாராம். குணத்துல சொக்க தங்கமாம்..." காமாட்சி கண்ணனை புகழ்ந்து பேச... வனஜா தன் கையிலிருந்த கண்ணனின் புகைப்படத்தை நன்றாக உற்று பார்த்தாள்.

மாநிறம் என்றாலும் ஆள் பார்ப்பதற்குக் கம்பீரமாய் அழகாய் இருந்தவனின் பிம்பம் மெதுவே அவளின் உள்ளத்தை ஊடுருவி சென்றது. முகம் சிவக்க மறுபடியும் மறுபடியும் அவள் அவனின் பிம்பத்தைப் பார்க்க... காமாட்சி மகளின் முகத்திலிருந்த செம்மையிலிருந்து மகளின் மனதை படித்தவராய் சந்தோசமாய் அங்கிருந்து நகர்ந்தார்.

“கண்ணா இங்கே வாப்பா...” அன்னை சாந்தி அழைப்பதை கேட்டு அவர் அருகில் வந்தமர்ந்த கண்ணன்,

“என்னம்மா...”

“இந்த ஃபோட்டோவை பாரு...” தன் கையிலிருந்த கவரை மகன் கையில் திணிக்க...

“என்னம்மா... இதோடு எத்தனை பெண்களைத் தான் காட்டுவீங்க...” என்று சலித்தபடி புகைப்படத்தைக் கையில் எடுத்தவன் கண்கள் அதில் அப்படியே நிலைகுத்தி நின்றது.

“என்னடா இந்தப் பெண்ணையும் பிடிக்கவில்லையா?” தாயின் குரலில் அதிர்ந்து திரும்பியவன், அவரின் கண்ணில் தெரிந்த சிரிப்பில் நிம்மதியடைந்தவனாய்,

“ரொம்பப் பிடித்திருக்கிறது அம்மா...” தன் மனதை மறையாமல் அவன் வெளியிட...

“எனக்கு உன் மனது தெரியும்... அதனால் தான் இந்தப் பெண்ணைப் பார்த்ததும் இவள் உனக்குத் தான் என்று நான் முடிவு பண்ணிவிட்டேன்” மகனின் மனதை அறிந்த தாயாய் அவர் கூறினார்.

கண்ணனின் சம்மதம் கிடைத்ததும் அதன் பின் ஒரு நொடியை கூடச் சாந்தி வீணடிக்கவில்லை. இரு வீட்டிலும் எடுத்துச் செய்வதற்கு ஆண்மகன் இல்லை. சாந்திக்காவது கண்ணன் பிள்ளையாக இருக்கிறான். ஆனால் காமாட்சி ஒற்றைப் பெண்ணை வைத்துக் கொண்டு தனந்தனியாய் என்ன செய்வாள்? அதை நினைத்து சாந்தியே எல்லா வேலைகளையும் தானே பார்த்துக் கொண்டார். சரியாக ஒரு மாதத்தில் செல்வி. வனஜா... திருமதி. வனஜாவாக மாறினாள்.

கண்ணன் வனஜாவை தன் உள்ளங்கையில் வைத்துத் தாங்கினான். வனஜாவும் அவன் மேல் தன் ஒட்டு மொத்த காதலையும் பொழிந்தாள். அவர்களின் காதலுக்குச் சாட்சியாகத் திருமணமான பத்தாம் மாதத்தில் ஆண் மகவை பெற்றெடுத்தாள். இருவரும் ஆசை ஆசையாய்

அவனுக்கு ஆரன் என்று பெயரிட்டனர். இதற்கிடையில் காமாட்சி இறைவனடி சேர்ந்து விட... சாந்தி தான் தன் பேரனை வளர்த்தார்.

என்ன தான் சொத்து பத்துடன் சுகமாய் வாழ்ந்த போதும் வனஜாவுக்குத் தான் படிக்கக் முடியவில்லையே என்ற ஏக்கம் அவள் மனதினுள் பெரியதாய் அவளை வாட்டியது. அதை அறிந்த கண்ணன்,

“நீ மேற்படிப்புப் படிப்பது என்பது முடியாத காரியம். வேணுமென்றால் உனக்காக ஒரு கல்லூரியையே விலைக்கு வாங்கித் தருகிறேன்... அதை முதலாளியாய் நீ நிர்வாகம் பண்ணு...” என்று அதற்குத் தீர்வு கூற... கல்லூரிக்கு போக ஆசைப்பட்ட தனக்குக் கல்லூரியையே விலைக்கு வாங்கித் தரும் கணவனின் காதல் மனதை எண்ணி பெருமையில் பூரித்தாள் அவள்.

அதன் பின் கண்ணன் தன் தொழிலை நிர்வாகம் பண்ணுவதில்... அதை விரிவடையச் செய்வதில் நேரத்தை செலவளிக்க... வனஜாவோ தனக்கு வாங்கிக் கொடுத்த கல்லூரியின் நிர்வாகத்தைக் கவனிப்பதிலும்... மாதர் சங்கத்துக் கூட்டங்களில் கலந்து கொண்டும் தன் நேரத்தை போக்கினாள். எல்லாம் சிறிது காலமே நல்லபடியாகச் செல்ல ஆரம்பித்தது. அதன் பின் ஏதோ ஒரு வெறுமை வனஜாவின் மனதை வாட்ட ஆரம்பித்தது. ஆனால் அது எதனால் என்பதை அவளால் சரிவர உணரவில்லை.

ஒருநாள் இரவு கண்ணன் வெளியில் அலைந்து விட்டு ஓய்ந்து போய் வீட்டிற்கு வந்தவன் உணவு உண்டு விட்டு படுத்து தூங்கிவிட்டான். எல்லா வேலைகளும் முடித்து விட்டு வந்த வனஜா ஆசையாய் கணவன் அருகில் நெருங்கி வந்து அவனை அணைத்துக் கொண்டு படுக்க... அவனோ,

“ப்ளீஸ் வனி... எனக்கு டையர்டாய் இருக்கு...” என்றபடி அவளின் கரத்தை விலக்கி விட்டு படுக்க... அவனின் ஒதுக்கத்தில் அவளோ சுடுநீரை முகத்தில் வீசியது போல் துடித்துப் போய்விட்டாள்.

மெதுவே எழுந்தமர்ந்தவள் ஆழ்ந்து உறங்கும் கணவனை வெறித்துப் பார்த்தாள். இத்தனை நாளாய் அவளின் மனதிலிருந்த வெறுமைக்கான காரணம் என்ன என்பது அவளுக்குத் தெள்ளத்தெளிவாய்ப் புரிந்தது. கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கும் மேலாய் கணவன் தன்னிடம் இந்த ஒதுக்கத்தைக் காட்டி வந்திருக்கிறான்... ஆனால் தான் தான் அதைக் கொஞ்சமும் உணரவில்லை என்பதை அறிந்த போது அவளுக்குள் ஏதோ ஒன்று உடைந்தது.

கண்ணனுக்கு வேறு பெண்களுடன் பழக்கம் என்பதை அவளால் ஒத்துக் கொள்ள முடியவில்லை. அதில் எல்லாம் அவன் அந்த ராமனின் பரம்பரையைச் சேர்ந்தவன். ஆனால் ஏன் இப்படி நடந்து கொள்கிறான் என்றால் விடை தான் தெரியவில்லை? காலையில் எழுந்ததும் கணவனிடம் கேட்க வேண்டும் என்று எண்ணியவள் மறுநாள் காலையில் அதை அப்படியே செயலாற்றினாள்.

“வனி... என்னடா திடீர்ன்னு இப்படி ஒரு கேள்வி கேட்கிற? என்னமோ நேத்து தான் கல்யாணம் பண்ணி கொண்ட மாதிரி இருக்கு உன் பேச்சு. நமக்கு இரண்டு வயதில் குழந்தை இருக்கிறான் என்பது கொஞ்சமாவது உனக்கு நியாபகம் இருக்கிறதா? எனக்கு இருக்கிற பிசினெஸ் டென்சனில் இதைப் பத்தி எல்லாம் நான் யோசிக்கவே இல்லை. இதுவெல்லாம் பெரிய மேட்டரே இல்லை. வாழ்க்கைக்குப் பணம் வேணும் வனி... என் கவனம் முழுவதும் அதில் தானிருக்கு” அவளுக்கு விளக்கமாய்ச் சொன்னவன் அங்கிருந்து அகன்றான்.

தான் விளக்கம் கேட்டதும் கணவன், ‘உன்னை விட எனக்கு வேறு யாரும் முக்கியமில்லை’ என்று தன்னை அள்ளி எடுத்துக் கொஞ்சுவான் என்று எதிர்பார்த்திருந்தவளுக்கு அவனின் பதில் ஏமாற்றத்தையே அளித்தது.

‘இது பெரிய மேட்டர் இல்லாமல் வேறு எது பெரிய மேட்டராம்? ரெண்டு வயசில் பையன் இருந்தா... அதுக்காகச் சந்நியாசமா வாங்கிக் கொண்டு போக முடியும்?’ மனதுக்குள் எரிச்சல் பட்டாள் அவள்.

இருபதின் தொடக்கத்தில் இருந்தவளின் ஆதங்கம் முப்பதின் தொடக்கத்திலிருந்த அவனுக்குப் புரியவில்லை. அதன் பின் அவள் எதற்காகவும் அவனிடம் வந்து நிற்கவில்லை. அதை அவனும் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை. அது எத்தகையை விபரீதத்தை இழுத்து விடப் போகிறது என்று அவனும் சரி... அவளும் சரி... அப்போது கொஞ்சமும் நினைக்கவில்லை.

ஒருநாள் அவள் கல்லூரிக்குக் காரில் செல்லும் போது ஒருவன் மோட்டார் சைக்கிளுடன் கையைப் பிசைந்து கொண்டு நின்றிருப்பதைக் கண்டாள். ஆனாலும் அவள் நிற்காமல் அவனைத் தாண்டி செல்ல முற்படும் போது... அவன் கையை ஆட்டி காரை நிறுத்தினான். வேறுவழியின்றி அவள் காரை நிறுத்தினாள்.

“என்ன மிஸ்டர் வேணும்?” கொஞ்சம் கெத்தாய் அவள் வினவ... உதவி கேட்க வந்த அவனோ அவளையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

“என்ன மிஸ்டர் இது கொஞ்சம் கூட விவஸ்தை இல்லாமல்...” அவனின் பார்வையில் அவள் முகம் அருவருப்பைக் காட்ட... அவன் சட்டென்று அவள் புறம் குனிய அவள் பயந்து தான் போனாள்.

“நீங்க காமாட்சி அத்தை பொண்ணு தானே...?” அவனின் கேள்வியில் அவள் நிம்மதி பெருமூச்சு விட்டவள்...

“ஆமாம்... நீங்க...?” புருவம் சுருக்கி வினவினாள். அவளுக்கு அவனை அடையாளம் தெரியவில்லை.

“என்னைத் தெரியலையா? நான் தான் மேலத்தெரு கணேசன் மகன்... ராமன்...” அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள...

“ஓ... கணேசன் மாமா பையனா?” என்றவள், “நீங்க சவூதியில் வேலை பார்ப்பதாய் சொன்னாங்களே?”

“காண்ட்ராக்ட் முடிஞ்சு திரும்பி வந்துட்டேன்... இங்கே இன்னமும் வேலை ஒண்ணும் செட் ஆகல...”

“ஓ...” என்றவள்... “பைக்கில் என்ன பிரச்சினை?”

“தெரியலைங்க... அதான் மெக்கானிக் யாராவது இருந்தா கூட்டிட்டு வரலாம்ன்னு காரை நிப்பாட்டினேன்” அவன் விளக்கம் கூற...

“வாங்க நான் ட்ராப் பண்றேன்...” அவள் சொன்னதும் மறுக்காமல் மறுபக்கம் அவன் ஏறி அமர அவள் காரை எடுத்தாள்.

அடுத்து வந்த சில மணித்துளிகள் மௌனத்தில் கரைய... மெக்கானிக் கடை வந்ததும் அதன் அருகில் அவள் காரை நிறுத்த... ராமன் இறங்கியவன் கதவை மூடி கொண்டே,

“ரொம்பத் தேங்க்ஸ்ங்க...” என்றவனைப் பார்த்து, “பரவாயில்லைங்க...” என்றபடி அவள் காரை எடுக்க...

“வனஜா நான் ஒண்ணு சொன்னா... கோபிச்சிக்க மாட்டீங்களே?” சொல்லியவன் அவளின் பதிலை எதிர்பாராமல், “அன்னைக்குப் பதினாறு வயதில் பார்த்த மாதிரி இன்னைக்கும் அதே மாதிரி அழகா இருக்கீங்க”

அவனின் பேச்சில் அதிர்ந்தவள் ஒன்றும் பேசாமல் படபடப்புடன் காரை கிளப்ப... என்ன தான் அவள் மறைக்க முயன்றாலும் அவளின் கன்னத்துச் சிவப்பு அவளை அவனுக்குக் காட்டி கொடுத்தது. அதைக் கண்டு மனதுக்குள் சிரித்துக் கொண்ட ராமன் வெளியில் உற்சாகமாய்ச் சீட்டிகை அடித்துத் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான்.

அன்று முழுவதும் ராமனின் வார்த்தைகள் வனஜாவின் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. அவர்கள் ஊரில் அந்நிய ஆடவன் ஒருவன் இவ்வளவு எளிதாக ஒரு பெண்ணைப் பார்த்து பேசிவிட முடியாது. அதிலும் கல்யாணமான பெண்ணிடம் இவ்வாறு பேசினால் அவனை அடித்து நொறுக்கிவிடுவார்கள். அப்படியிருந்தும் அவன் எந்தத் தைரியத்தில் தன்னுடன் பேசினான் என்று அவனின் தைரியத்தை நினைத்து நினைத்து அவள் மனதுக்குள் மலைத்து தான் போனாள். ஆனாலும் தான் அழகாய் இருப்பதாய் அவன் சொன்னது அவளின் மனதின் ஓரத்தில் ஒரு குறுகுறுப்பை ஏற்படுத்தியது என்னமோ உண்மை தான்...

மறுநாள் அதே வழியில் அவள் கல்லூரிக்குச் சென்ற போது ராமன் அங்கே நின்றிருந்தான். அவனைக் கண்டதும் அவளின் மனம் பந்தயக் குதிரையைப் போல் வேகமாய் அடித்துக் கொண்டது. அவன் அருகே வரும் போது காரின் வேகத்தைக் கூட்டியவள் அவனைத் திரும்பியும் பாராமல் சென்றாள். அவன் அதற்கு எல்லாம் அசையும் ஆளில்லை என்பதை அடுத்த நாளே அவளுக்கு நிரூபித்தான். மறுநாளும் அவன் அங்கே வந்து நிற்க அவள் அப்போதும் அவனைக் கண்டு கொள்ளாது காரை வேகமெடுத்தாள்.

ராமன் வேகமாய்ச் செல்லும் அவளின் காரை பார்த்தபடி அசையாது நின்றிருந்தான். அவனுக்கு வனஜாவை மிகவும் பிடிக்கும். அவளின் அழகு மேல் அவனுக்கு அப்படியொரு மோகம். அதை அவன் காதல் என்று நினைத்துக் கொண்டிருந்தான். ஐந்து வருடங்களுக்கு முன் அவன் வேலை விசயமாக வெளிநாடு சென்ற போது தன் பெற்றோரை பிரிவதை காட்டிலும்... அவளை எப்படி ஐந்து வருடங்கள் பார்க்காமல் இருக்கப் போகிறோமோ என்று தான் மறுகி போனான்.

ஐந்து வருடங்கள் முடிந்து திரும்ப வந்த போது அவளுக்குத் திருமணமாகி விட்ட செய்தி கேட்டு அவன் அதிர்ந்து தான்

போனான். பின்பு மனதை தேற்றிக் கொண்டான். அவளை மணம் செய்யும் பிராப்தம் தனக்கு இல்லை என்று முடிவு பண்ணி வனஜாவை தன் மனதிலிருந்து தூக்கியெறிந்து விட்டான். அப்படித் தான் நினைத்துக் கொண்டிருந்தான் மீண்டும் அவளைப் பார்க்கும் வரை.

எதிர்பாராத விதமாக அவளைச் சந்தித்தவன்... அன்று போல் இன்றும் கட்டுக்குலையாத மேனியுடன் அழகு கொஞ்சமும் குறையாமல் இருந்தவளை கண்டு அவனுக்கு மீண்டும் காதல் பித்துத் தலைக்கேறியது. அவள் திருமணமானவள், ஒரு குழந்தைக்குத் தாய் என்பது எல்லாம் அவன் கண்ணுக்கு தெரியவில்லை. அவன் கண்ணுக்கு அவன் அதே பதினாறு வயது வனஜாவாகத் தான் தெரிந்தாள். அவனின் இந்தக் கிறுக்கத்தனமான காதல் எல்லாம் பாவம் வனஜாவுக்குத் தெரியாது.

அவள் அவனைக் கண்டு கொள்ளாமல் போனாலும் அவன் அதைப் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை. அடி மேல் அடி வைத்தால் அவள் மனம் அவன் பால் சாயாமல் போய்விடுமா என்ன? என்ற அலட்சிய மனோபாவம் அவனுக்கு உண்டானது. அவன் தன் முயற்சியில் விடாமல் இறங்கினான். அவளோ அவனின் இந்த நடவடிக்கையைக் கண்டு பயந்து போய்ப் பாதையை மாற்றினாள். அப்படியும் அவன் அவளை விடாமல் பின் தொடர்ந்தான். அவனின் செயல் அவளுக்கு மனதில் அச்சத்தை மூட்டினாலும்... அவன் அவளை நெருங்கி வந்து எதுவும் செய்யவோ இல்லை பேசவோ முயலாததால் அவள் அதைப் பற்றிப் பெரிதாக அலட்டி கொள்ளவில்லை.

இதற்கிடையில் கண்ணன் – வனஜா இவர்களின் மூன்றாமாண்டு திருமணநாள் வந்தது. அதை எப்போதும் போல் சொந்தக்காரர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைத்துக் கோலாகலமாய்க் கொண்டாட விரும்பினார் சாந்தி. அதையே வனஜாவும் விரும்ப... கண்ணன் வேறுவழியின்றிச் சரியென்று தலையாட்டினான். அவனுக்கு இந்த மாதிரி நேரத்தை வீணடிப்பதில்

அவ்வளவாய் விருப்பமில்லை. ஆனாலும் தாயின் சொல்லை மறுக்க முடியவில்லை.

“நான் எப்படி இருக்கேங்க...?” பாந்தமாய்ப் பட்டுப்புடவை உடுத்தி... வைரநகைகள் அணிந்து அந்தத் தேவலோக பெண்ணாய் ஜொலித்த வனஜா ஆர்வமாய்க் கணவனிடம் கேட்க... அவனோ மகனுக்கு உடை அணிவித்தபடி அவளை நிமிர்ந்து பார்த்தவன் அவளின் அழகில் ஒரு கணம் லயிக்கத் தான் செய்தான்.

“உனக்கு என்ன வனி... நீ எப்பவுமே அழகு தான்...” அவளைப் பார்த்து சொன்னவன் மீண்டும் தன் பார்வையை மகன் மீது பதித்தான். அவனின் பதிலில் அவள் மனம் திருப்தியுறவில்லை. செல்லமாய் அணைத்து, முத்தமிட்டுத் தன்னைப் பாராட்டினால் தான் என்ன...? என்று அவள் மனம் சிணுங்கியது.

“அம்மா... என்னைத் தூக்குங்க...” தன்னிடம் ஓடி வந்த மகனிடம் அவள் தன் மனதின் எரிச்சலை காண்பித்தாள்.

“போ தள்ளி... என் புடவை கசங்குது பார்...” அவனைத் தள்ளிவிட்டவள் வேகமாய் வெளியேற... இரண்டு வயது ஆரனோ தாயின் புறக்கணிப்பின் காரணம் தெரியாமல் விக்கித்துப் போய் நிற்க...

“ஆரா... அப்பா கிட்டே வாடா...” கண்ணன் அவனை ஆறுதலாய் அணைத்தவன் அவனைத் தூக்கி கொண்டு விருந்து நடக்கும் இடத்திற்குச் சென்றான். மனைவியின் செயலில் அவனுக்குச் சிறிதும் கோபம் வரவில்லை. சிறுபெண் என்று அவள் செயலை புறம் தள்ளினான்.

அன்றிரவு ஆசையுடன் வந்த கணவனை அதை விட அதிக ஆசையுடன் அவள் கட்டி கொண்டாள். கணவனின் முத்தத்திலும், அணைப்பிலும் தன் வசம் இழந்து உணர்வின் தாக்கத்தில் மூழ்கியிருந்தவள் காதில் திடீரென்று கதவை தட்டும் ஒலி விழுந்தது. கண்ணன் அவளிடமிருந்து எழுந்து அவசரமாய்க் கதவை திறக்க போக... அவளோ மனதில் கதவை தட்டும் நபரை சபித்தாள்.

“என்னமோ தெரியல கண்ணா... ஆரா தூக்கத்தில் அம்மா... அம்மான்னு அழறான்... நான் என்ன சமாதானம் செய்தாலும் அவன் கேட்கவில்லை. அதான் எனக்கு வேறுவழியில்லாமல்...” சாந்தி மகனின் தனிமையில் குறுக்கிட்டு விட்டோமே என்று சங்கடத்துடன் பேசினார்.

“அதுக்கென்னம்மா... ஆரனை கொடுங்கள்...” மகனை கையில் வாங்கிக் கொண்ட கண்ணன் கதவை தாளிட்டு உள்ளே வந்தான். தான் என்ன நிலையில் விட்டு விட்டு வந்தோமோ அந்த நிலையிலேயே மனைவி படுத்திருப்பதைக் கண்டவன்...

“வனி முதலில் உன் உடையைச் சரி பண்ணு...” என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் பால்கனி பக்கம் போக... அதை எரிச்சலுடன் பார்த்து கொண்டிருந்தாள் அவள். காமம் தலைக்கேறிய அவள்... தான் ஆரனின் தாய் என்பதை மறந்து போய் அழும் மகனை சமாதானப்படுத்த முயலாமல் வேண்டுமென்றே உடையைச் சரி பண்ணாமல் அப்படியே படுத்தாள்.

அழும் மகனை சமாதானப்படுத்தித் தூங்க வைத்த கண்ணன் உள்ளே வந்து மனைவியைப் பார்த்தவன் அதிர்ந்தான். தூங்கும் மகனை ஒருகணம் பார்த்தவன் அவனை மெல்ல படுக்க வைத்துவிட்டு மனைவி பக்கம் வந்தான். அவள் எதிர்ப்பார்ப்புடன் கண்களை மூடி கொண்டு காத்திருக்க... அவனோ அவளைப் போர்வையால் போர்த்தி விட்டு மகனின் மறுபக்கம் வந்து படுத்துக் கொண்டான். தன் உணர்வுகளைக் கணவன் கொஞ்சமும் மதிக்கவில்லை... அவனுக்குத் தன் மகனும், அம்மாவும் தான் முக்கியம் என்று எண்ணியவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது.

மறுநாள் அவளுக்காய்க் காத்திருந்த ராமனை கண்டதும் அவளையும் அறியாமல் அவள் கைகள் காரை நிறுத்தின. அவள் காரை நிறுத்தியதை கண்ட ராமன் மனதுக்குள் வியந்தவனாய் அதன் அருகில் சென்றான்.

“உள்ளே அமரலாமா?” அவன் அவளின் அனுமதி கேட்க...

“ம்...” என்று அவள் தலையாட்ட... அவன் உடனே உள்ளே ஏறியமர்ந்தான்.

“என்னைக்கும் இல்லாமல் இன்னைக்குத் தேவியின் அருள் இந்த ஏழை பக்தனின் பக்கம் திரும்பியிருக்கு...?” அவன் வேண்டுமென்றே அவளைச் சீண்ட... அதைக் கற்பனை பண்ணி பார்த்தவள் களுக்கென்று சிரித்தாள்.

“என்ன கற்பனை இனிக்கிறதா?” அவன் விசமமாய்க் கேட்க...

“ம்... ம்... பக்தனின் பக்தியை யாம் மெச்சினோம்... உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேள் பக்தா...?” அவள் என்னமோ விளையாட்டுக்கு தான் சொன்னாள். ஆனால் அவனோ அதைத் தீவிரமாய் எண்ணி கொண்டு,

“இந்தத் தேவியின் கடைக்கண் பார்வை என் மேல் பட்டால் அதுவே புண்ணியமாகும்... அதுவே என் விருப்பமும் கூட...” அவன் சொன்னது கேட்டு அவள் புரியாமல் பார்க்க...

“நான் சுத்தி வளைச்சு பேச விரும்பல. நான் உன்னை அஞ்சு வருசமா காதலிக்கிறேன் வனஜா. உனக்குத் திடீர்ன்னு கல்யாணம் நடக்கும்ன்னு நான் நினைச்சு கூடப் பார்க்க முடியல. அது பெரிய அதிர்ச்சி தான். இப்பவும் உன்னை மறக்க முடியாமல் தான் உன் பின்னாடியே சுத்திட்டு இருக்கேன். என் காதலை ஏற்றுக் கொள் வனஜா...” அவள் கையைப் பிடித்துக் கொண்டு அவன் காதல் யாசகம் கேட்க... அவள் கைகள் மெல்லியதாய் நடுங்கியது.

“நான் திருமணமானவள்...” சொல்லும் போதே அவள் குரல் நடுங்கியது.

“அதனால் மட்டும் என் காதல் மாறிவிட வேணுமா வனஜா? உன் ஒட்டுமொத்த அழகும் எனக்கே எனக்குன்னு எவ்வளவு கர்வமாய் இருந்தேன். அதில் இப்படியொரு இடி விழும் என்று நான் கொஞ்சமும் நினைக்கவில்லை. உன் மீதான காதலை என் மனதுக்குள் பொத்தி பொத்தி வச்சு நான்

நோயாளியாய் மாறி போனேன். என்னை ஏற்றுக் கொள்ளம்மா...” அவன் மறுபடியும் கெஞ்ச...

“எனக்குக் கணவன், குழந்தை இருக்கு. என்னிடம் இப்படியெல்லாம் பேசாதீங்க... இனி மறுபடியும் பேசினால்... உங்கள் கன்னம் பழுத்து விடும்” அவள் சிறுகண்டிப்புடன் கூறினாள். அவனிடம் கெத்தாய் அவள் பேசினாலும் அவள் மனதுக்குள் அவனின் வார்த்தைகள் பெரிய மாற்றத்தை உண்டு பண்ணி கொண்டிருந்ததை அவள் உணர்ந்தாள்.

“அதை நான் உன் கையைப் பிடிக்கும் போதே செய்திருக்கலாமே?” ஒற்றைப் புருவத்தைக் கேலியாய் உயர்த்தி இறக்கியவன்... ‘உன் மனதை நான் கண்டு கொண்டேன்’ என்பது போல் அவளைப் பார்த்தான். அவனின் கேள்விக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை... தலையைக் குனிந்து கொண்டாள்.

“வனஜா...” ஒற்றை விரல் கொண்டு அவள் முகத்தை நிமிர்த்தியவன், “இன்னமும் என்னைப் பிடிக்கவில்லையா?” தாபத்தோடு கேட்டவனைக் கண்களில் நீர் மல்க பார்த்தாள் அவள்.

“உனக்குப் பிடிக்கவில்லை என்றால் நான் வற்புறுத்த மாட்டேன்... நான் வர்றேன்...” காரை விட்டு இறங்க போனவனின் கையை அவசரமாய்ப் பிடித்துத் தடுத்தவள் அவன் கைகளில் முகத்தைப் புதைத்து கொண்டாள்.

கொழுக்கம்பு இல்லாமல் தள்ளாடிய கொடி அவனைக் கண்டதும் பற்றுகோலாய் பற்றிக் கொண்டு அவன் மீது படர்ந்து கொண்டது. அவளின் செயலில் அவன் மனம் நிம்மதியுற்றது. அழகு பெட்டகமான வனஜா அவன் கை நழுவி போய்விட்டாளே என்று கவலையில் இருந்தவனுக்கு அவள் மீண்டும் தன் கை சேர்ந்ததை அவனால் நம்ப முடியவில்லை. அவளை அள்ளி எடுத்து தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான்.

வெகுநாள் கழித்து ஆணின் அருகாமை அவளைத் தன்னிலை மறக்க செய்தது. அவன் நெஞ்சில் ஆழமாய்

முகத்தை அவள் புதைத்துக் கொள்ள... அவளின் செயலில் அவன் தன் வசம் இழந்தான். அவளின் நிலை அவனுக்கு எதையோ உணர்த்த அவனின் கைகள் தைரியம் வர பெற்று அவள் மேனியில் முன்னேறியது. அவனின் கைகள் ஸ்பரிசத்தில் அவளின் பெண்மை விழித்துக் கொண்டது. என்ன தான் இருந்தாலும் கணவன் அல்லாத ஆடவனின் அணைப்பில் தான் இருப்பதா என்று அவள் மனம் முரண்டியது. அவனை விலக்க அவள் முற்பட... அவனின் பிடியோ இரும்பாய் இறுக்கி பிடித்திருந்தது.

“வேணாம் ராம்...” அவள் பலகீனமாய் முனங்க... அவளின் ராம் என்றழைப்பில் மனம் நெகிழ்ந்தவன் அவளை இறுக அணைத்து விட்டுப் பின் விலகி அமர்ந்தான்.

“ரொம்ப நன்றி வனஜா...” அவனின் நன்றியில் அவள் மனம் கூசி போனது. இப்படியா ஒரு ஆணுக்காய் தான் அலைவது என்று மனம் வெட்கியவள் அவன் புறம் தன் பார்வையைத் திருப்ப முடியாமல் ஸ்டியரிங் வீலில் தலைகவிழ்ந்தாள்.

“என்ன வனஜா... பீல் பண்றியா?” அவளின் தலையைக் கோதி அவன் ஆறுதலாய் கேட்க... அவனின் ஆறுதல் அவளுக்குத் தேவைப்பட்டதோ என்னமோ அமைதியாய் இருந்தாள்.

“சொல்லும்மா...” அவனின் பேச்சு அவளை உருக்க...

“இது தப்பில்லையா...?” அவள் குரல் மெதுவே ஒலித்தது. அதற்கு அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

“என் மீது உனக்கு ஆசையிருக்கு... எனக்கு உன் மீது கடலளவு நேசமிருக்கு... இதில் தவறு எங்கே இருந்து வருது... யாருக்கும் தெரியாத வரைக்கும் எதுவுமே தப்பில்லை...” என்றவன்,

“உன் குற்றவுணர்வை நான் போக்கவா?” சொன்னவனைப் புரியாமல் அவள் பார்க்க... அவனோ விசமமாய்ச் சிரித்துக்

கொண்டு அவளின் இதழை தன் இதழ் கொண்டு மூடினான்.

அவனின் செயலில் அவள் மனம் பதறினாலும்... அவனின் ஆழ்ந்த முத்தத்தில் அவளின் உடல் பாகாய் உருகியது. தான் செய்வது தவறு என்றாலும் அந்தத் தவறு அவளுக்குத் தித்திப்பாய் இனித்தது என்னமோ நிஜம். அதன் பின் நடந்த தவறுக்கு இருவருமே பொறுப்பாயினர். அவளின் நெற்றியில் முத்தமிட்டு தன் திருப்தியை வெளியிட்ட ராமன்... அவளை மனநிறைவோடு அணைத்துக் கொண்டான்.

அவனின் அணைப்பில் அவளுக்குத் தன் கணவன், குழந்தை எல்லாமே மறந்து போனது. மரத்து... மரணித்துப் போயிருந்த அவளின் உள்ளத்து உணர்வுகளுக்கு ஜீவன் கொடுத்த அவன் அவளுக்கு அந்தத் தேவதூதனாய்த் தெரிந்தான். அவளும் மனநிறைவோடு அவன் அணைப்பில் கட்டுண்டாள்.

“சரி நேரமாயிற்று... நான் கிளம்பறேன்...” ராமன் அவளை விலக்கி விட்டு எழ முற்பட... அவளோ அவனைத் தடுத்து நிறுத்தி...

“அடுத்து எப்போது சந்திக்கலாம்...?” ஆவலே வடிவாய் அவள் கேட்க... அவளின் ஆவலை அவன் சிறிதும் தவறாக நினைக்கவில்லை.

மற்ற ஆண்களைப் போல் ‘அலைகிறாள் பார்’ என்று அவளைக் கேவலமாய் அவன் எண்ணவில்லை. இவ்வளவு ஏன் அவளை மாற்றான் மனைவியாகக் கூட அவன் நினைக்கவில்லை. அவளைத் தன் உயிர் காதலியாகவே நினைத்திருந்தான். இந்த உலகில் யாரும் கெட்டவர்கள் என்று கிடையாது... அவரவர் மனதுக்கு அவரவர் நல்லவரே... அதே போல் தான் ராமனும் தான் செய்த காரியத்துக்குச் சிறிதும் வருந்தவில்லை. தன் காதல் கைகூடியதாகத் தான் நினைத்து மகிழ்ந்தான்.

“எப்போ வேணும் என்றாலும் நாம் சந்திக்கலாம். நீ மனதில் என்னை நினைத்தால் போதும் அடுத்த நொடி உன் முன் நிற்பேன்” அவளின் நெற்றியில் முத்தமிட்டு காதலாய் சொல்ல... கணவனின் உதாசீனத்தில் நைந்திருந்த அவள் மனதுக்கு அவனின் பேச்சு ஆறுதலாய் இருந்தது.

“ம்... சரி...” என்றவள் காரை கிளப்ப... அவன் அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான். இருபத்தைந்து ஆண்டுப் பிரம்மச்சரிய விரதத்தை முடித்து வைத்த காதலியின் கூடல் அவன் மனதில் நீங்காத நினைவாய் நின்றது. அதை நினைக்கும் போதே அவன் மனமும், உடலும் சூடேறியது.

****

“நானும், அம்மாவும் உடல் சுகமில்லாத பெரியப்பாவை பார்த்துவிட்டு வருவதாக இருக்கிறோம். நீயும், ஆரனும் தனியே இருந்து கொள்வீங்களா?” கண்ணன் கேட்கவும் வனஜா சந்தோசமாய்த் தலையசைத்தாள். பின்னே ராமனுடன் தனித்திருக்க அவளுக்குக் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை அவள் மறுப்பாளா என்ன?

“நான் என்ன சின்னப் பிள்ளையா? அதெல்லாம் இருந்து கொள்வேன்” அவள் பதிலளிக்க...

“அப்புறம் நீ என்ன பெரிய மனுசியா?” அவள் மூக்கை பிடித்து ஆட்டிய கண்ணன், “எனக்கு நீ இன்னும் சின்னப் பெண் தான். பார்த்து ஜாக்கிரதையாய் இரு...” பாசமாய்ச் சொன்ன கணவனைப் பார்க்கும் போது ஒருவித குற்றவுணர்வு எழுந்தது. இருந்தாலும் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

அவர்கள் இருவரும் சென்றதும் வேலைகாரர்களுக்கு இரவு விடுப்பு கொடுத்து அனுப்பியவள் ராமனை வீட்டிற்கு அழைத்தாள். நள்ளிரவு நேரத்தில் ராமன் அவள் வீட்டிற்கு வந்த போது அவளுக்கு அவ்வளவு நேரம் இருந்த குற்றவுணர்வு கொஞ்சமும் இல்லாமல் போனது.

“ராம்...” என்று அவனை ஓடி வந்து அவள் தழுவி கொள்ள...

“வனஜா...” என்று அவனும் அவளை ஆரத்தழுவி கொண்டான்.

அவனுக்குத் தன் கையால் விதவிதமாய்ச் சமைத்திருந்ததை ஆசை தீர பரிமாற... அவனும் அவளின் எண்ணம் உணர்ந்து வயிறார சாப்பிட்டவன் அவளை மனதார பாராட்டினான். கண்ணன் எந்தவித உணர்வும் இல்லாமல் உணவை வாயில் அடைத்துக் கொண்டு ஓடிய காட்சி அவள் கண் முன்னே வலம் வந்தது.

“வனஜா... நீயும் சாப்பிடு” என்றவன் அவளை அமர வைத்து உணவு பரிமாறி... அவளுக்கு ஊட்டிவிட... கண்ணனோடு ராமனை ஒப்பிட்டு பார்த்து அவள் கண்கள் கலங்கியது. தகாத உறவாய் இருந்தாலும் ராமனே அவள் கண்ணுக்கு நல்ல கணவனாய்த் தெரிந்தான்.

அன்றிரவு அவளுக்குச் சொர்க்கத்தைக் காண்பித்த ராமனின் காதலுக்கு(காமத்துக்கு...?) அவள் அடிமையானாள். அவன் என்ன சொன்னாலும் செய்யத் தயாராய் இருந்தாள் அவள். அந்தளவுக்கு அவள் அவன் மேல் பைத்தியமானாள். அந்நேரம் அடுத்த அறையிலிருந்த ஆரனின் அழுகை சத்தம் அவள் காதில் விழ அவள் ராமனின் கைகளை விலக்கி விட்டு எழ போனாள். மோகத்தில் மூழ்கி முத்துக் குளித்துக் கொண்டிருந்த அவனோ அவளைப் போக விடாமல் தன்னுடன் இறுக்கி பிடித்துக் கொண்டான்.

“ராம்... ஆரன் அழுறான்... நான் போய்ப் பார்த்துட்டு வந்திடறேன்...”

“அவன் அழுதால் அழட்டும்... நீ பேசாமல் இரு...” ராமன் அவளை அதட்ட...

“என்னை நம்பி தான் அவனை விட்டுட்டு போயிருக்காங்க... அவனுக்கு எதாச்சும் ஒண்ணுன்னா... என்னைக் கண்ணன்

கொன்னு போட்டுருவாரு ராம்...” அந்த ஏகாந்த வேளையில் கண்ணின் பேரை எடுத்தது அவனுக்குப் பிடிக்கவில்லை.

“அப்படியே அவன் அழுதழுது செத்துப் போனால் என்ன... ஒரு தொல்லை விட்டது என்று நிம்மதியாய் இரு. அவனைப் போல் நான் உனக்கு நூறு பிள்ளைகள் தர்றேன். என் பிள்ளைகளைப் பெத்து வளர்த்து கொஞ்சு. அவனின் பிள்ளை உனக்கு எதற்கு?” கண்ணன் மேல் உள்ள கோபத்தை ஆரனிடம் காண்பித்தான் ராமன்.

“இருந்தாலும் ராம்... சின்னப் பையன்...” அவளுக்கும் தாய்மை துடிப்பு இருந்ததோ?

“முதலில் இந்தச் சின்னப் பையனின் ஆசையை நிறைவேத்தும்மா...” என்றவன் அதற்கு மேல் அவளைப் பேச விடவில்லை. காம உணர்விடம் தன் மனதை அடகு வைத்திருந்த அவளோ அவன் பேச்சிற்கு மறுபேச்சுப் பேசாமல் அவனின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அவனுக்கு இன்பத்தை வாரி வழங்கினாள்.

காமம் என்னும் சாக்கடையில் கட்டி புரண்ட அந்த மனித பன்றிகளோ அந்தச் சின்னச்சிறு குழந்தையின் மனவுணர்வை பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. இதை அறியாத இரண்டு வயது ஆரனோ இரவு இருளின் பயத்தில் தாயின் அருகாமை வேண்டி அழுது அழுது களைத்து போய் அந்த அறையின் முன்னேயே மயங்கி விழுந்தான்.

“மேடம்... இந்தப் பைல்களைக் காரிலேயே விட்டு விட்டு வந்துட்டீங்களே...” வெகுபவ்யமாய்த் தன்னிடம் நீட்டிய ராமனை கண்டு வனஜாவுக்குச் சிரிப்பு பீறிட்டுக் கொண்டு வந்தது. பக்கத்தில் அமர்ந்திருந்த கணவனுக்காக அதை முயன்று அடக்கி கொண்டு...

“சரி... அதை அங்கே வச்சிட்டு போங்க...” அமர்த்தலாய் பதில் சொன்னவள் அவனைக் கண்டு கொள்ளாமல் கண்ணனிடம் பேசி கொண்டிருந்தாள்.

அதைக் கண்டு ராமனுக்கு ஆத்திரமாக வந்தது. இங்கே அவளை எதுவும் செய்ய முடியாத காரணத்தினால் ஒன்றும் பேசாமல் விருட்டென்று வெளியில் சென்றான். அவன் வேகமாய்ச் செல்வதில் இருந்து தன் மேல் கோபமாய் இருக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்து போனது. அவனைச் சமாளிக்கும் வித்தை என்னவென்பது இந்த இரண்டு ஆண்டுப் பழக்கத்தில் அவளுக்கா தெரியாது? அவளின் இதழ் மந்தகாச புன்னகையில் விரிந்தது.

ஆம்... ராமனுடனான அவளது உறவு இந்த இரண்டு ஆண்டுகளாக வெற்றிகரமாக... யாருக்கும் தெரியாமல் அந்தரங்கமாய் நடந்தேறிக் கொண்டு தான் இருக்கிறது. அவள் ராமனை தன்னுடனேயே வைத்து கொள்வதற்காகக் கணவனிடம் சொல்லி தனக்கு உதவியாளர் மற்றும் காரோட்டியாக அவனை நியமித்துக் கொண்டாள். ராமனை பத்தி கண்ணனுக்கு அவ்வளவாகத் தெரியாது. ஆனால் சாந்திக்கு அவனை நன்கு தெரியும். அவனின் தகப்பனின் முயற்சியால் தான் கண்ணனுக்கும், வனஜாவுக்கும் திருமணம் நடந்தது என்பதால் அவரும் நன்றி கடனுக்காக மகனிடம் ராமனுக்காகச் சிபாரிசு செய்யவே... தாயின் சொல்லை கண்ணனால் தட்ட முடியாது போனது. ஆரனுக்கு இப்போது நான்கு வயது. தாயின் ஒதுக்கம் தெரிந்தோ என்னமோ அவன் அவள் பக்கம் எட்டி பார்ப்பது இல்லை... எந்நேரமும் தந்தையுடனே ஒட்டி கொண்டு அலைந்தான்.

“சரிங்க... நான் கிளம்பறேன்...” கண்ணனிடம் விடை பெற்றவள் காரை நோக்கி நடந்தாள். அவள் காரில் ஏறியமர்ந்ததும் ராமன் காரை கிளப்பிய வேகத்தில் அவனின் கோபத்தின் அளவு அவளுக்குப் புரிந்தது. வீட்டிலிருந்து சிறிது தூரம் சென்றதும் ராமனின் தோளில் சாய்ந்தவள்,

“என் ராம்க்கு என் மேல் என்ன கோபம்?” கெஞ்சலாய் அவள் கேட்க... அவனோ பதில் பேசாமல் உம்மென்று வந்தான்.

“உங்களோட கோபத்தை நான் குறைத்து காட்டவா?” என்றவள் அவன் முகத்தின் அருகில் வர... அவனோ சட்டென்று காரை ஓரமாய் நிறுத்தியவன்... ஆத்திரத்துடன் அவளின் முடியை பற்றி இழுத்து,

“ஏண்டி... அவன் இருந்தா என்னைக் கண்டுக்க மாட்டியா? அப்போ உனக்கு நான் முக்கியமில்லை... அவன் தான் உனக்கு முக்கியம் இல்ல” அவன் கோபமாய்க் கர்ஜிக்க... அவன் தன் முடியை பிடித்து இழுத்தது கூட அவளுக்குச் சுக வேதனையாய் இருந்தது போல... தன் கூந்தலை இறுக பிடித்திருந்த அவன் கை மேல் முத்தமிட்டவள்...

“என்ன செய்ய ராம்...? அவர் என் கழுத்தில் தாலி கட்டிய கணவராய் போயிட்டாரே... அவருக்காக இல்லையென்றாலும் ஊருக்காக நான் இப்படி நடிக்க வேண்டியது இருக்கு... அதுக்காக உங்க மேல் காதலில்லை என்றாகி விடுமா?” அவள் கண்களில் காதலை தேக்கி கொண்டு கேட்க...

“அப்படியென்றால் அவன் கட்டிய தாலியை தூக்கி தூர எறிந்து விடு. இனி நான் கட்டும் தாலி மட்டும் தான் உன் கழுத்தில் இருக்க வேணும். நாளைக்கே நமக்குக் கல்யாணம் நடக்கணும்...”

“ராம்...” அதிர்ச்சியாய் அவள் அவனைப் பார்க்க...

“எதுக்கு இவ்வளவு அதிர்ச்சி...? உண்மையாய் பதில் சொல்... நீ என்னைக் காதலிகிறாயா? இல்லை அவனைக்

காதலிக்கிறாயா?”

“உங்களைத் தான் ராம்...” அவனின் கேள்வியில் அவள் சிறிதும் யோசிக்கவில்லை சட்டென்று பதில் சொன்னாள். அதில் அவன் முகம் மலர்ந்தது.

“அப்புறம் எதுக்குத் தயக்கம்? நாளைக்கே நாம கல்யாணம் பணிக்கலாம்”

“கொஞ்சம் பொறுமையாய் இருங்க... அதுக்கான சந்தர்ப்பம் கிடைக்கும் போது நானே உங்களுக்குத் தகவல் தெரிவிக்கிறேன்...” அவள் அவனைச் சமாதனப்படுத்த...

“ம்... சரி சரி...” அவளுக்காய் அவன் சம்மதித்தாலும் அவளின் பதிலில் அவனுக்குத் திருப்தி இல்லையென்பதை அவன் முகம் காட்டி கொடுத்தது.

“இதுக்குப் போய் இவ்வளவு கோபமா?” என்றவள் அவனின் கோபத்தைக் குறைக்கும் வேலையில் இறங்க... அதில் அவன் கோபம் முற்றிலும் காணாமல் போனது.

ராமன் திருமணத்தைப் பற்றிப் பேசிய தினத்தில் இருந்து மூன்றாம் நாள் வனஜா அவனைத் தன் வீட்டிற்கு அழைத்தாள். கண்ணனும் வேலை விசயமாக வெளியூர் சென்றிருக்க... சாந்தி பக்கத்தூரில் இருக்கும் கோவிலுக்குச் சென்றிருந்தார். வருவதற்கு எப்படியும் நாலைஞ்சு மணி நேரமாவது ஆகும்.

“ராம்... அந்தப் பைலை எடுத்துட்டு ஆபிஸ் ரூமுக்கு வாங்க...” என்றபடி அவள் முன்னால் நடக்க... அவனோ சிரித்தபடி அவளைப் பின் தொடர்ந்தான். வேலை செய்பவர்களுக்காக அவள் நடத்தும் இந்த நாடகத்தை அவனும் மனதுக்குள் ரசித்தான்.

“ராம்... இப்போது நீங்க என் கழுத்தில் தாலி கட்டலாம்...” மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பட்ட தங்கத் தாலியை அவள் அவன் கண் முன் ஆட்டினாள்.

“வனஜா... என் செல்லமே...” அவளை ஆசையோடு அணைத்துக் கொண்டான் அவன்.

“சீக்கிரம் ராம்... யாராவது வந்து விடப் போறாங்க...?” அவள் அவனைத் துரிதப்படுத்த... ராமன் சந்தோசமாய் அவள் கழுத்தருகே தாலியை கொண்டு வரும் போது தான் அவன் அதைக் கவனித்தான். கண்ணன் அவள் கழுத்தில் கட்டிய தாலி இன்னமும் அவள் கழுத்தில் இருந்தது.

“வனஜா இது உன் கழுத்தில் இருக்கும் போது நான் எப்படி உன் கழுத்தில் தாலி கட்டுவது?” அவன் குரல் கோபமாய் ஒலித்தது.

மற்ற விசயங்களைப் பார்த்து பார்த்து செய்தவள் இந்த விசயத்தில் கோட்டை விட்டிருந்தாள். “சாரி ராம்... நான் இதை யோசிக்கவே இல்லை. இந்தத் தாலியை கழட்டி விடவா...?” கொஞ்சம் கூட உறுத்தல் இல்லாமல் அவள் கேட்க... அப்போது தான் அவன் மனதில் அந்த விபரீத எண்ணம் எழுந்தது.

“அவன் கட்டிய தாலியை மஞ்சள் கயிற்றில் கோர்த்து கட்டி கொண்டு வா...” என்க... அவளோ அவனைப் புரியாமல் பார்க்க... “சொல்றதை முதலில் செய்...” அவன் கர்ஜிக்க... அவனைப் புரியாமல் பார்த்தவள் அறையை விட்டு வெளியேறினாள். அடுத்த ஐந்தாவது நிமிடம் அவள் அவன் சொன்னதைச் செய்தவளாய் அவன் கண் முன் வந்து நின்றாள்.

“இந்தத் தாலி தானே உன்னையும் என்னையும் பிரித்தது...” கோபமுடன் கூறியவன் அவள் கழுத்தில் கிடந்த அந்த மஞ்சள் கயிறை பிடித்து இழுத்து ஒரு நொடியில் அதை அறுத்து எறிந்து அருகில் இருந்த குப்பை தொட்டியில் சந்தோசமாய்ப் போட்டான். எதேச்சையாய் தந்தையைத் தேடி அங்கு வந்த ஆரன் ராமனின் கோபமான வார்த்தையில் பயந்து போய்க் கதவின் பின் மறைந்து கொண்டான்.

“இப்போ நீ எனக்கு மட்டும் தான் மனைவி...” என்றபடி ராமன் அவள் கழுத்தில் தாலியை கட்ட... அவளோ மகிழ்ச்சியுடன் அதைத் தலை வணங்கி ஏற்றுக் கொண்டாள்.

“இனி அவன் சுண்டு விரல் கூட உன் மேல் படக் கூடாது. அப்படிப் பட்டா... அவனை உண்டு இல்லைன்னு ஆக்கிடுவேன்...” தாலி கட்டியதும் கணவன் என்ற உரிமையை அவன் காட்ட... அவளோ அவனது உரிமை பேச்சில் மனதை பறிகொடுத்தவளாய் அவன் சொல்லுக்குச் சம்மதமாய்த் தலையாட்டினாள்.

இத்தனை நாள் அவளை நம்பி அவளுடன் வாழ்க்கை நடத்திய அந்த அப்பாவி மனிதனான கண்ணனை அந்தக் கணம் அவள் மறந்து தான் போனாள். அவனுக்குத் துரோகம் செய்கிறோமே என்ற குற்றவுணர்வு சிறிதுமில்லை அவளிடம். அந்தளவுக்கு அவள் மனம் முழுவதும் ராமனே வியாபித்திருந்தான்.

இதையெல்லாம் மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த ஆரன் ராமன் மேல் கோபம் கொண்டான். ராமன் செய்த காரியத்தின் வீரியத்தை உணரும் அளவுக்கு அவனுக்கு வயதில்லை என்றாலும்... அவன் தன் தாயை தொட்டு பேசி கொண்டிருப்பது அவனுக்குக் கோபத்தை மூட்டியது. அது குழந்தைகளுக்கே உண்டான உரிமை உணர்வு அது. அவன் பார்த்ததைப் பெரியவர்கள் இருவரும் அறியவில்லை.

அன்றிரவு தன் தந்தை வந்ததும் ஆரன் அந்த நிகழ்வை அப்படியே போட்டு உடைத்து விட்டான். கண்ணன் எப்போதும் இரவு உணவு முடித்துவிட்டு ஆரனுடன் சிறிது நேரம் செலவழிப்பான். அந்த நேரத்தில் தான் அவன் மகனுக்குக் கதைகள் சொல்வது, பள்ளியில் என்ன செய்தான்? அவனின் தேவைகள் என்ன? என்பது கேட்பது... என்று அவர்களுக்கு மட்டுமான நேரம் அது. இதில் வனஜா சிறிதும் தலையிடுவது இல்லை. கணவனோ, மகனோ எக்கேடோ கெட்டால் என்ன? என்ற மனரீதியில் தான் இப்போது எல்லாம் அவள் இருந்தாள்.

“ஆரா... இன்னைக்கு ஸ்கூலில் என்ன பண்ணின?” வழக்கம் போல் மகனை மடியில் இருத்தி கொண்டு கண்ணன் கேட்க... அவனோ உம்மென்று கையைக் கட்டி கொண்டு வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான்.

“என்னாச்சு என் குட்டி பையனுக்கு?” அவன் கன்னம் தொட்டு கொஞ்சி கேட்க...

“அப்பா... எனக்கு அந்த ராம் அங்கிளை பிடிக்கல” பட்டென்று அவன் சொன்னான். அவனின் பதிலில் கண்ணனின் புருவம் சுருங்கியது.

“ஏன் ஆரா...?” அவன் யோசனையுடன் மகனை பார்த்தான்.

“அவர் அம்மாவை தொட்டு தொட்டு பேசுறாரு... அது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கல” அவன் சொன்னதைக் கேட்டு கண்ணனுக்குக் குழப்பம் உண்டானது.

“அதை நான் பார்த்துக்கிறேன் ஆரா... சரி இன்னைக்கு நான் உனக்கு யானை கதை சொல்லவா?” அவனின் மனதை மாற்ற எண்ணி கண்ணன் பேச்சை மாற்ற... சிறுவன் அவனும் தந்தையின் பேச்சில் ராமனை மறந்தான்.

கதை சொல்லி மகனை தூங்க வைத்து விட்டு வந்த கண்ணன் தூங்கி கொண்டிருந்த மனைவியின் அருகில் படுத்து அவள் மேல் கை போட்டான். தூக்கத்தில் கனவில் ராமனுடன் சஞ்சரித்துக் கொண்ட வனஜாவோ அது களைந்த எரிச்சலில் கண்ணனின் கையைத் தள்ளிவிட்டாள்.

“ஏன் வனி...?” அவள் கழுத்தில் முகம் புதைத்துக் கொண்டு அவன் கேட்க... அவளுக்கோ கணவனின் தொடுகை நெருப்பு சுட்டார் போல் எரிந்தது.

“தலைவலிக்குது...” என்றவள் அவனை விட்டு விலகி படுக்க... அவனும் மனைவியை வற்புறத்த மனமில்லாமல் தள்ளி படுத்தான்.

அடுத்து வந்த நாட்களில் ராமனையும், வனஜாவையும் தொடர்ந்து கவனித்தான். மகன் சொன்னது போல் எந்தவிதமான பேச்சும் அவர்களிடையில் இல்லை. இருந்தாலும் மகன் எதற்குப் பொய் சொல்ல போகிறான்? என்ற கேள்வியும் மனதை குடைந்தது. ஆனாலும் ஆதாரமில்லாமல் பேச கூடாது என்பதால் வாயை மூடி கொண்டான்.

ராமன், வனஜா சந்திப்புகள் அடுத்தடுத்து நடந்து கொண்டிருந்தது. அதற்கு எந்தவித தடையும் ஏற்படவில்லை. அதே நேரத்தில் அவள் கண்ணனை தன் அருகில் கூட விடவில்லை. அதிலேயே கண்ணனுக்கு அவள் மேல் பெருத்த சந்தேகம் வந்தது.

“உனக்கும் அந்த ராமனுக்கும் என்ன சம்பந்தம்டி...?” நேரிடையாய் அவளைப் பார்த்து கேட்க... அவனின் கேள்வியில் அவள் உள்ளுக்குள் அதிர்ந்தாலும் அதை வெளியில் காட்டி கொள்ளாமல்...

“நீங்க என்னைச் சந்தேகப்படுறீங்களா அத்தான்? இதோ நம் மகன் மீது சத்தியமா எனக்கும் அவருக்கும் எந்த உறவும் இல்லை. அவர் உறவு முறையில் முறைப் பையன்னாலும் எனக்கு அவர் உடன் பிறக்காத அண்ணன். அண்ணன், தம்பி கூடப்பிறக்காத எனக்கு அவர் ஒரு சகோதரன் போல. அப்படிப்பட்ட எங்க உறவை நீங்க கொச்சைப் படுத்திட்டீங்களே? இந்த உலகத்திலேயே உங்களைத் தான் எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஆனா நீங்க எந்தப் புருசனும் பொஞ்சாதியை பார்த்து கேட்க கூடாத வார்த்தையை என்னைப் பார்த்து கேட்டுட்டீங்களே...!”

அவன் ஒற்றை வரியில் கேட்ட கேள்விக்குப் பல வரியில் பதிலளித்து ஒப்பாரி வைத்தவள் அந்த நள்ளிரவு நேரத்திலும் தன் மாமியாரை கூப்பிட்டு பஞ்சாயத்து வைத்து விட்டாள். அவளின் கதறலில் சாந்தி மட்டுமல்ல கண்ணனுமே அரண்டு தான் போனான். வேறுவழியின்றி அவளை அவன் தான் சமாதானம் செய்ய

வேண்டியிருந்தது. அந்தச் சமாதானம் எல்லாம் அவளிடம் எடுபடாமல் போய்விட்டது.

“நான் யாருமில்லாத அநாதை என்பதால் தானே நீங்க இப்படிப் பேசுறீங்க...? நான் இப்பவே என் பெரியப்பா, சித்தப்பா மக்களைக் கூப்பிடறேன்... அவங்க வந்து உங்களை என்னன்னு கேட்கட்டும்...” என்று கண்ணனை பார்த்து ஆங்காரமாய்க் கத்தியவள்... தான் சொன்னது போல் பிறந்து வீட்டு சொந்தங்களையும் கூப்பிட்டு பஞ்சாயத்து நடத்த... அதில் கண்ணன் தான் அசிங்கப்பட்டுப் போனான். அதன் பின் அவன் அவள் வழியில் எதற்கும் குறுக்கிடுவது இல்லை. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஆரனின் மனதில் தாயின் ஆங்காரம் ஆழமாய்ப் பதிந்து போனது.

“அப்போ இனி அவன் நம் பக்கம் தலை வச்சு படுக்க மாட்டான்னு சொல்லு...” வனஜா வாயிலாக வீட்டில் நடந்தவற்றை அறிந்த ராமன் வாய் விட்டுச் சிரித்தான்.

****

“வனஜா... எனக்கு இப்பவே உன்னைப் பார்க்கணும் போலிருக்கு...” குரலில் காதலையும், தாபத்தையும் கலந்து கட்டி ராமன் தொலைப்பேசியில் பேச...

“ராம்... இன்னைக்குக் காலையில் தானே சந்திச்சுக்கிட்டோம்... அதுக்குள் கூப்பிட்டா நான் எப்படி வருவது? கண்ணன், ஆரனை தாண்டி நான் வருவது என்பது ரொம்பக் கஷ்டமாயிருக்கு ராம்... ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க...” அக்கம்பக்கம் பார்த்துக் கொண்டே பயத்துடன் அவள் பேசினாள். யாராவது பார்த்துவிட்டால் என்னவாவது?

“இப்போவெல்லாம் நீ என்னை ரொம்ப அவாய்ட் பண்ற...” அவனின் குரல் கோபமாய் ஒலித்தது.

“ஐயோ... அப்படியெல்லாம் நான் செய்வேனா?” அவனின் கோபம் கண்டு அவள் பதறினாள். “ஆரன் வளர்ந்துட்டான்...

விவரம் தெரியும் வயசாச்சு... அவன் அப்பாவை ஏமாத்த முடிந்தளவுக்கு அவனை ஏமாத்த என்னால் முடியல ராம்...”

“அதெல்லாம் எனக்குத் தெரியாது... நீ உடனே வர்ற...” ராமன் கோபத்துடன் தொலைப்பேசியைத் துண்டிக்க... அவள் அயர்வுடன் அதைத் தாங்கியில் வைத்தாள்.

“யாரும்மா ஃபோனில்...?” திடுமென்று ஒலித்த ஆரனின் குரலில் அவள் பயத்துடன் திரும்பி பார்த்தாள்.

நெடுநெடுவென்ற உயரத்துடன் ஒல்லியாய் இருந்தாலும் பார்ப்பதற்குப் பதினேழு வயது என்று சொல்ல கூடிய அளவில் நன்கு வளர்ந்திருந்தான் பதினான்கு வயது ஆரன். ஆம்... காலம் கடகடவெனப் பத்து வருடங்கள் ஓடியிருந்தது. சாந்தி இறைவனடி சென்று நான்கு ஆண்டுகளாகிறது. இந்த இடைப்பட்ட காலத்தில் ராமனுக்கும், அவளுக்கும் இருந்த தொடர்பு ஆலமரம் போல் உறுதியாய் வளர்ந்திருந்தது. அதை யாருக்கும் தெரியாமல் மறைக்கும் சாமர்த்தியம் இருவருக்கும் இருந்ததால் ஊரில் கௌரவப் பிரஜையாய் வலம் வந்து கொண்டிருந்தனர்.

“யாரோ ராங் ஃகால் ஆரா...?” அன்னையின் பேச்சில் சமாதானம் அடைந்தவன்...

“எனக்குப் பசிக்குது சாப்பாடு போடுங்க...” என்றபடி உணவு மேஜையை நோக்கி நடக்க... வேறுவழியில்லாமல் அவனைப் பின் தொடர்ந்தாள் வனஜா. சாந்தி இறந்த பின் அவர் ஆரனுக்குச் செய்து வந்த வேலைகள் சத்தமில்லாமல் வனஜாவின் தலை மேல் விழுந்தது. அதையும் அவள் கடனே என்று தான் செய்தாள். அதில் மகன் என்ற பாசம் துளி கூட இல்லை.

“போதுமாப்பா... அம்மாவுக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு... நான் வரட்டுமா?” அவள் கேட்க... அவனும் மௌனமாய்த் தலையசைத்தான். அவன் சம்மதம் சொன்னதும் வேகமாய் வெளியில் வந்து காரை எடுத்தவள் ராமன் சொன்ன விடுதி நோக்கி பறந்தாள்.

“ராம்... என் மேல் கோபமா?” அவன் தங்கியிருந்த விடுதியறைக்கு வந்தவள் அங்கே முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்த ராமனை கண்டதும்... அவனுக்காய் அவள் மனம் பாகாய் உருகியது.

“என் பேச்சுக்கு நீ மதிப்பே கொடுப்பது இல்லை வனஜா...”

“என்ன ராம் இப்படிச் சொல்றீங்க... நான் வாழ்வதே உங்களுக்காகத் தான்னு உங்களுக்குத் தெரியாதா?” அவன் அருகில் வந்து அவனை ஆறுதலாய் அணைத்துக் கொள்ள... அதில் அவன் கொஞ்சம் முகம் தெளிந்தான்.

“இதற்கு எல்லாம் நான் ஒரு முடிவு கட்ட போறேன் வனஜா...” அவன் குரல் தீவிரத்துடன் ஒலித்தது.

“என்ன முடிவு?” அவள் யோசனையாய் கேட்க...

“ம்... உன் புருஷனை தீர்த்து கட்ட போறேன்...” அவன் சொன்னதைக் கேட்டு அவள் அதிராமல் வாய் விட்டு சிரிக்க... அவனோ கோபத்துடன் அவளைப் பார்த்தான்.

“நான் என்ன ஜோக்கா சொன்னேன்?”

“பின்னே நீங்க சொன்னது ஜோக் இல்லாமல் வேறு என்னவாம்? உங்களை நீங்களே கொல்ல போறேன்னு சொன்னால் எனக்குச் சிரிப்பு வராதா?” அவளின் இந்தப் பேச்சு அவன் காதில் தேனாய்ப் பாய்ந்தது. அவளுக்குக் கணவன் என்றால் அது தான் மட்டும் தான் என்று அவன் உள்ளம் இறுமார்ந்து போனது.

“என் செல்லம்... என் கண்ணு...” என்றபடி அவளை முத்தத்தில் குளிப்பாட்டியவன்...

“இந்த ஜென்மத்தில் மட்டுமில்லாது எல்லா ஜென்மத்திலும் நான் தான் உன் கணவன்... அது தெரியாமல் நான் தான் ஏதேதோ உளறி விட்டேன்... என்னை மன்னித்துக் கொள்...”

“நமக்குள் மன்னிப்பு எல்லாம் எதுக்கு?” அவள் காதலாய் சொல்ல...

“சரி இப்போ நான் சீரியசாய் சொல்றேன்... அந்தக் கண்ணனை தீர்த்துக் கட்டினால் என்ன?” அவனின் கேள்வியில் இப்போது உண்மையில் அவள் அதிர்ந்து தான் போனாள்.

“என்ன சொல்றீங்க ராம்?” அவள் குரல் நடுக்கத்துடன் ஒலித்தது.

“அவன் ஒழிந்தான் என்றால் நாம் நிம்மதியாய் இருக்கலாம் இல்லையா?”

“அவர் தான் என் வழியில் குறுக்கே வருவதில்லையே... இப்போ இது எதுக்கு?”

“இல்லை வனஜா... இப்போ தான் நீ எனக்கு அதிகம் தேவைப்படற...” என்று சொன்னவனை அவள் முறைத்து பார்க்க... “நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. என் தாய், தந்தை இறந்த இந்த ஒரு வருடமாய் என்னைத் தனிமை துயர் ரொம்பவே தாக்குது. எத்தனை நாளைக்குத் தான் நான் ஹோட்டலில் சாப்பிட்டு இப்படியே வெறுமையாய் வாழ்க்கையை ஓட்டுவது? எனக்குக் காலம் முழுவதும் நீ பணிவிடை செய்ய... அதே போல் நான் உனக்குக் காலம் முழுவதும் பணிவிடச் செய்யணும்ன்னு எனக்கும் ஆசையிருக்காதா சொல்?”

ராமனின் பெற்றோர் இருந்தவரை அவன் இந்த உறவை பற்றி அவர்களிடம் மூச்சு விடவில்லை. இந்தத் தகாத உறவை அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதால் அவன் கொஞ்சம் அடக்கி வாசித்தான். இப்போது அவர்கள் உயிரோடு இல்லாத காரணத்தால் அவனின் ஆசைகள் கட்டவிழ்ந்து பேயாட்டம் போட்டது.

“எனக்கும் அந்த ஆசை இருக்கு தான்...” அவனின் கூற்றை ஆமோதிப்பது போல் அவளும் பதில் கூறினாள்.

“அப்படியென்றால் நான் சொல்வதற்குச் சரியென்று சொல்...” அவன் விடாப்பிடியாய் கேட்க... ராமனின் அருகாமைக்காகக் கணவனைக் கொல்வதற்கு அவள்

சம்மதம் தெரிவித்தாள். அந்தளவுக்கு அவள் ராமன் மேல் உயிராய் இருந்தாள். இந்த மாதிரி விபரீத உறவிலும்... உயிர் காதல், நம்பிக்கை எல்லாம் இருந்தது தான் அதிசயம்.

“இன்னமும் உன் முகம் ஏன் தெளிவில்லாமல் இருக்கு? அவனைப் பத்தின கவலையா?” ராமனின் குரலில் குத்தல் நன்றாகவே ஒலித்தது.

“இல்லை... ஆரன் என்ன சொல்வானோ என்று பயமாயிருக்கு?”

“இதில் அவன் சொல்ல என்ன இருக்கு? அவனை ஹாஸ்டலில் தங்கி படிக்க வைக்க வேண்டியது தான்” அதற்கும் அவன் தீர்வு சொல்ல... அதில் அவள் கொஞ்சம் முகம் தெளிந்தாள்.

“இன்னமும் என்ன குழப்பம் வேண்டியிருக்கு?” அவளை அவன் ஆறுதலாய் அணைக்க... அவளும் அவன் நெஞ்சில் முகம் புதைத்து ஆறுதலை தேடினாள். அவன் என்ன தான் அவளைச் சமாதானம் செய்த போதிலும் ஆரனை நினைத்து அவனுக்குமே அச்சமாகத் தான் இருந்தது. தங்களது உறவுக்கு அவன் நிச்சயம் எதிர்ப்பு தெரிவிப்பான் என்று அவன் உறுதியாய் எண்ணினான்.

‘அப்பனை போடும் போது... மகனையும் சேர்த்து போட்டுவிட வேண்டியது தான்... எங்க காதலுக்கு எதிரியாய் யார் வந்தாலும் இதைத் தான் நான் செய்வேன்...’ மனதுக்குள் நினைத்தவன் அதை வனஜாவிடம் சொல்லவில்லை.

“ஆரா... எக்சாம் எல்லாம் எப்படிப் பண்ணியிருக்க?” பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுதியிருக்கும் ஆரனிடம் கேட்டுக் கொண்டே கண்ணன் காரை ஓட்டி கொண்டிருந்தார்.

“நல்லா பண்ணியிருக்கேன்ப்பா... நிச்சயம் ஸ்கூல் பர்ஸ்ட் வருவேன்...” உற்சாகமாய்ப் பதில் சொன்ன மகனை வாஞ்சையுடன் பார்த்தார் கண்ணன்.

மனைவி என்ற உறவு சரியாக அமையவில்லை... மகனாவது நல்ல பையனாக அமைந்தானே என்ற சந்தோசம் மட்டுமே அவருக்கு வாழ்க்கையில் மிச்சமாயிருந்தது. ஆரன் தந்தையின் வழிகாட்டுதலில் ஒழுக்கமான... அதேசமயம் அறிவான பையனாக வளர்ந்தான். அவனுக்கு அந்தச் சிறுவயதிலேயே தொழிலையும் பழக்கப்படுத்தி விட்டிருந்தார். இப்போதும் அவரும், அவனும் சேர்ந்து தொழிற்சாலைக்குச் சென்று விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

“ஆரா... அம்மா மேல் உனக்கு ஒரு கோபமும் இல்லையே...?” கொஞ்சம் தயக்கத்துடன் தான் அவர் கேட்டது. தாயின் புறக்கணிப்பு அவன் மனதில் ஏதும் காயங்களை ஏற்படுத்தி இருக்கிறதா என்பதை அறிய தான் அவர் அவ்வாறு கேட்டது.

“இல்லைப்பா... அவங்க நேச்சரே அப்படிங்கிற போது அவங்களைக் குறை சொல்ல முடியாது. ஒவ்வொருத்தர் ஒவ்வொரு மாதிரிப்பா. அவங்களை அப்படியே ஏத்துக்கப் பழகிட்டேன். என்ன இருந்தாலும் அவங்க என்னைப் பெத்த தாய் இல்லையாப்பா?” மகனின் பக்குவ பேச்சில் அவர் மனம் நெகிழ்ந்து போயிருந்தது.

தான் வளர்த்த வளர்ப்பு தவறாகப் போகவில்லை என்று மகனை நினைத்து மனதுக்குள் பெருமையாய் இருந்தது அவருக்கு. அவர் ஒரு போதும் ஆரனிடம் வனஜாவை பற்றித் தவறாகச் சொன்னதில்லை. அவளின் குணம் இது தான்... ஆனாலும் அவள் நல்லவளே என்று தான் அவன்

மனதில் பதிய வைத்திருந்தார். ஒருவேளை மகனுக்குச் சொல்வது போல் தன் மனதிலும் அந்த எண்ணத்தை அழுத்தமாய்ப் பதிய வைத்து கொண்டாரோ என்னமோ? ஆனால் ஒன்று அவளை எந்த நேரத்திலும் அவர் சந்தேகக் கண் கொண்டு பார்க்கவில்லை. அது தான் வனஜாவுக்கும் மிகவும் வசதியாகப் போய்விட்டது.

“அப்பா... லாரி...” திடுமென ஒலித்த மகனின் கூக்குரலில் சுயவுணர்வு அடைந்தவருக்கு எதிரே வந்த லாரியை கண்டதும் என்ன செய்வது என்று தெரியவில்லை. இவர்களின் காருக்கு நேராக அசுர வேகத்தில் வந்து கொண்டிருந்த லாரியை கண்டவர் நொடி நேரம் கூடத் தாமதிக்காமல் மகனின் பக்க கதவை திறந்து அவனை வெளியில் தள்ளிவிட... அதே நேரம் லாரி பெரும் சத்தத்துடன் காரின் மேல் மோதியது. கண நேரத்தில் கண் மூடி திறப்பதற்குள் எல்லாம் முடிந்து விட்டது.

“அப்பா...” ஆரன் கூவிய கூவல் அந்த அத்துவான காட்டில் தேய்ந்து மறைந்தது. அவனுக்குமே கீழே விழுந்ததில் ஆங்காங்கே அடிப்பட்டிருந்தது. ஆனாலும் அவன் அதைப் பொருட்படுத்தாமல் அவசரமாய்க் காரின் அருகே ஓடி செல்ல... அங்கே அவனின் தந்தை உயிருக்கு போராடி கொண்டிருப்பது தெரிந்தது. காரின் கதவை திறந்து அவரை வெளியில் கொண்டு வர அவன் முயற்சிக்க... மோதலில் நெளிந்து உடைந்த அந்தக் கதவோ திறப்பேனா என்று சண்டித்தனம் செய்தது.

“அப்பா... அப்பா...” அவன் கூவி கொண்டே திறக்க முடியாமல் சதி செய்த கதவை செய்வதறியாது ஆத்திரத்துடன் ஓங்கி அறைந்தான். அவனின் சத்தத்திலும், கதவை ஓங்கி அடித்த சத்தத்திலும் கண்ணன் மெதுவே கண் விழித்து அவனைப் பார்த்தார்.

“ஆரா...” மிகுந்த சிரமத்துடன் அவனின் பேரை உச்சரித்தவர்... கதவில் உடைந்த கண்ணாடிக்கு இடையில் தன் கையை நீட்ட... அதை இறுக பற்றிக் கொண்டவன் கண்களில் கண்ணீர் நிற்காமல் வழிந்தது.

“அப்பா...” அவன் தேம்ப...

“நல்லாயிருப்பா...” அவன் தலையில் கை வைத்து ஆசிர்வதிப்பது போல் செய்தவர், “நீ படிச்சு பெரிய ஆளாகணும்... அப்புறம் அம்மாவை நல்லா பார்த்துகோப்பா... பாவம் அவள்...” என்றவரின் விழிகள் மெல்ல சொருக...

“அப்பா... உங்களுக்கு ஒண்ணும் ஆகாது... நாம ஹாஸ்பிட்டல் போய்டலாம்...” அவரின் கையைப் பற்றிக் கொண்டு பதறியவன் அங்கு வேறு ஏதும் வாகனம் வருகிறதா என்று சாலையின் இருபக்கமும் பதட்டத்துடன் பார்த்தான். எந்தவொரு வாகனமும் வருவதற்கான அறிகுறி அங்கே தென்படவில்லை.

திரும்பி காருக்குள் மாட்டியிருந்த தந்தையைப் பார்த்தவன் அதிர்ந்தான். அவரின் தலை ஒரு பக்கமாய்த் தொங்கி போயிருந்தது. “அப்பா...” அதிர்ந்தவனாய் அவரின் கையை விட அது தொய்ந்து போய்க் கீழே விழுந்தது. அதிர்ச்சியில் என்ன செய்வது என்று தெரியாமல் அவன் உறைந்து போய் அப்படியே நிற்க... சுமார் ஒரு மணி நேரம் கழித்து மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் பரிதாப்பட்டு நிறுத்தி விவரம் கேட்டு அவனையும், கண்ணனையும் மருத்துவமனைக்குள் சேர்ப்பதற்குள் முழுதாய் இரண்டு மணி நேரமாகி இருந்தது.

“அய்யோ... என்னை இப்படி நட்டாத்தில் விட்டுட்டுப் போயிட்டீங்களே... நான் என்ன செய்வேன்?” பெருங்குரலெடுத்து அழுத வனஜாவை எல்லோரும் பரிதாபாமாய்ப் பார்த்தனர். ஆரனுக்கும் அழுகை அழுகையாய் வந்தது. இருந்தாலும் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு நின்றிருந்தான். கதறி அழும் தன் தாயை பார்த்தவன் தந்தையின் சொல் காதில் ஒலிக்க அவள் அருகில் சென்றான்.

“அழாதீங்கம்மா...” என்றபடி அவளைத் தேற்ற...

கணவன் இறந்தது அவளுக்குச் சற்று அதிர்ச்சி தான். ராமன் இவ்வளவு வேகத்தில் காரியத்தை முடிப்பான் என்று அவள் சிறிதும் நினைக்கவில்லை. அவளையும் அறியாமல் மனதில் பயப்பந்து ஒன்று உருண்டது. அடுத்து என்னவாகுமோ என்ற பதற்றம் வேறு அவளுக்குள் தொற்றிக் கொள்ள... மகன் பேசியதும் அவள் ஆதரவாய் அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

ராமன் தான் எல்லாக் காரியங்களையும் முன் நின்று நடத்தினான். அங்கு வந்த ஒருவருக்குக் கூட அவன் மேலும், வனஜா மேலும் சிறு சந்தேகம் கூட வரவில்லை என்பது தான் ஆச்சிரியம். கண்ணனின் இறுதி கிரியைகள் முடிந்து மூன்றாம் நாள் ராமன் வனஜாவை சந்திக்க வந்தான்.

“ஏன் ராம்... இப்படிப் பண்ணினீங்க? எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு...” அன்று அவனின் சொல்லுக்குச் சம்மதமாய்த் தலையை ஆட்டும் போது வராத பயம்... அவளுக்கு இப்போது வந்தது அதிசயம் தான். பின்விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் பாதகமான செயலை செய்துவிட்டு இப்போது ஆற அமர யோசித்து என்ன பயன்? போன உயிர் திரும்பி வந்துவிடவா போகிறது?

“ரொம்பக் கவலைப்படுற போல...” அழுதழுது முகமெல்லாம் வீங்கி போயிருந்த அவளை ஆழ்ந்து பார்த்தவனின் குரல் கேலியாய் ஒலித்தது.

“என்ன இருந்தாலும் ஒரு காலத்தில் அவருடன் குடும்பம் நடத்தியிருக்கேனே... அதை மறக்க முடியுமா? இல்லை மறுக்கத் தான் முடியுமா? தெரிந்தவர் ஒருவர் இறந்துவிட்டால் அழ மாட்டாங்களா? இதில் இவர் கணவர் இல்லையா?” அவளையும் அறியாமல் கண்ணனை தன் கணவன் என்று குறிப்பிட... ராமனின் முகம் அந்தச் சொல்லில் கறுத்தது.

“ஓஹோ... அவன் உன் கணவன் என்றால்... அப்போ நான் யாரம்மா?” விதண்டாவாதமாய்க் கேட்டவனைச் சற்று எரிச்சலுடன் பார்த்தாள் அவள்.

“இந்த மாதிரி நேரத்தில் இந்தப் பேச்சு அவசியம் தானா ராம்? உங்களுக்கும் எனக்கும் உள்ள உறவு எப்படிப்பட்டது என்று நம்ம ரெண்டு பேருக்கும் தெரிந்திருக்கும் போது... என்ன இது அர்த்தமில்லாத கேள்வி?”

“நீ பேசுவது தான் அர்த்தமில்லாததாய் இருக்கிறது... சரி அதை விடு... நாம ரெண்டு பேரும் சேர்ந்து வாழ்வது எப்போது? அதைப் பத்தி கொஞ்சமாவது யோசித்தாயா?”

“அவர் இறந்து மூன்று நாள் கூட ஆகவில்லை... அதற்குள் இப்படிக் கேட்டால்... எப்படி? அதிலும் ஆரன் இதற்குச் சம்மதிப்பான் என்று எனக்குத் தோணல”

‘அவனையும் சேர்த்து தான் போட்டு தள்ளணும்ன்னு நினைச்சேன்... பையன் தப்பிச்சுட்டான்... அடுத்து ஒரு சான்ஸ் வராமலா போய்விடும்?’ மனதில் கொடூரமாய் நினைத்தவன் அதைப் பற்றி வனஜாவிடம் மூச்சு விடவில்லை.

“இங்கே பாரு ஆரன் சம்மதிக்கணும்... ஆட்டுக்குட்டி சம்மதிக்கணும்ன்னு எதாவது சாக்கு போக்கு சொல்லிட்டு இருந்த... எனக்குக் கெட்ட கோபம் வந்துவிடும். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ... அவ்வளவு சீக்கிரம் என் கூட வந்து வாழும் வழியைப் பாரு” ஆங்காரத்தில் கத்தி விட்டு திரும்பி செல்ல எத்தனித்தவன்... பின் நின்று அவள் புறம் திரும்பியவன் அவள் கழுத்தில் இருந்த தாலியை தூக்கி காண்பித்து,

“இது நான் கட்டியது... அவனுக்காக இதைக் கழட்டினேன்னு தெரிஞ்சது அப்புறம் நான் மனுசனா இருக்க மாட்டேன்” கோபத்தில் உறுமியவன் அவளைத் திரும்பியும் பார்க்காமல் நடந்தான். தன்னைப் புரிந்து கொள்ளாமல் செல்லும் ராமன் மீது முதன்முறையாக அவளுக்குக் கோபம் வந்தது.

ராமனுக்குப் பயந்தே கணவன் இறந்த பின் மனைவிக்குச் செய்யும் சடங்கிற்கு வனஜா மறுத்தாள். அவளின் கதறல் கேட்ட ஆரனும்,

“என் அம்மா இப்படியே இருந்திட்டு போகட்டும்... அவங்க பிறக்கும் போதே பூவும் பொட்டும் அவங்க கூடவே இருந்தது. இடையில் வந்த அப்பாவுக்காக அவங்க அதை இழக்க வேணாம். அப்பா இருந்தாலும் இதைத் தான் சொல்லியிருப்பாங்க...” அவனின் பக்குவமான பேச்சில் வனஜா மகனை ஆச்சிரியமாய்ப் பார்த்தாள். முதன்முறையாய் மகன் மீது பாசம் வந்தது அவளுக்கு.

“வனஜா... அப்போ கழுத்தில் கிடக்கும் தாலியையாவது கழட்டி விடம்மா...” அங்கிருந்த பெரியவள் ஒருத்தி கூற... மற்றவர்களும் அதை ஆமோதிக்க... ஆரன் சட்டென்று,

“அப்பா இழப்பையே அவங்களால தாங்க முடியல. இதில் அவர் கட்டிய தாலியை கழட்ட வேணும்ன்னா எப்படி...? வேணாமே ப்ளீஸ். அது அவங்க விருப்பப்படும் போது கழட்டிக்கிட்டும்... இப்போ எதுவும் வேணாம்” அவன் உறுதியாய் கூற...

“சின்னதுங்க நாட்டாமை செய்ற அளவுக்கு இப்போ காலம் இருக்கு. நமக்கு என்ன அம்மாவாச்சு... மகனாச்சு...” வந்திருந்த கூட்டம் களைய துவங்கியது.

“ஆரா...” என்று மகனை கட்டி கொண்டு ஓவென்று அழுதாள் வனஜா. எதற்கு அழுகிறோம் என்று தெரியாமல் அவள் அழ...

“அம்மா அழாதீங்க... நான் இருக்கிறேன் உங்களுக்கு...” அவன் சமாதானப்படுத்த...

‘இவன் என் மகன்’ என்ற பெருமிதம் அவள் மனதில் எழுந்தது. தாய் எதற்காகத் தாலியை கழட்ட மாட்டேன் என்று சொன்னாள் என்பது மட்டும் அவனுக்குத் தெரிந்தால்... அவளின் கதி என்னவாகுமோ?

எல்லாச் சொந்தபந்தங்களும் போன பின் வக்கீல் கண்ணனின் சொத்துக்களைப் பற்றிய உயிலோடு அங்கு வந்தார். கண்ணன் எல்லாச் சொத்துக்களையும் ஆரனின் பெயரில் தான் எழுதியிருந்தார். அந்த வகையில் அவர்

நல்லதையே செய்திருந்தார். ஆனால் சொத்துக்களை நிர்வகிக்கும் உரிமையை வனஜாவிற்குக் கொடுத்திருந்தார். அதுவும் ஆரன் மேஜராகும் வரை தான் செல்லும். அதைக் கேட்டு வனஜா ஒன்றும் பெரிதாகக் கவலைப்பட வில்லை. கண்ணனை கணவனாக நினைக்காத போது அவனின் சொத்துக்கள் அவளுக்கு எதற்கு?

“மேடம்... அவர் இறந்த பின் இந்தக் கடிதத்தை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்...” வக்கீல் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டு செல்ல... அவள் யோசனையுடன் அதைப் பிரித்தாள்.

“அன்புள்ள வனிக்கு,
உன் அன்பு கணவன் எழுதி கொள்வது. நீ நினைக்கலாம் அன்பே இல்லாதவன் அன்பை பற்றிப் பேசுகிறானே என்று. நீ நினைப்பதிலும் தவறில்லை. நான் நடந்து கொண்டதும் அப்படித்தானே... உன்னைக் கவனிக்காமல், உன் சிறு தேவைகளைப் பூர்த்திச் செய்யாமல் நான் ஓடி கொண்டிருந்தது உனக்கு வெறுப்பாக இருந்திருக்கும். ஆனாலும் என்னைப் பொறுத்துக் கொண்டு என்னுடன் வாழ்ந்த உனக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கேன். நான் மூச்சு விட நேரமில்லாமல் ஓடியது யாருக்காக...? உனக்காகவும், நம் குழந்தை ஆரனுக்காகவும் தான். இதை நீ உணர்ந்து கொண்டு நடந்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. உன்னை நான் சந்தேகப்பட்டதற்கு என்னை மன்னித்துவிடம்மா... அன்றிலிருந்து உன்னிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று என் மனம் துடியாய்த் துடிக்கிறது. ஆனால் நீ அதற்குச் சிறிதும் இடம் கொடுக்கவில்லை. இப்போது நான் உணர்ந்துவிட்டேன். என் தவறுகளை நான் திருத்தி கொள்ள நினைக்கையில் நீ பாராமுகம் காட்டுகிறாய். நான் செய்த பாவத்திற்கு எனக்கு இந்தத் தண்டனை வேண்டியது தான். எத்தனையோ முறை உன்னிடம் பேச வந்தும் என்னால் இதைப் பேச முடியாமல் போனது எனது துரதிர்ஷ்டமே. வனி... முடிந்தால் என்னை மன்னித்து விடு...

அப்போது தான் என் ஆத்மா சாந்தி அடையும்... அடுத்த ஜென்மத்திலாவது உன் மேல் காதலை பொழியும் காதல் கணவனாய் நான் வாழ வேண்டும். இது தான் ஆசையும் கூட...
இப்படிக்கு,
இறந்தாலும் உன் மேல் உயிரையே வைத்திருக்கும் உன் அன்பு கணவன்,
கண்ணன்...”

கண்ணின் கடிதத்தைப் படித்து விட்டு வனஜாவின் கண்களில் கண்ணீர் வழிந்தது. காலம் கடந்து அவரது காதலை உணர்ந்து கொண்டவளுக்கு அழுகை தான் வந்தது. ஏனோ தெரியவில்லை வாய் விட்டு கதறி அழ வேண்டும் போல் அவளுக்குத் தோன்ற... கதறியழ ஆரம்பித்தாள். உள்ளே அறையிலிருந்த ஆரன் அவளின் அழுகை சத்தம் கேட்டு வெளியில் வந்தவன் அவளிடம் ஓடினான்.

“அம்மா அழாதீங்க...” வக்கீல் கொடுத்த அப்பாவின் கடிதம் அம்மாவுக்குத் தன் தந்தையின் நியாபகத்தைத் தூண்டி விட்டது என்று அவன் நினைத்துக் கொண்டு அவன் அவளைத் தேற்ற... தாய் தந்தைக்குச் செய்த துரோகம் பற்றி அவனுக்குத் தெரிய வருமேயானால்...?

****

“ராம்... என் மனசாட்சி என்னைக் கொல்லுது ராம்... அவ்வளவு நல்ல மனுசனை கொன்னுட்டோமேன்னு தினம் தினம் நான் செத்து செத்துப் பொழைக்கிறேன். நான் போலீஸ்க்கு போய் அப்ரூவரா மாறலாம்ன்னு நினைக்கிறேன்... எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு. கொஞ்ச நாளில் என் மனசாட்சியே என்னைக் குத்தி கொன்னுரும் போலிருக்கு” தொலைப்பேசியின் வாயிலாக ராமனிடம் வனஜா தன் மனதின் பயத்தைச் சொல்லி புலம்ப... அவனுக்கு எரிச்சலாக வந்தது.

“சும்மா சும்மா பயப்படாதே... நானிருக்கேன்ல... இன்னைக்கு ராத்திரி என் கூடக் கிளம்பி வந்திரு. நாம

வடக்கே எங்கேயாவது போய்ப் பொழைச்சுக்கலாம்” அதற்கு அவன் வழி சொல்ல... ஒரு கணம் அவள் மௌனமாய் இருந்தாள்.

“என்ன பேச்சை காணோம்?”

“வேணாம் ராம்... நம் உறவை இத்தோடு முடித்துக் கொள்வோம். இனிமேல் இது தொடர வேணாம். இறந்த பின்னும் அவரை நாம அசிங்கப்படுத்த வேணாம். இறந்தும் என்னைக் காதலிக்கறேன்னு சொல்லிய அவரின் காதலை நாம களங்கப்படுத்த வேணாம்” அவள் நிதானமாய்ச் சொல்ல...

“என்ன புதுசு புதுசாய் பேசற?” அவன் கோபம் கொள்ள... அதை அவள் சட்டை செய்யாமல்,

“நான் சொன்னது சொன்னது தான் ராம். என்னைப் பார்க்க நீங்க முயற்சிக்க வேணாம். இனி எனக்கு என் மகன் மட்டும் போதும்” அவள் உறுதியாய் கூறிவிட்டு வைக்க... அங்கே ராமனின் மனதில் வன்மம் கூடி கொண்டே போனது. அதன் அளவு என்ன என்பதை வனஜா உணர்ந்த போது?

ராமனிடம் பேசிவிட்டு வந்த வனஜா எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். கணவனின் மனநிலையை அறிந்து கொள்ளாமல்... பொருட்படுத்தாமல் தான்றோன்றித்தனமாக நடந்து கொண்ட தன் கேவலமான நடத்தையை எண்ணியவளுக்குத் தன் மேலேயே அருவருப்பாய் வந்தது. கேவலம் உடல்சுகத்துக்கு ஆசைப்பட்டு ராமனுடன் கூடிய கூடல் எல்லாம் இப்போது அவளுக்கு அருவருப்பைத் தந்தது. தான் செய்த தவறின் வீரியம் அவளுக்குப் புரிய குற்றவுணர்ச்சியில் மனம் தவிக்க ஆரம்பித்தது. கணவனின் கடிதம் மட்டும் அவளுள் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை... மகனின் அன்பும், பாசமும் சேர்ந்து தான் அவள் மனதில் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்தியது.

“டேய் மணி... இன்னைக்கு நீ என் கூட வரணும்டா... இன்னைக்கு ஒரு முக்கியமான வேலையிருக்கு” தன்

நண்பன் மணியிடம் கூறிய ராமன் தன் திட்டத்தை அவனுக்கு விளக்க ஆரம்பித்தான். இந்த மணி வேறுயாருமில்லை... லாரி மோதி கண்ணன் இறந்தாரே... அந்த லாரியை ஓட்டியவன் தான் இந்த மணி.

“என்ன ராம்... இந்த நேரத்தில் வந்திருக்கீங்க? ஆரன் உள்ளே தூங்கி கொண்டு இருக்கிறான். நான் தான் என் முடிவை உங்க கிட்ட சொல்லிட்டேனே...?” பதட்டத்துடன் கேட்ட வனஜா அவன் உள்ளே வருவதற்கு ஏதுவாய் கதவை திறக்க... ராமனோடு மணியும் உள்ளே வர... அவள் பயத்துடன் இருவரையும் பார்த்தாள். தூங்காமல் முழித்துக் கொண்டிருந்த ஆரனும் வீட்டின் அழைப்பு மணி ஓசையில் வெளியில் வந்தவன் அன்னையின் பேச்சில் அப்படியே நின்றான். அவன் உள்மனது ஏதோ சரியில்லை என்பது உணர்த்த தான் இருப்பதைக் காட்டி கொள்ளாதவனாய் மறைந்து நின்று கொண்டான்.

“யார் இவர்?” மணியைச் சுட்டி காட்டி அவள் கேட்க...

“இவன் தான் உன் கணவனை... போட்டு தள்ளியவன்” ‘கணவன்’ என்ற சொல்லுக்கு நன்றாக அழுத்தம் கொடுத்து நக்கலாய்ச் சொன்னான் அவன்.

ராமனின் பேச்சில் ஆரனின் உள்ளம் கொதித்தது. இப்போதே போய், ‘என் அப்பாவையா கொன்றாய் நாயே...’ என்று அவனை அடித்துக் கொன்றுவிடலாமா என்று மனம் துடித்தது.

“அவர் எதற்கு இங்கு?” அவள் முகத்தில் யோசனை வந்தது.

“இப்போதே நீ என்னுடன் வர வேணும். அப்படி நீ வர மறுத்தால் உன் மகனை போட்டு தள்ளிவிட்டு உன்னைக் கூட்டிட்டுப் போகத் தான் நான் வந்திருக்கேன். அப்புறம் இவன் எதுக்கு இங்கேன்னு கேட்டல்ல... இவன் தான் உன் மகனை கொல்ல போகிறான்” சொல்லிவிட்டு ராமன் வாய்விட்டு சிரிக்க... அவள் அச்சத்தில் உறைந்து தான் போனாள். இதைக் கேட்ட ஆரனோ பயத்தில் உடல் நடுங்கி

போனான். என்ன தான் இருந்தாலும் அவன் சிறுவன் அன்றோ?

“இப்போ உன் வசதி எப்படி? என்னுடன் வருகிறாயா? இல்லையா?”

ராமன் எதற்குத் தன் தாயை அழைக்கிறான் என்று புரியாமல் ஆரன் அன்னையின் பதிலுக்காகக் காத்திருந்தான்.

“நமக்கும் இருக்கும் உறவை மறந்திரு ராம்... என்னை மறந்திரு... நான் உன் கூட வரல... என்னை விட்டுரு” அவள் கையெடுத்து கும்பிட்டு கெஞ்ச... அவனோ அதற்குக் கொஞ்சமும் இளகாமல்,

“அது எப்படி நம்ம உறவை மறக்க சொல்ற... ஒரு வருசமா ரெண்டு வருசமா? பத்து வருசம் பழக்கம் நம்மளோடது...” அதைக் கேட்டு ஆரன் அதிர்ந்தான். தன் தாயா அப்படிப்பட்டவள்... இல்லை இல்லை இருக்காது என்று அவன் மனம் இரு மனதாய்த் துடித்தது.

“உன்னை மறந்திருன்னு சொல்றியே... மறக்க கூடிய உறவா நம்ம உறவு? உன் கழுத்தில் தாலி கட்டியிருக்கும் உன் புருசன் நான். என்னை விட எவனோ பெத்த மகனுக்காக நீ ரொம்பத் தான் உருகுறியே”

அவனின் பேச்சில் ஆரன் மனமொடிந்து போனான். தாய்க்கும், ராமனுக்கும் உள்ள உறவை அவன் புரிந்து கொண்டான். இப்படிப்பட்ட கேவலமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் அன்னையை நினைத்து அவன் மனதுக்குள் அருவருத்துப் போனான். இப்படியும் ஒரு பெண் இருப்பாளா என்று மனதுக்குள் மாய்ந்து போனான்.

“வாடி...” என்று அவள் கையைப் பிடித்து ராமன் இழுக்க...

“என்னைக் கொன்றாலும் நான் இங்கிருந்து வர மாட்டேன்...” அவள் பிடிவாதமாய்க் கூற...

“அப்போ உன் முடிவு தான் என்ன?” நிதானமாய்க் கேட்டான் ராமன்.

“நான் ஏற்கெனவே சொன்னது மாதிரி போலீசுக்கு போய் அப்ரூவரா மாறப் போறேன். இந்த மன உறுத்தலோட என்னால் வாழ முடியாது” அவள் தீர்மானமாய்ச் சொல்ல...

“அப்போ என்னையும் சேர்த்து காட்டி கொடுக்கப் போற... அப்படித்தானே?”

“உங்களை மட்டுமல்ல... இதில் நானும் சம்பந்தப்பட்டிருக்கேன்... என்னையும் சேர்த்து தான் காட்டி கொடுக்கப் போகிறேன்”

“மணி... இவளிடம் பேசி பிரயோஜனமில்லை... நீ வந்த காரியத்தைக் கவனி...” ராமன் மணிக்கு கட்டளையிட...

“ஐயோ ஆரனை ஒன்றும் செய்திடாதீங்க...” அவள் பதற...

“அவனை எதுக்கு நாங்க கொல்ல போறோம்...? நாங்க கொல்ல போறது உன்னைத் தான். என்னைக் காட்டி கொடுக்க நினைத்த பிறகு உன்னை உயிருடன் விட்டு வைக்க நான் என்ன முட்டாளா? அவனை நாங்க கொன்னு... அதைப் போலீசில் நீ சொல்லி... இது எல்லாம் தேவையா? அதான் மொத்தமா உன்னைப் போட்டுட்டா பிரச்சினை தீர்ந்து விடும்” சொல்லிவிட்டு அவன் அவளருகில் வந்தான். காதலிலும், காமத்திலும் அவசரப்பட்டவன் இன்று அவள் உயிரை எடுப்பதில் அவசரப்பட்டான்.

மணியும் சேர்ந்து அவளருகே வர... அவள் பயத்தில் கத்த... ராமன் அவசரமாய்க் கத்திய அவள் வாயை இறுக பொத்தினான். ஆரனுக்கு நடக்கும் விசயங்களை ஜீரணிக்கவே நிறைய நேரம் தேவைப்பட்டது. ஆனால் அன்னையின் அலறல் அவன் காதில் விழ... அதற்கு மேல் ஆரன் சிறிதும் தாமதிக்கவில்லை. மறைவில் இருந்து வெளியில் வந்தவன் இருவரின் மீதும் பாய்ந்தான்.

“மணி இவனை நீ பார்த்துக்கோ... இவளை நான் பார்த்துக்கிறேன்...” கர்ஜித்த ராமன் வனஜாவின் கழுத்தை

நெறிக்கப் போக... மணி ஆரனை துவம்சம் பண்ண போனான்.

சிறுவன் ஆரனால் மணியை எதிர்த்து போராட முடியவில்லை. மணி அவன் வயிற்றில் விட்ட ஒரு குத்தில் அவன் தூர போய் விழுந்தான். விழுந்தவன் கண்ணில் உலோகத்தில் இருந்த பாவைவிளக்குக் கண்ணில் பட... தன்னருகில் வந்த மணியின் கையில் அகப்படாமல் கீழே குனிந்தவன் நிமிரும் போது அவன் கையில் அந்தச் சிலை இருந்தது. மணி எதிர்பாராத தருணத்தில் அவன் தலையில் ஆரன் ஓங்கி அடிக்க... அவன் பெருங்குரல் கொடுத்துக் கொண்டு அலறியபடி கீழே விழுந்தான்.

மணியின் அலறல் சத்தம் கேட்டு ராமன் அவனைத் திரும்பி பார்க்க... ரத்த வெள்ளத்தில் கிடந்த அவனை நோக்கி... “மணி...” என்று கத்தி கொண்டே அவன் ஓடி வர... வனஜாவும் ஆரன் செய்த காரியத்தைக் கண்டு அதிர்ந்தவளாய்... “ஆரா...” என்று அலறினாள்.

ராமன் மணியின் அருகில் மண்டியிட்டு அவனுக்கு உயிர் இருக்கிறதா என்று ஆராய... அதற்கு மேல் ஒரு கணம் கூடத் தாமதிக்காமல் ஆரன் அந்த உலோக சிலையைக் குனிந்திருந்த ராமனின் தலையில் ஒரே போடாய் போட... அவன் உடல் துடிக்கத் துடிக்கத் தன் உயிர் துடிப்பை நிறுத்தியது. ஒரு நல்லவனுக்குச் செய்த துரோகமோ இல்லை மாற்றான் மனைவியை நோக்கிய பாவமோ அவன் துடிதுடித்து இறந்தான்.

“ஆரா... என்னடா இப்படிப் பண்ணிட்ட...” வனஜா அழுதபடி அவனை அணைக்க வர... அவள் கையில் அகப்படாமல் தள்ளி நின்றவன் முகத்தில் அருவருப்பைத் தேக்கியபடி அவளைப் பார்த்தான். அவனின் பார்வையிலேயே அவனுக்கு விசயம் தெரிந்து விட்டது என்பதை அறிந்தவள் துடித்துப் போனாள். அவனின் அருவருப்பான பார்வையில்... அந்தக் கணம் தான் ஏன் இன்னமும் உயிரோடு இருக்கிறோம்? என்று அவள் மனதுக்குள் வேதனைப்பட்டுப் போனாள்.

“ஆரா...” அவள் ஏதோ சொல்ல வாயெடுக்க... கையமர்த்தி அவளைத் தடுத்தவன், “உங்களையும் இதே போல் கொலை செய்ய எனக்கு ஒரு நொடி போதாது. ஆனால் அதைச் செய்ய விடாமல் தடுப்பது என் உடம்பில் ஓடும் என் அப்பாவின் ரத்தம். அந்த நல்ல மனிதருக்காக உங்களை உயிருடன் விடறேன். அதை விட என்னைப் பத்து மாதம் சுமந்து பெத்த பாவத்திற்கு உங்களைச் சும்மா விட்டுட்டு போறேன்... பெண் என்று சொல்லுக்கே அருகதையில்லாதவங்க நீங்க...” என்றவன் வாயில் இருந்த ஒட்டுமொத்த எச்சிலையும் கூட்டி, “தூ...” என்று அவள் முகத்தில் காறி உமிழ்ந்தவன் அவளைத் திரும்பியும் பாராமல் வேகமாய் அங்கிருந்து வெளியேறி காவல்நிலையத்துக்குச் சென்று சரணடைந்தான்.

“என் தந்தையைக் கொன்றவர்கள் என் அன்னையைக் கொல்ல வரும் போது... நான் அவர்களைக் கொன்றுவிட்டேன்” அவர்கள் கேட்ட கேள்விக்கு அவன் இந்தப் பதிலை தான் கூறினான்.

“ஆரா தம்பி... அவங்க உங்க அம்மாவை மானபங்கப்படுத்த வந்தாங்க... அவங்களைக் காப்பாத்த தான் இந்த மாதிரி செய்தேன்னு நீங்க சொன்னா... நீ வெளியில் வருவதற்கு வாய்ப்பு இருக்குப்பா...” அவனின் வக்கீல் எவ்வளவோ சொல்லி பார்த்தார்... ஆனால் அவன் அதை மறுத்துவிட்டான். அன்னையைக் காரணம் காட்டி வெளியில் வர அவனுக்கு விருப்பமில்லை. அந்தளவுக்கு அவரை வெறுத்தான் அவன். வனஜாவும் தன் பங்கிற்கு அவனைக் கெஞ்சி தான் பார்த்தார். அவன் அவரிடம் முகம் கொடுத்து பேச மறுத்துவிட்டான். மகனின் புண்ணியத்தால் வனஜாவின் தவறுகள் அம்பலத்தில் ஏறாமல் அவள் தப்பித்தாள்.

வழக்கு நீதிமன்றத்துக்கு வர... அங்கும் அவன் இதையே சொல்ல... அவனுக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டது. அவனின் வயதை கருத்தில் கொண்டு இரட்டை ஆயுள் தண்டனை ஒற்றை ஆயுள் தண்டனையாய் குறைக்கப்பட, மற்றும் அபராத தொகையும் செலுத்த வேண்டும் என்று

தீர்ப்பு உறுதி செய்யப்பட அதை முகத்தில் எந்தவித உணர்வும் இல்லாமல் கேட்டுக் கொண்டிருந்தான் அவன்.

சிறையிலிருந்த காலத்தில் ஒரு தடவை கூட அவன் தன் தாயை பார்க்க விரும்பவில்லை. சிறையிலிருந்த காலக்கட்டம் அவன் வாழ்வில் மிகுந்த சிரமமான காலக்கட்டம். வேன்றுமென்றே வம்பிழுக்கும் அடாவடி சிறுவர்களிடம் அவனது மௌனமே பதிலாகக் கொடுக்கப்பட்டது. அதற்காக அவனை அவர்கள் ரத்தம் வர அடித்த போதும் அவன் அதையும் பொறுத்துக் கொண்டான். அப்படி அவன் மனதின் வலியோடு வாழ்வை எதிர் கொண்ட போது தான் நல்லசிவத்தின் அறிமுகம் அவனுக்குக் கிடைத்தது. அதன் பின் வாழ்வில் வெளிச்சம் வர ஆரம்பித்தது.

என்றும் போல் சிறையிலிருந்த சிறார்களுக்கு யோகா, தியானம் பயில்விக்க அங்கே வந்த நல்லசிவம் முதன்முறையாய் ஆரனை கண்டார். கையிலிருந்த காகிதத்தாளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அவனைப் புதினமாய்ப் பார்த்தவருக்கு அவனின் அமைதி வித்தியாசமாகப் பட்டது.

“உன் பேர் என்னப்பா...?” அவர் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் அவரை நிமிர்ந்து பார்த்தவன் அதே வேகத்தில் தலையைக் குனிந்து கொண்டான்.

“என்ன பேப்பர் அது?” அவன் கையிலிருந்ததை வாங்கிப் பார்த்தவர்... அவனின் புகைப்படத்துடன் பத்தாம் வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் அவன் முதல் மாணவனாய் வந்திருந்த செய்தியை அது தாங்கியிருந்தது. அவர் ஆச்சிரியத்துடன் அவனைப் பார்க்க... அவனோ இன்னமும் தலையைக் குனிந்து கொண்டு தான் இருந்தான்.

“வாழ்த்துக்கள் ஆரா...” அவர் அவனுக்கு வாழ்த்து தெரிவிக்க... அதில் அவன் முகம் லேசாய் மலர்ந்தது.

“யோகா கிளாஸ்க்கு வராமல் இங்கே என்ன பண்ணிக்கிட்டிருக்க ஆரா... வா போகலாம்” என்று அவர்

அவனை அழைக்க... அவன் எதற்காக இங்கு வந்தான் என்று கேட்காமல் அவர் பேசியது அவனுக்கு இதத்தை அளிக்க எழுந்து அவருடன் இணைந்து நடந்தான்.

அதன் பின் வந்த நாட்கள் அவனுக்கும், அவருக்கும் இடையில் நட்பு பலப்பட... தன் மனதில் இருந்த துக்கத்தை எல்லாம் அவரிடம் அவன் கொட்டினான். அவனின் கதையைக் கேட்ட அவருக்கு மிகுந்த வருத்தமாக இருந்தது. ஆனாலும் அவர் அவனின் தாயை பற்றித் தூற்றி பேசவில்லை. அதை விட ஆரனின் முன்னேற்றத்தில் தன் கவனத்தைச் செலுத்தினார். அவனின் படிப்பு ஆர்வம் அவருக்குத் தெரிந்ததால் அதில் அவன் முன்னேற அவர் ஊக்குவித்தார்.

சிறையில் இருந்தபடியே கல்லூரி படிப்பு படித்த அவனுக்கு ஏனோ கணினி மேல் தீராத காதல் வந்தது. அவனின் ஆர்வம் அறிந்து நல்லசிவம் கணினி பற்றிய அடிப்படை தகவல் அடங்கிய புத்தகத்தை வாங்கி அவனுக்குக் கொடுக்க... எளிய நடையில் எழுதியிருந்த அந்தப் புத்தகம் அவனுக்குப் பிடித்துப் போக... அந்தக் குறிப்பிட்ட எழுத்தாளர் எழுதிய புத்தகத்தை அவரை வாங்கி வர செய்து அவன் படிக்க ஆரம்பித்தான். அவரும் அவனின் விருப்பத்தை அப்படியே நிறைவேற்ற... அப்போது தான் கவனித்தான் புத்தகத்தின் விலையை. தனக்காக வாங்கிக் கொடுக்கும் அவரை மேலும் சிரமப்படுத்தாமல் இருக்க... அந்தப் புத்தகத்தை எழுதியவருக்குத் தன் நிலையை விவரித்து அவன் ஒரு கடிதம் போட... அவரும் அவனுக்கு உடனே பதில் போட்டார்.

அவர் தான் தற்போது அவன் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் கம்பெனியின் முதலாளி. அவனின் நிலையை அறிந்து புத்தகத்தைத் தந்து அவனுக்கு உதவியளித்ததோடு மட்டும் இல்லாமல்... அவனுக்குக் கணினியில் சிறப்புப் பயிற்சி கொடுக்கவும் முயற்சி எடுத்தார். அதன் விளைவு ஆரன் கணினி பயிற்சியில் நன்கு தேர்ச்சி பெற்றான். இதற்கிடையில் காந்தி ஜெயந்தியை ஒட்டி நாடு முழுவதும் மூவாயிரம் கைதிகளை

விடுவிக்க இந்திய அரசாங்கம் முடிவு செய்த போது... நன்னடத்தைக் காரணமாக ஆரனும் அவர்களில் ஒருவனாக விடுவிக்கப் பட்டான். கிட்டத்தட்ட பதினைந்து வருடங்கள் கழித்து அவன் வெளி உலகத்தைப் பார்த்தான்.

நல்லசிவம் தன்னுடன் வந்து தங்கியவனை அவன் ஊருக்கு செல்ல சொல்லி வற்புறுத்த அவன் இதில் மட்டும் அவர் பேச்சை கேட்பதாய் இல்லை என்பது போல் அங்கே போகவில்லை. அவனுக்குப் பயிற்சி கொடுத்த அந்தக் கம்பெனியே அவனுக்கு வேலையும் போட்டு கொடுக்க... அதன் பின் அவன் அந்த ஊரை மறந்தான்... உறவை மறந்தான். ஆனால் அது கொடுத்த ஆறாத ரணத்தை மட்டும் அவன் மறக்கவில்லை.

ஒரு பெண்ணின் மனக்கட்டுப்பாடில்லாத வாழ்க்கையால்... சுயநலத்தால்... ஒரு குடும்பத் தலைமுறையே வேரோடு வெட்டி சாய்க்கப்பட்டு விட்டது. இனி அது ஆலமரம் போல் விழுதையே வேராகக் கொண்டு நிமிர்ந்து நிற்குமா?

“மயூ என்ன செய்தும்மா...?” அதிகாலையில் எழுந்தமர்ந்து ஜன்னல் வழியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த மயூரியின் அருகில் வந்த சுமதி கவலையுடன் கேட்க... கண்கள் கலங்க உதடுகள் துடிக்கத் திரும்பி பார்த்தவளின் முகம் கண்டு அவர் மனதுக்குள் துணுக்குற்றார்.

“என்னடா மயூம்மா...?” அவர் கேட்டதும் தான் தாமதம் அவர் தோளில் சாய்ந்து தேம்பி தேம்பி அழ ஆரம்பித்து விட்டாள் அவள். அவளின் அழுகையில் மனம் பதறி போனவராய்,

“மாசமா இருக்கும் பொண்ணு இப்படி அழலாமா? இந்த மாதிரி நேரத்தில் நீ சந்தோசமாயிருக்க வேணாமா? உன் மனசுல அப்படி என்ன கவலைம்மா?”

“அவ... அவர்...” அழுகையில் அவள் திக்க... அவள் தன் கணவனைத் தான் சொல்கிறார் என்பதைப் புரிந்து கொண்டவர்,

“மாப்பிள்ளைக்கு என்னம்மா?”

“நேத்திலிருந்து அவர் ஃபோன் பேசவேயில்லை... நான் பண்ணினாலும் அவர் எடுக்க மாட்டேங்கிறார். எனக்கு அவர் நியாபகமா இருக்குது” மனதை மறையாது உரைத்தவளை கண்டு அவருக்குமே பரிதாபமாகத் தான் இருந்தது. அவரும் இந்த வயதை தாண்டி தானே வந்திருக்கிறார். அவருக்குத் தெரியாதா மகளின் மனது?

“வேலை ஏதாவது இருந்திருக்கும்... இதுக்குப் போய்க் கவலைப்படலாமா மயூ...?” மகளை அவர் சமாதானப்படுத்த... அதற்குச் சரியென்று அவள் தலையசைத்தாலும் மனதுக்குள் ஏதோ ஒன்று அவளைக் கலவரப்படுத்த தான் செய்தது.

“அம்மா... உங்க பெரிய பொண்ணைக் கொஞ்சியது போதும் எனக்குக் காலேஜ்க்கு நேரமாயிருச்சு... டிபன் செய்ங்க போங்க...” குரல் கொடுத்தபடி அங்கே வந்தாள்

மஞ்சரி. அக்காவை கண்டவள் அவளிடம் பேசாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

“ஏண்டி... மயூ நேத்து தான் ஊரிலிருந்து வந்திருக்கா... இன்னைக்கு ஒருநாள் லீவ் போட்டுட்டு அவ கூட இருக்கலாம்ல...” அலுத்துக் கொண்டார் சுமதி.

“அம்மா... ஒரு லெக்சரர் பேசுற மாதிரியா பேசுறீங்க... சாதாரண அம்மா மாதிரி பேசுறீங்க... இட்ஸ் டூ பேட்...”

“முதல்ல நான் அம்மா... அதுக்கப்புறம் தான் லெக்சரர் எல்லாம்... வாயடிக்காம முதல்ல காலேஜுக்கு லீவ் போடு...” வெகுநாட்களுக்குப் பின் வீடு வந்திருக்கும் மகளினால் இழந்த மகிழ்ச்சி திரும்பக் கிடைத்ததால் உண்டான சந்தோசத்தில் அவர் பேச...

“நான் யாருக்காகவும் லீவ் போட மாட்டேன்...” மயூரியை முறைத்தபடி அவள் கூற... அவளின் பேச்சில் மயூரியின் மனம் வாடியது.

“மஞ்சு ஏண்டி இப்படிப் பேசுற... நான் யாரோவா?”

“எங்களைப் பத்தி கவலைப்படாம ஓடிப் போன நீ யாரோ இல்லாம... வேறு யாராம்?” அவள் சொல்லி முடிக்கவில்லை... சுமதி அவள் கன்னத்தில் பளாரென்று அறைந்தார்.

“மஞ்சு... அக்காவே ஆனாலும் வார்த்தையை அளந்து பேசணும். வீணே கொட்டிட்டு திரும்ப வருந்தாதே...” அவர் எச்சரிக்க...

“அம்மா...” மஞ்சு அதிர்ந்து போய் அவரைப் பார்த்தாள்.

“என்ன தான் மயூ மேல் தப்பிருந்தாலும் உன் அக்காங்கிற உறவு இல்லாமல் போகுமா? இல்லை நீ அவள் தங்கைங்கிற உறவு விட்டு போயிருமா? வேணாம்ன்னா தூக்கி தூர போட்டுட்டு போற பந்தமில்லை இது... புரிஞ்சதா? மயூ கிட்ட சாரி கேளு...” அன்னையின் பேச்சில் தவறை உணர்ந்தவளாய்,

“என்னை மன்னிச்சுக்கோ மயூ... உன்னைப் பிரிஞ்சி நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா? அந்தக் கோபத்தில் தான் பேசிட்டேன்...” என்ற தங்கையை...

“என் கிட்ட கோபப்படாம வேறு யார் கிட்ட கோபப்படப் போற மஞ்சு... நீ இப்படி உரிமையோட திட்டுறது எனக்கு ரொம்பச் சந்தோசமாயிருக்கு. நான் செஞ்ச தப்பும் அப்படிப்பட்டது தான்” என்ற மயூரி அவளை அணைத்து கொண்டாள். மகள்கள் இருவரின் பாசத்தில் மனம் நெகிழ்ந்து போனார் சுமதி.

அங்கே ஆரனும் மயூரியின் நினைவில் தவியாய் தவிக்கத் தான் செய்தான். அவளிடமிருந்து வந்த அழைப்புகள், குறுஞ்செய்தி எல்லாம் எண்ணிலடங்காதவை...! ஒரு நாள் இரவு பொழுது தாண்டுவதற்கே இத்தனை அழைப்புகள் என்றால்... இன்னும் மூன்று நான்கு மாதங்களுக்குள்...? தான் எடுக்காமல் இருப்பதால் ஏதேனும் தவறாக நினைத்து கொள்வாளோ? தன் மீது கோபம் கொள்வாளோ? இப்படிப் பல யோசனைகள் அவன் மனதில் ஓடினாலும்... அவளின் அழைப்புக்குப் பதில் பேசவும் இல்லை... அவளை அழைக்கவும் இல்லை. தன்னவளை விட அவளின் தந்தை கூறிய வார்த்தை தான் பெரியதா? என்று கூட அவன் மனம் யோசிக்கத் தான் செய்தது. ஆனாலும் அதற்கான விடை அவனிடத்தில் இல்லை.

ஆனால் அதற்கான விடை அவனின் ஆழ்மனதில் இருந்தது. கடந்தகாலத்தில் அவன் பட்ட அடி அவனால் யார் மீதும் முழுமையாய் அன்பு, நம்பிக்கை வைக்க முடியவில்லை. ஆனால் அதை அவன் உணரவில்லை. அவனைப் போல மனநிலையில் இருக்கும் ஒருவன் ஒரு பெண்ணை விரும்பி, நம்பிக்கை வைத்து காதலித்ததே அதிசயம். அப்படிப்பட்டவன் தன்னவள் தன்னிடம் மட்டுமே அன்பை பொழிய வேண்டும்... அவளுக்குத் தான் மட்டுமே முதன்மையாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் ஆழ வேரூன்றி இருந்தது அவனுக்கே தெரியவில்லை. அவன் தன் மனதை ஆராயவும் முற்படவில்லை. மாமனாரின் இந்த விசப்பரீட்சைக்கு

அவன் தயாரானது கூட அவளின் அன்பை பரிசோதிக்கத் தான் என்பதை அவன் உணரவில்லை. அதை அவன் உணர்வானா? உணரும் போது...?

****

“அண்ணி... எப்படி இருக்கீங்க?” ஆர்ப்பாட்டமாய் மயூரியின் வீட்டினுள் நுழைந்தான் வருண்.

“வாங்க வருண்...” மயூரி அவனை வரவேற்க...

“வந்தேன்... வந்தேன்...” என்று சொல்லி கொண்டே அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான் அவன்.

அவள் தன் தந்தையிடம் அவனைப் பற்றிச் சொல்ல... “வணக்கம்ப்பா...” என்று அவர் சொல்ல...

“வணக்கம்ங்க...” என்றவன் அதோடு வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருந்திருக்க வேண்டும்... அதை விட்டுவிட்டு, “நான் தான் தோஸ்த்க்கும், அண்ணிக்கும் மேரேஜ் முடிஞ்ச புதுசில் ஹெல்ப் பண்ணினேன். தோஸ்துக்கு நான் ரைட் ஹன்ட்ன்னா பார்த்துக்கோங்க... இப்பவும் தோஸ்த் சொல்லி தான் அண்ணி இங்கே வந்திருக்கிற விசயமே எனக்குத் தெரியும்” அவன் பேச பேச...

‘நீ தானா அந்தக் குயில்...?’ என்ற ரீதியில் அவனை முறைத்து பார்த்தார் ராகவன். அவரின் முகம் அந்தளவுக்குக் கடுமையைக் காட்டியது.

அவர் முகம் மட்டும் மாறவில்லை... மயூரியின் முகமும் மாறியது. அது ஏனென்றால் கணவன் தன் அழைப்பை எடுக்கவும் இல்லை... அதே போல் அவனும் அவளை அழைக்கவில்லை... அப்படியிருக்கும் போது வருணுக்கு மட்டும் அவன் பேசியிருக்கான் என்றால்...? எங்கேயோ இடிப்பது போல் அவளுக்குத் தோன்ற... அதை வருணிடம் சொல்ல முடியாமல் மனதுக்குள் போட்டு புதைத்து கொண்டாள்.

வருண் ஏதேதோ பேச... அங்கிருந்த மயூரியும் ராகவனும் வெவ்வேறு மனநிலையில் எதையோ யோசித்துக் கொண்டு பதிலளிக்க... அவனிடம் தெளிவாய் பேசியது சுமதி மட்டுமே. கடைசியில் வருண் விடைபெற்றுக் கொண்டு வெளியில் வந்தவன் தன் பைக்கில் ஏறும் போது சரியாக அங்கே வந்து சேர்ந்தாள் மஞ்சரி.

“ஹேய் நீ எங்கே வந்த?” அவனைப் பார்த்த கோபத்தில் அவள் பல்லை கடிக்க...

“நிச்சயமா உன்னைப் பார்க்க வரல...” பதிலுக்குக் கூலாக அவன் பதிலளிக்க...

“அப்படியொரு நினைப்பு வேற இருக்கா?” எரிச்சலுடன் மொழிந்தவள்... “இப்போ எதுக்கு இங்கே வந்த?” என்றவள்... “நீ... நீ... மயூவை பார்க்க தானே வந்த... அப்படின்னா அவளைப் பத்தின எல்லா விவரமும் உனக்குத் தெரியும்... அப்படித்தானே?” அவள் கூர்மையான பார்வையுடன் கேட்க...

“என் டாலிக்கு இவ்வளவு அறிவு இருக்கும்ன்னு எனக்குத் தெரியாம போச்சே... ச்சு... ச்சு..” அவன் புகழ்வது போல் அவளை மட்டம் தட்ட... அவளின் முகம் அவமானத்தில் சிவந்தது.

“ஏய்... என் அறிவுக்கு என்னடா குறைச்சல்?” மீண்டும் அவன் மேல் பாய...

“எதுவுமே குறைச்சல் இல்லை டாலி...” நக்கலாய் கூறியவன் அவளை மேலிருந்து கீழாக நிதானமாய் ஒரு பார்வை பார்க்க... அதில் ஆத்திரம் அடைந்தவள்...

“யூ... யூ...” அவளின் பொறுமை காற்றில் பறக்க... அவனை அடிப்பதற்கு ஏதுவாக அருகில் ஏதும் இருக்கிறதா? என்று சுற்றும் முற்றும் அவள் தேட... அதைக் கண்டு வாய் விட்டு அவன் சிரிக்க...

“என்ன கொழுப்பாடா உனக்கு... என் அப்பாக்கு மட்டும் நீ தான் ஹெல்ப் பண்ணினேன்னு தெரிஞ்சது அவ்வளவு

தான்...”

‘ஓ... அதான் மாமனார் என்னை அவ்வளவு அன்பா பார்த்தாரா? இதுக்கு மேலும் இங்கே இருந்தா அப்பாவும், மகளும் நம்ம முதுகுல டின் கட்டினாலும் கட்டிருவாங்க... வருண் எஸ்கேப்...’ மனதுக்குள் நினைத்தவன் பைக்கை கிளப்பித் தயாராக வைத்துக் கொண்டு,

“டாலி... ஒரு உண்மையைச் சொல்லட்டுமா?’ என்றவனை முறைத்து பார்த்தவளை கண்டு கொள்ளாது, “நான் உண்மையில் உன்னைப் பார்க்க தான் வந்தேன்... அண்ணியைப் பார்க்க வந்தது சும்மா ஒரு சாக்கு தான். அன்னைக்குக் கோவிச்சிட்டு போன என் டாலி எப்படி இருக்காளோன்னு பார்க்க ஓடோடி வந்தேன்” என்றவன், “டாலி ஐ லவ் யூ செல்லம்...” கண்ணைச் சிமிட்டி சொல்லியவன் அவளின் பதிலை எதிர்பாராமல் பைக்கை கிளப்பிக் கொண்டு வேகமாகச் சென்றான்.

“யூ... ராஸ்கல்... அடி வாங்குவதுக்குப் பயந்திட்டு கோழை மாதிரி ஓடுது பாரு லூசு” கோபத்துடன் முணுமுணுத்தவள் வீட்டினுள் சென்றாள். மயூரியின் காதல் திருமணத்தால் வீட்டில் ஏற்பட்ட விளைவுகளைக் கண்டு அவளின் மனதில் ஏற்பட்ட வருண் மீதான அந்தச் சிறு ஈர்ப்பு கூடக் காணாமல் மறைந்து போயிருந்தது.

வரவேற்பறையில் இருந்த தொலைப்பேசி அடித்துக் கொண்டிருக்க மயூரி தான் குழந்தை சுமந்திருப்பதைக் கூட உணராமல் ஓடி வந்து அதை எடுக்க... மறுமுனையில் ராகவனின் நண்பர் ஒருவர் பேச... அதைத் தந்தையிடம் கொடுத்துவிட்டு ஏமாற்றம் கவிழ்ந்த முகத்துடன் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தாள். ராகவன் மகளின் முகத்தைப் பார்த்துக் கொண்டே தன் நண்பரிடம் சீக்கிரம் பேசிவிட்டு தொலைப்பேசியை வைத்தவர் அவள் அருகில் சென்று அமர்ந்தார்.

“என்ன மயூ... ஏன் முகமெல்லாம் வாடியிருக்கு?” மகளின் முகவாட்டம் எதனால் என்று தெரிந்திருந்தும் ஒன்றும் அறியாதவர் போல் அவர் வினவ...

“அவர் என்னோடு பேசி மூணு நாள் ஆயிருச்சுப்பா... வருண் கூட எல்லாம் பேசியிருப்பவர் எனக்கு மட்டும் ஏன் பேசல? எனக்குத் தினமும் ஃபோன் பண்றேன்னு சொன்னவர்... இப்போ இப்படி நடந்துக்கிறாருன்னா... எனக்கு என்னமோ பயமாயிருக்கு” அவள் முகத்தில் அப்பட்டமாய்க் கவலை தெரிந்தது.

“எதுக்குப் பயம்மா...?” ராகவன் மகளைக் கூர்மையுடன் பார்த்தார். அவரின் அனுபவ அறிவு ஏதோ சரியில்லை என்றது.

“அவர் இந்த மாதிரி பேசாமலிருந்தால்... அவர் கோபமா இருக்காருன்னு அர்த்தம்... இப்போ என் மீது என்ன கோபம்ன்னு தெரியல? நான் எந்தத் தப்பும் செய்யலையே...” பரிதாபமாய்ச் சொன்ன மகளை நினைத்து அவருக்குப் பாவமாயிருந்தது. அதேசமயம் அந்த ஆரன் மேல் கோபம் கோபமாய் வந்தது.

“அப்போ அடிக்கடி அவன் உன் மேல் கோபப்பட்டு இருக்கான்... அப்படித்தானே...” கேள்வி கேட்டுக் கொண்டே அவளை ஆழ்ந்து பார்க்க...

“அப்பா...” தந்தை தன் கணவனை ஏகவசனத்தில் பேசியது கேட்டு அவள் திகைத்து போய் அவரைப் பார்த்தாள்.

“நான் கேட்ட கேள்விக்கு உண்மையா பதில் சொல்லும்மா?”

“இப்போவெல்லாம் அப்படிக் கிடையாது...” தலையைக் குனிந்து கொண்டு அவள் சொல்ல...

“இப்போ கிடையாதுன்னா... முதல்ல அந்த மாதிரி நடந்துக்கிட்டு இருந்தானா?”

“அவரை ஏன்ப்பா அவன் இவன்னு சொல்றீங்க? என்ன தான் இருந்தாலும் அவர் உங்க மாப்பிள்ளை இல்லையா?” அவளின் பேச்சில் அவளின் அடக்கப்பட்ட கோபம் வெளிவந்தது.

“யாருக்கு யார் மாப்பிள்ளை... உன்னை அவன் கல்யாணம் பண்ணியிருந்தாலும் ஒரு கொலைக்காரன் எனக்கு மாப்பிள்ளையாக ஒரு போதும் முடியாது?” அவரையும் அறியாமல் அவரின் மனம் வெளிவந்தது. அவரின் பேச்சு அவளுக்கு அதிர்ச்சியை அளித்தது. தந்தை மனதில் இன்னமும் தன் கணவன் மேல் இவ்வளவு வன்மம் இருக்கும் என்று அவளுக்கு இப்போது தான் தெரிந்தது.

“அதுக்கு ஏதாவது தகுந்த காரணமிருக்கும்ன்னு என் மனசுக்கு தோணுதுப்பா. தேவையில்லாம அவரை இப்படிப் பேசாதீங்க? அவர் என்ன மாதிரி நிலையில் இப்படி ஒரு காரியம் செய்தாரோ?” தன்னவனைப் பற்றி அவருக்கு உணர்த்திவிடும் வேகத்தில் மயூரி பேச... அவள் தன் கணவனுக்குச் சாதகமாகப் பேசுவது கண்டு அவரின் ஆத்திரம் எல்லையைக் கடந்தது.

“மயூ...” அவரின் காட்டுக்கத்தலில் உள்ளே இருந்த சுமதி ஓடிவந்தார். நல்லவேளை மஞ்சரி கல்லூரி சென்றிருந்தாள்.

“என்னங்க... ஏன் சத்தம் போடுறீங்க?” மனைவியின் பேச்சை காதில் வாங்கிக் கொள்ளாமல் அவர்,

“பின்னே அவன் என்ன நாட்டு விடுதலைக்காகவா போராடி ஜெயிலுக்குப் போனான்?” ஆக்ரோசமாய் அவர் கர்ஜிக்க...

“என்னங்க இது? மாசமாயிருக்கும் பொண்ணு கிட்ட போய் இது என்ன பேச்சு?” கணவரை சுமதி கடிய...

“நீ பேசாமயிரு சுமி... இன்னைக்கு எனக்கு இரண்டில் ஒரு பதில் தெரிஞ்சாகணும்” மனைவியை அடக்கியவர்...

“சொல்லு மயூ... நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு?”

“நிச்சயம் நீங்க கேட்ட கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியும்...” நிமிர்ந்து அமர்ந்தவள் நேராய் அவரைப் பார்த்தவாறு... “அவர் எந்தவித குற்றமும் செய்துவிட்டு ஜெயிலுக்குப் போகல... அதை மட்டும் என்னால் உறுதியாய்

சொல்ல முடியும்” தன்னவன் மீது கொண்ட நம்பிக்கையில் அவள் கம்பீரமாய்க் கூற...

“குற்றம் பண்ணினவங்க தான் ஜெயிலுக்குப் போவாங்க... இது கூட உனக்குத் தெரியாதா மயூ?” அவரின் குரலில் ஏகத்துக்கும் எகத்தாளம் எட்டி பார்த்தது.

“உண்மை தான் இல்லைங்கல்ல... அப்படி அவர் கெட்டவராய், தப்பு செய்துட்டு ஜெயிலுக்குப் போயிருந்தா... வெளியில் வரும் போது அவர் ரௌடியா தான் மாறியிருப்பார். இப்படிச் சாப்ட்வேர் எஞ்சினியராகும் அளவுக்குப் படிச்சியிருக்க மாட்டாரு... அதிலிருந்தே புரியலையா அவர் நல்லவர் தான்னு”

“மயூ... சொல்றதும் உண்மையா இருக்கும்ங்க... அதுவுமில்லாமல் இப்போ அவர் மயூவோட கணவர்... அவளின் குழந்தைக்குத் தகப்பன். இந்த மாதிரி நேரத்தில் நீங்க இப்படிப் பேசுறது நல்லாயில்ல...” மகளின் பேச்சை ஆமோதித்துச் சுமதி பேச... ராகவன் மனைவியை முறைத்தார்.

“நீ வாயை மூடு...” மனைவியிடம் எரிந்து விழுந்தார் அவர்.

“அப்பாவை பேச விடுங்கம்மா...” தாயிடம் கூறிய மயூரி... தந்தையிடம், “அப்பா நீங்க அவர் கிட்ட ஏதும் தவறா பேசினீங்களா? அதனால தான் அவர் என் கூடப் பேசாமலிருக்காரா?” தந்தையின் மனதை சரியாகக் கணித்தாள்.

“ஆமாம் நான் அவன் கிட்ட பேசினேன் தான்... உன் கூட ஃபோனில் பேச கூடாது... உன்னைப் பார்க்க வர கூடாதுன்னு சொன்னேன் தான்...”

“ஏன்ப்பா அப்படிச் சொன்னீங்க?” கண்களில் கண்ணீர் மல்க அவள் கேட்க...

“ஏன்னா நீ என் மகள்... உனக்கு யாரை கல்யாணம் பண்ணி கொடுக்கணும்ன்னு எங்களுக்குத் தெரியும். இடையில் வந்து குழப்பம் பண்ண அவன் யாரு? அதான் அவன் கிட்ட

அப்படிப் பேசிட்டு வந்தேன். உன் குழந்தை பிறந்ததும் தகவல் சொல்றோம்... வந்து வாங்கிட்டு போ... என் மகளுக்கு வேற கல்யாணம் பண்ணி வைக்கப் போறேன்னு சொல்லிட்டு தான் வந்தேன். அத்தோட என் வீட்டு வாசலை கண்டவனும் மிதிக்கக் கூடாதுன்னு எச்சரிச்சிட்டு தான் வந்தேன்... அவன் உனக்கு வேணாம்... மறந்திரு...”

“என்னங்க...” அதிர்வுடன் கணவனைப் பார்த்தார் சுமதி.

“முடிந்தது எல்லாம் முடிந்தது...” முணுமுணுத்த மகளைத் தன் தோளில் ஆதரவாய் சாய்த்துக் கொண்டார் சுமதி.

“இல்லை மயூ... நான் மாப்பிள்ளைக்கிட்ட பேசுறேன்... அவர் நிச்சயம் உன் மேல் தப்பில்லைன்னு உணருவாரு. நீ கவலைப்படாதே...” அவர் மகளைச் சமாதானப்படுத்த,

“இல்லைம்மா... அவரைப் பத்தி உங்களுக்குத் தெரியாது” கணவனின் குணம் அறிந்து மனதுக்குள் பயந்தவளாய் அவள் மெல்ல விசும்பினாள்.

“நான் பேசுறேன் கண்ணா... இந்த மாதிரி நேரத்தில் நீ கவலைப்படக் கூடாது” ஆறுதலாய் சொல்ல...

“அவரோட கடந்த காலத்தில் ஏதோ நடந்திருக்கும்மா... அதனால அவர் மனசுக்குள் ரொம்ப நொந்து போயிருக்கிறார். அவர் கிட்ட போய் அப்பா இப்படிப் பேசிட்டு வந்தா... அவர் நிச்சயம் என்னை வெறுத்து விடுவார். வெளியில் பார்க்க தான் அவர் பெரிய மனிதர்... ஆனால் உள்ளுக்குள் அவர் அன்புக்கு ஏங்கும் ஒரு சின்னக் குழந்தை மாதிரிம்மா. அந்த அன்பு மறுக்கப்படும் போது அவர் சுபாவம் முரட்டு குழந்தை போல் மாறிவிடும். என்ன சமாதானம் செய்தாலும் அவர் கோபம் குறையாது. அப்பா பேசிய பேச்சுக்கு அவர் என் மேல் தான் கோபமாய் இருப்பாரு. இனி என் கூடப் பேச மாட்டாரு... என்னைப் பார்க்க வர மாட்டாரு... எல்லாம் முடிந்து போயிருச்சும்மா...” அடக்கமாட்டாமல் ஓவென்று கதறியழ...

“அப்படிப்பட்ட சந்தேகம் குணமுள்ளவன் கூட எதுக்காக நீ வாழணும்...? பேசாம டிவோர்ஸ் வாங்கிட்டு நிம்மதியாயிரு... நீ இப்படி ஒவ்வொரு சமயமும் உன்னை அவன் கிட்ட ப்ரூவ் பண்ணி தான் வாழ்க்கை நடத்தணும்ங்கிற அவசியம் உனக்கில்லை” ராகவன் இரக்கமின்றிக் கூற...

“மொதல்ல நீங்க சும்மா இருக்கீங்களா? மகள் சந்தோசமா வாழணும்னு நினைக்கிறீங்களா? இல்லையா?” கணவரை சுமதி கடிய...

“இப்படிப்பட்டவனுடன் வாழ்றதும் ஒண்ணும் தான் வாழாமல் இருப்பதும் ஒண்ணும் தான்” ராகவன் சூடாய் பதிலளிக்க...

“நீங்க என்ன சொன்னாலும் என்னால் மனதை மாற்றிக் கொள்ள முடியாதுப்பா... அவர் இல்லைன்னா என் வாழ்க்கையில் சந்தோசமில்லை... நிம்மதியில்லை... எதுவுமேயில்லை... அது மட்டும் உறுதியாய் என்னால் சொல்ல முடியும்”

“நானே சொன்னாலும் என் பேச்சை கேட்டுக்கிட்டு உன்னைப் படுத்தற அவனெல்லாம் ஒரு மனுசனா? அப்போ யார் என்ன சொன்னாலும் அவன் அப்படியே நம்பிடுவானா?”

“நீங்க மட்டும் அவரை வார்த்தையால் படுத்தலாமாப்பா? அவர் நம்புறார் நம்பாமல் போறாரு... அது அவர் பிரச்சினை... அப்படியே நம்பினாலும் அவரின் சந்தேகத்தைப் போக்க வேண்டியது என் கடமை. ஏன்னா அவர் மனதில் உள்ள காதல், அன்பு எனக்கு மட்டும் தான் தெரியும். ஆனால் நீங்க அவரைக் காயப்படுத்தியது எந்தவிதத்தில் நியாயம்?” தந்தையின் கேள்விக்குப் பதிளித்தவள்... “இவ்வளவு நடந்த பின்னும் இனி அவர் என்னைத் தேடி வர மாட்டார்... நான் தான் அவரைத் தேடி போணும். அம்மா நான் நாளைக்கே அவரைப் பார்க்க ஊருக்கு போறேன்ம்மா” அவள் தீர்மானமாய்த் தெரிவிக்க...

“இந்த மாதிரி நிலையில் நீ ட்ராவல் பண்ண வேணாம் மயூ... அது உனக்கும், குழந்தைக்கும் நல்லதில்லை” சுமதி மகளுக்கு எடுத்து கூற... தனக்காக இல்லையென்றாலும் தன் குழந்தைக்காக மனதை மாற்றிக் கொண்டாள்.

“சரிம்மா...” அரை மனதாய் அவள் தலையசைக்க...

“பெத்து வளர்த்த எங்களை விட அவன் உனக்கு முக்கியமாய்ப் போய்ட்டான் இல்ல...” மகளின் பேச்சு கேட்டு ராகவனுக்கு மனது ஆற்றாமையால் தவித்தது.

“உங்க மேல் எனக்குப் பாசம் இருக்கு... அன்பு இருக்கு... அதுக்கு மேலே மரியாதை இருக்கு... ஆனா... ஆனா... அவர் எனக்கு உயிர்... எங்கேயாவது உயிர் இல்லாமல் உடல் வாழுமா? இப்போ என் நிலைமை அப்படித்தான் இருக்கு” என்றவள் அதற்குப் பின் வந்த நாட்களில் தந்தையிடம் பேசவில்லை... மௌனம் காத்தாள். ஆரனிடம் கூட அவள் பேசவில்லை. ஏனெனில் அவனின் குணம் அவளுக்குத் தெரிந்தது என்பதால் அலைப்பேசியை அணைத்து தூர போட்டு விட்டாள்.

தந்தை என்றில்லை யாரிடமும் அவள் பேச விரும்பவில்லை. எப்போதுமே அமைதியாய் எங்கேயோ வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள். இவளின் நிலை கண்டு சுமதி மனதுக்குள் கண்ணீர் விட்டவர் கணவரை கடிந்து பேசவும் தவறவில்லை. மஞ்சரி தன் பங்கிற்கு அக்காவை சந்தோசப்படுத்த நினைக்க... அதுவும் எந்தவித பலனையும் அளிக்கவில்லை.

அங்கே ஆரனும் அவளின் நிலைக்குக் குறையாத மன வருத்தத்தில் இருந்தான். அடுத்தடுத்து வந்த அவளது அழைப்புகள் ஒருகட்டத்தில் அப்படியே நின்று போக அதுவும் அவனைப் பெருத்த மனவுளைச்சலுக்கு ஆளாக்கியது. நாளுக்கு நாள் அதிகமாகும் அவளின் நினைவுகளிலிருந்து தப்ப வேலையில் தன்னை மூழ்கடித்துக் கொண்டான். நேரம் காலமற்ற ஐடி வேலை அவனை மகிழ்ச்சியாய் தன்னுள் இழுத்துக் கொண்டது.

இரண்டு வாரங்கள் கழித்து மருத்துவப் பரிசோதனைக்குச் சென்ற மயூரியின் உடல்நிலை மிகவும் மோசமாகியிருந்தது. அவளுக்கு ஏற்பட்ட மன அழுத்தம், பொதுவாய் கர்ப்பமாய் இருக்கும் பெண்களுக்கு வரும் இயல்பான பயம் எல்லாம் சேர்த்து அவளின் ரத்த அழுத்தத்தை ஏகத்துக்கும் ஏற்றியிருக்க... அழையா விருந்தாளியாய் சர்க்கரை நோயும் அதனுடன் சேர்ந்து கொண்டது.

“உணவில் உப்பும், சர்க்கரையும் அளவோடு சேர்த்து கொடுங்க... கூடுமளவு இந்த இரண்டும் இல்லாமல் சாப்பிட்டாலும் நல்லதே” மருத்துவர் கூறியதை அமைதியாய் கேட்டுக் கொண்டு வந்த சுமதி, வீட்டிற்கு வந்து கணவரை பிடிபிடியென்று பிடித்துக் கொண்டார்.

“நல்ல ஆராக்கியமா இருந்த என் மகளை இந்தக் கதிக்கு ஆளாக்கியது நீங்க தான். அவ டெலிவரியில் மட்டும் ஏதாச்சும் சிக்கல் வந்தது... உங்களை என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது” அவரின் கோபத்தில் ராகவன் கூட அரண்டு விட்டார்.

மகளின் உடல்நிலை முன் அவரின் வறட்டுக் கௌவரம் ரொம்பநாள் நிற்க முடியவில்லை. அதிலும் மயூரியின் பாராமுகம் அவரை மிகவும் வதைத்தது. மகளிடம் பலமுறை பேச முயற்சி செய்தார். ஆனால் அவளோ அவரிடம் பேசவும் முயலவில்லை.... அவர் முகம் காணவும் விரும்பவில்லை. அவளுக்கு இனிய அதிர்ச்சி கொடுப்பதற்காகத் தன் தன்மானத்தை விட்டு விட்டு ஆரனுக்கு அலைப்பேசியில் அழைத்துப் பார்த்தார். அவனோ அவரின் அழைப்பை ஏற்கவில்லை. அவருக்குமே மகளின் அன்பை பெறுவதற்கு என்ன செய்வது? என்று தெரியவில்லை.

சரியாகப் பிரசவ நாளிற்கு இரண்டு நாள் முன்பு அவளைப் பரிசோதித்த மருத்துவர், “குழந்தை பொசிசன் எல்லாம் சரியாக இருக்கிறது. கர்ப்பப்பை வாய் கூடத் திறந்து தான் இருக்கு. ஆனாலும் இன்னும் வலி வராமல் இருப்பது ஆச்சிரியமா இருக்கு. நாளைக்கு வரைக்கும் பார்ப்போம்...

வலி வரவில்லைன்னா ஆபரேசன் பண்ணிடலாம்” தெரிந்த மருத்துவர் என்பதால் அவளைப் பொறுமையுடன் கையாண்டார்.

மருத்துவர் அறுவை சிகிச்சை என்று கூறியதும் மயூரி மனதுக்குள் பயப்பந்து உருண்டது. தன் மனதின் பயத்தைக் கூட யாரிடமும் சொல்ல முடியாமல் அவள் உள்ளுக்குள் வைத்து மறுகி கொண்டிருந்தாள். அந்நேரம் அவளுக்கு ஆரனின் நினைவு தான் அதிகமாய் வந்தது. என்ன தான் பெற்றோர் அவளைத் தங்கத்தட்டில் வைத்து தாங்கினாலும்... தங்கை எப்போதும் உடன் இருந்தாலும் அவனால் ஏற்படுத்தப்பட்ட வெற்றிடத்தை அவர்கள் யாராலும் நிரப்ப முடியவில்லை.

‘ஆரு... உடனே என்னைப் பார்க்க வர மாட்டீங்களா? உங்க நெஞ்சில் முகம் புதைய என்னை நீங்கள் அணைத்து கொண்டாலே என்னோட பயமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடுமே... என்னை உயிர்பிக்கும் சக்தி உங்களுக்கு மட்டும் தானிருக்கு...’ உள்ளுக்குள் அவனை நினைத்து மறுகியவளுக்கு ஒன்று மட்டும் நன்கு புரிந்தது.

அவனில்லாமல் அவளில்லை... அவளின் ஒவ்வொரு அணுவும் அவனுக்காய் ஏங்கி தவிப்பதை அவளால் உணர முடிந்தது. அந்தக் கணம் அவன் மீதான அவள் காதலை நன்கு உணர்ந்து கொண்டாள். அவனின் செயலால் எந்தக் காதல் செத்து விட்டது என்று மனதுக்குள் புலம்பி தவித்தாளோ அந்தக் காதல் இன்னமும் சாகவில்லை... அவள் மனதுக்குள் புதையுண்டு தான் கிடக்கிறது என்பது உணர்ந்து கொண்டாள். அவள் தன் மனதை உணர்ந்த அந்தக் கணம் அவனைக் காண அவள் தவிக்கும் தவிப்பு இன்னமும் அதிகமானது.

மருத்துவர் கெடு கொடுத்த நாளன்று அவளுக்கு லேசாய் வலியெடுக்க... உடனே அவளை மருத்துவமனையில் சேர்த்தனர். அவளைப் பரிசோதித்த மருத்துவரோ, “வலி விட்டு விட்டு தான் வருது... முதல் குழந்தை வேறு...

இன்னும் கொஞ்ச நேரமாகலாம்...” என்று கூறிவிட்டு செல்ல... அவளுக்கோ பயத்தில் முத்து முத்தாய் வியர்த்தது.

“அம்மா அவரிடம் நான் பேசணும்மா?” முகத்தில் பயத்தைத் தேக்கி வைத்து கேட்டவளை கண்டு அவருக்கும் பயம் எழுந்தது.

“மயூ நீ ஃபோன் பண்ண வேணாம்... நான் அவருக்கு ஒரு மெசேஜ் பண்ணி பார்க்கிறேன்” மஞ்சரி அவளின் நிலைமையை உணர்ந்து சொன்னாள்.

மஞ்சரியின் குறுஞ்செய்தி கிடைத்த அடுத்த நொடி ஆரன் அவளின் அலைப்பேசிக்கு அழைத்தான். மஞ்சரி மயூரியிடம் கொடுத்துவிட்டு ஒதுங்கி கொள்ள... அவனின் எண்ணை ஆசையுடன் பார்த்துக் கொண்டே அலைப்பேசியை வாங்கியவள்,

“ஆரு...” என்று அழுது விட்டாள்.

“பேபி... இந்த மாதிரி நேரத்தில் நீ தைரியமாயிருக்க வேண்டாமா? அழக் கூடாது பேபி? ப்ளீஸ்...” மஞ்சரி குறுஞ்செய்தி படித்ததில் இருந்து அவன் அவனாய் இல்லை. அவனின் மனம் பதற்றத்தில் படபடவென அடித்துக் கொண்டது.

“ஆரு... எனக்கு வலி தாங்க முடியல... ரொம்ப வலிக்குது” தன்னை அன்னையாய் மடி தாங்கியவள் இன்று சிறுபிள்ளையாய் வலி பொறுக்க முடியாமல் துடித்துப் புலம்புவதை அவனாலும் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவனின் இதயத்தில் ரத்தம் வடிந்தது.

“பேபி... நான் என்ன பண்ணுவேன் பேபி...?” செய்யும் வகையறியாது புலம்பியவன், “நான் வேணும்ன்னா உடனே புறப்பட்டு வரவா?” அவளின் தந்தை கூறிய வார்த்தைகள் இன்னமும் அவன் காதில் ஒலித்தாலும் அதைப் புறம் தள்ளிவிட்டு அவன் கேட்டான்.

“இல்லை வேணாம் ஆரு... நீங்க வர வேணாம்... வந்து அவமானப்பட வேணாம்...” அந்த நிலையும் அவசரமாய்

அவள் மறுக்க... அவளின் மறுப்பில் அவளுக்கு விசயம் தெரிந்து விட்டது என்று அவனுக்குப் புரிந்தது.

“நம்ம குழந்தை நல்லபடியா பிறந்ததும் நானே அங்கே வர்றேன்... நீங்க கவலைப்படாதீங்க...” அவளின் இந்தப் பேச்சில் இதுநாள் வரை அவன் தனக்குப் போட்டிருந்த கண்ணுக்குத் தெரியாத கவசம் ஒன்று சுக்குநூறாய் உடைவது போலிருந்தது அவனுக்கு.

அவளின் வார்த்தைகள் அவனுள் எந்த மாதிரியான மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதை வார்த்தையில் சொல்ல முடியாது. அவள் தனக்காய் யோசித்து யோசித்துச் செய்யும் ஒவ்வொரு செயலும் அவளின் மீதான அவனின் காதலை இன்னமும் அதிகரித்தது. அவளின் அன்பிற்காக இருமனதாய் ஊசலாடி கொண்டிருந்த அவன் மனம் இன்று ஒருநிலையில் அமைதியாய் அடங்கியது. அவன் இவ்வளவு நாள் காத்திருந்தது அவளின் தூய அன்பிற்காகத் தானா? எந்தப் பெண்ணிடம் மயங்காத அவன் மனம் அவளிடம் மயங்கியது பொய்த்து போகவில்லை. சரியான துணையைத் தான் கடவுள் அவனுக்குக் கொடுத்திருக்கிறார். கடைசியில் அவளது அன்பு அவனை ஜெயித்துவிட்டது.

“பேபி...” அவன் உடைந்து போய் அழுதுவிட்டான். எந்த நிலையிலும் தனக்காய் யோசிக்கும் அவளின் மனது அவனுள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது.

“ஆரு அழாதீங்க...” மறுபுறம் அவள் தேம்ப... அவளிடம் இருந்து அலைப்பேசியை வாங்கிய சுமதி,

“மாப்பிள்ள... நீங்க அவளுக்கு ஆறுதல் சொல்றதை விட்டுட்டு... நீங்களும் அவள் கூடச் சேர்ந்து அழுகிறீங்களே... ஏற்கெனவே அவள் பயந்த சுபாவம்... அதான் பிரசவ வலி கண்டு பயப்படுறா... நீங்க கவலைப்படாதீங்க... நான் சொன்ன மாதிரி உங்க மனைவியையும், உங்க குழந்தையையும் பத்திரமா உங்க கிட்ட கொண்டு வந்து சேர்த்திடுறேன். அப்புறம் மாப்பிள்ள... மயூ அப்பா பேசியது எல்லாம் மனசுல வச்சுக்காதீங்க... ஏதோ ஆதங்கத்தில்

அப்படிப் பேசிட்டாரு” மருமகனுக்குத் தாயாய் ஆறுதல் கூறியவர்... நல்ல மனைவியாய் கணவனுக்காக அவனிடம் மன்னிப்பும் கேட்டார்.

“பரவாயில்ல அத்தை...” என்றவன், “பே... மயூவுக்கு எப்போ டெலிவரியாகும்...?”

“எப்படியும் அஞ்சாறு மணி நேரமாகலாம்... ஏன்னா முதல் குழந்தை பாருங்க.. கொஞ்ச நேரம் எடுக்கும். அவளுக்குப் பிரசர், சுகர் இருக்கிறதால முன்னமே கொண்டு வந்து சேர்த்துட்டோம். பயப்பட ஒண்ணுமில்லை”

அவர் கூறவும் இன்னமும் பதட்டமானான் ஆரன். இருந்தாலும் அவரிடம் எதுவும் காட்டி கொள்ளவில்லை. மயூரியிடம் மேலும் ஆறுதலாய் பேசிவிட்டு அலைப்பேசியை அணைத்தவன்... முதன்முறையாய் தன்னவளுக்காய் சிந்திக்க ஆரம்பித்தான்.

மணிக்கொரு தரம் வந்து வதைத்த வலி... அரைமணி நேரம், கால்மணி நேரம், பத்து நிமிடம், ஐந்து நிமிடம் என்று விட்டு விட்டு வந்த வலியானது நிமிட நேரத்திற்கும் குறைவாய் குறைந்து போனது. வலி தாங்க மாட்டாமல் அழுது புலம்பியவளை பிரசவயறைக்கு அழைத்துச் செல்ல முற்பட்ட போது,

“பேபி...” தன்னவனின் அழைப்பு அவள் காதில் தேனாய்ப் பாய்ந்தது. பிரம்மையாக இருக்குமோ என்று அந்தக் குரலை புறம் தள்ள நினைத்தவள் பின் மனது கேட்காமல் வலியை பல்லை கடித்துப் பொறுத்துக் கொண்டு குரல் வந்த திசையைத் திரும்பி பார்த்தவளின் கண்கள் அந்த நிலையிலும் ஆச்சிரியத்தில் சாசர் போல் விரிந்தது. அங்கே அவளைக் காணாது பாதியாய் இளைத்த உடலுடன், முகமெல்லாம் பதட்டத்துடன், மூச்சிரைக்கக் கண்கள் கலங்க அவளை இமைக்காமல் பார்த்தபடி நின்றிருந்தான் ஆரன்.

மருத்துவமனையின் வராந்தாவின் ஓரத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த ஆரன் ஏதோ முள்ளின் மீது அமர்ந்திருப்பது போன்ற அவஸ்தையோடு உட்கார்ந்திருந்தான். தன்னவளுக்கு எதுவுமாகி விடக் கூடாது என்று அவன் மனதில் கடவுளிடம் பிரார்த்தித்துக் கொண்டிருந்தான். அவன் கவனம் முழுவதும் பிரசவயறையில் அலறிக் கொண்டிருந்த மயூரியிடமே இருந்தது.

அவனின் மனம் முழுவதும் அவளின் நினைவுகளே... எதிர்பாராமல் அவனை இங்குக் கண்டதும் அவள் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியை அவன் தன் வாழ்நாளில் மறக்க மாட்டான். கண்களை மூடி நாற்காலியில் சாய்ந்தவனின் மனக்கண்ணில் அந்தக் காட்சி வலம் வந்தது. அவளின் அன்பை, காதலை அவன் முழுதாய் உணர்ந்து கொண்ட தருணம் அது...

“ஆரு...” அவனை நோக்கி கை நீட்டியவளின் கையை ஓடி வந்து பற்றிக் கொண்டவனின் கரத்தை எடுத்து தன் கன்னத்தோடு வைத்துக் கொண்டு, “ரொம்ப மெலிஞ்சு போயிட்டீங்களே ஆரு...” பல்லை கடித்து வலியை பொறுத்துக் கொண்டு நான்கு வார்த்தைகள் பேசுவதற்குள் அவளுக்கு மூச்சு வாங்கியது. வலியில் துடித்துக் கொண்டிருந்த அந்த நிலையிலும் இவனின் நலத்தை விசாரித்த அவளின் அன்பு கண்டு அவனுக்குக் கண்கள் கலங்கிவிட்டது.

“எனக்கென்ன பேபி... நான் நல்லா தான் இருக்கேன்... நீ என்னுடன் இருந்தால் எல்லாம் சரியாகி போகும்... நீ எப்படியிருக்கப் பேபி?” அவளின் தலையைக் கோதி கொண்டே அவன் கேட்ட அந்தக் கேள்வியில் அவள் மனம் பாகாய் உருகி அவன் காலடியில் சரணடைந்தது.

“நீங்க இல்லாம நான் நல்லாவே இல்ல ஆரு... நீங்க போகும் போது என்னையும் உங்க கூடக் கூட்டிட்டு போயிடுங்க...”

சொல்லி கொண்டே அவன் நெஞ்சில் சாய்ந்தவள் வலி பொறுக்காமல் அவனின் சட்டையைப் பிடித்துக் கசக்கி விட்டாள். அப்போது தான் அவனும் அவளின் நிலை உணர்ந்தான்.

“நர்ஸ்... அவளுக்கு வலி ரொம்ப இருக்கு போலிருக்கு...” அவன் பதட்டமாய்ச் செவிலிப்பெண்ணிடம் கூற...

“வலி இருக்குது தான்... நாங்க அவங்களை டெலிவரி ரூம்க்கு கூட்டிட்டு போகணும்ன்னா நீங்க கொஞ்சம் விலகி இருங்க சார்...” கேலியாய் சொன்னவள், “நல்ல ஒரு ரொமான்ஸ் பிலிம் பார்த்த பீலிங் சார்... தம்பதின்னா உங்களை மாதிரி தான் இருக்கணும்... மேடம் நீங்க ரொம்பக் கொடுத்து வைச்சவங்க...” சிரித்தபடி கூறிய செவிலிப்பெண் அவளை அழைத்துச் சென்றார்.

செவிலிப்பெண் கூறியதை இப்போது நினைத்து மனதுக்குள் சிரித்துக் கொண்ட ஆரனின் காதில் குழந்தை ஒன்று அழும் குரல் விழ... திடுக்கிட்டுப் போய்க் கண்களைத் திறந்தான். பரபரப்புடன் எழுந்தவனைப் பார்த்து சுமதி,

“குழந்தை பிறந்திருச்சு மாப்பிள்ள...” மகிழ்ச்சியோடு அவர் சொல்ல... அதைக் கேட்டு அவனும் மகிழ்ச்சியடைந்தான். அருகில் அமர்ந்திருந்த ராகவனை அவன் திரும்பியும் பார்க்கவில்லை. ஆனால் அவர் அவனைத் தான் பார்த்துக் கொண்டிருந்தார்.

சுமார் பத்து நிமிடங்கள் கழித்துக் குழந்தையைச் சுத்தப்படுத்திக் கொண்டு வந்த செவிலிப்பெண், “ஆண் குழந்தை...” என்று சொல்லி அவனிடம் கொடுக்க... அவன் சிறு குழந்தையை எப்படித் தூக்குவது? என்று தெரியாமல் மாமியாரிடம், “நீங்களே வாங்குங்க...” குழந்தையின் மீது பார்வையைப் பதித்தபடி சொல்லியவனின் மனமோ எதையோ வென்று விட்ட கர்வத்தில் பெருமை பட்டுக் கொண்டது.

“எவ்வளவு அழகா இருக்கான்...” மஞ்சரி குதூகலத்துடன் குழந்தையைக் கொஞ்ச... சுமதியும் அதை ஆமோதித்தார்.

“அப்படியே நம்ம மயூ மாதிரியில்ல...” ஆசையுடன் குழந்தையைத் தலை முதல் கால் வரை வருடியபடி சொன்ன ராகவனின் கண்கள் கலங்கியிருந்தது.

அது ஆரனின் கண்களில் இருந்து தப்பவில்லை. தானும் ஒரு குழந்தைக்குத் தகப்பன் என்ற நினைவில் அவரின் மன உணர்வுகளை இப்போது அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. அப்போது அவனுக்கு வந்த ஆத்திரம், கோபம், வருத்தம் எல்லாம் இப்போது ஏனோ குறைந்து இருந்த இடம் தெரியாமல் காணாமல் போனது. அதையெல்லாம் விட மயூரியை போன்ற அருமையான பெண்ணைத் தனக்காகப் பெற்று கொடுத்திருக்கிறாரே அதற்காகவாவது அவன் தன் மனஸ்தாபத்தைக் கைவிட வேண்டாமா?

“வாழ்த்துக்கள் மாப்பிள்ள...” வலிய வந்து வாழ்த்து சொன்ன ராகவனிடம் அதற்கு மேல் அவனால் பாராமுகம் காட்ட முடியவில்லை.

“தேங்க்ஸ் மாமா...” நீட்டிய அவரின் கையைப் பற்றிக் குலுக்கினான். தான் பேசிய வார்த்தைகளை மறந்து தன்னை மன்னித்து உறவு கரம் நீட்டிய மருமகனை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டார் அவர். தூய்மையான அன்பு மனம் கொண்ட அவர்களுக்குள் மன்னிப்பு கேட்கவோ இல்லை கொடுக்கவோ எந்தவொரு அவசியமும் இல்லாமல் போனது.

“இப்போ அவங்களைப் போய்ப் பார்க்கலாம்...” மீண்டும் செவிலிப்பெண் வந்து சொல்லவும்... ‘யார் முதலில் போய்ப் பார்ப்பது?’ என்று ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள...

“மாப்பிள்ள... நீங்க போய்ப் பாருங்க...” மருமகனின் மனது புரிந்தவராய் ராகவன் சொல்ல... அவரின் பதிலுக்காகக் காத்திருந்தார் போல் ஆரன் வேகமாய் உள்ளே சென்றான்.

“நீங்க மாப்பிள்ளையை ஏத்துக்கிட்டதுக்கு ரொம்பத் தேங்க்ஸ்ங்க...” கணவனை நன்றியுடன் பார்த்தார் சுமதி.

“சுமி... நமக்குள் எதுக்குத் தேங்க்ஸ் எல்லாம்... இவ்வளவு நாள் ஆத்திரம் என் கண்ணை மறைச்சிருந்தது... என் மகளோட மௌனம் அதை அப்படியே மாத்தியிருச்சு... அவளோட விருப்பம் தான்... என் விருப்பம்ன்னு நான் முடிவு பண்ணிட்டேன்...” மனைவியின் தோள் மீது கை போட்டு அவர் அணைத்துக் கொள்ள...

“ஹலோ மிஸ்டர் & மிசஸ் ராகவன் ரெண்டு சின்னக் குழந்தைங்க முன்னாடி என்ன ரொமான்ஸ் வேண்டியிருக்கு...?” மஞ்சரி குரல் கொடுக்க... சுமதி வெட்கத்துடன் கணவரின் அணைப்பிலிருந்து விலக...

“ஒரு சின்னக் குழந்தை என் பேரன்... இன்னொரு சின்னக் குழந்தை யாரு மஞ்சு?” சுற்றும் முற்றும் தேடினார் ராகவன்.

“ஏன் என்னைப் பார்த்தால்... சின்னக் குழந்தை போல் தெரியலியா?” போலியாய் முறைத்துக் கொண்டு அவள் கேட்க...

“நாளைக்கே கல்யாணம் பண்ணி கொடுத்தா... இதே மாதிரி ஒரு குழந்தைக்குத் தாயாகி நிப்ப... நீ சின்னக் குழந்தையா?” இடது கரத்தில் பேரனை பிடித்துக் கொண்டு வலது கரத்தால் மகளின் காதை திருகினார் சுமதி.

“அதை முதலில் செய்ங்க...” முகத்தைச் சீரியசாய் வைத்துக் கொண்டு அவள் சொன்னாலும் அவள் கண்களில் தெரிந்த குறும்பில் தாயும், தந்தையும் வாய் விட்டு சிரித்தனர்.

“பேபி...” ஆரனின் மென்மையான அழைப்பில் மயூரி மெல்ல கண்ணைத் திறக்க... அவளது வலது கையைத் தன் இடது கரத்தால் எடுத்து தன் நெஞ்சோடு வைத்து கொண்டவன்... தனது வலது கரத்தால் அவளின் முடியை கோதி களைத்திருந்த அவளது நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையைத் துடைத்துவிட்டான்.

“ஆரு... குழந்தையைப் பார்த்தீங்களா?”

‘ஆம்’ என்பது போல் தலையை ஆட்டியவன், “பேபி... என் வாழ்க்கையை முழுமையடையச் செய்துவிட்டாய்...”

உதடுகள் துடிக்க உணர்ச்சிவசப்பட்டவனாய் சொன்னவனின் கண்களில் இருந்து கண்ணீர் துளிகள் அவளது கையில் விழுந்தது.

“ஆரு... ப்ளீஸ்...” அவள் அவனைத் தேற்ற... அவனும் சூழ்நிலை உணர்ந்து தன்னை மீட்டுக் கொண்டான்.

“ஆரு... அப்பா பேசியதுக்கு நான் உங்க கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன்...” என்றவளின் வாய் மீது கை விரல் வைத்து தடுத்தவன்,

“இப்போ எல்லாம் சரியாகிவிட்டது... நீ வீணே கவலைப்பட வேணாம்...”

“இருந்தாலும் அப்பா பேசியதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை...” அவள் அவனுக்காய் புலம்ப... சுற்றும் முற்றும் பார்த்து யாருமில்லாததை ஊர்ஜிதம் செய்து கொண்டவன் அவள் முகம் நோக்கி குனிந்தான்.

“பேசாமல் இருன்னு சொன்னா கேட்பதில்லை...” என்றவன் அவளின் இதழில் மென்மையாய் முத்தமிட... அவனின் அந்தத் திடீர் செயலில் நாணமுற்றவள்,

“ஆரு... இது ஹாஸ்பிட்டல்...” அவன் நெஞ்சில் கை வைத்து தள்ள...

“அதே தான் நானும் சொல்றேன் பேபி... இங்கே எதுவும் பேச வேணாம்...” அவனின் சொல் கேட்டு அவள் சம்மதமாய்த் தலையசைக்க... அவளின் அந்த அழகில் அவன் மனம் லயித்து ரசித்தது.

அறைக்கு அழைத்து வரப்பட்ட மயூரியிடம் ராகவன் பேச முயற்சிக்க... அவளோ வழக்கம் போல் மௌனம் காக்க... அதில் அவர் மிகவும் உடைந்து போனார்.

“மாப்பிள்ள... நான் அப்படி என்ன பெரிய தப்புச் செய்துட்டேன்... ஒரு தகப்பனா என்னோட ஆதங்கம் அவளுக்கு ஏன் புரிய மாட்டேங்குது? ஏதோ ஆத்திரத்தில் அறிவிழந்து பேசிவிட்டேன்... அதுக்காக அவள் இப்படிக்

கோபித்துக் கொள்கிறாளே... என் மனம் எவ்வளவு கஷ்டப்படும்ன்னு அவ ஏன் உணர மாட்டேங்கிறா?" ஆரனிடம் அவர் புலம்ப...

"அவளோட மனசை மாத்தி அவளை உங்க கிட்ட பேச வைக்க வேண்டியது என்னோட பொறுப்பு மாமா..." அவன் அவருக்கு ஆறுதல் சொல்ல... அதில் அவர் மனம் தெளிந்தது.

குழந்தை பிறந்த செய்தி கேட்டு ரிஷி அலைப்பேசியில் நலம் விசாரித்தான் என்றால்... நல்லசிவம் நேரே வந்து பார்த்துவிட்டுப் போனார். "ஆரா... உன்னை இந்த மாதிரி குடும்பஸ்தனா பார்ப்பதுக்கு ரொம்பச் சந்தோசமாயிருக்கு. இதே போல் மகிழ்ச்சியோடு... நீ நீண்ட ஆயுளோடு வாழ வேணும்..." தகப்பனாய் அவர் வாழ்த்த... அவரது அன்பில் அவன் மனம் நெகிழ்ந்தான்.

"தோஸ்த் அப்பா ஆகிட்டீங்க... ஹேப்பியா இருக்கு தோஸ்த்..." ஆரனை பார்க்க வந்த வருண் அவனை ஆரத்தழுவி கொள்ள... அதைப் பார்த்த மஞ்சரி, "ம்க்கும்..." முகவாயை தோளில் இடித்துக் கொண்டாள்.

"தோஸ்த்... என்னோட ரூட் கிளியராக ஒரு ஆலோசனை சொல்லுங்களேன்..." தனிமையில் ஆரனை பார்த்துப் பரிதாபமாகக் கேட்ட வருணை பார்த்து ஆரனுக்குச் சிரிப்பு வந்தது.

"ஏண்டா ஊருக்கே நீ ஆலோசனை சொல்லுவ... உனக்கு நான் ஆலோசனை சொல்றதா? நம்பற மாதிரியில்லையே..."

"போங்க தோஸ்த்... சும்மா என்னைக் கலாய்க்காதீங்க... நான் சீரியஸா கேட்குறேன்... என் டாலியை எனக்கு உடனே கல்யாணம் பண்ணி வைங்க..."

"வருண்... எங்க லவ் மேரேஜால் ஏற்பட்ட பிரச்சினை இப்போ தான் முடிஞ்சியிருக்கு... அடுத்து உன்னோட லவ்வை அவங்க கிட்ட நான் எப்படிச் சொல்றது? அதிலும்

மஞ்சு உன்னைப் பார்க்கும் போதெல்லாம் அவள் முகத்தில் சிவகாசி பட்டாசு வெடிக்குது. இந்த நிலைமையில் நான் எப்படிப் பேச?"

"தோஸ்த்... என் காதல் அவ்வளவு தானா?" விட்டால் அழுதுவிடுவான் போலிருந்த வருணை கண்டு ஆரனுக்கு இரக்கமாய் இருந்தது. எவ்வளவு ஜாலியாக வாழ்க்கையை லேசாக எடுத்து கொள்பவன் இந்த வருண்... அவனையே இவ்வளவு சீரியசாக யோசிக்க வைக்கிறதே இந்தக் காதல்... மனதில் எழுந்த வியப்புடன் அவனைப் பார்த்த ஆரன்,

"கவலையை விடு வருண்... உன் காதலை நிறைவேற்ற வேண்டியது என் பொறுப்பு... ஆனால் அதுவரை நீ மஞ்சு பின் அலையாமல் இருக்க வேணும். அப்படின்னா தான் நான் இதை அரேஞ்சுடு மேரேஜா முடிக்க முடியும்" ஆரன் சொன்னதைக் கேட்டு வருண் முகம் பளிச்சிட்டது.

"எப்படி இதைச் செய்யப் போறீங்க தோஸ்த்...?" ஆச்சிரியம் தாங்காமல் அவன் கேட்க...

"அதைச் செய்யப் போவது நானில்லை... வேறொருத்தர்..." என்று சொன்ன ஆரனின் மனக்கண்ணில் ரிஷியின் பிம்பம் வந்து போனது.

"எப்படியோ தோஸ்து நீங்க என் காதலை கல்யாணத்தில் முடித்தால் சரி..." அவனைக் கட்டி பிடித்துத் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தவன்... தூரத்தில் நின்றிருந்த மஞ்சரியை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டே விடை பெற்றுச் சென்றான்.

****

ஆரனுக்குக் குழந்தை பிறந்ததை அறிந்த வனஜாவிற்கு மனம் நிலையில்லாமல் தவித்தது. பேரனின் பாசம் அவரைச் சென்னைக்குப் போக விழைந்தது. அதற்கு முன் அவர் செய்ய வேண்டிய காரியங்கள் நிறைய இருந்தது. அதையெல்லாம் செய்து முடித்துவிட்டு தான் அவர் ஆரனை

சந்திக்கப் போக வேண்டும் என்று மனதில் உறுதி எடுத்துக் கொண்டார். அதைச் செய்து முடிக்க அவருக்கு ஐந்து நாட்கள் தேவைப்பட்டது. சென்னைக்குக் கிளம்பும் ஆரனுக்குத் தேவையானவற்றை எடுத்துப் பெட்டியில் வைத்தவர் கண்ணில் பேரனுக்கு என்று வாங்கி வைத்தது பட்டது. இதை மகன் ஏற்பானா? என்று மனதில் சந்தேகம் தோன்றிய போதும் பேரன் மீதிருந்த பாசம் அதை வெல்ல... ஆசையுடன் அனைத்தையும் பெட்டியில் வைத்து மூடினார்.

மருத்துவமனையில் இருந்து மயூரி வீடு திரும்பும் நாளின் போது ஆரன் அவள் வீட்டிற்கு வர மிகவும் தயக்கம் காட்டினான். என்ன தான் ராகவனை மன்னித்தாலும் அவர் பேசிய வார்த்தைகளை அவனால் மறக்க முடியவில்லை. அதனால் மிகுந்த தயக்கம் காட்டினான்.

“பேபி நீ உன் வீட்டுக்கு போ... ஒரு மாதம் கழித்து நான் உன்னைக் கூட்டிட்டு போறேன்...” மயூரி என்ன சொல்வது என்று தெரியாமல் முழித்தாள். இப்போது அவள் இருக்கும் நிலையில் விமானத்தில் கூடப் பயணம் செய்வது என்பது முடியாத காரியம்.

“மாப்பிள்ள... அது உங்க மாமனார் வீடில்ல... அது என் அப்பா எனக்குக் கொடுத்த சீதன வீடு... அதனால நான் கூப்பிடறேன் நீங்க வாங்க...” சுமதி அவனை அழைக்க... ராகவனும்,

“நான் பேசியது தப்பு தான் மாப்பிள்ள... தயவுசெய்து நீங்க வீட்டுக்கு வரணும்...” மனம் நெகிழ்ந்து அவர் சொல்ல...

“நான் இங்கே இருக்கப் போவது இன்னும் இரண்டு நாள் தான். வேணும்ன்னா ஒண்ணு செய்றேன்... இரவு நான் வருணுடன் தங்கிக்கிறேன்... பகல் அங்கே வந்து மயூ கூடவும், குழந்தை கூடவும் இருக்கேன்...” அவன் சொல்ல... இந்த மட்டும் அவன் ஒத்து கொண்டானே என்று அனைவரும் நிம்மதி மூச்சு விட்டனர்.

“ஆரன் இருக்கானா?” மருமகனின் பேர் சொல்லி விசாரித்த அந்தப் பெண்மணியை ஆச்சிரியத்துடன் பார்த்த ராகவன்...

“உள்ளே இருக்காரு... நீங்க உட்காருங்க... நான் கூட்டிட்டு வர்றேன்...” அங்கிருந்த சோபாவில் அவரை அமர சொன்னவர் உள்ளே சென்றார். யாருமில்லை என்று கூறியவனைத் தேடி ஒருவர் வந்திருப்பது மற்றும் அவர் உரிமையுடன் அவன் பேரை சொன்னது எல்லாம் அவருக்கு மிகுந்த வியப்பை அளித்தது.

மயூரியின் அறையில் மகனை கையில் வைத்து கொஞ்சி கொண்டிருந்த ஆரன் ராகவனின் வருகை உணர்ந்து அவரைப் பார்த்துச் சிரித்தான்.

“மாப்பிள்ள... உங்களைத் தேடி ஒரு லேடி வந்திருக்காங்க...”

“லேடியா...?” புருவம் சுருக்கி யோசித்தவனால் யார் வந்திருக்கக் கூடுமென்று அனுமானிக்க முடியவில்லை. மயூரியிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு குழப்பத்துடன் அறையை விட்டு வெளியில் வந்தான்.

அங்கே வரவேற்பறையில் அமர்ந்திருந்த வனஜாவை அவன் சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை. வயதாகி இருந்தாலும் தாயை அவனால் உடனே அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. உயரழுத்த மின்சாரம் தாக்கியது போல் அப்படியே அவன் உறைந்து போய் நின்றுவிட்டான். அவனின் வரவை உணர்ந்து எழுந்தவர்... தன் வயதை மறந்து மகனை நோக்கி ஓடி வந்தார்.

“ஆரா...” கணவனின் மறுபிரதிபலிப்பாய் இருந்த மகனை ஆசை தீர அவர் பார்க்க... அவனோ அவரை முறைத்து பார்த்தவன்... பின் முகத்தைத் திருப்பிக் கொண்டான். இதையெல்லாம் ராகவன், சுமதி ஆச்சிரியத்துடன் பார்த்து கொண்டிருந்தனர்.

“ஆரா... என்னை மன்னிக்க மாட்டியா? அம்மான்னு கூப்பிட மாட்டியா?” அவர் குரல் தழுதழுத்தது. அவனின் அம்மா அவர் என்பதை அறிந்த ராகவனும், சுமதியும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்.

“அதுக்கான அர்த்தத்தை உணராதவங்களை அப்படிக் கூப்பிடுவதில் எந்தவொரு பிரயோஜனமும் இல்லை... இப்போ எதுக்கு இங்கே வந்தீங்க...?” ஆரனின் குரல் ஆத்திரமாய் ஒலித்தது. குழந்தையைத் தூங்க வைத்துக் கொண்டிருந்த மயூரி அவனின் சத்ததில் அங்கே வந்தாள். அவள் வனஜாவை பார்த்து யாரென்று தெரியாமல் முழித்தாள்.

“என் பேரனை பார்க்க வந்தேன் ஆரா...”

“மகனே இல்லை என்கிறேன்... இதில் பேரன் எங்கிருந்து வந்தான்? உங்கள் உறவு வேணாம்ன்னு தானே இத்தனை காலம் நான் ஒதுங்கியிருந்தேன்... இப்போ வந்து ஏன் என் உயிரை எடுக்கிறீங்க?” அவனின் பேச்சிலிருந்து அவர் அவனுடைய அன்னை என்பதை மயூரி உணர்ந்து கொண்டாள். மகனின் கடுமையில் வனஜா மருமகளின் பக்கம் வந்தார்.

“நீ ஆராவின் மனைவி தானே...” அவரின் கேள்விக்கு மயூரி ஆம் என்பது போல் தலையசைக்க...

“நீயாவது அவனிடம் சொல்ல கூடாதாம்மா? என் பேரன் முகத்தைப் பார்த்திட்டு நான் போயிர்றேன்... அவனைக் கொண்டு வாம்மா...” அவரின் பேச்சில் அவள் கணவனின் முகத்தைப் பார்த்தாள். அவனும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான். அவனின் இறுகியிருந்த முகத்திலிருந்து அவளால் ஒன்றும் உணர முடியவில்லை.

“அவர் சரின்னு சொன்னா... நான் எங்கள் மகனை எடுத்து வர்றேன்...” கணவனின் முடிவு தான் தன் முடிவு என்பது போல் அவள் தன் வார்த்தைகளில் மறைமுகமாக அதை உணர்த்த... அவளின் பதிலில் ஆரனின் கண்கள் பளிச்சிட்டது. அவன் அவளைப் பார்த்த பார்வையில் இருந்தது... அன்பா? காதலா? இல்லை நன்றி உணர்வா? என்னவென்று புரியாத உணர்வுகள் அதில் ஒளிந்திருந்தது.

“ம்... கணவன் சொல்லை பின் பற்றி நடக்கும் மனைவி... உன்னைப் பார்த்தா பெருமையாயிருக்கும்மா... என் மகன்

கொடுத்து வைத்தவன்...” அவளைப் பெருமையாய் சொன்னவர்... “நானும் இது போல் இல்லாமல் போனேனே... காலம் கடந்து வந்த ஞானோதயத்தால் யாருக்கும் பலனில்லை...” விரக்தியாய் சொன்னவர் மகனிடம் திரும்பி...

“நான் இழந்த இழப்பின் அளவை இப்போது நான் உணர்ந்து கொண்டேன் ஆரா... நீ என்னை மன்னிக்க மாட்டேன்னு எனக்குத் தெரியும். நீ மன்னிக்கும்படியான காரியத்தை நான் செய்யவில்லைன்னும் எனக்குத் தெரியும். நான் இங்கே வந்தது பேரனை பார்ப்பதற்காகத் தான் என்றாலும்... உன் சொத்தை உன்னிடம் ஒப்படைக்கத் தான் உன்னிடம் வந்தேன்”

“உங்க சொத்து எதுவும் எனக்கு வேணாம்...” அவன் பட்டுக்கத்தரித்தார் போல் பேச...

“ஒப்படைக்க வேண்டியது என் கடமை... இதை என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி முடிவெடுக்கும் உரிமை உனக்கு மட்டும் தான் இருக்கு...” என்றவர் கையிலிருந்த சிறிய பெட்டியை அங்கிருந்த சோபாவின் மீது வைத்தவர், “இதற்கு மேல் இந்தப் பாரத்தைத் தூக்கி சுமக்க என்னால் முடியாது... வாழ்ந்த வரை போதுமென்று எனக்குத் தோணுகிறது” மீண்டும் மகன் முன் வந்தவர்,

“கடைசியாய் ஒரு முறை கேட்கிறேன்... ஆரா என்னை மன்னிக்கவே மாட்டியா?” கைகள் இரண்டையும் ஏந்தி கொண்டு அவர் கேட்டது ராகவன், சுமதி, மயூரி மூவருக்கும் கண்கள் கலங்கியது. ஆனாலும் ஆரனின் மனதை அறியாமல் தாங்கள் ஏதும் சொல்ல கூடாது என்று பேசாமலிருந்தனர். அவனோ அன்னையின் நாடகம் தன் மனதை சிறிதும் மாற்றாது என்பது போல் கல்லை போல் இறுகிய முகத்துடன் நின்றிருந்தான்.

“நான் போகிறேன் ஆரா... அருமையான வாழ்க்கையைத் தொலைத்த நான் வாழவே அருகதையற்றவள்...” என்றபடி அவனிடம் விடைபெற்றவர் அங்கிருந்து வேகமாய் வெளியேறினார்.

அவர் அங்கிருந்து சென்றும் வெகுநேரம் கல்லாய் நின்றிருந்தவனைத் தொந்திரவு செய்யாமல் மூவரும் அங்கிருந்து அகன்றனர். ஆரனின் மனம் பலவித உணர்ச்சிகளில் தத்தளித்துக் கொண்டிருந்தது. அதைச் சமன் செய்ய அவன் தன் மனைவியை நாடி சென்றான்.

கட்டிலில் அமர்ந்திருந்த மயூரியிடம் வந்தவன், "பேபி அவங்க... அவங்க..." கண்கள் கலங்க, முகம் சிவந்திருக்க அவன் நின்றிருந்த தோற்றம் அவள் மனதை உலுக்க... இரு கரத்தை அவனை நோக்கி நீட்டியவள், அவனைப் பார்த்து வாவென்பது போல் தலையசைக்க... அடுத்தக் கணம் அவன் அவள் கையில் சரணடைந்தான். தன் வேதனைக்கு எல்லாம் அவள் தான் மருந்து என்பது போல் அவள் மடியில் படுத்து அவளை இடுப்போடு சேர்த்து அணைத்திருந்தவன் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. அவனின் மனதை உணர்ந்தவளாய் அவள் அவனின் தலையை ஆறுதலாய் வருடி கொடுத்தாள்.

****

ஆரனிடம் பேசிவிட்டு வெளியில் வந்த வனஜா காரோட்டியிடம், "என்னை ரயில்வே ஸ்டேசனில் இறக்கி விட்டுட்டு... நீ ஊருக்கு போ..." என்று கட்டளையிட... அவர் சொன்னதை அவன் அப்படியே செய்தான். இறங்கும் போது தன் கைப்பையை எடுத்தவர் பின்பு என்ன நினைத்தாரோ... அதிலிருந்த பணத்தை எல்லாம் காரோட்டியிடம் கொடுக்க... அவனோ அவரை விசித்தரமாய்ப் பார்த்தவன் பணத்தைக் கண்டதும் வாயெல்லாம் பல்லாக அதை வாங்கிக் கொண்டான். விறுவிறுவென ரயில் நிலையத்திற்குள் நுழைந்தவர் அங்கிருந்த ஆயிரக்கணக்கான ஆட்களோடு கலந்து காணாமல் போனார்.

கங்கை ஆறு என்றும் போல் இன்றும் அமைதியாய் ஓடி கொண்டிருக்க... அங்கு நின்று கொண்டிருந்த மக்கள் தான் எப்பொதும் போல் சலசலத்து கொண்டிருந்தனர். அங்குக் கரையோரம் நின்று கொண்டிருந்த வனஜா ஆற்றை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். தன் கையிலிருந்த

கைப்பையைத் திறந்து அதிலிருந்த தன்னோட அடையாள அட்டை, கிரெடிட் கார்ட் அட்டை எல்லாவற்றையும் எடுத்தவர் அதை உடைத்து ஆற்றில் தூக்கி போட்டார். பின்பு தானும் ஆற்றில் இறங்கினார்.

அவரின் மனக்கண்ணில் கண்ணன் மற்றும் ராமனின் முகங்களே மாறி வந்தது. கண்ணனோடு காதலுடன் கூடிய இனிமையான தாம்பத்தியமும், ராமனுடன் கூடிய காமத்துடன் கூடிய களியாட்டமும் அவரின் கண் முன்னே தோன்றி அவரின் மனசாட்சியைக் குத்தி கிழித்தது. அதன் தாக்கம் தாங்க முடியாமல் கண்ணை மூடியவர் தன் நடையை மட்டும் நிறுத்தவில்லை. அவரின் முட்டிக்கால் அளவு உயரமிருந்த ஆற்றின் நீர் அவரின் தோளுக்கு வந்து பின்பு மெல்ல மெல்ல முன்னேறி அவரின் தலையை மூழ்கடித்தது.

நாசி துவாரம் வழியே நுழைந்த நீரானது அவரின் மூச்சுச் சுவாசத்தைத் திணற செய்தது. மூச்சு காற்றிற்காகத் திறந்த அவரின் வாய் வழியே நீரானது அவரின் உடலுக்குச் செல்ல... அது மெல்ல அவரை மரணத்தின் வாயிலை நோக்கி அழைத்துச் சென்றது. இவ்வளவுக்கும் அவர் உயிர் வாழ்வதற்காகப் போராடவில்லை. நன்கு நீச்சல் தெரிந்த அவர் வாழ விருப்பம் இல்லாமல் மரணத்தை இரு கை கொண்டு ஆசையுடன் அரவணைத்துக் கொண்டார்.

இறுதியாய் அவர் மூச்சு விடும் போது கண்ணன் சிரித்த முகமாய் அவரை வாவென்பது போல் இருகரம் நீட்டி அழைப்பது போல் அவருக்குப் பிரம்மை தோன்ற...
“அத்தான்... உங்களைத் தேடி நான் வர்றேன்... நீங்களாவது என்னை மன்னித்து ஏற்றுக் கொள்வீங்களா?” அவர் உதடுகள் மெதுவாய் முணுமுணுக்க... அதை ஆமோதிப்பது போல் தலையசைத்து சிரித்த கண்ணனின் பிம்பம் தன் கையை அவரை நோக்கி நீட்ட... முகம் மலர கணவனின் கையைப் பற்றிய வனஜாவின் உயிர் அடுத்த நொடி பிரிந்து தன்னவனிடம் சென்று ஐக்கியமானது.

“ஹலோ ஆரா தம்பி... நான் உங்க பேமிலி லாயர் வேலாயுதம் பேசறேன்... என்னை நியாபகம் இருக்குங்களா?” வேலாயுதம் ஆரனின் குடும்ப வக்கீல்... அன்று அவனுக்காக நீதிமன்றத்தில் வாதாடியவரும் அவரே... அவனின் தண்டனையைக் குறைக்க அவர் எடுத்த பெரும் முயற்சிகளை அவன் நன்கு அறிவான். இப்போது அவர் எதற்காகத் தன்னைத் தொடர்பு கொள்கிறார்? என்பதை அவனால் அனுமானிக்க முடியவில்லை.

“உங்களை நியாபகம் இல்லாமல் போகுமா அங்கிள்? எப்படியிருக்கீங்க? நல்லாயிருக்கீங்களா?” அவனின் அடுத்தடுத்த கேள்விக்கு அவர் பதில் சொல்லாமல்,

“தம்பி... அம்மா இறந்துட்டாங்க...” அவர் சொல்வது உண்மை தானா? இல்லை தன் பிரம்மை ஏதுமா? ஐந்து நாட்களுக்கு முன் நல்ல திடகாத்திரமாய்ப் பார்த்த தன் தாய் இறந்துவிட்டார் என்பதை அவனால் நம்ப முடியவில்லை.

“அங்கிள்... என்ன சொன்னீங்க?” உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவன் பதட்டத்துடன் கேட்க...

“அம்மா இறந்துட்டாங்க தம்பி...” அவர் மீண்டும் சொல்ல... அவனின் உடம்பில் ஒரு அதிர்வு அலை அவனையும் அறியாமல் ஓடியது. ஒரு நிமிடம் அலைப்பேசியைக் கையில் பிடித்தபடி அப்படியே உறைந்து போனான். தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்று சும்மாவா சொன்னார்கள்? என்ன தான் பெத்த தாய் மேல் வெறுப்பிருந்தாலும் அவரின் மரணம் அவனை உலுக்கத் தான் செய்தது.

“எப்படி அங்கிள்?” அவன் குரல் அவனுக்கே கேட்கவில்லை. அதை அவர் அவன் வருத்தப்படுவதாய் நினைத்துக் கொண்டார்.

“எனக்கும் ஒண்ணும் தெரியாது ஆரா... இன்னைக்குக் காலையில் உங்க அம்மா கொடுக்கச் சொன்னதா கம்பெனி

மேனஜர் ஒரு லெட்டர் கொண்டு வந்து கொடுத்தார். அதைப் படித்துப் பார்த்து தான் எனக்கே விசயம் தெரியும். அவரின் லெட்டரை படிக்கிறேன் கேள்...” என்றவர் வனஜாவின் கடிதத்தைப் படிக்கத் தொடங்கினார்.

கடிதத்தின் சாராம்சம் இது தான்... வாழ பிடிக்காததால் தான் கங்கையில் மூழ்கி உயிரை மாய்த்துக் கொள்ளப் போவதாகவும்... இனிமேல் தங்களது சொத்துக்களை மகன் ஆரன் வந்து நிர்வகிப்பான் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். இந்தக் கடிதம் வக்கீல் கையில் கிடைக்கும் நேரம் அவரது உயிர் உடலை விட்டுப் பிரிந்திருக்கும் என்பதையும் குறிப்பிட்டிருந்தார். அவர் படித்து முடித்ததும் இனம் புரியாத பாரம் ஒன்று தன் மனதை அழுத்துவதை உணர்ந்தான் ஆரன்.

“கடைசி வரை உன் அம்மாவை பார்க்க வராமல் இருந்து விட்டாயே ஆரா... அப்படி என்னப்பா உன் அம்மாவின் மேல் கோபம்? இப்போது பார்... மனம் வெறுத்துப் போய்த் தற்கொலை பண்ணிக்கிட்டாங்க... மகனாய் நீ செய்யும் எந்தக் காரியத்தையும் உன்னாலும் செய்ய முடியவில்லை...”

அதைக் கேட்டு அவன் மனதுக்குள் ஒரு நிம்மதி பரவத் தான் செய்தது. ஒரு தாய்க்குச் செய்யக் கூடிய கடமையை, சடங்குகளை அவனால் நிச்சயம் செய்ய முடியாது. நல்லவேளை அந்த மாதிரியான ஒரு சங்கடமான நிலையை அவர் தன் மகனுக்கு வைத்து விட்டு போகவில்லை.

“என்ன ஆரா பதிலை காணோம்? நான் ஒரு மடையன் உனக்கும் இது வருத்தமாகத் தானே இருக்கும் அது தெரியாமல் ஏதேதோ பேசி கொண்டிருக்கிறேன்...”

“இல்லை நீங்கள் கேட்டதில் தப்பில்லை... ஜெயிலுக்குப் போய்விட்டு வந்த என்னால் அவங்களோட கௌரவம் பாதிக்க வேணாமென்று தான் நான் தள்ளியிருந்தேன். வேறு எந்தக் காரணமும் இல்லை அங்கிள்” தாயை ‘அம்மா’ என்று அழைக்க முடியாமல் ‘அவங்க’ என்று

குறிப்பிட்டவனால் அவரை அடுத்தவரிடம் விட்டு கொடுத்து பேச முடியவில்லை. சமுதாயத்தில் பெரிய அந்தஸ்தில் இருந்த அவர் இறந்த பின் தரம் தாழ்ந்து போவதை அவன் விரும்பவில்லை.

“சரி ஆரா... நீ எப்போது உன் பொறுப்புகளைக் கையிலெடுக்கப் போகிறாய்? உனக்காக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் காத்து கொண்டிருக்கின்றனர்” அவர் சொல்லவும் தான் அவனுக்கு அவன் அன்னை கொடுத்து சென்ற சிறு பெட்டி நியாபகம் வந்தது. அன்றே அதை மயூரியின் வசம் ஒப்புடைத்தவன் அதை மறந்தும் போனான்.

“இப்போது நான் கொல்கத்தாவில் இருக்கேன்... இன்னும் பத்துநாளில் நான் சென்னைக்கு வருவேன்... அதுவரை நீங்க பொறுத்துக் கொள்ள முடியுமா?” இன்னும் பத்துநாளில் அவன் மயூரியையும், குழந்தையையும் அழைத்து வருவதற்காகச் சென்னை புறப்படுவதாக இருந்தான்.

“ஒண்ணும் பிரச்சினையில்ல ஆரா... மெதுவாய் வா... ஆனால் வந்ததும் அம்மாவுக்குச் செய்ய வேண்டிய சடங்குகள் செய்ய வேணும்... நல்லா வாழ்ந்த மனுசி...” அவரின் குரல் உண்மையான வருத்தத்துடன் ஒலித்தது.

“சரி அங்கிள்... நான் ஃபோனை வச்சிடுறேன்...” அதைப் பற்றி மேலும் பேச விரும்பாமல் அவன் அலைப்பேசியை அணைத்தான்.

அன்னையின் மரணம் அவனுக்குமே சற்று அதிர்ச்சி தான் என்பதால் அதற்கு மேல் அவனால் வேலை செய்ய முடியுமென்று தோன்றவில்லை. அரைநாள் விடுப்பு எடுத்து விட்டு வீட்டிற்கு வந்து படுக்கையில் விழுந்தவன் மனதில் அவனது சிறுவயது நியாபகங்கள் வலம் வர மனதுக்குள் தாங்க முடியாத வலியொன்று ஏற்பட... அவனையும் அறியாமல் அவனின் கைகள் அலைபேசியை எடுத்து மயூரியின் எண்ணை அழுத்தியது.

****

“ஆரு... நான் ஒண்ணு சொன்னா கோபிக்க மாட்டீங்களே...?” சொன்ன மயூரியை புரியாமல் பார்த்தான் ஆரன். கொஞ்ச நேரம் முன்பு தான் சென்னை வந்து சேர்ந்திருந்தான். வந்தவுடனேயே வக்கீல் அவனை அழைத்த விசயத்தை அவளிடம் சொல்லிவிட்டான். அதைக் கேட்டு தான் மயூரி அவனிடம் அவ்வாறு கேட்டது.

“சொல்லு பேபி... உன்னிடம் நான் கோபப்படுவேனா...?” கையிலிருந்த மகனுக்கு விளையாட்டு காட்டி கொண்டே அவன் சொல்ல...

“நான் உங்களுடன் வரவா?” அவள் கேட்கவும் அவளைக் கூர்மையுடன் பார்த்தான்.

“என்னைத் தப்பா எடுத்துக்காதீங்க...” அவசரமாய் அவள் சொல்ல... கையிலிருந்த குழந்தையைப் படுக்கையில் படுக்க வைத்தவன் அவளருகில் நெருங்கி அமர்ந்தான்.

“நான் எதுக்குப் பேபி உன்னைத் தப்பா எடுத்துக்கப் போறேன்... ம்... சொல்லு” கேட்டுக் கொண்டே அவளைத் தன் மீது சாய்த்துக் கொண்டான்.

“நான் வர்றேன் சொன்னது உங்க சொத்துக்களைப் பார்க்கிறதுக்கு இல்ல...” அவள் முடிக்கும் முன்னே...

“லூசு மாதிரி பேசாதே பேபி... உன்னை ஒரு போதும் நான் அப்படி நினைச்சது இல்லை” அவளை அவன் கடிந்து கொண்டான்.

“நான் வர்றேன் சொன்னது... உங்க அம்மாவுக்காகத் தான். நீங்க அவங்களுக்குக் காரியம் செய்ய விருப்பமில்லைன்னு சொல்றீங்க... அது உங்க விருப்பம். உங்களுக்கும் அவங்களுக்கும் இடையில் என்ன நடந்ததுன்னு எனக்குத் தெரியாது. அதைத் தெரிஞ்சிக்கவும் எனக்கு விருப்பம் இல்லை” அவள் சொல்லும் போதே அவன் உடல் விறைத்தது.

“ஆனா ஆரு... ஒரு பேரனா நம்ம மகன் அவங்களுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செஞ்சா என்ன? அவங்க என்ன தான் தப்புச் செய்திருந்தாலும் இறந்த பின்னும் அவங்க மேல நாம கோபத்தைக் காட்டணுமா?” என்றவள் அவன் முகம் உணர்ச்சியில்லாமல் இருப்பதைக் கவனித்து அவனின் தாடையில் கை வைத்து தன் புறம் திருப்பியவள்,

“என் மனசுக்கு தோணியதை சொன்னேன்... ஆனால் இறுதி முடிவு உங்களோடது தான் ஆரு... உங்களுக்குப் பிடிக்காததை நான் என்னைக்குமே செய்ய மாட்டேன்” தன் கண்களை நேர் பார்வையாய் பார்த்து கூறியவளை தன்னுடன் அணைத்துக் கொண்டான். அவள் தன் குடும்பப் பின்னணியைப் பற்றித் தெரிந்து கொள்ள அப்போதும் ஆர்வம் காட்டாததை அவன் மனம் குறித்துக் கொண்டது. அது அவனுக்குப் பெருத்த ஆறுதலை தந்தது.

“என்னைக்குத் தவறா சொல்லியிருக்கே... இன்னைக்குத் தவறா சொல்வதற்கு? நீ சொல்றபடி செஞ்சிடலாம்...” அன்னையின் மரணத்தில் கொஞ்சம் நெகிழ்ந்திருந்த அவனின் மனம் அவளின் பேச்சில் முற்றிலும் நெகிழ்ந்து போனது.

அடுத்து வந்த காரியங்கள் மளமளவென நடைபெற்றது. தான் பிறந்த ஊருக்கு மனைவி, குழந்தையுடன் ஆரன் புறப்பட... ராகவனும், சுமதியும் குழந்தைக்காக என்று அவர்களுடன் இணைந்து கொண்டனர். அங்கு வந்து ஆரனின் குடும்பச் செல்வாக்கை கண்டு ராகவன் பிரமித்துப் போனார். அவரின் காதில், ‘யாருமில்லாத அநாதை பயல்... ஒன்றுமில்லாத வெறும் பயல்...” அன்று ஆரனை கேவலமாய்த் தான் இகழ்ந்து பேசியது ஒலிக்க... மனம் குன்றிப் போனார்.

“என்னை மன்னித்துவிடுங்க மாப்பிள்ளை...” அவனின் கையைப் பிடித்துக் கொண்டு அவர் மன்னிப்பு வேண்ட...

“அதையெல்லாம் இன்னமும் நீங்க மறக்கலையா? நான் எப்பவோ அதை மறந்துட்டேன்...” என்றவன் அவரை அன்போடு அணைத்துக் கொண்டான்.

வெகுநாட்கள் இல்லை இல்லை வெகு ஆண்டுகள் கழித்துச் சொந்த வீட்டில் காலடி வைத்த ஆரனின் மனம் பலவித உணர்ச்சிகளில் சிக்கி தவித்தது. தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு நடைப்பயின்ற நாட்கள், தோட்டத்தில் அவருடன் விளையாடிய நாட்கள் என எல்லாம் அவன் கண் முன் விரிந்தது. அதே போல் அவன் அன்னை செய்த துரோகமும் சேர்ந்து அவன் கண் முன் விரிய... அவன் முகம் பாறையாய் இறுகியது. அவனின் முக மாற்றம் கண்டு மயூரி அவன் கையை ஆறுதலாய் பிடித்துக் கொள்ள... சட்டென்று அவன் தன் உணர்விலிருந்து மீண்டு அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

மறுநாள் தன் மகனை வைத்து தாய்க்கு வேண்டிய காரியங்களை அவன் செய்த போதும்... அதை அவன் முன்னின்று நடத்தவில்லை. மயூரியை வைத்தே எல்லாவற்றையும் பொறுப்பாய்ச் செய்து முடித்தான். ஏனோ அவனின் மனம் அந்தச் சடங்குகளில் லயிக்கவில்லை. அவன் அன்னை ஏற்படுத்திய ரணம் அவன் உயிர் இருக்கும் வரை ஆறாது... மறையாது... என்பதை அவன் மனம் உணர்ந்து தான் இருந்தது.

குடும்ப வக்கீலிடம் கலந்து ஆலோசித்தவன் பிடிவாதமாய் அவனின் சொத்துக்களை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டான். அவனுக்குத் தெரியும்... இதே ஊரில் அவன் வாழ்ந்தால் அவன் மூச்சு முட்டியே செத்து போவான் என்று... ஆனாலும் தந்தை கட்டி காத்த தொழிலை ஏற்க முடியாத நிலையில் இருக்கும் தன் நிலையை அறவே வெறுத்தான். இப்போது அவனுக்கு வேண்டியது தன் மனைவி, குழந்தையுடன் நிம்மதியான வாழ்வு... அது இங்கே இருந்தால் கிடைக்குமா? என்று அவனுக்குத் தெரியவில்லை.

வக்கீலுக்குமே அவனின் முடிவு கேட்டு அதிர்ச்சி தான். அவனிடம் பேசி பேசி அவன் மனதை மாற்ற முன்றார். ஆனால் பலன் என்னவோ பூஜ்யமாய்ப் போனது. அதன் பின் அவன் விருப்பம் என்று அவர் விட்டுவிட்டார். அவரிடம் பேசி அத்தனை சொத்துக்களையும் விற்க ஏற்பாடு

செய்தான். அதன் மூலம் வரும் வருமானத்தை அப்படியே நல்லசிவம் நடத்தும் அமைப்புக்கு அளிக்கச் சொன்னான். அதைச் சட்டரீதியாக நிறைவேற்றும் அதிகாரத்தை வேலாயுதத்துக்கு அவன் எழுதி கொடுத்த போது தான் அவன் மனதில் பாரம் இறங்கிய உணர்வு தோன்றியது. ஆரன் தன் சொத்துகளை விற்று அதைச் சேவை செய்வதற்காக நல்லசிவத்திடம் கொடுத்ததை அறிந்த ராகவன் மனதில் ஆரன் பலபடி உயர்ந்து போனான்.

அவனின் முடிவை அறிந்த மயூரியோ மேற்கொண்டு அவனிடம் எதுவும் கேட்டு அவன் மனதை கஷ்டப்படுத்த விரும்பவில்லை. அவன் எது செய்தாலும் அது சரியாகத் தான் இருக்கும் என்று அவள் உறுதியாய் நம்பினாள். அவன் மீதான அவளின் அந்த நம்பிக்கையே அவனை அவள் பால் மேலும் மேலும் ஈர்த்தது.

****

“ஆரு... வேலைக்குப் போகலியா?” வீட்டின் அழைப்புமணி ஓசை கேட்டு கதவை திறந்த மயூரி... அங்கே ஆரன் நின்றிருப்பதைக் கண்டு ஆச்சிரியப்பட்டாள். பின்னே தன் அன்னையை வழியனுப்பி வைப்பதற்காகச் சென்றவன் நேரே வேலைக்குச் சென்று விடுவான் என்று அவள் எண்ணியிருக்க... அவன் என்னடா என்றால் வீட்டிற்கு வந்து நிற்கிறான்.

ஆரனும், மயூரியும் கொல்கத்தா வந்து பத்துத் தினங்கள் ஆகிவிட்டது. பேரன் கைக்குழந்தை என்பதால் மகளைக் கொண்டு விட வந்த சுமதி, அவளுடன் இந்தப் பத்து நாளும் கூட இருந்து வீட்டை ஒழுங்குப்படுத்தி எல்லாச் சௌகரியங்களையும் செய்து கொடுத்தவர்... மைதிலியம்மா அருகில் இருக்கும் தைரியத்தில் மகளை விட்டு விட்டு இன்று தான் ஊருக்கு கிளம்பி சென்றார்.

“ஸ்ரீ தூங்கிட்டானா...?” அவள் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் மகனை பற்றி அவன் விசாரித்தான். தன் தந்தையின் நினைவாய் மகனுக்குக் கண்ணன் என்று பெயரிட்ட ஆரன்... அந்தப் பேர் சொல்லி அழைக்க முடியாத

காரணத்தால் ‘ஸ்ரீ’ என்ற பெயரை கண்ணனுடன் சேர்த்து ‘ஸ்ரீகண்ணன்’ என்று மகனுக்குப் பெயர் வைத்துவிட்டான்.

“இவ்வளவு நேரம் முழிச்சு இருந்திட்டு இப்போ தான் தூங்குறான்”

“அப்போ இன்னும் ரெண்டு மணி நேரத்திற்கு எந்திரிக்க மாட்டான்...” என்றவன் அறை கதவை ஒருக்களித்துச் சாய்த்து வைத்து விட்டு ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்தவன்,

“பேபி... இங்கே வா...” அவளை அழைக்க...

“ஆரு... காலையில் இது என்ன?” அவள் சிணுங்கினாலும் அவன் அருகில் வந்து அமர தவறவில்லை. அவனோ அமைதியாய் அவளின் கையைப் பிடித்துக் கொண்டு எப்படி ஆரம்பிப்பது? என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

“என்ன ஆரு... ஏதாச்சும் பேசணுமா?” கணவனின் மனநிலையைச் சரியாகக் கணித்தவளாய் அவள் கேட்டாள்.

“நீ மட்டும் என் வாழ்கையில் வரவில்லை என்றால்... நான் என்னவாகி இருப்பேனோ பேபி?” கண்கள் கலங்க, குரல் தழுதழுக்க அவன் அவளை அணைத்துக் கொண்டான். தன் மனம் புரிந்து நடக்கும் மனைவியை நினைத்து அவன் மனம் உருகியது.

“நான் இல்லைன்னா என்ன... வேறொருத்தி வந்திருப்பா... சிம்பிள் மேட்டர் இது கூடத் தெரியலையா?” அவனின் பேச்சு அவளின் மனதுக்கு விருப்பமாய் இருந்தாலும் அவனின் மனநிலையை மாற்றும் பொருட்டு அவள் கேலியாய் பேச...

“எனக்கு வேறொருத்தி எல்லாம் வேணாம்... இந்த ஒருத்தியே போதும்...” அவளின் முன்னுச்சியில் இதழ் பதித்து அவன் சொன்ன போது அவள் இதயம் அவள் வசமில்லை... தாயை தேடும் கன்று குட்டியாய் அவனிடத்தில் தாவி ஓடியது.

“ஆரு...” அவள் சுகமாய் அவன் நெஞ்சில் புதைந்து கொண்டாள். அவனும் அவளின் அருகாமையைக் கண்மூடி ரசித்தான். பின்பு என்ன நினைத்தானோ,

“பேபி நான் உன் கிட்ட ஒரு முக்கியமான விசயம் பேசணும்?” அதைச் சொல்லும் போதே அவன் குரல் நடுங்கியது. தன் குடும்பத்தைக் குறிப்பாகத் தன் தாயை பற்றித் தான் சொன்னதும்... அதற்குத் தன்னவளிடத்தில் என்ன மாதிரியான எதிரொலி இருக்கும்? என்று அவன் மனம் பரிதவிப்பது அவனுக்கு மட்டுமே தெரியும்.

அவனின் குரலில் தெரிந்த பேதத்தில் அவனிடமிருந்து விலகியவள், “என்ன விசயம் ஆரு...?” புருவம் சுருக்கி அவனைக் கேள்வியாய் பார்த்தாள்.

“என் குடும்பத்தைப் பத்தி... என்னைப் பத்தி... குறிப்பா சொல்லணும்ன்னா என் அம்மாவை பத்தி... நான் ஏன் ஜெயிலுக்குப் போனேன்? என்பதைப் பத்தி...” அவன் பேசி கொண்டிருக்கும் போதே அவனின் வாயை தன் கை கொண்டு மூடியவள்... அவனின் முகத்தில் தெரிந்த வேதனையைக் கண்டு வேதனையடைந்தவளாய்,

“வேணாம் ஆரு... உங்களை வருத்தும் எந்த விசயமும் நீங்க சொல்ல வேணாம்... இது தெரிஞ்சு நான் என்ன செய்யப் போறேன்... எனக்கு நீங்க மட்டும் போதும். நீங்க கஷ்டப்படுறது எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு...” தனது துன்பம் அவளையும் பாதிக்கிறது என்பதை உணர்ந்தவன் அவளின் கையை இறுக பற்றிக் கொண்டான். அதிலிருந்த அழுத்தத்தில் அவனின் காதலின் அளவு அவளுக்குப் புரிந்தது.

“சொல்ல வேணாம்ன்னு சொல்றது உன்னோட பெருந்தன்மையா இருக்கலாம் பேபி... ஆனால் என்னை உயிராய் காதலிக்கும்... கள்ளமற்ற நேசத்தை என் மேல் காட்டும் உன் அன்புக்கு முன்னால் நம்மிடையே எந்த ஒளிவு மறைவும் இருக்க வேணாம் என்று நான் விரும்பறேன் பேபி...” என்றவன் தன் கடந்த காலத்தைச் சொல்ல துவங்கினான்.

அவன் சொல்ல சொல்ல... அவளுக்கு அவனின் தாய் மேல் கட்டுகடங்காமல் கோபம் வந்தது. அது தன்னவனுக்கு அவர் இழைத்த கொடுமையைக் கண்டு... அது அவன் மனதில் ஆறாத ரணமாய் இன்னமும் இருந்து அவனை வருத்துவது கண்டு வந்தது. ஆனால் ஒரு பெண்ணாய் வனஜாவின் உணர்வுகளை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. அதற்காக அவர் தேர்ந்தெடுத்த முறையை அவள் சரியென்று நினைக்கவில்லை. கணவனுடன் மனம் விட்டு பேசி தீர்க்க வேண்டிய சிறு பிரச்சினையை இவ்வளவு பூதாகரமான விசயமாய் மாற்றிய அவரின் அறியாமையைக் கண்டு அவள் உள்ளம் அவருக்காய் வருந்தியது.

அதேசமயம் அவளுக்கு இன்னொன்றும் நியாபகத்தில் வந்தது. இவ்வளவு நாள் ஆரனின் முன்னுக்குப் பின் நடவடிக்கைக்கான காரணத்தை இப்போது அவளால் உணர முடிந்தது. அவனின் அன்னை ஏற்படுத்திய காயத்தின் விளைவால் அவனால் எந்தப் பெண்ணையும் நம்ப முடியவில்லை என்பதையும் உணர்ந்தாள். ஆனாலும் அவன் தன் மேல் நம்பிக்கை வைத்துத் தன்னைக் காதலித்து, மணம் முடித்தது அவளுக்குப் பெருத்த ஆச்சிரியத்தை அளித்தது. அதன் பின் அவளிடம் அவன் கடுமையாய் நடந்து கொண்ட சம்பவங்களை நினைத்து பார்த்தவளுக்கு எல்லாமே புரிந்து போனது.

அவன் அன்னையை நியாபகப்படுத்திய அன்று... ரிஷியிடம் அவள் பேசிய அன்று... என்று அந்தக் குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே அவனின் மனநிலை மோசமாக இருந்ததை அவள் புரிந்து கொண்டாள். தாய் மீது அவன் கொண்ட கோபம் பல ஆண்டுகளாய் அடக்கப்பட்டு அவனின் மனதில் புதைந்தது இருந்தது எல்லாம் பீறிட்டு வெளியில் வந்து அவளைக் குத்தி கிழித்திருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டாள். ஆனாலும் அவன் மேல் அவளுக்குக் கோபம் வரவில்லை. மாறாக அவன் மேல் பரிதாபமே வந்தது.

உயிர் : 31

“பேபி... பேபி...” ஆரன் தன்னை உலுக்கவும் தான் தன்னுணர்வு பெற்றவள் அவனைப் பார்த்தாள். தேர்வு எழுதிவிட்டு தேர்ச்சிக்காகக் காத்திருக்கும் மாணவன் போல் அவன் அவளையே பதற்றத்துடன் பார்த்து கொண்டிருப்பதைக் கண்டாள்.

“பேபி நீ... என்னை வெறுத்து விட்டாயா...? என்னைப் பார்த்தால் உனக்கு அருவருப்பாயிருக்கா?” அவளின் மௌனத்தை அவன் வேறு மாதிரியாய் எடுத்துக் கொண்டான்.

“ஆரு...” என்று அவனை அணைத்து கொண்டவள், “எந்தச் சூழ்நிலையும் உங்களை என்னால் வெறுக்க முடியாது. உங்க வாழ்க்கையில் நடந்த விசயத்துக்கு நீங்க எப்படிப் பொறுப்பாவீங்க? அந்தச் சூழ்நிலையில் நீங்க அப்படிச் செஞ்சது சரி தான்... நானா இருந்தாலும் அதைத் தான் செய்திருப்பேன்... மத்த ரெண்டு பேரை கொலை செய்த உங்களால் உங்க அம்மாவை கொலை செய்ய முடியாமல் போனதுக்குக் காரணம்... உங்க அடிமனதில் அவர் மேலிருந்த பாசம் தான். இதிலிருந்தே தெரியலையா... நீங்க எவ்வளவு நல்லவர்ன்னு... யார் என்ன சொன்னால் என்ன...? என்னைப் பொறுத்தவரை நீங்க நல்லவர் தான்...”

“தேங்க்ஸ் பேபி... என்னைப் புரிந்து கொண்டாயே...” அவள் தன் மேல் வைத்த நம்பிக்கை கண்டு அவன் மனமும், கண்களும் கலங்கியது. கலங்கிய மனதை சமன்படுத்த அவளின் அணைப்பில் கட்டுண்டு இருந்தான்.

“பேபி அன்று நான் உன்னிடம் நடந்து கொண்ட முறைக்கு இன்று நான் மன்னிப்புக் கேட்கிறேன்... மன்னிப்பு என்ற ஒற்றை வார்த்தையில் நான் செய்த தப்பை நியாயப்படுத்த முடியாது...” அவன் திடுமெனச் சொல்லவும் அவனை நிமிர்ந்து பார்த்தவள்,

“அதை நான் எப்பவோ மறந்தாச்சு ஆரு... அதை ஏன் திரும்பப் பேசுறீங்க...?”

“இருந்தாலும்... நான் செய்தது தப்பு தானே” அவன் குரல் கலங்கி ஒலித்ததை அவள் கண்டு கொண்டாள்.

“உங்களுக்கு ஒண்ணு தெரியுமா...? எல்லா ஆண்களின் மனதுக்குள்ளும் அவர்களுக்கே தெரியாமல் வக்கிரமான மனநிலை ஒன்று ஒளிந்திருக்கும். அது சமய சந்தர்ப்பம் வரும் போது தான் வெளிப்படும்... ஆண்கள் எல்லோருமே நல்லவர்கள் என்றால்... விலைமாந்தர்களின் உடலில் காணப்படும் காயங்களுக்கு யார் காரணம்? அதுவும் ஒரு ஆணால் ஏற்பட்டது தானே. வீட்டில் மனைவி இடத்தில் மென்மையைக் காண்பிக்கும் அதே ஆண் தான் விலைமாந்தரிடம் தன் ஆக்ரோசத்தை, கோபத்தைக் காண்பிக்கிறான். அதனால நீங்க மட்டும் தான் தப்பு செஞ்சிங்கன்னு பீல் பண்ணாதீங்க?” அவள் சொல்லவும் அவன் முகம் வாடி போனது.

“இன்னமும் என்ன?” அவனைப் பார்த்து அவள் கேட்க...

“நான் விலைமாந்தரிடம் போகும் ஆணை போல் மோசமானவனா பேபி? அவர்களிடம் நடந்து கொள்வது மாதிரி நினைத்துக் கொண்டு தான் உன்னிடம் நான் அப்படி நடந்து கொண்டேனா? அந்தளவுக்கு நான் கெட்டவனா பேபி?” அவன் சொல்லவும் தான்... தான் சொன்னதைத் தவறாக அவன் புரிந்திருக்கிறான் என்பதை அவள் உணர்ந்தாள்.

“அய்யோ நான் அப்படிச் சொல்லல ஆரு... அந்த மாதிரி ஆண்களே தப்பு செஞ்சிட்டு உயிர் வாழும் போது... நீங்க ஏன் இவ்வளவு பீல் பண்றீங்கன்னு தான் சொன்னேன். நீங்களும் அவங்களும் ஒண்ணா ஆரு...? உங்களுக்குக் கோபமோ, தாபமோ எதுவாயிருந்தாலும் நீங்க என்னிடம் தான் காட்டியிருக்கீங்க... அதனால எனக்கு உங்க மேல கோபம் வரல” அவன் முகம் இன்னமும் தெளியாமல் இருப்பதைக் கண்டு,

“ஆரு... உண்மையைச் சொல்லவா? உங்க அம்மா உங்க மனசுல ஏற்படுத்திய காயம் இன்னமும் ஆறாமல் அப்படியே ரணமாயிருக்கு... அது தான் அன்னைக்கு உங்களை அப்படி

நடந்துக்க வச்சது... அப்படி நடந்துகிட்டதுக்கு நீங்க மட்டும் பொறுப்பில்ல ஆரு... நல்ல குடும்பச் சூழ்நிலையை உங்களுக்குக் கொடுக்காத உங்க அம்மா மட்டுமே அதுக்குக் காரணம். இப்பவும் தப்பு உங்க மேலில்லை ஆரு...”

“பேபி நீ சொல்றதை வச்சு பார்க்கும் போது எனக்குப் பயமாயிருக்கு... அப்போ நான் ஒரு மனநோயாளியா? என் அம்மாவின் நடத்தை என் மனதில் இவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தியிருக்கா? இன்னமும் அந்தப் பாதிப்பு என் மனதுக்குள் இருக்குமோ? திரும்பவும் என்னையும் அறியாமல் உன்னைக் காயப்படுத்தி விடுவேனோ பேபி? நான் நல்ல சைக்கியாட்ரிஸ்ட்டை போய்ப் பார்க்கவா? எனக்கு வாழ்க்கையை நினைச்சா பயமாயிருக்கு? இன்னொரு முறை உன்னைக் காயப்படுத்தும் சக்தி எனக்கில்லை பேபி...” ஒரு முறை தவறு செய்துவிட்டுப் பலமுறை வருந்தும் அவன் நிலை கண்டு அவளுக்கே பரிதாபமாக இருந்தது.

“அய்யோ ஆரு... நீங்க மனநோயாளி எல்லாம் இல்லை. மனதில் இருந்த ஆத்திரம், கோபம், கவலை எல்லாம் வெளியில் வந்துவிட்டால் நம் மனசு அமைதியாய், தூய்மையாய் மாறிவிடும். அது தான் உங்களுக்கு நடந்ததும். உங்க மனசுல உள்ள கோபத்துக்கு வடிகாலாய் என்னை நினைச்சீங்க... இப்போ உங்க கோபம் எல்லாம் பறந்து போயிருக்கும். இப்போ நான் உங்க கிட்ட ஒண்ணு கேட்கிறேன்... உண்மையா பதில் சொல்லுங்க? ரிஷி மாமா கூட நான் பழகுவதை நீங்க தப்பா எடுத்துக்குவீங்களா... இல்லை...?” அவள் வாயை தன் கை கொண்டு மூடியவன்,

“இன்னொரு முறை இது போல் அபத்தமாய்ப் பேசாதே... இனிமேல் நான் உன்னைத் தப்பா எடுத்துக்கவே மாட்டேன்... உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா?” அவன் அவளைக் கடிய...

“இது தான் உங்கள் கேள்விக்கான பதில். இப்போ உங்க மனசு தெளிந்த நீரோடை போல் தெளிவாயிருக்கு... அதனால எதையும் யோசிச்சு குழப்பிக்காதீங்க... எந்த

டாக்டர் கிட்டேயும் நீங்க போக வேணாம்” அவள் கூற... கூற... அவன் மனம் தெளிவுற்றது.

“ஆரு... நான் ஒண்ணு சொன்னா கோபிச்சுக்க மாட்டீங்களே...”

“இல்லை சொல்லு...” அவள் கன்னம் தட்டி சொன்னவன் கையைத் தன் கன்னத்தோடு வைத்து கொண்டவள்,

“ஒரு பெண்ணாய் உங்க அம்மாவோட உணர்வுகளை என்னால புரிஞ்சிக்க முடியுது. அதுக்காக அவங்க செஞ்சது சரியில்ல தான். ஆனாலும் அவங்களும் அன்புக்கு ஏங்கிய பரிதாபமான ஒரு ஜீவன் தான். பாவம் அவங்க... உங்க அப்பா அவங்களுக்காகத் தனியே நேரம் ஒதுக்கியிருக்கலாம். இல்லைன்னா அவரோட அன்பை அவங்களுக்குச் சொல்லி புரிய வச்சிருக்கலாம்”

“அதை இப்போ என்னால் உணர முடியுது” என்று சொன்னவனை ஆச்சிரியமாய்ப் பார்த்தாள்.

“உன்னுடைய அன்புக்காக நான் ஏங்கும் போது அது எனக்கும் புரிஞ்சது. ஆனாலும் அவங்க என்னைக் கொஞ்சமாவது நினைச்சு பார்த்திருக்கணும் இல்ல. அவங்க சுகம் தான் பெரிசுன்னு போய்ட்டாங்க... எனக்கு அது தான் வருத்தம். அவங்களை மாதிரி எல்லாப் பெண்களும் இருந்தா... குடும்பம்ங்கிற அமைப்பு சிதைஞ்சு போகாது? அப்பா மேலேயும் தப்பிருக்கு தான் இல்லைங்கல. அவர் மட்டும் பணத்தின் பின்னாடி ஓடாமல் அம்மாவின் ஆசையை, அன்பை உணர்ந்திருந்தால் இந்த மாதிரி ஒரு நிகழ்வு நிகழ்ந்தே இருக்காது... நானும் எல்லோரையும் போல் சந்தோசமா இருந்திருப்பேன்” என்ன முயன்றும் அவனின் குரலில் சோகம் இழையோடுவதைத் தடுக்க முடியவில்லை.

“எல்லாத்துக்கும் காரணம் மனசு விட்டு பேசாதது தான்... கணவன், மனைவிக்கிடையில் கௌரவம், தயக்கம் பார்க்க கூடாது... எதுவாகயிருந்தாலும் நேருக்கு நேராய் பேசி

தீர்த்து கொள்ளணும்...” அவளின் கூற்றை ஆமோதிப்பது போல் அவனும் தலையை ஆட்டினான்.

“நீ சொல்வது உண்மை தான் பேபி...” என்றவன், “உனக்கும் என்னிடம் எதுவும் கேட்பதாக இருந்தால்... நேரிடையாய் கேட்டு விட வேணும்... அது சண்டை போடுவதாய் இருந்தாலும்...”

“நீங்களே சொல்லிட்டீங்கல்ல... இனிமேல் பாருங்க... இந்த மயூவோட பெர்பார்மன்சை...” அவள் சொல்லி கொண்டிருக்கும் போதே... அவர்களின் மைந்தன் பசியில் அழ ஆரம்பிக்க... அவள் உள்ளே ஓடினாள். தாயாய் மகனின் பசி அறிந்து பரிதவிப்புடன் உள்ளே செல்லும் அவளை மனநிறைவுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

மகனுக்குப் பசியாற்றி விட்டு வந்தவள் அவனைக் காணாது திகைத்து சுற்றும் முற்றும் பார்த்தாள். சமையலறையில் சத்தம் கேட்க அங்கே சென்று எட்டி பார்த்தாள்.

“இங்கே என்ன பண்றீங்க?” கேட்டவளின் கையில் பழச்சாறை அடங்கிய குவளையைத் திணித்தவன், “முதல்ல இதைக் குடி... தெம்பா அப்புறம் பேசலாம்...” சொன்னவனை நன்றியுடன் பார்த்தவள் ஒரே மூச்சில் அதைக் குடித்து முடித்தாள். அவனோடு பேசி கொண்டிருந்ததில்... குழந்தைக்குப் பால் கொடுத்ததில் அவளுக்கு மிகவும் பசியெடுத்தது.

“இன்னமும் வேணுமா?” அவளின் பசியை உணர்ந்தவனாய் அவன் கேட்க... அவன் அன்பில் மனம் நெகிழ்ந்தவள்... ‘வேண்டாம்’ என்பது போல் தலையசைத்து மறுக்க... அவளை அழைத்துக் கொண்டு மீண்டும் ஹாலுக்கு வந்தான்.

“பேபி... என்னோட தப்பை மன்னித்து என்னை ஏத்துக்கிட்ட மாதிரி... நீ உங்க அப்பா கூடவும் பேசலாமே...” அவளைத் தன் அருகில் அமர்த்திக் கொண்டு அவன் கேட்க...

“அவர் என்னை எது பேசியிருந்தாலும் நான் அதை மைன்ட் பண்ணியிருக்க மாட்டேன்... ஆனா அவர் பேசியது உங்களை... அதுவும் அவர் பேசியது சாதாரண வார்த்தைகளா? எவ்வளவு கடுமையான, கொடிய வார்த்தைகள் அது... அவருக்கு உண்மையில் என் மேல் பாசமிருந்தால் எனக்காக உங்களை ஏத்துக்கிட்டு இருக்கலாம்ல...” தந்தையின் மீதிருந்த கோபத்தில் அவள் முறுக்கி கொண்டாள்.

“நீ சொல்றது எல்லாம் சரி தான்... நீ உன் நிலையில் இருந்து பார்க்கிற... இதே இது அவர் நிலையில் இருந்து நீ கொஞ்சம் யோசிச்சு பாரு... நாம பண்ணிக்கிட்ட காரியம் மன்னிக்கும்படியான காரியமா? இதில் உன் மேல் எந்தத் தப்புமில்லை... தப்பு எல்லாம் என் மேல் தான்... நான் தான் அவசரப்பட்டு உன்னை உன் வீட்டாரிடம் இருந்து பிரித்துவிட்டேன். இப்போ நான் செய்த தவறின் அளவு எனக்குப் புரிகிறது. நமக்கு ஒரு பெண் பிறந்து அவள் இப்படிச் செய்தால்... நீயும், நானும் அதை ஏற்றுக் கொள்வோமா? யோசித்துப் பாரு பேபி...” அவன் சொல்ல சொல்ல... தந்தையின் மனநிலையை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

“சாரி ஆரு... நான் அப்பா கிட்ட அப்படி நடந்திருக்கக் கூடாது” அவள் மெய்யான மனவருத்ததுடன் சொல்ல... அவளை ஆதரவாய் அணைத்துக் கொண்டான் அவன்.

“இந்த மன்னிப்பை உன் அப்பாவிடம் கேட்கிறாயா பேபி?” தன் அலைப்பேசியை எடுத்து அவளிடம் அவன் நீட்ட... அதை அவள் ஆர்வமாய் வாங்கி உடனே தந்தையை அழைத்துப் பேசினாள்.

வெகுநாட்கள் கழித்து மகளின் குரல் கேட்டு ராகவன் மனம் நெகிழ்ந்து போனது. மகளிடம் நீண்ட நேரம் பேசியவர்... மருமகனிடம் தன் நன்றியை தெரிவித்தார். அவருக்குத் தெரியும் அவனால் மட்டுமே தன் மகளின் மனதை மாற்ற முடியுமென்று...!

தந்தையிடம் பேசி முடித்து விட்டு மயூரி ஆரனிடம் தன் உதட்டை சுற்றி காட்டி, “கிஸ் மீ...” என்க, அவனோ அவளை அதிர்வுடன் பார்த்தான். திடீரென்று அவள் அப்படிக் கேட்டதும் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

“நீங்க தானே சொன்னீங்க... மனசில் உள்ளதை அப்படியே சொல்லணும்ன்னு... எனக்கு இப்போ சந்தோசமாயிருக்கு...” என்றவள் அவன் முகம் நோக்கி குனிந்து... முதன்முறையாய் தானாய் முன் வந்து அவனின் இதழில் தன் இதழை பதித்தாள்.

“இதில் இப்படி ஒண்ணு இருக்குன்னு எனக்குத் தெரியாம போச்சே...” என்று கிறக்கத்துடன் சொன்னவன் அவளின் செயலை தனதாக்கி கொண்டான்.

****

அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பிய ஆரன் அங்கு ரிஷி வந்திருப்பதை உணர்ந்து அவனை உற்சாகமாய் வரவேற்றான்.

“வாங்க ரிஷி... எப்படி இருக்கீங்க?” ஆரனை கண்டதும் அவன் என்ன சொல்வானோ? என்ற யோசனையில் இருந்த ரிஷி அவனின் இந்த வரவேற்பை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

“நல்லாயிருக்கேன்...” ரிஷி சொன்னதும்...

“நானே உங்க கிட்ட பேசணும்ன்னு இருந்தேன்... நீங்களே வந்துட்டீங்க...” அவன் பீடிகையுடன் ஆரம்பிக்க... மயூரியும், ரிஷியும் யோசனையாய் அவன் முகம் பார்த்தனர்.

“பேபி நம்ம வருண் இருக்கான்ல...” மயூரியை பார்த்து சொன்னவன்... “அவன் நம்ம மஞ்சுவை காதலிக்கிறான்... அவனுக்காக உன் அப்பாவிடம் ரிஷியை பேச சொல்லணும்” அவளிடம் விளக்கம் கூறியவன்... ரிஷியிடம் திரும்பி,

“எங்க காதலால் மனசு ஒடிஞ்சு போயிருக்கிற மயூவோட அப்பா, அம்மாவுக்கு இன்னொரு மகள் கல்யாணமும் காதல் கல்யாணம்ன்னா ரொம்ப வருத்தமா இருக்கும்” அவள் சொல்லும் போதே...

“மஞ்சு... வருணை காதலிக்கிறாளா?” ஆச்சிரியமாய் அவள் கேட்க...

“அவள் அவனைக் காதலிக்கவில்லை... அவன் தான் அவளைக் காதலிக்கிறான்...” அவளுக்கு விளக்கம் சொல்லியவன்... “ரிஷி நீங்க தான் இதை அரேஞ்சுடு மேரேஜாய் முடித்து வைக்க வேணும். வருண் வீட்டில் எந்த எதிர்ப்பும் இருக்காது. மயூ அப்பா கிட்ட நீங்களா மஞ்சு கல்யாணத்துக்கு மாப்பிள்ளை பார்ப்பது போல் வருணை பத்தி சொல்லி... இதைக் கல்யாணத்தில் முடிக்க வேணும்” அவன் சொல்ல சொல்ல... ரிஷிக்கு எல்லாம் புரிந்தது.

“எப்படியோ எங்க மாமா கிட்ட எனக்கு அடி வாங்கிக் கொடுக்கிறதுன்னு முடிவு பண்ணிட்டீங்க... நடத்துங்க.. நடத்துங்க...” சிரித்தபடி சொன்ன ரிஷி அவன் சொன்னது போல் செய்வதாக உறுதியளித்தான். அதைக் கேட்ட பின் தான் ஆரனுக்குச் சற்று நிம்மதியாய் இருந்தது.

ஆரனுக்குக் காபி கொண்டு வருவதற்காக மயூரி சமையலறைக்குச் செல்ல...

“ரிஷி... உங்க காதலை தட்டி பறிச்சதுக்காக என்னை மன்னிச்சிடுங்க...” ஆரன் ரிஷியிடம் மன்னிப்பு வேண்ட...

“பிரதர்... எதுக்கு மன்னிப்பு எல்லாம் கேட்டுக்கிட்டு... உங்களுக்கு ஒண்ணு தெரியுமா... ஊரில் எனக்குப் பொண்ணு பார்க்கிறாங்க... கூடிய சீக்கிரம் முடிவாகிவிடும்ன்னு நினைக்கிறேன்...” ரிஷி சொல்லவும் தான் ஆரனுக்குச் சற்று நிம்மதியாய் இருந்தது.

ரிஷி சொன்னது போல் வருணை பற்றி ராகவனிடம் சொல்ல... வருணின் புகைப்படத்தைப் பார்த்தும் அவருக்கு

எதுவோ புரிவது போலிருந்தது. உடனே அவர் ஆரனுக்கு அழைத்தார்.

“மாப்பிள்ள... வருண் உங்கள் நண்பர் தானே...” அவர் ஆரம்பிக்கும் போதே... அவனுக்கு மனதுக்குள் திக்கென்று இருந்தது.

“ஆ... ஆமாம் மாமா...”

“அவர் மஞ்சுவை காதலிக்கிறாரா? நீங்க தான் ரிஷி மூலமா அவருக்காகப் பேசுறீங்களா?” அவர் பேச பேச... ‘ஹப்பா... ஆனாலும் மாமனாருக்கு இவ்வளவு அறிவு இருக்கக் கூடாது’ என்று மனதுக்குள் அவனுக்கு ஆயாசமாய் இருந்தது.

“ஹி... ஹி... சரியா சொல்லிட்டீங்களே...” என்று அசடு வழிந்தவன், “எங்க காதலால் கஷ்டப்பட்ட நீங்க... மீண்டும் கஷ்டப்படக் கூடாதேன்னு தான் நான் அப்படி நடந்துக்கிட்டேன்...” தன்னிலை விளக்கம் கூறினான்.

“நீங்க சொல்லி நான் மறுப்பேனா மாப்பிள்ளை...” தன் சம்மதத்தை அவனிடம் சொல்லியவர்... உடனடியாய் வருண், மஞ்சு கல்யாணத்திற்கு நாள் பார்ப்பதாகச் சொன்னார். அதைக் கேட்டு ஆரனும், மயூரியும் மகிழ்ச்சி அடைந்தனர். வருணோ ஆகாயத்தில் மிதந்தான். ஆரனுக்குத் தன் நன்றியை தெரிவித்துக் கொண்டான்.

எல்லோரும் மகிழ்ச்சி வானில் சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கும் போது மஞ்சரி அந்தப் பெரிய குண்டை எல்லார் தலையிலும் முக்கியமாக வருணின் தலையில் போட்டாள். அவனைப் பிடிக்கவில்லை என்று பிடிவாதம் பிடித்தவளை மேலும் வற்புறுத்த ராகவன் தம்பதியரால் இயலவில்லை. அதை அப்படியே வருணின் பெற்றோரிடம் சொல்ல... ‘விருப்பமில்லாத பெண்ணை ஏன் திருமணம் செய்ய நினைக்கிறாய்?’ என்று அவர்கள் அவனைப் போட்டுக் காய்ச்சி எடுத்து விட்டனர். அந்தக் கோபத்தில் அவன் நேரே மஞ்சரியை பார்க்க சென்றான்.

“எங்கே மாமா உங்க பொண்ணு?” கோபத்தில் முகம் சிவக்க வருண் நின்றிருந்த தோற்றம்... ராகவனுக்கு அன்று ஆரன் நின்றிருந்ததைத் தோற்றத்தை நியாபகப்படுத்தியது.

‘ம்ஹூம்... நமக்கு வாய்க்கும் மருமகன் எல்லாமே கோபக்காரர்கள் தான் போலும்...’ மனதுக்குள் புலம்பியவர்...

“எதுக்குப்பா?” ஒன்றும் அறியாதவராய் அவர் கேட்க...

“அவ கிட்ட நான் பேசணும்... ப்ளீஸ் மாமா அனுமதி கொடுங்க...” அவனின் கெஞ்சலில் அவருக்குப் பாவமாயிருக்க... சரியென்று சொல்ல... அதுக்காகக் காத்திருந்தார் போல் வேகமாய் அவளின் அறைக்குச் சென்றான்.

கட்டிலில் அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்த மஞ்சரி யாரோ வரும் உணர்வு உணர்ந்து நிமிர்ந்து பார்த்தாள். அங்கே வருணை எதிர்பார்க்காததால் திகைத்து போனவளாய் அவள் எழ... அவள் மடியில் இருந்த புத்தகம் நழுவி கீழே விழுந்தது.

“என்னடி உன் மனசுல நினைச்சிட்டு இருக்க... என்னை உனக்குப் பிடிக்கலியா?” அவனின் ஏகவசனத்தில் அவள் இன்னமும் அதிர்ந்து போனாள்.

“பதில் சொல்லுடி...?” அவன் அவளை உலுக்க... அதில் அதிர்ச்சியில் இருந்து மீண்டவள் அவனை அலட்சியமாய்ப் பார்த்தாள்.

“யார் நீங்க...? நீங்க எதுக்கு என்னைப் பார்க்க வந்திருக்கீங்க? என் ரூமுக்கு வந்ததும் இல்லாமல் என்னையே அதிகாரமாய்ப் பேசும் உரிமையை யார் உங்களுக்குக் கொடுத்தது?” அவளின் பேச்சில் அவன் கண்கள் பளிச்சிட்டது.

“உன் கிட்ட இப்படியெல்லாம் பேச கூடாது” என்றவன் அறைக் கதவை தாளிட்டுவிட்டு அவளை நோக்கி மெதுவாய் நடந்து வந்தான். அவளோ பயத்துடன்,

“வேணாம்... கிட்ட வராதீங்க...” பின்னாலே போனவள் சுவர் இடிக்க அப்படியே நின்றாள். அப்போதும் அவன் நிற்காமல் அவள் அருகில் வருவதைக் கண்டவள் பயத்தில் கண்களை இறுக மூடி கொண்டாள்.

“டாலி... சாரி டாலி...” மன்னிப்பு கேட்ட அவனின் குரலில் கண்ணைத் திறந்து பார்த்தவள் அவன் இருந்த கோலம் கண்டு பக்கென்று சிரித்துவிட்டாள். வருண் அவள் முன் மண்டியிட்டு மன்னிப்பு கேட்டுக் கொண்டிருந்தான்.

“அன்னைக்கு உன்னைத் தெரியாத மாதிரி நான் நடந்துக்கிட்டது என்னோட தப்பு தான். அப்படி நடந்துக்கிட்டா நீ என்னைப் பத்தி நினைப்ப... என்னை நெருங்கி வருவன்னு தான் அப்படிப் பேசினேன். இப்படி என்னை நீ வெறுத்து ஒதுக்கி விடுவேன்னு நான் கொஞ்சமும் நினைச்சு பார்க்கல... ப்ளீஸ் டாலி நான் பண்ணிய தப்பை மன்னிச்சு ஏத்துக்கக் கூடாதா? ஐ லவ் யூ டாலி...” அவன் சொல்ல சொல்ல தான் அவளுக்குமே அவளின் மனம் புரிந்தது.

தான் ஏன் அவன் மேல் காரணமில்லாமல் கோபப்பட்டோம் என்பதை அவளும் உணர்ந்தாள். அவன் மீதான் நேசம் அவள் மனதில் துளிர்விட்ட நேரத்தில் அவன் பேசிய பேச்சு அதை அப்படியே கருக்கி விட்டதை அவள் உணர்ந்தாள். அவனைப் பிடிக்கவில்லை என்று சொன்னது கூட அவன் தன் நேசத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்ற கோபத்தினால் தான் என்பதையும் புரிந்து கொண்டாள்.

“வருண்...” அவன் முன் மண்டியிட்டு அமர்ந்தவள், “நீ என்னை உண்மையா காதலிக்கிறியா? விளையாட்டுக்கு இல்லையே? இன்னொரு முறை ஏமாற்றத்தை என்னால் தாங்கிக்க முடியாது...” அவளின் மனதை அறிந்து கொண்டதும் அவன் முகம் மலர்ந்தது.

“எனக்குத் தெரியும்... நீ என் காதலை மறுக்க மாட்டேன்னு... உன் கண்ணுல தெரிஞ்ச காதலை நான் உணர்ந்தேனே...” என்றவன், “என் காதலை நிரூபிக்க நான் என்ன செய்யணும் டாலி...?” காதலாய் சொல்ல...

“முதல்ல கதவை திறந்திட்டு போய் அப்பா கிட்ட நம்ம கல்யாணத்தைப் பத்தி பேசுங்க... கல்யாணத்துக்கு அப்புறம் உங்க காதலை நிரூபிங்க...” அவனின் காதலை உணர்ந்தவளாய் அவள் சொல்ல...

“அதைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு தான் நிரூபிக்கணும்ன்னு இல்ல... இப்போ கூட நிரூபிக்கலாம் டாலி” என்றவன் அவள் முகம் நோக்கி குனிய...

“ச்சீ... நீ ரொம்ப மோசம்... போடா...” அவனைத் தள்ளிவிட்டு எழுந்தவள் கதவை நோக்கி ஓடி அதைத் திறந்து கொண்டு வெளியில் செல்ல... “டாலி...” கத்தி கொண்டே அவனும் அவளைப் பின் தொடர... இருவர் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியைக் கண்டு ராகவனும், சுமதியும் நிம்மதியடைந்தனர்.

ஆறு மாதங்கள் கழித்து... ஒரு சுபயோக தினத்தில் வருண் மஞ்சரியின் கழுத்தில் மங்கலநாணை பூட்ட... எல்லோரின் மனதும் நிறைந்திருந்தது. “வருண்... மஞ்சு என் தங்கை மாதிரி... அவள் கண்ணில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வந்தாலும் நான் உன்னைச் சும்மா விட மாட்டேன்...” சிரித்தபடி சொன்ன ஆரனை ஆச்சிரியமாய்ப் பார்த்தாள் மஞ்சரி. அவளை ஒரு மனுசியாய் பாவித்துக் கூடப் பார்க்காதவன் இன்று அவளுக்காய் அவள் கணவனிடம் பேசுகிறான் என்றால்... அதற்குக் காரணம் தன் அக்காவின் காதல் தான் என்று அவளுக்கு விளங்கியது. அவள் பிரம்மிப்பாய் மயூரியை பார்க்க...

“என்ன மஞ்சு? என்ன வேணும்?” அவளின் பார்வை உணர்ந்து மயூரி அவளிடம் கேட்க...

“மயூ... உன் காதல் எப்படியிருந்த மாமாவை... இப்படி மாத்திவிட்டது... யூ ஆர் ரியலி கிரேட் மயூ” மயூரியை புகழ்ந்து அவள் சொல்ல...

“போடி எதையாவது சொல்லிட்டு... அவர் எப்போதும் போல் தான் இருக்கிறார்... பார்க்கிற உன் கண்ணில் தான் குறை... அவரை நிறையோடு பார்... நிறைவாகத் தான் தெரிவார்”

மயூரி தங்கையிடம் கணவனுக்காய் பரிந்து பேச... அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஆரன் அவள் தோளில் கை போட்டு அணைத்துக் கொண்டான். அவள் தோளில் பதிந்த அவனின் கை அழுத்தத்தில் அவனின் காதலை உணர்ந்தாள் மயூரி.

“நீங்க மட்டும் தான் அண்ணியைக் கட்டி பிடிப்பீங்களா தோஸ்த்...? நானும் என் டாலியை கட்டி பிடிப்பேன்... என்ன டாலி?” மஞ்சரியிடம் சொல்லி கொண்டே வருண் அவளை அணைக்க வர... அந்நேரம் பார்த்து சுமதியின் கையிலிருந்த சின்னக் கண்ணன் தன் சித்தியிடம் தாவ... மஞ்சரி அவனை ஆசையாய் தூக்கி கொள்ள...

“வட போச்சே...” என்று புலம்பிய வருண்... கண்ணின் கன்னத்தைப் பிடித்துச் செல்லமாய்க் கிள்ளியவன்,

“எனக்கு வில்லன் யாருமில்லைடா... நீதான்...” தன்னவள் அணைப்பில் சுகமாய் அவள் தோளில் சாய்ந்திருந்த அவனைப் பொறாமையாய் பார்த்தான் வருண். அதைக் கண்டு ஆரனும், மயூரியும் வாய் விட்டு சிரிக்க... தங்கள் மக்களின் மகிழ்ச்சியை மனநிறைவோடு பெருமையுடன் பார்த்து கொண்டிருந்தனர் ராகவன், சுமதி.

யாருமில்லாத அநாதையாய் தனிமை தீயில் தவமிருந்த அவனை... நல்வரமாய் வந்து அரவணைத்த மயூரியின் அன்பு அவனைப் பண்பட்ட மனிதனாய் மாற்றிவிட்டது. வறண்டிருந்த அவன் வாழ்க்கை வண்ணமயமாய் மாறியதற்குக் காரணம் அவளன்றி வேறு யார்...! என்றுமே அவனில் உறையும் உயிர் அவள் மட்டும் தான்...!!!

****